அண்ணல் காந்தி அடிச்சுவட்டில்

ராஷ்டிரபதி

டாக்டர் ராஜேந்திர பிரசாத்

வேல் புத்தக நிலையம்

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.
(1956)

அண்ணல் காந்தி அடிச்சுவட்டில்

16-9-56

(மூல நூலாசிரியர்: ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத்; தமிழாக்கம்: ரா. வேங்கடராஜுலு; விற்பனை உரிமை: வேல் புத்தக நிலையம், 69, பீட்டர்ஸ் ரோட், சென்னை-6; விலை: ரூ. 8.)

இந்தியக் குடியரசின் தற்போதைய ராஷ்டிரபதியாக விளங்கும் பாபு ராஜேந்திர பிரஸாத் அவர்களுடைய சுய சரிதையின் ஒரு பகுதியாக திகழ்வது இந்த நூல். இருந்தாலும் அண்ணல் காந்தியை கிட்ட இருந்து பார்க்கும் வாய்ப்பு இந் நூலின் மூலம் நமக்கு கிட்டுகின்றது. காந்தி யடிகளை மகாத்மா என்று ஏன் உலகம் போற்றுகின்றதென்பதை நாம் நன்கு அறிந்து கொள்கிறோம். மகாத்மா காந்தி வாழ்க்கையை வாழ்ந்து காட்டினர். தம்மோடு சேர்ந்தவர்களையும் வாழும்படி செய்தார். இதனாலேயே அவர் எல்லோருடைய இதயத்திலும் குடி கொண்டுவிட்டார் என்ற பேருண்மைகள் நமக்குப் புலனாகின்றன. நூலின் இடையிடையே மதூர்—உல்—ஹக், ஆசார்ய கிருபளானி, பூஜ்யர் ஆண்ட்ருஸ், ஆசார்யா வினோபாபாவே, முதலிய சான்றோர்கள் பலர் நமக்கு அறிமுகமாகின்றனர். காந்தி யடிகளின் தலைமையில் நடைபெற்ற சுதந்தரப் போராட்டம் என்னென்ன திருப்பங்களை சந்திக்க வேண்டியிருந்தன என்பதை நம்மால் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் பாபு ராஜேந்திர பிரஸாத் காந்தியடிகளுடன் முதல் முதலாக தொடர்பு கொண்டதிலிருந்து 1948 ஜனவரி 30ந் தேதி அவர் அமர நிலை எய்திய வரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இருவருக்குமிடையே நிலவி வந்த உறவு முறை முதலிய பலவும் இந் நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

பாபு ராஜேந்திர பிரஸாத் முதன் முதலாக மகாத்மா காந்தியைப் பார்த்தது 1915 ஆம் வருஷம் கல்கத்தாவில் நடைபெற்ற ஒரு வரவேற்புக் கூட்டத்தில். அப்பொழுது அவரை எட்ட இருந்துபார்த்தாரே யொழிய கிட்ட நெருங்க வில்லை. காந்தி யடிகள் எங்ஙனம் காட்சி யளித்தார் அப்பொழுது? ''வெள்ளை வேட்டி உடுத்தி வெள்ளைச் சட்டையும் போட்டிருந்தார். தலையில் கத்தியவாரிகளைப்போல் ஒரு வெள்ளை முண்டாசும் வைத்திருந்தார். காலில் செருப்பு அணியவில்லை. தோளைச் சுற்றி ஒரு அங்க வஸ்திரமும் போட்டுக் கொண்டிருந்தார்'' (பக்.9) ஆசார்யா கிருபளானி முதன் முதலாக பார்த்த போது ''இடுப்பில் வேட்டி ஒரு சட்டை, குல்லாயுடன் விளங்கினார். காந்தியடிகள் கையில் ஒரு சிறு மூட்டை. அதை பக்கத்தில் அணைத்துக் கொண்டிருந்தார். மற்றொரு கையிலோ ஒரு சிறு தகரப் பெட்டி. அதில் கொஞ்சம் பேரிச்சம் பழமும் நிலக்கடலையுமிருந்தன. அவர் கையில் வைத்திருந்த மூட்டையே அவர் படுக்கை. அதில் அவருடைய துணிமணிகளுமிருந்தன. படுக்கும் போது அத்துணிகளை சுற்றி தலையணையாக்கிக்கொள்ளுவார். (பக்.17)

சம்பரான் விவசாயிகளின் குறைகளுக்கு பரிகாரந் தேட காந்தியடிகள் தீவிர முயற்சி எடுத்துக் கொண்ட போது தான் அவருக்கும் பாபு ராஜேந்திர பிரசாத்துக்கும் நெருக்கமான தொடர்பு ஏற்பட ஆரம்பித்தது. இது காலக்கிரமத்தில் முதிர்ந்து ராஜேந்திரரின் வாழ்க்கைப போக்கையே மாற்றி விட்டது. காந்தியடிகளின் அருமந்த சீடர்களில் ஒருவராக்கியது. இன்று காந்தீயத்தின் இலக்கணமாக விளங்குகிறார். இந்த முறையிலேயே இவருடைய புகழ் என்றும் நிலைத் திருக்கும்.

சின்னஞ் சிறு விஷயங்களில் கூட ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டும். சொன்னபடி செய்தே யாக வேண்டும். மக்களுக்குச் சேவை புரியும் விஷயத்தில் ஒளி மறைவு என்பதே கூடாது. அச்சத்துடன் ஒரு காரியத்தில் பிரவேசிக்கலாகாது. ஏழை மக்களுக்கு உண்மையாக சேவை செய்ய வேண்டுமானால் அவர்களைப் போலவே எளிய வாழ்க்கையை மேற் கொள்ள வேண்டும். இன்னோரன்ன போதனைகளை காந்தி யடிகளின் அன்றாட வாழ்க்கையிலிருந்தும் அவருடைய செயல் முறைகளி லிருந்தும் நாம் கற்றுக்

கொண்டதாக பாபு ராஜேந்திரர் கூறுகிற போது நமது உடல் சிலிர்க்கிறது; உள்ளம் உருகுகிறது.

"ஒன்றைச் செய்வதென்ற முடிவுக்கு வந்து விட்டால் அதை எப்படியும் அதன் படி நிறைவேற்றியாக வேண்டும். அதிலிருந்து மாறவே கூடாது." (பக் 63).

"ஒரு சமயம் ஒரு சர்க்கார் அதிகாரிதாம் சர்க்காருக்கு அனுப்பியிருக்கும் அறிக்கையின் நகல் ஒன்றை ரகசியமாக எங்களுக்கு அனுப்பி வைத்தார். இதை நாங்கள் மகாத்மாவிடம் கொண்டு போனோம். அதைப் படித்துப் பார்ப்பதற்கு முன்னால் அது எங்களுக்கு எப்படிக் கிடைத்தது என்பதை மகாத்மா தெரிந்து கொண்டு விட்டார். உடனே அதை படித்துப் பார்க்க மகாத்மா மறுத்து விட்டதோடு அதை அந்த சர்க்கார் அதிகாரியிடமே திருப்பிக் கொடுத்து விடும்படியும் எங்களிடம் கூறினார். ரகசியமான வழியில் கிடைக்கும் எந்த காகிதத்தையும் பயன் படுத்திக் கொள்ளக் கூடாது என்றும் எங்களுக்கு கட்டளையிட்டார். நடைமுறையில் சத்தியத்தை இவ்வகையில் மகாத்மா எங்களுக்குப்போதித்தார். (பக் 77).

TIRUVA

பொதுப் ப... செலவிடுவதில் மகாத்மா அதிக உஷாராயிருக்கிறார். ஒவ்வொரு காலணாவையும் மீதப்படுத்துவதிலேயே கருத்தாயிருக்கிறார் என்பதை நாங்கள் உடனே கண்டு கொண்டோம். ஒரு சிறு துண்டு காகிதத்தைக் கூட வீணாக்க அவர் விரும்பவில்லை. அவர் எழுதிய சக்தி வாய்ந்த பல கட்டுரைகள் காங்கிரசுக்கும் அவர் சம்பந்தப்பட்டிருந்த மற்றும் பல ஸ்தாபனங்களுக்கும் அவர் தயாரித்த அனேக முக்கியமான தீர்மானங்கள் ஆகியவை யெல்லாம் சாதாரணமாக மற்றவர்கள் குப்பைத் தொட்டியில் எறிந்துவிடக் கூடிய துண்டுக் காகிதங்களிலேயே எழுதப்பட்டுத் தயாராயின. என்பது ஒரு வேளை பொது மக்களுக்கு தெரியாமலிருக்கலாம். வரும்தபாலுறைகளின் உள் பக்கம், வரும் தந்திகள், கடிதங்கள், முதலியவற்றில் எழுதாமல் இருக்கும் மற்ற பக்கங்கள் ஆகியவை களிலேயே மகாத்மா அவற்றை எழுதுவார். இவ்விதம் மகாத்மா செய்வதை சம்பரானில் நான் பார்த்த தோடு அது முதல் எப்பொழுதுமே அதையே அவர் செய்து வருவதையும் கண்டு வந்தேன். இவ் விதம்பொது

யுடனிருக்க வேண்டும் என்பதை மகாத்மா எங்களுக்குப் போதித்தார். (109)

இத்தகைய உதாரணங்கள் பல நூலின் ஆங்காங்கே மிளிர்ந்து காட்டிப் படிப்பவர்களை நல்வழிக்குத் திருப்புகின்றன.

''சிறை வாழ்க்கை அனுபவம்'' என்ற அத்தியாயத்தில் சிறைச்சாலை சீர்த்திருத்த சம்பந்தமாக பல நல்ல யோசனைகளைக் கூறியிருக்கிறார். பாபு ராஜேந்திரர். சுதந்திர இந்தியாவில் இந்த யோசனைகள் அதிகாரிகளின் கவனத்திற்கு வருமென்று நம்பலாம்.

''வாழ்க்கை நியதிகளின் தத்துவம்'' என்றஅத்தியாயத்தைத்திரும்பத் திரும்ப படிக்க வேண்டுமென்று வாசகர்களுக்குச் சிபாரிசு செய்கிறோம்'' ''ஒரு தனிப்பட்டவர் தம்முடைய சொந்தவாழ்க்கையில் ஒழுக்கங் கெட்டவராக இருந்த போதிலும் அவருடைய பொது வாழ்க்கையில் யோக்கியமாக இருந்து விட்டால் அவர் ஒரு நல்ல பொதுஜன ஊழியரே என்று சொல்லப்படுகிறது. இந்தத் தத்துவத்தை மகாத்மா காந்தி ஒப்புக்கொள்வதில்லை'' (பக். 419)

1947ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 15ந் தேதி முன்னர் நாட்டில் இருந்த சூழ் நிலையைப் பற்றிய விவரங்கள் திடுக்கிடச் செய்கின்றனவேயானாலும் மகாத்மா காந்தியும் காங்கிரஸ் தலைவர்களும் இந்த சூழ் நிலையில் காட்டிய பொறுமை நிதானம் இவைகளை நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

''ஆத்மாவின் தெய்வீகப் பணி'' என்ற கடைசி அத்தியாயம் காந்தியடிகளுடைய நற்போதனைகளின் தொகுப்பாக விளங்குகிறது. ''நமது உள்ளத்தின் ஒவ்வோர் இண்டு இடுக்கிலும் ஆழ்ந்து ஊடுருவிப் பார்த்து மகாத்மாவின் உபதேசத்திற்கு விரோதமாக ரகசியமாக வேலை செய்து கொண்டிருப்பது ஏதாவது அங்கு இருக்கிறதா என்பதைத் தேடிப்பார்ப்போமானால் அப்பொழுது மாத்திரமே நமது வாழ்க்கையை நாம் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள முடியும்'' (பக் 511)

பொதுவாக இந்த நூல் எல்லோரும் படித்துப் பயன் பெற வேண்டிய நூல். தமிழாக்கம் மிக நல்ல முறையில் அமைந்திருக்கிறது ஸ்ரீ. வெங்கடராஜுலுக்கு நமது பாராட்டு.

—வி. எஸ்

அண்ணல்
காந்தி அடிச்சுவட்டில்

இந்தியக் குடியரசின் ராஷ்டிரபதி
டாக்டர் ராஜேந்திர பிரசாத்
எழுதியது

13773

தமிழாக்கம் :
ரா. வேங்கடராஜுலு

மாணவர் இல்லம் பதிப்பு

உரிமை :
வேல் புத்தக நிலையம் பிரைவேட் லிமிடெட்
சென்னை—6.

பதிப்புரை

ராஷ்டிரபதி ராஜன் பாபு தமது முன்னுரையில் கூறியிருப்பது போல, மகாத்மா காந்தி உலகிற்கே ஒரு வற்றாத கங்கை. அவர் இந்நாட்டு மக்களுக்கு வாழ்வளித்தார்; உலகம் உய்யவும் வழி காட்டினார். அவரை மறந்தால், அவர் காட்டிய வழியிலிருந்து தவறிவிட்டால், இந்நாட்டிற்கு மாத்திரமேயன்றி உலகிற்கே வாழ்வில்லை. ஆகையால் அவர் காட்டிய வழி, செய்த உபதேசங்கள் என்றென்றும் எல்லோர் நினைவிலும் இருந்தாக வேண்டியது முக்கியம்.

ராஷ்டிரபதி ராஜன் பாபு, மகாத்மாவின் உத்தமமான சீடர். சுதந்திரப் போராட்ட காலம் முழுவதிலும் தேசத் தந்தை மகாத்மா காந்தியுடன் அநேகமாக கூடவே இருந்தவர். காந்திய தத்துவங்களை நன்கறிந்து ஊறியவர்; தமது வாழ்க்கையில் முற்றிலும் அவற்றை அனுசரித்தவர். ஆகையால் மகாத்மாவின் உள்ளத்தையும், அவர் நடத்திய சத்தியப் போரின் ஒவ்வோர் நுணுக்கத்தையும் மிகமிக நன்கறிந்தவர் ராஜன் பாபுவே. எனவே, இதைப்பற்றி எழுதும் தனிப் பெரும் தகுதி அவருக்கே உண்டு.

அவர் எழுதியுள்ள இந்த அருமையான நூலை தமிழில் வெளியிடும் பேறு பெற்றமைக்குப் பெருமை கொள்கிறோம். இந்த உரிமையை எமக்கு அளித்த ராஜேந்திரபிரசாத் கிரந்தாவளி டிரஸ்டுக்கு எமது நன்றி.

தமக்குள்ள எண்ணற்ற வேலைகளின் நடுவே, இதையும் தமது ஒரு பணியாகக் கொண்டு, தமிழ் பிரதியைப் பார்த்து, இதற்குப் பாராட்டுரை தந்துதவிய தமிழ் நாட்டின் தனிப் பெருந் தலைவர், சென்னை ராஜ்ய முதலமைச்சர் ஸ்ரீ கே. காமராஜுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி உரித்தாவதாகுக.

—பதிப்பாசிரியர்.

முன்னுரை

பகீரதனின் எண்ணற்ற மூதாதைகள் சாபத்தின் விளைவாகச் சாம்பலாகிக் கிடந்தார்கள். அவர்களுக்குப் புனர் வாழ்வு அளிப்பதற்காக பகீரதன் மகா கடுமையான தவங்களை யெல்லாம் செய்து,மிக உயரமான பனி படர்ந்த ஹிமாலயத்திலிருந்து, கங்கை நதியைக் கீழே சம வெளிக்குக் கொண்டுவந்தான் என்பது புராணக் கதை. அது முதலே கங்கை, ஹிந்துக்களின் மனதில் சர்வ வல்லமையுள்ள கடவுளின் மூன்று அம்சங்களாகத் தோன்றி வந்திருக்கிறது. அதனுடைய இனிய, மெல்லிய கீதத்தின் மூலம் கங்கை, பிறப்பளிக்கும் தாயாராகக் கருதப்படுகிறது. அது அளிக்கும் வண்டலினால் சுபிட்சத்தை உண்டாக்குவதால் பெரிய பாதுகாப்பாளராகிறது. நாசத்தை விளைவிக்கும் பிரவாகங்கள் ஏற்படும்போது, அதனுடைய தணிக்க முடியாத கோபாவேசத்தில், அழிப்பு தெய்வமாகவும் கங்கை ஆகிறது. இந்தப் பின்னணியுடன் ஹிந்துக்களுக்கு மிக உயரிய — புண்ணிய நதியாக கங்கை இருந்து வருவதில் ஆச்சரியமே இல்லை. அதன் பலனையும் நன்மைகளையும் உணர்வதாயின் உண்மையில் அது எல்லோருக்குமே சிறந்த புண்ணிய நதியே. நமது நீண்ட சரித்திரத்தில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்றும் கங்கை நமது மனதிலும் வாழ்க்கையிலும் அதே புனிதமான நிலையிலேயே இருந்து வருகிறது. பலன் தரும் தெய்வீகமான அதன் நீரைக்கொண்டு மனிதன் சொந்த நன்மைகளையும், சுபிட்சத்தையும், ஆத்மார்த்திகத்தையும், சாந்தியையும் அடைய முயன்று வந்திருக்கிறான். சுமார் இரண்டாயிரம் மைல்கள் நீளமுள்ள அதன் கரைகளில், உடலுக்குச் சுகம் தரும் இனிய அதனுடைய நீரை ருசித்து ஒரு வாய் பருகவும், சாந்தியளிக்கும் அதன் ஓட்டத்தில் மூழ்கி எழவும், பல்லாயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும்

கூடுகிருர்கள். பட்டணங்கள், நகரங்கள், வர்த்தக, தொழில் ஸ்தலங்கள், எல்லாவற்றையும்விட அதிக முக்கியமாக, தெய்வீக அறிவையும் ஞானத்தையும் போதிக்கும் கல்வி ஸ்தாபனங்கள், கங்கைக் கரை நெடுகவும் தோன்றி ஓங்கி வளர்ந்து வந்திருக்கின் றன. கங்கை மாத்திரமேயன்றி, அதன் சிறியவை களும் பெரியவைகளுமான கிளை நதிகளும், மனித வர்க்கத்திற்கு அதே போன்ற நன்மைகளை அளித்து அதன் பெருமையில் பங்கு கொண்டு வந்திருக் கின்றன. இக்காலத்திலோ இந்நாட்டில் பிறந்தவர் களான இன்ஜினீயர்களும், புதியதாக தூரதேசங்களி லிருந்து வந்த இன்ஜினீயர்களும் தங்களுடைய அறி விலுைம் திறமையாலும, ஞானத்தாலும் கர்மத்திலு லும், பல புதுக் கால்வாய்களை கங்கையிலிருந்து அமைத்து, நல்ல பலனளிக்கும் அதன் நீர், அதற்கு முன்னல் எட்டியறியாத இடங்களுக்கெல்லாம் எட்டும் படிச் செய்து, கணக்கற்ற ஏக்கர் நிலங்களில் பாய விட்டு, உணவு உற்பத்திப் பெருகும்படிச் செய்திருக் கிருர்கள்.

இத் தெய்வீக கங்கை, இக்காலத்தில் மனித ரூபத் திலிருப்பதே மகாத்மா காந்தி என்று நான் சில சமயங் களில் உணர்ந்திருக்கிறேன். நமது மகான்களும், ரிஷி களும், முனிவர்களும் சுவர்க்கத்திலிருந்து பெற்றதைப் போல் பெற்று, நமக்கு வாழ்வை அளிக்கும் உபதேசங் களை அவர் செய்தார். ராஜீய சுதந்திரத்யையும், சமூக நீதியையும், பொருளாதார சுபிட்சத்தையும் அடையும் வழியை நமக்குக் காட்டி, நமது லோகாதய நன்மைக்கு அவர் உதவி செய்ததோடு, ஒழுக்க, தெய்வீக மேன்மை யைக் கொஞ்சம் கண்டு, அந்த உன்னதத்தை அடை வதற்குள்ள அதிகக் கஷ்டமானதான பாதையில் சில படிகளாவது ஏறிவிடும்படியும் அவர் செய்திருக் கிருர். அதற்கென்றே யாத்திரையை மேற்கொண்டு கங்கையை அடைந்து முழுகுகிறவர்களுக்கு அது

ஆத்மார்த்திக சாந்தியை அளிக்கிறது. அதன் நீரைத் தக்கபடி உபயோகித்துக்கொள்ளும் ஞானமும் திறமையும் உள்ளவர்களுக்கு மாத்திரமே கங்கை சுபிட்சத்தை அளிக்கிறது. இவையெல்லாம் அவரவர்களின் ஆர்வத்தையும் திறமையையும் பொறுத்திருக்கிறது. அதே போலவே மகாத்மா காந்தியின் அன்பு, சத்திய உபதேசம், அகிம்சையும் சத்தியமும், அவருடைய கண்டிப்பான, கஷ்டமான நியதிகளைப் பின்பற்றி, அவருடைய நேரான பாதையில் செல்ல முன்வருகிறவர்களுக்கு மாத்திரமே பலனை யளிக்கிறது. அவருடைய கொள்கைக்கும் வேலைத் திட்டத்திற்கும் ஏற்ற வகையில் தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்கிறவர்களுக்கு மட்டுமே அதனுல் நன்மை உண்டாகிறது. கங்கை பிரவாகமாகப் போனுலும் அதிலிருந்து முகந்துவர ஒருவர் தம்முடன் எடுத்துச் செல்லும் பாத்திரத்தின் அளவுக்கு ஏற்றபடியே அவருக்கு கங்கை நீர் கிடைக்கும். பெரிய குடம் வைத்திருக்கிறவர், குடம் நிறைய நீர் கொண்டுவரலாம். சிறு பாத்திரமே வைத்திருப்பவருக்கு அந்த பாத்திரத்தின் அளவுக்கு மிகக் குறைவான நீரே கிடைக்கும். இதே போலவே மகாத்மாவின் உபதேசங்களிலிருந்தும் மனிதர் அதிகமாகவும் குறைவாகவும் நன்மையையும் சாந்தத்தையும் அடைகிருர்கள். கங்கையின் தெய்வீகமான கொழுமதியளிக்கும் நீரை, அதற்கு முன்னுல் பயன்படுத்திப் பலன் பெருத பகுதிகளுக்கும் எப்படி நம் நாட்டு இஞ்ஜினீயர்களும் வெளிநாடுகளிலிருந்து வந்த இஞ்ஜினீயர்களும் இப்பொழுது பயன்படும்படி செய்திருக்கிருர்களோ அதேபோல, குரு நாதரான மகாத்மா காந்தியின் உபதேசங்களை உணருகிறவர்கள் இன்று இருப்பதோடு எதிர் காலத்திலும் ஏற்பட்டு, அவர்களே இந்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், வெளி தேசங்களிலும், வாழ்வளிக்கும் அவருடைய உபதேசங்களைப் பரப்பிவிடக்கூடும்,

இன்று உலகிற்கு அவசியமான தேவை மகாத்மா காந்தியின் உபதேசமான கங்கை. ஒருவர் எவ்வளவு தான் சிறியவராகவே இருந்தாலும், அவருடைய சக்திக்கு ஏற்ற வகையில் அதைப் பரப்பியாகவேண்டி யது ஒவ்வொருவருடையவும் கடமை. அவருடைய காலடியிலிருந்து போதனையைப் பெறும் நற்பாக்கியத் தையும் வசதியையும் பெற்றவன் என்ற முறையில், எளியதோர் சேவகனாகிய நான், எனக்கிருந்த சிறிய பாத்திரத்தில் அந்த தெய்வீக நீரை நான் எந்த அளவு சேகரித்திருந்தேனோ அதை, என் மக்களுக் குத் தெளித்தாகவேண்டியது என் கடமை என்று எண்ணுகிறேன். நான் என்ன உணர்ந்தேனோ, எனக்கு என்ன நினைவிருந்ததோ அதை என் சொந்த பாஷையில் எழுதினேன். மற்றவர்கள் அதை ஆங்கி லத்திலும் தமிழிலும் மொழிபெயர்த்து அதிகமான வாசகர்களை அடையும்படிச் செய்து என்னை கௌரவப் படுத்தியிருக்கிறார்கள்.

ராஷ்டிரபதி பவனம்,
புது டில்லி. ராஜேந்திர பிரசாத்

அண்ணல் காந்தி அடிச்சுவட்டில்

முதல் சந்திப்பு

மகாத்மா காந்தியை முதன் முதலாகப் பார்க்கும் வாய்ப்பு எனக்கு கல்கத்தாவிலேயே கிடைத்தது. அவர் தென்னுப்பிரிக்காவிலிருந்து திரும்பிவந்ததும், இந்தியாவின் முக்கியமான நகரங்களில் அப்பொழுது சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். காந்தியடிகள் கல்கத்தாவுக்கு வந்தபோது அவரை வரவேற்பதற்காக அங்கு ஒரு கூட்டம் நடந்தது. அவரைக் காணும் ஆர்வத்தினுல் நானும் அக் கூட்டத்திற்குப் போயிருந்தேன். அந்த நாளிலெல்லாம் அவரை எல்லோரும் "கர்ம வீரர் காந்தி" என்று சொல்லி வந்தார்கள். அப்பொழுது அவர் வெள்ளை வேட்டி உடுத்தி வெள்ளைச் சட்டையும் போட்டிருந்தார். தலையில் கத்தியவாரிகளைப் போல ஒரு வெள்ளை முண்டாசும் வைத்திருந்தார். காலில் செருப்பு அணியவில்லை. தோளைச் சுற்றி ஒரு அங்கவஸ்திரமும் போட்டுக் கொண்டிருந்தார். தென்னுப்பிரிக்காவில் அவர் சாதித்த அநேக காரியங்களைப்பற்றி நான் பத்திரிகைகளில் படித்திருந்தேன். எனவே அவரை வரவேற்பதற்காக நடந்த கூட்டத்திற்கு நானும் போனேன். அது 1915-ல் என்று எண்ணுகிறேன். கூட்டத்தில் தூரத்திலிருந்துதான் அவரை நான் பார்த்தேன். அக் கூட்டத்தில் அவர் என்ன சொன்னுர் என்பது எனக்கு நினைவில்லை. அங்கு அன்று ஏதாவது பேசினுரா என்பதுகூட எனக்குச் சந்தேகமே. காலஞ்சென்ற ஸ்ரீ கோகலே, காந்தியடிகளிடம் ஒரு வாக்குறுதியை வாங்கியிருந்தாராம். காந்தியடிகள் இந்தியா முழுதும் சுற்றுப்பிரயாணம்செய்து, இருக்கும் நிலைமையை தாமே நேரில் அறியவேண்டும்; ஒரு வருஷத்திற்குப் பொதுக் கூட்டங்களில் பேசவோ அல்லது எந்தக் கிளர்ச்சி

யிலும் ஈடுபடவோ கூடாது என்று காந்தியடிகளிடம் கோகலே அப்பொழுது வாக்குறுதி வாங்கியிருந்தார் என்பதைப் பிறகு அறிந்தேன். இந்த காரணத்தினால் கல்கத்தா கூட்டத்தில் காந்தியடிகள் எதுவுமே பேசாமலிருந்திருக்கவும் கூடும். ஆனால் மேலே சொன்னதுபோல, அவர் அங்கு பேசினாரா இல்லையா என்பதைப்பற்றி எனக்கு ஞாபகமில்லை. அச்சமயம் நான் கல்கத்தாவில் வசித்து வந்தேன். அக்கூட்டத்திற்கும் போயிருந்தேன் என்பது மாத்திரமே எனக்கு நினைவிருக்கிறது.

காங்கிரஸின் ஆண்டு மகாநாடு 1916 டிசம்பரில் லட்சுமணபுரியில் நடந்தது. 1916 மார்ச் மாதத்தில் பாட்னாவில் ஹைகோர்ட்டை ஆரம்பித்து விட்டார்கள். எனவே நான் கல்கத்தாவிலிருந்து பாட்னாவுக்குக் குடியேறி அங்கு என் வக்கீல் தொழிலை நடத்தி வந்தேன். லட்சுமணபுரி காங்கிரஸுக்கு நான் பாட்னாவிலிருந்துதான் போனேன். மகாத்மாவும் அங்கு வந்திருந்தார். சம்பரான் விவசாயிகளின் தலைவர்கள் சிலரும் தங்களுடைய குறைகளை எடுத்துக் கூறுவதற்காக காங்கிரஸுக்கு வந்திருந்தார்கள். அந்தத் தலைவர்களில் முக்கியமானவர்கள் ராஜகுமார் சுக்லாவும், பீர்முகமது முனிஸுமாகும். ஒரு வக்கீல் என்ற முறையில் ராஜகுமார் சுக்லாவை நான் அறிவேன். சம்பரான் விவசாயிகளின் துயரங்களைப் பற்றி அவர் கூறக் கேட்டுமிருக்கிறேன். ஆனால் அங்கிருந்த நிலைமையைப்பற்றி நான் அப்பொழுது அறிந்திருந்தது அரைகுறையான விவரங்களே; மிகச் சொற்ப விஷயங்களே எனக்குத் தெரியும் என்றும் சொல்லலாம். காலஞ்சென்ற பாபு பிரஜ்கிஷோர் பிரசாத், பீஹார் இளைஞர்களின் தலைவர். மேலும் அக்காலத்தில் சட்ட சபை மெம்பராகவும் அவர் இருந்தார். ஆகையால் சம்பரான் மக்களின் துயரங்களைப் பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும். இதைப் பற்றி அவர் சட்டசபையில் அடிக்கடி பேசுவதோடு பன்முறை கேள்விகளையும் கேட்டு வந்தார்.

ராஜகுமார் சுக்லா முதலியவர்கள், மகாத்மா காந்தியை சந்தித்து சம்பரான் விவசாயிகளின் கஷ்டங்களை அவருக்கு எடுத்துக் கூறினார்கள். பாபு பிரஜ்கிஷோர்

பிரசாதும் அவர்களுடன் காந்தியடிகளிடம் போயிருக்கக்கூடும் என்று எண்ணுகிறேன். சம்பரான் சம்பந்தமாக காங்கிரஸில் ஒரு தீர்மானம் நிறைவேறும்படிச் செய்ய வேண்டும் என்றும், அத் தீர்மானத்தை காந்தியே கொண்டு வரவேண்டும் என்றும் அவரைக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் இதற்கு உடன்பட காந்தியடிகள் மறுத்து விட்டார். தாம் நேரில் கண்டறிந்து உண்மையை தெரிந்து கொள்ளுவதற்கு முன்னால் சம்பரான் பற்றி எவ்வித தீர்மானத்தையும் தாம் கொண்டு வரமுடியாது என்று அவர் சொல்லி விட்டார். என்றாலும் தம்மிடம் கூறப் பட்டவைகளெல்லாம் எவ்வளவு தூரம் உண்மையானவை என்பதை நேரில் அறிய சம்பரானுக்குப் போக ஒப்புக் கொண்டார். பிறகு தீர்மானத்தை பாபு பிரஜ்கிஷோர் கொண்டு வந்தார். ராஜகுமார் சுக்லா ஆமோதித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறி விட்டது. எழுத்து வாசனையே இல்லாத ஒரு எளிய கிராம வாசி, காங்கிரஸ் மேடைமீது நின்று ஒரு தீர்மானத்தை ஆதரித்துப் பேசியது என்பது அதுதான் முதல் தடவை.

எனக்கும் காந்தியடிகளுக்கும் தொடர்பு ஏற்பட ஆரம்பமானது அச்சமயத்தில்தான். என்றாலும் லட்சுமணபுரியில் எனக்கும் அவருக்கும் அறிமுகம் உண்டாகவில்லை.

காங்கிரஸ் மகாநாடு முடிந்த பிறகு நாங்கள் அவரவர்கள் ஊருக்குத் திரும்பிவிட்டோம். ராஜகுமார் சுக்லா, மகாத்மா காந்தியிடம் ஒரு உறுதிமொழியை வாங்கியிருந்தார். பீஹாருக்குச் சமீபத்தில் வர எப்பொழுதாவது நேர்ந்தால், சம்பரானுக்கு வந்து நிலைமையை தாமே நேரில் பார்ப்பதாக காந்தியடிகள் அவருக்கு வாக்குறுதி அளித்திருந்தார். 1917 மார்ச்சில் மகாத்மாவுக்கு கல்கத்தா போக வேண்டிய சந்தர்ப்பமிருந்தது. எனவே ஸ்ரீ ராஜகுமார் சுக்லாவுக்கு ஒருகடிதம் எழுதியிருந்தார். தாம் கல்கத்தா போவதால் ஸ்ரீ சுக்லாவும் அங்கு வந்து விட்டால் இருவருமாகச் சேர்ந்து சம்பரானுக்குப் போகலாம் என்று மகாத்மா அக்கடிதத்தில் அறிவித்திருந்தார். ஆனால் துர்ப்பாக்கியவசமாக அக்கடிதம் ராஜகுமார் சுக்லாவுக்குக் கிடைப்பதற்கு

முன்னாலேயே மகாத்மா காந்தி கல்கத்தாவைவிட்டுப் புறப்பட்டுவிட்டார். அப்பொழுதெல்லாம் பீகார் கிராமங்களில் தபால்காரன் வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு தடவைகளே கடிதங்களைப் பட்டுவாடா செய்வது வழக்கம். ராஜகுமார் சுக்லா, சம்பரானில் வசித்து வந்தார். அப்பகுதியோ எந்தவித அபிவிருத்தியும் இல்லாத பகுதி. மேலும் அந்த பிற்போக்கான ஜில்லாவில் மிகவும் பிற்போக்கானதோர் கிராமத்திலேயே அவர் குடியிருந்தார். எனவே மகாத்மாவின் கடிதம் காலா காலத்தில் அவருக்குக் கிடைக்காது போனதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

1917 ஏப்ரலில் ஈஸ்டர் விடுமுறையின்போது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் கல்கத்தாவில் நடந்தது. இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காகவே காந்தியடிகள் கல்கத்தா போயிருந்தார். தாம் அங்கு செல்வதை ராஜகுமார் சுக்லாவுக்கும் அறிவித்திருந்தார். இத்தடவை அதிர்ஷ்டவசமாக கடிதம் தாமதமின்றி அவருக்குக் கிடைத்து விட்டது. ராஜகுமார் சுக்லா கல்கத்தாவுக்குப் போய், மகாத்மா அங்கு தங்கியிருந்த இடமான ஸ்ரீ நாபேந்திரநாத வசுவின் வீட்டில் காந்தியடிகளைச் சந்தித்தார். நான் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மெம்பரானகையால் நானும் அக்கூட்டத்திற்குப் போயிருந்தேன். அக்கூட்டத்திலே மகாத்மா காந்திக்குப் பக்கத்திலேயே நான் உட்கார்ந்திருந்தேன். ஆனால் என்னை இன்னாரென்று அவருக்குத் தெரியாது. கல்கத்தாவிலிருந்து மகாத்மா பீகாருக்குப் போகப் போகிறார் என்பதையும் நான் அறியேன். காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடந்த இடம்வரையில்தான் ராஜகுமார் சுக்லாவும் மகாத்மாவுடன் வந்தாரேயன்றி அவர் கூட்டத்திற்குள் வரவில்லை. வெளியிலேயே இருந்து விட்டார். இதனால் நான் அவரைப் பார்க்கவுமில்லை. கூட்டம் முடிந்த பிறகு நான் பூரிக்குப் போய்விட்டேன். ராஜகுமார் சுக்லா, மகாத்மா காந்தியுடன் பாட்னாவுக்குப் போனார். நாங்கள் ஒருவரையொருவர் எவ்விதம் அறியாமலிருந்தோமோ அதே போல மகாத்மா எங்கே போகப் போகிறார் என்பதும் எனக்குத் தெரியாது. நான் எங்கே போகிறேன் என்பதும் அவருக்

குத் தெரியாது. தெரிந்திருந்தால் மகாத்மாவுடன் நானும் பீகாருக்குப் போயிருப்பேன். தெரியாததால் நான் பூரிக் குப் போனேன்; மகாத்மா பாட்னுவுக்குப் போனார்.

முதலில் கல்கத்தா ஹைகோர்ட்டில் நான் வக்கீல் தொழிலை நடத்தி வந்தேன். 1916 மார்ச்சில் பாட்னுவிலும் ஹைகோர்ட் ஆரம்பமானதும் கல்கத்தாவிலிருந்து அங்கு குடிபோய் பாட்னுவில் வக்கீலாக இருந்து வந்தேன். பாட்னுவில் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தேன். என் குடும்பத்தினர் அப்பொழுது என்னுடன் இல்லை. அவர்கள் சப்ராவில் என் சகோதரர் வீட்டில் சிறிது காலமும், என் சொந்த கிராமமான ஜெராடாயில் சிறிது காலமுமாக இருந்து வந்தார்கள். இதனுல் என் வேலையாட்கள் மாத்திரமே பாட்னுவில் என்னுடனிருந்தனர். கல்கத்தாவுக்கும் பீகாருக்கும் அதிக தூரம். எனவே பீகாரிகளுக்கு அது புது இடம். இதனுல் ஹைகோர்ட்டில் ஏதாவது வழக்கு சம்பந்தமாக பீகாரிகள் கல்கத்தாவுக்குப் போக நேர்ந்தால் அவர்கள் தங்களுடைய வக்கீல் வீட்டிலேயே தங்கி விடுவதுதான் வழக்கம். பொதுவாக அவர்களுக்குத் தங்குவதற்கு வேறு இடமும் கிடையாது. ஏனெனில் அப்பொழுது கல்கத்தாவில் ஹோட்டல்கள் அதிகமில்லை. அப்படி இருந்தாலும் பீகார் கிராமத்திலிருந்து வரும் ஒருவர் ஹோட்டலில் தங்கவோ அங்கு சாப்பிடவோ விரும்புவதும் கிடையாது. ஆகையால் ஒரு பீகாரி வக்கீலின் வீடு அவருடைய கட்சிக்காரர்களுக்கு சாப்பாட்டு விடுதியாகவும் அக்காலங்களில் இருக்கும். சில வக்கீல்கள் தங்களுடைய கட்சிக்காரர்களுக்குத் தாங்கள் போடும் சாப்பாட்டிற்குப் பணத்தையும் வசூலித்து வந்தார்கள். நான் அப்படிச் செய்வதில்லை. என் வீட்டில் யாராவது வந்து தங்கினுல் அவர்களிடமிருந்து பணம் வாங்காமலேயே அவர்களுக்கு இடம் கொடுத்துச் சாப்பாடும் போட்டு வந்தேன். கல்கத்தாவிலிருந்து நாங்கள் பாட்னுவுக்கு வந்துவிட்ட பிறகும் கட்சிக்காரர்களுக்கு இருக்க இடங் கொடுத்து உணவளிப்பது என்ற பழக்கமும் கூடவே வந்துவிட்டது. இதனுல் பாட்னுவிலும் அப்போதைக்கப்போது கட்சிக்காரர்கள் என்னுடன் வந்து தங்குவார்கள். இதற்கென்றே வீட்டில் தனி அறை ஒன்றுண்டு. ஒரு கட்சிக்காரர் வந்தால், அவரை

எங்கே இருக்கும்படிச் செய்யவேண்டும், அவரை என்ன விதமாக உபசரிக்க வேண்டும், எவ்விதம் நடத்த வேண்டும் என்பதெல்லாம் என் வேலைக்காரர்களுக்கு நன்ருகத் தெரியும்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்காக நான் கல்கத்தா போய் அங்கிருந்து பூரிக்குப் போய் விட்ட சமயத்தில், வீட்டை கவனித்துக் கொள்ளுவதற்காக ஒரு வேலைக்காரன் மாத்திரமே பாட்னுவில் என் வீட்டிலிருந்தான். மற்ற வேலைக்காரர்களெல்லோரும் விடுமுறை எடுத்துக் கொண்டு அவரவர்களுடைய ஊர்களுக்குப் போய்விட்டார்கள். வீட்டில் தங்கியிருந்த வேலைக்காரனே ஒரு அப்பாவியான கிராமவாசி.

மகாத்மா காந்தியுடன் பாட்னுவுக்கு வந்ததும் அவரை நேரே என் வீட்டிற்கு ராஜகுமார் சுக்லா அழைத்துக் கொண்டு போனுர். பாட்னுவில் காந்தியடிகளைத் தங்கும்படிச் செய்வதற்கு வேறு யாரையும் ராஜகுமார் சுக்லாவுக்கு அங்கு தெரியாது. துர்ப்பாக்கியவசமாக நானே ஊரில் இல்லை. என் வேலைக்காரனே, கிராமத்திலிருந்து வரும் கட்சிக்காரர் என்று அவரை எண்ணிக் கொண்டு விட்டான். அவன் மீது குறை சொல்லிப் பயனில்லை. உண்மையில் ராஜகுமார் சுக்லாவும் அப்படிப்பட்ட கிராமத்துக் கட்சிக்காரரே. கிராமத்துக்காரராகவே அவர் பேச்சும் இருக்கும். நடை, உடை, தோற்றம் எல்லாவற்றிலும் அசல் கிராமவாசியாகவே அவர் இருப்பார். காந்தியடிகளின் உடை, தோற்றம் முதலியவைகளும் பெரும்பாலும் கிராமவாசியைப் போன்றே இருந்தது. நான் முன்னுடியே கூறியதைப் போல, அவர் இடுப்பில் வேட்டியும் ஒரு சட்டையும் போட்டிருப்பார். கத்தியவாரியின் முண்டாசும் இருக்கும். பொதுக் கூட்டங்களுக்குச் சென்ருலும் விழாக்களுக்குப் போனுலும் இதுதான் அப்போது அவர் ஆடை கல்கத்தாவில் அவரை வரவேற்பதற்காக நடந்த கூட்டத்திலும், பிறகு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும், அதே உடையில்தான் நான் அவரைப் பார்த்தேன். வழக்கமாக அவர் இடுப்பில் ஒரு வேட்டி கட்டி, மேலே

ஒரு சட்டை போட்டுக் கொண்டு தலையில் ஒரு குல்லாயும் வைத்திருப்பார். பிறகு அந்தக் குல்லாய், அவர் பெயரா லேயே காந்திக் குல்லாய் என்று வழங்குவதாயிற்று. ஐக்ய மாகாணத்திலும் பீகாரிலும் எல்லோரும் அணியும் குல்லா யிக்கும் இதற்கும் வித்தியாசமுண்டு. இக்குல்லாய், கையி ஞல் நூற்று, கையினுலேயே நெய்யப்பட்ட துணியின லானது. காந்தியடிகள் பெரிய மனிதர் என்பதை அந்த அப்பாவி வேலைக்காரன் அறியான். அவருடைய தோற் றம், உடை முதலியவைகளிலிருந்து அவரை ஒரு சாதாரண கட்சிக்காரராகவே அவன் மதித்து விட்டான். அதற்கு ஏற்றபடியே அவரையும் நடத்தினுன். வீட்டின் எஜமான ருக்கு என்று பிரத்தியேகமாக வைக்கப் பட்டிருக்கும் கக்கூஸை உபயோகித்துக் கொள்ளவும் காந்தியடிகளை அவன் அனுமதிக்கவில்லை.

மகாத்மா காந்திக்கு வழக்கப்படிக் குளிக்கவும் முடிய வில்லை. அடுத்தபடி என்ன செய்வதென்று தோன்ருமல் அவர் திகைத்துக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில், மகாத்மா பாட்னுவுக்கு வந்து என் வீட்டிலிருக்கிருர் என் பதை அறிந்த ஸ்ரீ மஜார்-உல்-ஹக், அவரை தம் விருந்தின ராக அழைத்துக் கொண்டு போக அங்கு வந்து சேர்ந்தார். தென்னுப்பிரிக்காவில் மகாத்மா செய்த சிறந்த சேவை களைப்பற்றி ஸ்ரீ மஜார்-உல்-ஹக்குக்கு நன்ருகத் தெரியும். இங்கிலாந்தில் வக்கீலுக்குப் படித்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பியபோது இருவரும் ஒரே கப்பலில்தான் வந்தார்கள். அது முதலே காந்தியடிகளை அவருக்கு நன்ருகத் தெரியும். இவர் தம்மை தம் வீட்டிற்கு அழைத்தபோதிலும் மகாத் மாவுக்கோ சம்பரானுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பது ஆவல். ஆகவே மாலை ரயிலுக்கே புறப்பட்டு விடுவது என்று முடிவு செய்தார். அதற்கு முன்னுலும் ரயில் கிடையாது. வழியில் முஜாபர்பூரில் இறங்கிப் பிறகு போவது என்பது அவருடைய எண்ணம். திர்கத் டிவிஷன் கமிஷனரின் தலைமைக் காரியாலயம் முஜாபர் பூரிலேயே இருக்கிறது. அவுரி பயிரிடும் பீகார் தோட்டக் காரர்களின் சங்கமும் அங்குதான் இருக்கிறது. அச்சங்கத் தின் காரியதரிசி முஜாபர்பூரிலேயே வசிக்கிருர். சம்பரா னுக்குப் போவதற்கு முன்னுல் கமிஷனரையும் அச்சங்கக்

காரியதரிசியையும் கண்டு பேசுவது நல்லது என்று மகாத்மா கருதினர்.

என் வீட்டில் அவருக்கு ஏற்பட்ட அனுபவத்திற்குப் பிறகு, முஜாபர்பூரில் தாம் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளுக்கு ராஜகுமார் சுக்லாவை மகாத்மா காந்தி எதிர்பார்க்கவில்லை. தாமே தமக்கு வேண்டிய வசதிகளை கவனித்துக் கொண்டார். முஜாபர்பூருக்குப் புறப்படுவதற்கு முன்னல் முஜாபர்பூர் கல்லூரியில் அப்பொழுது பேராசிரியராக இருந்த ஆச்சாரிய கிருபளானிக்குத் தந்தி கொடுத்தார். இவருக்கும் காந்தியடிகளுக்கும் கொஞ்ச காலமாகக் கடிதப் போக்குவரத்து இருந்து வந்தாலும் ஒருவரையொருவர் நேரில் அறிய மாட்டார்கள். கடிதப் போக்குவரத்தினுலேயே மகாத்மாவுக்கு அவரைத்தெரியும். ரயில் நடுநிசியில் முஜாபர்பூர் போய்ச் சேர்ந்தது. கிருபளானி, தமது மாணவர்கள் சிலருடன் மகாத்மாவை வரவேற்பதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். ஆனல் காந்தியடிகளின் வாழ்க்கை விவரங்களைப் பற்றி அவருக்குத் தெரியாது. எனவே மேல் வகுப்பு வண்டியிலேயே இருப்பார் என்று எண்ணி காந்தியடிகளை அங்கெல்லாம் ஸ்ரீ கிருபளானியும் மாணவர்களும் தேடினர்கள். ஆனல் காந்தியோ, கையில் ஒரு சிறு மூட்டையுடன் மூன்றும் வகுப்பு வண்டியிலிருந்து இதற்குள் இறங்கி விட்டார். ராஜகுமார் சுக்லாவுடன் பிளாட்பாரத்திலிருந்து வெளியே போகும் வழியை நோக்கி அவர் போய்க்கொண்டுமிருந்தார். மகாத்மாவைத் தாங்கள் காணுது போகவே கிருபளானியும் அவருடைய மாணவர்களும் அவரைக் கண்டு பிடிப்பதற்காக பிளாட்பாரத்தில் அங்குமிங்குமாக அவசர அவசரமாக ஓடிக் கொண்டிருந்தனர். இவர்களைப் பார்த்த ராஜகுமார் சுக்லா, இவர்கள் மகாத்மாவையே தேடிக் கொண்டிருக்கக் கூடும் என்று யூகித்துக் கொண்டார். ஒரு மாணவரைப் பார்த்து, "நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்?" என்றும் கேட்டார். இவரை யாரோ கிராமத்தான் என்று எண்ணிக் கொண்ட அம்மாணவர், ராஜகுமார் சுக்லாவின் கேள்விக்கு பதிலே சொல்லவில்லை. உடனே ராஜகுமார் சுக்லா, "நீங்கள் கர்ம வீரர் காந்தியைத் தேடுகிறீர்களா? அப்படியானல் அவர் என்னுடனிருக்கிறர்"

என்றார். இவ் வார்த்தையைக் கேட்டதும் எல்லோரும் இவரைச் சுற்றிக் கொண்டு விட்டார்கள். இடுப்பில் வேட்டி, ஒரு சட்டை, குல்லாயுடன் விளங்கினார் காந்தியடிகள். கையில் ஒரு சிறு மூட்டை, அதை பக்கத்தில் அணைத்துக் கொண்டிருந்தார். மற்றோர் கையிலோ ஒரு சிறு தகரப்பெட்டி. அதில் கொஞ்சம் பேரிச்சம் பழமும், நிலக்கடலையுமிருந்தன. அவர் கையில் வைத்திருந்த மூட்டையே அவர் படுக்கை. அதில் அவருடைய துணிகளுமிருந்தன. படுக்கும்போது அத்துணிகளைச் சுற்றி தலையணையாக்கிக் கொள்ளுவார். ராஜகுமார் சுக்லாவும் தமது சாமான்களைத் தாமே சுமந்து நின்றுகொண்டிருந்தார்.

மகாத்மாவைக் கண்டதும் எல்லோரும் ஆனந்தமடைந்தார்கள். கல்லூரி மாணவர்களின் விடுதிக்கு கிருபளானியே வார்டன். எனவே அவர் காந்தியடிகளை அங்கு அழைத்துச் சென்று தமது விருந்தினராக அங்கு தங்கியிருக்கும்படிக் கேட்டுக்கொண்டார். இந்தக் கல்லூரி முற்றிலும் சர்க்காரின் நிர்வாகத்திற்குட்பட்ட கல்லூரியல்ல. என்றாலும் சர்க்கார் உதவியை இது பெற்று வந்ததால் இதன்மீது சர்க்காருக்கு ஆதிக்கமிருந்தது. அச்சமயம் இக் கல்லூரிக்குத் தலைமை ஆசிரியராக இருந்தது யார் என்பது எனக்கு நினைவில்லா விட்டாலும் அக்காலத்திலெல்லாம் இந்திய கல்வி இலாகா அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவரே, பொதுவாக ஒரு ஆங்கிலேயரே, தலைமை ஆசிரியராக இருப்பது வழக்கம். மகாத்மாவை கிருபளானி தமது விருந்தினராக ஏற்றுக் கொண்ட போதிலும் அங்கே அவரை வைத்துக் கொண்டிருக்க முடியவில்லை. மகாத்மா மாணவர் விடுதியிலிருந்து ஒரு வக்கீலின் வீட்டுக்குப்போய் விட்டார். காந்தியடிகளை மாணவர் விடுதியில் தமது விருந்தாளியாக வைத்திருந்த குற்றத்திற்காக சில நாட்களுக்கெல்லாம் தமது உத்தியோகத்தை ஸ்ரீ கிருபளானி ராஜிநாமாச் செய்ய நேர்ந்தது. அந்த உத்தியோகத்திலிருந்து விலகியதும் அவர் சம்பரானுக்குப் போய் அங்கு மகாத்மாவுடனிருந்து வேலை செய்ய ஆரம்பித்துவிட்டார்.

அந்த டிவிஷனின் கமிஷனரையும், தோட்ட முதலாளிகள் சங்கத்தின் காரியதரிசியையும் மகாத்மா சந்தித்துப்

பேசினார். தாம் வந்திருப்பதன் நோக்கத்தை அவர்களுக்கு விளக்கினார். அவர்களிருவரும், காந்தியடிகள் சம்பரானுக்குப் போகாமல் திரும்பிவிடும்படிச் செய்ய முயன்றார்கள். அவர்கள் பின்வருமாறு கூறினர்: "விவசாயிகளின் குறைகளைப்பற்றி அறிய, விசாரணை நடத்த, சர்க்கார் இப்பொழுது உத்தரவிட்டிருக்கிறது. சம்பரானில் சர்வே, செட்டில்மெண்டு அதிகாரிகள் வேலைசெய்து வருகின்றனர். விவசாயிகளின் குறைகள் நியாயமானவைகளாக இருந்தால், குறைகளை நீக்குவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது நீங்கள் சம்பரானுக்குப்போனால் விவசாயிகளிடையே பரபரப்பு ஏற்படும். அவர்கள் சமாதானத்திற்கு பங்கத்தையும் உண்டாக்கி விடுவார்கள். பிரான்சில் ஜெர்மனி அதிவேகமாக முன்னேறிவருவதால் யுத்த நிலைமையில் நெருக்கடியானகட்டம் ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் இது மிகவும் விரும்பத்தகாத நிலைமை". அவர்கள் மேலும் சொன்னதாவது: "தோட்ட முதலாளிகளில் பலர் இப்பொழுது போர் முனையிலிருக்கிறார்கள். ஆகையால் அவர்களில்லாதபோது எந்த கிளர்ச்சியையும் உண்டாக்குவது நியாயமே அல்ல". இவ்வாறு கூறி மகாத்மாவை திரும்பிப்போய்விடச் செய்யப் பிரயாசைப்பட்டனர். குடியானவர்களின் குறைகள் அதிகமாக மிகைப்படுத்திக் கூறப்படுகின்றன என்றும் சொன்னார்கள். சம்பரானில் இருந்த நிலைமையைப்பற்றி தர்ப்பங்காவிலிருந்த பாபு பிரஜ்கிஷோர் பிரசாதுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதப்பட்டதால் மகாத்மா அவருக்கும் தந்தி கொடுத்திருந்தார்.

கமிஷனரும் தோட்ட முதலாளிகள் சங்கக் காரியதரிசியும், தாம் சம்பரானுக்குப் போகாமல் திரும்பி விடும்படித் தடுக்க முயற்சி செய்யச்செய்ய தமக்கு சந்தேகம் அதிகமானதோடு, எங்கோ கோளாறு நிச்சயமாக இருக்கவே வேண்டும் என்ற கருத்தும் தமக்கு உறுதிப்பட்டுவிட்டது என்று மகாத்மா பின்னால் எங்களிடம் கூறினார். அவர்களை இரண்டு மூன்று முறைகள் சந்தித்துப் பேசிய பிறகு முடிவாக சம்பரானுக்குப் போவதென்று மகாத்மா தீர்மானித்து விட்டார்.

காந்தியடிகள் இந்த முடிவுக்கு வந்துவிட்டதற்கு மற்றோர் முக்கியமான காரணமும் உண்டு. தங்களுக்கு உதவி செய்வதற்காக மகாத்மா வந்திருக்கிறார் என்பதை அறிந்து சம்பரான் விவசாயிகள் அநேகர் முஜாபர்பூருக்கு வந்து தங்களுடைய துயரங்களைப்பற்றிய விவரங்களை யெல்லாம் எடுத்துக் கூறினார்கள். ராஜகுமார் சுக்லா ஏற்கனவே காந்திஜியிடம் கூறியிருந்த விவரங்களை அவர்கள் ஊர்ஜிதப்படுத்தி விட்டார்கள். இந்த ஏழை விவசாயிகள் நீண்ட காலமாக அடிக்கடி அடக்கி ஒடுக்கப்பட்டு வந்திருப்பதால் அவர்கள் ஓரே பீதி யடைந்து உணர்ச்சியற்றவர்களாகி விட்டார்கள். ஆகையால் பலம் பொருந்திய தோட்ட முதலாளிகளுக்கு எதிராக முணுமுணுத்துத் தங்களுடைய குறைகளைக் கூறிக்கொள்ளும் துணிச்சல்கூட இவர்களுக்குக் கிடையாது. தோட்ட முதலாளிகளுக்கு இருந்த செல்வாக்குக்கு அளவே இல்லை. சர்க்கார் அதிகாரிகளெல்லாம் அவர்களுடைய நண்பர்கள். உள்ளூர் முக்கியஸ்தர்களிடம் மாத்திரமேயன்றி இங்கிலாந்தில் பெரிய இடங்களிலும் அவர்களுக்குச் செல்வாக்கு அதிகமிருந்தது. விவசாயிகள் எவ்வளவு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர் என்பது உண்மையில் உள்ளூர் அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அவர்களுக்கு எந்தவித உதவியையும் செய்யக்கூடிய சக்தி அவர்களுக்கு இல்லை. அப்படி யிருந்தும் யோக்கியப் பொறுப்பும் நல்ல நோக்கமுமுள்ள அதிகாரிகள், அங்கிருக்கும் நிலைமையைக் குறித்து அப்போதைக்கப்போது ரகசிய அறிக்கைகளை சர்க்காருக்கு அனுப்பியே வந்திருக்கிறார்கள். ஆனால் எப்பொழுதோ நிலைமை மோசமாகிவிடும் சமயங்களில் மாத்திரமே சர்க்கார் அந்த அறிக்கைகளின் மீது கொஞ்சம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். எனவே இயற்கையாகவே இத்தகைய நடவடிக்கைகளினால் குறிப்பிடத்தக்க நன்மை எதுவும் ஏற்பட்டுவிடுவது கிடையாது.

சிற்சில சமயங்களில் விவசாயிகள் தங்களையும் மீறி கட்டுக்கடங்காமல் கலவரத்தில் இறங்கிவிடுவதும் உண்டு. இரண்டொரு சமயங்களில் சில தோட்ட முதலாளிகள் கொலை செய்யப்பட்டுமிருக்கின்றனர். அவர்களுடைய

வீடுகள் சில கொளுத்தப்பட்டன. இதன் பலனாக குடியானவர்களுக்கு முன்பிருந்ததைவிடக் கொடுமைகள் அதிகமாயின. இவர்களுக்கு கோர்ட்டுகள் விதித்த தூக்கு தண்டனை, சிறைத்தண்டனை போன்றவைகள் ஒருபுற மிருக்க, இன்னும் அநேக கொடிய துன்பங்களையும் அவர்கள் அனுபவிக்க நேரும். இவர்களுடைய வீடுகளும் வயல்களும் கொள்ளையிடப்பட்டன; இவர்களுடைய வீடுகளைக் கொளுத்திவிடுவார்கள். இவர்கள் நைய அடிக்கப்படுவதோடு இவர்கள் வீட்டுப்பெண்களும் மானபங்கம் செய்யப்படுவார்கள். ஏதாவது இத்தகைய சம்பவமொன்று நிகழ்ந்துவிடும்போதெல்லாம் தோட்ட முதலாளிகளும் சர்க்கார் அதிகாரிகளும் சேர்ந்து கொண்டு விவசாயிகளுக்குத் தாங்கமுடியாத அட்டூழி யங்களைச் செய்து விடுவார்கள். இதன் பலனாகப் பல வருஷங்கள் வரை சம்பரானில் இடுகாட்டு அமைதியே நிலவும். கலவரம் நடந்த இடத்தில் தண்டப் போலீஸைக் கொண்டுவந்து வைத்துவிடுவார்கள். இந்தப் போலீஸின் ஒரே வேலை, கொள்ளையடிப்பதும் விவசாயிகளை ஒடுக்கி நசுக்குவதுமே. இரண்டொரு சமயங்களில் இச் சம்பவங் களைக் குறித்து விசாரிக்க விசேஷ அதிகாரிகளை சர்க்கார் அனுப்பியுமிருக்கிறார்கள். இந்த அதிகாரிகளின் அறிக்கை ஓரளவு விவசாயிகளுக்குச் சாதகமானதாகவும் இருந்திருக் கிறது. ஆனால் இந்த அறிக்கைகளை சர்க்கார் வெளியிட வேண்டும் என்று சட்டசபைகளில் கிளர்ச்சி நடந்தும் அவை வெளியிடப்பட்டதேயில்லை. அதோடு சட்டசபை யில் இதைப்பற்றி ஏதாவது கேட்டால் இதற்கு சர்க்கார் ஒரு சமாதானம் கூறுவது வழக்கம். விவசாயிகளுக்கு உண்மையிலேயே நியாயமான குறைகளிருந்தால் அவர்கள் கோர்ட்டு முன்பு வழக்குத் தொடுத்திருப்பார்களே! அப்படி வழக்குத் தொடரப்படாததிலிருந்து விவசாயி களுக்கு உண்மையாகக் குறைகள் எவையுமில்லை என்பதே வெளியாகிறது என்பது சர்க்கார் கூறிவந்த சமாதானம். நடக்கும் கிளர்ச்சிகளெல்லாம் தோட்ட முதலாளிகளை எதிர்க்கும் விஷமிகளான வெளியார்களால் தூண்டிவிடப் படுகிறவைகளே என்றும் சொல்லி விடுவார்கள். ஆனால் யாராவது வழக்குத் தொடுத்தால் என்ன நடக்கிறது

என்பதை அநேகர் முன்பு அனுபவத்தில் பார்த்தேயிருக்கிறார்கள். கோர்ட்டில் பிராது கொடுக்கப் போய்விடும் தைரியம் வாய்ந்த எந்த விவசாயிகளாவது இருந்தால், தோட்ட முதலாளிகளின் ஆட்கள் மாஜிஸ்டிரேட்டுகளின் முன்னிலையிலிருந்து அவர்களைப் பிடித்து வெளியே இழுத்துவந்து அடித்துப் போட்டு விடுவார்கள். ஆகையால் தங்களுக்குச் சொல்லவொண்ணாத் துயரங்களிருந்தாலும் கோர்ட்டுக்குப் போய் வழக்குத் தொடரும் துணிவு விவசாயிகளுக்கு வராதிருந்ததில் ஆச்சரியமே இல்லை.

மகாத்மா காந்தியைப்பற்றி கேள்விப்பட்டவர்களும் படித்திருந்தவர்களும் யாரோ ஒரு சிலர் இருந்திருக்கக் கூடும். ஆனால் காந்தியடிகளைப்பற்றி அறிந்தவர்கள் விவசாயிகளில் அப்பொழுது யாருமே கிடையாது. என்னைப் போன்ற படித்தவர்களுக்கும், பொதுஜன காரியங்களில் பங்கெடுத்துக் கொள்வதாகக் கூறிக்கொண்டவர்களும்கூட, மகாத்மாவின் காரியங்களைப்பற்றியும் அவருடைய வாழ்க்கையைப்பற்றியும் தெரிந்துகொண்டிருந்தது மிகச்சொற்பம். ஆகையால் அபிவிருத்தியே யில்லாத பகுதியில் மிகவும் பிற்போக்கிலிருந்த கிராமங்களான சம்பரான் கிராமங்களிலிருந்த படிப்பில்லாத ஏழை விவசாயிகளுக்கு மகாத்மாவைப்பற்றி எதுவுமே தெரியாமலிருந்ததில் அதிசயமே கிடையாது. எனினும் அவர்கள் ஒன்று மாத்திரம் கேள்விப்பட்டிருந்தனர். தங்களுக்கு உதவி செய்வதற்கென்றே பக்கத்து ஜில்லாவான முஜபர்பூரில் யாரோ ஒருவர் வந்திருக்கிறார் என்பதுதான் அவர்கள் கேள்விப்பட்டிருந்தது. துயரங்களிலிருந்து தங்களை மீட்கப் போகிறவர் வந்து விட்டார் என்ற நம்பிக்கை அவர்களுக்கு எவ்விதம் வளர்ந்து விட்டிருந்தது என்பதுதான் பெரிய அதிசயம். தோட்ட முதலாளிகளுக்கும் அவர்களுடைய கையாட்களுக்கும் அவர்கள் பயந்து நடுங்கிக்கொண்டிருந்த தெல்லாம் திடீரென மறைந்துபோய் விட்டது. நூற்றுக் கணக்கானவர்கள் காந்தியடிகளைக் காண முஜாபர்பூருக்கு வந்திருந்தார்கள்.

சம்பரானுக்குப் போவதற்கு மகாத்மா தேதியைக் குறிப்பிட்டு விட்டார். எந்த ரயிலில் புறப்படுவதென்ப

தையும் தீர்மானித்தார். பாபு கோரக் பிரசாத் அந்த ஜில்லாவில் பிரபலமான வக்கில். விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காகச் சில காரியங்களையும் அவர் செய்திருக்கிறார். அவர் முஜாபர்பூருக்கு வந்து மகாத்மாவைச்சந்தித்து சம்பரானில் இருக்கும்போது தம் வீட்டில் தங்கும்படியும் அழைத்தார்.

என்றாலும் மகாத்மாவுக்கு ஆரம்பத்திலேயே ஒரு பெரிய கஷ்டமிருந்தது. உள்ளூரில் வழங்குவதான போஜ்பூரி பாஷை அவருக்குத் தெரியாது. தமது வேலைகளையெல்லாம் ஹிந்தியிலேயே செய்வதற்கும் அப்பொழுது மகாத்மாவுக்கு ஹிந்தியும் அவ்வளவு சரியாகத் தெரியாது. விவசாயிகளுக்கோ தங்களுடைய பாஷையைத் தவிர வேறு எதுவுமே புரியாது. ஆகையால் மகாத்மா அவர்களுக்குக் கூற விரும்புவதை அவர்கள் தெரிந்து கொள்ளுவதற்கில்லை. எனவே இரண்டொருவரை மொழி பெயர்ப்பாளர்களாக வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகிவிட்டது. பாபு பிராஜ்கிஷோர் பிரசாத் அச்சமயம் வக்கில் தொழிலில் பிரபலமாயிருந்தார். இவர் ஆஜராகவேண்டிய வழக்குகள் அநேகமிருந்தன. ஆகையால் சில தினங்கள் வரையில் சம்பரானுக்கு மகாத்மாவுடன் போக இவருக்கு இயலாது. அதன்பேரில் மற்றோர் பிரபல வக்கிலும் தமது நண்பருமான பாபு தார்னிதாரையும் புதிதாக வக்கிலாகியிருந்த வாலிபரான பாபு ராம்நவமிப் பிரசாதையும் காந்தியடிகளுடன் சென்று அவருக்கு மொழி பெயர்ப்பாளர்களாக இருந்து உதவுமாறு கேட்டுக் கொண்டார். இந்த ஏற்பாடுகளைச் செய்துவிட்டு இவர் தமது சொந்த வேலைகளின் நிமித்தம் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுவிட்டார்.

இவையெல்லாம் மகாத்மா காந்தி முஜாபர்பூரில் தங்கியிருந்த இரண்டு மூன்று நாட்களில் நடந்தன. சம்பரானுக்கு வெளிப் பிரதேசங்களிலுள்ள கிராமங்களிலிருக்கும் நிலைமையைத் தெரிந்துகொள்ள அவர் விரும்பினார். இதற்காகப் பல கிராமங்களுக்கும் சென்றார். மண் வளம் அதிகமுண்டு; எனினும் பீகார் மிகவும் ஏழ்மையான மாகாணம். அதன் வட ஜில்லாக்களில்

ஜன நெருக்கம் மிக அதிகம். கிராமங்களின் ஏழ்மையும் அசுத்த நிலைமையும் மகாத்மாவின் உள்ளத்தை உருக்கி விட்டன. பெண்களின் துயர நிலை மகாத்மாவின் மனதை அதிகமாக வேதனைப்படுத்திவிட்டது. இந்த ஏழை மக்களின் நிலைமையிலும் கிராமங்களின் நிலைமையிலும் அபிவிருத்தி ஏற்பட்டாலொழிய இந்தியா சந்தோஷமாக இருக்கவே முடியாது என்று மகாத்மா தம்முடனிருந்தவர்களிடம் கூறினார். அங்கு தங்கியிருந்த இரண்டு மூன்று தினங்களில், அவர் கூறியது, அவர் செய்த வேலைகள், அவற்றை அவர் செய்யும் முறை ஆகியவைகளெல்லாம் பலரையும் கவர்ந்துவிட்டன.

சம்பரான் ஜில்லாவின் தலைமை ஸ்தானமாகிய மோதிகரிக்கு வந்து சேர்ந்தபோது ரயில்வே ஸ்டேஷனில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் அவரை வரவேற்றார்கள். கோரக் பாபுவின் வீட்டிற்கு அவர் போய்ச்சேர்ந்த நேரத்திலிருந்தே மக்கள் தொடர்ந்து வந்து அவரைப் பார்த்த வண்ணமிருந்ததோடு தங்களுடைய குறைகளையும் அவரிடம் எடுத்துக்கூறினார்கள். அவர்கள் சொன்னதையெல்லாம் கேட்டு மகாத்மாவின் மனம் வேதனைப்பட்டது. என்றாலும் தாம் எதையும் நேரில் பார்க்கிறவரையில் அவற்றையெல்லாம் நம்பிவிட அவர் தயாராயில்லை. மகாத்மா அங்கு வருவதற்குச் சில தினங்களுக்கு முன்னால் ஒரு சம்பவம் நடந்தது. ஏதோ ஒரு தவறைச் செய்துவிட்டதாகத் தோட்ட முதலாளிக்கு நல்ல அந்தஸ்துள்ள ஒரு விவசாயிமீது ஆத்திரம் வந்துவிட்டது. இந்த விவசாயி அத்தோட்ட முதலாளியின் கோபாவேசத்திற்கு ஆளானதுதான் அச்சம்பவம். இவருக்கு சில நூறு ஏக்கர்கள் நிலமுண்டு. ஒரு யானையை வைத்துக்கொள்வதற்கு வேண்டிய அந்தஸ்தும் இவருக்கு இருந்ததால் இவரிடம் யானையும் இருந்தது. நல்ல வசதி இருப்பவர்கள் மாத்திரமே யானை வைத்துக்கொள்ளும் ஆடம்பரத்தை அனுபவிக்க முடியும். இந்த விவசாயிமீது தோட்ட முதலாளிக்குக் கோபம் வந்துவிடவே, போலீஸ் உதவியைக்கொண்டு இவருடைய வீட்டைக் கொள்ளையடிக்கச் செய்ததோடு நிலத்திலிருந்த பயிர்களையெல்லாம் ஆடு மாடுகளை விட்டு மேய்த்து அழித்துவிட்டார்கள். இவருடைய தோட்டத்திலிருந்த பழ மரங்

கள், முக்கியமாக வாழைகள், யானைகளை விட்டு நாசப்படுத்தப்பட்டுவிட்டன. குண்டாந்தடிகளைக்கொண்டு அடித்து அவர் வீட்டுக்கூரைமீது இருந்த ஓடுகளும் நொறுக்கப்பட்டன. இந்த விவசாயி மகாத்மாவிடம் வந்து தனக்கு ஏற்பட்ட துன்பங்களை விவரித்துக்கூறினார். நடந்திருக்கும் அக்கிரமங்களைக் காட்டுவதற்கான அடையாளங்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன என்றார். வந்து பார்ப்பதற்கு மகாத்மாவுக்குத் தமது யானையை அனுப்புவதாகவும் சொன்னார். அங்குபோய் நேரில் பார்த்துவருவது என்று காந்தியடிகள் உடனே முடிவுசெய்துவிட்டார். மோதிகரிக்கு வந்த சில மணி நேரத்திற்குள்ளேயே இம் முடிவைச் செய்துவிட்டார். அந்த கிராமம் அங்கிருந்து சுமார் பன்னிரண்டு மைல் தூரத்திலிருக்கிறது. ஏப்ரல் மாத வெய்யில் தகித்துக்கொண்டிருந்தது. அனல் காற்று வீசியது. என்றாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் மறுநாள் காலை 10 மணிக்கெல்லாம் மகாத்மா அக்கிராமத்திற்குக் கிளம்பிவிட்டார்.

மகாத்மா அங்கிருந்தது இதற்கு மத்தியில் அதிகார வட்டாரங்களில் பெரும் பரபரப்பை உண்டாக்கிவிட்டது. சம்பரானிலிருந்து காந்தியடிகள் உடனே புறப்பட்டுவிட வேண்டுமென்று அவருக்கு உத்தரவு பிறப்பிக்கும்படி சம்பரான் ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு முஜாபர்பூர் கமிஷனர் அறிவித்துவிட்டார். அதன் பேரில், கிடைக்கும் முதல் ரயிலிலேயே சம்பரானைவிட்டு வெளியேறிவிடவேண்டும் என்று கிரிமினல் புரோஸீஜர் சட்டத்தின் 144வது பிரிவின் கீழ் மாஜிஸ்டிரேட் ஒரு உத்தரவை மகாத்மாவுக்கு அனுப்பினார். ஆனால், பாபு தார்னிதாரோடும், பாபு ராமநவமி பிரசாத்துடனும் மோதிகரியிலிருந்து மகாத்மா புறப்படுவதற்கு முன்னால் அந்த உத்தரவை அவரிடம் கொடுக்கமுடியவில்லை. எனவே அவருக்குப் பின்னாலேயே ஒரு சப்-இன்ஸ்பெக்டர் அனுப்பப்பட்டார். மகாத்மாவைத் தாண்டி சில மைல்கள் தூரம் முன்னாலேயே அந்த சப்-இன்ஸ்பெக்டர் போய் இருந்துகொண்டு, மகாத்மா அருகில் வந்ததும், ஜில்லா மாஜிஸ்டிரேட் பார்க்க விரும்புகிறார் என்று மகாத்மாவிடம் கூறினார். காந்தியடிகள் அந்தப் போலீஸ்

அதிகாரியுடனேயே திரும்பி வந்துவிட்டார். தம்முடனிருந்தவர்கள் தொடர்ந்து சென்று அந்த கிராமத்தின் நிலைமையை நன்ருகப் பார்த்துக்கொண்டு, சாத்தியமானல் அன்று மாலையோ, இல்லாவிட்டால் இரவிலோ திரும்பும்படி ஏற்பாடு செய்துவிட்டே மகாத்மா காந்தி திரும்பினர்.

மகாத்மா மோதிகரிக்குத் திரும்பி வந்ததும், ஜில்லாவை விட்டு வெளியேறும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். அவர் மறந்துவிடவே அவருக்கு ஒரு உத்தரவு எழுத்து மூலம் கொடுக்கப்பட்டது. இதற்கு மகாத்மா, இந்த உத்தரவை ஏற்று நடக்க தாம் கடமைப்பட்டிருக்கவில்லை யென்றும், வேண்டுமானல் மாஜிஸ்டிரேட் தமக்கு உசித மெனத்தோன்றும் நடவடிக்கையை எடுத்துக்கொள்ளலாம் என்றும் பதிலளித்துவிட்டார். இதன்பேரில் உத்தரவை மீறியதற்காக அவர்மீது கிரிமினல் வழக்குத் தொடரப் படும் என்று மாஜிஸ்டிரேட் சொன்னதோடு, அவ்விதம் சட்டப்படி அவர்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் படும் வரையில் அவர் எந்த கிராமத்திற்கும் போகவேண் டாம் என்றும் கேட்டுக்கொண்டார். இக்கோரிக்கைக்கு மகாத்மா உடனே சம்மதித்தார். ஆனல் அதிக நாட்கள் காத்திருக்க வேண்டிய அவசியம் மகாத்மாவுக்கு ஏற்பட வில்லை. அன்று மாலையே அவருக்கு சம்மன் வந்துவிட்டது. மறுநாள் வழக்கு விசாரணையாகையால் கோர்ட்டில் ஆஜராகும்படி சம்மனில் கண்டிருந்தது.

அன்றிரவெல்லாம் மகாத்மா சிரமப்பட்டு வேலைகளை யெல்லாம் செய்து முடித்தார். அவர் செய்த முதல் காரியம் அங்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையைப்பற்றி தமது நண்பர் களுக்கும் சகாக்களுக்கும் தந்தி மூலம் அறிவித்ததே. இதே விதமாக எனக்கு ஒரு தந்தியும், ஸ்ரீ போலக்குக்கு ஒரு தந்தியும் கொடுத்தார். ஸ்ரீ போலக், மகாத்மா தென் னப்பிரிக்காவிலிருந்தபோது அவருடனிருந்து வேலை செய்த நண்பர். அப்பொழுது அவர் அலகாபாத்தில் இருந்தார். வைசிராய் லார்டு செம்ஸ்போர்டுக்கு ஒரு கடிதமும் எழுதினர். பிரிட்டிஷ் காலனி நாடுகளிலிருந்த இந்தியரின் நிலைமைபற்றிய பிரச்னை சம்பந்தமாக மகாத்மா அவரை

முன்னுடியே அறிவார். இக்கடிதத்தில் இங்கு நடந்தது என்ன என்பதை விவரித்துவிட்டு, சர்க்காருடன் தமக்குள்ள நீண்டகாலத் தொடர்பை ஞாபகப்படுத்தி, தாம் செய்துவந்திருக்கும் பொதுஜன சேவையையும், இதற்காக தமக்கு கேஸரிஹிந்த் தங்கப் பதக்கம் கொடுக்கப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டார். இதை தமக்களித்தது ஒரு பெரிய கௌரவம் என்று தாம் கருதுவதாகவும், ஆனால் சம்பாரனில் பொதுஜன சேவை செய்ய அனுமதிக்கும் அளவுக்கு சர்க்காருக்குத் தம் மீது நம்பிக்கை இல்லாத போது, அப்பதக்கத்தைத் தம்முடன் வைத்துக்கொள்ளுவது சரியல்ல என்றே தாம் கருதுவதாகவும் அக்கடிதத்தில் எழுதினார். அப்பதக்கத்தைப் பத்திரமாக வைத்திருக்கும்படி ஒருவரிடம் ஒப்படைத்திருப்பதாகவும், அதை வைசிராய்க்கு அனுப்பிவிடும்படி அவருக்கு அறிவித்திருப்பதாகவும் தெரிவித்தார். பிறகு மகாத்மா தமது நண்பர்கள் பலருக்கும் கடிதம் எழுதி இங்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையை விளக்கினார். கடைசியாக மறுநாள் விசாரணையின் போது கோர்ட்டில் தாம் வாசிப்பதற்காக ஒரு வாக்கு மூலத்தையும் எழுதித் தயாரித்துக் கொண்டார்.

இந்த வேலைகளிலேயே இரவின் பெரும் பகுதி கழிந்துவிட்டது. தந்திகள், கடிதங்கள், வாக்குமூலம் ஆகியவைகளை எழுதியதோடல்லாமல் அவைகளுக்குப் பிரதிகளையும் எழுதிக்கொண்டார். நடுநிசிக்குப் பிறகு பாபு தாரணிதாரும் ராமநவமி பாபுவும் அந்தக் கிராமத்திலிருந்து திரும்பி வந்தார்கள். மகாத்மாவின் கட்டளைப்படி அக்கிராமத்திற்குச் சென்றிருந்த இவர்கள், அங்கு தாங்கள் கண்ட, கேட்ட விவரங்களையெல்லாம் காந்தியடிகளிடம் கூறினர். மகாத்மாவோ, அவர்களிடமிருந்து தாம் பிரிந்த பிறகு என்னவெல்லாம் நடந்தன என்பதை அவர்களுக்குக் கூறினார். நாளைக்கோ கோர்ட்டில் விசாரணை; இது தண்டனையில் முடிந்தாலும் முடியக்கூடும் என்று மகாத்மா அவர்களிடம் சொன்னார். அதன் பிறகு அவர்களுடைய வேலைத் திட்டம் என்ன என்பதையும் அறிய விரும்பினார். இந்தக் கேள்விக்கு உடனே பதிலளிப்பதற்கு அவர்களால் முடியவில்லை. இவர்களோ, திடீரென்று இவ்விதம் நிகழ்ந்துவிட்ட சம்பவங்களால் திகைத்துப்

போயிருந்தார்கள். ஏனெனில் சம்பாரனுக்கு வருவதற்கு முன்னால், இத்தகைய சம்பவங்கள் ஏற்பட்டுவிடும் என்று இவர்கள் கனவிலும் எண்ணியதில்லை. மேலும் கலந்தாலோசிக்கலாம் என்றாலோ அதற்கும் அங்கு இவர்களுக்கு யாரும் கிடையாது. என்றாலும் மகாத்மா கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமலேயே இருந்து விடுவதும் கஷ்டம். பாபு தார்னிதார் பட்டவர்த்தனமான பேர் வழி; அவர் ஒரு மாதிரியானவர். எனவே அவர் பின்வருமாறு சொன்னார்: "மொழிபெயர்ப்பாளர்களாக இருப்பதற்காக எங்களை நீங்கள் இங்கு அழைத்து வந்தீர்கள். நீங்கள் சிறைப்பட்டு விட்டால் அந்த வேலைக்காக நாங்கள் இங்கு இருக்கவேண்டிய அவசியமில்லை. எனவே, எங்கள் ஊர்களுக்கு நாங்கள் திரும்பிப் போகிறோம்" என்றார் அவர். இதைக் கேட்டதும் மகாத்மா, "அப்படியானால் இந்த ஏழை விவசாயிகளின் கதி எப்படியாவது ஆகட்டும் என்று கைவிட்டுவிட்டு நீங்கள் போகப் போகிறீர்களா?" என்று கேட்டார். "நாங்கள் வேறு என்ன தான் செய்ய முடியும்?" என்றார் பாபு தார்னிதார். மேலும், "நீங்கள் விவசாயிகளின் குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரித்து அறிவது என்றிருந்தீர்கள். எனவே நீங்கள் விரும்பினால் எங்களால் முடிந்தவரையில் இந்தக் குற்றச்சாட்டுகளைப் பற்றிப் பரிசீலனை செய்து விசாரித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் சர்க்கார் உங்கள் விஷயத்தில் செய்ததைப்போல ஜில்லாவைவிட்டு வெளியேறும்படி எங்களுக்கும் நோட்டீஸ் பிறப்பித்து விடுமானால் நாங்கள் அந்த உத்தரவை மீற மாட்டோம். சப்தமில்லாமல் கிளம்பிப் போய்விட்டு வேலையைத் தொடர்ந்து நடத்த மற்ற நண்பர்களை அனுப்புகிறோம்" என்றார். இதைக் கேட்டதும் மகாத்மா, "ரொம்ப சரி. உங்களால் முடிந்தவரையில் வேலையைத் தொடர்ந்து செய்து வாருங்கள்" என்றார். இந்த முடிவுக்கு வந்த பிறகு எல்லோரும் படுக்கைக்குச் சென்றனர். அப்பொழுது இரவும் அனேகமாக முடிந்து விட்டது.

இவ்விரு நண்பர்களும் மகாத்மாவுக்கு இவ்விதம் பதில் கூறிவிட்டார்களெனினும் அதைக் குறித்து இவர்களுக்கு திருப்தி ஏற்படவில்லை. தங்களுக்குள் வருமாறு பேசிக்

கொண்டார்கள்: "நாம் இந்தப் பகுதியில் வசிப்பவர்கள். அதோடு ஏழை விவசாயிகளுக்கு நாம் உதவி செய்திருப்பதாகவும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். என்றாலும், சில தினங்களில் நம்முடைய ஊர்களுக்குத் திரும்பிப் போய் மறுபடியும் நம் தொழில்களில் ஈடுபட்டுப் பணம் சம்பாதித்து சௌக்யமாக இருக்கப் போகிறோம். ஆனால் இப் பகுதிக்கு முற்றிலும் புதியவரான இவரோ (மகாத்மா காந்தியோ), இந்த மாகாணத்துடன் எந்தவிதமான தொடர்புமில்லாத, இந்த விவசாயிகளுடன் பழக்கமில்லாத இவரோ, அவர்களுக்காக சிறையில் கிடந்து வாடப்போகிறார். இது விசித்திரமானதாகவே இருக்கும். மற்றோர் பக்கம் பார்த்தால், நாம் சிறைக்குப் போவதைக் குறித்து நமது நண்பர்களுடன் பேசவில்லை; அதைப்பற்றி அவர்களைக் கலந்தாலோசிக்கவுமில்லை. நாம் சிறைக்குப் போனால் நமது குழந்தை குட்டிகளின் கதி என்னவாகும்? சிறைத் தண்டனையை அடைந்த பிறகு நாம் வக்கீல்களாக இருக்கக் கூடாது என்று தடுக்கப்பட்டுவிட்டால் நம் கதிதான் என்ன?". இப்படி யெல்லாம் பல யோசனைகள் செய்தார்கள். மீதமிருந்த இரவையும் அவர்கள் இத்தகைய சிந்தனையிலேயே கழித்து விட்டார்கள்.

மகாத்மா காந்தியின் வேலை முறை பீகாருக்கு மாத்திரமேயன்றி இந்தியா முழுமைக்குமே புதுமையானது. இதுவரை இத்தகைய வேலைமுறை ஒன்றை யாரும் சொல்லிக் கொடுத்ததுமில்லை; இதன் விளைவுகளை யாரும் உணர்ந்ததுமில்லை. வேலை செய்வதில் மகாத்மாவுக்கு இருந்த சக்தியும், அதை அவர் செய்யும் விதமும் எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டன. இரவெல்லாம் விழித்திருப்பது! அவ்வளவு எழுதுவது! மறுநாள் காலை விசாரணைக்கு எல்லாவற்றையும் தயாராக வைத்திருப்பது! இவ்வளவையும் ஒருவர் செய்ய முடியும் என்பதை இதற்கு முன்னால் யாரும் கண்டதே இல்லை.

மகாத்மாவின் தந்தி எவக்குக் கிடைத்ததும் செய்வது என்ன என்பது எனக்குத் தோன்றவில்லை. பாபு பிராஜ்கிஷோரே எங்களுடைய தலைவராகையால் அத் தந்தியிலிருந்த விவரங்களைத் தந்தி மூலமே அவருக்கு அறிவித்தேன்.

மறுநாள் காலை முஜாபர்பூருக்கு வரும்படியும் அவரைக் கேட்டுக்கொண்டேன். நான் எந்த விதத்தில் அவருக்கு உதவியாக இருக்க முடியும் என்பதை அறிவிக்கும்படி மகாத்மாவுக்கும் ஒரு தந்தி கொடுத்தேன். வக்கீல் என்ற முறையில் என் சேவை கோரப்படலாம் என்று எண்ணினேன். எனவே மகாத்மாவுக்குப் போடப்பட்டிருக்கும் உத்தரவு சட்டப்படி சரியானதா என்பதை ஆராய சட்டப் புத்தகங்களின் ஏடுகளை யெல்லாம் புரட்டினேன். ஸ்ரீ மஜ்ஹார்-உல்-ஹக்கைப் பார்த்து நான் கேள்விப்பட்டவைகளை யெல்லாம் அவரிடம் சொன்னேன். இதற்குள் மகாத்மாவிடமிருந்து எனக்கு பதில் தந்தி வந்துவிட்டது. சில நண்பர்களுடன் நான் மோதிகரிக்குப் புறப்பட வேண்டுமென்று அந்தத் தந்தி கூறியது. ஸ்ரீ போலக்கும் பாட்னாவுக்கு ஒரு தந்தி கொடுத்திருந்தார். அன்று மாலையே தாம் பாட்னாவுக்கு வருவதாகவும், மகாத்மாவைச் சந்திப்பதற்காக உடனே சம்பாரானுக்குப் புறப்படப் போவதாகவும் அவர் தந்தியில் கூறியிருந்தார். என் நண்பர்களான காலஞ்சென்ற ஸ்ரீ சம்புசரண், பாபு அனுக்கிரக நாராயண சின்ஹா ஆகியவர்களுடன் மறுநாள் காலையில் சம்பாரானுக்குப் புறப்படுவது என்று நானும் முடிவு செய்தேன். எங்களுடன் வருவதென்று ஸ்ரீ மஜ்ஹார்-உல்-ஹக்கும் தீர்மானித்தார். மறுநாள் காலை பாபு பிராஜ்கிஷோர் பிரசாத் வந்ததும் எல்லோருமாக சம்பாரானுக்குப் புறப்பட்டோம். அக்காலத்தில் ரயில் பிற்பகல் 3 மணிக்கு மோதிகரிக்குப் போய்ச் சேரும். மகாத்மா காந்தியின் வேலை முறையைப் பற்றிய விவரங்களை யெல்லாம் ஸ்ரீ போலக் எங்களுக்கு விவரமாகக் கூறினார். எங்களிடமிருந்து மகாத்மாவுக்கு எந்தவிதமான சட்ட சம்பந்தமான உதவியும் தேவைப்படாது என்றும், தாம் செய்து முடிக்கவேண்டும் என்று விரும்பும் வேலைகளுக்கு ஏதாவது ஒரு வகையில் எங்களை அவர் உபயோகித்துக் கொள்ளுவார் என்றும் ஸ்ரீ போலக் சொன்னார்.

இதற்கு மத்தியில் மோதிகரியிலே வழக்கு விசாரணை ஆரம்பமாகிவிட்டது. அதிகாலையிலேயே மகாத்மா தமது இரு சகாக்களான பாபு தார்னிதார், ராமநவமிப் பிரசாத் ஆகியவர்களுடன் கோர்ட்டுக்குப்

போய்விட்டார். இந்த இருவருக்கும் முதல் நாள் இரவெல்லாம் மனதில் ஊசலாடிக்கொண்டிருந்த பிரச்னைகளே அப்பொழுதும் இருந்து வந்தன. என்றாலும் அதற்கு மேலும் தங்களைத் தாங்களே அடக்கி வைத்துக்கொண்டிருக்க அவர்களால் முடியவில்லை. இவர்கள் மகாத்மாவிடம், "இதைப்பற்றி நாங்கள் முன்கூட்டியே எதுவும் யோசிக்காதுபோனாலும், நீங்கள் மாத்திரம் தனியாகப்போக நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. வெகு தூரத்திலிருந்து வந்திருக்கும் நீங்கள், நமது ஏழை மக்களுக்காக சிறை செல்லத் தயாராயிருக்கும்போது, நாங்கள் மாத்திரம் இங்கு இருக்கிறோம். ஆகையால் நீங்கள் சிறைக்கு அனுப்பப்பட்டால் நாங்கள் இங்கு தொடர்ந்து விசாரணையை நடத்திக்கொண்டுவருவது. அவசியமானால் சிறைக்கும் செல்லுவது என்று முடிவு செய்திருக்கிறோம்" என்றார்கள்.

இதைக் கேட்டதும் மகாத்மாவின் முகம் மலர்ந்து ஆனந்தம் நிலவியது. "அப்படியானால் வெற்றி நமதே" என்று முழங்கினார். பிறகு தென்னாப்பிரிக்காவில் தமது வாழ்க்கையில் ஏற்பட்ட சில சம்பவங்களையும் அவர்களுக்குக் கூறினார். இதற்குள் இவர்கள் கோர்ட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்.

கோர்ட்டு அன்று வெகு விசித்திரமான காட்சியை அளித்தது. மகாத்மாவின் வழக்கு விசாரணைக்கு வருகிறது என்ற செய்தி சுற்றுப்புற கிராமங்களுக்கெல்லாம் காட்டுத் தீ போலப் பரவிவிட்டது. எனவே கோர்ட்டில் ஏராளமானவர்கள் வந்து கூடியிருந்தார்கள். தங்கள் ரட்சகரைப் பார்க்கவேண்டும் என்பதற்காகவே பல கிராமங்களிலிருந்தும் அவர்கள் வந்திருந்தார்கள். தங்களுடைய குறைகளைக் கோர்ட்டு முன்பு போய்ச் சொல்லவும் நடுங்கிக்கொண்டிருந்த அதே விவசாயிகள் தான் அன்று கோர்ட்டில் அவ்வளவு தைரியமாகவும், பெருங்கூட்டமாகவும் வந்து கூடியிருந்தார்கள். அதோடு சர்க்காரின் சட்டத்தை மீறிய ஒருவர்மீது நடக்கும் வழக்கு விசாரணையை கவனிக்கவே அன்று இவ்வளவு ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து குவிந்திருந்தார்கள்.

மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வந்து அமர்ந்து வழக்கு கூப்பிடப்பட்டதும் கோர்ட்டு அறையை நோக்கி ஒரே ஜன நெருக்கம். இதனால் கோர்ட்டு அறையின் கண்ணாடிக் கதவுகளெல்லாம் நொறுங்கிவிட்டன. கூட்டத்தை சமாளிக்க போலீஸாராலும் முடியவில்லை. இந்த மக்களை அடக்கி வைத்திருந்த பீதியின் கதியெல்லாம் என்னவாயிற்று? இம்மக்களுக்கு இந்த உற்சாகமும் துணிச்சலும் எப்படி வந்தன?

மகாத்மாவுக்காக எதிர் வழக்காட அழைக்கப்படுவோம் என்று தவறுதலாக எண்ணிக்கொண்டவர்கள் நாங்கள் மாத்திரமல்ல. மகாத்மா காந்திக்காக பிரபலமான வக்கீல்களும் பாரிஸ்டர்களும் வந்து வாதாடுவார்கள் என்று சர்க்கார் பிராசிகியூட்டரும் எண்ணியிருந்தார். அதோடு, மகாத்மாவே பாரிஸ்டராகையால் தமது கட்சியை விவாதிக்க சட்ட புத்தகங்களையெல்லாம் புரட்டிப் பார்த்துக்கொண்டு தயாராக வந்திருப்பார் என்றும் அவர் நினைத்தார். இந்த வழக்கில் ஒரு கஷ்டமான சட்டப் பிரச்னை இருந்தது என்பது உண்மை. ஜில்லா மாஜிஸ்டிரேட் பிறப்பித்த இதைப் போன்ற உத்தரவு சட்டப்படி செல்லக்கூடியதா என்பது தெளிவானதாக இல்லை. சட்டப்படி அது சரியானதாக இல்லையானால், அந்த உத்தரவை மீறியது குற்றமாகாது. இதற்காக மகாத்மாமீது வழக்கை விசாரிப்பதற்குமில்லை. இதைப்பற்றி நான் சிறிது சிந்தித்துப்பார்த்ததில் ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் உத்தரவு சட்டவிரோதமானது என்ற முடிவுக்கே வந்தேன். ஆகையால் அத்தகையதோர் உத்தரவை மீறியதற்காக காந்தியடிகளைக் குற்றவாளியாக்க முடியாது. இந்தப் பிரச்னை கோர்ட்டில் எழுப்பப்படும் என்று சர்க்கார் வக்கில் நம்பியிருப்பார். இந்த வாதத்தை எதிர்த்து வாதாடுவதற்கு வேண்டிய தயார்களையும் அவர் செய்துகொண்டே வந்திருந்தார். ஆனால் வழக்கு விசாரணைக்கு வந்ததும், சட்ட புத்தகங்களைப் புரட்டிக் கஷ்டப்பட்டதெல்லாம் வீண். அவைகளால் ஒன்றும் பிரயோசனமில்லை என்று ஏற்பட்டுவிட்டது. மகாத்மா காந்தி எந்த உத்தரவை மீறிவிட்டதாக அவர்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதோ அந்த உத்தரவு சட்டரீதியான முறையிலேயே அவருக்கு சார்வு செய்யப்பட்டிருக்கிறது

என்பதை நிரூபிக்கும் முறையில் சர்க்கார் தரப்பில் சாட்சிகள் விடப்பட்டு அதற்கான வகையில் விசாரணையும் ஆரம்பமாயிற்று. ஆனால் மகாத்மாவோ, மாஜிஸ்டிரேட்டிடம், "இந்த சாட்சி அநாவசியமானது. இதை நிரூபிப்பதற்காக உங்கள் நேரமும் என் நேரமும் வீணாக்கப்படுவானேன்? நான் இந்த உத்தரவைப் பெற்றுக்கொண்டு அதற்கு உடன்பட மறுத்துவிட்டேன் என்பதை நானே ஒப்புக்கொள்ளுகிறேன். நீங்கள் என்னை அனுமதித்தால் நான் கூறவேண்டிய வாக்குமூலத்தைப் படிக்கிறேன். இந்த வாக்குமூலத்தையும் நான் இப்பொழுதே தயாராக வைத்திருக்கிறேன்" என்றார்.

ஒரு வழக்கில் எதிரி அனுசரிக்கும் இந்த முறை மாஜிஸ்டிரேட்டுக்கும் சர்க்கார் வக்கீலுக்குமேயல்லாமல் பொது மக்களுக்கும் புதுமையானதாக இருந்தது. அடுத்தபடி என்ன வரப்போகிறது என்பதற்காக எல்லோரும் ஆவலுடனிருந்தார்கள். வாக்குமூலத்தைப் படிக்க மாஜிஸ்டிரேட் அனுமதித்தார்.

மகாத்மா படித்த வாக்குமூலமாவது :

"கி. பு. கோ. 144வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவை மீறியதாகத் தோன்றும் இக்கடுமையான நடவடிக்கையை நான் ஏன் மேற்கொண்டிருக்கிறேன் என்பதை விளக்கக் கோர்ட்டாரின் அனுமதியின்பேரில் ஒரு சுருக்கமான வாக்குமூலத்தை இங்கு வெளியிட விரும்புகிறேன். உள்ளூர் அதிகாரிகளுக்கும் எனக்குமிடையே இருந்துவரும் அபிப்பிராய மாறுபாடு சம்பந்தப்பட்ட விஷயம் இது என்பதே என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஜீவகாருண்ய, தேசிய சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவே நான் இந்த ஜில்லாவுக்கு வந்திருக்கிறேன். இங்குள்ள விவசாயிகளை அவுரி சாகுபடி தோட்ட முதலாளிகள் நியாயமான முறையில் நடத்தவில்லை என்று வற்புறுத்திக் கூறப்படுகிறது. இந்த விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி அழைக்கப்பட்டதன் பேரிலேயே நான் இங்கு வந்தேன். ஆனால் பிரச்னை என்ன என்பதை நேரில் நன்றாகத் தெரிந்துகொள்ளும் வரையில் நான்

எந்த விதத்திலும் பிரயோசனமாக இருக்க முடியாது. ஆகையால் சாத்தியமானல் அதிகாரிகள், தோட்ட முதலாளிகளின் உதவியின் பேரிலேயே நிலைமையைப் பரிசிலனை செய்ய வந்திருக்கிறேன். இதைத் தவிர எனக்கு வேறு நோக்கம் எதுவும் கிடையாது. நான் இங்கு வந்ததால் பொதுஜன அமைதிக்கு எந்தவிதத்திலும் பாதகம் ஏற்படும் என்ருே, உயிர்ச் சேதங்களுண்டாகும் என்ருே நம்புவதற்கு நான் தயாராயில்லை. இத்தகைய காரியங்களில் எனக்கு முழு அனுபவமும் இருக்கிறது என்று நான் திடமாக எண்ணுகிறேன். அதிகாரிகளோ இதற்கு நேர்மாருகக் கருதுகிருர்கள். அவர்களுக்குள்ள கஷ்டங்களையும் நான் உணருகிறேன். தங்களுக்குக் கிடைக்கும் தகவல்களைக் கொண்டே அவர்கள் நடக்க முடியும் என்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். சட்டத்திற்கு உட்பட்டு நடக்கும் பிரஜை என்ற முறையில், என்மீது பிறப்பிக்கப்பட்டிருக்கும் உத்தரவுக்கு உடன்பட்டு நடக்கவேண்டும் என்ற உணர்ச்சியே எனக்கு ஏற்படும். ஆனல் அப்படிச் செய்தால், நான் யாருக்காக இங்கு வந்தேனே அவர்கள் விஷயத்தில் எனக்குள்ள கடமையை உணர்ந்து நான் நடந்துகொண்டதாக ஆகாது. அவர்கள் மத்தியில் இருப்பது ஒன்றினுல் மாத்திரமே நான் அவர்களுக்கு ஏதாவது சேவை செய்ய முடியும் என்று இப்பொழுது உணருகிறேன். ஆகையால் நானே வலிய விலகிப் போய்விட முடியாது. எனது இவ்விரு கடமை உணர்ச்சிகளுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் இப்போராட்டத்தில் விவசாயிகளின் மத்தியிலிருந்து என்னை அகற்றும் பொறுப்பை சர்க்கார் தலையில் போட்டு விடுவது என்று தீர்மானித்துவிட்டேன். இந்தியப் பொது வாழ்க்கையில் நான் வகிப்பதைப் போன்றதோர் ஸ்தானத்திலிருப்பவர்கள் பிறருக்கு வழிகாட்டியாக நடக்கும் ஒரு காரியத்தில் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியம் என்பதை நான் நன்ருக அறிவேன். நான் இன்று எந்த நிலைமையிலிருக்கிறேனே அதே நிலைமையிலிருக்கும் சுய மதிப்புள்ள ஒருவருக்கு அவர் செய்யக்கூடிய கௌரவமான, பத்திரமான காரியம், நான் இப்பொழுது முடிவு செய்திருப்பதைப்போல நடப்பதுதான் என்பது என் திட-

மான நம்பிக்கை. அதாவது, உத்தரவை மீறியதற்குரிய தண்டனையை எந்தவித ஆட்சேபமுமின்றி ஏற்றுக் கொண்டு விடுவதுதான் அது.

"எனக்கு விதிக்கப்படும் தண்டனை குறைக்கப்படட்டும் என்பதற்காக இந்த வாக்குமூலத்தை வெளியிட நான் துணியவில்லை. ஆனால், என்மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நான் மீறியது, சட்டத்தின் அதிகாரத்தின் மீது நான் கொண்டிருக்கும் மரியாதைக் குறைவினால் அல்ல; என்னுள்ளிருக்கும் உயர்ந்த சட்டத்திற்கு, என் மனச்சாட்சியின் குரலுக்குப் பணிந்தே அந்த உத்தரவை மீறினேன் என்பதை எடுத்துக் காட்டவே எனது இந்த வாக்குமூலம்."

இந்த வாக்குமூலத்தைக் கேட்ட ஒவ்வொருவரும் திகைத்துப் போனார்கள். இந்தியாவில் ஒரு பிரிட்டிஷ் கோர்ட்டின் முன்பு அத்தகையதோர் வாக்குமூலத்தை இதற்கு முன்னால் எவரும் கொடுத்திருக்கவும் மாட்டார்கள்; கொடுத்ததாக கேள்விப்பட்டிருக்கவும் மாட்டார்கள். மாஜிஸ்டிரேட்டும் திகைத்துப் போனார். மகாத்மா காந்தி மீது தொடரப்பட்டிருக்கும் வழக்கு விசாரணையும் மற்ற வழக்குகளின் விசாரணையைப் போலவே நடக்கும் என்று தான் அவரும் எண்ணியிருந்திருப்பார். சாட்சிகள் விசாரிக்கப்படுவார்கள்; அதைத் தொடர்ந்து இரு தரப்பு வக்கீல் வாதங்களும் நடக்கும்; இதற்கு மத்தியில் தாம் அளிக்கவேண்டிய தீர்ப்பு, கொடுக்கவேண்டிய தண்டனை ஆகியவைகளைக் குறித்து ஜில்லா மாஜிஸ்டிரேட்டை அவர் கலந்தாலோசித்துக் கொள்ளுவார். ஆனால் காந்தியடிகள் தமது வாக்குமூலத்தைப் படித்துவிட்ட பிறகு சாட்சி விசாரணைக்கோ அல்லது இரு தரப்பு விவாதங்களுக்கோ அவசியமே இல்லாது போயிற்று. அச்சமயத்தில் பாக்கியிருந்ததெல்லாம் தண்டனையை விதிக்க வேண்டியதுதான். ஆனால், அதற்கு வேண்டிய தயாருடன் மாஜிஸ்டிரேட் அப்பொழுது இல்லை. எனவே மாஜிஸ்டிரேட் மகாத்மாவைப் பார்த்து, "நீங்கள் கூறியதிலிருந்து குற்றத்தை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா என்பது தெளிவாகவில்லை" என்றார். இதற்கு

மகாத்மா. "நான் என்ன சொல்ல விரும்பினேனோ அதைச் சொல்லிவிட்டேன்" என்றார். மாஜிஸ்டிரேட்டுக்கு எப்படியும் அவகாசம் வேண்டும். எனவே, "அப்படியானால் சாட்சிகளை விசாரித்து இரு தரப்பு வாதங்களையும் கேட்போம்" என்றார் மாஜிஸ்டிரேட். அதற்கு விட்டு விடக்கூடியவரல்ல மகாத்மா. உடனே, "இதுதான் உங்கள் கருத்தானால் நான் குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டார். இதற்குப் பிறகு என்ன செய்வதென்று மாஜிஸ்டிரேட்டுக்குப் புரியவில்லை. அவர், "ரொம்ப சரி, என் தீர்ப்பை சில மணி நேரம் கழித்துக் கூறுகிறேன். இதற்கு மத்தியில் நீங்கள் ஜாமீன் கொடுத்து விட்டு வீட்டுக்குப் போகலாம்" என்றார். இதற்கு காந்தியடிகள், தமக்கு ஜாமீன் யாருமில்லை என்றும், தாம் எந்த ஜாமீனும் கொடுக்கப் போவதில்லை என்றும் கூறிவிட்டார். அதற்குமேல் என்ன செய்வதென்று மாஜிஸ்டிரேட்டுக்கு விளங்கவில்லை. மகாத்மா காந்தியை போலீஸ் காவலில் வைப்பதா? "உமக்கு ஜாமீன் யாருமில்லையானால் சொந்த ஜாமீன் கொடுத்துவிட்டுப் போங்கள்" என்று உரத்த குரலில் மாஜிஸ்டிரேட் சொன்னார். இதற்கும் மகாத்மா மறுத்துவிடவே, "போய்விட்டு 3 மணிக்கு வாருங்கள். அப்பொழுது என் தீர்ப்பைக் கூறுகிறேன்" என்றார் மாஜிஸ்டிரேட். இதற்கு மகாத்மா ஒப்புக்கொண்டதோடு குறிப்பிட்ட நேரத்தில் கோர்ட்டிலிருப்பதாகவும் கூறினார்.

மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்து போய்விட்டார். மகாத்மாவும் புறப்படுவதற்கிருந்த சமயத்தில், ஜில்லா போலீஸ் சூப்பரின்டெண்டு பார்க்க விரும்புகிறார் என இவருக்குத் தகவல் வந்தது. அவர் ஒரு ஆங்கிலேயர். ஒரு வேளை அவர் தென்னாப்பிரிக்காவில் இருந்திருக்கக்கூடும். இல்லாவிட்டால் அந்த நாட்டுடன் வேறு எந்த தொடர்பாவது அவருக்கு இருந்திருக்கக்கூடும். மகாத்மா திரும்பவும் கோர்ட்டில் ஆஜராகவேண்டிய நேரம் வரும்வரையில் இருவரும் பல விஷயங்களைக் குறித்து பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருவேளை தென்னாப்பிரிக்காவைப் பற்றியும் பேசியிருக்கலாம். ஆனால் இதற்கு முன்னாலேயே மாஜிஸ்டிரேட் தகவல் அனுப்பிவிட்டார். அன்று தாம் தீர்ப்புக் கூறப்போவதில்லை என்றும், ஆறு நாட்கள்

கழித்து ஒரு தினத்தில் தமது தீர்ப்பைச் சொல்லப் போவதாகவும் செய்தி அனுப்பினார். அதன்பேரில் மகாத்மா தாம் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார். அவர் வருகைக்காக அங்கும் ஏராளமான மக்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த சமயத்தில்தான் எங்களுடைய ரயிலும் அங்கு வந்து சேர்ந்தது. நேரே பாபு சோரக் பிரசாத் வீட்டுக்குப் போனோம். மகாத்மா கோர்ட்டிலிருந்து வந்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் நாங்களும் அங்கு போய்விட்டோம். எங்களை, முக்கியமாக ஸ்ரீ மஜ்ஹார்-உல்-ஹக், ஸ்ரீ போலக் ஆகியவர்களைப் பார்த்ததும் மகாத்மா அதிக ஆனந்த மடைந்தார். மற்றவர்கள் மகாத்மாவுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். நான் அறிமுகம் செய்துவைக் கப்பட்டபோது மகாத்மா சிரித்துக்கொண்டே, "ஓ! நீங் களும் வந்திருக்கிறீர்களா? உங்கள் வீட்டிற்கு நான் வந்திருந்தேன்" என்றார். மகாத்மா நேர்முகமாக என்னிடம் பேசிய முதல் வார்த்தைகள் இவைகளே. அவர் பேசி நான் கேட்ட முதற் சொற்களும் இவையே. இதற்கு மத்தியில், என் வேலைக்காரன் என் வீட்டில் அவரை நடத்திய விதத்தை நான் அறிந்திருந்தேனுகையால், காந்தி யடிகளின் இவ்வார்த்தைகளைக் கேட்டதும் எனக்கு வெட்கமாகிவிட்டது. நான் சங்கடப்படுகிறேன் என்பதை மகாத்மா கவனித்துக்கொண்டதும் பேச்சை மாற்றி அங்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையைப்பற்றிக் கூற ஆரம்பித்தார். நடந்ததைப்பற்றிச் சுருக்கமாக எங்களுக்குக் கூறிவிட்டு மேற்கொண்டு விவரங்களை பாபு தார்னிதார், ராமநவமி பிரசாத் ஆகிய இருவரையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படியும், இடையே தாம் ஸ்ரீ போலக்குடன் பேசிக் கொண்டிருக்க விரும்புவதாகவும் கூறினார். அப்பொழுது மகாத்மா முன் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தார். அவர் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டு சுற்றிலும் அநேகர் இருந்தார்கள். நாங்கள் பக்கத்து அறைக்குப் போனோம். வழக்கு பற்றியும் மற்ற விவரங்களைக் குறித்தும் எங்கள் நண்பர்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டோம். சிறை செல்லுவதென நாங்கள் முடிவுக்கு வந்துவிட்ட விதத்தை யும் அவர்கள் எங்களுக்குச் சொன்னார்கள். எங்களுக்கும்

இதே பிரச்னை ஏற்படக்கூடும் என்பது அப்பொழுதே எங்களுக்கும் தெரியும். என்றாலும், எங்கள் நண்பர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்ட பிறகு அதே போலவே நாங்களும் நடப்பதைத் தவிர வேறு வழியில்லை.

ஸ்ரீ போலக்குடன் பேசி முடிந்ததும் மகாத்மா நாங்களிருந்த அறைக்கு வந்தார். எல்லா விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டோமா என்று விசாரித்தார். தெரிந்து கொண்டோம் என நாங்கள் சொன்னதும், சிறை செல்ல நாங்களும் தயாராக இருக்கிறோமா என்று மகாத்மா கேட்டார். எங்கள் முடிவையும் நாங்கள் சொன்னோம். அவர் அதிக திருப்தியடைந்தார். ஆனால் விஷயத்தை அத்தோடு விட்டுவிட அவர் விரும்பவில்லை. ஒரு துண்டு காகிதத்தையும் பென்சிலையும் எடுத்துக் கொண்டு எங்கள் பெயர்களை எழுத ஆரம்பித்தார். பரிசிலனையைத் தொடர்ந்து நடத்துவதற்கென்றும், ஒருவருக்குப்பின் மற்றொருவராக சிறைக்குப் போவதற்கென்றும், எங்களை இரு கோஷ்டிகளாகவும் பிரித்தார். ஒரு கோஷ்டி தொடர்ந்து விவசாயிகளிடையே பரிசிலனையை நடத்திக் கொண்டு வருவது; அந்த கோஷ்டி சிறைப்பட்டு விட்டால் அந்த வேலையை மற்றோர் கோஷ்டி மேற்கொள்ளுவது; எங்களைப் பின்பற்றி நடக்க வேறு பலரும் வந்தால் அதே மாதிரி செய்ய ஏற்பாடு செய்வது என்பதே நோக்கம். பிறகு முதல் கோஷ்டியில் ஸ்ரீ மஜார்-உல்-ஹக்கும், பாபு பிரஜ்கிஷோர் பிரசாதும் இருப்பது என்றும் முடிவு செய்தார். இந்த நிலைமைக்கு வேண்டிய தயாருடன் எங்களில் யாரும் வரவில்லை. எனவே திடீரென்று நாங்கள் இந்த முடிவுக்கு வரவேண்டியிருந்தது. மத்தியில் சில தினங்கள் இடைவெளி இருப்பது நல்லதாயிற்று என்று நாங்கள் எண்ணினோம். நாங்கள் ஊருக்குத் திரும்பிப் போய் எங்கள் காரியங்களைப் பார்த்துக்கொண்டு திரும்பி விடலாம் என்றும் கருதினோம்.

அச்சமயத்தில் மஜார்-உல்-ஹக் ஒரு செஷன்ஸ் வழக்கில் ஆஜராகி வந்தார். அந்த வழக்கு அப்பொழுது விசாரணையில் இருந்து வந்தது. ஆகையால் மகாத்மா சிறைப்பட்டு விட்டால் அவருக்குப் பதிலாக தலைமையை

ஏற்று இயக்கத்தை நடத்துவதற்குச் சௌகரியமாக இருப்பதை முன்னிட்டு ஊருக்குப் போய் தமது வேலைகளை முடித்துக்கொண்டு, மகாத்மா வழக்கில் மாஜிஸ்டிரேட் தீர்ப்புச் சொல்லவிருக்கும் நாளில் திரும்பி வந்துவிட, உடனே ஊருக்குப் புறப்படுவதென அவர் முடிவு செய்து விட்டார். அந்த சமயத்தில் திரும்பி வந்துவிடுவதற்கு சௌகரியமாக இருப்பதை முன்னிட்டு பாபு பிரஜ் கிஷோர் பிரசாதும் ஊருக்குச் சென்று விட்டார். எனவே நாங்கள் மாத்திரமே தங்கினோம்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடமிருந்து மகாத்மா காந்திக்கு ஒரு கடிதம் வந்தது. எல்லா விவரங்களையும் தாம் சர்க்காருககு அறிவித்திருப்பதாக அக் கடிதத்தில் எழுதியிருந்ததோடு, தீர்ப்புக் கூறப்படும் வரையில் எந்த கிராமத்திற்கும் போகவேண்டாமென்று மகாத்மாவை கேட்டுக்கொள்ளுவதாகவும் கூறியிருந்தார். இதற்கு காந்திஜி சம்மதித்துவிட்டார். தீர்ப்புக்காகக் காத்துக்கொண்டு நாங்களெல்லோரும் அங்கேயே இருந்தோம். என்றாலும், மேற்கொண்டும் ஒன்றும் நடக்காது என்றும், நிச்சயம் என்று சொல்ல முடியாவிட்டாலும் நம்மை சிறைக்குச் செல்லும்படி செய்துவிடமாட்டார்கள் என்றே தோன்றுவதாகவும் மகாத்மா கருதினர். எல்லா நண்பர்களுக்கும் இந்த தகவல்களை அறிவித்தார். என்ன நடந்து வருகிறது என்பதை இந்தியாவிலிருக்கும் முக்கியமான பத்திரிகைகளெல்லாம் முன்கூட்டியே அறிந்திருக்கட்டும் என்பதற்காக அப்பத்திரிகாசிரியர்களுக்கும் எழுதினார். ஆனால் பத்திரிகைகளில் எதையும் பிரசுரிக்க வேண்டாம் என்றும் அவர்களைக் கேட்டுக்கொண்டார். ஆகவே பத்திரிகைகளில் வெளியானதெல்லாம் பத்திரிகை நிருபர்கள் அனுப்பிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டவைகளேயன்றி மகாத்மா அனுப்பிய தகவல்களைக் கொண்டவையல்ல.

கண்டறியாப் புதுமுறை

மகாத்மா காந்தியை நான் சந்தித்தது அதுதான் முதல் தடவை; நான் முதன் முதல் அவரோடு பேசியதும் அப்பொழுதுதான். இந்த சந்திப்பினுல் எனக்கு எந்தவிதமான உணர்ச்சியும் ஏற்படவில்லை. எனது புத்திப் போக்கிலும், வாழ்க்கையிலும் இந்த சந்திப்பு முற்றிலும் பெரியதோர் மாறுதலை உண்டாக்கிவிடும் என்றும் நான் அப்பொழுது எண்ணவில்லை.

காலஞ் சென்ற கோபால கிருஷ்ண கோகலேயை பல வருஷங்களுக்கு முன்னுல் நான் சந்தித்திருக்கிறேன். இந்திய ஊழியர்கள் சங்கத்தில் சேரும்படி அவர் எனக்குப் புத்திமதி கூறினுர். இதைப்பற்றி நாங்கள் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அவருடைய யோசனை என்னை அதிகமாகக் கவர்ந்து விட்டது. இதைக் குறித்து நான் பல நாட்கள் வரையில் அதிகத் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருந்தேன். ஆனுல் அவருடைய யோசனையை நான் ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை என்று கடைசியாக முடிவு செய்து விட்டேன். அப்படியிருக்க, சிறை செல்லுவது என்ற மகாத்மா காந்தியின் யோசனையைப்பற்றி மாத்திரம் கொஞ்சங்கூட சிந்திக்காமல் நான் எவ்விதம் உடனே ஏற்றுக் கொண்டு விட்டேன் என்பது எனக்கே விளங்கவில்லை. அவர் எங்களுக்குப் போட்டதெல்லாம் அந்த ஒரே கேள்விதான். எங்கள் வாழ்க்கை முழுவதையும் தேசத்திற்கே அர்ப்பணம் செய்து விடுவது என்ற எண்ணமும் எங்களுக்கு அப்பொழுது இருந்ததில்லை. என்ருலும் நான் முன்னுல் சொன்னவாறு அவருடைய கேள்விக்கு நாங்கள் பதில் சொல்லி விட்டோம்.

வலிய நாமே சிறை புகுவது என்பது, எனக்கு மாத்திரமல்ல, தேசம் முழுமைக்குமே புதியதானதோர் கருத்து. காந்தியடிகள் வருகிற வரையில், சாதாரணமாக சிறை தண்டனை கிடைக்கக்கூடிய வேலை எதிலும் நாங்கள் ஈடு

பட்டதில்லை. அப்படியே எதையாவது செய்வதா யிருந்தாலும், சிறையில் சிக்கிக் கொள்ளாத வகையில் தந்திரமாகச் செய்து தப்பித்துக் கொள்ளுவதுதான் புத்திசாலித்தனம் என்று எண்ணியிருந்தோம். ராஜ நிந்தனையாகப் பேச விரும்பினால் பேசி விடுவோம். அப்படிப் பேசினாலும், இ. பு. கோ. 124 ஏ. பிரிவை நினைவில் வைத்துக்கொண்டு, கஷ்டத்தில் சிக்கிக் கொள்ளாத வகையிலான பாஷையில் பேசி விடுவோம். பாம்பைக் கொல்ல விரும்புவோம்; அதே சமயத்தில் எந்தத் தடியைக்கொண்டு அப்பாம்பைக் கொல்லப் பார்க்கிறோமோ அத்தடியும் கெட்டுவிடக் கூடாது என்பதிலும் உஷாராக இருப்போம். இதை வெற்றிகரமாகச் செய்து விடுகிறவர்களையே புத்திசாலியாகவும் மதித்து வந்தோம். புரட்சிக்காரர்கள், உயிரை வட்சியம் செய்யாமல் காரியங்களைச் செய்து வந்தார்கள். ஆனால் அவர்களும் சாத்தியமான வரையில் தப்புவதற்கு வேண்டிய வழிகளையும் வைத்துக் கொண்டே இருப்பார்கள். வேண்டுமென்றே தீயில் குதித்துவிட யாரும் தயாராயில்லை. ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டால் அவருக்காக கோர்ட்டில் எதிர்வழக்காட வக்கீல்கள் நியமிக்கப் படுவார்கள். அவரை மீட்டுக்கொண்டு வந்துவிடுவதற்கு எல்லா முயற்சிகளும் செய்யப்படும். நாங்கள் அறிந்திருந்த முறையெல்லாம் அவ்வளவே. காந்தியடிகள் கூறியபடி நாங்கள் செய்யத் தயாராக இருந்ததைப் போல, அறிந்தே ஆபத்தில் சிக்கிக் கொள்ள நாங்கள் முற்பட்டதே கிடையாது. என்னைப் பொறுத்த வரையில் நான் மிதமான நோக்குடையவன். என்னுடைய அதே மிதவாத நோக்குடனேயே இன்றும் இருக்கிறேன். மகாத்மாவின் யோசனையோ, என் சொந்த வாழ்க்கையைப் பொறுத்த வரையில், புதியதாக இருந்ததோடு தேசத்திலுள்ள பொதுஜன ஊழியர்களுக்கு ஒரு புது மார்க்கத்தைக் காட்டுவதாகவும் இருந்தது. அப்படியிருந்தும், இப்பொழுது நான் திடீரென செய்துவிட்ட முடிவுக்கு எப்படி, எந்த வழியில் நான் வந்தேன் என்பது எனக்கே தெரியவில்லை. இரு நண்பர்களான பாபு தார்னிதாரும், பாபு ராமநவமிப் பிரசாதும் உதாரணங்களாக என் முன்னால் இருந்தார்கள் என்பது உண்மை. ஆனால் என்னுடன் வந்தவர்களான மஜார்-உல்-ஹக் சாஹிப், பாபு பிராஜ்

கிஷோர் ஆகியவர்கள் பெரியவர்களாக மதிக்கப்பட்டவர்கள். அந்த இரு நண்பர்களின் உதாரணம்தான் இவர்களையும் உடனே அம்முடிவுக்கு வந்து விடும்படிச் செய்து விட்டதா? பின்னால் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சிந்தித்துப் பாராமலேயே மகாத்மா காந்தியைப் பின்பற்றுவதென்ற தீர்மானத்திற்கு இவர்களும் வந்து விட்டனரா? இவர்களும் கண்மூடித் தனமாகத்தான் அவரைப் பின்பற்றுகிறார்களா?

இவ்விதம் அலசிச் சிந்தித்துப் பார்ப்பதென்பதெல்லாம் பின்னால்தான் எனக்கு வந்தது. நான் அறிந்த வரையில், மகாத்மா காந்தியை முதலில் சந்தித்தபோது எனக்கு அந்த விதமான சிந்தனையெல்லாம் ஏற்படவே இல்லை. அவரைப் பார்த்ததும் என் மனதில் அவரைப் பற்றிய கவர்ச்சி எனக்கு எதுவும் உண்டானதும் கிடையாது என்பதையும் முன்னாடியே கூறியிருக்கிறேன். காலஞ் சென்ற கோகலேயைச் சந்தித்தபோது அவர்மீது உண்டான கவர்ச்சிகூட இப்பொழுது இவர்மீது எனக்கு உண்டாகவில்லை. ஒரு வேளை காந்தியடிகளிடம் ஏதாவது ஒருவகை காந்த சக்தி இருக்கக்கூடும். அச்சமயம் நாங்கள் அதை அறிய முடியாதபடிச் செய்து, அவர்மீது தவிர்க்க முடியாத அன்பை உண்டாக்கி, பதில் பேசாமல் அவர் ஆக்ஞைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி அந்தச் சக்தி செய்து விடுகிறதோ என்னவோ!

சம்பாரனில் மகாத்மா காந்தி என்ன செய்தாரோ அதையே இன்னும் பெரிய அளவில் இந்நாட்டில் அவர் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தியபோது செய்தார். இதனாலேயே சம்பாரனில் என்ன நடந்தது என்பதை யெல்லாம் வாசகர்களுக்கு விவரமாகக் கூறுகிறேன். சம்பாரனிலேயே காந்திஜி முதன் முதலில் அந்த அரச மரத்தின் சிறு விதையை ஊன்றினார். இதன் முக்கியத்தை அச்சமயம் யாரும் அவ்வளவாக அறியவில்லை. அந்த விதையே பிறகு பிரமாண்டமான மரமாக வளர்ந்து விட்டது. அந்த மரத்தின் நிழலில் அன்னிய ஆட்சியிடமிருந்து நாம் சுதந்திரத்தை வென்றதோடு அந்த சுதந்திரத்தின் முழு பலன்களையும் அடையவும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

இதைப் பற்றி இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சிந்தித்துப் பார்ப்போம். விவசாயிகளின் பரிதாபகரமான நிலையே அவரை சம்பரானுக்கு வரும்படிச் செய்தது. கூறப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையானவை என்பதைத் தாமே நேரில் விசாரித்து அறிந்து கொள்ளும் வரையில் இவ்விஷயத்தில் எதையுமே செய்ய மகாத்மா விரும்பவில்லை. இந்த விவசாயிகள் சம்பந்தமாக லட்சுமணபுரி காங்கிரஸில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் சாதாரணமானது; மிதமான கோரிக்கையைக் கொண்டது. விவசாயிகளின் குறைகளைப்பற்றி விசாரணை நடத்தவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது என்பதுதான் அத் தீர்மானம். இதை பிரேரிக்கக்கூட மகாத்மா மறுத்துவிட்டார். ஆனால் அருக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததுமே, முன்னால் வாக்களித்திருந்தபடி, சம்பரானுக்கு வந்து விசாரணை நடத்த ஆரம்பித்துவிட்டார். முஜாபர்பூருக்கு வந்ததும் முதல் காரியமாக தாம் செய்ய உத்தேசித்திருப்பது என்ன என்பதை எதிராளிகளுக்கு அறிவித்து, அவர்கள் உதவியையும் நாடினார். இந்த எதிராளிகள் இருவகைப்பட்டவர்கள். முதலாவது, தோட்ட முதலாளிகள். நடத்தவேண்டியிருக்கும் விசாரணையோ அவர்களுடைய நடத்தையைப் பற்றியது. இரண்டாவது தாத்தினரோ, சர்க்கார் அதிகாரிகள். தோட்ட முதலாளிகளின் கொடுமைகளிலிருந்து, அக்கிராமங்களிலிருந்து, விவசாயிகளைப் பாதுகாக்க இந்த அதிகாரிகளால் முடியவில்லை. அதோடு இவர்கள் பாரபட்சமாக நடந்துகொள்ளுவதோடு விவசாயிகளை அடக்கி ஒடுக்குவதற்கு இவர்களும் தோட்ட முதலாளிகளுடன் கூடிக்கொண்டு விடுகிறார்கள் என்பதுதான் இருந்த புகார். இந்த இருவகையினரின் பிரதிநிதிகளையும் மகாத்மா காந்தி சந்தித்தார். தோட்ட முதலாளிகள் சங்கக் காரியதரிசியையும், திர்ஹுத் டிவிஷன் கமிஷனரையும் பார்த்து, தாம் வந்திருப்பதன் நோக்கத்தை அவர்களிடம் விளக்கிக்கூறி, அப்பணியைத் தாம் நிறைவேற்றி வைப்பதற்கு ஒத்துழைப்பை அளிக்கும்படியும் கேட்டுக்கொண்டார். அவர்கள் அவ்விதம் செய்யாது போகவே தாம் செய்யவேண்டிய வேலையைத் தொடங்கிவிட்டார். சம்பரானைவிட்டுப் போய்விட வேண்டுமென்று ஜில்லா மாஜிஸ்டிரேட் உத்தரவு போட்ட

போதிலும், தமது கடமை எனத் தோன்றியதை மகாத்மா கைவிடவில்லை. சம்பரான் விவசாயிகளின் மோசமான ஏழ்மை நிலைமையைப் பற்றி அவர் அதிகமாகக் கேள்விப் பட்டிருக்கிறார். முஜாபர்பூர் வந்ததும் பக்கத்து கிராமங் களைப் போய்ப் பார்த்துவிட்டு, கிராமங்களின் நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டாலொழிய தேசத்தில் அபிவிருத்தி உண்டாக முடியாது என்றும் கூறிவிட்டார்.

மோதிகரிக்கு வந்த பிறகும் அவர் ஒரு நிமிடத்தைக் கூட விணுக்கவில்லை. அங்கு விசாரணையை நடத்த சர்க்கார் தம்மை அனுமதிக்காது என்பதை கமிஷனரிடம் பேசியதிலிருந்தே புரிந்துகொண்டு விட்டார். ஆகையால் சர்க்கார் எந்தவித நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளு வதற்கு முன்னால் சம்பரானுக்குச் சீக்கிரமே போய் எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் செய்துவிட வேண் டும் என்று துணிந்துவிட்டார். லட்சுமணபுரியில் எதைத் துவங்கினரோ அதை முஜாபர்பூரிலும், மோதிகரியிலும் தொடர்ந்து செய்தார். அதாவது விவசாயிகளிடமிருந்தே அவர்களுடைய குறைகளைத் தெரிந்துகொண்டார். முஜாபர் பூரில் விஷயங்களை நேரில் அறிந்துகொள்ள முற்பட்டார். ஆகையால் நிலைமையை தாமே நேரில் அறிவது என்று அவர் முடிவு கட்டிக்கொண்டதோடல்லாமல் அதன்படியும் செய்தார். ஆரம்பத்தில் சர்க்கார் அவருக்கு இடையூருக நின்றது. 144-வது பிரிவின்படி அவருக்குத் தடையுத்தர வும் பிறப்பித்தது. தமது காரியங்களை எந்தவித திட மான உறுதியின்பேரில் செய்து வருகிருரோ அதே முறை யில் சர்க்காரின் தடையுத்தரவையும் பலிக்காதபடிச் செய்து விடுவதென மனதில் அவர் திடங்கொண்டு விட் டார். தம் மீது வழக்கு விசாரணைக்கு வந்தபோது அவர் அதில் எதிர்த்து வாதாடவில்லை. குற்றத்தை ஏற்றுக் கொண்டார்; தமக்கு எந்த தண்டனை அளிக்கப்பட்டா லும் ஏற்றுக்கொள்ளத் தயார் என்ருர். இது மிகவும் புதிதானது. கோர்ட்டில் இந்த வாக்குமூலத்தில் இவர் என்ன சொன்ஞரோ அதேதான் பிறகு 1922-ல் ஆமதா பாத் செஷன்ஸ் ஜட்ஜ் முன்பு இவர் கொடுத்த வாக்கு மூலத்திலும் பிரதிபலித்தது. அந்தக் கோர்ட்டில் ராஜ நிந்தனைக் குற்றத்திற்காக மகாத்மா தண்டிக்கப்பட்டார்.

சிரமப்பட்டு வேலை செய்வது, வரும் கஷ்டங்களையெல்லாம் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பது என்பது அவருடைய வாழ்க்கையின் முக்கியாம்சங்கள். அவருடைய எளிய வாழ்க்கையும், அடக்கமும் எங்களுக்குப் புதுமையாக இருந்தன. ஆனால் அவைகளோ அவருடைய வாழ்க்கையோடு ஒன்றுபட்டிருந்தவை. அவருடைய சேவைகள் விஸ்தாரமான போதுதான் அவை மேலும் அதிகத் தெளிவாகப் புலனாயின.

பின்னால் ஆமதாபாத் ஜில்லா ஜட்ஜு முன்பு அவர் கொடுத்த வாக்குமூலம் வருமாறு:

“திடமான ராஜ விஸ்வாசியும், ஒத்துழைப்பாளனுமாகிய நான், சமாதானமடைய முடியாத விஸ்வாசமற்றவனாகவும், ஒத்துழையாமைக்காரனாகவும் ஏன் மாறிவிட்டேன் என்பதை இந்தியப் பொது மக்களுக்கும், இங்கிலாந்தின் பொதுஜனங்களுக்கும் விளக்கிக்கூற, என் மீது தொடரப்பட்டிருக்கும் இந்த வழக்கை உபயோகித்துக் கொள்ளுவது என் கடமை எனக் கருதுகிறேன். இந்தியாவில் சட்டப்படி அமைந்திருக்கும் சர்க்கார் மீது துவேஷத்தை நான் மூட்டுவதாக என்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை நான் ஏன் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்பதை இந்தக் கோர்ட்டுக்கும்நான் கூறவேண்டும்.

“அதிக சங்கடமான சூழ்நிலையில் 1893-ல் என் பொதுஜன சேவை வாழ்க்கை தென்னாப்பிரிக்காவில் ஆரம்பமாயிற்று. அந்தேசத்தில் பிரிட்டிஷ் ஆட்சியுடன் எனக்கு ஏற்பட்ட முதல் தொடர்பு சந்தோஷகரமான அத்தியாயமல்ல, ஒரு மனிதன், இந்தியன் என்ற முறையில் எனக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது என்பதைக் கண்டுகொண்டேன். இதற்கு நேர்மாறாக, நான் இந்தியன் என்பதனாலேயே, மனிதன் என்ற முறையில் இருந்தாகவேண்டிய உரிமைகள் எனக்குக் கிடைக்கவில்லை என்பதையும் தெரிந்து கொண்டேன்.

“ஆனால் நான் திகைத்துப்போய் சும்மாயிருந்து விடவில்லை. இந்தியர் இவ்விதம் நடத்தப்படுவதானது, அதன் தன்மையில் நல்லதேயான ஒரு முறையில் அனாவசியமாக முளைத்துவிட்ட ஒரு தீய புல்லுருவியைப் போன்றதே அது

என்றும் எண்ணினேன். சர்க்காருக்கு நானே எனது மனமார்ந்த ஒத்துழைப்பையும் அளித்தேன். அது தவறு செய்வதாக எனக்குத் தோன்றிய சமயங்களில் சர்க்காரை முற்றிலும் கண்டித்தும் வந்தேன். ஆனால் அதன் அழிவை மாத்திரம் நான் விரும்பியதே இல்லை.

"பிறகு போயர்களின் சவாலினால் 1899-ல், சாம்ராஜ்யம் நிலவுவதென்பதற்கே அபாயம் வந்து விடுமோ என்று தோன்றியபோது, என் சேவையை சாம்ராஜ்யத்திற்கு அளித்தேன். தொண்டர்களைக்கொண்ட வைத்திய உதவிப் படை ஒன்றைத் திரட்டினேன். லாண்ட்ஸ்மித்தை மீட்பதற்காக நடந்த பல போர்களிலும் சேவை செய்தேன். பின்னர் 1906ல் ஜுலு புரட்சி ஏற்பட்ட சமயத்திலும் காயம்பட்டவர்களைத் தூக்கிச்செல்லும் கோஷ்டி ஒன்றைச் சேர்த்துக்கொண்டு அக் கலவரம் முடியும் வரையில் சேவை செய்தேன். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் எனக்குப் பதக்கங்கள் அணிவித்தார்கள். சர்க்கார் அறிக்கைகளிலும் மெச்சியிருந்தார்கள். நான் தென்னாப்பிரிக்காவில் செய்த சேவைக்காக லார்டு ஹார்டிஞ்ச் எனக்கு கைஸ்ஸரி ஹிந்த் தங்கப் பதக்கத்தை அளித்தார். 1914ல் இங்கிலாந்திற்கும் ஜெர்மனிக்கும் போர் மூண்டபோது, அப்பொழுது லண்டனிலிருந்த இந்தியரையும், முக்கியமாக மாணவர்களையும் கொண்ட வைத்திய உதவிப் படை யொன்றை லண்டனில் திரட்டினேன். இது மெச்சத்தக்க சேவை என்று அதிகாரிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கடைசியாக இந்தியாவில் 1917ல் டில்லியில் நடந்த யுத்த மகாநாட்டில் படைக்கு ஆள் திரட்டவேண்டுமென்று லார்டு செம்ஸ்போர்டு வேண்டுகோள் வெளியிட்டபோது, என் உடல்நிலை சரியாக இல்லை என்பதையும் பொருட்படுத்தாமல், கேடாவில் படைக்கு ஆள் சேர்க்கப் புறப்பட்டேன். சேர பலர் முன் வந்துகொண்டிருந்த சமயத்தில் யுத்தம் நின்றுவிட்டது. மேற்கொண்டும் படைக்கு ஆட்கள் தேவையில்லை என்னும் அறிவிப்பும் வந்துவிட்டது. இவ்விதம் சேவை செய்வதற்கெல்லாம் நான் முயற்சி செய்ததற்குக் காரணம், எனக்கிருந்த ஒரு நம்பிக்கையே ஆகும். இத்தகைய சேவைகளின் மூலம் சாம்ராஜ்யத்தில் என் தேச மக்களுக்கு சமத்துவ

மான அந்தஸ்து கிடைக்கும் என்பதே எனது அந்த நம்பிக்கை.

"ஆனால் ரௌலட் சட்டத்தின் மூலம் எனக்கு முதல் அதிர்ச்சி ஏற்பட்டது. உண்மையான சுதந்திரத்தை யெல்லாம் மக்களிடமிருந்து பறித்துவிடும் தந்திரத்தில் வந்ததே அந்தச் சட்டம். அந்தச் சட்டத்தை எதிர்த்து பலமானதோர் கிளர்ச்சி நடத்துவது என் கடமை என்று கருதினேன். தொடர்ந்து பாஞ்சாலக் கொடுமைகள் வந்தன. ஜாலியன்வாலாபாக் படுகொலையும், நெஞ்சினால் தரையில் ஊர்ந்து செல்லவேண்டும் என்று விதிக்கப்பட்ட உத்தரவுகளும், மக்களை அவமானப்படுத்தும் காரியங்களெல்லாமே நடந்தன. துருக்கியைப்பற்றியும், முஸ்லிம்களின் புண்ணிய ஸ்தலங்களைப்பற்றியும் இந்திய முஸ்லிம்களுக்கு பிரதம மந்திரி அளித்த வாக்குறுதியும் நிறைவேற்றப் படப்போவதில்லை என்பதையும் கண்டுகொண்டேன்.

"நண்பர்கள் வற்புறுத்தியும், எவ்வளவோ எச்சரிக்கை செய்திருந்தும், 1919ல் அமிர்தசரஸ் காங்கிரஸில் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களுக்கு ஒத்துழைப்பளித்து வேலைசெய்யவேண்டும் என்று போராடினேன். இந்திய முஸ்லிம்களுக்கு பிரதம மந்திரி அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படும், பாஞ்சால சம்பவங்களால் மக்கள் மனதில் உண்டாகிவிட்ட புண் ஆற்றப்படும், அரசியல் சீர்திருத்தம் போதுமானதல்லதாகவும் திருப்தியற்றதாகவும் இருந்தபோதிலும் இந்தியாவின் வாழ்க்கையில் நம்பிக்கை தரும் புதிய சகாப்தம் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கையிலேயே அவ்விதம் செய்தேன்.

"ஆனால் அந்த நம்பிக்கைகளெல்லாம் தகர்ந்துபோய் விட்டன. பாஞ்சாலத்தில் நடந்த குற்றங்கள் சம்பந்தமாகப் பூசி மெழுகிவிட்டார்கள். அரைப்பட்டினியாகக் கிடந்த இந்திய மக்களோ, உயிரற்றுப் போகும் நிலைமைக்கு மூழ்கிக் கொண்டிருந்தார்கள். மக்களுக்குக் கிடைக்கும் பரிதாபகரமான கொஞ்ச வசதிகளும், சுரண்டிக்கொண்டு போகும் அன்னியருக்குத் தாங்கள் செய்யும் வேலைக்காக தங்களுக்கு கொடுக்கப்படும் தரகே என்பதையும், இந்த லாபங்களும் தரகும் பொதுமக்களிடமிருந்தே உறுஞ்சப்படுகின்றன

என்பதையும் இம்மக்கள் அறியமாட்டார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் சட்டத்தின்பேரில் அமைக்கப்பட்டிருக்கும் சர்க்கார், பொது மக்களை இவ்விதம் சுரண்டுவதற்காகவே நடத்தப்பட்டு வருகிறது என்பதையும் அவர்கள் உணரவில்லை. அநேக கிராமங்களில் கண் முன்பு காட்சியளிக்கும் எலும்புக் கூடுகளான ஏராளமான மக்களே இதற்குப் போதிய சாட்சியமாக இருக்கும்போது, எந்த உபதேசங்களுமோ அல்லது புள்ளி விவரங்களைச் சொல்லும் கண்கட்டி வித்தைகளோ இந்த உண்மையை மறைத்துவிட முடியாது. மனித வர்க்கத்திற்கு எதிராக நடத்தப்பட்டு வரும் இப் பெரும் குற்றத்திற்கு சரித்திரத்தில் வேறு இணையே கிடையாது. ஆகையால் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றால், இங்கிலாந்தும் இந்தியாவில் பட்டண வாசங்களில் இருப்பவர்களும், இக்குற்றத்திற்கு பதில் சொல்லியே ஆகவேண்டும் என்பதில் எனக்குக் கொஞ்சமேனும் சந்தேகமே இல்லை. இந்நாட்டில் அமுலிலிருக்கும் சட்டங்களே சுரண்டும் அன்னியருக்கு உதவியாகவே உபயோகிக்கப்பட்டு வருகின்றன. பாஞ்சால ராணுவச் சட்ட வழக்குகளை பாரபட்சமின்றி நான் பரிசீலனை செய்து பார்த்தேன். விதிக்கப்பட்டிருக்கும் தண்டனைகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து சத விகிதமானவை முற்றிலும் மோசமானவை என்று நம்புகிறேன். இந்தியாவில் நடத்தப்பட்டுவந்த ராஜீய வழக்குகளில் எனக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்தைக்கொண்டு பார்த்தால், அவற்றில் பத்தில் ஒன்பது வழக்குகளில் தண்டனை யடைந்திருப்பவர்கள் நிரபராதிகள் என்ற முடிவுக்கே வந்துவிட்டேன். அவர்கள் செய்த குற்றமெல்லாம், தங்கள் சொந்த நாட்டின் மீது அன்பு கொண்டதுதான். இந்தியருக்குக் குற்றமிழைத்திருப்பதாக ஐரோப்பியர்கள்மீது இந்தியக் கோர்ட்டுகளில் நடந்திருக்கும் வழக்குகளில், நூற்றில் தொண்ணூற்று ஒன்பது வழக்குகளில், இந்தியருக்கு நீதி மறுக்கப்பட்டிருக்கிறது. நான் எதையும் மிகைப்படுத்திக் காட்டவில்லை. இத்தகைய வழக்குகளில் ஏதாவது ஒரு வகையில் சம்பந்தப்பட நேர்ந்த ஒவ்வொரு இந்தியரின் அனுபவமும் இதுவே. இந்நாட்டில் சட்டம், அறிந்தோ அல்லது அறியாமலோ, மக்களைச் சுரண்டுகிறவர்களின்

நன்மைக்காக இவ்விதம் விபசாரஞ் செய்யப்படுகிறது என்பது என் அபிப்பிராயம்.

"இதிலிருக்கும் பெரிய துரதிருஷ்டம், நான் விவரிக்க முற்பட்ட இந்தக் குற்றங்களைத் தாங்களே செய்துவருகிறார்கள் என்பதை, இந்நாட்டின் நிர்வாகத்தை நடத்திவரும் ஆங்கிலேயரும், அவர்களுடைய இந்திய சகாக்களும் அறியாமலிருப்பதுதான், உலகத்தில் அனுசரிக்கப்படும் நிர்வாக முறைகளில் 'சிறந்ததான ஒரு நிர்வாகத்தைத் தாங்கள் நடத்திக்கொண்டு வருவதாகவும், மெதுவாகவேயாயினும் நிதானமாக இந்தியா முன்னேறிக்கொண்டு வருகிறது என்றும் பல ஆங்கிலேய, இந்திய அதிகாரிகள் உண்மையிலேயே நம்புகிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் அவர்களுக்கு ஒன்று மாத்திரம் தெரியாது. ஒரு பக்கம் மறைமுகமான, ஆனால் கடுமையான கொடுமையும், சரியான பலாத்காரத்தின் சத்தியுமிருக்கின்றன. மற்றோர் பக்கத்திலோ, அக்கிரமங்களை எதிர்ப்பதற்கும், பதிலுக்குப் பதில் செய்வதற்கும், தற்பாதுகாப்புக்கும் மக்களுக்குள்ள சக்திகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. இவை மக்களை அதிக பலவீனப்படுத்திவிட்டதோடு இந்நிலையை அவர்களுக்குப் பழக்கமாக்கியும் விட்டன. அதோடு நிர்வாகிகளை மேலும் அறியாமைக்குட்படுத்தி, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுவோராகவும் செய்துவிட்டன. என்மீது 124-ஏ. பிரிவின்படி குற்றஞ் சாட்டப்பட்டிருப்பது சந்தோஷகரமானது. மக்களின் சுதந்திரத்தை நசுக்குவதற்காக உபயோகிக்கப்படும் இந்திய கிரிமினல் சட்டப்பிரிவுகளில் இப்பிரிவே ராஜா போன்றது. சட்டத்தைக்கொண்டு அன்பை உற்பத்தி செய்யவோ அல்லது ஒழுங்கு படுத்தவோ முடியாது. ஒருவர் மீதோ அல்லது ஒன்றின் மீதோ ஒருவருக்கு விருப்பம் இல்லையாயின், பலாத்காரத்தை உண்டாக்கவோ அல்லது தூண்டிவிடவோ அவர் முயற்சி செய்யாமலும் எண்ணமலுமிருக்கும் வரையில், தமக்குள்ள விருப்பமின்மையை அவர் பகிரங்கமாக எடுத்துக் கூறுவதற்குவேண்டிய முழு சுதந்திரமும் அவருக்கு இருந்தாகவேண்டும். ஆனாலும் நானும், ஸ்ரீ பாங்கரும், எந்தச் சட்டப்பிரிவின்படி குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறோமோ, அச்சட்டம், சாதாரணமாக

எங்கள் விருப்பமின்மையை எடுத்துக்கூறுவதையே குற்றமாக்குகின்றன. இச்சட்டப் பிரகாரம் விசாரணை நடத்தப்பட்டிருக்கும் சில வழக்குகளின் விவரங்களை நான் நன்றாகப் படித்திருக்கிறேன். இந்தியா போற்றும் சிறந்த தேச பக்தர்களில் அநேகர் இச்சட்டத்தின்படி தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அறிவேன். ஆகையால் இச் சட்டத்தின் கீழ் நானும் குற்றஞ் சாட்டப்படுவதை ஒரு பெருமையாகவே எண்ணுகிறேன்.

"நான் கொண்டுவிட்ட துவேஷத்திற்குக் காரணம் என்ன என்பதை சுருக்கமாக விளக்கிவிட முயன்றிருக்கிறேன். எந்த தனிப்பட்ட அதிகாரிமீதும், என் சொந்த முறையில், எனக்கு எந்தவிதமான வெறுப்பும் கிடையாது. மன்னர் சம்பந்தப்பட்ட வரையிலும் எனக்கு துவேஷமும் எதுவுமில்லை. ஆனால், முன்னாலிருந்த ஆட்சி முறைகளெல்லாவற்றையும்விட, மொத்தத்தில் இந்தியாவுக்கு அதிகத் தீமையை விளைவித்திருக்கும் ஒரு சர்க்கார்மீது துவேஷங் கொள்ளுவதென்பது ஒருவருக்கிருக்கவேண்டிய சிறந்த குணம் என்று நான் கருதுகிறேன். இந்தியா, முன்னால் இருந்ததையெல்லாம்விட, பிரிட்டிஷ் ஆட்சியில் மனிதத் தன்மையிலும் வீரத்திலும் அதிகமாகக் குறைந்துபோய் விட்டது. இதுதான் என் நம்பிக்கையாகையால், இந்த ஆட்சி முறையிடம் அன்பு வைப்பது ஒரு பாபச் செயல் என்று நான் கருதுகிறேன். எனக்கு விரோதமாக இவ் வழக்கில் சாட்சியமாக வைக்கப்பட்டிருக்கும் என்னுடைய பல கட்டுரைகளையும் நான் எழுத முடிந்தது, எனக்கு வாய்த்தப் பொன்னான பாக்யங்களாகும்.

"இங்கிலாந்தும் இந்தியாவும் ஒன்றுக்கொன்று இயற்கையல்லாத நிலையில் இருந்துவருகின்றன. இதிலிருந்து விடுபட வேண்டும் என்ற உறுதியை ஒத்துழையாமையினால் நான் காட்டுவதன்மூலம் நான் உண்மையில் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் சேவை செய்கிறேன் என்றே நம்புகிறேன். நல்லதோடு ஒத்துழைப்பது எவ்விதம் கடமையோ அதேபோல தீயதோடு ஒத்துழையாமை செய்வதும் கடமை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆனால் முன்பெல்லாம், தீமை செய்வோர் விஷயத்தில் ஒத்துழை

யாமை என்பது, வேண்டுமென்றே பலாத்காரத்தின் மூலம் காட்டப்பட்டு வந்தது. பலாத்காரத்தோடு கூடிய ஒத்துழையாமை தீமையையே பெருக்கும். தீமை பலாத்காரத்தினுலேயே நிலைத்திருக்க முடியுமாகையால் தீமைக்கு உதவி செய்துவிடாமலிருப்பதற்கு பலாத்காரத்தை முற்றிலும் கைவிடுவது அவசியம். இதை என் தேச மக்களுக்குக் காட்டவே பாடுபட்டுவருகிறேன். நான் பெரிய குற்றம் செய்திருப்பதாகச் சட்டப்படி கூறப்படுகிறது. ஆனால் நான் செய்தது ஒரு பிரஜையின் முக்கியமானதோர் கடமை என்று எண்ணுகிறேன். ஆகையால் சட்டப்படி எனக்கு விதிக்கப்படும் அதிகபட்ச தண்டனையை வரவேற்று, அதற்கு உடன்பட நான் இப்பொழுது தயாராயிருக்கிறேன். இதில் ஜட்ஜும், அசெசர்களும் செய்யக்கூடியது ஒன்றுதான் உண்டு. நீங்கள் எந்தச் சட்டத்தை நிர்வகிக்க அழைக்கப்பட்டிருக்கிறீர்களோ அந்தச் சட்டம் தீயது என்றும், உண்மையிலேயே நான் குற்றமற்றவன் என்றும் நீங்கள் நினைத்தால், உங்கள் உத்தியோகங்களை ராஜிநாமா செய்துவிட்டு அதன்மூலம் தீமையிலிருந்து விலகிக்கொள்ளுங்கள். அல்லது நடப்பதற்கு நீங்கள் உதவி செய்யும் இந்த ஆட்சி முறையும், சட்டமும் இந்நாட்டு மக்களுக்கு நல்லவையே என்றும், என்னுடைய நடவடிக்கை பொது மக்களின் நன்மைக்குத் தீமை பயப்பது என்றும் நீங்கள் நம்புவதாயிருந்தால், எனக்குக் கடுமையான தண்டனையை விதியுங்கள்."

* * *

மோதிகரி போய்ச் சேர்ந்ததும், அநேகர் அறிந்தோ அல்லது அறியாமலேயோ, அவரைப் பின்பற்றுவதென்று முடிவு செய்துவிட்டது அதிர்ஷ்டவசமானதேயாகும். சம்பரானிலிருந்த வேலையோ பெரியது எதுவுமல்ல. ஆகவே இதைச் செய்து முடிக்க காந்தியடிகளுக்குக் குறைந்த காலமும், ஒரு சிலரின் உதவியுமே தேவையாயிற்று. அன்னிய ஆட்சியிலிருந்து நாட்டை மீட்கும், சுயராஜ்யத்தைத் தேடும் பணியை அவர் மேற்கொண்டபோது, சம்பரானில் ஒரு சிலர் எப்படி உதவி செய்தார்களோ அதே போலவே, பல்லாயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும் மகாத்மா காந்தியை

நாடெங்கும் பின்பற்றினார்கள். தேசம் முழுவதுமே தன்னுடைய தியாகத்தின் சக்தியை பகிரங்கப்படுத்திவிடவில்லையா? இதற்கு வேண்டியதான ஒரு தயாரிப்பே சம்பரான் இயக்கம். தோட்ட முதலாளிகளின் கொடுமைகளும், அட்டூழியங்களும் ஒழிந்ததால் முடிவில் சம்பரானில் வெற்றி பெற்றோம். ஆனால் அதே சமயத்தில் அத்தோட்ட முதலாளிகளிடமும், சர்க்காரிடமும் அவர் கொண்டிருந்த உறவு மாத்திரம் நட்பு முறையிலேயே இருந்துவந்தது. அவர்களோடு அவருக்கு இருந்த பல அனுபவங்கள் சந்தோஷகரமானவைகளாகவே இருந்தன. அவர் அப்பொழுது செய்து கொண்டிருந்த காரியங்கள், தோட்ட முதலாளிகளுக்கு பெரும் நஷ்டத்தை உண்டாக்கும் எனத் தோன்றியது. அச்சமயம் நஷ்டத்தையும் உண்டாக்கின. அப்பொழுது கூட சுமுகம் கெடவில்லை. கடைசியாக தோட்ட முதலாளிகள், தங்களுடைய தொழிற்சாலைகள், நிலங்கள், கால்நடைகள் முதலியவைகளையெல்லாம் நல்ல விலைக்கே விற்றுவிட்டு ஆனந்தமாகப் போனார்கள். அடைந்தவரையில் நமது சுதந்தரத்தின் விளைவுகளும் அதே போல சுமுகமானதாகவே இருக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இங்கு அடியோடு இல்லை என்றே தோன்றுகிறது என்றாலும் இன்று இந்தியருக்கும் பிரிட்டிஷ் மக்களுக்கும் நட்பு அதிகரித்திருக்கிறது. நாம் சுயராஜ்யத்தை அடைந்து விட்டதனால் பிரிட்டிஷ் மக்களுக்கு முடிவில் எந்தவித நஷ்டமும் இராது. அவர்களுக்கு நன்மையே இருக்கும் என்று நம்புகிறேன்.

சம்பரானில் இவ்வளவெல்லாம் நடந்த பிறகும், சக்தி வாய்ந்த ஒரு தோட்ட முதலாளி மாத்திரம், தனது எதிர்ப்பைக் காட்டிக்கொண்டே வந்ததோடு மகாத்மா காந்திக்கு விரோதமாகவும் இருந்து வந்தார். இதனால் காந்தியடிகளுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ பெரிய கவலை எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. சம்பரான் விஷயத்தில் வார்டு செம்ஸ் போர்டு நடந்து கொண்டதைப் போலவே ஸ்ரீ சர்ச்சிலும் பின்னால் நடந்து விடவில்லையா? சுதந்திரத்திற்காக மகாத்மா காந்தி சம்பரானின் மண்ணில் நாட்டிய விதை முளைத்துத் தளிர்த்து மரமாகி, சிறிய அளவில் சம்பரானில் ஏற்பட்டதைப் போலவே பிறகு பெரிய அளவில் பூத்துக்

காய்த்துப் பழம் தரும் என்று அந்தக் காலத்திலேயே நான் நினைத்தேன். அதையே நான் இன்றும் எழுதுகிறேன்.

"சம்பாரானில் காந்திஜி" என்ற புத்தகமொன்றை 1919-ல் நான் எழுதினேன். அது பின்னல் பிரசுரமாயிற்று. அப்பொழுதுதான் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பமாகியிருந்தது. நாம் என்னென்ன கஷ்டங்களையும் தடைகளையும் சமாளிக்க வேண்டியிருக்கும் என்பது எங்களுக்குத் தெரியாது. முடிவான பலனையும் நாங்கள் அறியோம். ஒத்துழையாமை இயக்கம், சம்பரான் போராட்டத்தைப் போல முடிவில் வெற்றியையே அளிக்கும் என்ற நம்பிக்கை சம்பரான் அனுபவத்தால் எனக்கு இருந்தபோதிலும், சுதந்திரமடைவதற்கு எவ்வளவு காலமாகும் என்பதையும் நாங்கள் உணரவில்லை. அது வெற்றிகரமாக முடிந்தது என்பதை இன்று அறிவோம். அந்த புத்தகத்திற்கு முகவுரையாக 1919-ல் நான் வருமாறு எழுதினேன். இப்புத்தகம் ஹிந்தியில் 1919-ல் எழுதப்பட்டது. 1922-லேயே முதலில் பிரசுரமாயிற்று. அதன் ஆங்கிலப் பிரதி 1928 மார்ச்சில் வெளிவந்தது. ஹிந்திப் பதிப்பிற்கு முன்னுரையாக நான் எழுதியதாவது:

"1920, 1922-ம் வருடங்களுக்குமிடையே சத்தியாக்கிரக, ஒத்துழையாமை இயக்கங்களின் சம்பந்தமாக மகாத்மா காந்தி என்ன செய்துகொண்டிருக்கிறாரோ அது, சம்பாரானில் செய்யப்பட்டது என்பது இந்நூலைப் படிப்பவர்களுக்குத் தெளிவாக விளங்கும். தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும் மகாத்மா செய்த முதல் பெரிய காரியம் சம்பாரானிலேயே நடந்தது. அச்சமயம் நாட்டில் ஹோம் ரூல் (சுயாட்சி) கிளர்ச்சி பலமாக இருந்தது. சம்பாரானும் அந்த இயக்கத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கும்படி நாங்கள் மகாத்மாவைக் கேட்டபோது, சம்பாரானில் செய்யும் வேலை முடிவில் சுயாட்சியில் கொண்டுபோய்விடும் என்று அவர் எங்களுக்கு பதில் சொல்லிவிட்டார். அந்த வேலையின் முக்கியத்துவத்தை நாடு ஒருவேளை அச்சமயம் உணராது போயிருக்கலாம். அவ்விடத்திலேயே அப்பொழுதிருந்தவர்களான நாங்களும் அதை அன்று உணரவில்லை. ஆனால் இன்று, நடந்த

போனதை எண்ணும்போது. சென்ற நான்கு அல்லது ஐந்து வருட சுதந்திரப்போரின் சரித்திரத்தைப்பற்றி சிந்தித்துப் பார்க்கும்போது, சம்பாரனில் என்ன அன்று ஆரம்பமாயிற்றோ அதுவே பெரிய அளவில் விருத்தியாகி, பெரிய இயக்கமாகி இருக்கிறது என்பதைக் காணுகிறோம். சம்பாரன், கெய்ரா சத்தியாக்கிரக சரித்திரங்களை நாம் படித்தால், ஒத்துழையாமை, சத்தியாக்கிரக இயக்கங்கள் என்ன வெற்றியைப் பெற்றிருக்கின்றனவோ, என்ன எதிர் பார்க்கப்படுகிறதோ அதை சம்பாரன் போராட்டம் முன் கூட்டியே காட்டியது புலனாகும். இந்தியா, எந்த அநீதி, கொடுங்கோன்மையின் கீழ் தத்தளித்துக்கொண்டிருக்கிறதோ, அவைகளிலிருந்து அதை மீட்டு விடுதலை பெறவே ஒத்துழையாமை இயக்கத்தை மகாத்மா ஆரம்பித்திருக்கிறார். அதே போலவே சம்பாரனிலும் அம்மக்களை அநீதியிலிருந்தும், கொடுமையிலிருந்தும் மீட்கவே கிளர்ச்சியை ஆரம்பித்தார். பத்திரிகைகளிலும், மேடைமீது ஏறியும் கிளர்ச்சி செய்தும், சட்டசபைகளில் தீர்மானங்கள் கொண்டுவந்தும், கேள்விகள் கேட்டும் பரிகாரங்கள் கிடைக்காது போனதால் இந்தியா சத்தியாக்கிரகத்தையும், ஒத்துழையாமையையும் மேற்கொண்டதைப் போலவே, அதே போன்ற முயற்சிகளினால் பலன் கிடைக்காமற் போனதால் சம்பாரன் விவசாயிகள் மகாத்மா காந்தியை அழைத்தார்கள். இப்பொழுது நடந்துவரும் கிளர்ச்சியில் மகாத்மா காந்தி, சத்தியத்தையும், அஹிம்சையையுமே அடிப்படையாகக்கொண்ட தமது வேலைத் திட்டத்தை தேசம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எப்படிக் கூறுகிறாரோ அதேபோன்றே சம்பாரனில், எளிய, எழுத்து வாசனையே யில்லாத குடியானவர்களுக்கு அதே சத்திய, அஹிம்சைப் பாடத்தை உபதேசித்ததின் வாயிலாக அல்லாமல், தாமே செய்து காட்டுவதன் மூலமும் போதித்தார். அறிந்தே, விரும்பியே துன்பங்களையும், துயரங்களையும் ஏற்றுக் கொண்டு, விடுதலையை அடைந்தே தீருவது என்ற உறுதியை தேச மக்களுக்கு மகாத்மா இப்பொழுது ஊட்டியிருக்கிறார். அதேபோலவே சம்பாரனில் சிறைத் தண்டனையின் துன்பங்களைத் தாம் அனுபவிக்கத் தயாராக இருந்ததன் மூலம் சம்பாரன் விவசாயிகளை எழுப்பினார். விவசாயி

கள் எவ்வளவு துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள், அவர்களுக்கு எத்தனை அநீதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது அப்பொழுது சர்க்கார் அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரியும். என்றாலும் மகாத்மாவைத் தடை செய்யவே முற்பட்டார்கள்; அவரைச் சிறையிலிடவும் துணிந்தார்கள். மகாத்மா காந்தி சம்பரானில் அடியெடுத்து வைப்பதற்கு முன்னால், விவசாயிகள் சிற்சில சமயங்களில் கடுமையான கிளர்ச்சிகளைச் செய்ததும் உண்டு; ஒத்துழையாமை முயற்சியும் செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கிளர்ச்சி, ஒத்துழையாமை, அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டவையல்ல. சர்க்கார் அதிகாரிகளும், தோட்ட முதலாளிகளும் பலாத்காரத்திலும் அதன் பலத்திலுமே தங்கள் நம்பிக்கைகளையெல்லாம் வைத்திருந்தார்கள். இவற்றை சரியானபடி உபயோகித்துக் கொள்வதற்கு வேண்டிய வசதிகளும் அவர்களுக்கு இருந்தன. விவசாயிகளின் கிளர்ச்சியிலும் பலாத்காரம் கலந்திருந்ததால் அதை அடக்கி ஒடுக்கிவிடுவதில் சுலபமாக வெற்றி பெற்று வந்தார்கள். ஒத்துழையாமை இயக்க காலத்திலும்கூட, நமது அடிப்படைக் கொள்கையான அஹிம்சையிலிருந்து நாம் எப்பொழுதெல்லாம் தவறிவிடுகிறோமோ அப்பொழுது நமது தோல்விக்கு வேண்டிய சாதனங்களை எதிரிக்கு அளித்துவிடுகிறவர்களாகிவிடுகிறோம். அஹிம்சைத் தத்துவத்தை நாம் உறுதியாகக் கடைப்பிடித்து நமது இயக்கத்தை நாம் திடமாக நடத்திக் கொண்டு போவோமானால், சம்பரான் கிளர்ச்சியையும், அகாலியரின் போராட்டத்தையும் போல, தேச முழுவதற்கும் நடக்கும் ஒத்துழையாமை போராட்டத்தில் நாம் வெற்றி பெற்றே தீருவோம் என்பதில் சந்தேகமில்லை. தேசத்தின் முன்பு உண்மையான அஹிம்சைப் போராட்டத்தை நடத்திவரும் பாஞ்சால அகாலியர் அதில் வெற்றிபெற்று வருகிறார்கள். சிலசமயங்களில் துக்கத்துடனும், சிலசமயங்களில் கோபத்தோடும் சம்பரான் விவசாயிகள் கேட்டுக்கொண்டிருந்தவைகளுக்கெல்லாம் முடிவில் சர்க்கார் இணங்கிவிட்டதைப்போல, இன்று தேசம் கேட்பவைகளுக்கெல்லாம் சர்க்காரும், அதிகாரிகளும் முடிவில் இணங்கிவிடவே நேரும்.

ஆரம்பத்தில் நல்ல பாடம்

நான் முன்னால் கூறியதைப்போல, மகாத்மா காந்தியின் வழக்கில் சில தினங்களில் தீர்ப்புக் கூறுவதா யிருந்தது. இதற்கு மத்தியில் விவசாயிகள் எங்களிடம் வந்து அவர்களுடைய குறைகளைச் சொல்லிக்கொள்வார்கள். அவற்றை நாங்கள் குறித்துக்கொள்வோம். ஆனால் மாஜிஸ்டிரேட்டின் விருப்பத்தை அனுசரித்து மகாத்மாவோ அல்லது நாங்களோ எந்த கிராமத்திற்கும் போய் எவ்வித விசாரணையையும் நடத்தாமலிருந்தோம். என்றாலும் விவசாயிகள் கூறிய எல்லா விவரங்களையும் கேட்டுக்கொண்டோம். இதனால் அங்கிருந்த நிலைமையைப்பற்றி நாங்கள் நன்றாக அறிய முடிந்தது.

இதற்கிடையே சார்லி ஆண்ட்ரூஸ் சம்பாரனுக்கு வந்தார். பிஜியிலிருந்த இந்தியரின் அழைப்பின்பேரில் சில தினங்களில் அவர் பிஜிக்குப் புறப்பட இருந்தார். இந்தியாவுக்கு வெளியே, உலகத்தின் பல பகுதிகளிலும் குடியேறியிருந்த இந்தியர்களின் நிலைமை திருப்திகரமாக இல்லை. இத்தகைய மோசமான நிலைமை அவர்களுக்கு இருந்ததற்கு ஒரு முக்கியமான காரணமும் இருந்தது. தூர நாடுகளுக்கும், தீவுகளுக்கும் போனவர்கள், சில ஒப்பந்தங்களின் பேரில் அங்கு போயிருந்தார்கள். குடியேறுவதற்கான நிபந்தனைகள் இருவதை முன்னிட்டு அவர்கள் அங்கு இருந்துவந்தனர். அவர்களில் பலர், ஒரு தலைமுறைக்கும் அதிகமாக அத்தேசங்களிலிருந்து, அந்நாடுகளின் அபிவிருத்திக்கு அதிக உதவியாக இருந்தவர்கள். உண்மையில் இந்தியத் தொழிலாளர் இல்லாமலிருந்தால் அந்த நாடுகள் அடைந்திருக்கும் அபிவிருத்தியை அவை இவ்வளவு விரைவில் அடைந்திருக்க முடியாது என்று கூறுவது மிகையாகாது. ஆனால் அவர்கள், ஒரு சுதந்திர நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் போய் வெளிநாடுகளில் குடியேறவில்லை. அத்தேசங்களில் தங்களுடைய வர்த்தகத்தை விருத்தி செய்துகொள்ள விரும்பிய ஆங்கிலேயருக்கும்,

மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் இதற்காகக் கூலிகள் தேவையாயிருந்தது. அவர்கள் செலவிலேயே இந்தியர் அங்கு சென்றார்கள். அவர்களுடன் சில இந்திய வர்த்தகர் களும் மற்றவர்களும் போயிருந்தனர். அவர்கள் எல்லோ ருடைய நிலைமையும் அங்கு அதிக மோசமானதாகவே இருந்தது. எந்தவிதமான உரிமைகளுமற்று அவர்கள் அங்கு இருந்தார்கள் என்பதோடு, நாகரிகமற்றவர்களாக வும் கருதப்பட்டு அதற்கேற்ப நடத்தப்பட்டும் வந்த னர். இந்தியர் இவ்விதம் அக்கிரமமாக நடத்தப்பட்டதை எதிர்த்தே மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் கிளர்ச்சி செய்ததோடு சத்தியாக்கிரகத்தையும் ஆரம்பித்தார்.

சார்லி ஆண்டரூஸ் சிறந்த கிறிஸ்தவர்; விசாலமான மனமுடையவர். வெளிநாடுகளில் இந்தியர் கேவலமாக நடத்தப்படுவதைக் கண்டு மனவேதனை அடைந்தார். இத னால் கடல்கடந்த இந்தியருக்கு எங்கெங்கு துன்பங்கள் ஏற்பட்டனவோ அங்கெல்லாம் போய் அவர்களுக்கு உதவி செய்வது என்பதையே முக்கிய பணியாகக் கொண்டிருந் தார். அவர்களுக்காக தம்மால் செய்ய முடிந்ததையெல் லாம் அவர் செய்தார். பொதுஜன அபிப்பிராயம் அந்த இந்தியருக்கு சாதகமாக உருவாகும்படிச் செய்வார். இவ் விஷயத்தில் இங்கிலாந்தின் மனச்சாட்சியையும் கிளறி விட்டுவிட்டார். இதனாலேயே மகாத்மா காந்தியை இவர் தென்னாப்பிரிக்காவில் சந்தித்ததோடு அவருக்குச் சிறந்த நண்பராகவும் இருந்தார். அத்துடன் ஆங்கிலேயர்களும் இவரிடம் அதிக மதிப்பு வைத்திருந்தார்கள். வைசிராயை யும் தாராளமாகக் கண்டு பேசும் வாய்ப்பு இவருக்கு இருந் தது. இப்பொழுது இவர் பிஜிக்குப் புறப்பட இருந்தார். இத்தகைய காரியங்களிலெல்லாம் எதையும் தாம் செய்வ தற்கு முன்னால் இவர் காந்தியடிகளைக் கலந்தாலோசிப்பது வழக்கம். இதற்காகவே மகாத்மாவைக் கண்டு பேச சம்பரா னுக்கும் வந்திருந்தார்.

ஆண்டரூஸை நாங்கள் சந்திப்பது இதுவே முதல் தடவை. இத்தகையதோர் ஆங்கிலேயரை இதற்குமுன் னால் நாங்கள் கண்டதேயில்லை. இவர் ஐரோப்பிய உடையே அணிந்திருந்தார். ஆனால் அது நவீன நாகரிகத்

தோடு இல்லை. இவர் பன்முறை உலகம் முழுதும் சுற்றியிருக்கிறார். என்றாலும் மிக எளிமையோடு காணப்பட்டார். ஆகையால் இவர் இவ்வளவு காரியங்களையும் செய்து, இவ்வளவு தூரமும் சுற்றியிருக்கிறார் என்பதை எங்களால் அறிந்து கொள்ள முடியாமலிருந்தது.

இவர் சம்பாரனுக்கு வருகிறார் என்பதைப் பற்றி எங்களுக்கு முன்னறிவிப்பு எதுவும் இல்லை. இதனால் அவரை வரவேற்க நாங்கள் யாரும் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகவுமில்லை. ரயிலிலிருந்து இறங்கினார். தாம் இதற்கு முன்னால் என்றுமே சவாரி செய்தறியாத ஒரு குதிரை வண்டியை அமர்த்திக் கொண்டார். பழக்கமில்லாததால் தமது ஒரு காலை வண்டிக்கு வெளியில் நீட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டார். அந்தக் கால், சுழலும் சக்கரத்தில் சதா உராய்ந்து கொண்டே வந்திருக்கிறது. இதை இவர் கவனிக்கவே இல்லை. இதனால் நாங்களிருந்த இடத்திற்கு அவர் வந்து சேர்ந்தபோது அந்தக் காலில் அவர் போட்டிருந்த பூட்ஸின் தோல் கால் வரைக்கும் அடியோடு தேய்ந்து போய்விட்டது. அந்த வண்டியிலிருந்து இறங்கும் வரையில் இந்த சங்கதி அவருக்குத் தெரியவே இல்லை.

இவரைக் கண்டு மகாத்மா ஆனந்தமடைந்தார். தாமே எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து பானகம் செய்து இவருக்குக் கொடுத்தார். காந்தியடிகள் தமது பழைய நண்பருக்கு தமது கையாலேயே எல்லாம் செய்வதை முதல் தடவையாக அப்பொழுதுதான் நாங்கள் பார்த்தோம். சில தினங்களுக்குப் பின்னால் தமது கையினாலேயே எங்களுக்கு உணவு பரிமாற ஆரம்பித்தபோது இந்த அன்பை அறிந்து கொண்டோம். ஆண்ட்ரூஸ் இரண்டு அல்லது மூன்று தினங்கள் அங்கு தங்கியிருந்தார். அவர் புறப்பட்டு விடுவது என்று வந்தபோது, இன்னும் சில நாட்களுக்கு இவர் அங்கேயே இருப்பது நல்லது என்று நாங்கள் நினைத்தோம். இதைப் பற்றியும் இவரிடம் பேசினோம். வேலையிருப்பதால் தாம் பிஜித் தீவுக்குப் புறப்பட வேண்டியிருக்கிறதென்றும், கப்பலில் தமக்கு இடத்திற்கு ஏற்பாடு செய்தாயிற்று என்றும் இவர் கூறினார். என்றா

னும் அங்கு தங்குவதற்கு காந்தியடிகள் அனுமதித்தால் மேலும் சில தினங்கள் தங்கி விட்டுப் புறப்படுவதாகவும் ஆண்டுரூஸ் எங்களிடம் சொன்னார். எங்கள் சார்பில் இவரே மகாத்மாவிடம் இதைச் சொன்னார்; நாங்களும் ஆதரித்தோம். ஆனால் இதற்கு மகாத்மா சம்மதிக்கவில்லை. நாங்கள் வற்புறுத்திய போது, எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக நாங்கள் வற்புறுத்துகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாக ஆண்டுரூஸ் சம்பாரானிலிருந்து கிளம்பி பிஜிக்குப் புறப்பட்டுவிட வேண்டும் என்பதுதான் தமது பதில் என்று காந்தியடிகள் சொல்லிவிட்டார். எங்களிடம் தெளிவாக பின் வருமாறு கூறிவிட்டார்: "இதில் நீங்கள் ஏன் பிடிவாதமாக இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்கள் மனதிலிருப்பது இன்னதென்பதையும் நான் அறிவேன். ஆண்டுரூஸை இங்கு வைத்திருக்க வேண்டுமென்று எதற்காக நீங்கள் விரும்புகிறீர்களோ அந்தக் காரணமே நான் அவரை சீக்கிரம் அனுப்பிவைத்து விடும்படிச் செய்கிறது. நமது போராட்டமெல்லாம் ஆங்கிலேய தோட்ட முதலாளிகளுடன் தான் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். ஜில்லா மாஜிஸ்டிரேட்டும், மற்ற பெரிய அதிகாரிகளும், கவர்னருள்பட எல்லோரும் ஆங்கிலேயர்கள். ஆண்டுரூஸும் ஒரு ஆங்கிலேயர். அவர்களிடமும் சர்க்காரிடத்திலும் இவருக்கு அதிக செல்வாக்கு இருக்கிறது. தனது போக்கைக் கடுமையாக்கிக் கொண்டு விடுவது என்று சர்க்கார் தீர்மானித்து விட்டால், ஆண்டுரூஸ் போன்ற ஒரு ஆங்கிலேயர் நம்முடனிருப்பது பயனுள்ளதாயிருக்கும், அவர் அதிக உதவியாகவுமிருப்பார் என நினைக்கிறீர்கள். உங்கள் மனதில் ஒரு பயமிருக்கிறது. அதை அழித்து விடவே நான் விரும்புகிறேன். தோட்ட முதலாளிகளுடன் நடத்தும் போராட்டத்தில், ஒரு ஆங்கிலேயர், இந்த ஆங்கிலேயர் ஆங்கிலேயரைப் போன்றவராயிருந்தாலும், இவருடைய உதவியை நீங்கள் எதிர்பார்த்திருக்கிறீர்களென்றால், நீங்கள் எப்படி வெற்றியடைந்துவிட முடியும்? நாம் பயத்தை ஒழித்து விடுவதோடு நாம் தன்னம்பிக்கையையும் பெறவேண்டும். ஆகையால் ஆண்டுரூஸ் போயாக வேண்டும்; அவர் நாளைக்குப் புறப்படுகிறார் என்பதே என் முடிவு. அவர் பிஜியில்

செய்ய வேண்டி யிருக்கும் வேலையும் முக்கியமானது; அதைக் கைவிட்டுவிட முடியாது.''

இதைச் சொன்ன பிறகு, மறுநாள் காலையில் புறப்படுவதற்குத் தயாரா யிருக்கும்படி ஆண்டுரூஸிடமும் கூறி விட்டார். ஆண்டுரூஸோ அதற்கு முன்னுடியே தயாராகத் தானிருந்தார். எங்கள் ஏமாற்றம் அதிகமல்ல. ஆனல் எங்கள் மனதிலிருந்ததை மகாத்மா சரியாகத் தெரிந்து கொண்டு விட்டார் என்பதை உணர்ந்தோம்; உணர்ச்சியும் பெற்ருேம். ஆகையால் எங்கள் சேவையின் ஆரம்பக் கட்டத்திலேயே அஞ்சாமையைப் பற்றிய முதல் பாடத்தைக் கற்றுக் கொண்டோம். இது அதிக உதவியாக இருந்தது என்பது எங்களுக்குப் பின்னுல் தெரிந்தது. அஞ்சாமை, தன்னுதவி ஆகியவைகளைப் பற்றிய படிப்பினைகளை அநேகமாக நாள்தோறும் நாங்கள் பெற்று வந்தோம்.

ஆண்டுரூஸ் சம்பரானில் தங்கிய சொற்ப காலத்திற்குள் ஜில்லா மாஜிஸ்டிரேட், மற்ற அதிகாரிகள், அவுரித் தோட்ட முதலாளிகள் ஆகியவர்களைக் கண்டு பேசினுர். இவர் புறப்படுவதற்கு முதல் நாள் பயணஞ் சொல்லிக் கொள்ளுவதற்காக ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் போயிருந்தபோது, மகாத்மாவின் வழக்கில் தீர்ப்புச் சொல்லுவதற்கு அப்பொழுது இரண்டொரு தினங்களே மத்தியில் இருந்தன. மகாத்மா மீது தொடுத்திருக்கும் வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டு, மகாத்மா தமது விசாரணையை சம்பரானில் நடத்தவும் அனுமதித்து விடும்படி சர்க்காரிடமிருந்து உத்தரவு வந்திருப்பதாக ஆண்டுரூஸிடம் ஜில்லா மாஜிஸ்டிரேட் கூறியிருக்கிருர். இதைப் பற்றிய உத்தரவு சீக்கிரமே மகாத்மாவுக்கு அனுப்பப்படவிருந்தது. ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடமிருந்து திரும்பி வந்து ஆண்டுரூஸ் இச் செய்தியை எங்களிடம் கூறிய பிறகு இவர் புறப்பட்டுப் போவதைக் குறித்து நாங்கள் அவ்வளவாக வருத்தப்படவில்லை. புயல் ஓய்ந்துவிடும் என்ற எண்ணம் தமக்கும் இருந்ததாக மகாத்மா அப்பொழுது எங்களிடம் கூறினுர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் உத்தரவும் வந்துவிட்டது. வழக்கு வாபஸாகி விட்டது. பிறகு மகாத்மா காந்தி

ஜில்லா மாஜிஸ்டிரேட்டைப் பார்த்து தமது பரிசிலனையை தொடர்ந்து நடத்தி வருவதாகவும், ஆனால் எவ்வித கலவரமும் ஏற்படாதபடிப் பார்த்துக் கொள்ளுவதாகவும் சொல்லிவிட்டு வந்தார்.

நாங்கள் விவசாயிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்துகொள்ள ஆரம்பித்தோம். இந்த வாக்குமூலங்கள் மிகைப்படுத்திக் கூறப்படுபவைகளாக இருப்பினுமிருக்க லாம்; பொய்யாகவும் இருக்கக்கூடும். நாங்கள் வக்கீல் களானதால், எங்கள் வக்கீல் திறமையை உபயோகித்து உண்மையைக் கண்டறிந்து அதன் பிறகு வாக்குமூலங் களைப் பதிவு செய்துகொள்ளும்படி மகாத்மா எங்களுக்கு எடுத்துக் கூறியிருந்தார். அதையே நாங்களும் செய்தோம். காந்தியடிகள் மீதிருந்த வழக்கு வாபஸ் வாங்கப்பட்டு விட்டது, நாங்கள் விவசாயிகளிடமிருந்து வாக்குமூலங் களை வாங்கிக்கொண்டிருக்கிறோம் என்ற செய்திகள் உடனே ஜில்லாவெங்கும் பரவிவிட்டது. அதிகாலையி லிருந்து மாலை வரையில் சுறுசுறுப்பாக நாங்கள் வாக்கு மூலங்களைக் குறித்துக்கொண்டோம். அப்படியும் தினம் எங்களிடம் வருபவர்களின் வாக்குமூலங்களை யெல்லாம் குறித்துக் கொண்டுவிட முடிவதில்லை.

நாங்கள் வேலையை ஆரம்பித்தவுடனேயே எங் களுக்கு மற்றோர் படிப்பினையும் கிடைத்தது. விசார ணையை நடத்த நாங்கள் அனுமதிக்கப்பட்டிருந்த போதி லும், எங்களுடைய நடவடிக்கைகளைக் கண்காணித்து அதி காரிகளுக்கு அறிவிக்கும்படி போலீஸார் உத்தரவிடப்பட் டிருந்தனர். இதன்படி ஒரு சப்-இன்ஸ்பெக்டர் நாளெல் லாம் எங்களை வட்டமிட்டுக்கொண்டே யிருப்பார். ஒரு நாள் பாபு தார்னிதார் ஒரு பலகை மீது உட்கார்ந்து கொண்டு சுமார் எட்டு அல்லது பத்துப் பேரிடம் வாக்கு மூலங்களை எழுதிக்கொண்டிருந்தார். அந்த விவசாயிகளில் சிலர் அவரைச் சுற்றி உட்கார்ந்துகொண்டிருந்தனர்; மற்றுஞ் சிலர் நின்றுகொண்டிருந்தார்கள். சப்-இன்ஸ் பெக்டரும் வந்து அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார். பாபு தார்னிதாருக்கு இது பிடிக்கவில்லை. ஆனால் அவர் ஒன்றும் சொல்லவுமில்லை. இதற்கு பதிலாக

எழுந்து மற்றோரிடத்திற்குப் போய் உட்கார்ந்து கொண்டு வாக்குமூலங்களை எழுதத் தொடங்கினர். சப்-இன்ஸ்பெக்டர் அங்கும் போய் அவருக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டார். பாபு தார்னிதார் மீண்டும் எழும்பி இன்னுமொரு இடத்தில் போய் உட்கார்ந்தார். போலீஸ் அதிகாரி அங்கும் போனர். பாபு தார்னிதாரினல் அதற்கு மேலும் இதைப் பொறுக்க முடியவில்லை. உடனே கோபத்தோடு, "நீர் ஏன் இப்படி என்னோடேயே வந்துகொண்டிருக்கிறீர்? நீர் விரும்பினல் தூரத்திலிருந்துகொண்டு பாரும், கேளும்" என்றார்.

பிறகு அவர் இதைப் பற்றி மகாத்மாவிடம் குறை சொல்லிக்கொண்டார். அவர் பாபு தார்னிதாரையும் எங்களெல்லோரையும் கூப்பிட்டனுப்பினர். நடந்தது என்ன என்பதையும் விசாரித்தார். நடந்ததை பாபு தார்னிதார் சொன்னர். உடனே மகாத்மா, "நீங்கள் மாத்திரமிருந்தீர்களா அல்லது உங்களுடன் மற்றவர்களுமிருந்தார்களா?" என்று கேட்டார். தம்மைச் சுற்றிலும் பல கிராமவாசிகளுமிருந்தார்கள் என்று பாபு தார்னிதார் பதில் சொன்னர். "அப்படியானல் சப்-இன்ஸ்பெக்டர் இருப்பது மாத்திரம் உங்களுக்கு ஏன் பிடிக்கவில்லை?" என்று மகாத்மா கேட்டார். சப்-இன்ஸ்பெக்டர் இருப்பது தமது வேலைகளுக்கு இடையூருக இருக்கிறது என்றார் பாபு தார்னிதார். அதன்பேரில் மகாத்மா சொன்னதாவது: "விவசாயிகள் பக்கத்திலிருப்பதை இடையூருக நினைக்காத நீங்கள், அந்த ஆசாமி உடனிருப்பதை வேலைக்கு இடைஞ்சலாக நினைக்கிறீர்கள். அவர் போலீஸ்காரர் என்பதனலேயே இது என்று தெரிகிறது. அவரையும் மற்றவர்களையும் நீங்கள் ஏன் பாகுபாடுபடுத்திக் கருதுகிறீர்கள்? விவசாயிகளைப் போலவே அவரையும் ஏன் நீங்கள் நினைத்துக்கொள்ளக் கூடாது? இதிலிருந்து போலீஸ் என்ற பயம் உங்கள் மனதில் இருக்கிறது என்று தெரிகிறது. அந்த பயத்தை நீங்கள் முதலில் தவிர்க்க வேண்டும். நாம் தவறு எதையும் செய்யவில்லை; ரகசியமாகவும் எதையும் செய்துகொண்டிருக்கவில்லை. அவ்விதமிருக்க ஒரு போலீஸ்காரர் இருந்தால் மாத்திரம் என்ன? கிராமவாசிகளின் உள்ளங்களிலிருந்தும் இந்த பயத்தை நாம் விரட்டியாக

வேண்டும். அவர்கள் தாங்கள் சொல்ல விரும்புவதை பயப் படாமல் தைரியமாக போலீஸார், மாஜிஸ்டிரேட், தோட்ட முதலாளிகள் ஆகியவர்களின் முன்னால் சொல்லவேண்டும்."

இவர் சொன்னது முற்றிலும் சரி. எங்களெல்லோ ருக்குமே போலீஸ் என்றால் ஓரளவுக்கு பயம் இருந்தது. நாங்கள் செய்வதையெல்லாம் அவர்கள் அறிந்துவிட்டால் ஏதோ ஆபத்து வந்துவிடக்கூடும் என்ற எண்ணம் எங் களுக்கு இருந்தது. இந்த எண்ணமே புரட்சிக்காரர்களை யும் மற்றவர்களையும் போலீஸ்காரர்களிடமிருந்து ஒதுங்கி யிருக்கும்படிச் செய்து வந்தது. எங்களுக்கு பயம் போய் விட்டதைப் போலவே, மகாத்மா சொன்னதால் போலீஸ் அதிகாரியும் சங்கடப்பட்டதாகத் தோன்றியது. காந்தி யடிகளிடம் புகார் சொல்லிக்கொண்டால் அவர் எங்களைக் கண்டிப்பார், தமக்கு அதனால் அதிக கௌரவம் ஏற்படும் என்று அவர் நினைத்திருந்தார். ஒரு வழியில் மகாத்மா எங்களைக் கண்டிக்கவே செய்தார். அதே சமயத்தில், நாங்கள் போலீஸ் அதிகாரிக்கும் விவசாயிக்கும் எந்த பாகு பாடும் பாராட்டக்கூடாது என்றும், சாதாரண விவ சாயியை நடத்துவதைப் போலவே போலீஸ் அதிகாரியை யும் நாங்கள் நடத்தவேண்டும் என்றும் காந்தியடிகள் தெளிவுபடுத்திவிட்டார். இவ்விதம் அந்த அதிகாரியின் அந்தஸ்து உயருவதற்கு பதிலாக சாதாரண கிராமவாசி யின் மட்டத்திற்கு அவரும் கொண்டுவரப்பட்டுவிட்டார். அவரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. இதன் பலனாக விவசாயிகளுக்கு அருகாமையில் உட்காருவது என்பதையே விட்டு விட்டு அவர்களிடமிருந்து கொஞ்சம் தூரத்திலேயே உட்கார ஆரம்பித்துவிட்டார்.

நாளாகவாக எங்களிடம் தினம் வரும் விவசாயிகளின் தொகையும் அதிகரித்துக்கொண்டே போயிற்று. நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு சிறு பாய் மீது உட்கார்ந்துகொண்டு விவசாயிகளின் வாக்குமூலங்களை எழுதிக்கொள்ளுவோம். அவர்களோ, எங்களைச் சுற்றி வெறும் தரையில் உட் கார்ந்து கொள்ளுவார்கள். எங்கள் வேலை முடிய அதிக நாட்களாகக் கூடும் என்பதை சில தினங்களில் மகாத்மா கண்டுகொண்டு எங்களிடமும் கூறினர். எங்களெல்லோ

மையுமே வைத்துக்கொண்டு பராமரிக்கும் பாரம் கோரக் பாபு மீது மாத்திரம் விழுந்திருப்பது நியாயமல்ல. மேலும் நாங்களெல்லோரும் வசதியாகத் தங்குவதற்கு அவருடைய வீடு போதுமானதுமன்று. ஆகையால் வேறு ஒரு வீடு பார்த்துக்கொண்டு நாமே அங்கிருந்து வரவேண்டும் என்று மகாத்மா கூறினர். பக்கத்திலேயே வேறு வீட்டை அமர்த்துவதற்கு அவ்வூரார் எங்களுக்கு உதவினர். அந்த வீட்டைச் சுற்றி மதில் சுவருகளிருக்கும் சௌகரியமுமிருந்தது. அந்த வீட்டை அன்றே சுத்தஞ்செய்து அன்று மாலையே நாங்கள் அங்கு போய்விடுவது என்பது மகாத்மா செய்துவிட்ட முடிவு. வீடு சுத்தம் செய்யப்பட்டு விட்டதெனினும் அதற்குள் பொழுதும் போய்விட்டது. அன்று மாலையே போவதென்பதற்கு பதிலாக மறுநாள் காலையில் போய்விடுவோம் என்று நாங்கள் தீர்மானித்திருந்தோம். இது சின்ன விஷயம் என்று எண்ணி இதைக் குறித்து நாங்கள் மகாத்மாவிடம் சொல்லவுமில்லை.

இரவு எட்டு அல்லது ஒன்பது மணிக்கு, புது வீட்டுக்கு நாங்கள் எப்பொழுது போகப்போகிறோம் என்று மகாத்மா எங்களைக் கேட்டார். வீடு சுத்தம் செய்வதற்கு நாங்கள் எதிர்பார்த்ததைவிட அதிக நேரமாகி விட்டதால் மறுநாள் காலையில் அங்கு குடிபோகிறோம் என்றோம். இதற்கு மகாத்மா, "அது சரியல்ல. ஒன்றைச் செய்வதென்று ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் அதை எப்படியும் அதன்படி நிறைவேற்றி யாகவேண்டும். அதிலிருந்து மாறவே கூடாது. அந்த இடத்தைச் சுத்தம் செய்வது கஷ்டமா? நாம் தங்கும் வீடாக இருக்கப்போகுமிடத்தை நம் கைகளினாலேயே சுத்தஞ்செய்து கொள்ளக் கூடாதா? மற்றவர்களால் அதைச் சுத்தஞ்செய்ய முடியாவிட்டால் நாமே சுத்தஞ் செய்து கொண்டுவிடவேண்டும்" என்றார்.

காந்தியடிகளுக்கு இருந்த மூட்டை மிகச் சிறிது. அவருடைய படுக்கையிலேயே அவருடைய துணிகளும் அடங்கிவிடும். இரவில் படுக்கும்போது அதை விரித்துக் கொள்ளுவார்; காலையில் எழுந்ததும் நன்றாகச் சுற்றி வைத்துவிடுவார். ஆகையால் நினைத்ததும் புறப்பட்டுவிட அவர் எப்பொழுதும் தயார். அவரிடம் ஒரு சிறு தகர டப்

பாவுமிருந்தது. எங்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே தமது படுக்கையைத் தூக்கிக்கொண்டு தகர டப்பாவையும் கையில் எடுத்துக்கொண்டார். "நான் போகிறேன். இன்று ராத்திரி அங்குதான் தூங்கப்போகிறேன்" என்றார். நாங்கள் திகைத்துப்போனேம். அவர் பின்னுடியே போய் அவருடைய படுக்கையையும் தகர டப்பாவையும் வாங்கிக் கொண்டோம். நாங்களும் அவரோடேயே வருவதாகச் சொன்னேம். காந்தியடிகள் கொஞ்ச நேரம் காத்திருந்தார். இரவுக்கு எங்களுக்கு அவசியமான எங்களுடைய சாமான்களை மாத்திரம் அவசரமாக எடுத்துக்கொண்டு அவருடன் புறப்பட்டுவிட்டோம். எங்கள் புது வீட்டிற்கு மகாத்மா வந்ததும் அங்கு தாழ்வாரத்தில் ஒரு மூலையில் ஒரு துடப்பம் கிடந்ததைப் பார்த்தார். அதைக் கையிலெடுத்துக் கொண்டு பெருக்க ஆரம்பித்துவிட்டார். நாங்கள் திகைத்தோம். அவர் கையிலிருந்து துடப்பத்தை வாங்கி நாங்கள் பெருக்கினேம். பிறகு வீட்டில் ஒவ்வோர் பக்கத்தில் படுக்கைகளை விரித்துக்கொண்டோம். நாங்கள் செய்ததைக் குறித்து மகாத்மாவுக்கு சமாதானம் கூற முயன்றேம். மறு நாள் காலையில் குடி வருவதனுல் எங்கள் வேலைக்கு எந்தக் குந்தகமும் இருக்காது என்றும், இருட்டுவதற்கு முன்னுல் வீடு மாறிவிட முடியாது என்று தோன்றவே இரவில் போவது என்ற யோசனையை விட்டுவிட்டோம் என்றும் அவருக்கு விளக்கிச் சொன்னேம். தமது கருத்து என்ன என்பதை அவர் எங்களுக்கு விளக்கினுர். ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் அதைக் கைவிடவே கூடாது என்பதை நாங்கள் உணரும்படியும் செய்தார்.

நாங்கள் பெற்ற மூன்றுவது பாடம் இது. அவருடைய சாமான்களை அவரே தூக்கிக்கொள்ளுவது. அறையைத் தம் கையினுலேயே கூட்டிச் சுத்தம் செய்துகொள்ளுவது! இதெல்லாம் எங்களுக்கு முற்றிலும் புதியதான அனுபவம். அதுவரையில் நாங்கள் முற்றிலும் மாறுன வகையிலேயே வாழ்ந்து வந்திருக்கிறேம். எங்களில் யாரும், எங்களுடைய அந்தஸ்திலிருந்த எவருமே, முக்கியமாக பீகார் மாகாணத்தில், இவ்வித வேலைகளைச் செய்ததில்லை.

எங்களுடைய அன்றுட வாழ்க்கை கஷ்டமானதாகவும் கட்டுதிட்டங்களுக் குட்பட்டதாகவும் இருந்தது. மகாத்மா

அதிகாலையிலேயே எழுந்துவிடுவார். அப்பொழுதெல்லாம் அவர் பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்துவதில்லை. தாமே பிரார்த்தனை செய்துகொள்ளக்கூடும். ஆரம்பத்தில் கொஞ்ச நாட்கள் அவருடைய ஆகாரம் பேரீச்சம் பழமும் நிலக்கடலையுமே. கிடைத்தபோது மாம்பழமும் சாப்பிடு வார். கொஞ்ச காலம் எந்தவிதமான தானியங்களையும் அவர் சாப்பிடுவதில்லை. எல்லாவற்றையும் தாமே செய்து கொள்ளுவார். படிப்பதிலும், எழுதுவதிலும், விவசாயி களைப் பார்ப்பதிலுமே நாளெல்லாம் கழியும். அவசிய மாகும்போது அதிகாரிகளையும் பார்ப்பார். ஆனால் அப் பொழுது தோட்ட முதலாளிகளுடன் நேரடியான தொடர்பு ஏற்படவில்லை.

நாங்களும் அதிகாலையில் எழுந்து விடுவோம். குளித்து விட்டு கொஞ்சம் காலை ஆகாரத்தையும் முடித்துக் கொண்டு, எங்கள் பாயையும், பேனாவையும், காகிதத்தை யும் எடுத்துக் கொண்டு போய் உட்காருவோம். பொழுது விடிந்ததுமே விவசாயிகளின் வாக்கு மூலங்களை எழுதிக் கொள்ளத் தயாராயிருப்போம். பகல் பதினொன்றரை மணிக்கு இதை முடித்துக் கொண்டு சாப்பிட்டுவிட்டு சிறிது ஓய்வும் எடுத்துக் கொள்ளுவோம். பகல் ஒரு மணிக்கு திரும்ப ஆரம்பமாகும் வேலை பொழுது போகும் வரை நடக் கும். விவசாயிகள் தினம் பலர் வருவதால் அன்று பொழு துக்குள் எல்லோருடைய வாக்குமூலங்களையும் எழுதி முடித்துவிட முடிவதில்லை. எனவே சில நண்பர்கள் எங்களுக்கு உதவி செய்ய முன்வந்தார்கள். நாங்கள் அப் பொழுது பத்துப் பன்னிரண்டு பேர்களிருந்தும் வேலையை சமாளிக்க முடியவில்லை. ஆகையால் சில விவசாயிகளின் பெயரைக் காத்திருப்போர் ஜாபிதாவில் பதிந்து கொண்டு மறுநாள் காலையில் வருமாறு சொல்லி அனுப்புவோம். மறுநாள், அன்றுதான் புதிதாக வருபவர்களுக்கு முன்னால், இவர்களுடைய வாக்குமூலங்களைப் பதிந்து கொள்ளு வோம். சில சமயங்களில் சில விவசாயிகள் தங்கள் வாக்கு மூலங்களைக் கொடுக்க ஒரு நாளைக்கும் அதிகமாகக் காத் திருக்க நேருவதும் உண்டு.

சம்பரான் ஜில்லாவின் தென் பகுதியிலிருக்கிறது மோதிகரி. அதன் வடக்குப் பகுதியிலிருக்கும் முக்கிய

மான இடம் பெட்டியா. அப்பெயர் கொண்ட எஸ்டேட்டில் பெட்டியா ராஜாவின் தலைமை ஸ்தானமிருக்கிறது. மோதிகரிக்கு எங்களிடம் வந்த விவசாயிகள் பொதுவாக தென்பகுதியைச் சேர்ந்தவர்கள். தூரம் அதிகமாகையால் வடக்குப் பாகத்திலிருந்தவர்கள் மோதிகரிக்கு வர முடியவில்லை. வந்த சிலர் எங்களிடம் கொடுத்த வாக்குமூலத்திலிருந்து, வட பகுதியிலும் நிலைமை மோசமாகவே இருக்கிறது, சில இடங்களில் இன்னும் அதிக மோசமாகவும் இருக்கிறது என்பது தெரிந்தது. ஆகையால் விவசாயிகளின் நன்மைக்கேயன்றி, நாங்களும் அங்குள்ள நிலைமையை நேரில் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, பெட்டியாவுக்கும் நாங்கள் போவது என்று முடிவு செய்யப்பட்டது. ராஜகுமார் சுக்லா, பெட்டியாவுக்கு வடக்கில் ஒரு இடத்தில் வசித்து வந்தார். தாரு என்ற ஜாதியினர் அங்கு வசித்து வந்ததின் காரணமாக அவ்விடத்திற்கு தாருகட் எனப் பெயர். அப்பகுதிக்கும் மகாத்மா வா வேண்டும் என்று அவர் ஆவலுடனிருந்தார். அதன் பேரில் நாங்கள் இரு கோஷ்டிகளாகப் பிரிக்கப் பட்டோம். ஒன்று மோதிகரியிலிருந்து கொண்டு வாக்கு மூலங்களை எழுதிக் கொள்ளுவது; மற்றோர் கோஷ்டி பெட்டியாவிலிருந்து கொண்டு எழுதிக் கொள்ளுவது. இந்த இரு கோஷ்டிகளைச் சேர்ந்தவர்களுக்கும் எல்லா இடங்களுமே நேரில் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக அப்போதைக்கப்போது இந்த கோஷ்டிகள் இடம் மாறிக் கொள்ளுவது என்பது ஏற்பாடு. பதிவான வாக்குமூலங்களெல்லாம் மகாத்மா முன்னால் வைக்கப்படும். அவற்றை அவர் கவனமாகப் படித்து வந்தார். வாக்குமூலங்களில் ஏதாவது ஒன்று முக்கியம் என்று எங்களுக்குத் தோன்றினால், அதன் பேரில் தமக்கு உசிதமெனத் தோன்றும் நடவடிக்கையை எடுத்துக்கொள்ளட்டும் என்பதற்காக அப்போதைக்கப்போது அவற்றை மகாத்மாவின் கவனத்திற்குக் கொண்டு வருவோம்.

ஒரு நாள் காலை 10 மணிக்கு ஒரு கிராமத்தினர் எங்களிடம் வந்து, தங்கள் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரை தோட்ட முதலாளியின் கையாட்கள் பிடித்து அடித்து கோழிக் கூண்டில் அடைத்து வைத்திருக்கிறார்கள் என்று

சொன்னார்கள். இந்த வாக்குமூலத்தை மகாத்மா பார்த்ததும் எங்களில் ஒருவரை சைக்கிளில் அங்கு போய் நேரில் விசாரித்துக் கொண்டு வந்து தம்மிடம் கூறும்படி அனுப்பி வைத்தார். அக்கிராமம் ஆறு அல்லது ஏழு மைல் தூரத்திலிருக்கிறது. அங்கு போன நண்பர் மத்தியானம் அங்கு போய்ச் சேர்ந்தார். அவர் அங்கு போனதும் பல கிராமவாசிகள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். காந்திஜியிடமிருந்து ஒரு வக்கில் வந்திருக்கிறார் என்று தோட்ட முதலாளியின் ஆட்களுக்குத் தெரிந்ததும் கோழிக் கூண்டுக்குள் அடைத்து வைத்திருந்த ஆசாமியை வெளிப்படுத்தி வேறு எங்கோ கொண்டுபோய் ஒளித்துவிட்டார்கள். பின்னால் அவனை அவர்கள் விட்டுவிட்டதும் அவன் வந்து எங்களிடம் எல்லா விவரங்களையும் கூறினான். இது ஒரு சின்ன சம்பவம். இதைப் போன்ற சம்பவங்கள் சர்வ சாதாரணமானவை. சில சமயங்களில் மகாத்மா மாஜிஸ்டிரேட்டுக்கு எழுதுவார். சில சமயங்களில் எங்களில் யாரையாவது அனுப்பி விசாரித்துவரும்படிச் செய்வார். இதன் பலனாக இத்தகைய சம்பவங்களில் விவசாயிகளுக்கு உடனே பரிகாரம் கிடைத்து வந்ததால் மகாத்மாவிடம் விவசாயிகளுக்கு நம்பிக்கை அதிகமாகி வந்தது.

புது விட்டுக்குப் போய் எங்களுக்கான ஏற்பாடுகளை நாங்களே கவனித்துக்கொள்ளுவது என்றாகிவிட்ட பிறகு, சமைப்பது யார்? பாத்திரங்களைத் துலக்குவது யார்? என்ற பிரச்னை எழுந்தது. வசதியுள்ள ஒவ்வொருவரும் தங்கள் சொந்த வேலைகளைச் செய்ய வேலைக்காரர்களை வைத்துக் கொள்ளுவது என்பது பீகாரில் வழக்கம். ஆகவே எங்களில் அநேகர் ஆளுக்கு ஒரு வேலைக்காரனை கூட அழைத்து வந்திருந்தோம். இந்த வேலைக்காரர்களில் யாரும் பிராமணரல்ல. எனவே இவர்களை சமைக்க விடுவதில்லை. நாங்கள் எல்லோரும் சாப்பிடுவதாயிருந்தால் பிராமணனே சமைக்க வேண்டும். நாங்கள் எல்லோருமே வைதிகர்கள். என் குடும்பப் பழக்கத்தின் காரணமாக நான் கொஞ்சம் அதிக வைதிகம். ஜாதிக் கட்டு திட்டங்களையெல்லாம் அநுசரித்து வந்தேன். வீட்டைவிட்டுக் கிளம்பி சாப்ரா, பாட்னா, கல்கத்தா ஆகிய இடங்களுக்கு நான் போனால்,

என் ஜாதிக்காரர் சமைத்திருந்தால் சாப்பிடுவேன். இல்லையானால் பிராமணர் சமைத்திருந்தாலே சாப்பிடுவேன். கல்கத்தாவில் நாங்கள் ஈடன் ஹிந்து ஹோட்டலில் தங்கியிருந்தோம். அதில் எங்களுக்கென்று தனி அடுப்பங்கரைக்கு ஏற்பாடு செய்து கொண்டோம். நாங்கள் அதிக வைதிகமாகையால் எங்களில் ஓரிருவரைத் தவிர வேறு யாரும் வங்காளி பிராமணர் சமைத்த சாதத்தைக்கூட சாப்பிடுவதில்லை. எனவே ஒரு பீகார் பிராமண சமையற்காரரை வைத்துக்கொண்டோம். காயஸ்தாக்களில் சில உட்பிரிவினர் சமைத்த சாதத்தையும் சாப்பிடுவதில்லை என்றிருந்த கட்டுதிட்டத்தை நான் கல்கத்தாவுக்கு வந்த பிறகு கொஞ்சம் விட்டுவிட்டேன். படிக்கவும், பிறகு வக்கீல் தொழிலை நடத்துவதற்குமாக நான் அந்நகரில் பதினைந்து ஆண்டுகள் இருந்திருக்கிறேன். அந்தக் காலத்தில் ஒரு தடவைகூட இந்தக் கட்டு திட்டங்களையும், வங்காளி பிராமணர் சமைத்த சாதத்தை சாப்பிடக்கூடாது என்பதையும் நான் கைவிட்டதே கிடையாது. எனக்குப் பல வங்காளி நண்பர்களுண்டு. அவர்களில் சிலருடன் நெருங்கிப் பழகியும் வந்தேன். அவர்கள் வீட்டிலுங்கூட நான் சாதம் சாப்பிடமாட்டேன். இது அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே நானும் என்னைப் போன்றவர்களும் அவர்களுடைய வீடுகளில் சாப்பிடும் சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் எங்களுக்குப் பூரியும், மிட்டாய்களும் வைப்பார்களேயன்றி சாதம் போடமாட்டார்கள். ஏனெனில் சாதம் தவிர இவற்றையும் இதர கறிகாயையும் சாப்பிடுவது ஜாதிக்கட்டு திட்டத்திற்கு விரோதமல்ல.

விசித்திரமாக பீகார், ஐக்ய மாகாணம், ராஜபுதனம் ஆகிய பகுதிகளில் சமைத்த அரிசி சாதத்திற்கு கச்சி என்று சொல்லுவது. அரிசியாக இருந்தாலும் அதை சமைத்திருந்தாலும் அப் பெயர்தான். ஆகையால் கச்சி (அரிசி), புக்கி (சமைத்த சாதம்) ஆகியவைகளைப்பற்றி நாங்கள் பல தமாஷ்களைக் கூறுவதுண்டு. மகாத்மா காந்திகூட 'ஜல பானம்' என்ற வார்த்தையைப் பற்றி எங்களிடம் தமாஷ் செய்வதுண்டு. காலை ஆகாரத்திற்குப் பிறகு குடிக்கும் நீருக்கு 'ஜல பானம்' என்று எங்கள் பாஷையில் சொல்லுவது. காலை ஆகாரத்தின்போது சாப்பிடும் பல

மான நல்ல ஆகாரத்திற்கும் 'ஜல பானம்' என்று பெயர்! அந்த ஆகாரம் எவ்வளவு சாப்பிடுவது என்பது சாப்பிடு கிறவருக்கு இருக்கும் பசியைப் பொறுத்தது. நான் மேலே சொன்னதுபோல மகாத்மா, இதைப்பற்றி எங்களிடம் தமாஷ் செய்வார். "நிறைய நீங்கள் தின்றுவிட்டும் தண்ணீர்தான் குடித்தோம் என்பீர்கள்" என்பார். எங்கள் சாப்பாட்டைப்பற்றிய பேச்சு வரும் போதெல்லாம் சிரித்துக்கொண்டே 'ஜல பானம்' என்பார்.

மேலே சொன்ன ஜாதிக்கட்டு திட்டக் காரணங்களினுல் நாங்கள் ஒரு பிராமண சமையற்காரரைத் தேடியாக வேண்டிய அவசியம் உண்டாயிற்று. மகாத்மாவோ, ஜாதிக்கட்டு திட்டங்களை யெல்லாம் நாங்கள் அனுசரிப்பதாயிருந்தால் செய்ய வேண்டிய வேலைக்கு இடைஞ்சலாகும். ஆளுக்கொரு சமையல் வைக்க நேர்ந்து அதனுல் செலவும் அதிகரித்து விடும் என்ருர். ஆகையால் நாங்கள் அந்த யோசனையைக் கைவிட்டு விடவேண்டும். எல்லோரும் ஒரே வேலையில் ஈடுபட்டிருக்கும்போது நாம் எல்லோரும் ஒரே ஜாதியினரே என்றும் ஏன் மேற்கொள்ளக் கூடாது என்றும் மகாத்மா கேட்டார். மோதிகரியில் இருக்கும் வரையிலாவது ஜாதிக் கட்டுப்பாடுகளை விட்டு விட்டு இருக்கும்படியும் அவர் எங்களைத் தூண்டினுர். எங்களில் ஒருவர் சமைப்பது, சமைத்ததை நாங்கள் எல்லோரும் சாப்பிடுவது என்ருயிற்று. இன்னொரு ஜாதியார் சமைத்ததை நான் சாப்பிட்டது அதுதான் முதல் தடவை.

எங்களில் சிலருக்கு சொந்த வேலைக்காரர்களுமிருக்கிருர்கள் என்ற சங்கதி பின்னுல்தான் மகாத்மாவுக்குத் தெரிந்தது. எப்பொழுதும் எங்களுடன் பல கிராமவாசிகளிருப்பார்கள். எங்களுக்கு பல வேலைகளையும் செய்ய அவர்கள் ஆவலுடனிருப்பார்கள். இவர்களில் எங்கள் சொந்த வேலைக்காரர்களுமிருக்கிருர்கள் என்பதை கொஞ்ச காலம் வரை மகாத்மா தெரிந்து கொள்ள முடியவில்லை. என்னிடம் நல்ல சவடாலான ஒரு வேலைக்காரனிருந்தான். அவன் வசதியுள்ள ஒரு விவசாயியைப் போலிருப்பான். அவன் மோதிகரியில் எங்களுடனிருந்து விட்டு

பெட்டியாவுக்கும் எங்களோடு வந்தான். அவனை மகாத்மா பார்த்துவிட்டு அவன் யார் என்று ஆச்சரியப்பட்டார். அவன் விவசாயி என்று நினைத்திருந்தார். ஆனால் அவன் மாத்திரமேயன்றி மற்றும் சிலரும் எங்கள் வேலைக்காரர்கள் என்று அவருக்குத் தெரிந்ததும், மக்களுக்குச் சேவை செய்ய விரும்பும் நாங்கள் வேலைக்காரர்களை வைத்துக் கொள்ளுவது சரியல்ல என்று எங்களிடம் கூறினார். "உங்களை நீங்களே கவனித்துக் கொள்ளுபவர்களாக நீங்கள் ஏன் இருக்கக்கூடாது?" என்று கேட்டார். இதனால் ஒருவனைத் தவிர மற்ற வேலைக்காரர்களெல்லாரும் அனுப்பப்பட்டுவிட்டார்கள். மீதமிருந்த ஒருவனையும், சுத்தம் செய்யவும், பாத்திரம் துலக்கவும் வைத்துக் கொண்டோம். பிறகு எங்கள் சொந்த வேலைகளை நாங்களே செய்துகொள்ளப் பழக்கப்பட்டு விட்டோம்.

நாங்கள் எண்ணியபடி இதில் அவ்வளவு சிரமம் எதுவுமில்லை. படுக்கையிலிருந்து எழுந்ததும் படுக்கையைச் சுற்றிக்கட்டி அதற்கென்றுள்ள இடத்தில் வைப்பதென்பதை ஒரு விதியாக்கிக் கொண்டோம். காலைக் கடனை முடித்துக்கொண்டதும் எங்கள் துணிகளைத் துவைத்துக் கொண்டு எங்கள் உபயோகத்திற்கு வேண்டிய நீரையும் சேமிப்போம். நாங்களே கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் எங்களுக்கு எப்பொழுதுமே இராது. எப்பொழுதும் அங்கு விவசாயிகளிருப்பார்கள். எங்களுக்கு வேண்டிய நீரை அவர்களே இழுத்து நிரப்பி வைத்து விடுவார்கள். பீகார் கிராம வழக்கத்தை அனுசரித்து கிணற்றுக்கருகே திறந்த வெளியிலேயே நாங்கள் குளிப்போம். இதற்கு எங்களுக்கு வேண்டிய நீரையும் விவசாயிகளே இழுத்துக் கொடுத்து விடுவார்களாகையால் கிணற்றிலிருந்து நீர் இழுத்துக் கொள்ள வேண்டிய வேலை எங்களுக்கு வரவில்லை.

கஸ்தூரி பாய் காந்தி அங்கு வந்த பிறகு சமைக்கும் பொறுப்பை மகாத்மா அவரிடம் ஒப்படைத்துவிட்டார். இதை நாங்கள் விரும்பவில்லை. ஏனெனில் நாங்கள் பலர் இருந்தோம். இத்தனை பேருக்கும் சமைக்கும் கஷ்டமான வேலையை அவருக்குக் கொடுப்பதற்கு நாங்கள் சம்மதிக்க

வில்லை. ஆனால் நாங்கள் கூறியதை மகாத்மா ஏற்றுக் கொள்ளவில்லை. கஸ்தூரிபாய்க்கு சமையல் வேலை பழக்க மானது; அவர் அதைச் செய்வதில் தவறு எதுவுமில்லை என்று சொல்லிவிட்டார். விரும்பினால் நாங்கள் அவருக்கு உதவியாக இருக்கலாம்; அவ்வளவுதான்.

முக்கியமாக கிருபளானியே கஸ்தூரிபாய் காந்திக்கு உதவியாக இருந்து வந்தார். நிறைய அரிசி போட்டு வடிக்க வேண்டியிருக்கும். அந்தப் பானையை அடுப்பி லிருந்து இறக்குவது சிரமமாக இருக்குமாகையால், நாங்கள் போய் இறக்கி வைப்போம்.

கஸ்தூரிபாய் வந்த பிறகே மகாத்மா தானியங்களைச் சாப்பிட ஆரம்பித்தார். சாப்பிட நாங்கள் உட்கார்ந்ததும் மகாத்மாவே பரிமாறுவார். நாங்கள் சாப்பிடும் தட்டு களை நாங்களே சுத்தம் செய்து வைத்துக்கொள்ளுவோம். சமையல் பாத்திரங்களை வேலைக்காரன் சுத்தஞ் செய்து கொடுப்பான். காலை ஆகாரத்தோடு மற்றுமிரு வேளை சாப்பாடும் தினம் உண்டு. மத்தியான சாப்பாடு பகல் 11 மணிக்கு; மாலை சாப்பாடு மாலை 5 மணி சுமாருக்கு. மாலை சாப்பாட்டுக்குப் பிறகு காந்திஜியுடன் நீண்ட தூரம் உலாவப் போவோம். அன்று எழுந்த பல பிரச்னை களைப் பற்றியும் அவர் அப்பொழுது எங்களுடன் விவா திப்பதோடு மறுநாள் செய்யவேண்டிய வேலைக்கும் அப் பொழுது திட்டம் போடுவார். இரவில் விவசாயிகளிடம் வாக்குமூலம் வாங்குவதில்லை.

நான் முன்னால் சொன்னபடி சில நாட்களுக்கெல்லாம் எங்களில் சிலருடன் மகாத்மா பெட்டியாவுக்குச் சென் றார். அங்கும் எங்கள் காரியாலயமொன்று அமைக்கப் பட்டது. அங்கு ஹஜாரிமால் தர்மசாலையில் இரண்டு, மூன்று அறைகளை அமர்த்திக்கொண்டோம். தர்ம சாலை யானது அந்த நாளில் மேல் தளம் போட்ட கட்டிடம். ஆனால், மொட்டை மாடி என்றாலும் மாடிக்கு ஒரு படிக் கட்டு இருந்தது. படிக் கட்டுக்குமேல் கூரை உண்டு. படி ஏறுமிடத்திற்கு அப்பால் 3 அடி அகலம் 6 அடி நீளத்திற்கு ஒரு இடமிருந்தது. பகலில் மகாத்மா அங்கிருந்து கொண்டு

தமது வேலைகளைச் செய்து வருவார். இரவில் நாங்கள் எல்லோருமே திறந்த மாடியில் தூங்குவோம். தாழ்வாரத்திலோ, அறையிலோ, வெளியிலோ, எங்கு விரும்புகிறோமோ அங்கிருந்துகொண்டு விவசாயிகளின் வாக்கு மூலங்களை எழுதிக்கொள்ளுவோம். தினம் ஏராளமான விவசாயிகள் வருவார்கள். காம்பவுண்டு உள்பட தர்ம சாலை இதனுல் எப்பொழுதும் நிறைந்திருக்கும். கொஞ்ச காலத்திற்குப் பிறகு பெட்டியாவே எங்கள் தலைமை ஸ்தானமாகிவிட்டதால் அனேகமாக நாங்கள் அங்கேயே வசித்து வந்தோம்.

பெற்ற முதல் போதனை

விவசாயிகள் சுயேச்சையாக நடந்துகொள்ளுவதாகத் தோன்றினால் போதும், ஏதாவது ஒரு சாக்குப் போக்கை வைத்துக்கொண்டு அந்த விவசாயிகளை அடக்க முற்பட்டு விடுவது தோட்ட முதலாளிகளுக்கு வழக்கமானது. இதில் அவர்களுக்கு எந்தவித கஷ்டமுமே இல்லை. தோட்ட முதலாளிகள், தங்களுடைய வீடுகளுக்குத் தாங்களே தீ வைத்து விடுவார்கள்! இதற்குப் பழியையெல்லாம் விவசாயிகள் தலையில் போட்டு விடுவார்கள்! பிறகு போலீஸ்காரர்களின் உதவியைக் கொண்டு விவசாயிகளை அடித்து உதைத்து அவர்களைக் கொள்ளையிட்டு விடுவார்கள். இதனால் ஏதாவது ஒரு இடத்தில் நிலைமை நெருக்கடியானதாகிவிடுமானால், அப் பகுதியில் தண்டப் போலீஸைக் கொண்டுவந்து வைத்து விடுவார்கள். இவ் விதம் பல சம்பவங்கள் நடந்திருப்பதாக விவசாயிகள் பலர் எங்களிடம் வாக்குமூலங்களைக் கொடுத்திருந்தார்கள். ஆனால் இவற்றை நிரூபிப்பதற்குத் தக்க சாட்சியங்கள் கிடைப்பதோ கஷ்டமாக இருந்தது.

நாங்கள் பெட்டியாவிலிருந்தபோது பத்திரிகைகளில் ஒரு செய்தியைப் படித்தோம். காந்தியடிகள் வந்ததால் ஏற்பட்ட உற்சாகத்தினால் ஒரு தொழிற்சாலை தீ வைக்கப் பட்டுவிட்டது என்பது அச் செய்தி. இதை நாங்கள் படித்ததும், இதைக் குறித்தும் ஒரு விசாரணையை நடத்த விரும்பினோம். ஆனால் சம்பவம் நடந்து கொஞ்ச காலமாகிவிட்டது. அதனால் நடந்தது என்ன என்பதைப் பற்றிய சரியான விவரங்கள் கிடைக்கவில்லை. விவசாயிகளோ, இது தோட்ட முதலாளிகளின் வேலையேயல்லாமல் வேறொன்றுமில்லை என்று வற்புறுத்திக் கூறி வந்தனர். இச் சம்பவத்தைப்பற்றி உள்ளூர் அதிகாரிகள் ஒருவேளை சர்க்காருக்கு அறிவித்திருக்கக்கூடும். ஆனால் எங்களுக்கு அதைப் பற்றிய தகவல் தெரியக் காரணமில்லை.

இதற்குள் சுமார் பத்தாயிரம் வாக்குமூலங்களை வாங்கிவிட்டோம். இவைகளல்லாமல் விவசாயிகள் ஏராளமான தஸ்தாவேஜிகளையும் எங்களிடம் ஒப்படைத்தனர். ஆகவே ஜில்லாவிலிருந்த ஒவ்வொரு தொழிற்சாலையையும் பற்றிய எல்லா விவரங்களையும் நாங்கள் சேகரித்துவிட்டோம். மகாத்மா காந்தியும் இந்த விவரங்களையெல்லாம் அறிந்திருந்தார். நிலைமை இவ்விதமிருக்கையில், சர்க்காரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அநேக விவசாயிகளின் வாக்குமூலங்களை மகாத்மா பதிவு செய்து கொண்டிருப்பதால் அவருடைய விசாரணை முடிந்திருக்கக்கூடும் என்று அக்கடிதம் கூறியது. ஆகவே இந்திய சிவில் சர்வீஸ் அதிகாரிகளில் மூதியவரும், பெரிய அதிகாரியும், ரெவினியூ போர்டு மெம்பருமான ஒரு ஆங்கிலேயரை ராஞ்சியிலிருந்து பாட்னவுக்கு சர்க்கார் அனுப்புவதாகவும், அவர் காந்தியடிகளைச் சந்திப்பாரென்றும், தமது விசாரணையின் முடிவைக் குறித்து அவரிடம் ஒரு அறிக்கையைக் கொடுத்து மகாத்மா அவருடன் நிலைமையை விவாதிக்கலாம் என்றும் அக் கடிதத்தில் கண்டிருந்தது. உள்ளூர் அதிகாரிகளின் யோசனையின் பேரிலேயே சர்க்கார் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது என்று இக் கடிதம் கிடைத்ததுமே நாங்கள் கருதினோம். மேற்கொண்டும் விசாரணை நின்றுவிடவேண்டும் என்பதே கடிதத்தின் பொருள் என்றும் எண்ணினோம். நிலைமையைப் பற்றிய முழு விவரங்களும் எங்களிடமிருந்தன. விவசாயிகளின் குறைகளைக் குறித்த ஆதாரங்களும் எங்கள் வசமிருந்தன. எனவே அக் குறைகளை நீக்கவேண்டும் என்று சர்க்காரைக் கேட்பதை முன்னிட்டு ஒரு அறிக்கையைத் தயாரிக்க வேண்டும் என்று மகாத்மா எங்களிடம் கூறினார்.

அதன்பேரில் அறிக்கையைத் தயாரிக்க ஆரம்பித்தோம். எந்தெந்த தொழிற்சாலையில் என்னென்ன புகார்கள் என்பதைக் குறித்து தனித் தனியாக விவரங்களை முன்னடியே தயாரித்திருந்தோம். புகார்களெல்லாம் பொதுவாக ஒரே மாதிரியானதாகவே இருந்தபோதிலும் விவசாயிகளை அடக்கி ஒடுக்குவதற்கு ஒவ்வொரு தொழிற்சாலையும் கையாண்ட முறைகளில் வித்தியாசங்களிருந்தன. எவ்விதம் விவசாயிகள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள்

என்பதோடு அவர்களுக்கிருந்த மற்ற துன்பங்கள் யாவை என்பதையும் அறிந்திருந்தோம்.

பாபு பிரஜ்கிஷோர் பிரசாதுடன் மகாத்மா காந்தி பாட்னாவுக்குச் சென்றார். அங்கு ரெவினியூ போர்டு மெம்பரை சந்தித்தார். தம்முடைய அறிக்கையை சர்க்காருக்கு அனுப்பும்படி மகாத்மாவிடம் அவர் சொன்னார். அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்வதென்பதை சர்க்காரே முடிவு செய்யும் என்றும் அவர் கூறினார். அதோடு காந்தியடிகள் நடத்திய விசாரணை, தோட்ட முதலாளிகளிடையே அதிக பரபரப்பையும் கவலையையும் உண்டாக்கி யிருக்கிறது என்றும் அவர் சொன்னார். சர்க்காருக்கு காந்தியடிகளிடம் நம்பிக்கை இருக்கிறது என்றும், மகாத்மா இருந்து விசாரணையை நடத்துவதைப் பற்றி சர்க்கார் கவலைப்படவில்லை என்றுங் கூட ரெவினியூ போர்டு மெம்பர் சொன்னார். ஆனல் காந்தியடிகளுடனிருக்கும் வக்கீல்கள் பழைய கிளர்ச்சிக்காரர்கள் என்றும், அவர்கள் காந்திஜியுடன் சேர்ந்து கொண்டது விவசாயிகளுக்கு உதவுவதற்காக அல்ல என்றும், தங்கள் சுயநல எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளுவதற்காகவும், வக்கீல் தொழிலில் பிரபலமடைவதற்காகவும் இப்பொழுது வந்து இங்கு கூடியிருக்கிறார்கள் என்றும் அந்த மெம்பர் கூறினார். ஆகையால் அந்த வக்கீல்களை தம்மிடமிருந்து அப்புறப்படுத்தி விடும்படியும் மகாத்மாவைக் கேட்டுக்கொண்டார். பெட்டியாவுக்குப் போனதும் சர்க்காருக்கு தமது அறிக்கையை அனுப்புவதாக மகாத்மா ஒப்புக்கொண்டார். நேரத்தை வீணுக்காமலிருப்பதை முன்னிட்டு விவரமான வாக்குமூலங்களுக்கு பதிலாக சுருக்கத்தை அனுப்புவதாகவும் சொன்னார். ஆனல் தமது சகாக்களை வெளியேற்றி விடுவது என்பதற்கு மாத்திரம் ஒப்புக்கொள்ள முடியாது என்று மகாத்மா கூறிவிட்டார்.

ரெவினியூ போர்டு மெம்பர் ராஞ்சிக்குத் திரும்பிவிட்டார். மகாத்மா பெட்டியாவுக்கு வந்தார். நாங்கள் சேகரித்திருந்த வாக்குமூலங்களையும், விவசாயிகள் கூறியிருந்த குறைகளையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒரு சுருக்க

ளான அறிக்கையை மகாத்மாவே தயாரித்தார். நாங்கள் தயாரித்திருந்த அறிக்கை விரிவானது. அதில் விவசாயி களின் குறைகளை நாங்கள் குறிப்பிட்டிருந்ததோடு இதற்கு எங்கள் வசமிருந்த சாட்சியங்களின் சாராம்சங்களையும் அதில் குறிப்பிட்டிருந்தோம். எங்கள் அறிக்கையின் பிற்பகுதியை மகாத்மா சேர்த்துக்கொள்ளவில்லை. குறை களை, நிரூபிப்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் தம்மிட மிருக்கின்றன என்று மாத்திரம் தமது அறிக்கையில் குறிப்பிட்டார். தம்முடனிருந்து வேலை செய்கிறவர்களை அப்புறப்படுத்திவிட வேண்டும் என்று கூறப்பட்ட யோசனையை பலமாக ஆட்சேபித்தார். சில காலமாக தாம் அவர்களுடன் வசித்து வேலையும் செய்து வந்திருப்பதால் அவர்களைக் குறித்துத் தமக்கு நன்ருகத் தெரியும் என்று எழுதினர். அதோடு அவர்களைப் பற்றி தமக்குத் தெரிந்த அளவுக்கு எந்த சர்க்கார் அதிகாரிக்கும் அறிய வாய்ப்புக் கிடையாது என்றும் குறிப்பிட்டார். "சர்க் காருக்கு என்னிடம் நம்பிக்கை இருந்தால், சரியானவர்களை எனக்குச் சகாக்களாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுவதில் எனக்குள்ள திறமையிலும் சர்க்காருக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். இங்கு என்னுடன் வேலை செய்கிறவர்கள் சரியானவர்கள் என்று நான் கருதினல், இம்முடிவை சர்க்காரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். என்னுடனிருப்ப வர்கள் நல்லவர்கள்; யோக்யமானவர்கள்; மற்றெல்லாவற் றையும் விட்டுவிட்டு என்னுடன் வேலை செய்ய முன் வந்திருக்கிருர்கள். விவசாயிகளின் துயரங்களை அறிந்து மனவேதனைப்பட்டு, அவர்களுக்கு உதவி செய்வதற்கே இவர்கள் வந்திருக்கிருர்கள். நான் அறிந்தவரையில் சர்க் காரிடமோ அல்லது தோட்ட முதலாளிகள் பேரிலோ இவர் களுக்கு எந்தவித குரோதமும் கிடையாது. ஆகையால் இவர்களை அப்புறப்படுத்திவிடுவதென்பதற்கு நான் சம்மதிக்கவே முடியாது" என்று சர்க்காருக்கு எழுதிய கடிதத்தில் மகாத்மா காந்தி குறிப்பிட்டிருந்தார்.

இதற்குள் தோட்ட முதலாளிகளிடத்திலும் மகாத்மா தொடர்பு கொண்டிருந்தார். அவர்களில் பலர் மகாத்மாவை அடிக்கடி சந்தித்து வந்தார்கள். கிடைத்திருக்கும் புகார் கள் நியாயமற்றவை என்பதை நேரில் கண்டு திருப்தி

யடைவதற்காக தங்களுடைய தோட்டங்களையும் தொழிற்சாலைகளையும் வந்து பார்க்கும்படியும் சில தோட்ட முதலாளிகள் மகாத்மாவை அழைத்தார்கள். அங்கு வந்து பார்த்தால், புகார்கள் பொய்யானவை என்பதை தாங்கள் நேரிலேயே நிரூபிப்பதாகவும் மகாத்மாவிடம் சொன்னார்கள். இதை தங்களிடமிருக்கும் தொழிலாளரும் விவசாயிகளுமே நேரில் சொல்லுவார்கள் என்றும் கூறினர். மகாத்மா அவ்விதம் அங்கு போன சமயங்களில், விவசாயிகள் சம்பந்தமாக தாங்கள் கையாண்டுவரும் அபிவிருத்தியான முறைகளைக் குறித்தும் அவருக்குத் தோட்ட முதலாளிகள் எடுத்துக் கூறுவார்கள். என்றாலும் அந்த முதலாளிகளின் ஆட்களோ, முதலாளிகளின் கூற்றுக்கு மாறான உண்மைகளை எங்களிடம் கூறிவந்தார்கள். முதலாளிகளுக்கு விரோதமானதாக இருக்கும் தஸ்தாவேஜுகளையும் எங்களிடம் கொடுப்பார்கள்.

ஒரு சமயம் ஒரு சர்க்கார் அதிகாரி, தாம் சர்க்காருக்கு அனுப்பியிருக்கும் அறிக்கையின் நகல் ஒன்றை ரகசியமாக எங்களுக்கு அனுப்பிவைத்தார். இதை நாங்கள் மகாத்மாவிடம் கொண்டுபோனோம். அதைப்படித்துப் பார்ப்பதற்கு முன்னால், அது எங்களுக்கு எப்படிக் கிடைத்தது என்பதை மகாத்மா தெரிந்துகொண்டு விட்டார். உடனே அதைப் படித்துப்பார்க்க மகாத்மா மறுத்துவிட்டதோடு அதை அந்த சர்க்கார் அதிகாரியிடமே திருப்பிக்கொடுத்துவிடும்படியும் எங்களிடம் கூறினார். எங்களுக்கு ரகசியமான வழியில் கிடைக்கும் எந்த காகிதத்தையும் நாங்கள் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது என்றும் எங்களுக்குக் கட்டளையிட்டார். நடைமுறையில் சத்தியத்தை இவ்வகையில் மகாத்மா எங்களுக்கு போதித்தார்.

பல வருஷங்களுக்குப் பிறகு நான் சிறையிலிருந்த போது, என் நண்பர்களில் பலர் திருட்டுத்தனமாக சிறைக்கு வெளியில் கடிதங்களை அனுப்பிவந்ததோடு, கடிதங்களை அவ்விதமே பெறுவதையும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். 1930-34ல் நடந்த சத்தியாக்கிரக காலத்தில் "ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகையின் வெளிநாட்டுப் பதிப்பு வார இதழை மாத்திரமே

சிறையில் எங்களுக்கு அநுமதித்திருந்தார்கள். ஆனால் என் கண்பர்களில் பலருக்கு மற்ற பத்திரிகைகளும் கிடைத்து விடும். ஆனால் மேலே நான் கூறியிருக்கும் சம்பவம் என் மனதில் ஆழப் பதிந்திருந்ததாலும், அது என்னைக் கட்டுப் படுத்தியிருந்ததாலும், சிறையில் தவறான வழியில் கடிதங்கள், பத்திரிகைகள், புத்தகங்கள் ஆகியவற்றை நான் பெற்றதே கிடையாது. இத்தகைய தவறான காரியங்களுக்குச் சில சமயங்களில் சிறை அதிகாரிகள் கூட உடந்தையாக இருப்பதுண்டு. எங்களுக்கு வரும் கடிதங்கள், பத்திரிகைகள் அல்லது புத்தகங்கள் ஆகியவைகளையெல்லாம் ஒரு மாஜிஸ்டிரேட் தணிக்கை பார்த்து அநுமதிக்கவேண்டும் என்பது சர்க்காரின் உத்தரவு. ஆனால் இந்த உத்தரவை சிறை அதிகாரிகள் நிறைவேற்றிவைக்கும் முறையே வேறு. எங்கள் கடிதங்களை மாஜிஸ்டிரேட் தணிக்கை செய்து அனுப்புவதற்கு நாளாகும். எங்களுக்குக் கடிதங்கள் அதிகக் காலதாமதமாகிக் கிடைக்கின்றன என்று நாங்கள் புகார் செய்யவே அதற்கு ஒரு பரிகாரம் கண்டுபிடிக்கப் பட்டது. ஒரு கைதிக்கு ஒரு கடிதம் வந்தால், சிறை அதிகாரிகள் அதை அக்கைதிக்கு முதலில் காட்டுவார்கள்; அதன் பிறகு தணிக்கைக்கு அனுப்புவார்கள். பிறகு திரும்பி வந்ததும் அக்கடிதத்தை விலாசதாரிடமே கொடுத்துவிடுவார்கள். இவ்விதம் தனக்கு வரும் கடிதத்தில் என்ன இருக்கிறது என்பதை அக்கடிதம் தணிக்கை யாவதற்கு முன்னாலேயே ஒரு கைதி அறிந்துகொண்டு விடுவார். ஆனால் நானோ, இந்த முறையில் ஒரு கடிதத்தை யேனும் பெற்றுக்கொண்டதே கிடையாது.

ஒரு ருசிகரமான சம்பவத்தை இச்சமயத்தில் கூற விரும்புகிறேன். எங்களுக்கு திருப்தியளித்து நாங்கள் சுகமாக இருக்கும்படிச் செய்யவேண்டும் என்பதில் சிறை அதிகாரிகளில் பலர் ஆவலுடனிருந்தனர். ஒரு சமயம் ஒரு அதிகாரி என்னிடம் சொன்னதாவது: "நீங்கள் எல்லாவற்றையும் தியாகஞ் செய்துவிட்டு நம் நாட்டிற்காக இக்கஷ்டங்களையெல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் மனிதர்களே யாகையால் இதையெல்லாம் நாங்கள் உணராமலில்லை. எங்களுக்கு அவ்வளவு தேசாபிமானம் இல்லாதிருக்கலாம். என்றாலும் எங்களுக்கும்

நாட்டின்மீது ஓரளவுக்கு அன்பு உண்டு. ஏதோ பிழைப்பிற்காக நாங்கள் இந்த வேலையைச் செய்யவேண்டியிருக்கிறது. வயிறு வளர்க்க தினத்திற்கு ஆயிரம் தடவை புளுகி, நாளெல்லாம் திருடியும், ஏய்த்தும் வரவேண்டியுயிருக்கிறது. ஆகையால் நாங்கள் கொஞ்சம் புளுகினாலும் அதை நீங்கள் பொருட்படுத்தக்கூடாது. ஏனெனில் நாங்கள் செய்வது சரியானது என்று நாங்கள் உணருகிறோம்." அதன் பேரில் அந்த அதிகாரிக்கு என் நிலைமையை விளக்கினேன். நான் கூறுவதை அவர் உணர்ந்தார். நான் நியாயமாகப்பெற முடியாத கடிதங்கள், வசதிகள் முதலியவைகளை எனக்கு அளித்துவிட முயற்சிப்பதையும் அவர் விட்டுவிட்டார்.

ராஜீய கருத்துக்களடங்கிய புத்தகங்களை சிறையில் என்னுடன் வைத்துக்கொள்ளக்கூடாது; மத சம்பந்தமான நூல்களை மாத்திரமே தணிக்கையில் அனுமதிக்கப்பெற்ற பிறகு வைத்துக்கொள்ளலாம் என்பது, சிறையிலிருந்த போது எனக்குத் தெரியாது. எனவே, ஒத்துழையாமையைப்பற்றி மகாத்மா எழுதியிருந்தவைகளையெல்லாம் சேகரித்து பல விஷயங்களையும் பற்றியவைகளைத் தனித் தனியாகப் பிரித்து, அது ஒவ்வொன்றிற்கும் தனித்தனி முன்னுரைக் குறிப்பையும் எழுதுவது என்று திட்டமிட்டிருந்தேன். சிறையிலிருந்து வெளியே வந்ததும் எல்லாவற்றையும் அச்சிட்டுவிட வேண்டும் என்பது நோக்கம். ஆகையால் மகாத்மா எழுதியதில் இதற்கு அவசியமான புத்தகங்கள் எனக்குத் தேவை என்று ஜெயிலரிடம் கேட்டேன். காந்திஜி எழுதியவைகளில் அப்பொழுதே பல புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்தன. நான் கேட்ட புத்தகங்கள் எனக்குக் கிடைத்தன. ஆனால், அவை தணிக்கை அதிகாரியால் அனுமதிக்கப்பட்டவை யல்ல என்பதோ, அல்லது ஒரு கைதி ஒரே சமயத்தில் ஒரு புத்தகத்திற்கு மேல் தன்னுடன் வைத்துக் கொள்ளக் கூடாது என்பதோ, இதைப்பற்றி அமுலிலிருக்கும் சிறை விதி என்ன என்பதோ எனக்கு அப்பொழுது தெரியாது. என் வேலையைத் துவங்கினேன். பல பகுதிகளாகப் பிரித்து முன்னுரைக் குறிப்புகளும் எழுதினேன். சிறையிலிருந்த சில நண்பர்கள், நான் கூறிய யோசனைப்படி மகாத்மா எழுதியவைக

ளுக்கு நகல்களையும் எடுத்தார்கள். வேலை துரிதமாக நடந்தது. என்ருலும் அது முற்றுப் பெறவே இல்லை. எனக்குக் கிடைத்த புத்தகங்களெல்லாம் நியாயமான வழியிலேயே எனக்குக் கிடைத்திருக்கின்றன என்ற எண்ணத்திலேயே நான் இருந்து விட்டதால், அப்புத்தகங்கள் என்னிடமிருப்பதை எந்த சிறையதிகாரிக்கும் மறைக்க நான் முற்படடதேயில்லை. சிறை சூப்பரின்டெண்டு வாரத்திற்கு ஒரு முறை எங்களை வந்து பார்ப்பார்; சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் போய்விடுவார். என்னிடமிருக்கும் புத்தகங்களை நான் உபயோகித்துக் கொண்டிருந்த போதும் அவர் சில சமயங்களில் என்னைப் பார்த்திருப்பதால், என்னிடம் இப்புத்தகங்களிருப்பது அவருக்கும் தெரிந்தே இருக்கும். என்ருலும் இதைப் பற்றி அவர் எதுவும் சொன்னதில்லை; நான் புத்தகங்கள் வைத்துக் கொண்டிருப்பதை அவர் ஆட்சேபித்ததும் கிடையாது. ஆகையால் அவை தவருன வழியில் எனக்கு வந்திருக்கின்றன என்று நான் சந்தேகிக்கவே இடமில்லை.

சிறை இலாகாவின் பெரிய அதிகாரியான சிறைகள் இன்ஸ்பெக்டர் ஜெனரல் எங்கள் சிறைக்கு வரப்போகிருர் என்று ஒரு நாள் அறிந்தோம். ஜெயிலர் என்னிடம் வந்து, என்னிடமிருக்கும் புத்தகங்களை தாம் எடுத்துச் செல்லுவதாகவும், இன்ஸ்பெக்டர் ஜெனரல் வந்துவிட்டுப் போனதும் திருப்பிக் கொண்டு வந்து கொடுப்பதாகவும் சொன்ஞர். அப்பொழுதுதான் எனக்குச் சந்தேகம் வந்தது. எனக்குப் புத்தகங்கள் கொடுக்கப்பட்டதில் சிறைவிதிகள் மீறப் பட்டிருக்கின்றனவா என்று கேட்டேன். அதன் பேரில்தான் சிறை விதிகளைப் பற்றி நான் மேலே சொன்ன விவரங்களையெல்லாம் அவர் சொன்ஞர். இதில் தாம் எதுவும் முறை தவறி நடந்து விட்டதாகக் கருதவில்லை என்றும், செய்யும் பாபங்களுக்குப் பரிகாரம் செய்து கொண்டதாகவே தாம் எண்ணுவதாகவும் ஜெயிலர் சொன்ஞர். புத்தகங்களை அவரிடம் திருப்பிக் கொடுத்து, அவற்றை என்னிடம் மீண்டும் கொண்டுவர வேண்டாம் என்று சொல்லி விட்டேன். திருட்டுத்தனமாகவோ அல்லது இரகசியமாகவோ செய்யும் காரியம் எல்லாம்

பொய்யானது அல்ல என்றாலும் பொய்க்குச் சமமானது என்று மகாத்மா போதித்தது என் நினைவுக்கு வந்தது. இதன் காரணமாக நான் எழுத நினைத்த நூலை நான் அப்பொழுது முடிக்கவுமில்லை; பிறகு முடிக்கவுமில்லை. நான் விடுதலையான பிறகு அந்தக் கையெழுத்துப் பிரதிகளை சதாகத் ஆசிரமத்தில் வைத்திருந்தேன். இரண்டாவது சத்தியாக்கிரகப் போராட்டத்தின்போது அந்த ஆசிரமத்தைப் போலீஸார் பிடித்துக் கொண்ட சமயம் அவை காணாமற் போய்விட்டன. இதனால் அப்புத்தகம் பிரசுரமாகவே இல்லை.

இன்னுமொரு விசித்திரமான சம்பவத்தையும் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியம். ராஜீயம், அரசியல் சம்பந்தமில்லாத புத்தகங்களையே எங்களுக்கு சிறையில் அனுமதித்து வந்தனர் என்று முன்னாடியே கூறினேன். தணிக்கை செய்கிறவர் விஷயம் தெரிந்தவரல்ல. தெரிந்தவராகவே இருந்தாலும், நாங்கள் விரும்பும் புத்தகங்களையெல்லாம் அவர் படித்துப் பார்த்துத் தணிக்கை செய்வதென்பது அசாத்தியமானது. ஏனெனில் நாங்கள் நூற்றுக் கணக்கில் அச்சிறையிலிருந்தோம். எங்களில் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒரு புத்தகத்தை வாங்கிக் கொள்ள உரிமையுண்டாகையால், வரும் புத்தகங்கள் பல நூற்றுக் கணக்கானவை. ஆகையால் தணிக்கை அதிகாரி, தணிக்கையை மேற்கொள்ளுவதற்கு மிக எளிதான ஒரு முறையைக் கையாண்டு வந்தார். ஒரு புத்தகத்தின் பெயரில் "ராஜீயம்", "அரசியல்" என்ற வார்த்தையுமிருந்தால் அப்புத்தகங்களை எங்களுக்கு அனுமதிக்க மறுத்துவிடுவார். இவ்விதம் சாதாரணமாகப் பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் ராஜீய, பொருளாதார சம்பந்தமான சிறு புத்தகங்கள்கூட எங்களுக்கு அனுமதிக்கப் படுவதில்லை. ஆனால் கம்யூனிஸம் பற்றிய புத்தகங்களெல்லாம் தாராளமாக அனுமதிக்கப்பட்டு வந்தன. "கம்யூனிஸத்தின் அரிச்சுவடி", "வேலையே செய்யாத வகுப்பினரின் தத்துவம்" போன்ற புத்தகங்களெல்லாம் அனுமதிக்கப் பட்டன. முந்திய புத்தகம் சிறுவர்களுக்கான அரிச்சுவடி என்று ஒருவேளை அந்த தணிக்கை அதிகாரி எண்ணியிருக்கக்கூடும்! பிந்திய புத்தகமோ, பணக்காரர்களுக்கான

தமாஷ்களை, அதாவது பொழுதுப் போக்குக்காக விளையாடும் சீட்டாட்டம் போன்ற விளையாட்டுகளைப் பற்றியது என்று அவர் கருதினார் போலும்!

சாதாரணமாகக் கைதிகள் படிப்பதற்கு பத்திரிகைகளை அனுமதிப்பதில்லை. செய்திகளைத் தெரிந்து கொள்ளுவது சம்பந்தமாக சிறை அதிகாரிகளுடன் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எங்களில் அதிக ஞாபக சக்தியுள்ள ஒருவர் தினந்தோறும் ஜெயிலரின் ஆபீஸுக்குப் போக வேண்டியது; அங்கு சிறை அதிகாரிகளுக்கு என்று வரும் பத்திரிகைகளைப் படித்து விட்டு வந்து விடுவது. அப்படிப் படித்துவிட்டு வருகிறவர், நாள்தோறும் இரவு சாப்பாட்டுக்குப் பிறகு, நாங்கள் அறைகளில் பூட்டப்படுவதற்கு முன்னால், வார்டில் நின்று கொண்டு சுற்றிலுமிருக்கும் எங்களுக்கு, தாம் படித்து வந்த செய்திகளையெல்லாம் சொல்லி விடுவார். நாங்கள் பல வார்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தோம். அவர் ஒவ்வொரு வார்டுக்கும் போய் இவ்விதம் செய்திகளைச் சொல்லி விடுவார். சிறையில் கைதிகளுக்கு பத்திரிகைகளைக் கொடுக்கக்கூடாது என்ற சர்க்கார் உத்தரவு நிறைவேற்றப்பட்டு வந்தாலும், பத்திரிகைகளில் அன்றாடம் பிரசுரமாகும் எல்லா முக்கியமான செய்திகளையும் கைதிகள் இவ்விதம் தவறாமல் அறிந்தே வந்தனர்.

* * *

தோட்ட முதலாளிகளின் சிப்பந்திகளும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், எங்களுக்கு உதவி செய்வதைத் தங்களுடைய கடமையாகக் கருதி வந்தார்கள் என்று முன்னாடியே சொன்னேன். சில காரியங்களில் அவர்கள் எங்களுக்கு அளித்து வந்த உதவி, நாங்கள் தயங்காது ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாக இருந்தன. ஏனெனில் அவற்றில் உண்மைக்கு மாறானதோ அல்லது மோசடியோ எதுவுமில்லை. எங்கள் வேலையில் எங்களுக்கு உதவியாக இருக்க சர்க்கார் சிப்பந்திகள் சிலர் அதிகச் சிரமப்பட்டார்கள். தமது வேலைகளையெல்லாம் ஹிந்தியிலேயே நடத்திக் கொண்டு போவதற்கு வேண்டிய அளவு ஹிந்தி அப்பொழுது மகாத்மாவுக்கு தெரியாது. ஹிந்தியிலேயே தாம் பேச விரும்புவதாக ஆரம்பத்திலேயே மகாத்மா எங்களிடம்

சொன்னார். ஆனால் அப்பொழுது கையிலிருந்த வேலை அதிக முக்கியமானதாகையால், அந்தப் பாஷையிலேயே காரியங்களைச் செய்ய முயற்சிப்பதானால், வேலைகளுக்குக் குந்தகம் ஏற்பட்டு விடுவதை மகாத்மா விரும்ப வில்லை. எனவே அநேகமாக அவர் ஆங்கிலத்திலேயே பேசுவார்; எழுதுவார். நாங்கள் எல்லாருமே சிரமமின்றி படிப்பதற்கு வசதியாக இருக்கட்டும் என்பதற்காக நாங்கள் வாங்கிய வாக்குமூலங்களை ஆங்கிலத்திலேயே எழுதிக் கொண்டோம். இந்த வாக்குமூலங்களுக்கு நகல்களைத் தயாரித்துக் கொள்ளுவது நல்லது என்று மகாத்மா கருதினார். பெட்டியாவில் நாங்களிருந்த தர்ம சாலையில் சர்க்காரின் சர்வே, செட்டில்மெண்டு இலாகாவில் வேலை செய்த டைப் அடிப்பவர்கள் சிலரும் குடியிருந்தார்கள். மகாத்மா தங்கும் அதே வீட்டில் தாங்களும் குடியிருக்க நேர்ந்தது தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெரிய பாக்கியம் என்று அவர்கள் எண்ணினார்கள். காலையில் ஆபீஸுக்குப் போவதற்கு முன்னாலும், மாலையில் ஆபீஸிலிருந்து திரும்பிய பிறகும், எங்களுக்கு டைப் அடிக்க வேண்டியவைகளையெல்லாம் செய்து கொடுப்பதாக அவர்கள் முன்வந்தார்கள். இது எங்களுக்கும் வசதியாக இருந்தது. எங்கள் கடிதப் போக்குவரத்துக்களையும், வாக்குமூலங்களுக்கு நகல் எடுப்பதையும் இவர்களிடம் கொடுக்கச் சம்மதித்தோம். இவர்கள் கஷ்டப்பட்டு உற்சாகத்துடன் வேலைகளைச் செய்து முடித்தார்கள். (இவர்கள் மூன்று அல்லது நான்கு பேர். இவர்களில் இருவர் அதிக வேகமாக டைப் அடிக்கக் கூடியவர்கள்.) நாங்கள் நடத்திய விசாரணையை முடித்த சமயம் வரை, சுமார் இருபத்தினாயிரம், இருபத்தையாயிரம் விவசாயிகளிடம் வாக்குமூலம் வாங்கியிருந்தோம். பத்தாயிரம் வாக்குமூலங்கள் விரிவானவை; மற்றவை சுருக்கமானவை. இவைகளையெல்லாம் இவர்கள் டைப் அடித்துக் கொடுத்தார்களென்றால், இவர்களுக்கு எவ்வளவு அதிக வேலை இருந்ததென்பதை யூகித்துக் கொள்ளலாம். இதல்லாமல், கமிஷன் நியமிக்கப்பட்டதும், அதன் முன்பு வைப்பதற்காக எங்களிடமிருந்த தஸ்தாவேஜிகளை யெல்லாம் டைப் அடித்துக் கொடுத்தார்கள். நாங்கள் சம்பரானில்

இருந்த வரையில் இவர்கள் இந்த வேலைகளை எங்களுக்குத் தொடர்ந்து செய்து கொடுத்து வந்தனர். இரவு நெடு நேரம் வரை விழித்திருந்தார்கள்; அதிகாலையில் எழுந்து விடுவார்கள்.

தோட்ட முதலாளிகளின் சிப்பந்திகள் எவ்விதம் நடந்து கொண்டார்கள் என்பதற்கு ஒரு சம்பவத்தை இங்கு கூற விரும்புகிறேன். ஒரு தோட்ட முதலாளி, கடுமையான கோபத்திற்குப் பெயர் பெற்றவர். தம்மிடம் வருகிறவர்களை அவர் வாயில் வந்தபடியெல்லாம் திட்டுவ தோடு அடித்தும் விடுவார். அவருடைய குடியானவர்கள் மாத்திரமேயன்றி அவருடைய முக்கியமான ஏஜண்டு களும் அடிக்கடி அவருடைய கோபத்திற்கு ஆளாகி விடுவ துண்டு. ஒரு நாள் மகாத்மா அவரிடம் போயிருந்தார். கோபாவேசமுள்ள தங்களுடைய எஜமானர், ஒருவேளை மகாத்மாவிடத்திலும் தவறுதலாக நடந்து கொண்டுவிடக் கூடும் என்று அத்தோட்ட முதலாளிகளின் சிப்பந்திகள் பயந்தனர். ஆகவே மகாத்மா அந்த முதலாளியின் வீட் டிற்குள் சென்றதும், அங்கிருந்த சிப்பந்திகளெல்லாம் தங்களுடைய வேலைகளையெல்லாம் விட்டு விட்டு. அவர் மகாத்மாவிடம் தவறாக நடந்து கொண்டால் அவர் மீது உடனே பாய்ந்துவிடத் தயாராகக் கைகளில் தடிகளுடன் வெளித் தாழ்வாரத்தில் சுற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனால் தோட்ட முதலாளி மீது இவர்கள் பாய்வதற்கு அவசியம் ஏற்படவில்லை. ஏனெனில் மகாத்மாவை எந்த விதத்திலும் இழிவு படுத்தும் துணிவு அந்த முதலாளிக்கு உண்டாகவில்லை. உண்மையில் அந்த முதலாளி மகாத் மாவை மரியாதையாகவே வரவேற்று அவரிடம் ஒழுங் காகவே நடந்து கொண்டார். என்றாலும் சிப்பந்திகள் தயாராயிருந்த சங்கதி, பின்னால் அவர்களே சொன்னதி லிருந்துதான் தெரிந்தது.

மற்றோர் சமயம் இன்னுமொரு தோட்ட முதலாளி, மகாத்மாவை தம் வீட்டுக்கு அழைத்திருந்தார். தம்மீது கூறப்பட்ட புகார்களெல்லாம் பொய்யானவை என்று கடிதங்கள், தஸ்தாவேஜுகளின் மூலம் நிரூபிப்பதற்காகவே மகாத்மாவை அவர் அழைத்திருந்தார். மகாத்மாவும் அழைப்பை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு அவர் வீட்

டுக்குப் போய் தம்மிடம் காட்டப்பட்ட கடிதங்களையெல்லாம் பார்த்தார். குறிப்பிட்ட தஸ்தாவேஜியை மகாத்மாவிடம் எடுத்துக் காட்டும்படி அத்தோட்ட முதலாளி கூறியபோதெல்லாம், அவருடைய சிப்பந்தி, அந்த தஸ்தாவேஜியையும் அதை மறுப்பதா யிருக்கும் மற்றக் காகிதங்களையும் மகாத்மாவிடம் காட்டி வந்தார். தோட்ட முதலாளி என்ன கூறுகிறாரோ அதை அவருடைய தஸ்தாவேஜிகளே பொய்யாக்குகின்றனவே என்று மகாத்மா கூறியதும் தோட்ட முதலாளிக்குச் சங்கடமாகப் போய் ஒன்றும் சொல்ல முடியாமல் திகைத்தார். ஆனால் இதற்கு மகாத்மா மீது குறை சொல்ல முடியாது. அந்த சிப்பந்தியின் கதி பிறகு என்னவாயிற்று என்பது எனக்குத் தெரியாது. குறிப்பிட்ட காகிதங்களையே மகாத்மாவிடம் காட்ட வேண்டும் என்று தோட்ட முதலாளி முன்கூட்டியே தம்மிடம் சொல்லாததினால், அவசரத்தில் தாம் முதலாளிக்குச் சாதகமானது, அவருக்கு விரோதமானது ஆகிய எல்லாவற்றையுமே மகாத்மாவின் முன்னால் வைத்துவிட்டதாக அந்த சிப்பந்தி சமாதானம் கூறினார் என்று கேள்விப்பட்டேன். முதலாளியை அம்பலப்படுத்திவிட வேண்டும் என்று அந்த சிப்பந்தி வேண்டுமென்றே இதைச் செய்திருக்கவும் கூடும்.

மகாத்மா காந்தியின் அறிக்கை ரெவினியூ மெம்பருக்குக் கிடைத்ததும், அவற்றை சம்பந்தப்பட்ட தோட்ட முதலாளிகளுக்கும் சர்க்கார் அதிகாரிகளுக்கும் அவர் அனுப்பி, அதில் கூறப்பட்டிருக்கும் புகார்களைக் குறித்து அவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்படிக் கேட்டிருந்தார். அவர்களுடைய பதில்களுக்காக சர்க்கார் காத்துக் கொண்டிருந்த சமயத்தில் மகாத்மா காந்தி சம்பரான் முழுவதிலும் சுற்றுப் பிரயாணம் செய்து, தோட்ட முதலாளிகளைச் சந்தித்து, அவர்கள் கூற விரும்பியதையெல்லாம் கேட்டுக் கொண்டதோடு தமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட குறிப்பிட்ட விஷயங்களில் நேரில் விசாரித்தும் வந்தார். சில சமயங்களில் இந்த விசாரணைகளை நடத்த எங்களை அனுப்புவதும் உண்டு. மகாத்மாவின் விசாரணையால் கிடைக்கப் போகும் கஷ்ட நிவாரணம், இது வரையில் எங்களிடம் வாக்குமூலம் கொடுக்காதவர்

களுக்குக் கிடைக்காமற் போய்விடும் என்ற பயம், எங்களிடம் வாக்குமூலம் கொடுக்காத விவசாயிகளுக்கு இருந்ததால், அவர்களிடமும் வாக்குமூலங்களை வாங்கிக் கொண்டிருந்தோம். எங்கள் காரியத்திற்குப் போதுமான வாக்குமூலங்கள் எங்களிடமிருந்ததால் உண்மையில் மேற்கொண்டும் வாக்குமூலங்களுக்கு அவசியமில்லை. ஆனால் தங்களிடமும் வாக்குமூலம் வாங்க வேண்டும் என்று எங்களை நாடி வரும் ஆயிரக் கணக்கானவர்களை நாங்கள் சும்மா போகச் சொல்லிவிட முடியாது. எனவே எங்களுக்கு ஓய்வின்றி முழு வேலையும் இருந்து வந்தது.

நாளா வட்டத்தில் சர்க்கார் அதிகாரிகளும், தோட்ட முதலாளிகளும் தங்கள் அறிக்கைகளை சர்க்காருக்கு அனுப்பினார்கள். இந்த பதில்களின் நகல்களை, அக்காரியாலயங்களில் வேலை செய்த சிலர் எங்களிடம் கொண்டு வந்தார்கள். இந்த பதில்களின் தன்மை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எங்களுக்கு இருந்தது. ஆனால் இதற்கு இச்சந்தர்ப்பத்தை நாங்கள் பயன்படுத்திக் கொண்டுவிட முடியாது. ஏனெனில் நான் முன்னடியே சொன்னது போல, இப்படிச் செய்வதற்கு மகாத்மா விரோதமாயிருந்தார். என்றாலும் இவ்விஷயத்தை மகாத்மாவிடம் சொன்னோம். இந்த பதில்களை நாளாவட்டத்தில் சர்க்காரே நமக்கு அனுப்பப் போவதால் இச்சமயத்தில் அவற்றைப் பார்ப்பது என்பது அனாவசியமான பாபம் என்று அவர் கூறினார். சர்க்கார் நமக்கு அவைகளை அனுப்பாமல் போனால்கூட, அவற்றை ரகசியமான முறையிலும், தவறான வழிகளிலும் பார்ப்பதென்பது சரியல்ல என்றும் அவர் சொன்னார்.

அவுரி சாகுபடி செய்யும்படித் தாங்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்; இதனால் தங்களுக்கு நஷ்டமுண்டாகிறது என்பது விவசாயிகளின் முக்கியமான குறை. யாராவது அவுரி சாகுபடி செய்ய மறுத்தாலோ அல்லது தோட்ட முதலாளிகளின் விருப்பத்திற்கு எதிராக நடக்கும் துணிவுகொண்டு விட்டாலோ அவர்கள் கடுமையாக நடத்தப்படுகிறார்கள். அவுரியிலிருந்து பல வகையான சாயங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆகையால் அது சிறந்த பயிர். அவுரிச் செடியின் தழையும் தண்டும் கொஞ்ச காலம் ஊற வைக்கப்பட்டு அறைக்கப்படுகிறது. பிறகு அந்த நீர் சட்டியில் வைத்துக் காய்ச்சப்படுகிறது; நீர் சுண்டியதும் சாயத்துக்கு வேண்டிய சரக்கு கிடைக்கிறது. இது முற்றுப்பெற வயல்களிலும் தொழிற்சாலைகளிலும் அனேகர் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியதாகிறது.

சில இடங்களில், தோட்ட முதலாளிகள், சாதாரண விவசாயிகளைப்போல நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நிலத்தை குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருந்தனர். மற்ற இடங்களிலோ, நிலச் சொந்தக்காரர்களுக்கு விவசாயிகள் கொடுத்து வந்த குத்தகைத் தொகையை தோட்ட முதலாளிகள் கொடுத்துவிட்டு கிராமம் முழுவதையுமே விவசாயத்திற்கு எடுத்துக் கொண்டிருந்தனர். இவ்விதம் எடுத்துக்கொள்ளும் கிராமங்களின் நிர்வாகப் பொறுப்பு முழுதும் இந்தத் தோட்ட முதலாளிகளுக்கே என்பது நிபந்தனை. இவ்விதம் கிராமங்களில் தரிசாகக் கிடக்கும் நிலங்களின் மீதும் இந்த முதலாளிகளுக்கு உரிமை வந்துவிடுவதோடு கிராம விவசாயிகள் பேரில் ஜமீன்தார்களுக்கு இருக்கும் உரிமைகள்கூட தோட்ட முதலாளிகளுக்கு இவ்விதம் வந்துவிடுகிறது. ஜமீந்தார்களுக்கு இது சுகம். பல விவசாயிகளிடமிருந்து பகுதிப் பணம் வசூலிக்க வேண்டிய அவதி அவர்களுக்கு இல்லை. ஒருவரிடமிருந்து மொத்தமாக ஜமீன்தார்கள் தங்களுக்குரிய

தொகையை வாங்கிக்கொண்டு விடுகிருர்கள். ஜமீன்தார்களுக்கு இந்த வசதியிருந்தும் சாதாரணமாக அவர்கள் மொத்தமாக கிராமங்களைக் குத்தகைக்குக் கொடுத்துவிட விரும்புவதில்லை. ஏனெனில் அவ்விதம் செய்வதால் தரிசு நிலங்களின்பேரில் தங்களுக்குள்ள உரிமை போய் விடுவதோடு மற்றுஞ் சில உரிமைகளையும் அவர்கள் இழந்துவிட நேருகிறது. ஆனுல், ஜமீன்தார்கள் கிராமங்களை மொத்தமாகத் தங்களுக்குக் குத்தகைக்கு விடும்படிச் செய்வதற்கு, போலிஸையும் சர்க்கார் அதிகாரிகளையும் கொண்டு அவர்களை தோட்ட முதலாளிகள் வற்புறுத்துவார்கள். ஒரு கிராமம் பல ஜமீன்தார்களுக்குச் சொந்தமானதாக இருந்தால் போதும். முதலில் ஒருவரிடமிருந்து நிலத்தைக் குத்தகைக்கு வாங்கி விடுவார்கள். பிறகு மற்றவர்கள் மீது எல்லாவிதமான நிர்ப்பந்தங்களையும் கொண்டு வந்துவிடுவார்கள். அவர்களை வழக்குகளில் இழுத்து விட்டுவிடுவர். கிராமத்தில் தங்களிடமிருக்கும் பகுதிகளைத் தோட்ட முதலாளிகளிடம் ஒப்படைத்து விடும்படிச் செய்வதற்கு அந்த ஜமீன்தார்களுக்கு விரோதமாகக் கலகங்களையும் தூண்டி விடுவார்கள். நூறு வருஷங்களுக்கும் அதிகமாகவே இம் முறை பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. இதன் பலனுக இந்த ஜில்லா முழுவதுமே குத்தகைக்கு என்றே அல்லது வேறு வகையிலோ, தோட்ட முதலாளிகளின் கைக்கு வந்து விட்டது; ஜில்லாவை இவர்கள் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டனர். அங்கு 70 தொழிற்சாலைகள் வரை இருந்தன. ஒவ்வொன்றின் ஆதிக்கத்திலும் ஒரு பிராந்தியத்தின் நிலங்களிருந்தன. மொகலாயர்கள், ஹிந்து ராஜாக்கள் காலத்திலிருந்து ஒரு ஜில்லாவை நிர்வாக வசதிக்காகப் பல பகுதிகளாகப் பிரித்துவிடும் வழக்கம் நீண்ட காலமாகவே பீகாரில் இருந்து வந்தது. அங்கு மிங்குமாக சில சிறு மாற்றங்களுடன் பிரிட்டிஷாரும் அதே முறையையே மேற்கொண்டனர். பிறகு பீகாரிலும் வங்காளத்திலும், ஒரு ஜில்லாவை சப்-டிவிஷன் என்றும், போலிஸ் சரகம் என்றும் பிரித்தார்கள். எனவே சர்க்கார் தஸ்தாவேஜிகளில் ஒரு கிராமத்திற்கு அதன் பெயருடன், அது இன்ன பர்கான, இன்ன போலீஸ் சரகம், இன்ன

சப்-டிவிஷன், இன்ன ஜில்லாவைச் சேர்ந்தது என்றும் குறிப்பிடப்பட்டு வந்தது. சம்பரானிலோ, ஒரு கிராமம், இன்ன சாயத் தொழிற்சாலைச் சரகத்தைச் சேர்ந்தது என்றும் வழங்கப்பட்டு வந்தது.

சம்பரானின் கிராமங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு விடுவதில் தோட்ட முதலாளிகளுக்கு ஒரு வசதி இருந்தது. அங்கு பெட்டியா ராஜ் என்பது பெரிய ஜமீன். ஜில்லாவின் மூன்றிலிரு பகுதி கிராமங்களுக்கு அதிகமாகவே அந்த ஜமீனுக்குச் சொந்தம். ராம்நகர் ராஜ் என்ற மற்றொரு ஜமீனுக்கும் அநேக கிராமங்கள் சொந்தம். இந்த ஜில்லாவில் காலவாசிக்கும் குறைவான கிராமங்களே மற்றவர்களுக்குச் சொந்தமாயிருந்தது. ஆகையால் தோட்ட முதலாளிகள் இவ்விரு ஜமீன் கிராமங்களையெல்லாம் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு விட்ட பிறகு அந்த ஜில்லாவே அவர்கள் கைக்கு வந்ததாகிவிட்டது. கொஞ்ச நிலம் வைத்திருந்தவர்களோ, சிலர் பயத்தினாலோ, வேறு சிலர் தங்கள் நிலங்களைத் தாங்களே நிர்வகிக்க முடியாத சோம்பேறிகளாயிருந்ததினாலோ, அல்லது நிர்வகிக்கும் சக்தியில்லாதிருந்ததினாலோ, தங்களுடைய கிராமங்களையெல்லாம் தோட்ட முதலாளிகளிடம் குத்தகைக்கு விட்டுவிட்டனர்.

தோட்ட முதலாளிகள் அவுரி பயிரிட்டார்கள். இதற்கென்று சொந்தமாக உழவு மாடுகள், கலப்பை முதலியவைகளை வாங்கினர். தரிசாகக் கிடந்த நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வந்தனர். விவசாயிகளுக்குச் சொந்தமாயிருந்த நிலங்களையும் நிர்ப்பந்தப்படுத்தி எடுத்துக்கொள்ளுவதற்கு எல்லா வகையான முறைகளும் கையாளப்பட்டன. கட்டாயப்படுத்தி வேலை வாங்கினார்கள். மிகக் குறைவாகக் கூலி கொடுத்தனர். அந்தக் காலத்தில் சம்பரானில் ஜனத் தொகை குறைவு. அங்குள்ளவர்களெல்லோரும் தங்கள் நிலங்களில் சாகுபடி செய்து வந்ததால் அங்கே வேலையில்லாத தொல்லை கிடையாது. தாங்களில்லாததால் தங்கள் சொந்த நிலம் பாழானாலும், விவசாயிகள் அவுரித் தோட்டங்களில் கட்டாயம் வேலை செய்தே ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டனர். அங்கு

இவர்களுக்குக் கிடைத்தது மிகக் குறைந்த கூலியேயாகை யால் தங்களுக்குள்ள மற்ற சொற்ப வசதிகளைக்கொண்டு ஒருவாறு வாழ்ந்து வந்தார்கள். இதைக் கொண்டும் திருப்தி யடையாத தோட்ட முதலாளிகள், ஒவ்வொரு விவசாயி யும் தனக்கிருக்கும் நிலத்தில் கால் பகுதியில் அவுரி பயிரிட்டாகவேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். இன்ன பகுதியில்தான் அவுரி பயிரிடவேண்டும் என்று தோட்ட முதலாளிகளின் ஏஜண்டுகள் குறிப்பிடுவார்கள், அதில் விவசாயிகள் தங்கள் மாடுகளைக் கொண்டே உழுது தாங்களே சாகுபடியும் செய்யவேண்டும். இதற்குக் கூலி கிடையாது. இவ்விதம் அவுரி சாகுபடி செய்வதற்கும் செலவுகளை அவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும். பயிர் வளர்ந்து தயாரானதும் அதை வெட்டி அவர்களே தொழிற் சாலைகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். இதற் காக ஒவ்வொரு விவசாயிக்கும் ஏக்கருக்கு இவ்வளவு என்று பணம் கொடுப்பார்கள். ஆனால் இத்தொகை மிகவும் குறைவானதாகையால் சாகுபடிக்குச் செய்த செலவுக்குக்கூட அது சரி போகாது.

தன்னிடமிருக்கும் நிலத்தில் ஒரு விவசாயி இன்ன தைத்தான் சாகுபடி செய்யவேண்டும் என்று வற்புறுத்த நிலச்சுவானுக்குக் குத்தகைச் சட்டம் அதிகாரமளிக்கிறது. ஆனால் விவசாயி, ஜமீன்தாருக்கு இதற்காக நஷ்டஈடு கொடுத்தால், இந்தக் கட்டாயத்திலிருந்து தன்னை விடுவித் துக்கொள்ளலாம்; இந்த நஷ்டஈடு மொத்தத் தொகையாகவு மிருக்கலாம். அல்லது விவசாயி வருடந்தோறும் கொடுக்கும் குத்தகைத் தொகையில் அதிகரித்துக் கொடுப்பதாயும் இருக்கலாம். மேலும் அவுரி பயிரிடப்படும் தங்கள் நிலத் திற்கும் குத்தகைத் தொகை செலுத்தும்படி விவசாயிகள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இதன் பலனாக அவர் களுக்கு நஷ்டஈடாகக்கிடைத்த தொகையையும் குத்தகைத் தொகை விழுங்கிவிட்டது. இவை மிகவும் அக்கிரமமான நிபந்தனைகள். நிலைமை தாங்க முடியாததாகிவிடும் போது விவசாயிகள் கிளர்ச்சி செய்வார்கள். கலகஞ் செய்வது முண்டு. அப்பொழுது அவர்களுக்குக் கொஞ்சம் நிவாரணம் ஏற்படும். ஒரு பெரிய கலகம் நடந்ததின் விளைவாக, அவுரி சாகுபடியாகும் நிலங்களுக்கு விவசாயிகளிடமிருந்து

குத்தகைப் பணம் வாங்கக்கூடாது என்று சர்க்கார் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. மற்ருேர் கலகம் நடந்ததின் பலனுக, விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் நஷ்டஈடுத் தொகையில் ஏக்கருக்குச் சில அணுக்கள் உயர்ந்தது. இவ்விதம் கிளர்ச்சி செய்வதன் மூலம் தங்களுக்குக் கிடைக்கும் இச்சிறு நிவாரணங்களைக்கொண்டு விவசாயிகள் திருப்தியடையவில்லை.

இந்தச் சமயத்தில் ஜெர்மானியர், செயற்கை முறையில் சாயங்களைத் தயாரிக்க ஆரம்பித்துவிட்டனர். இதனுல் அவுரிச்சாயம் அதன் முக்கியத்தை இழந்துவிட்டது. உலக மார்க்கட்டில் சாய விலை பாதாளத்தில் விழுந்துவிட்டது. எனவே மேற்சொன்னவகையில் எவ்வளவோ அக்கிரமமாக அவுரிச் சாகுபடி நடந்தும் அவுரிச் சாயத்தொழில் வாபகரமானதாக இல்லை. என்ருலும் தோட்ட முதலாளிகள் அவுரி சாகுபடியையோ, அந்த சாயம் தயாரிப்பதையோ விட்டுவிடவில்லை. இதை அவர்கள் கைவிட்டிருந்தால் விவசாயிகளின் துயரம் தீர்ந்திருக்கும். முதலாளிகளோ வேறு முறையை மேற்கொண்டனர். ஒரு விவசாயி, இன்னது தான் பயிரிடவேண்டும் என்று நிர்ணயிக்கச் சட்டப்படி இருக்கும் விதியிலிருந்து அவன் விடுபடுவதற்கு மொத்தமாக ஒரு தொகையைச் செலுத்தவேண்டும்; அல்லது வருடக் குத்தகைத் தொகையை அதிகரித்துக் கொடுக்கவேண்டும் என்றிருக்கும் சட்டத்தைத் தோட்ட முதலாளிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். செயற்கைச் சாயம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதால் தங்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை விவசாயிகளின் தலையிலேயே இவ்விதம் தோட்ட முதலாளிகள் சுமத்திவிட்டார்கள். குத்தகைத் தொகையை அதிகரித்துக் கொடுத்துவிட்டு தனக்கு இஷ்டமானதை சாகுபடிச் செய்து கொள்ளும் உரிமையை வாங்கிக்கொள்ள எந்த விவசாயியும் விரும்பவில்லை. என்ருலும் தோட்ட முதலாளிகளோ விவசாயிகளைக் கட்டாயப்படுத்தி குத்தகை அதிகரிப்பு ஒப்பந்தமும், ரொக்கத் தொகையும் பெற்ருர்கள். தொழிற்சாலையிலேயே இந்த ஒப்பந்தங்களை ரிஜிஸ்டர் செய்வதற்கு ரிஜிஸ்டிரார் ஆபீஸ்களை வைத்துவிட்டதன் மூலம் தோட்ட முதலாளிகளுக்கு சர்க்காரும்

இதில் உதவி செய்தது. இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளவோ அல்லது ரொக்கமாகப் பணம் கொடுக்கவோ மறுக்கும் விவசாயிகள் அடிக்கப்பட்டனர். வயல்களிலிருக்கும் அவர்களுடைய பயிர்களும் சொத்துக்களும் கொள்ளை யிடப்பட்டன. அவர்கள் மீது பொய் வழக்குகளைப் போட்டார்கள். கிணறுகளில் தண்ணீர் எடுக்கவும் அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. வீட்டிற்குள் போகமுடியாதபடியும், உள்ளிருந்து வெளியே வரமுடியாதபடியும் தடுக்க வீட்டைச் சுற்றிலும் தீண்டாதாரை நிறுத்திவிடுவார்கள். அந்த விவசாயிகளின் வயல்களில் ஏராளமான மாடுகளை விட்டு மேய்த்து நாசமாக்கி விடுவார்கள். இத்தகைய விவசாயிகளின் வீட்டிற்குச் சுற்றிலுமிருக்கும் நிலங்களை உழுது சாகுபடிச் செய்துவிடுவார்கள். அவர்களின் ஆடு மாடுகள் வெளியே வந்தால் அவற்றைப் பிடித்துக் கட்டி வைத்துக் கொண்டு அபராதம் செலுத்தினால்தான் விடுவார்கள். இவ்விதம் விவசாயிகள் குத்தகைத் தொகையை அதிகரித்துத் தருவதற்கோ அல்லது ரொக்கமாகத் தொகையைத் தரும்படிச் செய்வதற்கோ எல்லாவிதமான துன்பங்களையும் இழைத்து வந்தனர். இவ்வாறு அவுரி சாகுபடி செய்யும் நிபந்தனையிலிருந்து தங்களுக்கு விடுதலையை வாங்கிக்கொள்ள, தோட்ட முதலாளிகளுக்கு சுமார் இருபத்தைந்து லட்ச ரூபாய் தரவேண்டியதானதோடு குத்தகைத் தொகை அதிகரிப்பு வகையிலும் வருஷத்திற்கு பல லட்ச ரூபாய்கள் கொடுக்க நேர்ந்தது.

இக்காரியங்களெல்லாம் அநேகமாகப் பூர்த்தியானவுடனே முதல் உலக யுத்தமும் மூண்டது. ஜெர்மன் சாயம் இறக்குமதி நின்றுவிட்டது. அவுரிச் சாயத்திற்குத் திரும்பவும் கிராக்கி வந்தது. இச்சாயத் தயாரிப்பு திரும்பவும் அதிக லாபகரமானதாக இருக்கும்போல் தோன்றியது. இதனால் தங்கள் நிலத்தில் இஷ்டப்படி எதையும் சாகுபடி செய்யலாம் என்று விவசாயிகளுக்கு அளித்திருந்த விடுதலைக்கு மாறாக விவசாயிகள் திரும்பவும் அவுரியையே சாகுபடி செய்யவேண்டும் என்று தோட்ட முதலாளிகள் கட்டாயப்படுத்தினார்கள். அவுரி சாகுபடிச் செய்யப்படாத இடங்களில் விவசாயிகளிடமிருந்து வேறு வழியில் பணம் பறிக்கத் தலைப்பட்டார்கள். அவுரி சாகுபடியிலிருந்து

விடுதலைபெற உரிமையை வாக்கிலிருந்தும், திரும்பவும் அதிகத் தொகையை இவ்வுரிமைக்காக விவசாயிகள் கொடுக்க நேர்ந்தது.

கொஞ்ச காலத்திலேயே அவுரி சாகுபடி செய்து வந்த அத்தகைய தோட்ட முதலாளி ஒருவர், தம்மிடமிருக்கும் விவசாயிகள் சந்தோஷமாக இருப்பதாகவும், அவர்களுக்குக் குறைகள் என்பதே கிடையாது என்றும் மகாத்மாவிடம் கூறினார். மகாத்மா விரும்பினால் தம் பகுதிக்கு வந்து விவசாயிகளை அவரே நேரில் விசாரித்து இதை அறிந்து கொள்ளலாம் என்றும் அவர் சொன்னார். இந்த அழைப்பை மகாத்மா ஏற்றுக்கொண்டு அங்கு போவதற்கு ஒரு நாளை யும் குறிப்பிட்டார். இந்த முதலாளியைப் பற்றி நூற்றுக் கணக்கான புகார்கள் எங்களுக்கு வந்திருந்தன. அந்த முதலாளி இருக்குமிடம் பெட்டியாவிலிருந்து சுமார் ஆறு, ஏழு மைல்களுக்கு அப்பால். அங்கு போகும் முன்பு மகாத்மா அம்முதலாளியைக் குறித்து வந்திருந்த புகார் களையும் பார்த்துக் கொண்டு புறப்பட்டார். வழக்கம் போல் அதிகாலையிலேயே மகாத்மா கால் நடையாகக் கிளம் பினார். அப்பொழுது நானும் அவருடனிருந்தேன். வழி யில் சில விவசாயிகள் எங்களைச் சந்தித்து, தாங்கள் பெரும் கஷ்டங்களில் இருப்பதாகவும், தங்களுக்குப் பெருந் தீங்குகள் விளைவிக்கப்படும் என்றும் கூறினார்கள். விசாரித்ததில் விஷயம் தெரிந்துவிட்டது. அத்தோட்ட முதலாளி, சில விவசாயிகளைப் பிடித்து, தாங்கள் சுகமாக இருப்பதாகவும், முதலாளி மிகவும் நல்லவர் என்றும் சொல்லும்படி பாடஞ் சொல்லிக் கொடுத்து வைத்திருக் கிறார் என்று சொன்னார்கள். "சுகமாக இருக்கிறார்கள் என்பது உண்மையல்லவா?" என்று மகாத்மா கேட்டார். அதெல்லாம் சுத்தப் பொய் என்று அவர்கள் கூறினார்கள். அதன் பேரில் மகாத்மா அவர்களிடம், "நீங்கள் முதலா ளிக்கு முன்னால் என்ன சொல்ல விரும்புகிறீர்களோ அதைச் சொல்லுங்கள். ஆனால் அது உண்மையாக மாத் திரம் இருக்க வேண்டும்" என்றார். அதைக் கேட்டு அவர் கள் ஆனந்தமடைந்தார்கள்.

நாங்கள் அங்கே போய்ச் சேர்ந்தபோது அங்கு பல விவசாயிகள் கூடியிருந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம்

தோட்ட முதலாளியும் வந்தார். அவருடன் பெட்டியா மாஜிஸ்டிரேட்டும் வந்தார். இதற்குள் மூன்னூறு முதல் நானூறு பேர் கூடி விட்டதோடு மேற்கொண்டும் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

தம்முடைய குடியானவர்களுக்கு எந்தவித கஷ்டங்களும் இடையாது என்றும், அங்கு கூடியிருப்பவர்களையே கேட்டு காந்திஜி தெரிந்து கொள்ளலாம் என்றும் தோட்ட முதலாளி கூறினார். பிறகு ஒரு கிழவரைப் பெயர் சொல்லி அழைத்து, காந்திஜியிடம் தாம் சொல்ல விரும்புவதைச் சொல்லும்படியும் அவரிடம் கூறினார். பிறகு அத் தோட்ட முதலாளி மகாத்மாவைப் பார்த்து, அக்கிழவர் அப்பகுதியில் மிகவும் கண்யம் வாய்ந்தவரென்றும், எல்லாருக்குமே அவரிடம் மதிப்பு அதிகமுண்டு என்றும் சொன்னார். அந்த எஜமானின் கீழ் தாங்கள் ஆனந்தமாகவே இருப்பதாக கிழவர் சொல்ல ஆரம்பிக்கவே, அங்கு கூடியிருந்த மற்றவர்களிடையே பெருங்கூச்சல் கிளம்பியது. அவர் பொய் சொல்லுகிறார் என்று மற்றவர்கள் சொன்னார்கள். "நீ கிழவன், சீக்கிரத்தில் சாகப் போகிறவன். இந்த பாபத்தையும் ஏன் தலைமீது சுமந்து கொள்ளுகிறாய்?" என்று அக்கிழவனை அவர்கள் கேட்டார்கள். இதைக் கண்டு தோட்ட முதலாளி வெட்கிப் போய் விட்டார். தம்மைப் புகழும் குடியானவர்கள் மாத்திரமே அங்கு வருவார்கள் என்று அவர் எண்ணியிருந்தார். குறைகளிருப்பவர்கள் அங்கு வரமாட்டார்கள், வந்தாலும் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லும் துணிவு அவர்களுக்கு வராது என்று நம்பியிருந்தார். உடனே மகாத்மா, அமைதியாக இருக்கும்படி மற்றவர்களைக் கேட்டுக் கொண்டார். தாம் சொல்ல விரும்புவதைக் கிழவர் முதலில் சொல்லட்டும் என்றும், மற்றவர்கள் கூறுவதைப் பிறகு கேட்டுக் கொள்ளுவதாகவும் மகாத்மா கூறினார். கிழவர் தன் கதையைத் தொடர்ந்து சொன்னார். மற்றும் சிலரும் அதே போலக் கூறினார்கள். இவர்கள் தாங்கள் கூற வேண்டியதை முடித்துக் கொண்டதும் மற்றவர்கள் தங்கள் குறைகளைக் கூறினார்கள். புது நிலம் கொடுத்திருப்பதாகக் கூறி தோட்ட முதலாளி சட்ட விரோதமாகக் குத்தகைத் தொகையை அதிகரித்து விட்டார்

என்றும், சிலருக்கு புது நிலம் கொடுத்ததே கிடையாது என்றும் அவர்கள் சொன்னார்கள். இதற்கு தோட்ட முதலாளி, அவர்கள் உண்மையைப் பேசவில்லை என்றும், அவர்களுடைய குத்தகைத் தொகையை உயர்த்துவதற்கு முன்னால் கல்கத்தாவில் பிரபல வக்கீல்களின் அபிப்பிராயத்தை அறிந்தே அவ்விதம் செய்திருப்பதாகவும் கூறினார். உண்மையில் தமது சொந்த சாகுபடியிலிருந்த நிலத்தைக் குடியானவர்களுக்குக் கொடுத்திருப்பதாகவும், அதில் தமக்கு அதிக வருமானம் வந்து கொண்டிருந்தது என்றும், அவர்கள் வற்புறுத்தியதால் கருணை உள்ளத்தோடேயே அந்நிலங்களை அவர்களுக்குக் கொடுத்ததாகவும் தோட்ட முதலாளி சாதித்தார். இதற்கு பதில் சொன்ன அக்குடியானவர்கள், தங்களுக்கு அந்த நிலம் தேவையில்லை என்றும், அதை எடுத்துக் கொண்டு அதிகக் குத்தகைத் தொகையைச் செலுத்த வேண்டும் என்பதிலிருந்து தங்களை விடுவித்தாலே போதும் என்றும் ஒருமித்துக் கூக்குரலிட்டனர். குடியானவர்களின் இந்த யோசனைப்படி நடப்பதில் என்ன ஆட்சேபனை இருக்கிறது என்று மகாத்மா கேட்டதற்கு இத்தோட்ட முதலாளி, தாம் அதற்கு சம்மதிக்க முடியாதென்று சொல்லி விட்டார். தாமும் வாழ வேண்டியிருக்கிறதே என்றார். இதற்கு மகாத்மா, "நிலத்தைக் குத்தகைக்கு விட்டதில் கிடைப்பதைவிட நீங்களே சாகுபடி செய்ததில் உங்களுக்கு அதிக வருமானம் வந்தது என்கிறீர்கள். அப்படியானால் இக்குடியானவர்கள் கேட்கிறபடிச் செய்தால் எல்லோருக்கும் சந்தோஷமாகும்; உங்களுக்கும் அதிக வருமானம் கிடைக்கும். குடியானவர்களுக்கு இருக்கும் குறையும் நீங்கும்" என்றார்.

இதற்கு தோட்ட முதலாளி சம்மதிக்க மறுத்து விட்டார். குடியானவர்களோ, தங்களுக்குப் புதிய நிலம் வேண்டாம் என்றும், அதிகரித்த குத்தகையைக் குறைக்க வேண்டும் என்றும் கூச்சலிட்டு வந்தனர். ஒரு தோட்ட முதலாளியின் கண் முன்னாலேயே தங்களுடைய குறைகளை தைரியமாக எடுத்துக் கூறி, ஒரு முதலாளியின் இஷ்டப்படிச் சொல்ல சம்பரானின் விவசாயிகள் மறுத்தது இதுவே முதல் தடவை.

அதே கூட்டத்தில் மற்றோர் கிழவர், மாஜிஸ்டிரேட் மீது தனக்குள்ள குறையையும் சொல்ல ஆரம்பித்து விட்டார். அவர் சொன்னதாவது : "ஏழைக்கு யாரும் உதவி செய்வதாகக் காணோம். இதோ மாஜிஸ்டிரேட் இருக்கிறார்; அவர் எங்களுக்கு நீதியைக்கூடச் செய்வதில்லை. தொப்பிப் போட்டவர்கள் எல்லாருமே இப்படித்தான் இருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன்னால் என் வீட்டைக் கொள்ளையடிக்கும்படி தோட்ட முதலாளி செய்து விட்டார். என் வீட்டுக் கூரைமீது படர்ந்திருந்த கறிகாய்ச் செடிகளெல்லாம் நாசமாக்கப்பட்டன. என் வயல்களில் ஆடு மாடுகளை விட்டு மேய்த்து விட்டார்கள். என் வாழைச் செடிகளெல்லாம் பிடுங்கி எறியப்பட்டன. இந்த அக்கிரமத்தின் அடையாளத்தை இப்பொழுதுகூட நீங்கள் பார்க்கலாம். இதைப்பற்றி நான் மாஜிஸ்டிரேட்டிடம் கூறியபோது அவர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததோடு பிரம்பைக் காட்டி என்னை மிரட்டினார்". இதைக் கேட்டதும் மாஜிஸ்டிரேட்டின் முகம் சிவந்து விட்டது. கிழவன் புளுகுகிறான் என்றார். உடனே அக்கிழ பிராமணன், பொய் சொல்லுவது தாம் அல்ல என்றும், மாஜிஸ்டிரேட்டுதான் புளுகுகிறார் என்றும் சொன்னார். மேற்கொண்டும் மாஜிஸ்டிரேட் எதுவும் பேசவில்லை. கோபாவேசத்துடன் தம் மோட்டாரில் ஏறிக் கொண்டு போய் விட்டார்.

புதிய நிலத்தை வைத்துக் கொள்ள விரும்பாதவர்களின் பெயர்களையெல்லாம் குறித்துக் கொள்ளும்படி மகாத்மா எங்களிடம் கூறினார். இதற்குள் அக்கூட்டம் முடிந்து தோட்ட முதலாளியும் போய் விட்டார். கொடுக்கப்பட்ட நிலத்தை திருப்பி ஒப்படைத்துவிட விவசாயிகள் பத்திரங்களைத் தயாரிக்கும்படிச் செய்வது நல்லது என்று கருதினோம். அவர்களும் சம்மதிக்கவே இதற்காக அன்று மாலை வரையில் அங்கிருந்தோம். மறுநாள், நிலங்களைத் திருப்ப ஒப்படைத்துவிடும் இந்தப் பத்திரங்களை பெட்டியாவிலிருந்து அத்தோட்ட முதலாளிக்கு அனுப்பினோம். அக்கூட்டத்திற்கு வராதவர்களும் பெட்டியாவுக்கு வந்து, நிலத்தைத் திருப்ப ஒப்படைக்கும் பத்திரங்களில் கையெழுத்திட்டனர். இதன் பலனாக தோட்ட முதலாளி

பல்லாயிரக் கணக்கில் தமது வருட வருமானத்தை இழந்தார்.

மாஜிஸ்டிரேட் சர்க்காருக்கு நீண்டதோர் அறிக்கையை அனுப்பினார். விவசாயிகளிடையே பெரும் பரபரப்பு நிலவி வருகிறது; தோட்ட முதலாளிகளிடத்திலும், சர்க்கார் அதிகாரிகளிடம் கூட, அவர்களுக்கு மதிப்பு என்பதே போய்விட்டது; பிரிட்டிஷ் ஆட்சிக்கு முடிவு காலம் வந்துவிட்டது என்ற எண்ணத்தில் அவர்களிருக்கிறார்கள்; மாஜிஸ்டிரேட் மீது காந்திஜியிடம் புகார் சொன்னால் போதும், அவர் மாஜிஸ்டிரேட்டுக்கு ஆக்ஞை பிறப்பிப்பார் என்று கருதுகிறார்கள் என்பதே மாஜிஸ்டிரேட் அறிக்கையின் சாராம்சம். அன்று அந்தக் கூட்ட சம்பவங்களையும் மற்றும் சில சம்பவங்களையும் அவர் குறிப்பிட்டிருந்தார். சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்திருந்தார்.

காந்திஜியைப் பற்றி சர்க்காருக்கு தாம் அனுப்பும் புகார்களை முதலில் காந்திஜிக்கு அனுப்பி, அதன்பேரில் அவர் கூறும் சமாதானத்தையும் சேர்த்து சர்க்காருக்கு அனுப்புவதே இந்த மாஜிஸ்டிரேட் அனுசரித்து வந்த வழக்கம். இத்தடவையும் அவ்வாறே செய்தார். மகாத்மாவுக்கு இவர் எழுதிய கடிதங்களிலிருந்து, இக்கடிதங்களை மகாத்மா மாத்திரமே பார்ப்பார், வேறு யாரும் பார்க்கமாட்டார்கள் என்ற அபிப்பிராயம் மாஜிஸ்டிரேட்டுக்கு இருந்தது என்பது தெரிந்தது. ஏனெனில் அக்கடிதங்களிலெல்லாம் "ரகசியம்" என்று மேலே குறிக்கப்பட்டிருக்கும். ஆனால் சம்பாரணைப்பற்றி சர்க்காரிடமிருந்து வந்ததாயிருந்தாலும் சரி, வேறு இடங்களிலிருந்து வந்தாலும் சரி, மகாத்மா எதையும் எங்களுக்குக் காட்டாமல் ரகசியமாய் வைத்தது கிடையாது. எனவே மாஜிஸ்டிரேட்டின் கடிதங்களையும் எங்களுக்குக் காட்டினார். "ரகசியம்" என்று குறிப்பிட்டு அனுப்பும் கடிதங்களையெல்லாம் சகாக்களுக்குக் காட்டாமலிருப்பேன் என்ற எண்ணத்திலிருக்க வேண்டாம் என்று மாஜிஸ்டிரேட்டுக்கு மகாத்மா எழுதினார். அக்கடிதங்களையெல்லாம் சகாக்களுக்குக் காட்டியிருப்பதோடு தொடர்ந்து காட்டிவரப் போவதாக

வும் அறிவித்தார். தாம் மாத்திரமே ஒரு கடிதத்தைப் பார்க்கலாம் என்று மாஜிஸ்டிரேட் கருதினால் அத்தகைய கடிதத்தை இனி தமக்கு அனுப்பவே வேண்டாம் என்றும் மகாத்மா தெரிவித்தார்.

மகாத்மா இவ்விதம் செய்தது எங்களுக்குப் பிடிக்க வில்லை. சர்க்கார் அதிகாரிகள் போக்கு எவ்விதமிருக்கிறது என்பதை "ரகசிய தஸ்தாவேஜிகள்" எங்களுக்குக் காட்டி வந்தன; அவை நின்றுவிட்டால் அதை அறியும் சந்தர்ப்பம் எங்களுக்கு இல்லாது போய்விடும் என்று நாங்கள் நினைத்தோம். எல்லா தகவல்களும் மகாத்மாவுக்கு மாத்திரமே தெரிந்திருந்தாலும் எங்களுக்குச் சரிதான். ஏனெனில் நிலைமைக்கு உகந்தது எதுவோ அதையே மகாத்மா செய்வார் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் தமது கடிதத்தை மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பியே ஆகவேண்டும் என்று மகாத்மா வற்புறுத்தினார். மாஜிஸ்டிரேட்டின் மனதிலிருக்கக்கூடிய தவறான எண்ணத்தை மாற்றவேண்டியது முக்கியம் என்றார். "எதிலும் உங்களுடைய ஆலோசனையின்றி நான் எதையும் செய்யமுடியாது. அப்படியிருக்க, எனக்கு "ரகசியம்" என்ற குறிப்புடன் வரும் கடிதங்களை நான் மாத்திரமே பார்க்கலாம் என்றால், இவற்றில் உங்களுடைய ஆலோசனையை நான் பெறுவது எப்படி?" என்றார் மகாத்மா. இதிலிருந்து சின்ன விஷயங்களில்கூட எவ்வளவு ஆழ்ந்து சிந்தித்து அவர் காரியங்களைச் செய்கிறார் என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டோம். மகாத்மாவுக்கு அனுப்பும் ரகசிய தஸ்தாவேஜிகளை நாங்களும் பார்க்கிறோம் என்பது மாஜிஸ்டிரேட்டுக்குத் தெரியாது. இவ்விதம் மாஜிஸ்டிரேட் தவறான அபிப்பிராயம் வைத்திருப்பதைப் போக்காவிட்டால் தாம் மோசம் செய்வது போலாகும் என்றும் மகாத்மா எண்ணினார். அதோடு அவர் இன்னுமொன்றும் நினைத்தார். தமக்குக் கிடைக்கும் ரகசிய தஸ்தாவேஜிகளி லடங்கியவைகளைக் கொண்டு தாம் ஏதாவது செய்யமுற்பட்டால் அதைப்பற்றி நாங்கள் அறியாமற் போவோம். என்றாலும் அவரோடு பேசியோ அல்லது வேறு வழிகளிலோ அத்தகவலை அறிய முயற்சித்து அறிந்தும் விடுவோம். இப்படி அறிந்துவிட்டோமானால் இதில் மகாத்மா தவறைச் செய்துவிட்டதாகிவிடும். இவற்றை

யெல்லாம் கருதியே அந்தக் கடிதங்கள் கிடைக்காமல் போவதே சரி என்ற முடிவுக்கு வந்துவிட்டார். மகாத்மாவின் இந்த முடிவினால் கெடுதி எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. "ரகசியம்" என்று குறிப்பிடப்பட்ட கடிதங்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தன. தாம் அனுப்பும் கடிதங்களை மகாத்மா கண்டவர்களிடமெல்லாம் காட்டிவிடக்கூடாது, பத்திரிகைகளில் பிரசுரித்துவிடக்கூடாது என்று மாத்திரமே மாஜிஸ்டிரேட் எண்ணியிருக்கக்கூடும். இதுபோன்ற சிறு காரியங்களிலிருந்தும் நாங்கள் மகாத்மாவிடமிருந்து பல பாடங்களைக் கற்றுக்கொண்டோம்.

இந்த அறிக்கையை மாஜிஸ்டிரேட் சர்க்காருக்கு அனுப்பினார். அதே சமயத்தில் தோட்ட முதலாளியோ விவசாயிகளை அடக்கி ஒடுக்கத் திட்டம் போட்டார். ஒன்றுக்கொன்று நான்கு அல்லது ஐந்து மைல் தூரத்தில் அவருக்கு இரு வீடுகளுண்டு. இதில் ஒன்றில் அவர் குடியிருந்தார். சிறியதான மற்றொன்றில் ஒரு சிறு ஆபீஸை வைத்து அதற்குச் சுற்றுப் பக்கங்களிலுள்ள நிலங்களை நிர்வகித்து வர ஏற்பாடு செய்திருந்தார். இந்த வீட்டைக் கொளுத்திவிட்டுவிடவே திட்டம் போடப்பட்டது. இப்படி வீட்டைக் கொளுத்திவிட்டு அந்தச் சாக்கில் போலீஸ், மாஜிஸ்டிரேட் உதவியைக்கொண்டு கிராமத்தையே கொள்ளையிட்டு, விவசாயிகள் மீது வழக்குத் தொடுத்து சிறைப்படுத்துவது தோட்ட முதலாளிகளுக்கு வழக்கம். இதற்காகவே இத்தீயிடும் திட்டமும். தீ வைக்கும் வேலையை ஒரு வேலைக்காரனிடம் தோட்ட முதலாளி ஒப்படைத்து, தீவைத்ததும் நேரே வந்து தம்மிடம் தகவலைக் கூறும்படியும் அறிவித்திருந்தார். தகவலுக்காகக் காத்துக்கொண்டு மற்றோர் வீட்டில் அவர் ஆவலுடனிருந்தார். செய்தி கிடைத்ததும் மாஜிஸ்டிரேட்டிடம் போய்,போலீஸ் உதவியுடன் கிராமத்தைச் சூறையாடுவது என்பது யோசனை. அந்த ஆபீஸில் ஏதோ தயாரிப்பு நடக்கிறது என்பதை விவசாயிகள் அன்று பகலில் கண்டுகொண்டனர். முதலாளியின் சொந்த சாமான்கள், தஸ்தாவேஜிகள், ஜன்னல் கண்ணாடிக் கதவுகள் ஆகியவை அகற்றப்பட்டு வேறு இடங்களுக்குக் கொண்டுபோகப்பட்டன. தங்கள் சொந்த வீடுகளை தோட்ட முதலாளிகள் எந்த விதத்தில்

கொளுத்துகிறார்கள் என்பதை விவசாயிகள் நன்கறிந்தவர்கள். ஆகவே அன்றிரவு ஏதோ நடக்கப்போகிறது என்று சந்தேகித்தனர். அப்படியே நடந்தும்விட்டது. வீட்டின் ஒரு பகுதியும் சில உதவாக்கரை காகிதங்களும் கொளுந்திப்போயின. தீயை அணைத்துவிட்டனர். உடனே அங்கிருந்து சில விவசாயிகள் பெட்டியாவுக்குப் புறப்பட்டு வந்து நடந்த விவரங்களை எங்களிடம் கூறினர். இதற்குள் பொழுதும் விடிந்துவிட்டது.

உடனே எங்களில் ஒருவரை மகாத்மா அந்த கிராமத்திற்கு அனுப்பி அங்கு நடந்தது என்ன என்பதை நன்றாக ஆராயும்படிச் செய்தார். இதற்கு மத்தியில், தீப் பிடித்த செய்தியை தனது எஜமானருக்குப் போய்ச் சொல்ல வேண்டிய வேலையாள், அன்றிரவு அவரிடம் போகவே இல்லை. ஏனெனில் தான் போய்ச் சொன்னால் என்ன நடக்கும் என்பது அந்த வேலையாளுக்குத் தெரியும். கிராமம் இரவில் கொள்ளையடிக்கப்படுவதோடு ஒரு பாபமுமறியாதவர்கள் பலர் கைது செய்யப்பட்டு அடிக்கவும் படுவார்கள். இதனால் இரவு போகாதிருந்துவிட்ட அவர், ஆபிஸுக்குத் தீ வைத்தவர் கொடுத்தக் குறிப்புடன் மறுநாள் விடியற் காலையில் எஜமானனிடம் போய்ச் சேர்ந்தார். தோட்ட முதலாளிக்குக் கடுமையான கோபம் வந்துவிட்டது. இரவே ஏன் வரவில்லை என்று கேட்டார். வேலையாள் இதற்கு சமாதானத்தையும் தயாராக வைத்திருந்தார். தான் இரவே வந்துவிட்டதாகவும், எஜமான் வீட்டு நாய்கள் உள்ளே நுழைய விடவில்லை என்றும், பயந்துகொண்டு வெளியிலேயே இரவெல்லாம் இருந்து விட்டதாகவும் கூறினார்.

போட்டிருந்த திட்டம் ஒரு வழியாகத் தவறிவிட்டது. என்றாலும் தோட்ட முதலாளி மாஜிஸ்டிரேட்டிடமும், போலீஸாரிடமும் சென்றார். ஆனால் அதன்பேரில் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளுவதற்குள் எங்கள் ஆசாமி அங்கு போய் அங்கு என்ன நடந்தது, தாம் பார்த்தது என்ன என்பவைகளைக் குறித்து முழு விவரங்களையும் மகாத்மாவுக்கு அறிவித்துவிட்டார். இதில் ஒரு வேடிக்கையான விஷயம் என்னவென்றால், தன்னுடைய

வீடு தனக்கு அதிக நஷ்டம் எதுவுமேயில்லாமல் எரிந்து போகும்படி தோட்ட முதலாளி ஏற்பாடு செய்துகொண்டதுதான். வீட்டிலிருந்த சாமான்களை யெல்லாம் அவர் முன்னடியே அப்புறப்படுத்திக் கொண்டதோடு கண்ணாடிக் கதவுகளையும் கழற்றி அப்புறப்படுத்திப் பத்திரமாக வைத்துக்கொண்டார். அப்பொழுது யுத்த காலமாக இருந்ததால் கண்ணாடி கிராக்கியாக இருந்ததே இதற்குக் காரணம். இக் கதவுகள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன என்பது இரண்டு தினங்களில் நிரூபிக்கப்பட்டுவிட்டது. நிலையில் கண்ணாடிக் கதவுகளை வைத்து மூடுக்கும் திருகு ஆணிகளை எங்கள் நண்பர் ஒரு இடத்தில் பார்த்தார்; அவற்றைத் தம்முடன் எடுத்தும் வந்துவிட்டார். அதோடு கண்ணாடிக் கதவுகள் அகற்றப்பட்ட இடத்தில், அக் கதவுகள் இணைக்கப்பட்டிருந்த இடத்தில், நிலைகளில் வர்ணம் இல்லாதிருந்ததும் நன்றாகத் தெரிந்தது.

இந்த விசாரணை அறிக்கை தமக்குக் கிடைத்ததும் இதன் நகல் ஒன்றை வைத்து மாஜிஸ்டிரேட்டுக்கு மகாத்மா எழுதினர். விவசாயிகளைக் கைது செய்து அவர்கள் மீது கிரிமினல் வழக்குகளைத் தொடர்ந்துத் துன்பப்படுத்துவதற்காக தோட்ட முதலாளிகள் அடிக்கடி தங்கள் வீடுகளுக்குத் தீயிட்டுக் கொள்ளுவது வழக்கம் என்று தாம் கேள்விப்பட்டிருப்பதாகவும், ஆனால் இதுவரை தாம் அதை நம்பியது கிடையாது என்றும் மகாத்மா தமது கடிதத்தில் கூறியிருந்தார். ஆனல் இச் சம்பவத்திற்குப் பிறகு அதன் உண்மையில் தமக்கு எந்தவித சந்தேகமும் இல்லை என்றார். தோட்ட முதலாளிகள் தம்முடைய இந்த வழக்கத்தைக் கைவிட்டு விடவேண்டும் என்றும் மகாத்மா தமது கடிதத்தில் வற்புறுத்தினர்.

இக் கடிதத்திற்குப் பிறகு மாஜிஸ்டிரேட்டும், போலிஸாரும் எதுவும் செய்ய முடியாது போயிற்று. விவசாயிகளுக்கும் எவ்வித துன்பமும் ஏற்படவில்லை.

இவர்கள் பகிரங்கமாக எதுவும் செய்ய முடியாது போனலும் ரகசியமாக சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து நடத்திக்கொண்டு வந்தார்கள் என்று தோன்றியது.

ஏனெனில் சில தினங்களுக்கெல்லாம் ராஞ்சியிலிருந்து மகாத்மாவுக்கு ஒரு கடிதம் வந்தது. காந்திஜி வந்த பிறகு சம்பாரான் விவசாயிகளிடையே அதிகப் பரபரப்பு ஏற்பட்டுவிட்டதால் அவர் தொடர்ந்து அங்கு இருந்து வருவது விரும்பத்தக்கதல்ல என்று அதில் கூறப்பட்டிருந்தது. மேலும் மகாத்மா தமது விசாரணையை முடித்துக்கொண்டு சர்க்காருக்கு அறிக்கையையும் சமர்ப்பித்து, அந்த அறிக்கையும் சர்க்காரின் ஆலோசனையிலிருந்து வருவதால், மேற்கொண்டும் அவர் அங்கு இருப்பதற்கு அவசியமும் இல்லை. ஆகையால் அவரை ஜில்லாவிலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவதற்கு முன்னால் லெப்டினெண்டு கவர்வர் அவரைப் பார்க்க விரும்புவதாகவும் கடிதம் கூறியது.

இவ்விதம் மகாத்மா ராஞ்சிக்கு அழைக்கப்பட்டார். மேற்கொண்டும் எங்களுடன் அதிக நாட்கள் இருக்க அவரை அனுமதிக்கப் போவதில்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம். ஒருவேளை அவர் ராஞ்சியிலேயே வைக்கப்பட்டு விடலாம்; அவர் சம்பாரானுக்கே திரும்பினாலும் அங்கு தங்க அவர் அனுமதிக்கப்படமாட்டார். ஆகவே காந்திஜி சம்பாரானுக்கு வந்தபோது ஏற்பட்ட அதே நிலைமை திரும்பவும் எங்களுக்கு ஏற்பட்டது. சென்ற சில மாதங்களாக நாங்கள் அவருடனிருந்தது, நாங்கள் சேர்ந்திருந்து வேலை செய்தது, தென்னாப்பிரிக்காவில் அவர் இருந்தபோது நடந்த விவரங்களைப் பற்றி அவர் எங்களிடம் சொன்னது ஆகியவைகளால், அவர் எந்த முறையில் வேலை செய்து வருகிறார் என்பதை நாங்கள் அறிந்துகொள்ள முடிந்தது. ஆகையால் எந்த நிலைமையையும் சமாளித்துக் கொள்ள நாங்கள் தயாராயிருந்ததோடு என்னவானாலும் நாங்கள் செய்து வந்த வேலைகளை நிறுத்துவதில்லை என்ற முடிவிலுமிருந்தோம். அதோடு எங்களிடம் ஏராளமான சாட்சியங்களிருந்ததால் விவசாயிகளின் குறைகளை நீக்குவதற்கு சர்க்கார் எதுவும் செய்யாமலிருந்துவிட முடியாது என்றும் மகாத்மா எங்களிடம் கூறியிருந்தார். எங்களெல்லோரையும் சிறைக்கு அனுப்பிவிட்டாலுங்கூட இப்பிரச்னையில் ஒரு சமரசம் ஏற்பட எங்களுடன் சமாதானம் பேசியே ஆகவேண்டும்.

நாங்கள் வாங்கிய வாக்குமூலங்களுக்கு டைப் அடித்த நகல்கள் பல தயாரித்திருந்தோம் என்பதை முன்னுலேயே கூறியிருக்கிறேன். எங்களிடமிருந்தவை நாசமாகிவிட்டாலோ அல்லது அவற்றை சர்க்கார் கைப்பற்றிக்கொண்டாலோ, அவைகளின் பிரதிகள் பிறகும் இருக்கவேண்டும் என்பதற்காக இந்த நகல்களில் சிலவற்றை மோதிகரியிலும் பெட்டியாவிலும், மீதமிருந்ததை வேறு இடங்களிலும் பத்திரப்படுத்தி வைத்திருந்தோம். இதெல்லாம் அனுவசியமான ஏற்பாடுகள் என்றும், அதிக உஷாராயிருக்க நாங்கள் விரும்பினுல் அதில் தவறு இல்லை என்றும் மகாத்மா சொன்னுர்.

எங்களை இரு கோஷ்டிகளாகப் பிரித்துக்கொண்டோம். ஒன்று மோதிகரியிலும் மற்றொன்று பெட்டியாவிலுமிருப்பது. நான் பெட்டியாவிலிருந்தேன். பாபு பிராஜ்கிஷோர் மகாத்மாவுடன் ராஞ்சிக்குச் சென்றுர். லெப்டினெண்டு கவர்னரை மகாத்மா சந்தித்துப் பேசியதும் அதன் முடிவை அவசரத் தந்தி மூலம் எங்களுக்கு அறிவிப்பது என்றும் ஏற்பாடு செய்திருந்தோம். இந்த சந்திப்பு காலை 10 அல்லது 11 மணிக்கு என்று குறிக்கப்பட்டிருந்தது. இப் பேச்சு ஒரு மணி நேரம் நடந்தாலும் பகல் 1 மணிக்குத் தந்தி கொடுத்தால் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் கழித்து எங்களுக்குக் கிடைத்துவிடும் என்றும் எண்ணினேம்.

இதன்படி தந்திக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். உள்ளூர் அதிகாரிகளின் போக்கில் சில மாறுதல்களிருந்ததையும் கவனித்தோம். மகாத்மா அங்கிருந்து அப்புறப்படுத்தப்படுவார் என்று அவர்கள் எண்ணியிருக்கக்கூடும். ராஞ்சியில் மகாத்மா தங்கியிருந்த இடத்திலேயே பாபு பிராஜ்கிஷோரை விட்டுவிட்டு தாம் மாத்திரமே லெப். கவர்னரைப் பார்க்கச் சென்றுர். பேச்சு நீண்ட நேரம் நடந்தது. மாலை 4 மணிக்குக்கூட மகாத்மா திரும்பி வரவில்லை. சர்க்கார் மாளிகையிலிருந்தபடியே எங்கோ மகாத்மாவைக் கொண்டுபோய் விட்டார்களோ என்றுகூட பாபு பிராஜ்கிஷோர் சந்தேகப்பட்டார். இதே சிந்தனையில் அவர் அதிக ஆவலுடனிருந்தார். ஒன்று மகாத்மா

திரும்பி வருவார், அல்லது அவரைப்பற்றி யாராவது செய்தியையாவது கொண்டு வருவார்கள் என்பதற்காக, மகாத்மா சர்க்கார் மாளிகைக்குச் சென்ற வழி மீது கண் வைத்த வண்ணமே அவர் இருந்தார். மாலை 5 மணிக்கு மகாத்மா திரும்பினார். லெப். கவர்னருடன் மறுநாளும் பேச்சு தொடர்ந்து நடக்கும் என்றார். மகாத்மா இதை எங்களுக்குத் தந்தி மூலம் அறிவித்தார். ஆனால் தந்தி அன்று எங்களுக்கு கிடைக்காமல் மறுநாள் காலை 9 மணிக்கே கிடைத்தது. அதுவரையில் நாங்கள் இருந்த இடத்தைவிட்டு அசையாமல் அதிக ஆவலுடனிருந்து வந்தோம். "தூதுவர் திரும்புவதற்குத் தாமதமாகிற தென்றால் காரியம் வெற்றி என்றே பொருள்" என்ற பழைய வசனத்தில் நம்பிக்கையும் கொண்டிருந்தோம்.

மகாத்மா ராஞ்சியில் மூன்று, நான்கு நாட்களிருந்தார். பல அதிகாரிகளையும் சந்தித்தார். மகாத்மா சொன்னவைகளைக் கேட்டு லெப். கவர்னருக்கு விஷயம் நன்றாகப் புரிந்துவிட்டது. இதில் ஏதாவது செய்தேயாக வேண்டும் என்ற முடிவுக்கும் அவர் வந்துவிட்டார். எனவே சர்க்கார் நிர்வாகக் கவுன்ஸில் மெம்பர்களையும் சந்தித்து அவர்களுக்கும் நிலைமையை விளக்கும்படி மகாத்மாவை அவர் கேட்டுக்கொண்டார். அதன்பேரில் விவசாயிகளின் குறைகளைப்பற்றி விசாரித்து, அக் குறைகளை எப்படி நீக்குவது என்பதற்கு யோசனைகளைக் கூற ஒரு கமிஷனை நியமிப்பது என்று கடைசியாக முடிவு செய்யப்பட்டது.

அந்தக் கமிஷனில் மகாத்மாவும் இருக்கவேண்டும் என்று லெப். கவர்னர் சர் எட்வர்டு கேட் கேட்டுக் கொண்டார். இக் கமிஷனில் சர்க்கார் அதிகாரிகள், தோட்ட முதலாளிகள், ஜமீன்தார்களின் பிரதிநிதிகள் ஆகியவர்களிருப்பார்கள். இதிலிருந்த சர்க்கார் அதிகாரிகள் இந்திய சிவில் சர்வீஸ் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இப் பிரச்னையில் அனுபவமுள்ளவர்களும், சட்ட நுணுக்கம் தெரிந்தவர்களுமே நியமிக்கப்பட்டனர். விவசாயிகளின் ஏகப்பிரதிநிதியாக மகாத்மா அதிலிருந்தார். விவசாயிகளின் சார்பில் சாட்சிகளை கமிஷன் முன்பு

சமர்ப்பிக்க தாம் விரும்புவதால் கமிஷனில் தாமும் மெம்ப ராகிவிட்டால் அது முடியாது போய்விடும் என்று லெப். கவர்னரிடம் கூறினர். இதற்கு லெப். கவர்னர், என் னென்ன சாட்சியங்களிருக்கின்றனவோ அவற்றை கமி ஷன் முன்பு மகாத்மாவே தெரிவிக்கலாம், தெரிவிக்கவும் வேண்டும் என்றார். அதோடு, பல வருஷங்களாக விவ சாயிகளிடமிருந்து புகார்கள் வந்து குவிந்த வண்ணமா யிருப்பதாகவும், அரசாங்க அதிகாரிகள் அப்போதைக் கப்போது சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்றும் சொன் னார். சர்க்காரிடமிருக்கும் இத் தகவல்கள் ரகசியமானவை யெனினும் இவைகளும் கமிஷன் முன்பு வைக்கப்படும் என்றார். இவற்றை கமிஷனின் மெம்பர்களைத் தவிர வேறு யாரும் பார்க்க முடியாது என்றும், காந்திஜியும் ஒரு மெம்பராகிவிட்டால் அவற்றைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைப்பதோடு இதில் தாம் கொண்டுள்ள முடிவை சர்க் கார் அதிகாரிகளும் எவ்வளவு தூரம் ஆதரித்திருக்கிறார் கள் என்பதை அறிந்துகொள்ளவும் மகாத்மாவுக்கு இய லும் என்றார் லெப். கவர்னர். ராஞ்சியிலிருந்து மகாத்மா புறப்படுவதற்கு முன்னால் இன்னுமொன்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இவ்விதம் செய்திருக்கும் முடிவுகள் ரகசியமானவை, இவற்றை சர்க்காரே சீக்கிரத்தில் வெளி யிடுவது என்பதே அது. ஆகையால் சர்க்கார் அதிகாரி களுக்கும் தமக்குமிடையே முடிவானது என்ன என்ப தைக் குறித்து மகாத்மா பத்திரிகை நிருபர்களிடமோ, அல்லது வெளியாரிடமோ எதுவுமே சொல்லவில்லை.

ஆனால் மறுநாள் காலை பாட்னாவுக்கு வந்தபோது, ஒரு கமிஷனை நியமிக்கப்போகிறார்கள் என்பதைக் குறித்து அரைகுறையான செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகி யிருந்ததை மகாத்மா பார்த்தார். உடனே லெப். கவர்ன ருக்குத் தந்தி கொடுத்தார். தாம் எந்த தகவலையும் வெளி யிடாதிருக்கும்போது பத்திரிகைகளில் செய்தி வெளியாகி யிருப்பதைக்குறித்து தாம் ஆச்சரியப்படுவதாக அத்தந்தி மூலம் அறிவித்தார். கமிஷனில் நியமிக்கப்படும் மெம்பர் களின் சம்மதத்தையும் முன்கூட்டியே பெறவேண்டியிருந் ததால் கமிஷன் நியமனச் செய்தியை சர்க்கார் வெளியிட

இரண்டு மூன்று நாட்களாயின. இச்செய்தி மகாத்மாவிட மிருந்தே வெளிப்பட்டிருக்க வேண்டுமென்று சர்க்கார் எண்ணியிருக்காது. ஏனெனில் பல ரகசிய முடிவுகள் சர்க்கார் காரியாலயங்களிலிருந்தே வெளிப்பட்டு விடுகின்றன. பொதுஜன அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டு மென்றே அவை வெளிவந்துவிடும்படிச் செய்யப்படு கின்றன என்பது தெரிந்த சங்கதி. இச்செய்தி பத்திரிகை நிருபர்களுக்கு எப்படிக் கிடைத்தது என்பது எங்களுக்கும் தெரியாது.

மகாத்மா, இச்செய்தி வெளியான பத்திரிகைகளுடன் பெட்டியாவுக்கு வந்து சேர்ந்தார். இச்செய்தி ஆதார மற்றது என்றும், சர்க்காரே இதை வெளியிடும் வரையில் இதைப்பற்றி நாங்கள் யாருடனும் பேசக்கூடாது என்றும் மகாத்மா எங்களை எச்சரிக்கை செய்தார். பிறகு மகாத்மா, மாஜிஸ்டிரேட்டைப் பார்க்கப்போனபோது இவரைப் பார்த்ததும் அந்த மாஜிஸ்டிரேட் திகைத்துப்போனார். ஏனெனில் சம்பாரானில் இருக்க மகாத்மா அனுமதிக்கப்பட மாட்டார் என்றே அவர் நம்பியிருந்தார். மகாத்மா இந்த ஜில்லாவுக்குத் திரும்பி வந்துவிட்டதோடு தம்மையும் ஒரு மெம்பராகக்கொண்ட விசாரணைக் கமிஷன் ஒன்றை அரசாங்கம் நியமிக்கும்படியும் செய்துவிட்டார். சில தினங்களுக்கெல்லாம் சர்க்கார் அறிக்கை வெளியானதும் விவசாயிகள் குதூகலமடைந்தார்கள். ஆனால் எதிர் முகாமிலோ கவலை நிலவியது.

கமிஷன் ஒன்றரை மாத காலத்தில் விசாரணையை ஆரம்பிக்கவிருந்தது. ஆகவே மேற்கொண்டும் நாங்கள் வாக்குமூலங்களை வாங்கவோ அல்லது சாட்சியங்களைத் திரட்டவோ வேண்டியதில்லாது போயிற்று. சாட்சியங்களை கமிஷன் முன்பு சுருக்கமாகச் சமர்ப்பிப்பதற்காக அவற்றை வரிசைப்படுத்திக் குறிப்பெடுத்து வந்தோம். எங்களுடைய சட்ட ஞானத்தைப் பயன்படுத்திக்கொண்டு, எங்களிட மிருந்த ஏராளமான சாட்சியங்களில் அதிக மோசமானவை களாக இருந்தவைகளைத் தனியாகப் பொறுக்கி யெடுத்தோம். கமிஷன் முன்பு நேரில் சாட்சிகளாக நிறுத்துவதற்கு ஏற்ற விவசாயிகளைத் தேர்ந்தெடுக்கும்படியும் மகாத்மா

எங்களிடம் கூறினர். சில தினங்களுக்குப் பிறகு சர்க்காரிடமிருந்து ரகசிய தஸ்தாவேஜிகளடங்கிய பார்சல் ஒன்றும் வந்தது. மகாத்மாவும் நாங்களும் அவற்றை நுட்பமாகப் பரிசீலனை செய்தோம். இவற்றைப் பார்த்த பிறகு மகாத்மா, "விவசாயிகளின் புகார்கள் உண்மையானவை என்று சர்க்கார் அதிகாரிகளே அப்போதைக்கப்போது ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கமிஷன் விரும்பினால் இந்த அடிப்படையிலேயே தன்னுடைய அறிக்கையைத் தயாரித்துவிடலாம். ஆகையால் நமது சாட்சியங்களை கமிஷன் முன்பு விடுவதற்கு விசேஷமான அவசியம் ஏதுவுமில்லை" என்றார். என்றாலும் அவசியமானால் சமர்ப்பிப்பதற்கு வேண்டிய சாட்சியங்களை கமிஷன் கோரும்வரையில் நாங்கள் ஒழுங்குபடுத்திக் குறிப்புகள் தயாரித்துக் கொண்டிருந்தோம்.

கண்ட பெரும் வெற்றி

ராஞ்சியிலிருந்து மகாத்மா பெட்டியாவுக்குத் திரும்பியதும் கஸ்தூரிபாய் காந்தி, தேவதாஸ் காந்தி, பிரபுதாஸ் காந்தி ஆகியவர்களும் வந்து சேர்ந்தனர். நான் ஓரிடத்தில் முன்னாடியே கூறியிருப்பது போல, அவர்கள் வந்ததும் சமையற்காரனை அனுப்பிவிட்டோம். இது எங்களுக்கு விருப்பமில்லை. என்றாலும் இதில் நாங்கள் எதுவும் செய்யவும் முடியவில்லை. விறகிலோ சீக்கிரத்தில் நெருப்பு பற்றாது. எங்கும் ஓரே புகையாகிவிடும். இதனால் கஸ்தூரிபாயின் கண்கள் சிவந்து தண்ணீரும் வடியும். இதையெல்லாம் பார்க்க எங்களுக்கு வேதனையாகவே இருந்தது. எங்களுடைய ஆட்சேபங்களையெல்லாம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். மகாத்மா அவற்றை ஏற்றுக்கொள்ளுவதில்லை. "கஸ்தூரிபாய்க்கு சமைத்துப் பழக்கமுண்டு. நாம் சமூக சேவையில் ஈடுபட்டிருக்கும்போது நாம் எவ்வளவு குறைவாகச் செலவிட்டுக்கொள்ள முடியுமோ அவ்வளவும் குறைத்துச் செலவிடவேண்டும். இந்த நிலைமையில் ஒரு வேலைக்காரன், ஒரு சமையற்காரன் செலவையாவது நாம் மீதப்படுத்தலாம்" என்று மகாத்மா சமாதானம் சொல்லிவிட்டார். பொதுப் பணத்தைச் செலவிடுவதில் மகாத்மா அதிக உஷாராயிருக்கிறார்; ஒவ்வொரு காலணாவையும் மீதப்படுத்துவதிலேயே கருத்துடனிருக்கிறார் என்பதை நாங்கள் உடனே கண்டுகொண்டோம். ஒரு சிறு துண்டுக் காகிதத்தைக்கூட வீணாக்க அவர் விரும்புவதில்லை. அவர் எழுதிய சக்தி வாய்ந்த பல கட்டுரைகள், காங்கிரசுக்கும், அவர் சம்பந்தப்பட்டிருந்த மற்றும் பல ஸ்தாபனங்களுக்கும் அவர் தயாரித்த அனேக முக்கியமான தீர்மானங்கள் ஆகியவையெல்லாம், சாதாரணமாக மற்றவர்கள் குப்பைத் தொட்டியில் எறிந்துவிடக்கூடிய துண்டுக் காகிதங்களிலேயே எழுதப்பட்டு தயாராயின என்பது ஒருவேளை பொது மக்களுக்குத் தெரியாமலிருக்கலாம். வரும் தபாலுறை

களின் உள்பக்கம், வரும் தந்திகள், கடிதங்கள் முதலிய வற்றில் எழுதாமலிருக்கும் மற்றப் பக்கங்கள் ஆகியவை களிலேயே மகாத்மா அவற்றை எழுதுவார். இவ்விதம் மகாத்மா செய்வதை சம்பரானில் நான் பார்த்ததோடு, அது முதல் எப்பொழுதுமே அதையே அவர் செய்து வருவதையும் கண்டு வந்தேன். இவ்விதம் பொது நிதி விஷயத்தில் சர்வ ஜாக்கிரதையுடனிருக்க வேண்டும் என்பதை மகாத்மா எங்களுக்குப் போதித்தார்.

சம்பரானில் நாங்கள் செலவு செய்த பணத்தை மகாத்மா தமது நண்பர்களிடமே வசூலித்துக்கொண்டார். அத்தகைய நண்பர்களில் ஒருவர் பிரபலஸ்தரான ரங்கூன் டாக்டர் பி. ஜே. மேத்தா. எனவே நாங்கள் போய் பணம் வசூல் செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை; வசூலிக்க நாங்கள் அனுமதிக்கப்படவுமில்லை.

எங்கள் சொந்த வேலைக்காரர்களை ஒவ்வொருவராக அனுப்பிவிட நேர்ந்தது என்பதை முன்னடியே சொல்லியிருக்கிறேன். ஒரு வேலையாக ஒரு நாள் நான் பாட்னவுக்குப் போகவேண்டியிருந்தது. வெளியே போக நேரும் போதெல்லாம் சாப்பாட்டுப் பாத்திரத்தில் ஆகாரத்தை எடுத்துக்கொண்டு போவது என் வழக்கம். இப்பாத்திரத்தை நான் சம்பரானுக்கும் கொண்டு வந்திருந்தேன். உபயோகத்திலில்லாமலிருந்ததால் அது அழுக்காயிருந்தது. எனவே துலக்கிச் சுத்தஞ் செய்ய அதைக் கிணற்றடிக்கு எடுத்துப் போனேன். நான் துலக்கிக்கொண்டிருந்தபோது அவ்வழியாகச் சென்ற மகாத்மா என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டார். அதோடு, "ஒரு பாட்னவக்கீல் தமது பாத்திரத்தைத் தாமே துலக்கிக்கொள்ளும்படிச் செய்வதில் நான் வெற்றி பெற்றுவிட்டேன்" என்றார். அங்கு இருந்த மற்றவர்களும் அவருடன் சேர்ந்து சிரித்தார்கள். தென்னப்பிரிக்காவில் மகாத்மா தமது கைகளினலேயே கக்கூஸை சுத்தஞ் செய்திருக்கிறார்; ஆனல் சம்பரானில் எங்களுக்கு அந்த வேலை வைக்கப்படவில்லை. உலர்ந்து போகாத ஒரு மரக்கிளையை மெள்ள மெள்ள வளைத்து ஒரு குறிப்பிட்ட வளைவுக்குக் கொண்டு வந்துவிடலாம். ஆனல் அதை ஒரேயடியாக வேகமாக

வளைத்தால் அது ஒடிந்து போய்விடும். இதை மகாத்மா நன்ருக அறிவார். இதனுலேயே சம்பாரானில் அவருடைய வேலைத் திட்டம் முழுவதும் எங்கள் முன்னுல் வைக்கப் படவில்லை. ஆனுல் எது அவசியம் என்று கருதுகிருரோ, நிலைமைக்கு எது முக்கியமோ, அதை மாத்திரமே எங்களை அங்கு செய்யச் சொன்னுர்.

சம்பாரானில் நாங்கள் கதர் அணிவதில்லை. எங்களில் பலர் சுதேசித் துணியையே அணிந்து வந்தோமென்னுலும் கதர் என்பது என்ன என்பதுகூட எங்களுக்குத் தெரியாது. என் மூத்த சகோதரர் பாபு மகேந்திர பிரஸாதைப் பார்த்து நான் 1898-லேயே சுதேசித் துணிகளை உபயோகிக்க ஆரம்பித்துவிட்டேன். அவர் அலகாபாத்தில் மாணவராக இருந்தபோதே சுதேசித் துணி உடுத்தி வந்தார். இந்தியத் துணிகளை அணிவதோடு மாத்திரம் நான் நின்றுவிடவில்லை, கிடைக்கும் சுதேசி சாமான்களையும் வாங்கி உபயோகித்து வந்தேன். இந்தியாவில் தயாரிக்கப் படாத சாமான்களை வாங்குவதுமில்லை. சிறு வயதிலேயே வந்துவிட்ட இப் பழக்கத்தை விடாமல் வைத்திருந்தேன். ஆனுல் ஒன்றை நான் ஒப்புக்கொள்ளவே வேண்டும். அப்பொழுது நான் உபயோகித்ததைவிட வெளி நாட்டுச் சாமான்களை இப்பொழுது அதிகமாக உபயோகிக்கிறேன். நான் மாணவனுக இருந்தபோது பரீட்சைகளில்கூட வெளி நாட்டு பேனு அல்லது நிப்பை உபயோகித்ததில்லை. திருப்திகரமானவைகளாக இல்லாது போனுலும் சுதேசி சாமான்களை உபயோகித்தே சமாளித்து வந்தேன். இப்பொழுதோ நான் வெளி நாட்டில் தயாரான பவுண்டன் பேனுவையும் மையையும்கூட உபயோகிக்கிறேன். வெளி நாடுகளுக்குப் போய் படிக்கும் பைத்தியம் எனக்கிருந்த அந்த ஒரு சமயத்தைத் தவிர பிறகு எப்பொழுதுமே வெளிநாட்டுத் துணியை நான் உபயோகித்தது மில்லை, வாங்கியதும் கிடையாது. அது 1906-ல். அதன் பிறகு நான் இந்தியத் துணியையும், மகாத்மா காந்தி கதரைக் கொண்டு வந்ததும் கதரையுமே அணிந்து வந்தேன். என் சகோதரர் இதில் அதிகக் கண்டிப்பானவர். தம்மைப் பின்பற்றும்படி அவர் என்னை உற்சாகப் படுத்தினுர்.

இந்த சமயத்தில் ஹோம் ரூல் (சுயாட்சி) இயக்கம் பலமாக நடந்து வந்தது. பொதுஜன காரியங்களில் சிரத்தை கொண்டிருந்த நண்பர்களும் சகாக்களும், சம்பரானில் எங்களுடன் ஈடுபட்டிராத மற்றவர்களெல்லோருமே, அந்தக் கிளர்ச்சியில் சேர்ந்து கொண்டார்கள். நாங்களும் அப்படி அதில் சேர்ந்துவிடாதபடி மகாத்மா எங்களைத் தடுத்தார். சம்பரானிலிருக்கும் வரையில் அதில் கலந்து கொண்டுவிடாமலிருக்க வேண்டியதன் அவசியத்தை எங்களுக்கு அவர் எடுத்துக் கூறினார். எனவே நாங்கள் சம்பரானிலிருந்த எட்டு அல்லது பத்து மாதங்களிலும் ஹோம் ரூல் இயக்கத்திற்கும் எங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. நாங்கள் பொதுக்கூட்டங்களிலும் பேசுவதில்லை. மகாத்மாவும், இரண்டு சமயங்களைத் தவிர, பொதுக்கூட்டங்களில் அங்கு பேசியதில்லை என்பதே என் ஞாபகம். அவர் அப்பொழுது பேசிய கூட்டங்களில் ஒன்று, தாதாபாய் நௌரோஜியின் மரணத்திற்கு துக்கம் தெரிவிக்கக்கூடியதாகும். மற்றொன்று, பசு பரிபாலன சங்கத்தின் வருடாந்தரக் கூட்டம். பொதுக் கூட்டங்களில் ராஜிய விஷயங்களைப்பற்றிப் பேசாமலிருந்தோம் என்பது மாத்திரமல்ல, சம்பரானில் நாங்கள்செய்து வந்த வேலைகள் சம்பந்தமாக வெளியில் பேசுவதுமில்லை; பத்திரிகைகளில் எழுதுவதும் கிடையாது. இத்தகைய கட்டு திட்டங்களுக்கு உட்பட்டிருந்த நாங்கள், ஹோம் ரூல் இயக்கத்தில் சேர எங்களை அனுமதிக்கும்படி அடிக்கடி மகாத்மாவைக் கேட்பதுண்டு. ஆனால் அவர், இப்பொழுதே ஹோம் ரூல் இயக்கத்தின் ஒரு முக்கியமான அம்சத்தில் சம்பரானில் நாங்கள் ஈடுபட்டிருந்தால் அதன் மற்ற நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டுமென நாங்கள் கவலைப் பட வேண்டியதில்லை என்பார். ஹோம் ரூல் இயக்கத்திற்கும் நாங்கள் செய்துவரும் வேலைக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்று எண்ணி நாங்கள் ஆச்சரியப்படுவோம். என்றாலும் மகாத்மாவின் ஆக்ஞைக்கு உடன்பட்டோம். மகாத்மா சொன்னதே சரி என்பதை, அனுபவம் பிறகு எங்களுக்கு போதித்தது.

ஒரு நாள் மகாத்மாவுடன் நான் ஒரு கிராமத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தேன். மகாத்மா இந்தியா

முழுவதும் பிரயாணம் செய்திருக்கிறார். ஆகவே பொது மக்களுக்கான சேவையில் எந்த மாகாணத்தில் அதிகமானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அப்பொழுது அவரைக் கேட்டேன். அதற்கு அவர், "தென்னிந்திய மக்கள் உணர்ச்சியும், புத்திசாலித்தனமும் உள்ளவர்கள். வங்காளிகளோ, உணர்ச்சி அதிகமுள்ளவர்கள் என்பதோடு தியாக சக்தியையும் அதிகமாகக் கொண்டவர்கள். அவர்கள் பிரமாதமான தியாகங்களையும் செய்திருக்கிறார்கள். ஆனால் மக்களுக்கான சேவையில் ஈடுபட விரும்புகிறவர்களுக்குச் சரியான யாத்திரா ஸ்தலம் புனாதான். தன்னலமற்ற தொண்டர்களால் நடத்தப்படும் பொதுஜன ஸ்தாபனங்கள் இந்தியாவிலேயே புனாவில்தான் ஏராளமாக இருக்கின்றன. வேறு எங்கும் அத்தனை ஸ்தாபனங்கள் கிடையாது. தேசத்தின் பணிக்காகவே தங்களை முழுதும் அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் அநேகரை புனாவில் பார்க்கலாம். உறுதியுடன் தங்கள் பிரதிக்ஞையை இவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள். இதனாலேயே அதை யாத்திரைக்கு ஏற்ற ஸ்தலமாக நான் கருதுகிறேன்" என்றார்.

1910-ல் முதல் தடவையாக நான் ஸ்ரீ கோகலேயை சந்தித்தபோதே இந்த உண்மையை கொஞ்சம் உணர்ந்திருந்தேன். இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்துகொள்ளும்படி அவர் என்னைக் கேட்டார். எனவே மகாத்மா புனாவைப்பற்றிக் கூறியதும் ஒரு முறையாவது அவ்வூருக்குப் போய் அந்த ஸ்தாபனங்களைக் காணவேண்டும் என்ற ஆர்வம் எனக்கு உண்டாயிற்று.

எல்லா மாகாணங்களிலும் எங்கள் மாகாணமே அதிகப் பிற்போக்கு வாய்ந்தது என்று நாங்கள் அடிக்கடி சொல்லிக்கொள்ளுவதுண்டு. தனது முழு நேரத்தையும் தேச சேவைக்கு ஈடுபடுத்திய பீகார் வாசி அச்சமயம்வரை யாருமே இல்லை. ஆகையால் இந்த லட்சியத்துடன் பீகாரில் ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவேண்டும் என்று நாங்கள் கருதினோம். அப்பொழுது எங்களுக்குத் தலைவராக இருந்தவர் பாபு பிராஜ்கிஷோர் பிரஸாத். எங்களுக்கு உற்சாகத்தை ஊட்டிவந்தவரும் அவரே. பெர்குஷன் கல்லூரி என்று ஒன்று புனாவிலிருக்கிறது. அதிலிருக்கும் ஆசிரியர்

களும் பேராசிரியர்களும் மாதம் ரூ. 75 வாங்கிக்கொண்டு சேவை செய்ய சம்மதித்திருக்கிறார்கள் என்பதை அவர் கேள்விப்பட்டிருக்கிறார். ஸ்ரீ கோகலேயே அந்தக் கல்லூரியில் அச்சம்பளத்தில் இருபது ஆண்டுகள் சேவை செய்திருக்கிறார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கீர்த்திபெற்றவரான டாக்டர் பரஞ்சபே, அப்பொழுது மாதம் ரூ. 75 சம்பளத்தில் அக்கல்லூரியிலிருந்தார். பீகாரிலும் அதே போன்ற கல்லூரியை ஆரம்பிக்கவேண்டும் என எண்ணினோம். அத்தகைய கல்லூரியின் பேராசிரியர்கள், மாணவர்களுக்குத் தியாக உணர்ச்சியில் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும், மாகாணம் முழுதும் இப்புது வாழ்க்கையின் புது மூச்சுப் பிறக்கவேண்டும் என்று கருதினோம்.

மேற்கொண்ட காரியம் நிறைவேறும் வரையில் ஓய்ந்திருப்பதில்லை என்பதில் பாபு பிராஜ்கிஷோர் பிரஸாத் மகாத்மா காந்தியைப் போன்றவர். ஆகவே ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிப்பது என்று நாங்கள் முடிவு செய்ததும், தமக்கு ஏராளமாக வருமானம் வந்துகொண்டிருந்த வக்கீல் தொழிலை விட்டுவிட்டு அதில் சேர்ந்துகொள்ளுவதாக முன் வந்தார். எங்களில் இதே மாதிரி செய்யத் தயாராயிருப்போரின் பெயர்களையும் குறித்துக்கொண்டார். எங்களுடைய திட்டத்தைக் குறித்து சிலரிடம் பேசினார். அவர்களும் கொஞ்சம் பணவுதவி செய்வதாக வாக்களித்தார்கள். ரூ. ஏழு, எட்டு ஆயிரம் வசூலித்தோம் என்று எனக்கு ஞாபகம். வங்காளத்தில் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்தபோது தேசியக் கல்வி அளிக்கப்பட்டு வந்த சில ஸ்தாபனங்களை நான் பார்த்திருக்கிறேன். என்றாலும் அதுவரை தேசியக் கல்வியைப்பற்றி நாம் அதிகமாக கவனஞ் செலுத்தியது கிடையாது. சில வருடங்கள் குருகுலப் பல்கலைக் கழகமும் நடந்து வந்தது. அவ்விதமிருந்தும் சர்க்கார் அங்கீகாரம் பெற்ற ஒரு கல்லூரியை ஆரம்பிக்கவே நாங்கள் நினைத்தோம். இதைப்பற்றி நாங்கள் மகாத்மாவிடம் பேசியபோது, தன்னலத் தியாகக் கொள்கையைக் கொண்ட ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிப்பதென்பதை அவர் அங்கீகரித்தார், ஆனால் கல்லூரி ஆரம்பிப்பதை அவர் ஆதரிக்கவில்லை. எனவே இந்த யோசனை ஒன்றுமில்லாமல் போய்விட்டது.

பெட்டியாவில் கமிஷன் தன்னுடைய வேலையைச் செய்ய ஆரம்பித்தது. சில சர்க்கார் அதிகாரிகளும், தோட்ட முதலாளிகளும் எழுத்து மூலமாக தங்கள் வாக்கு மூலங்களை கமிஷன் முன்பு சமர்ப்பித்தனர். இவர்கள் நேரிலும் விசாரிக்கப்பட்டனர். கமிஷன் மோதிகரியிலும் சில தினங்களிருந்து விசாரித்தது. இதன் மெம்பர்கள் சாயத் தொழிற்சாலைகள் சிலவற்றிற்குப் போய், அவற்றின் தஸ்தாவேஜிகளைப் பரிசீலனை செய்ததோடு தோட்ட முதலாளிகளையும் விசாரித்தனர். ஜில்லா பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள் என்றே சொல்லலாம். விவசாயி களின் சார்பில் சில சாட்சியங்கள் விடப்பட்டன. அவர் களில் சிலர் நேரிலும் விசாரிக்கப்பட்டனர். எங்களிட மிருந்த ஏராளமான சாட்சியங்களில் சிலவற்றைப் பொருக்கியெடுத்து கமிஷன் முன்பு வைத்தோம். ஆனால் மகாத்மா சொன்னது போல, சர்க்கார் அதிகாரிகள் அப்போதைக்கப்போது அனுப்பிவந்த அறிக்கைகளே விவசாயிகளுக்குச் சாதகமானவைகளாக இருந்ததால் நாங்கள் சாட்சியங்களை சமர்ப்பிப்பது அனுவசியமாயிற்று.

சாட்சியங்களை யெல்லாம் சேகரித்துக் கொண்ட பிறகு கமிஷன் அறிக்கையைத் தயாரிக்க முற்பட்டது. லெப்டினெண்டு கவர்னர் சர் எட்வர்டு கேட், மகாத்மா விடம் ஒன்று கூறியிருந்தார். கமிஷன் சமர்ப்பிக்கப் போகும் அறிக்கை ஏகோபித்ததாக இருக்குமானால், இதன் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது சர்க்காருக்கு எளிதாக இருக்கும்; சில மெம்பர்கள் மாறுபட்ட கருத் தைத் தெரிவித்து விடுவார்களானால், சர்க்காருக்குச் சங்கடமாகிவிடும் என்று அவர் மகாத்மாவிடம் சொல்லி யிருந்தார். ஆகவே சாத்தியமான வரையில் மெம்பர்களி டையே ஏகோபித்த அபிப்பிராய மிருக்கும்படிப் பார்க்க வேண்டும் என்பதில் மகாத்மா அதிகக் கவலை கொண்டிருந் தார். இது அதிகக் கஷ்டமான காரியம். தோட்ட முத லாளிகளின் பிரதிநிதிகளும் மகாத்மாவும் ஒரே மாதிரியான முடிவுக்கு வருவது என்பது எப்படி சாத்தியம்? தங்கள் மீது கூறப்பட்ட குறைகளும், குற்றச் சாட்டுகளும் உண்மை என்று அவர்கள் ஒப்புக் கொள்ளுவார்களா? அவர்கள் ஒத்துக் கொள்ளா விட்டால், அப் புகார்களெல்

லாம் முற்றிலும் உண்மையானவை என்பதை அறிந்திருக்கும் மகாத்மா, அவற்றை விட்டுவிட்டு தோட்ட முதலாளிகள் சொல்லுவது சரி என்று ஏற்றுக் கொண்டுவிட முடியுமா? பரிகாரம் தேடியாக வேண்டி எழுந்த முக்கியமான குறையெல்லாம் டின்காதியா என்ற முறையால் உண்டானது. தீர்வையை உயர்த்திப் பணம் பறிக்கப்பட்டு வந்ததே அது. ஜெர்மனியுடன் போர் மூண்டதால் அவுரிச் சாயத் தொழில் இப்பொழுது மீண்டும் லாபகரமானதாகி விட்டதால், தோட்ட முதலாளிகள் தங்கள் கட்சியை விட்டுக் கொடுப்பார்களா? விவசாயிகள் கொடுக்கும் குத்தகைத் தொகையை அதிகரித்து அதன் மூலம் வருடத்திற்குப் பல லட்ச ரூபாய் லாபம் பெற்று வந்தவர்கள், அதைக் கைவிடச் சம்மதிப்பார்களா? தாங்கள் வாங்கி யிருக்கும் அதிகப்படித் தொகையைத் திரும்பிக் கொடுத்துவிடத்தான் ஒப்புவார்களா? இவையெல்லாம் நடக்கிற காரியங்களாகத் தோன்றவில்லை. இந்த லட்சியங்கள் நிறைவேறாது போனால், கமிஷன் நியமனமும், அது நடத்திய விசாரணையும் வீண் வேலை என்றாகிவிடும். சர்க்கார் அதிகாரிகள் என்ன போக்கிலிருப்பார்கள் என்பதைக் கண்டுகொள்வதும் கஷ்டமானதாக இருந்தது. என்றாலும் ஜமீன்தார்களின் பிரதிநிதிகள் மகாத்மாவுடன் ஒத்துப் போவார்கள் என்று கருதப்பட்டது.

அபிப்பிராய பேதம் ஏற்படுவதற்கு இடமளிப்பதாக இருந்த ஒரு முக்கியமான காரியத்தை காந்திஜி ஆரம்பத்திலேயே அகற்றிவிட்டார். சர்க்காருக்குச் செய்யும் சிபார்சுகள் சம்பந்தமாக மற்ற மெம்பர்களும் தம்முடன் ஒத்துப் போவதா யிருந்தால், தோட்ட முதலாளிகள் செய்ததாகக் கூறப்படும் கொடுமைகள் சம்பந்தமாகப் பரிசீலனை செய்து அதன் பேரில் கமிஷன் அபிப்பிராயம் கூற வேண்டும் என்பதை தாம் வற்புறுத்துவதில்லை என்று கமிஷனிடம் மகாத்மா கூறினார். ஏனெனில், விவசாயிகள் இதுபற்றிக் கூறும் புகார்களையும் பரிசீலனை செய்வதா யிருந்தால் அப் புகார்களெல்லாம் உண்மையானவையே என்று கமிஷன் ஒப்புக்கொள்ளவே நேரும் என்றார். ஆனால் கமிஷனின் மெம்பர்கள் இதில் மாறுபட்ட அபிப்பிராயம் கொள்ளுவதா யின் தாம் இதைக் குறித்து தனியான குறிப்பைக் கமிஷன்

அறிக்கையில் எழுத வேண்டி வரும். அப்படித் தாம் எழுதும் அறிக்கைக்கு தாம் காட்டப் போகும் ஏராள மான சாட்சியங்களை யாருமே ஆட்சேபிக்கவும் முடியாது என்றும் எடுத்துக் கூறினர். தோட்ட முதலாளிகளின் சார்பில் கமிஷனின் மற்ற மெம்பர்கள் தம்முடைய கருத்துக்கு மாறுபாடான கருத்தைக் கொள்ளுவதானல், அவர்கள் கூறும் ஒவ்வொரு காரணமும், சர்க்கார் அதிகாரி களின் முந்திய பாரபட்சமற்ற அறிக்கைகளைக் கொண்டு மறுக்கவும் படும் என்றார் மகாத்மா. ஆகவே மகாத்மா வின் இந்த யோசனையை மற்ற மெம்பர்களும், தோட்ட முதலாளிகளின் பிரதிநிதிகளும் கூட, வரவேற்றார்கள். ஏனெனில் இது அவர்களை மிகுந்த ஆபாசமான நிலைமையி லிருந்து பாதுகாப்பதாக இருந்தது. காந்திஜி இந்த யோசனையைக் கூறியதற்கு ஒரு காரணமுண்டு. தோட்ட முதலாளிகள் இதுவரையில் செய்துவிட்ட அக்கிரமங்களை, இதனல் விவசாயிகள் அனுபவித்து விட்ட துயரங்களை, இந்த நிலைமையில் மாற்றிவிட முடியாது. இனியும் இத் தகைய காரியங்கள் நடக்க முடியாதபடிச் சரியான வகை யில் காரியம் செய்து விடுவதாயின், நடந்து போனதைப் பற்றி இப்பொழுது கிளறிக் கொண்டிருப்பதில் பிரயோ சனமும் கிடையாது. "நான் தோட்ட முதலாளிகளுக்கு விரோதியல்ல; அவர்களுக்குத் தீமையுண்டாக நான் விரும்பவில்லை" என்றே மகாத்மா எங்களிடமும், சர்க்கார் அதிகாரிகள், தோட்ட முதலாளிகள் ஆகியவர்களிடமும் சொல்லி வந்தார். ஆனல் அதே சமயத்தில், விவசாயி களுக்குக் கொடுமைகளைச் செய்வதை இனிமேல் அவர்கள் செய்யாதிருக்க வேண்டும், அப்படி இருப்பதால் தங்க ளுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் தோட்ட முதலாளிகள் அதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கூறி வந்தார். அவர்களுக்குத் தீமையை விரும்பவில்லை; விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட வேண்டும் என்பதை அவர் விரும்பாமலுமில்லை. ஆனல் கமிஷனின் அறிக்கை யின் மூலமே இந்த நன்மையைச் செய்துவிட முடியுமானல், தோட்ட முதலாளிகள் முன்னல் செய்துவிட்ட கொடுமை களை அதில் புகுத்திக் கொண்டிருப்பது வீண் என்றும் அவர் கருதினர். ஆகையால் இந்த யோசனையை மகாத்மா

கூறியதன் மூலம், பின்னால் அவர் செய்த அநேக காரியங்களில் எந்த அஹிம்சைக் கொள்கை அடிப்படையாக இருந்ததோ அதே கொள்கையையே இதிலும் அனுசரித்தார். மற்ற முக்கியமான விஷயங்களில் கமிஷனின் மெம்பர்களுக்குள் ஏகோபித்த அபிப்பிராயம் ஏற்படுவதற்கு இது உதவியாகவும் இருந்தது.

சர் பிரான்ஸிஸ் ஸ்லே, கமிஷனின் அக்ராசனர். பின்னால் அவர் மத்திய மாகாணத்தின் கவர்னரானார். நான் இதை எழுதும் அக்காலத்தில்கூட அவர் சர்க்காரில் மிக முக்கியமானதோர் பதவியிலிருந்தார். அவர் அதிக அனுபவமும் திறமையும் வாய்ந்த அதிகாரி. கமிஷன் தயாரிக்கப் போகும் அறிக்கைமீது சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதாக அந்த அறிக்கை அமைய வேண்டும் என்பது அவருடைய ஆவல். ஆகையால் அறிக்கை எப்படியும் ஏகமனதானதாக இருக்க வேண்டும் என்பது அவா கவலை. எனவே மகாத்மாவின் யோசனை அவருக்கு அதிக திருப்தியளித்தது; அதிலிருந்து மகாத்மாவைப் போற்றுபவராகவும் மாறினார். உண்மை என்னவென்றால், சர்க்கார் அதிகாரிகளுக்கும், முக்கியமாக சர். பிரான்ஸிஸ் ஸ்லேக்கும் இருந்த பெரிய கஷ்டமெல்லாம், தோட்ட முதலாளிகளின் முந்திய கொடுமைகளைப் பற்றிய விஷயத்தில் தான். தங்கள்மீது கூறப்படும் குற்றச் சாட்டுகளெல்லாம் பொய்யானவை என்று தோட்ட முதலாளிகளின் பிரதிநிதிகள் சுலபமாகச் சொல்லி விடுவார்கள். ஆனால் மகாத்மா காந்தியும், ஜமீன்தார்களின் பிரதிநிதிகளுமோ, கமிஷன் முன்பு இதுவரை வந்திருக்கும் சாட்சியங்கள், சர்க்கார் அதிகாரிகள் அப்போதைக்கப்போது அனுப்பியிருக்கும் அறிக்கைகள் ஆகியவைகளைக் கொண்டு குற்றச்சாட்டுகளெல்லாம் உண்மையானவை என்று நிரூபித்து விடுவார்கள். இதனால் சர்க்கார் அதிகாரிகளுக்கு சங்கடமான நிலைமை ஏற்படும். தோட்ட முதலாளிகளுக்கு எதிரான அறிக்கைகளைத் தாங்கள் சர்க்காருக்கு அனுப்பி யிருந்தும், தோட்ட முதலாளிகள் அக்கிரமம் செய்கிறார்கள் என்பது தெரிந்திருந்தும், சர்க்கார் சும்மா இருந்து விட்டதோடு அப்போதைக்கப்போது அவர்களுக்கு உதவியையும் செய்து வந்த சர்க்கார் மீதும் அதிகாரிகள் கண்டிக்க நேர்ந்திருக்க

லாம். இதற்கு மாறாக தோட்ட முதலாளிகள் குற்றவாளிகள் அல்ல என்ற முடிவுக்கு அவர்கள் வருவதாயின், பல சர்க்கார் அதிகாரிகளும் அப்போதைக்கப்போது அனுப்பியிருந்த அறிக்கைகள் பொய்யானவை என்று அவர்கள் சொல்லுவதாக ஆகும். இந்த சிக்கலிலிருந்து தாங்கள் மீண்டுகொள்ள மகாத்மாவின் யோசனை வழி செய்ததால் சர்க்கார் அதிகாரிகள் அதைச் சந்தோஷமாகவும் வணக்கத்தோடும் ஏற்றுக் கொண்டார்கள்.

டின்காதியா விவசாய முறையே மற்ற புகார்களுக்கெல்லாம் மூல காரணமாக இருந்ததால், சட்டத்தின் மூலம் அம் முறையைப் போக்கிவிட வேண்டும் என்று மகாத்மா வற்புறுத்தினார். இதற்கு சர்க்கார் அதிகாரிகளும் தயக்கமின்றி சம்மதித்தார்கள். இம் முறையை இப்பொழுதும் அமுலுக்குக் கொண்டுவருவது அசாத்தியமானதாயில்லாவிட்டாலும் அதிகக் கஷ்டம் என்பதைத் தோட்ட முதலாளிகளும் உணர்ந்ததால் அவர்களும் சம்மதித்தார்கள். செயற்கை முறையில் சாயங்கள் தயாரிக்கப்பட்டு விட்டதால் அவுரியிலிருந்து சாயம் எடுப்பது லாபகரமானதாயில்லை; அவுரிச் சாகுபடி இப்பொழுது லாபகரமானதாயிருந்தாலும் யுத்தம் முடிந்துவிட்டால் அந்த சுபீட்சமும் போய்விடும் என்பதைத் தோட்ட முதலாளிகள் அறிவார்கள். ஆகையால் டின்காதியா சாகுபடி முறையைச் சட்டத்தின் மூலம் ரத்துச் செய்துவிடுவது என்பதை அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

அடுத்த விஷயம், குத்தகைத் தொகை அதிகரிக்கப்பட்டதைப் பற்றியது. குடிவாரச் சட்டத்தின்படி, சில சந்தர்ப்பங்களை அனுசரித்து $12\frac{1}{2}$ சத விகிதம் வரையில் குத்தகைத் தொகையை நிலச் சொந்தக்காரர் அதிகரிக்கலாம். மேற்கொண்டும் அதிகரிப்பதாயின் கோர்ட்டு உத்தரவின் பேரிலேயே அவ்விதம் செய்ய முடியும். என்றாலும், தோட்ட முதலாளிகள் குத்தகைத் தொகையை அதிகமாக உயர்த்தியிருந்தார்கள். ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள பத்திரங்களில் ஒப்புக்கொண்டபடியே குத்தகைத் தொகை உயர்த்தப்பட்டிருப்பதால் அதன்படி நடக்க விவசாயிகள் கட்டுப்பட்டவர்கள் என்பது தோட்ட முதலாளிகளின்

வாதம். இந்தப் பத்திரம் செல்லாது என்று கோர்ட்டு தான் தீர்ப்புக் கூறவேண்டும். எனவே இதற்காக ஒவ்வொரு விவசாயியும் கோர்ட்டுக்குப் போயாக வேண்டும். ஆகவே இந்த ஒப்பந்தங்கள் செல்லா என்று கமிஷன் தீர்ப்புச் சொல்லிவிட முடியாது என்றும் அவர்கள் வாதித்தார்கள்.

இந்த விவாதம் சட்டப்படி சரியானதாக இருக்கலாம். ஆனால் அதிகரிக்கப்பட்டுள்ள குத்தகைத் தொகையை ரத்துச் செய்யாவிட்டால், குறைக்காவிட்டால், இப்பளு குடியானவர்கள் தலையில் நிரந்தரமாகச் சுமந்துவிடும். விவசாயிகள் இதற்காகக் கோர்ட்டுக்குப் போகவேண்டியதே என்றால், கமிஷனை நியமிக்கவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் ஆயிரக்கணக்கான குடியானவர்கள் கோர்ட்டுக்குப் போய் வழக்குகளை நடத்திக்கொண்டிருப்பதென்பது முடியாத காரியம். நடத்தப்பட்ட சில வழக்குகளில் ஏற்பட்ட அனுபவமும் திருப்திகரமானதாக இல்லை. காந்திஜி சம்பரானுக்கு வருவதற்கு முன்னால், விவசாயிகள் பதினேரு வழக்குகளைத் தொடுத்தார்கள். இவற்றைப் பரிட்சார்த்தமான வழக்குகள் என்று கருதிய தோட்ட முதலாளிகள், அதிக உஷாராக இந்த வழக்குகளை நடத்தியதோடு ஏராளமாகப் பணத்தையும் செலவிட்டார்கள். பாட்னுவிலிருந்த பிரபலமான வக்கீல்களைத் தங்கள் பக்கத்திற்கு அமர்த்தினர். இவ் வழக்குகள் முதலில் விசாரணைக்கு வந்தபோது, ஐந்து அல்லது ஆறு வழக்குகளில் குடியானவர்கள் வெற்றி பெற்றனர். மற்றவைகளில் தோட்ட முதலாளிகளுக்கு வெற்றி ஏற்பட்டது. செஷன்ஸ் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்புகளில் சில ரத்துச் செய்யப்பட்டன; சில ஊர்ஜிதமாயின. விவசாயிகளுக்குப் பாதி வழக்குகளில் வெற்றி, பாதியில் தோல்வி என்பதே ஏற்பட்ட முடிவு. செஷன்ஸ் கோர்ட்டின் தீர்ப்பின் மீது தோட்ட முதலாளிகள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். மகாத்மா சம்பரானுக்கு வந்த சமயத்தில் இந்த அப்பீல்கள் ஹைகோர்ட்டில் இருந்தன. சில வழக்குகளின் சங்கதியே இது என்றால், ஆயிரக்கணக்கான வழக்குகளைப் போடுவது என்றால் அப்பொழுது நிலைமை எப்படி இருக்கும் என்பதை யாரும்

எளிதில் யூகித்துக்கொள்ள முடியும். ஆகையால், நீதியை முன்னிட்டு மாத்திரமேயல்லாமல், சம்பந்தப்பட்டவர்களிடையே தவருன எண்ணங்களும், அவநம்பிக்கைகளும் இல்லாமலிருப்பதை உத்தேசித்தும், இதில் கமிஷன் ஒரு முடிவுக்கு வருவதோடு குத்தகைத் தொகை அதிகரிப்பு ஒப்பந்தங்களை அதன் மூலம் சர்க்கார் ரத்துச் செய்யவும் வேண்டும். இதில் ஒருமித்த அபிப்பிராயம் கமிஷனில் ஏற்படும்படிச் செய்வது அதிகக் கஷ்டமானதாயிற்று. இதில் விட்டுக் கொடுத்துவிட மகாத்மா தயாராயில்லை. எனவே இதில் சமரசத்திற்கு வழி காண முயன்ருர்.

சாதாரண சட்டத்தின்படி, குத்தகைத் தொகையை அதிகரிக்க ஜமீன்தார்களுக்கு உரிமையுண்டு. உண்மையில் அவர்கள் அதை அடைந்தும் வந்தார்கள் என்பதை முன்னுடியே சொல்லியிருக்கிறேன். ஜமீன்தார்களைப் போல அதே காரணங்களுக்காக, அதே முறையில் தோட்ட முதலாளிகளும் குத்தகைத் தொகையை உயர்த்தியிருப்பார்களானுல், அவர்களுக்கு இவ்வளவு எதிர்ப்பு தோன்றியிருக்காது. ஆனுல் அவர்கள் குத்தகைத் தொகையில் அதிக அதிகரிப்பை எதிர்பார்த்தனர். ஆகவே காந்திஜி ஒன்று எண்ணினுர். சாதாரணச் சட்டப்படி குத்தகைத் தொகை அதிகரிப்பு எந்த அளவுக்குச் செல்லுபடியானதாகுமோ அந்த அளவு அதிகரிப்பை வைத்துக்கொண்டு, அதற்கும் அதிகப்படியாக இருப்பதைத் தோட்ட முதலாளிகள் குறைத்துவிட சம்மதித்தால் குடியானவர்களுக்குக் குறை இருக்காது எனக் கருதினுர். சமரசத்திற்கு இதுவே வழி எனச் சொல்லி இந்த யோசனையைக் கொண்டு வந்தார். இதை ஏற்றுக்கொள்ள தோட்ட முதலாளிகள் சம்மதிக்கவில்லை. இதேபோல குடியானவர்களிடம் ரொக்கமாகப் பறித்திருக்கும் தொகை முழுவதையும் தோட்ட முதலாளிகள் திருப்பித் தந்துவிட வேண்டும் என்றும் சொன்னேம். ஒரு தம்பிடியையும் திருப்பிக் கொடுக்க அவர்கள் விரும்பவில்லை. ஒருமித்த முடிவு வேண்டும் என்பதற்காக அதிகத் தயக்கத்தின் பேரிலேயே முடிவில் மகாத்மா ஒரு யோசனையை ஒப்புக்கொண்டார். குத்தகைத் தொகை உயர்வில் சுமார் முக்கால்வாசி அப்படியே இருப்பது; ரொக்க வசூலில் கால்வாசியைத்

திருப்பிக் கொடுத்து விடுவது என்பது அந்த யோசனை. இதைக்கூட அதிக விவாதத்திற்குப் பிறகே எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள்.

மற்ற சில்லறை விஷயங்களிலெல்லாம் அபிப்பிராய பேதம் அதிகமாயில்லை. சர்க்காருக்கு ஏகோபித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. சர்க்காரும் அதை ஏற்றுக்கொண்டனர். டிங்காதியா முறை ரத்துச் செய்யப்பட்டது. குத்தகைத் தொகை உயர்வு, கமிஷனின் சிபார்சு அளவுக்குக் குறைக்கப்பட்டது. தோட்ட முதலாளிகள் திருப்பித் தரவேண்டிய தொகையை பெட்டியா ராஜ் கொடுத்துவிட்டு அதைத் தோட்ட முதலாளிகளிடமிருந்து வசூலித்துக் கொள்ளும்படி சர்க்கார் உத்தரவு பிறப்பித்தது. தொகையைத் திருப்பித் தருவது சீக்கிரத்தில் பட்டுவாடா ஆவதற்காகவே இவ்விதம் செய்யப்பட்டது. மேலும் குடியானவர்களிடமிருந்து பணம் பறிப்பதே தோட்ட முதலாளிகளுக்கு வழக்கமாக இருந்து வந்திருப்பதால், தோட்ட முதலாளிகளே பணத்தைத் திருப்பிக் கொடுப்பதென்றால் குடியானவர்களுக்குப் பல கஷ்டங்கள் உண்டாகக்கூடும் என்றும் கருதப்பட்டது. பெட்டியா ராஜ் நிர்வாகம் கோர்ட் ஆப் வார்ட்ஸின் கீழிருந்ததால், பணப் பட்டுவாடாவை அதன் மூலம் துரிதப்படுத்துவது சர்க்காருக்கு எளிதாயிற்று.

அவுரி சாகுபடியில் ஏற்பட்ட தகராறு இவ்விதம் முடிவடைந்தது. ஆனால் மகாத்மா ஏற்றுக்கொண்ட சமரச ஏற்பாடுகளைக் குறித்து சிலர் குறை கூறினார்கள். குத்தகைத் தொகை அதிகரிப்பு சட்டப்படி செல்லாது என்றால் அதை முற்றிலும் ரத்துச் செய்திருக்கவேண்டும்; குடியானவர்களிடம் ரொக்கம் பிரித்தது சட்ட விரோதம் என்றால் முழுத் தொகையையும் திருப்பிக் கொடுக்கச் செய்திருக்கவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். சமரச ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்ளுவதற்கு முன்னால் அதைப்பற்றி தீர யோசித்தோம். சர்க்கார் உதவியினாலும், சட்டத்தினாலுமின்றி கோர்ட்டுக்குப் போய் விவசாயிகளின் குறைகளுக்குப் பரிகாரம் தேடிவிட முடியாது என்பது எங்கள் நம்பிக்கை. சமரச யோசனையை நிபந்தனை

யின்றி நாங்கள் ஒப்புக்கொண்டதற்கு முக்கியமான காரணம் அந்த நம்பிக்கையே என்பதில் சந்தேகமில்லை; மேலும் மகாத்மா இன்னுமொரு விஷயத்தையும் எங்களிடம் தெளிவாகக் கூறினர். டிங்காதியா முறையை ரத்துச்செய்வது எந்த நிபந்தனையின் பேரில் ஏற்பட்டதாயிருந்தாலும், அம்முறையானது அடக்குமுறையையே அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதால், அது ரத்துச் செய்யப்பட்ட பிறகு தோட்ட முதலாளிகள் அதிக காலத்திற்கு நீடித்திருக்க முடியாது என்று கூறினர். அடக்குமுறை ஒழிந்து விட்டால் தோட்ட முதலாளிகள் நிலை பெற்றிருக்கமுடியாது என்றார். டிங்காதியா முறை ரத்தானதும், குடியானவர்களின் மனதில் தோன்றிவிட்ட தைரியமும் தோட்ட முதலாளிகளின் எந்த அடக்குமுறையையும் எதிர்க்கும்படியே அவர்களைச் செய்யும். ஆகையால் எதிர்காலத்தைப்பற்றி எங்களுக்கு எந்தவித கவலையும் உண்டாகவில்லை.

நடந்ததெல்லாம் அதுதான். கமிஷனின் அறிக்கை நிறைவேற்றப்பட்ட சிறிது காலத்திற்கெல்லாம் தோட்ட முதலாளிகள் தங்கள் நிலங்கள், தொழிற்சாலைகள், கால்நடைகள் ஆகியவைகளை யெல்லாம் விற்றுவிட்டு சம்பாரணியிருந்து போய்விட்டார்கள். மகாத்மா அங்கு வந்ததினல் இவர்களுக்கு முன்னிருந்த கௌரவமெல்லாம் போய்விட்டது. இவர்கள் அங்கு தொடர்ந்து இருந்து வருவதாயிருந்தால் மற்ற நிலச் சுவான்களைப் போல அதே முறையில்தான் வாழமுடியும். ஆகையால் தங்களிடமிருந்ததையெல்லாம் பெட்டியாராஜுக்கும், தாங்கள் அடக்கி ஒடுக்கி வந்த விவசாயிகளுக்கும் விற்றுவிட்டார்கள். யுத்தத்தின் காரணமாக விலைகள் உயர்ந்திருந்ததால் இவர்கள் விற்ற சொத்துக்களுக்கு நல்ல விலை கிடைத்தது. இதற்காக் தோட்ட முதலாளிகள் சந்தோஷப்பட்டார்கள்; இவர்களிடமிருந்து விடுதலை பெற்றதற்காக விவசாயிகளும் ஆனந்தமடைந்தார்கள்.

* * *

இவையெல்லாம் நிகழ்ந்துகொண்டிருந்த சமயத்தில், கெடுகவும், தோட்ட முதலாளிகளுக்கும் மகாத்மாவுக்கும்

உறவு அதிக நட்பு முறையிலேயே இருந்து வந்தது. விவசாயிகளின் பிரச்னை தீர்ந்தபிறகு கிராமங்களில் கல்வி, சுத்தம், சுகாதாரம் ஆகியவைகள் சம்பந்தமான வேலைகளை மேற்கொள்ள காந்திஜி விரும்பினார். இதில் தோட்ட முதலாளிகளுக்கு அதிக திருப்தி. சிலர் இதில் மகாத்மாவுக்கு முட்டுக்கட்டையாக இருந்தபோதிலும் மற்றவர்கள் அவருடைய வேலைக்கு உதவியாக இருந்தார்கள். விவசாயிகளிடையே உண்மையான விழிப்பு ஏற்படாது போனால் அவர்களுக்காகத் தாம் தேடியதெல்லாம் சரியான பலனளிக்காது போய்விடும் என்று மகாத்மா உணர்ந்தார். இந்த விழிப்பு ஏற்படாது போனால், தோட்ட முதலாளிகளில்லாவிட்டாலும் வேறு யாருடைய கொடுமைகளுக்காவது அவர்கள் ஆளாகிவிடக்கூடும் எனக் கருதினார். எனவே மூன்று பள்ளிக்கூடங்களை ஆரம்பித்து அவற்றிற்கு மிக்கத் திறமையுடைய ஆசிரியர்களின் சேவையைப் பெற்றார். இப்பள்ளிக்கூடங்களில் ஒன்றில் நானும் இல்லாது போனேனே என்பது எனக்கு வருத்தம். நான் பாட்னாவுக்குத் திரும்பிப்போய் மீண்டும் எனது வக்கீல் தொழிலில் ஈடுபட்டேன். இப்பள்ளிக்கூடங்களை நடத்திய ஊழியர்கள்—ஆண்களும் பெண்களும்—பெரும்பாலும் மகாராஷ்டிரத்திலிருந்தும், குஜராத்திலிருந்தும் வந்தவர்கள். இப்பள்ளிக் கூடங்களில் ஒன்றை மாத்திரம் பாபு தர்னிதார் நடத்திவந்தார். மற்ற மாகாணங்களிலிருந்து ஸ்ரீ மகாதேவ தேசாய், அவர் மனைவியார், ஸ்ரீமதி துர்க்காபாய், சபர்மதி ஆசிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீ நரகரி பரீக், அவர் மனைவியார், கஸ்தூரிபாய், பம்பாயிலிருந்த ஸ்ரீ வாமன் கோகலே, அவர் மனைவியார், ஊழியர்கள் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் ஸ்ரீ கிருஷ்ணதேவா முதலியவர்கள் வந்திருந்தனர். இவர்கள் குழந்தைகளுக்கு எழுத்துச் சொல்லிக்கொடுத்தார்கள். தாங்களே கிராமங்களைச் சுத்தம் செய்தனர். கிராமப் பாதைகளைச் சுத்தமாக வைத்திருக்கவும், முக்கியமாக கிணறுகளைச் சுற்றிலும் அசுத்தமின்றி வைத்திருக்கவும் பெண்களுக்குக் கற்றுக்கொடுத்தார்கள். காந்திஜி சம்பரானில் கிராமப் புனருத்தாரண வேலையை ஆரம்பித்தார். அதுவே பிறகு தேசம் முழுவதற்கும் வேலைத் திட்டமாக அமைந்தது. சிறிது காலத்

திற்குப் பிறகு ஜில்லாவிலிருந்த ஊழியர்கள் போய் விட்டனர்; இவர்களுக்கு பதிலாக மற்றவர்கள் வந்து சேர்ந்தனர். இப்படி வந்தவர்களில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் காரியதரிசி* ஸ்ரீ சங்கர ராவ் தேவும், பெல்காமின் பிரபல காங்கிரஸ் ஊழியரான ஸ்ரீ பந்தாவிக்கு மிருந்தனர். முதன் முதலில் சம்பாரானில் இவர்களுடன் எனக்கு ஏற்பட்ட நட்பு நாளாவட்டில் வளர்ந்தது. அங்கு வந்தவர்களில் அநேகமாக எல்லோருமே தமது வாழ்க்கை முழுவதையும் பிற்காலத்தில் தேசத்திற் காக அர்ப்பணித்தவர்களே.

நாம் சரியான சுயராஜ்யப் பணியிலேயே ஈடுபட் டிருக்கிறோம் என்று அப்பொழுதெல்லாம் மகாத்மா எங்களிடம் கூறுவதுண்டு. நன்றாக உண்மையுடன் நாம் வேலை செய்துவந்தால், தேசத்தின் பணியில் மிகச் சிறந்த தென்று பின்னால் மதிக்கப்படக்கூடிய சிறந்த தொன்றை அடைவதில் நாம் வெற்றிபெற முடியும் என்றும் அவர் கூறுவார். சம்பாரானில் சுயராஜ்யத்திற்காக பெரும்பணி செய்யப்பட்டது என்பதில் சந்தேகமே இல்லை. பீகாரைப் பொறுத்தவரையில், பொது வாழ்க்கைக்கு அதுவே ஆரம்பம். மாகாண மகா நாட்டைக்கூட்டி தீர்மானத்தை நிறைவேற்றினால் போதும் என்றுதான் அதுவரையில் இருந்தது. காங்கிரஸ் வருஷ மகா நாட்டிற்குப் போவது, காங்கிரஸுக்குப் பணவுதவி செய்வது, பத்திரிகைகளில் ஏதாவது எழுதிவிடுவது, ஒருவர் சட்டசபை மெம்பரா யிருந்துவிட்டால் சில கேள்விகளைக் கேட்டு சில பிரசங்கங் களையும் செய்துவிடுவது போன்றவைகளே தேச சேவை என்றுதான் இருந்தது. இக்காரியங்கள் தான் தேச சேவை யின் ஆரம்பமும் அந்தமும் என்றும் கருதி வந்தோம். பொது மக்களுடன் எந்தவிதத் தொடர்புமில்லை. ஹோம் ரூல் கிளர்ச்சிக்கு முன்னாலும், அதற்குப் பிறகும்கூட, பொதுக்கூட்டங்கள் எப்பொழுதாவது நடக்கும். அக் கூட்டங்களிலும் ஆங்கிலத்தில் பேசுவார்கள். எனவே சர்க்

---

* இந்த மூலநூல் ஹிந்தியில் 1950-ல் எழுதப்பட்டபோது ஸ்ரீ சங்கரராவ் தேவ் காங்கிரஸ் பொதுக் காரியதரிசியாக இருந்தார்.

கார் உத்தியோகங்களில்லாத ஆங்கிலம் படித்தவர்களே அக்கூட்டங்களுக்கு வருவார்கள். காந்திஜியின் சம்பரான் விஜயத்தால் பொது மக்களுக்கு புது வாழ்வும் புது மூச்சும் பிறந்தது. அவர்களுக்கு விழிப்பு உண்டாயிற்று. ஜில்லாவின் மூலை முடுக்குகளிலிருக்கும் ஆண்களும் பெண் களும் மகாத்மாவைப் பற்றியும் அவர் செய்துவரும் வேலை களைக் குறித்தும் நன்ருக அறிந்திருந்தார்கள். எங்களுக் கும் ஜில்லாவின் இண்டு இடுக்கெல்லாம் சரியாகத் தெரிய லாயிற்று. காந்திஜி விஜயத்தால் ஏற்பட்ட பலன் அந்த ஜில்லாவில் மாத்திரமேயன்றி மாகாணம் பூராவும் பரவி யிருந்தது. மகாத்மா பொதுக்கூட்டங்களை நடத்தவில்லை; தாம் செய்யும் வேலைகளை விளம்பரப்படுத்தவுமில்லை. என்ருலும் பீகார் பூராவிலும் ஒரு புத்துணர்ச்சி எழுந்தது. அவர் செய்த வேலைகள் ஹோம் ரூல் கிளர்ச்சிக்கு அதிக உற்சாகத்தை அளித்தது. புது வேலை முறையை மகாத்மா காட்டினுர். பீகார் அதை உடனே மேற்கொண்டது. பின்னுடி மகாத்மா நாடு முழுவதிலும் கிளர்ச்சியை ஆரம் பித்தபோது, அந்தப் போராட்டத்தில் பீகார் கொண்ட பங்கு வேறு எந்த மாகாணத்தியதையும்விட எந்த விதத்திலும் குறையாததாக இருந்தது. காந்திஜிக்கும் பீகாரிடத்தில் நல்ல நம்பிக்கை இருந்தது. பீகாரிகள் கண்ணை மூடிக்கொண்டு மகாத்மாவைப் பின்பற்றுகிறவர் களென்று மற்ற மாகாணத்தவர்கள் குறை கூறுவதுண்டு. இது உண்மை. ஏனெனில் பீகாரிகளுக்கு மகாத்மாவிடம் ஏற்பட்ட நம்பிக்கை அவருடனிருந்து பெற்ற அனுபவத்தி லிருந்து ஏற்பட்டது. அவருடைய வேலையினுல் முதன் முதலில் நன்மையடைந்தவர்கள் பீகாரிகள். அடைவது அசாத்தியம் என்று தாங்கள் எண்ணிய சில காரியங்களை அவர் செய்து காட்டியதை முதலில் கண்டவர்கள் பீகாரி களே. பீகார் செய்ததைப் போல நாடு முழுதும் கண்ணை மூடிக்கொண்டு காந்திஜியைப் பின்பற்றி யிருக்குமாஞல், இந்தியா இப்பொழுது அடைந்திருப்பதை விட இன்னும் மகோன்னத காரியங்களை அடைந்திருக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

மறக்க முடியாத காட்சி

சம்பாரனுக்கு வருவதற்கு முன்னால் சபர்மதியில் சத்தி யாக்கிரக ஆசிரமத்தை மகாத்மா அமைத்திருந்தார். ஒரு வாரத்தில் தமது வேலைகளை முடித்துக் கொண்டு ஆசிரமத்திற்குத் திரும்பிப் போய் விடலாம் என்ற நம்பிக் கையிலேயே அவர் இந்த ஜில்லாவுக்கு வந்தார். சில மாதங்கள் தாம் தங்க வேண்டியிருக்கும் என்பதைப் பிறகு அறிந்ததும், தாம் சீக்கிரத்தில் திரும்பி விட முடியாததால், தாம் இல்லாமலேயே காரியங்களைச் செய்து கொண்டு போகும்படி ஆசிரமவாசிகளுக்கு அறிவித்து விட்டார். அவர்களும் அப்படியே செய்துகொண்டு போயினர். அவசி யம், விரும்பத்தக்கது என்று தோன்றும்போது, அப்போ தைக்கப்போது தமது அபிப்பிராயங்களை அவர்களுக்கு அறிவித்து வந்தார்.

காந்திஜி சம்பாரனில் இருந்த போதுதான், சுவாமி சத்தியதேவ் அங்கு வந்ததின் பலனாக, தென்னிந்தியாவில் ஹிந்திப் பிரசாரத்தைத் துவக்கினார். சுவாமி சத்தியதேவ் சிறந்த படிப்பாளி. பீகாருக்கும், முக்கியமாக சம்பாரனுக் கும் அடிக்கடி வந்து பொதுக் கூட்டங்களில் பேசுவார். அவருடைய ஹிந்திப் புத்தகங்கள் பிரபலமானவை. அவரு டைய வெளி நாட்டுச் சுற்றுப் பிரயாண அனுபவங்களைக் குறித்தும் ஓரளவுக்கு மக்கள் அறிந்திருந்தார்கள். காந்திஜி யைப் பார்க்க இவர் பெட்டியாவுக்கு வந்தபோது சபர்மதி ஆசிரமத்திற்குப் போய் அங்கு சிலகாலம் வசிக்கும்படி ஆலோசனை கூறப்பட்டார். அதன்படி அவரும் போனார். பிறகு தென்னிந்தியாவுக்குப் போய் ஹிந்தியைப் பரப்பும் படி மகாத்மா அவரைக் கேட்டுக் கொண்டார். இதற்காக அவருடன் தம் குமாரரையும் அனுப்பினார். சுவாமிஜி சென்னைக்குப் போய் அங்கு சிறிது காலம் வேலை செய்து வந்தார்.

1910-ல் மாளவியாஜியின் தலைமையில் ஹிந்தி சாஹித்ய சம்மேளனத்தின் முதல் மகாநாடு காசியில்

நடந்தது. அது முதல் அந்த சம்மேளனத்துடன் எனக்கும் தொடர்பு ஆரம்பமாயிற்று. அம் மகாநாட்டுக்கு நான் போயிருந்த போதுதான் முதல் தடவையாக ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாண்டனை நான் சந்தித்ததாக எனக்கு ஞாபகம். ஒருவேளை அங்கு நாங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைக்கப் பட்டிருப்போம். சம்மேளனத்தின் இரண்டாவது மகாநாடு பிறகு கல்கத்தாவில் நடந்தபோது நான் அதன் வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசி; அப்பொழுது ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாண்டனுடன் நட்பு அதிகமாயிற்று. சம்மேளனம் குழந்தைப் பருவத்திலேயே இருந்தது. ஹிந்திப் பிரசார வேலையை அது மேற்கொண்டதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இது சம்பந்தமாகத் தென்னிந்தியாவில் காந்திஜி செய்த வேலை இம் முயற்சியில் அதிக அளவுக்கு என் கண்ணைத் திறந்தது. ஹிந்தி நமது தேசிய பாஷையாகும் நாளைப் பற்றிக் கனவு காண ஆரம்பித்தேன். ஹிந்திப் பிரசாரத்தில் நான் நேரடியாகத் தொடர்பு கொண்டிராவிடினும் எனக்கு அதில் அதிக அக்கறையிருந்தது.

சில ஹிந்திப் பிரசாரகர்கள் பீகாரிலிருந்து சென்னைக்குப் போனார்கள். சிலர் இன்னும் அங்கு வேலை செய்து வருகின்றனர். ஆரம்ப காலங்களில் இவ்வேலைக்காக பீகாரிலிருந்து சென்னைக்குப் போக விரும்புகிறவர்கள் என்னைக் கலந்தாலோசிப்பார்கள். ஆகையால் ஒரு வழியாய் ஹிந்திப் பிரசார வேலையில் எனக்கும் தொடர்பிருந்தது. காந்திஜியுடன் எனக்கிருந்த தொடர்பினால் இந்த சம்பந்தமும் பலப்பட்டது.

ஹிந்திக்கு அவர் செய்துவந்த சேவையைப் பாராட்டும் வகையில் 1918-ல் இந்தூரில் நடந்த சம்மேளன மகாநாட்டிற்கு மகாத்மா காந்தி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சம்மேளன மகாநாடு அங்கு அதிக ஆடம்பரமாக நடந்தது. காந்திஜி எங்களில் சிலருடன் சம்பாரானிலிருந்து இந்தூருக்குச் சென்றார். தென்னிந்தியாவில் ஹிந்திப் பிரசாரத்திற்காக பெரும் தொகையும் அம் மகாநாட்டில் வசூலாயிற்று. மகாத்மாவின் யோசனையின் பேரிலேயே ஹிந்தியைப் பரப்புவதும் சம்மேளனத்தின் வேலைத் திட்டத்தில் ஒரு பகுதியாக்கப்பட்டது.

இந்தூரில் நடந்த ஒரு சிறு சம்பவத்தை இச்சந்தர்ப்பத்தில் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். இது நமாஷான தாயினும் இதில் முக்கியத்துவமும் அடங்கி யிருக்கிறது. மகாத்மாவும் அவருடன் சென்ற நாங்களும் ராஜாங்க விருந்தினராக இருந்தோம். எனவே எங்களை வரவேற்பதற்கும் நாங்கள் தங்குவதற்கும் பலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எங்களுக்குக் குளிக்க தண்ணீர் வைத்திருந்த பாத்திரம் முதல், நாங்களிருந்த இடத்தில் எல்லாம் வெள்ளிப் பாத்திரங்களே. எங்கள் வசதிகளை கவனிப்பதற்கென்று சமஸ்தான அதிகாரிகள் பலர் அமர்த்தப் பட்டிருந்தார்கள். மகாத்மாவைப் பொறுத்த வரையில் வழக்கமான நிலக்கடலை முதலியனவே அவர் ஆகாரம். எங்களுக்கோ ஆடம்பரமான பலவகை ஆகாராதிகளைத் தயாரித்து வெள்ளித் தட்டுக்களில் எங்களுக்குப் பரிமாறினர்கள். இந்த சிறந்த சாப்பாட்டை நாங்கள் நன்ருக ருசித்தோம். சாப்பாட்டிற்குப் பிறகு மகாத்மாவை நாங்கள் பார்த்தபோது, எங்கள் சாப்பாட்டைப் பற்றி அவர் விசாரித்தார். எங்களுக்குப் பரிமாறப்பட்ட சிறந்த உணவைப் பற்றி மகாதேவ்பாய் அவரிடம் சொன்ஞர். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு அதிகாரி அங்கு வரவே, அவரிடம் மகாத்மா, எங்களுக்கு இத்தகைய ஆடம்பர உணவு பழக்கமில்லாதது என்றும், இதைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் எங்களுக்கு நோய் ஏற்பட்டு விடலாம் என்றும், இதற்கு பதிலாக சாதாரண சப்பாத்தியும் கொஞ்சம் கறிகாயும், சாத்தியமாஞல் கொஞ்சம் பாலும் கொடுத்தால் போதும் என்றும், அதுவே ஆரோக்கியமான ஆகாரம் என்றும் கூறினர். இதன் பலஞக எங்களுக்கு வெள்ளித் தட்டுகளிலும் கிண்ணங்களிலுமே பரிமாறிஞர்களென்ருலும் சம்பரானில் எங்களுக்குப் பழக்கமான சாதாரண சாப்பாடே இங்கும் எங்களுக்குக் கிடைத்தது.

விலையுயர்ந்த, ருசியான சாப்பாட்டின் மீதுள்ள ஆர்வத்தை அறிந்து வெற்றி பெறுவதென்பது யாருக்கும் அதிகக் கஷ்டமானது என்பது மகாத்மாவின் நம்பிக்கை. நாம் பொதுவாக அத்தகைய சாப்பாட்டை விரும்பி சாப்பிடுவது, உடல் சுகமாகவும், பலமாகவும் இருப்பதற்கு

அது அவசியமானது என்பதனால் அல்ல என்றும், ருசியில் நாம் அதிக கவனம் செலுத்துவதுதான் அதற்குக் காரணம் என்றும் மகாத்மா கூறுவார். நமது சாப்பாடே நம் உடலை பாதிக்கிறது. வசதி யிருக்கிறவர்கள் அதிகமாகச் சாப்பிடுவதோடு ருசிக்காக சுகாதாரத்திற்கு ஒவ்வாத உணவையும் சாப்பிட்டுவிட்டு, நோயுறுகின்றனர். போதுமான பணமில்லாதவர்கள் நல்ல சாப்பாடு சாப்பிட முடிவதில்லை; இதனால் இவர்கள் பலவீனமடைந்து நோயுற்று விடுகின்றனர். இதனாலேயே சம்பரானில் உடலுக்கு உகந்த உணவை உட்கொண்டு, ருசிமீது இருக்கும் ஆசையையும் நாங்கள் வெற்றிகொள்ளும்படி மகாத்மா எங்களுக்கு போதித்தார். இதனாலேயே சம்பரானில் அவர் ஆரம்பத்தில் நிலக்கடலையும் பேரிச்சம் பழமும் சாப்பிட்டு வந்தார். பிறகு சமைத்த ஆகாரத்தையும் உண்டார். அப்பொழுதுங்கூட இதே கொள்கையையே அவர் அனுசரித்து வந்தார். பழமானாலும் சரி அல்லது சமைத்த உணவாயினும் சரி, ஒரு வேளைக்கு ஐந்து வகைக்குமேல் இருக்கக்கூடாது என்பது அவர் கருத்து. இந்த ஐந்தில் உப்பையும் மிளகையுங்கூட இரண்டு வகை என்று அவர் கணக்கிடுவார். மசாலா கலந்தது ஏதாவது இருந்தால் மகாத்மா அதை சாப்பிடமாட்டார். ஏனெனில் மசாலாவிலேயே ஐந்தாறு வகையான சாமான்கள் சேர்ந்திருக்கும். இதுவல்லாமல் மசாலாவை உபயோகிப்பது கெடுதி என்றும் அவர் கருதினார். அது உடலை உஷ்ணப்படுத்தி உணர்ச்சிகளை அதிகப்படுத்திவிடும் என்பார். அதோடு உணவுக்கு ருசியையும் மணத்தையும் மசாலை கொடுப்பதால் அது கலந்த உணவைச் சாப்பிடும்போது அதிகமாகச் சாப்பிடச் செய்து உடலைக் கெடுத்து விடுகிறது என்றும் கூறுவார். சம்பரானில் அவர் தானிய உணவு சாப்பிட ஆரம்பித்தபோதுகூட உப்பு, பருப்பு வகைகள், பால் ஆகியவைகளைச் சாப்பிடமாட்டார். அரிசி சாதத்துடன் வேக வைத்த கறிகாய்களில் பாகற்காயே அவருக்கு அதிகப் பிரியமானது. கொஞ்சம் அதிக நீரில் இது வேக வைக்கப்படும். அரிசி சாதத்துடன் இக் காய் வெந்த ஜலத்தையும் கலந்து ருசித்துச் சாப்பிடுவார். பாகற்காய் கசக்கும். அது வெந்த நீரோ இன்னும் அதிகக் கசப்பாயிருக்கும்

ஆனால். அவர் அதை ஆனந்தமாக சாப்பிடுவதையே கண்டோம். இந்தூரில் எங்களுக்கு ஆடம்பரமான சாப்பாடு கூடாது என்று காந்திஜி ஆக்ஞாபித்துவிட்டது உணவு விஷயத்தில் அவர் செய்த பரீட்சையின் ஒரு பகுதி. ஆடம்பரமற்ற எளிய உணவு உடம்புக்கு நல்லது என்பதோடு மலிவானது என்பதை நாங்கள் சீக்கிரத்தில் கண்டு கொண்டோம்.

பின்னால் ஆசிரமங்கள் போன்ற பல பொது ஸ்தாபனங்கள் ஆரம்பமானதும், மசாலா அடியோடு நிராகரிக்கப்பட்டது என்று சொல்லிவிட முடியாதென்றாலும், எளிய சாப்பாடே வழக்கத்தில் வந்துவிட்டது. மசாலாவின் அளவும் உணவில் குறைக்கப்பட்டது. மகாத்மா எதை மேற்கொண்டாலும், அவர் எங்கு போனாலும், ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் அவர் கவனஞ் செலுத்துவார்; அது உடனே முக்கியத்துவத்தை அடைந்துவிடும். மேற்கொண்டிருக்கும் காரியத்திற்கு தாம் எண்ணுவது சம்பந்தமுடையதாக இருக்கும் வரையில் மற்றவைகளைப் பற்றியும் அவர் தமது கருத்துக்களைக் கூறி வருவார். இதனாலேயே வாழ்க்கையின் பல பிரச்னைகளிலும் அவர் கவனஞ் செலுத்த முடிந்ததோடு அவற்றிற்கு அனுபவ ரீதியான ஆலோசனைகளையும் அவரால் கூற முடிந்தது.

ஹிந்தி சம்மேளனத்திற்கு மகாத்மா காந்தி தலைவராயிருந்ததோடு ஹிந்திப் பிரசாரமும் அதன் வேலைத் திட்டங்களில் ஒன்றாகி விட்டதால் தெற்கில் ஹிந்திப் பிரசாரம் பிரபலமடைந்தது. தென்னிந்தியா விஷயத்தில் மகாத்மா முக்கியமாக கவனஞ் செலுத்தியதற்குக் காரணம், தென்னிந்திய மொழிகள் ஹிந்தியுடன் சம்பந்தமே இல்லாத வேறு மொழிகளாக இருந்ததாலேயேயாகும். இப்பகுதியில் ஹிந்தி ஏற்றுக் கொள்ளப்பட்டு விடுமானால் மற்றப் பகுதிகளும் அதை ஒப்புக் கொள்ளுவது எளிதாகிவிடும். எதை அடைவது கஷ்டமோ அதை நிறைவேற்றும் வேலையையே மகாத்மா மேற் கொள்ளுவது வழக்கம். ஏனெனில் கஷ்டமான வேலைகளை நிறைவேற்றி விட்டால் மற்றவைகளில் வெற்றி தானே வந்துவிடும் என்பது அவருக்குத் தெரியும். சம்பாரனில் அவர் மேற்கொண்ட வேலையும் மிகக் கஷ்ட

மானதேயாகும். பீகாரில் அந்த நாளில் பொதுஜன காரியங்களில் சிரத்தை எடுத்துக் கொண்ட நாங்கள், அவ் வேலையை மேற்கொள்ள வேண்டாம் என்று மகாத்மாவைத் தடுக்க முயன்றோம். ஆனால் அவ்வேலையைத் தொடர்ந்து செய்வதில் அவர் உறுதியுடனிருந்தார். அதில் அவர் வெற்றி பெற்றார். அதோடு மற்றவர்கள் பின்பற்ற ஒரு புதிய வழியையும் வகுத்து விட்டார்.

காந்திஜி சம்பாரானிலிருந்தபோது, கேடா ஜில்லா விவசாயிகள், விளைச்சல் நன்றாயில்லாததினாலும் பயிர் பாழானதினாலும் நிலத் தீர்வையைக் குறைக்கவேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர். அந்த ஜில்லாவின் நிலைமையும் மகாத்மாவுக்கு நன்றாகத் தெரியும். சத்தியாக்கிரகத்தை ஆரம்பிப்பதென்று விவசாயிகள் முடிவு செய்தனர். மகாத்மா காந்திஜியுடன் சர்தார் வல்லபபாய் பட்டேலும் விவசாயிகளுக்குத் தலைவர்கள். இந்தூரிலிருந்து மகாத்மா காந்தியும் நானும் சபர்மதி ஆசிரமத்திற்குப் புறப்பட்டோம். அங்கு வீடுகள் இல்லை. ஒரு வீட்டின் ஒரு பாகம் மாத்திரமே கட்டப்பட்டிருந்தது. ஆசிரம வாசிகள் மூங்கில் குடிசைகளில் வசித்து வந்தனர். ஆசிரமம் சமீபத்தில் ஆரம்பமானது. காலை, மாலைப் பிரார்த்தனைகளிருந்தன. கொஞ்சம் நூற்பதும் இருந்ததாக எனக்கு ஞாபகம். மகாத்மா ஆசிரமத்தில் ஒரு நாள் இருந்துவிட்டு கேடா ஜில்லாவில் சுற்றுப் பிரயாணத்திற்குப் புறப்பட்டார். அப்பொழுது ஏப்ரல் மாதக் கடைசி வாரம்; வெய்யில் மகாக் கொடுமையாக இருந்தது. சபர்மதி ஆசிரமத்தில் ரயிலேறி கொஞ்சம் தூரம் பிரயாணஞ் செய்து ஒரு இடத்தில் இறங்கி சிலரைப் போய்ப் பார்த்தோம். மகாத்மா குஜராத்தி பேசுவார். ஆனால் அப்பாஷை எனக்குத் தெரியாது. வரி கொடுப்பதற்காக கால் நடைகள் உள்பட அவர்கள் சொத்துக்கள் முழுவதையும் சர்க்கார் பறிமுதல் செய்தாலும் நிலத் தீர்வை மட்டும் கொடுக்க மறுத்து விடும்படி விவசாயிகளிடம் மகாத்மா கூறினார் என்பதை மாத்திரம் நான் புரிந்துகொண்டேன்.

ஒரு நாள் மத்தியானம், வெய்யில் பொசுக்கிக்கொண்டிருக்கும் வேளையில், நான் மகாத்மாவுடன் வெளியே

போயிருந்தேன். மணல் தரையானதால் சூடு கடுமையானதாக இருந்தது. நான் செருப்புப் போட்டிருந்தேன். ஆனால் அப்பொழுதெல்லாம் மகாத்மா செருப்பும் போடாமல் வெறுங் காலுடன்தான் நடப்பது வழக்கம். எனவே அவர் காலில் அதிகமாகச் சுட்டுவிட்டது. தூரத்தில் ஒரு மரம் இருந்தது; அதன் நிழலில் சிறிது ஒதுங்கலாம். ஆனால் எங்களுக்கும் அம்மரத்திற்கும் நடுவே தகிக்கும் சுடு மணல் வெளி. எனக்கு அதிகக் கஷ்டம் எதுவுமில்லை. ஆனால் மகாத்மா அதிக வேதனைப்படுவதைக் கண்டேன். உடனே என்னிடமிருந்த ஒரு துணியை அவர் காலடியில் போட்டு அதன்மீது சிறிது நேரம் நின்றுகொள்ளும்படிச் சொன்னேன். அப்படிச் செய்ய மகாத்மா மறுத்து விட்டார். இதெல்லாம் அனாவசியமானது என்றார். இந்தியாவில் கோடிக் கணக்கில் மக்கள் வெறுங் காலுடனேயே இருப்பதுடன் இந்த நடுப் பகலில் கொதிக்கும் வெய்யிலில்தான் வேலையும் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றார். வேறு வழியின்றி கீழே போட்ட துணியை நான் கையிலெடுத்துக் கொண்டு மகாத்மாவின் பின்னாலேயே மௌனமாகச் சென்றேன். சம்பாரனில் நடந்த இதுபோன்ற ஒரு சம்பவத்தையும் அதே சமயத்தில் எண்ணினேன்.

குறிப்பிட்ட நேரத்தில் ஒருவரை நிச்சயம் சந்தித்து விடுவது என்பதில் மகாத்மா அதிகக் கண்டிப்பாயிருப்பார். தம் நேரத்தையோ அல்லது பிறர் நேரத்தையோ அவர் ஒரு நிமிஷம்கூட வீணாக்க மாட்டார். இன்ன நேரத்திற்கு ஒருவரை சந்திப்பதென்று நிச்சயிக்கப் பட்டிருக்குமானால், சரியாக அந்த நேரத்திற்கு அவர் அங்கே தவறாது போய் விடுவார். அதே போல தம்மைப் பார்க்க ஒருவர் ஒரு நேரத்தைக் குறிப்பிட்டிருந்தால், அந்த நேரத்தில் அவர் வந்தாக வேண்டும். இதில் எனக்கு அடிக்கடி அனுபவமிருக்கிறது. ஒன்றிரண்டு நிமிஷங்கள் நான் சில சமயங்களில் தாமதித்து விட்டாலும், நான் தாமதித்து வந்ததாக அவர் என்னிடம் சொல்லி விடுவார். ஒருவர் அவரைச் சந்தித்து ஐந்து நிமிஷ நேரம் பேச விரும்பினால் அதற்கு அவர் சம்மதிப்பார். ஆனால் பேசிக் கொண்டிருக்கும்போது அந்த ஐந்து நிமிஷம் ஆகி விட்டதும் தாம் பேசு

வதை நிறுத்திக்கொண்டு மேலும் பேசுவதா யிருந்தால் மற்றோர் முறை சந்திக்கும்படிச் சொல்லியனுப்பி விடுவார்.

இதுவே மகாத்மாவின் வழக்கமென்றாலும் சம்பாரனில் இருந்தபோது இதைப்பற்றி எங்களுக்கு அவ்வளவாகத் தெரியாது. எனவே நாங்கள் நேரத்தை அப்பொழுது அவ்வளவு முக்கியமாகக் கருதவில்லை. ஒருநாள் மாஜிஸ்டிரேட்டை பகல் 2 மணிக்குச் சந்திப்பதாக மகாத்மா ஏற்பாடு செய்திருந்தார். அதிகாரியின் வீடு நாங்களிருந்த வீட்டிற்குத் தூரத்திலிருந்ததால் அங்கே போக ஒரு வாடகை வண்டிக்கு ஏற்பாடு செய்திருந்தோம். நடந்து போனால் அங்கு போய்ச் சேர எவ்வளவு நேரமாகும் என்று மகாத்மா என்னைக் கேட்டார். அரைமணி ஆகும் என்றோம். அதன்பேரில் 1-25 மணிக்கெல்லாம் வண்டி தயாராயிருக்கச் செய்யும்படி எங்களிடம் சொன்னார். மாஜிஸ்டிரேட் வீட்டுக்கு நடந்து போக அரை மணியானால் வண்டியில் 10 நிமிஷங்களில் போய் விடலாம் என்று எண்ணினோம். எனவே, வண்டிக்காரனை 1-30 மணிக்கு வரச் சொல்லி யிருந்தோமென்றாலும் மகாத்மா குறிப்பிட்ட நேரத்தில் அவன் வரும்படிச் செய்ய பிறபாடு அவனுக்கு ஆளனுப்பவில்லை. அவன் வரத் தாமதமாயிற்று. ஒன்றரை மணிக்கெல்லாம் வண்டி தயாராக இருக்கிறதா என்று மகாத்மா கேட்டார். இன்னும் வரவில்லை என்று சொன்னதும் காந்திஜி கால் நடையாகப் புறப்பட்டு விட்டார். வண்டி வந்துவிடும் 2 மணிக்கு எப்படியும் மாஜிஸ்டிரேட் வீட்டுக்குப் போய் விடலாம், சிறிது பொறுக்கலாம், என்று நாங்கள் என்ன சொல்லியும் கேளாமல் அவர் புறப்பட்டு விட்டார். பின்னால் இதைப் பற்றி நாங்கள் அவரைக் கேட்டபோது, புறப்பட தாம் முடிவு செய்தது ஏன் என்பதைக் குறித்து அவர் விளக்கிச் சொன்னார். எதிர்பாராத விதமாக வண்டி குறிப்பிட்ட சமயத்தில் வராது போய் தாமதித்துத் தாம் புறப்பட நேர்ந்தால், குறித்த நேரத்தில் மாஜிஸ்டிரேட்டை பார்க்க முடியாது போகும். இதற்கு இடம் வைக்காமலிருப்பதற்காகவே முன்னுடியே புறப்பட்டு விட்டதாக மகாத்மா சொன்னார். குறிப்பிட்ட நேரத்தில் தவறாது நடந்து கொள்ளுவது என்பதிலும், தமது அன்றாட வேலைகளிலும்

அதற்கான நேரத்தில் அதைச் செய்து முடிப்பதிலும், மகாத்மா எவ்வளவு குறியாக இருக்கிருர் என்பதை நாங்கள் அப்பொழுதுதான் உணர்ந்தோம்.

அந்த பிரயாணத்தின் போதே சர்தார் வல்லபபாய் பட்டேல், ஸ்ரீ சங்கர்லால் பாங்கர், ஸ்ரீமதி அனுசூயாபாய் ஆகியவர்களை நான் முதல் தடவையாகச் சந்தித்தேன். சர்தார் பட்டேலின் கிராமமான கரம்ஷாடில் அவருடைய வீட்டுக்குப் போனது இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. அங்கு சாப்பிட்டோம். பிறகு நாளா வட்டத்தில் எங்களிருவருக்குள்ளும் நட்பு முற்றி நெருங்கிய உறவு பலப்பட்டது. இரண்டு மூன்று நாட்கள் குஜராத் கிராமங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு நான் பாட்னுவுக்குத் திரும்பினேன். ஆனல் நான் அங்கு யிருக்க வேண்டியது அவசியமானல் இருக்கத் தயார் என்று புறப்படுவதற்கு முன்னல் சொன்னேன். அவசியமில்லை என்று கூறப்பட்டதன் பேரிலேயே புறப்பட்டேன்.

பின்னர் சிறிது காலத்திற்கெல்லாம் கேடா சத்தியாக்கிரகம் வெற்றிகரமான முடிவுக்கு வந்தது. அப்பொழுது ஜெர்மனியுடன் நடந்து வந்த யுத்தம் ஒரு நெருக்கடியான கட்டத்திற்கு வந்து விட்டதால் லார்டு செம்ஸ் போர்டுக்கு அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக படைக்கு ஆள் சேர்க்க மகாத்மா அந்த ஜில்லாவில் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டார். வெய்யிலில் பிரயாணம் செய்ததால் கடுமையான நோய்வாய்ப் பட்டார்.

மகாத்மாவின் சுற்றுப் பிரயாணத்தின் மற்ருேர் விளைவு, படைக்கு ஆள் சேர்க்க என் உதவியையும் சர்க்கார் நாடியதாகும். சம்பராணில் மகாத்மாவுடன் நானிருந்தால் ஏராளமானவர்களுடன் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது. இதனுலேயே படைக்கு ஆள் சேர்ப்பதில் நான் தங்களுக்கு உதவியாக இருக்க முடியும் என்று சர்க்கார் எண்ணியிருக்கக்கூடும். மேலும் மாகாணத்தின் இளைஞர்களிடையே எனக்கு அதிகச் செல்வாக்குமிருந்தது. ஏனெனில் நான் பீகார் மாணவர் மகாநாட்டில் பங்கு கொண்டிருந்ததோடு பாட்ன சர்வ கலாசாலை மசோதாவை எதிர்த்ததினுல் எனக்குக் கொஞ்சம் புகழும் உண்டாயிற்று.

படைக்கு ஆள் சேர்ப்பதைத் துரிதப்படுத்த ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டபோது அதில் ஒரு அங்கத்தினனாக இருக்க அழைக்கப்பட்டேன். இந்த வேலையில் மகாத்மாவும் அப்பொழுது ஈடுபட்டிருந்ததால் அழைப்பை நானும் உடனே ஏற்றுக் கொண்டேன். என்னால் இயன்றதைச் செய்தேன். ஆனால் ராணுவத்தில் சேர இளைஞர்கள் தயாராயில்லாததினால் இதில் தோல்வியையே அடைந்தேன். காந்திஜியும் இதில் அதிக வெற்றியை அடையவில்லை. என்றாலும் அந்த நிலைமையில் தம்மால் செய்ய முடிந்ததையெல்லாம் அவர் செய்ததோடு அதனால் நோயுற்று தமது உயிருக்கும் ஆபத்தைத் தேடிக் கொண்டார். நானும் அப்படித்தான் என்று சொல்லிவிட முடியாது. இதில் முயற்சியும் செய்தேன். என்றாலும் எனக்கு மற்ற வேலைகளுமிருந்ததால் இதில் முழு மூச்சுடன் நான் வேலை செய்யவில்லை. அப்படிச் செய்திருந்தாலும் இதில் நான் அதிக வெற்றி பெற்றிருப்பேன் என்று நான் நம்பவில்லை. மகாத்மா எந்த வேலையை மேற்கொண்டாலும் அதிலேயே தம் முழு கவனத்தையும் செலுத்துவார் என்பதை நாங்கள் அறிவோம். அந்த சக்தி எனக்கு அப்பொழுதுமில்லை, இப்பொழுதும் கிடையாது. பலனைப் பற்றியே சிந்திக்காமல் எடுத்த காரியத்தை ஒரே சிந்தனையுடன் செய்து முடிப்பதில் மகாத்மாவுக்கு இருந்த அருங்குணம் எனக்கு வரவே இல்லை.

இந்த சமயத்தில்தான் இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்த சம்பந்தமான மாண்டேகு—செம்ஸ்போர்டு அறிக்கை பிரசுரமாயிற்று. காந்திஜியின் நடவடிக்கைகளினாலும், ஹோம்ரூல் கிளர்ச்சியினாலும் தேசமக்களிடையே ஏற்பட்டிருந்த விழிப்பு, இந்தியாவில் அரசியல் சீர்திருத்தம் கொண்டுவரும்படி பிரிட்டிஷ் சர்க்காரைக் கட்டாயப்படுத்திவிட்டது. இந்தியா மந்திரி ஸ்ரீ மாண்டேகுவும், வைசிராய் லார்டு செம்ஸ் போர்டும் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து தலைவர்களுடன் பேசி அறிக்கையைத் தயாரித்தார்கள். இந்த அறிக்கை நாட்டில் மாறுபட்ட அபிப்பிராயங்களை உண்டாக்கியது. அறிக்கையில் கண்ட சிபார்சுகள் கொஞ்சமும் போதா

தவை என்று சிலர் சொன்னார்கள். மற்றும் சிலரோ, அவை போதுமானவையல்ல என்று ஒப்புக்கொண்டாலும் அதற்காகத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள். அறிக்கையைப் பற்றி ஆலோசிப்பதற்காக காங்கிரஸின் விசேஷ மகாநாடும் பம்பாயில் கூட்டப்பட்டது. ஆனால் இம் மகாநாட்டுக்கு யார் தலைமை வகிப்பது? இதைப் பற்றிப் பேச ஸ்ரீமதி அன்னிபெஸண்டு பாட்னாவுக்கு வந்தார். இவர் பிரசங்கங்களை நான் இதற்கு முன்னால் கேட்டிருந்தபோதிலும் இவரை நான் சந்தித்தது அதுவே முதல் தடவை. தலைவராக யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று நான் விரும்புகிறேன் என்று அவர் என்னைக் கேட்டார். நான் மகாத்மாவின் பெயரைச் சொன்னேன். என் யோசனையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அது அந்தரங்க சம்பாஷணை. "மற்ற வேலைகளுக்கு காந்தி மிகவும் சரியானவர். ஆனால் அவர் ராஜீய வாதி அல்ல" என்று ஸ்ரீமதி பெஸண்டு சொன்னார். ஸ்ரீ சையத் ஹுஸேன் இமாமை தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அவர் முன்கூட்டியே மனதில் முடிவு செய்து கொண்டிருக்கக்கூடும். ஸ்ரீ இமாம் கல்கத்தா ஹைகோர்ட்டு நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு முன்னால் காங்கிரஸ் மகாநாடுகளுக்கு வந்துகொண்டிருந்ததோடு காங்கிரஸ் நடவடிக்கைகளில் சிரத்தையும் கொண்டிருந்தார். காங்கிரஸ் நிதிக்குப் பணமும் உதவினார். முக்கியமாக கிரிமினல் வழக்குகளில் அவர் கூறிய தீர்ப்புக்களின் மூலம் சுயேச்சையான நீதிபதி என்று கீர்த்தியும் பெற்றார். 1916-ல் பாட்னாவில் ஹைகோர்ட்டு ஆரம்பமானபோது இவர் தமது நீதிபதி பதவியை ராஜீநாமாச் செய்துவிட்டு பாட்னாவுக்கு வந்து வக்கீல் தொழிலை நடத்தலானார். எனவே தேசத்தில் இவர் மிகப் பிரபலமானவர். ஸ்ரீமதி பெஸண்டு பல முக்கியஸ்தர்களைக் கலந்தாலோசித்துவிட்டு இவரையே தலைவராகத் தேர்ந்தெடுக்கும்படிச் செய்தார்.

மகாத்மா ராஜீயவாதியல்ல என்று ஸ்ரீமதி பெஸண்டு என்னிடம் சொன்னபோது இதை மெதுவாக நான் ஆட்சேபித்ததோடு சம்பாரனில் அவர் சாதித்திருந்த மகத்தான வேலையைப் பற்றியும் குறிப்பிட்டேன். என்றாலும் பயன் படவில்லை. ஸ்ரீ சையத் ஹுஸேன் இமாமின் பெயரை

அவர் சொன்னதும் அவருக்கு விரோதமாக நான் எதுவும் சொல்லுவதற்கில்லை. காந்தியைப்பற்றி ஸ்ரீமதி பெஸண்டுக்கு இந்த அபிப்பிராயமே தொடர்ந்து இருந்து வந்தது என்று நினைக்கிறேன். பின்னால் அவர் நாடு முழுவதிலும் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தபோது ஸ்ரீமதி பெஸண்டு அதை பலமாக எதிர்த்ததோடு, மோசமான சக்திகளின் பிரதிநிதியே காந்திஜி என்றும் கூறிக் கண்டித்தார்.

அதிகமாக நோயுற்றிருந்ததால் காங்கிரஸின் பம்பாய் மகாநாட்டுக்கு மகாத்மா வர முடியவில்லை. நான் போயிருந்தேன். இம் மகாநாடு முடிந்ததுமே மகாத்மாவைப் பார்க்க ஆமதாபாத்திற்குச் சென்றேன். அப்பொழுது அங்நகரின் மிர்ஜாப்பூர் பகுதியில் ஸ்ரீ அம்பாலால் வீட்டில் அவர் தங்கியிருந்தார். நானும் அவருடன் தங்கினேன். அவர் வயிற்றுக்கடுப்பால் அவதிப்பட்டதோடு அவருக்கு ஜுரமும் இருந்தது. அவர் மருந்து சாப்பிடுவதில்லை; பால், தயிர், நெய் முதலியவைகளையும் சாப்பிடுவதில்லை. அவர் தேக நிலையைக் குறித்து நாங்களெல்லோரும் கவலைப்பட்டதோடு அவர் எப்படி குணமடையப் போகிறார் என்றும் ஆச்சரியப்பட்டோம். சில தினங்கள் அங்கேயே தங்கி விடுவது என்று முடிவு செய்துவிட்டேன். தினந்தோறும் அவருக்குப் பக்கத்தில் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்பேன். பிறகு நகருக்குள் போவேன். சரித்திரப் பிரசித்தமான இடங்களைப் பார்க்கவும் ஒரு நாள் போயிருந்தேன். திரும்பி வந்தபோது, மகாத்மா ஆசிரமத்திற்குப் போய் விட்டார் என்று கேள்விப்பட்டேன். நானும் தொடர்ந்து அங்கு சென்றேன். மறுநாளே புறப்பட்டு விடுவது என்ற முடிவுக்கும் வந்தேன்.

அப்பொழுது ஆசிரமத்தில் சில வீடுகள் கட்டப்பட்டிருந்தன. அதிகாலையில் நான் பார்க்கப் போனபோது அந்த வீடுகளில் ஒன்றில் ஒரு பாயின் பேரில் மகாத்மா அமைதியின்றி கஷ்டப்பட்டுக்கொண்டு படுத்திருந்ததைப் பார்த்தேன். ஸ்ரீ சகன்லால் காந்தியும் உள்ளே இருந்தார். பிறகு மகாத்மா பேசினார்: "எனக்கு ஜுரமிருந்த போதிலும் பிடிவாதமாகவே நான் இங்கே வந்துவிட்டேன். மிர்ஜாப்பூரில் அந்தப் பெரிய மாளிகையில் நான் தங்கி

யிருக்கும்போது, என் இடம் ஆசிரமமேயாகையால் அங்கு எனக்கு எந்த வேலையும் இல்லை என்று எண்ணினேன். ஆசிரமத்திற்குப் போய்விடும் வரையில் எனக்கு மன அமைதி இருக்காது என்றும் தோன்றியது. நான் இங்கு வந்த பிறகு நீண்ட நேரம் வருமாறு சிந்தித்துக்கொண்டே படுத்திருந்தேன்: "இதுவரையில் என்ன செய்து வந்திருக்கிறேன்? கையிலிருக்கும் வேலையை முடிப்பதற்கு முன்னால் இன்னொன்றை எடுத்துக்கொண்டு விடுகிறேன். இரண்டாவது வேலையை முடிக்கும் முன்பு மூன்றாவது வேலைக்குப் போய் விடுகிறேன். எவ்வளவோ நம்பிக்கையின் பேரிலும் உற்சாகத்தோடும் இந்த ஆசிரமத்தை ஆரம்பித்தேன். இது உதாரணமான ஆசிரமமாக இருக்க வேண்டும், இதிலிருப்பவர்களை உதாரண புருஷர்களாக்க வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் சரியான வகையில் ஆரம்பிப்பதற்கு முன்னால் நான் சம்பாரனுக்குப் போக நேர்ந்ததோடு இதை நிர்வகிக்கும் பாரத்தை எல்லாம் உங்கள் தலைமீது சுமத்தவேண்டியதாயிற்று. ஆசிரமம் ஆரம்பமான தேதியில்கூட நான் இங்கு இருக்க முடியாது போயிற்று.

"சம்பாரனைப் பொறுத்த வரையில் சர்க்காரின் தலையீட்டினால் விவசாயிகளுக்குக் கஷ்ட நிவாரணம் கிடைக்கும்படிச் செய்வதில் நான் மேற்கொண்ட வேலை சம்பந்தப்பட்ட வரையில் நான் வெற்றியே பெற்றேன். ஆனால் அவர்களுக்கு நல் வாழ்விற்கு வேண்டியதெல்லாம் அவ்வளவுதானா? அவர்கள் மத்தியில் வாழ்ந்து, அவர்களுடைய வாழ்க்கை முறையில் அபிவிருத்திகளைச் செய்து, அவர்களை பயமற்றவர்களாக்கி, அவர்களுக்குச் சரியான கல்வியும் கிடைக்கும்படிச் செய்வது போன்றதே உண்மையான வேலை. இதற்காக சில பள்ளிக்கூடங்களையும் ஆரம்பித்தேன். அவர்களுடன் வசிக்க விரும்பினேன். இத்தகைய ஆக்க வேலைகள் சரியானபடி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லுவதற்கு முன்னால் நான் கேடாவுக்குப் போக வேண்டியதாகி விட்டது. கேடாவிலும் என்னுடைய வேலை பாதி முடிவதற்கு முன்னால் பட்டாளத்திற்கு ஆள் சேர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். இந்த வேலையில் நான் ஈடுபட்டிருந்த போதே

நோயுற்றேன். இப்பொழுது என்ன நடக்கப் போகிறதென்பது எனக்குத் தெரியவில்லை.

"மேலும் ஆமதாபாத் மில் தொழிலாளரிடையே வேலை செய்ய ஆரம்பித்தேன். பிறகு அதை விட்டுவிட்டு வேறு காரியங்களில் ஈடுபட நேர்ந்தது. இப்படி அரைகுறையான வேலைகளைச் செய்வதிலேயே என் வாழ்நாள் கழியப் போகிறதா? நேற்று அந்தப் பெரிய மாளிகையில் எனக்கு எந்த நிம்மதியுமில்லை. உண்மையைச் சொன்னால், அங்கு வசிப்பதனால் குற்றஞ் செய்வதாகவே எனக்குப்பட்டது. இதனாலேயே ஜுரமிருந்தும் ஆசிரமத்திற்கு போயாக வேண்டும் என்று வற்புறுத்தினேன். இரவெல்லாம் திரும்பத்திரும்ப இதையே சிந்தித்துக் கொண்டிருந்தேன். அடுத்தபடி என்ன நடக்கப் போகிறது என்பது எனக்குத் தெரியவில்லை."

மகாத்மா உணர்ச்சி வசப்பட்டிருந்தார். கண்களிலிருந்து நீர் வடிந்து கொண்டிருந்தது. குழந்தை போல் அழ ஆரம்பித்து விட்டார். நாங்கள் அசைவற்று உட்கார்ந்திருந்தோம். என்ன சொல்லுவது, எப்படி அவரைத் தேற்றுவது என்பது எங்களுக்குத் தோன்றவில்லை. என்றாலும் சிறிது நேரத்திற்கெல்லாம் அவரே சாந்தமடைந்து தேறி, வருமாறு கூறினார்: "இந்தக் கண்ணீர் என் மனதிற்குக் கொஞ்சம் சாந்தியை அளித்திருக்கிறது. கடவுள் சம்மதம் எதுவோ அது நடக்கும்." சிறிது நேரம் அமைதியாகப் படுத்திருந்தார். பிறகு எங்களைப் பார்த்து ஆசிரமத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். அதற்கப்புறமே நான் பாட்னாவுக்குப் புறப்பட அனுமதியளித்தார்.

அந்தக் காட்சியை நான் என்றுமே மறக்க முடியாது. பல காரியங்களை அரைகுறையாக விட்டிருப்பதாக அவர் எண்ணினார் என்பது உண்மை, ஆயினும் அவர் சாதித்திருப்பதும் அதிகம். அவர் ஆரம்பித்த காரியங்களைப் பூர்த்தி செய்ய வேண்டியது இந்தியாவின், அவரைப் பின்பற்றுவோர் என்று சொல்லிக் கொள்ளுவோரின் கடமை. அவர்கள் அவ்விதம் செய்யவில்லையென்றால் இது நாட்டின் துரதிருஷ்டம் என்பதோடு அவர்களின் குற்றம் என்றுதான் சொல்ல வேண்டும்.

மக்களின் வெறுப்பும் கொதிப்பும்

ஜெர்மனியோடு யுத்தம் நடந்து வந்த காலத்தில் இந்தியாவின் சரித்திரத்தில் அதிக முக்கியமானதான இரு காரியங்கள் நடந்தன. ஒன்றைக் குறித்து முன்னாடியே சொல்லியிருக்கிறேன். மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தமும், அதைக் குறித்து இந்திய மக்களிடையே ஏற்பட்ட மாறுபட்ட அபிப்பிராயமுமே அது. மற்றோர் சம்பவம், ரௌலட் கமிஷன் நியமனம். நீதிபதி ஸ்ரீ. ரௌலட்டின் தலைமையில் இக் கமிஷன் நியமிக்கப்பட்டதால் இதற்கு அப் பெயர். புரட்சி ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளைப்பற்றி விசாரித்து, அந்த நடவடிக்கைகளிலிருந்து ஆட்சியைப் பாதுகாப்பதற்கு வேண்டிய யோசனைகளைக் கூறுவதே இக் கமிஷனுக்கு இடப்பட்ட வேலை. இக் கமிஷன் ஒரு அறிக்கையைத் தயாரித்தது. புரட்சி ஸ்தாபனங்களின் சரித்திரம் அதில் கூறப்பட்டிருந்ததோடு, யுத்தம் நடந்துகொண்டிருக்கையில் இந்தியாவிலும் வெளியிலும் ஆட்சியின் மீது துவேஷத்தைக் கிளப்பிவிட இவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் சாராம்சமும் அதில் சொல்லப்பட்டிருந்தது. சர்க்காருக்கு விரோதமாக புரட்சிக்காரர்கள் எதுவும் செய்து விடாதபடி தடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கும் வரையில் அக் கமிஷனின் சிபார்சுகள் இருந்தன. யுத்த காலத்தில் நாட்டிற்குள் எதிரி சதி ஏற்பாடுகளைச் செய்ய முடியாதபடித் தடுக்க எல்லா நாடுகளிலுமே சட்டங்கள் செய்யப்படுகின்றன. ஒருவர் மீது சந்தேகமிருந்தால், அவரை கோர்ட்டு முன்னால் விசாரணைக்குக் கொண்டுவராமலேயே அவரைக் கைது செய்து சிறை வைக்கவும், வீடுகளையும், சொத்துக்களையும் எடுத்துக் கொள்ளவும் சர்க்காருக்கு இந்தச் சட்டப்படி அதிகாரம் ஏற்படுகிறது. எதிரியுடன் எப்படியும் போராடியாக வேண்டும் என்று மக்கள் உணர்வதால் அம் மக்கள் இத்தகைய சட்டங்களுக்கு உடன்படுகிறார்கள். தேசிய

சர்க்கார்கள் இருக்குமிடங்களில், இத்தகைய அதிகாரங்களை அமுலுக்குக் கொண்டுவரவேண்டிய தேசீய அவசியம் ஏற்படும்போதுதான், இத்தகைய கடுமையான சட்டங்களைப் பிரயோகிக்கிறார்கள். இத்தகைய அதிகாரத்தை யுத்த காலத்தில் இந்திய சர்க்கார் பெற்றிருந்தது. ஆனால் இந்நாட்டில் தேசிய சர்க்கார் இல்லாததினால், தவறான வழிகளிலும், சட்டவிரோதமாகவும்கூட இந்த அதிகாரங்கள் உபயோகிக்கப்பட்டு வந்தன. யுத்த முயற்சிக்கு உதவவும், படைகளில் சேரும்படிச் செய்யவும், இந்த அதிகாரங்களைக் கொண்டு மக்கள் கொடுமை செய்யப்பட்டனர். அக்கிரமங்கள் எத்தனையோ நடந்துவிட்டன. இதன் விளைவாக நாட்டில் எங்கும் அதிருப்தியும் வெறுப்பும் நிலவியது முக்கியமாக பாஞ்சாலத்தில், அதிக ஆணவமும் கொடுமையுமுள்ளவரான சர் மைகேல் ஓடயர் என்பவர் லெப்டினென்ட் கவர்னராயிருந்ததால், அங்கு மக்களிடையே வெறுப்பும் கொதிப்பும் மிகவும் அதிகரித்திருந்தது. ரௌலட் கமிஷனின் சிபார்சுகளோ, இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் ஆட்சேபகரமான சில விதிகளை நிரந்தரச் சட்டமாக்கிக் கொண்டுவிடும் வகையில் இருந்தன. (யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது கமிஷன் நியமிக்கப்பட்டது. ஆனால் அதன் அறிக்கை யுத்தம் முடிந்த பிறகே பிரசுரமாயிற்று.) கமிஷனின் சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக சர்க்கார் ஒரு மசோதாவைத் தயாரித்து அதை இம்பீரியல் சட்டசபை முன்பு கொண்டுவந்தார்கள். நீண்ட காலமாகவே சர்க்கார் இரட்டைக் கொள்கையை அனுசரித்து வந்தது. சுயராஜ்யம் கேட்கிறவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக சில அரசியல் சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவருவார்கள். மற்றோர் பக்கத்தில் தொல்லையாக இருப்பார்கள் என்று தாம் கருதுகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவார்கள். அந்த இரட்டைக் கொள்கையின்படி, அரசியல் சீர்திருத்த யோசனை கொண்டுவரப்பட்டிருந்த அதே சமயத்தில் ரௌலட் மசோதாவையும் கொண்டுவந்தார்கள். இந்த இரண்டுமே நாட்டில் ஓரே சமயத்தில் கொண்டுவரப்பட்டன. அரசியல் சீர்திருத்த சம்பந்தமாக நாட்டில் இருதரப்பட்ட கருத்

துக்கள் இருந்ததுண்டு. ஆனால் ரௌலட் கமிஷனின் சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த இரு "கொடிய மசோதாக்கள்" விஷயத்திலோ நாட்டில் மாறுபட்ட கருத்தே கிடையாது. மிதவாதிகள், தீவிரவாதிகள், புரட்சிக்காரர்கள் ஆகிய எல்லோருமே இம் மசோதாக்களை பலமாக எதிர்த்தனர்.

அந்த நாட்களில் இம்பீரியல் சட்டசபையில் மக்களின் பிரதிநிதிகளாக இருந்தோர் மிகச் சிலர். பெரும்பாலான மெம்பர்கள், சர்க்கார் அதிகாரிகளும், சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்களுமே. அந்த சட்டசபைக்குத் தேர்தல் மூலம் சென்றிருந்த ஒவ்வொரு அங்கத்தினரும் அம் மசோதாக்களை பலமாக எதிர்த்தார்கள். தேசம் முழுதுமே ஒரே குரலில் அம் மசோதாவை எதிர்த்தது. யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு சர்க்காருக்கு உதவியாக இருந்தவர்களுக்கெல்லாம் ஒரு பரிசாகவே இம் மசோதாக்களை சர்க்கார் கொண்டு வருகிறது என்றும் சொன்னார்கள். ஆனால் இந்த எதிர்ப்புகளை யெல்லாம் சர்க்கார் கொஞ்சமும் பொருட்படுத்தவே இல்லை. மசோதாக்கள் சட்டமாகிவிடப் போவது நிச்சயம் என்றும் தோன்றியது. கடுமையான நோயிலிருந்து அப்பொழுதுதான் குணமடைந்திருந்த மகாத்மா காந்தி இதைக் கண்டு மனவேதனை அடைந்தார். மற்றவர்களோ, மசோதாவை எதிர்த்துப் பேசிவிட்டு தங்களுடைய எதிர்ப்பை நடைமுறையில் உருவாக்குவதற்கு என்ன செய்வது என்பதைக் குறித்துக் கொஞ்சமும் கவலைப்படாமல் சும்மா இருந்து விடுவார்கள். ஆனால் தம்முடைய எதிர்ப்பு கவனிக்கப்படாமல் அலட்சியமும் செய்யப்பட்டு விடுமானால், சும்மா இருந்துவிடக் கூடியவரல்ல மகாத்மா. மசோதாக்களுக்கு எதிர்ப்பை வலுப்படுத்த நாடெங்கும் அநேக பொதுக்கூட்டங்களை நடத்தச் சொன்னார். இத்தகைய எதிர்ப்புக் கூட்டங்கள் பல பீகாரில், முக்கியமாக பாட்னாவில், நடந்தன. இவற்றிற்கு ஏராளமான மக்கள் வந்தார்கள். பீகாரில் அதற்கு முன்னால் அத்தகைய பெரிய பொதுக்கூட்டங்களை நான் பார்த்ததே கிடையாது. மக்களிடையே ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டதோடு அவர்களுக்கு ஒரு உணர்ச்சி வேகமும் எழுந்தது.

சர்க்கார் பிடிவாதமாக இருக்கிறது என்பது முடிவாகத் தெரிந்துவிட்டதும், இந்த மசோதாக்கள் சட்டமாக்கப்பட்டாலும் அவற்றிற்கு அடங்கி நடக்க மக்கள் மறுத்துவிட வேண்டும் என்று மகாத்மா யோசனை கூறினார். இதற்குத் தயாராயிருப்பவர்களை ஒரு பிரதிக்ஞையில் கையெழுத்திடும்படியும் கேட்டுக்கொண்டார். அப்பொழுது நான் பாட்னாவில் வசித்து வந்ததால் பீகாரில் அத்தகைய கையெழுத்துக்களைச் சேகரிக்கும்படி நான் அறிவிக்கப்பட்டேன். சம்பாரனில் மகாத்மா காந்தியின் சகாவாக இருந்தவர்கள் எல்லோரும், மற்றும் அநேகரும் சந்தோஷமாக அப் பிரதிக்ஞையில் கையெழுத்திட்டார்கள் என்பதை நான் கூறத் தேவையில்லை.

இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு, சட்டமறுப்புத் திட்டமொன்றை தேசத்தின் முன்பு மகாத்மா காந்தி வைத்தது இதுவே முதற்தடவை என்றாலும் அக்கொடிய மசோதாக்களின் ஷரத்துக்களை மீறி விடுவது என்பது மிகக் கஷ்டமானது. ஏனெனில் சுலபத்தில் மீறிவிடக் கூடியவைகளாக அவை இல்லை; ஆகையால் தாம் தயாரித்திருந்த பிரதிக்ஞையில், இக்கஷ்டத்தை சமாளிப்பதற்காகவே, மகாத்மா ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டிருந்தார். அப் பிரதிக்ஞையில் கையெழுத்திடுகிறவர்கள், வேறு எந்தெந்தச் சட்டங்களையும் மீற வேண்டுமென்று அப்போதைக்கப்போது சத்தியாக்கிரக சபை என்ற கமிட்டி அறிவிக்கிறதோ அவற்றையும் மீறுவதாகப் பிரதிக்ஞை செய்து கொள்ளுவதாக அதில் குறிப்பிட்டிருந்தார்.

நாடெங்கும் அளவு கடந்த உற்சாகம் தென்பட்டது. கொடிய மசோதாக்களை அநேகர் பலமாக எதிர்த்தபோதிலும், சட்டமறுப்புக் கிளர்ச்சியை அவர்கள் ஆதரிக்கவில்லை. ஆகவே மகாத்மா காந்தியின் வேலை முறைக்கும், அச்சமயம் வரையில் ராஜீய காரியங்களில் தீவிரமாக இருந்த மற்றவர்களின் முறைக்கும், அடிப்படையான வித்தியாசமுண்டு என்பது அப்பொழுது தெளிவாகிவிட்டது. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் சம்பந்தமாக காங்கிரஸ்காரர்களிடையே ஏற்பட்ட அபிப்பிராயபேதம், மகாத்மா தமது வேலைத் திட்டத்தை தேசத்

தின் முன்னால் வைத்ததும், இன்னும் அதிக வெளிப்படை யானதாகிவிட்டது. ஸ்ரீ ஹாஸன் இமாம் பிரதிக்ஞையில் கையெழுத்திட்டு விட்டதால் இந்த வேற்றுமை பீகாரில் அவ்வளவாகத் தென்படவில்லை.

பட்டினி விரதமிருந்து, எல்லா வேலைகளையும் நிறுத்தி விட்டு, ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்களை நடத்தி, ரௌலட் மசோதாக்களை எதிர்த்து நாடெங்கும் தீர்மானங் களையும் நிறைவேற்றுவதற்கு மகாத்மா ஒரு நாளைக் குறிப் பிட்டார். மக்கள் தங்களைப் புனிதப்படுத்திக்கொள்ளவே இத் திட்டம் என்று மகாத்மா கூறியதோடு அகிம்சையின் அவசியத்தையும் அதிகமாக வற்புறுத்தினார். பல மதத்தின ரும் அவரவர்களின் முறைப்படி தங்கள் பிரார்த்தனை இடங்களில் அன்று பிரார்த்தனைகள் செய்யும்படியும் மகாத்மா கேட்டுக்கொண்டார். இதற்காக குறிப்பிட் டிருந்த நாளை பத்திரிகைகளில் வெளியிட்டதில் சிறிது குழப்பமேற்பட்டதால் இரு நாட்களில் அந்நாளை மக்கள் அனுஷ்டித்தனர். சில இடங்களில் ஒரு வாரங் கழித்தும் அந்நாளை அனுஷ்டித்தார்கள்.

இந்த சத்தியாக்கிரகச் செய்தி நாட்டிற்குப் புதியது. இதுவரையில் சுதந்திர இயக்கம், தீர்மானங்களை நிறை வேற்றுவதோடும், பத்திரிகைகளுக்கு அறிக்கைகளை வெளி யிடுவதோடுமே இருந்து வந்தது. வங்காளத்தில் பிரி வினையை எதிர்த்துக் கிளர்ச்சி நடந்துவந்த காலத்தில், பிரிட்டிஷ் சரக்குகள் பகிஷ்காரமும், சுதேசி இயக்கமும் இருந்தன என்பது உண்மை. ஆனால் அந்தத் திட்டம், அந்த ஒரு காரியத்திற்காக மாத்திரமே ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்ததோடு வங்கப் பிரிவினைப் பிரச்னை தீர்ந்ததும் அத் திட்டம் கைவிடப்பட்டது. அக் கிளர்ச்சி செய்தவர் களில் அதி தீவிர நோக்கம் கொண்டிருந்தவர்கள், புரட்சி இயக்கத்தில் சேர்ந்துகொண்டு, அக் கிளர்ச்சியை அடக்கு வதில் தீவிரமாக இருந்த இந்திய, ஆங்கில அதிகாரிகளைக் கொன்றுவிடுவதில் ஈடுபட்டனர். இதற்காக இவர்கள் வெடிகுண்டுகளைச் செய்ததோடு முடிந்த போதெல்லாம் கைத் துப்பாக்கிகள் முதலிய ஆயுதங்களையும் சேர்த்து வந்தார்கள். சிலர் இவர்களுக்கு ரகசியமாகப் பண உதவி

செய்து வந்தார்கள். பெருங் கொள்ளைகளை யடித்தும் புரட்சிக்காரர்கள் நிதி சேர்த்தனர். இக் கட்சியில் இளைஞர்களே அங்கம் பெற்றிருந்தனர். இக் கட்சி ரகசியத்தில் இயங்கி வந்ததால் இதில் அங்கத்தினர் தொகையை அதிகரிக்க எதுவும் செய்யப்படவில்லை. அதோடு பொது ஜன ஆதரவைப் பெறுவதற்கு பிரசாரம் செய்வதற்கும் முடியாது போயிற்று. என்றாலும் அந்த இயக்கத்தில் சேர்ந்திருந்தவர்கள், தங்கள் போராட்டத்தில் திடமான உறுதியுடனிருந்ததோடு உயிரைப் பெரிதாக மதிக்காமலும் இருந்து வந்தார்கள். இவர்களில் பலர் தூக்கிலிடப்பட்டனர்: பலர் தீவாந்தர தண்டனையையும் அடைந்தார்கள்.

இக் கட்சியிலிருந்த முக்கியமான பலவீனம், இவர்களில் சிலர் கைது செய்யப்பட்டு கோர்ட்டு முன்பு விசாரணைக்குக் கொண்டு வரப்படும்போது, இக் கட்சியைச் சேர்ந்த சிலரை போலீஸார் சரிப்படுத்தி அவர்களைப் பிராசிகியூஷன் தரப்பு சாட்சிகளாகக் கொண்டுவர முடிந்ததேயாகும். என்றாலும் இவ் வழக்குகளில் நன்றாக எதிர் வழக்காடினார்கள். தண்டனை யடையாது தப்பி விடுவதற்கும் முயற்சிகள் செய்யப்பட்டன.

மகாத்மா காந்தி தேசத்தின் முன்பு கொண்டு வந்த வேலைத் திட்டமோ, இதற்கு முற்றிலும் மாறுபட்டது. எதிரிக்கு எந்தவித துன்பமும் விளைவிப்பதில்லை, ரகசியத்தில் எதையும் செய்வதில்லை என்பது சுதந்திரப் போராட்டத்தில் முதன் முறையாக இப்பொழுது கொண்டு வரப்பட்டது. எல்லாம் பகிரங்கமாக செய்யப்படும்; விதிக்கப்படும் தண்டனையை புன்முறுவலோடு ஏற்றுக்கொண்டு ஆனந்தமாக அனுபவிக்கப்படும். ரௌலட் மசோதாக்களுக்கு எதிரான கிளர்ச்சி செய்யப்பட்ட காலத்திலிருந்ததைப்போல, இதற்கு முன்னால், பொதுக் கூட்டங்களில் இவ்வளவு மககள் கூடியதுமில்லை; இத்தனை பொதுக் கூட்டங்கள் நடந்ததும் கிடையாது. இப்பொழுது இருந்ததைப்போல மக்களிடையே இவ்வளவு பரபரப்பும் உற்சாகமும் இருந்ததும் கிடையாது. முன்னால் நாட்டிலிருந்த ராஜீய நடவடிக்கைகளில் திருப்தியடையாமலிருந்தவர்

களையும், அந்த நடவடிக்கைகள் லட்சியமற்றவை, பலனில்லாதவை என்று நினைத்தவர்களையும்கூட, புரட்சித் திட்டத்தை ஆதரிக்காதவர்களையும், மகாத்மாவின் இப் புதிய திட்டம் அதிகமாகக் கவர்ந்துவிட்டது. மக்கள் கையில் அவர் புதியதோர் ஆயுதத்தை அளித்துவிட்டதாகவே தோன்றியது.

சம்பாரனைவிட்டுப் போன பிறகும்கூட மகாத்மா பீகாருடன் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார். அம்மாகாண மக்கள் தாம் கூறுகிறபடி தயக்கமின்றி நடப்பார்கள் என்ற நம்பிக்கையும் அவருக்கு இருந்தது. இதில் அவர் எண்ணியது மிகவும் சரி. சத்தியாக்கிரகம் எப்பொழுது, எந்தவகையில் ஆரம்பமாகப் போகிறது என்பது தெளிவாக இல்லாமலிருந்தபோதிலும், சத்தியாக்கிரக வேலையை நாங்கள் மேற்கொண்டபோது, எங்களுடைய பொறுப்புகளைப் பற்றி நாங்கள் நன்றாக உணர்ந்தே இருந்தோம். ஏப்ரல் 6-ந் தேதி நடந்த ஹர்த்தாலும், அன்று நடந்த ஊர்வலமும், பொதுக்கூட்டமும் போல அதற்கு முன்னால் பீகாரில் என்றுமே நடந்ததில்லை. பாட்னாவில் ஹர்த்தால் பூரணமானதாக இருந்தது என்பது மாத்திரமல்ல, மற்ற டவுன்களிலும், பீகார் கிராமங்களிலெல்லாம்கூட, ஹர்த்தால் நன்றாக நடந்தது. மக்கள் அதிக உற்சாகத்தோடும் அதை நடத்தினார்கள். திறந்திருந்த கடை எதுவுமே கிடையாது; வாடகைக்கு ஒரு வண்டியும் அன்று இல்லை. நகரில் ஹிந்துக்கள் யாவரும் அந்நாளை மத சம்பந்தமான விழா நாளைப் போலவே கொண்டாடினர். கங்கையில் நீராடி கோயில்களில் பிரார்த்தனை செய்தார்கள். முஸ்லிம்கள் மசூதிகளில் தொழுதனர். மத்தியானம் இரண்டரை மைல் நீளத்திற்கு ஒரு ஊர்வலம் நடந்தது. அதிலிருந்த ஆண்கள், தலையில் எதுவுமின்றி, காலில் செருப்பு இல்லாமல் சென்றார்கள். பாட்னா குய்லாவில் கூட்டம் நடப்பதாயிருந்தது. ஆனால் இருந்த கூட்டத்திற்கு அந்த இடம் போதவில்லை. நதிக்கரை வரையில் மக்கள் நிற்க வேண்டியதாயிற்று. பாட்னாவில் அதற்கு முன்னால் அப்படிப்பட்ட கூட்டம் நடந்ததேயில்லை. சம்பாரனில் மகாத்மா செய்த அற்புத வேலையைப்பற்றி குக்கிராமத்திலிருந்தவர்களும் அறிந்திருந்தார்கள். கிராமங்களில்,

முக்கியமாக வடக்கு பீகாரில், அவர் பெயர் தெரியாதவர்களில்லை. இதனால் ஏப்ரல் 6-ந் தேதி யன்று ஒவ்வொரு கிராம வாசியும் தனது வேலையை நிறுத்திவிட்டார்கள். அன்று யாரும் ஏர், வண்டி பூட்டவில்லை. மக்கள் அன்று பட்டினி இருந்ததோடு எங்கும் பொதுக்கூட்டங்களையும் நடத்தினார்கள். இச் செய்திகள் எங்களுக்குக் கிடைத்த போது நாங்கள் அதிக உற்சாகமடைந்தோம். இதன் சம்பந்தமாக மேற்கொண்டும் செய்ய வேண்டியதற்கு ஆக்ஞையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்.

இதற்கு மத்தியில் டில்லியில் சில சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன. மகாத்மா உடனே ஆமதாபாத்திலிருந்து டில்லிக்குப் புறப்பட்டார். ஆனால் அவர் டில்லிக்குச் சமீபமாகப் போனதும் சர்க்காரின் உத்தரவின் பேரில் அவரைக் கைது செய்து எங்கோ ஒரு இடத்திற்குக் கொண்டுபோய் விட்டனர். எங்கு கொண்டு போனார்கள் என்பதை அவருடைய சகாக்களுக்குச் சொல்லவில்லை. காந்திஜியுடன் பிரயாணம் செய்த ஸ்ரீ மகாதேவ தேசாய்க்குக்கூட மகாத்மா எங்கு கொண்டு போகப்பட்டார் என்பது தெரியாது. அவர் அவசரமாக பம்பாய்க்குத் திரும்பினார். மகாத்மா கைது செய்யப்பட்டுவிட்டார் என்பதை அவர் எனக்குத் தந்தி மூலம் அறிவித்துவிட்டு மேற்கொண்டு செய்ய வேண்டியதைப்பற்றி முடிவு செய்வதை முன்னிட்டு உடனே நான் பம்பாய்க்கு வரவேண்டுமென்றும் அழைத்தார். தந்தி கிடைத்ததும் பம்பாய்க்குப் புறப்பட்டேன். ஏதோ நடந்தே திரும். இதற்கு அதிக காலம் காக்க வேண்டியிருக்காது என்று எனக்குத் தோன்றியது.

பம்பாய்க்குப் போகும் வழியில் எனக்கு சில பத்திரிகைகள் கிடைத்தன. அவற்றிலிருந்து, பல இடங்களில் கலவரங்கள் மூண்டன என அறிந்தேன். பாட்னாவிலிருந்து பம்பாய்க்கு ரயிலில் போய்ச் சேர இரண்டு நாட்களாகும். கலவரம் நடந்த மறுநாளே அச் செய்தி எனக்குக் கிடைத்தது. இவ்விதம் நான் பம்பாய் போய்ச் சேருவதற்குள் கலவரம் நடந்து மூன்று அல்லது நான்கு நாட்களாகிவிட்டன. நான் பம்பாய் சேர்ந்ததும், மகாத்மாவை

அந் நகருக்குக் கொண்டுவந்து விடுதலை செய்துவிட்டார்கள் என அறிந்தேன். அவர் கைது செய்யப்பட்டார் என்ற செய்தி வெளியானதும் பம்பாயிலும் கலவரம் நடந்தது. ஆனால் நகருக்கு அவர் வந்துவிட்டதும் அமைதி ஏற்பட்டது.

ஆமதாபாத்தில் பெருங் கலவரங்கள் நடந்திருந்ததால் பம்பாய்க்கு வந்ததுமே மகாத்மா காந்தி ஆமதாபாத்துக்குக் கிளம்பிவிட்டார். இதன் பிறகு பம்பாயில் நான் செய்ய வேண்டியது எதுவுமே இல்லாததால் நானும் ஆமதாபாத் போவது என நினைத்தேன். அன்று மாலை ரயிலிலேயே புறப்பட்டேன். கலவரத்தை அடக்குவதற்கு சர்க்கார் எடுத்துக்கொண்டிருந்த நடவடிக்கைகள் மேற்கொண்டும் அமுலில் இருந்து வந்தபோதிலும், மகாத்மா சென்றதும் ஆமதாபாத்திலும் கலவரங்கள் அடங்கிவிட்டன. நகரின் எல்லாப் பகுதிகளிலும் போலீஸாரும், ராணுவத்தினரும் ரோந்து வந்து கொண்டிருந்தார்கள். ரகசியப் போலீஸின் ஆசாமி ஒருவர் எனக்கு ஒரு குதிரை வண்டியை அமர்த்திக் கொடுக்காதிருந்தால் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சபர்மதி ஆசிரமத்திற்குப் போய்ச் சேர எனக்கு அதிகக் கஷ்டமிருந்திருக்கும். நகரின் பல பகுதிகளுக்கும் ஊழியர்களை அனுப்பி, மக்களுக்கு நிலைமையை விளக்கிக் கூறி அமைதியை நிலைநாட்டுவதில் மகாத்மா தீவிரமாக ஈடுபட்டிருந்ததை ஆசிரமத்திற்குப் போனதும் கண்டேன். நகரின் பெரும்பகுதிகளில் அப்பொழுதே அமைதி ஏற்பட்டுவிட்டது. என்றாலும் அமைதியாக இருக்க மக்களிடையே பிரசாரம் செய்வதற்கு அப்பொழுதும் அவசியமிருந்தது. நிலைமையில் அபிவிருத்தி உண்டானதும் மகாத்மா பம்பாய்க்குப் புறப்பட்டார். அவர் சென்ற வண்டியிலேயே அவருடன் நானும் போனேன். அன்றிரவு அவர் தூங்கவேயில்லை. விழித்திருந்து எதையோ எழுதிக் கொண்டிருந்தார். அதிகாலையில் அதைப் படித்துப் பார்க்கும்படி என்னிடம் கொடுத்தார். சத்தியாக்கிரகத்தை நிறுத்தி வைக்கும் அறிக்கையே அது. பம்பாய், ஆமதாபாத், டில்லி, பஞ்சாப் முதலிய பல இடங்களில் கலவரங்கள் ஏற்பட்டதைக் குறித்து மகாத்மா அதிக வருத்தமடைந்தார். ஆகவே தமது வேலைத் திட்டத்தை இன்னும் மக்கள்

சரிவரப் புரிந்து கொள்ளாததினுல் கிளர்ச்சியை நிறுத்தி விடுவதே சரி என்று அவர் அன்று ரயிலிலேயே ஒரு முடிவுக்கு வந்து விட்டார்.

மகாத்மா காந்தியின் அஹிம்சைக் கொள்கையை சரிவர புரிந்துகொள்ளாதவர்கள், கிளர்ச்சியை நிறுத்திவிட்டதைக் குறித்து அவர் மீது குறை கூறினுர்கள். இன்னும் சத்தியாக்கிரகம் ஆரம்பமாகவில்லை; எந்தவித சத்தியாக்கிரகம் என்பதும் முடிவாகவில்லை. தாங்கள் எப்பொழுது என்ன செய்ய வேண்டியிருக்கும் என்பது பிரதிக்ஞையில் கையெழுத்திட்டிருந்தவர்களுக்குக்கூட தெரியாது. ஆகையால் மகாத்மாவின் அறிக்கை வெளியானதும் சத்தியாக்கிரகம் நின்று விட்டது.

இதற்கு மத்தியில் ஜாலியன்வாலா பாக்கில் ஜெனரல் டயரின் உத்தரவின் பேரில் ஏராளமான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். வர்ணிக்கவும் இயலாத கொடிய அடக்குமுறை அட்டூழியங்கள் பாஞ்சாலத்தில் செய்யப்பட்டன. இவ்வளவு நடந்திருந்தும் இச் செய்தி நாட்டின் மற்ற பகுதிகளுக்கு பல நாட்கள் கழித்தே தெரிந்தது. இந்த அட்டூழியங்கள் வெளிப்பட்டதும் நாடெங்கும் பெரும் வெறுப்பும் கொதிப்பும் உண்டாயின. சுயராஜ்யமடைவதற்கு நாடு முழுதும் கிளர்ச்சி கிளம்புவதற்கு இதுவே அடிப்படையாக ஆயிற்று.

அதே நேரத்தில் கிலாபத் விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் அனுசரித்த கொள்கையும், அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்ற அவர்கள் தவறிவிட்டதும் முஸ்லிம்களிடையே பெரும் விழிப்பை உண்டாக்கின. பஞ்சாப் சம்பவங்களைக் குறித்து விசாரிக்க சர்க்கார் ஹண்டர் கமிட்டியை நியமித்தது. அதில் காங்கிரஸையும் சேர்க்காது போகவே, மகாத்மா காந்தியையும் ஒரு மெம்பராகக் கொண்ட ஒரு தனிக் கமிட்டியை காங்கிரஸ் நியமித்தது. ஜாலியன்வாலாபாக் படுகொலையையும் மற்ற அட்டூழியங்களையும் பற்றிய விவரங்கள் வெளியானதால் மக்களின் வெறுப்பு உச்ச நிலையை அடைந்தது. அச்சமயம் நான் பாட்னுவிலிருந்ததால் விசாரணைக் கமிட்டியில் எனக்கு எந்தவித சம்பந்தமுமில்லை.

மகாத்மாவின் ஆலோசனையை கிலாபத் கமிட்டி ஏற்றுக்கொண்டு சர்க்காருடன் ஒத்துழைப்பதில்லை என்று முடிவு செய்தது. ஹண்டர் கமிட்டி அறிக்கையும், காங்கிரஸ் நியமித்த கமிட்டியின் அறிக்கையும் இதற்கு மத்தியில் அனுப்பப்பட்டிருந்தும் மக்களின் கொதிப்பைத் தணிப்பதற்கான எந்த நடவடிக்கையையும் சர்க்கார் மேற்கொள்ளவில்லை. எனவே என்ன செய்வது என்ற பிரச்னை காங்கிரஸுக்கு உண்டாயிற்று. பஞ்சாப் சம்பவங்கள் குறித்து சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்பதால் காங்கிரஸுக்கு சர்க்கார் மீது வெறுப்பு. தங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற கோபம் கிலாபத் கமிட்டிக்கு. இவ்விதம் இவ்விரண்டு ஸ்தாபனங்களும் சர்க்கார் மீது அதிருப்தி அடைந்திருந்ததால் இரண்டும் ஒன்றுபட்டு வேலை செய்தன. ஒத்துழையாமை யோசனை இரு தரப்பிலும் ஆலோசனைக்கு வந்தது. இவ்விரு ஸ்தாபனத்தினரும் அடங்கிய கூட்டமொன்று காசியில் நடந்தது. இவ்விஷயத்தைப் பற்றி யோசிக்க 1920 செப்டம்பரில் கல்கத்தாவில் காங்கிரஸின் விசேஷ மகாநாட்டைக் கூட்டுவது என்று முடிவு செய்தார்கள். வெளிநாடுகளிலிருந்து அப்பொழுதுதான் இந்தியாவுக்குத் திரும்பி வந்திருந்த லாலா லஜபதிராயை அம் மகாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

மகாத்மா காந்தி கொண்டுவந்த ஒத்துழையாமைத் திட்டம் கீழ்வரும் யோசனைகளைக் கூறியது: (1) சர்க்காரிடம் கௌரவப் பட்டங்களை வாங்கிக்கொள்ளுவதில்லை; முன்னால் வழங்கப்பட்டிருக்கும் பட்டங்களையும் திருப்பிக் கொடுத்துவிடுவது. (2) சட்டசபைத் தேர்தல்களை பகிஷ்கரித்து விடுவது. அதாவது இத் தேர்தல்களில் யாரும் அபேட்சகர்களாக நிற்பதுமில்லை, வோட்டர்கள் வோட்டுப் போடுவதுமில்லை. (3) சர்க்கார் கல்வி ஸ்தாபனங்களையும், சர்க்காருடன் சம்பந்தமுள்ளதான, சர்க்காரின் அங்கீகாரம் பெற்ற பள்ளிக்கூடங்களையும் பகிஷ்கரித்து விடுவது. அதாவது அப்பள்ளிக்கூடங்களில் யாரும் படிக்கக் கூடாது; பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பக்கூடாது. (4) கோர்ட்டு

பகிஷ்காரம். அதாவது கோர்ட்டுகளில் யாரும் வழக்குத் தொடரக்கூடாது; அவற்றில் யாரும் வக்கீல்களாக ஆஜராகக் கூடாது. இவை நான்குமே ஒத்துழையாமைத் திட்டத்தின் முக்கியாம்சங்கள். இத்துடன் திட்டத்தின் ஆக்கவேலை முறைகளும் சேர்க்கப்பட்டிருந்தன. வெளி நாட்டுத் துணி பகிஷ்காரம், ராட்டினத்தைத் திரும்பவும் கொண்டுவந்து கையினால் நூற்றுக் கையினால் நெய்த துணியைக் கட்டும்படி பிரசாரம் செய்வது, தேசியக் கல்விப் பிரசாரம், பஞ்சாயத்துக் கோர்ட்டு அமைப்பு ஆகியவைகளே ஆக்க வேலைகள். இந்த முழுத் திட்டத்தையும் பற்றி நாட்டில் பலமான விவாதங்கள் நடந்தன.

இச்சமயத்தில் மகாத்மா காந்தி "எங் இந்தியா" பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டு அதன் மூலம் தம் கருத்துக்களை வாரந்தோறும் தேசத்திற்கு எடுத்துக் கூறி வந்தார். இவ்விதம் நடவடிக்கைகளையெல்லாம் நான் தூரத்திலிருந்தபடியே கவனித்து வந்தேன். காங்கிரஸ் கமிட்டிக் கூட்டங்களிலும், விசேஷக் கூட்டங்களிலுமே மகாத்மாவை சந்தித்து வந்தேன். அந்த வேலைத் திட்டத்தைக் குறித்து அவருடன் நான் விவாதிக்க வேண்டிய அவசியமிருந்ததாக நான் எண்ணவில்லை. அதைப்பற்றி என்னுடன் பேச வேண்டியதோ அல்லது எனக்கு எழுதவேண்டியதோ அவசியம் என்று அவரும் கருதவில்லை. "எங் இந்தியா"வில் அவர் எழுதியிருந்ததைப் படித்து நான் திருப்தியடைந்து விட்டேன். சமயம் வரும்போது தமது திட்டத்தை முற்றிலும் நிறைவேற்றி வைக்க பீகார் தவறிவிடாது என்ற நம்பிக்கை அவருக்கு இருந்திருக்கவும் கூடும்.

அந்த நாட்களில் மகாத்மாவுடன் நான் அதிகத் தொடர்பு வைத்துக் கொள்ளாததற்கு மற்றோர் காரணமும் உண்டு. அச்சமயம் 1920-ல் ஒரு வழக்கில் நான் பண்டித மோதிலால் நேருவுக்கு உதவியாக ஆஜராகி வந்தேன். எதிர்க்கட்சிக்கு தேசபந்து தாஸ் ஆஜரானார். ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பமானவுடனே நான் இரு காரியங்களைச் செய்வது என்று முடிவு செய்து கொண்டேன். வக்கீல் தொழில் செய்வதை நிறுத்தி விடுவதும், சட்டசபைத் தேர்தலுக்கு நான் அபேட்சகனாக

நின்றதை வாபஸ் வாங்கிக் கொள்ளுவதுமே அவை. தேர்தல் அந்த ஆண்டு நவம்பரில் நடக்கவிருந்தது. சம்பரான் ஜில்லாவில் அபேட்சகனுக நிற்க முடிவு செய்தேன். ஏனெனில் அங்கு விவசாயிகளுக்கு என்னை நன்ருகத் தெரியும், ஆகையால் அத் தொகுதியில் சுலபமாக வெற்றி பெற்று விடலாம் என்று நம்பினேன். மேலும் அந்த ஜில்லாவிலிருக்கும் விசேஷ நிலைமையை நான் நன்ருக அறிந்திருந்ததால் அங்குள்ள மக்களின் சரியான பிரதிநிதியாக நான் இருக்க முடியும் என்றும் நினைத்தேன். தேர்தல் சம்பந்தமாக காங்கிரஸ் ஒரு முடிவுக்கு வந்த பிறகே இதெல்லாம் சாத்தியம். கோர்ட்டில் நான் ஆஜராகி வந்த வழக்கிலும் இதற்குள் ஒரு முடிவு ஏற்பட்டுவிடும் என்று எண்ணி என் கோர்ட்டு அலுவல்களைத் தொடர்ந்து கவனித்து வந்தேன்.

தேசத்தில் இருக்கும் நிலைமையையும் ஒத்துழையாமைத் திட்டத்தையும் பற்றி யோசிப்பதற்காக பீகார் மாகாண மகாநாடு ஆகஸ்டில் பகல்பூரில் கூட்டப்பட்டது. நான் அத் திட்டத்தைத் தீவிரமாக ஆதரிப்பவன் என்று தெரிந்திருந்ததால் அம் மகாநாட்டிற்கு என்னையே தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனல் மகாநாடு அத் திட்டத்தை ஏற்றுக்கொண்டுவிடும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

வேறு எந்த மாகாணமும் அதைப்பற்றி தனது அபிப்பிராயத்தை அதுவரை வெளியிடவில்லை. ஆகையால் இம் மகாநாட்டிற்கு தலைவராக இருப்பதற்குத் தயங்கினேன். ஆனல் பாபு பிராஜ்கிஷோரும் மற்றவர்களும் வற்புறுத்தியதின்பேரில் ஒப்புக்கொண்டேன். ஸ்ரீ சச்சிதானந்த சின்ஹா போன்ற முதிர்ந்த தலைவர்களையும் கலந்தாலோசித்தேன். அவரும் ஆதரித்தார். ஒத்துழையாமையை நான் ஆதரிப்பதாயிருந்தால், என் கருத்தை மகாநாட்டில் தெளிவாகவும், பகிரங்கமாகவும் எடுத்துக் கூறிவிட்டு, முடிவாகத் தீர்மானிப்பதை மகாநாட்டுக்கு விட்டுவிடலாம் என்ருர் அவர். அதன்படியே நான் செய்தேன். மகாநாட்டில் என்னுடைய பிரசங்கத்தில், கிலாபத் கிளர்ச்சி, பாஞ்சால சம்பவங்கள், நமது கோரிக்கைகளுக்கு பிரிட்டிஷ் சர்க்காரிடமிருந்து நீதி கிடைக்காதது ஆகியவைகளை விளக்கிக் கூறிவிட்டு, இந்நிலைமையில் ஒத்துழையாமை

திட்டத்தை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகி விட்டது என்றேன். மாகாணம் சம்பந்தப்பட்ட சில முக்கியமான விஷயங்களைக் குறித்தும் சொன்னேன்.

கல்கத்தாவில் காங்கிரஸ் விசேஷ மகாநாடு நடப்பதற்குச் சில தினங்களுக்கு முன்னுலேயே இந்த மகாநாடு நடந்தது. ஒரு மாகாணத்தின் பிரதிநிதிகள் முழுவதும் கூடி ஒத்துழையாமைத் திட்டத்தை ஆதரித்துத் தீர்மானம் செய்தது, நான் அறிந்தவரையில், இதுவே முதல் மாகாண மகாநாடு. நகல் தீர்மானம் ஆலோசனையிலிருந்த போது, கிலாபத், பஞ்சாப் தவறுகளுக்குப் பரிகாரம் தேடுவதோடு சுயராஜ்யம் அடைவதும் நமது லட்சியம் என்று அதில் குறிப்பிடவேண்டும் என்று பிராஜ்கிஷோர் பிரசாத் வற்புறுத்தினுர். அது சரியானது என்று அப்பொழுது எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில், ஒத்துழையாமை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குதான் என்று நினைத்தேன். பாஞ்சால, கிலாபத் தவறுகளுக்குப் பரிகாரம் செய்யப்பட்ட பிறகு, சம்பாரனில் எங்கள் வேலைகள் முடிந்ததும் நாங்கள் செய்ததைப்போல, திரும்பவும் நாங்கள் வக்கீல் தொழில் நடத்தப் போய்விடலாம் என்றும் நான் அதுவரையில் நினைத்து வந்தேன். அதோடு சுயராஜ்யத்தை அடைவதென்பது எளிதான வேலையல்லவாகையால், அதை அடைவதற்காக ஒத்துழையாமைப் போராட்டத்தில் இறங்கிவிட்டால் வாழ் நாளெல்லாம் அதிலேயே ஈடுபட்டிருக்க வேண்டியதுதான் என்றும் எண்ணினேன். மகாநாடு நடப்பதற்கு முன்னுல் இதைப் பற்றி நான் சிந்தித்ததும் கிடையாது; அதற்கு நான் தயாராகவுமில்லை. ஆனுல் ஒத்துழையாமையைப் பற்றி மகாநாடு தீர்மானஞ் செய்த பிறகு சுயராஜ்யத்தை அடையும் வரையில் அதன்படி நடக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.

பின்னுல் இதைப்பற்றி நான் மகாத்மா காந்தியுடன் விவாதித்தபோது அவர் விளக்கிச் சொன்னுர். பஞ்சாப், கிலாபத் தவறுகளுக்குப் பரிகாரம் கோருவது என்பது சின்ன விஷயங்களாகத் தோன்றலாம். ஆனுல், ஆட்சி அதிகாரத்தை நம் கைக்கு மாற்றிவிட அவர்கள் தயாராயில்லாமலிருக்கும் வரையில் அந்த கோரிக்கையை ஒப்புக்கொள்ளு

வதை பிரிட்டிஷ் சர்க்காருக்கு அதிகக் கஷ்டமானதாக்கி விட அவர் விரும்பவில்லை. எனவே, நமது சுயராஜ்யக் கோரிக்கையையும் அவர் அத்துடன் இணைக்கவில்லை. அப்படிச் செய்யாததினுல் தேசத்தின் முன்னுல் வைக்கப் பட்ட நமது லட்சியம் அதிக அனுபவசாத்தியமானதாகவும், எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. இதை அறிந்ததும் பாபு பிராஜ்கிஷோர் பிரசாதின் தீர்க்க தரிசனத்திலும் அனுபவ ஞானத்திலும் முன்னிருந்ததைவிட எனக்கு அதிக மதிப்பு ஏற்பட்டது.

பீகார் மகாநாட்டுக்குப் பிறகு, ஆனுல் கல்கத்தா காங்கிரஸ் விசேஷ மகாநாட்டுக்கு முன்னுல், குஜராத் மாகாண மகாநாடும் கூடி ஒத்துழையாமைத் திட்டத்தை ஆதரித்தது. நான் முன்னுல் சொன்னபடி நான் ஆஜரான வழக்கில் அப்பொழுது இரு தரப்பு வக்கீல்களின் வாதம் நடந்து கொண்டிருந்தது. எங்கள் தரப்பில் கல்கத்தா ஹைகோர்ட்டு வக்கீலான ஸ்ரீ என். என். சர்க்கார் ஆஜராகி விவாதித்து வந்தார். பின்னுடி அதிக பிரபலமாயிருந்த சர். என். என். சர்க்கார் இவரே. அட்வொகேட் ஜெனரலாகவும், வைசிராய் நிர்வாக சபை மெம்பராகவும் இவர் இருந்தார். எங்கள் தரப்பில் மற்றுேர் வக்கீலாக ஆஜரான பண்டித மோதிலால் நேருவுக்கு நான் உதவியாக இருந்தேன். இதனுல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் விசேஷ மகாநாட்டுக்கு நான் போக முடியவில்லை.

எதிர் தரப்புக்காக ஆஜரான தேசபந்து தாஸ், தமது விவாதங்களைப் பிறகு கூறவிருந்தார். கல்கத்தா மகாநாடு செய்த முடிவு, பீகார் மகாநாடு செய்த முடிவை ஒட்டியதாகவே இருந்ததால், நான் பூரண திருப்தியை அடைந்தேன். அந்த வழக்கே நான் ஆஜராகும் கடைசி வழக்காக இருக்கும்போல் தோன்றியது. கல்கத்தா மகாநாடு முடிந்து சில நாட்களுக்கு அப்புறமும் அவ் வழக்கில் வாதங்கள் நடந்து வந்தன. அக்டோபர் ஆரம்பத்தில் எனக்கு அந்த வழக்கின் வேலை முடிந்துவிட்டது. பிறகு ஒத்துழையாமை வேலையைத் தீவிரமாக கவனிக்க ஆரம்பித்தேன். பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் நடந்தது. தீவிரமாக ஒத்துழையாமைப் பிரசாரத்தை நடத்துவதென்று அதில் முடிவு செய்தார்கள்.

படிப்பும் புத்திப் போக்கும்

புதிய அரசியலின்படி பல சட்ட சபைகளுக்கும் தேர்தல் 1920 நவம்பரில் நடக்கவிருந்தது. கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் விசேஷ மகாநாட்டுக்குப் பிறகு, இத் தேர்தலில் அபேட்சகர்களாக நிற்க முடிவு செய்திருந்த எல்லாக் காங்கிரஸ்காரர்களும் தங்கள் அபேட்சையை வாபஸ் செய்து கொண்டனர். தேர்தலுக்கு நிற்பது என்ற யோசனையை நான் அதற்கு முன்னாலேயே விட்டுவிட்டேன். திட்டத்தின் இப் பகுதி, பொதுக் கூட்டங்களிலும், துண்டுப் பிரசுரங்கள் முதலியவைகளின் மூலமும் நன்றாக விளம்பரம் செய்யப்பட்டது. வோட்டுப் போடப் போனவர்கள் மிகச் சிலரே. என்றாலும், பீகாரைப் பொறுத்த வரையில், அபேட்சகர்களில்லை என்பதற்காக எந்த சட்ட சபை ஸ்தானமும் காலியாக இல்லை. இத்தகைய தேர்தல் இதுவே முதலாவதானது. வோட்டர்கள் தொகையும் அதிகமில்லாதிருந்தது. காங்கிரஸ் பிரசாரத்தின் காரணமாக பல வோட்டர்கள் வோட்டுப் போடவில்லை. ஆகையால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அவர்கள் தொகுதியின் சரியான பிரதிநிதிகள் அல்ல என்று உண்மையாகவே நாம் சொல்ல முடியும்.

தேர்தல் விஷயத்தில் காங்கிரஸுக்கும் மிதவாதிகள் கட்சிக்கும் அபிப்பிராய பேதம் தெளிவானதாக இருந்தது. மிதவாதிகள் தேர்தலுக்கு நின்றதோடு அந்த அரசியலின்படி மந்திரி சபைகளையும் அமைத்து புதிய சீர்திருத்தத்தை வெற்றியாக்கிவிட முயன்றனர். காங்கிரஸ், கல்கத்தா விசேஷ மகாநாட்டில் ஒத்துழையாமைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்த போதிலும், காங்கிரஸ்காரர்களில் சிலர் அத்தீர்மானமே முடிவானது என்று ஒப்புக் கொள்ளவில்லை. டிசம்பரில் நாகபுரியில் நடக்கவிருந்த வருஷ மகாநாட்டில் அத்தீர்மானத்தை மாற்றி விடுவது என்ற நம்பிக்கையில் காலங் கடத்தி வந்தார்கள். உண்மை என்னவென்றால், ஒத்துழையாமையின் தத்துவத்தை அநேகர் சரிவர

புரிந்து கொள்ளாததினால், அது பயனில்லாதது என்று கருதினார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் இதை லட்சியம் செய்யப் போவதே இல்லை என்று அடிக்கடி கூறப்பட்டு வந்ததை யும் கேட்டோம். அதே சமயத்தில், இத்திட்டப்படி மக்கள் நடக்கப் போவதில்லை என்றும், அப்படியே அவர் கள் நடந்தாலும் அதனால் கஷ்டப்படப் போகிறவர்கள் மக்களேயல்லாமல் பிரிட்டிஷ் சர்க்காரல்ல என்றும் அவர் கள் சொன்னார்கள். ஆகையால் ஒத்துழையாமை வெற்றி யடையப் போவதில்லை என்பது அவர்கள் வாதம்.

கௌரவப் பட்டங்களை பகிஷ்கரிப்பது என்பது பற்றிக் கூறுகையில், காங்கிரஸிலிருந்து ஒதுங்கியிருந்தவர் களுக்கே பெரும்பாலும் பட்டங்கள் வழங்கப்பட்டிருக் கின்றன என்றும், ஆகையால் அவர்கள் இத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும், ஒருவர் இங்கும் ஒருவர் அங்குமாக பட்டத்தை விட்டு விடுவதாயினும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு அதனால் எந்தவித கஷ்டமும் உண்டாகி விடாது என்றும் கூறினர். பிரிட்டிஷ் சர்க் காரின் சக்தியையும் கௌரவத்தையும் குறைப்பது என்பதுதான் இத்திட்டத்தில் அடங்கிய உண்மையான நோக்கம். சின்ன விஷயங்களுக்கும் சர்க்காரை எதிர் பார்த்துக் கொண்டிருக்காமல் தன்னம்பிக்கையுடனிருக்கும் படி மக்களைத் தூண்டுவது; பிரிட்டிஷ் சர்க்காரிடம் மக்க ளுக்கு ஏற்பட்டிருக்கும் பயத்தைப் போக்குவது ஆகியவை களும் திட்டத்தின் மற்ற நோக்கங்கள். இதன் மூலம் சுயேச்சையான மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளக் கற்பதுடன், சர்க்காரின் தயவுக்கு எதிர்நோக்கிக் கொண் டிருப்பதை விட்டுவிட்டு மக்களை கவனிக்கத் தலைப்படுவார் கள். பட்டங்களை வேண்டாமென்று விட்டு விட்டவர்கள் மிகச் சிலரே என்பது உண்மை. ஆனால் மக்களிடையே இதைக் குறித்து நடந்த பிரசாரம், பட்டதாரிகளிடம் அம் மக்கள் வைத்திருந்த மதிப்பைக் குறைத்து விட்டது. இதனால் பட்டங்களைப் பெற அண்ணாந்து கொண்டிருந்த வர்கள் நாட்டில் யாருமே கிடையாது என்று அர்த்தமல்ல. இதற்காகவே பாடுபட்டு வந்தவர்கள் சிலர் இருந்தார்கள்; இவற்றைப் பெறுவதற்காக பிரிட்டிஷ் சர்க்காரைத் திருப் திப்படுத்த இவர்கள் பிரயாசைப்பட்டும் வந்தனர். இவர்

களுக்கு மக்களிடையே பகிரங்கமான எதிர்ப்பு இல்லாவிட்டாலும் பொதுவாக மக்கள் இவர்களை லட்சியஞ் செய்யவில்லை. இதனால் சிலர் பட்டதாரிகளை அவமதிக்கவும் செய்தனர். ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் கொடுக்கும் பட்டத்தை வாங்கிக் கொள்ளுவதில் எந்தவித கௌரவமுமில்லை என்பதை மக்கள் உணரும்படிச் செய்வதுதான் திட்டத்தின் நோக்கமேயன்றி பட்டம் பெற்றவர்களை அவமதிப்பது என்பதல்ல. திட்டத்தின் மற்ற அம்சங்களை விட இதிலேயே காங்கிரஸ் அதிக வெற்றியை அடைந்தது என்பதே என் நம்பிக்கை. ஏனெனில் திட்டத்தின் மற்றவைகளில் அபிப்பிராய பேதமிருந்த போதிலும் இதில் அபிப்பிராய பேதமே கிடையாது. நாளா வட்டத்தில் பட்டங்களின் விஷயத்தில் அசிரத்தையும் தானே வளர்ந்துவிட்டது.

சட்டசபைகளை பகிஷ்கரிப்பது சம்பந்தமாக அபிப்பிராய பேதம் அதிக பலமாக இருந்தது. தேர்தலில் நின்று வெற்றி பெற்று, பதவிகளை ஏற்றுக் கொள்ளுவதால், தேசத்திற்கு எந்த விதமான நன்மையையும் செய்துவிட முடியாது போனாலும் சர்க்காரின் ராஜீய பித்தலாட்டங்களையாவது ஓரளவுக்கு அம்பலப்படுத்திக் கொண்டிருக்க முடியும் என்று ராஜீய விஷய ஞானமிருந்தவர்கள் கூறினார்கள். மிதவாதக் கட்சியினரும், எக்கட்சியிலும் சேராதவர்களும், புதிய கட்சிகளில் கூடியவர்களும், இதே அபிப்பிராயத்தையே சொன்னார்கள். இவர்கள் தேர்தலுக்கு நின்று பதவியையும் ஏற்றுக் கொண்டனர். தேர்தலில் யாருமே ஈடுபடாமலிருந்து, எல்லா கவுன்ஸில் ஸ்தானங்களும் விரும்புவாரற்றுப் போனால் மாத்திரமே இத்திட்டம் வெற்றி பெற்றதாகத் தாங்கள் கருத முடியும் என்று சட்டசபை பகிஷ்காரத்தை விரும்பாத காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள். இது அந்தத் தேர்தலில் நடக்கவில்லை; இனி நடக்கும் எந்தத் தேர்தலிலும் நடக்கப் போவதுமில்லை. வோட்டுப் போட்டவர்கள் ஒரு சிலரே என்றிருந்தாலும், அந்த ஸ்தாபனங்களில் சிலர் இருக்கும் வரையில் சட்டசபை பகிஷ்காரம் என்பது எதுவுமே கிடையாது என்றுதான் சர்க்கார் வாதிக்கும்; அந்த வாதத்தை உலகமும் ஏற்றுக் கொள்ளும் என்றும் அவர்கள் வாதித்தனர்.

ஆகையால் தேர்தலில் போட்டியிட்டு சீர்திருத்தங்களை நடத்த முற்பட்டவர்களெல்லாம் தோல்வியடையும்படிச் செய்து, அதன் மூலம் உண்மையான பிரதிநிதிகள் யார் என்பதை உலகிற்குக் காட்ட வேண்டும் என்றனர்கள் அவர்கள். அடுத்த தேர்தல் மூன்று வருஷங்களுக்குப் பிறகே நடக்கவிருந்ததால் அச்சமயம் சட்டசபை பகிஷ்காரம் அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. ஆனால் அதைப் பற்றிய அபிப்பிராய பேதம் பிற்பாடு அதிகக் கடுமையானதாக ஆயிற்று.

கோர்ட்டு பகிஷ்காரத்தைப் பற்றிய வரையில் அதிக அபிப்பிராயபேதம் இல்லை. திட்டத்தின் அப்பகுதியை யாராவது ஒப்புக் கொள்ளாது போனால், சுயநல நோக்கத்தின் பேரிலேயே வக்கீல் தொழிலை விட்டுவிட ஒருவர் மறுக்கிறார் என்று மக்கள் கருதி விடுவார்கள் என்ற நினைப்பு பலருக்கும் இருந்தது. அபிப்பிராய பேதம் இதில் இல்லாதிருந்ததற்கு ஒருவேளை இதுவே காரணமாயிருக்கலாம். நாட்டிலிருந்த பல முக்கியஸ்தர்கள் தங்களுடைய வக்கீல் தொழிலை விட்டுவிட்டு இயக்கத்தில் சேர்ந்துகொண்டார்கள். இதன் பலனாக ஒத்துழையாமை இயக்கத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதில் இவர்கள் தங்கள் கவனங்களைச் செலுத்தினர். வக்கீல் தொழிலில் இவர்கள் ஏற்கனவே பிரபலமடைந்திருந்ததால் பொது மக்களிடையே இவர்களுக்கு அதிக செல்வாக்கு இருந்தது. இந்த பகிஷ்காரம் எவ்வளவு காலத்திற்கு நடக்கும் என்பது பற்றி அப்பொழுது தெளிவில்லாதிருந்தது. எனினும் பலர் அதிக உற்சாகத்துடனேயே இந்த இயக்கத்தில் கலந்து கொண்டனர். திட்டத்தை தேசம் நிறைவேற்றி வைத்தால் ஒரு வருடத்தில் சுயராஜ்யம் வந்துவிடும் என்று மகாத்மா காந்தி கூறினார். ஆகவே அதற்குள் சுயராஜ்யம் வந்து விடுமாகையால் அதன் பிறகும் ஒத்துழையாமைக்கு அவசியமிருக்காது என்று சிலர் கருதினார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்கள், சுயராஜ்யத்தை அடைவதற்கு நிறைவேற்றியாக வேண்டிய நிபந்தனைகளைக் குறித்து மகாத்மா கூறியதை மறந்துவிட்டு, 1921 டிசம்பர் 31-ந் தேதி சுயராஜ்யம் வந்துவிடும் என்று நினைக்கத் தலைப்பட்டனர். இதனாலேயே ஆரம்ப உணர்ச்சி வேகத்தில் இயக்

கத்தில் சேர்ந்த அநேகர், 1921-க்குப் பிறகு ஒவ்வொருவ ராக வெளிப்பட்டு தங்களுடைய தொழிலை நடத்தப் போய் விட்டார்கள். இதற்கு அவர்கள் மீது குறை சொல்லிப் பயனில்லை. ஏனெனில் தங்களுடைய குடும்பங்களையும், தங்களை நம்பி யிருப்பவர்களையும் காப்பாற்ற அவர்களுக்கு வேறு வழியில்லை. அவர்களுடைய வாழ்க்கை நிலை இருந்த வகையில் அவர்கள் வேறு எந்த தொழிலைச் செய்தாலும் தங்களைக் காப்பாற்றிக் கொண்டுவிட அவர்களால் முடியாது. என்றாலும் அநேகர் தங்களை இப்பணிக்கு அர்ப் பணம் செய்து கொண்டு விட்டனர். தங்களுடைய தொழிலுக்குத் திரும்பி விட்டவர்களில் கூட சிலர், 1930-ல் மீண்டும் சத்தியாக்கிரகம் ஆரம்பமானபோது, திரும்பவும் வந்து போராட்டத்தில் ஈடுபட்டு விட்டனர்.

கோர்ட்டுகளில் வழக்குகளைத் தொடருவதை மக்கள் நிறுத்தவில்லை. ஏனெனில் சொத்துமீது ஏதாவது ஆக்ர மிப்பு வந்தால் கோர்ட்டுகளுக்குப் போக வேண்டியது அவ சியமாகி விட்டது; சொத்து மீது ஆக்ரமிப்பு ஏற்படுவதை அவர்கள் சகிப்பதும் கிடையாது. கோர்ட்டுகள் பகிஷ் காரத்தை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு கோர்ட்டுக் குப் போகாதவர்களின் உரிமைகளுக்கு பல அயோக்யர்கள் நஷ்டமுண்டாக்கினர். என்றாலும் ஒரு வருடத்திற்கு கோர்ட்டு பகிஷ்காரம் வெற்றிகரமானதாகவே இருந்தது. இதனால் சர்க்காரின் ஸ்டாம்புக் கட்டண வருமானம் அதிகமாகக் குறைந்து விட்டது. ஒரு வருஷம் பலர் வழக் குப் போடாமலிருந்து விட்டனர். மக்களிடம் அதிக உற் சாகமிருந்த இடங்களில் பஞ்சாயத்துகள் நன்றாக நடந்து வந்தன. ஒரு தகராறில் சம்பந்தப்பட்ட இரு தரப்பாரும் பஞ்சாயத்தின் தீர்ப்பை ஆனந்தமாக ஏற்றுக் கொண்டு நிறைவேற்றி வந்தனர். கோர்ட்டில் ஏற்றுக் கொள்ளப் பட முடியாத தாவாக்களும் பஞ்சாயத்துகள் முன்பு விசா ரணைக்கு வந்தன. இத்தகையவைகளில் பஞ்சாயத்துக்கள் எதுவும் செய்ய முடியாதபோது புகார்கள் எழுந்தன. என்றாலும் கோர்ட்டுகளின் மதிப்பு அதிக அளவு குறைந்து விட்டது என்பது மாத்திரம் உண்மை. அதுவரையில் மிக கௌரவமான தொழில் என்று கருதப்பட்டு வந்த வக்கீல்

தொழில், அடியோடு பகிஷ்கரிக்கப்படா விட்டாலும், கொஞ்ச காலம் மதிப்பிழந்திருந்தது.

சர்க்கார் பள்ளிக்கூடங்களையும், சர்க்கார் ஆதரவு பெற்ற கல்வி ஸ்தாபனங்களையும் பகிஷ்கரிப்பது என்பதிலேயே அபிப்பிராய பேதம் அதிக பலமாக இருந்தது. ஆங்கிலப் படிப்பு நாட்டில் மக்களின் மனப்போக்கை அடியோடு மாற்றிவிட்டது என்பதை முன்னிட்டே இத்திட்டம் கொண்டு வரப்பட்டது. படிப்பு ஆங்கிலத்திலேயே என்றிருந்ததினால் நமது சொந்த பாஷையுடன் தொடர்பில்லாமல் போயிற்று. இதனால் நமது ராஜீய நடவடிக்கைகளில் பிரிட்டிஷார் ஆதிக்கம் கொண்டிருந்ததோடு நம் அறிவு, ஒழுக்கம் ஆகியவைகளிலும் அவர்கள் ஆதிக்கம் பெற்றிருந்தனர். தேசத்தின் நன்மை எது என்பதைக் கருத்தில் கொண்டதாக படிப்பு இல்லை. தோற்றத்திலும் தோலின் நிறத்திலும் இந்தியர்களாக இருந்தாலும் புத்திப் போக்கில் ஆங்கிலேயர்களாக இருக்கும்படி இந்தியரைத் தயார் செய்துவிட வேண்டும் என்று மெகாலே நினைத்தபடி, இந்தியாவில் பிரிட்டிஷ் நிர்வாகம் நடந்து கொண்டு போவதற்கு வேண்டிய இந்தியரைத் தயாரிப்பதாகவே, இப்படிப்பு முறை இருந்தது. இக்கல்வி முறையை மாற்றி யமைத்தாலொழிய அடிமைப் புத்தியை நாம் விட்டொழித்து விடவே முடியாது. அடிமைப் புத்தி போகவில்லை யென்றால், அரசியல் அடிமைத்தனத்தை நாம் எப்படிப் போக்கிவிட முடியும்? இக்கல்வி முறைக்கு எதிராக இன்னுமொன்றும் கூறப்பட்டது. உலகத்திற்கு ஐரோப்பா அளித்திருக்கும் நவ விஞ்ஞான அறிவில் இந்தியர் திறமையைப் பெற வேண்டியது அவசியமில்லை என்ற வகையில் இக்கல்வி முறையின் பாட போதனை அமைந்திருக்கிறது என்றார்கள். விஞ்ஞான அறிவை இந்தியரும் அடைந்து விட்டால், கைத்தொழில் துறையில் ஐரோப்பாவுடன், முக்கியமாக இங்கிலாந்துடன், இந்தியர் போட்டி போட ஆரம்பித்து விடுவார்கள் என்பதற்காகவே இப்படிச் செய்கின்றனர் என்றும் கூறினர்.

பள்ளிக்கூட பகிஷ்காரத்திற்கு எதிராக பல வாதங்கள் கூறப்பட்டன. சர்க்கார் அங்கீகாரம் பெற்ற பள்ளிக்கூடங்களையெல்லாம் பகிஷ்கரித்து விடுவதென்றால் குழந்

தைகள் படிக்க வேறு பள்ளிக்கூடம் கிடையாது, பிள்ளை கள் படிப்பில்லாது போக வேண்டியதுதான் என்றார்கள். தங்களுடைய இக்கல்வி முறையினலேயே இந்தியரின் அறிவு, ஒழுக்க நடவடிக்கை ஆகியவைகளின் மீது பிரிட்டிஷார் ஆதிக்கம் கொண்டிருக்கிறார்கள் என்ற வாதத்தை ஒப்புக் கொள்ள அநேகர் தயாராயில்லை. மகாத்மா காந்தியுடன் நான் ஒரிஸ்ஸாவில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது நடந்த ஒரு சம்பவம் எனக்கு நினைவிருக்கிறது. ஒரு பொதுக்கூட்டத்தில் வயதான ஒருவர், "இந்தக் கல்வி முறையை நீங்கள் ஏன் கண்டிக்கிறீர்கள்? உங்களையும் லோகமான்ய திலகரையும் போன்றவர்கள் இந்தப் படிப்பினல் வந்தவர்களல்லவா?" என்று மகாத்மாவைக் கேட்டார். இதற்கு காந்திஜி வெகு அழகாக பதில் சொன்னார். "என்னைப்பற்றி நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் நீங்கள் லோகமான்ய திலகருடைய பெயரையும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். எனவே உங்களுக்கு இதைச் சொல்லுகிறேன்: ஆங்கிலத்தின் மூலம் அவர் பெற்ற படிப்பு அவருடைய அறிவுத் திறனுக்கு முட்டுக்கட்டையாக இல்லாதிருந்தால், அவருடைய சொந்த தாய் மொழியின் மூலம் அவருடைய அறிவுத் திறன் விருத்தியடைவதற்கு வாய்ப்பு இருந்திருக்குமானல், அவர் இப்பொழுது செய்ததையெல்லாம் விட இன்னும் அபாரமான காரியங்களைச் செய்திருக்க மாட்டார் என்று யார் சொல்ல முடியும்?" என்றார் மகாத்மா காந்தி.

தமது கருத்தை விளக்கிக் காட்ட மேலும் மகாத்மா கூறியதாவது: "லோகமான்ய திலகர் மிகப் பெரிய மனிதர் என்பதில் சந்தேகமே இல்லை. சங்கராச்சாரியார், கபீர், துளசிதாஸ் ஆகியவர்கள் கூறியவை சாஸ்வதமானவைகளாக இருக்கின்றன. அவர்கள் கூறியவைகளை இன்று கூட நாம் ஒவ்வொருவர் வீட்டிலும் படித்து வருகிறோம். ஆனல் லோகமான்ய திலகருக்கு இக்கால விளம்பர வசதிகள் எல்லாமிருந்தும், அவர்களைப் போல தமது உபதேசங்கள் எங்கும் பரவி விடும்படிச் செய்ய முடியவில்லை. நமக்குள்ள அடிமைப் புத்தி ஒரு தடையாக இல்லாமலிருந்தால், நமது சுதந்திரப் போராட்டம் நிச்சயமாக அதிகச் சக்தி வாய்ந்ததாக இருந்திருக்கும். உண்மையில் நாம் செய்யும்

காரியங்களிலெல்லாம் ஐரோப்பாவைப் பின்பற்றி வருகிறோம். நமது சொந்த நிலைமைக்கு ஏற்றதான ஒரு வழியை நாம் கண்டு பிடித்துக் கொள்ள வேண்டும். அந்த பாதை ஐரோப்பாவின் வழிக்கு மாறுபட்டதாகவே இருக்க வேண்டும்."

ஒத்துழையாமைத் திட்டத்தின் இப்பகுதியையும் நான் ஏற்றுக் கொண்டேன். என்னுடைய பையன்களை சர்க்கார் பள்ளிக்கூடம், கல்லூரிகளிலிருந்து அழைத்து விட்டேன். திரும்பவும் அவற்றில் போய் படிக்க அவர்களை நான் அனுமதிக்கவில்லை. இதன் பலனாக அவர்கள் விரும்பினாலும், இன்றுள்ள தேசிய சர்க்காரின் கீழேகூட, ஒரு உத்தியோகத்தைப் பெற அவர்களால் முடியாது. ஏனெனில் சர்க்கார் அங்கீகாரம் பெற்ற ஒரு சர்வகலாசாலையின் அத்தாட்சி அவர்களிடமில்லை. என் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களிலிருந்து அழைத்து விட்டேனெனினும் என் மனதில் மாத்திரம் ஒரு சந்தேகம் ஊசலாடிக் கொண்டே இருந்தது. ஒரிஸ்ஸாவில் கிழவருக்கு மகாத்மா காந்தி கூறிய பதிலைக் கேட்ட பிறகுதான் எனக்கிருந்த அந்த சந்தேகம் நீங்கியது. தேசியக் கல்வி வேண்டும் என்று எங்கும் பிரசாரம் செய்வதில் நான் முழுப் பங்கும் வகித்தேன். ஒரு தேசிய கல்லூரி, ஒரு தேசியப் பல்கலைக் கழகம், பல தேசிய ஆரம்ப, நடுத்தரப் பள்ளிக்கூடங்கள் ஆகியவைகளை அமைத்தேன்; அமைப்பதற்கு உதவி செய்தேன். சர்க்காரின், சர்க்கார் அங்கீகாரம் பெற்ற பள்ளிக்கூடங்களிலிருந்து வெளியே வந்து விடும்படி ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு உற்சாகமூட்டினேன். ஆனால் நான் சொன்னது போல, என் புத்தியில் ஒரு மூலையில் சிறு சந்தேகம் மாத்திரம் இருந்தே வந்தது; ஒரிஸ்ஸாவில் மகாத்மா பேசியதைக் கேட்ட பிறகே அது நீங்கியது. இதை இப்பொழுது ஆழ்ந்து நான் சிந்தித்துப் பார்க்கப் பார்க்க அதிலடங்கிய தீர்க்கதரிசனமும் சிறந்த ஞானமும் எனக்கு நன்ருக விளங்குகிறது. இன்று நாம் சுதந்திரமடைந்து விட்டோம்; நாட்டின் கதியை நிர்ணயித்துக் கொள்ளும் சக்தி நம் கையில் இருக்கிறது. என்றாலும் நமது கல்வியினாலும், அறிவின் விலங்குகளினாலும் மேனாட்டுப் படிப்பின் விளைவுகள் இன்றும் நம்மிடம்

இருந்து வருகின்றன. இன்றுகூட, நாம் எதையும் ஐரோப்பியத் தரத்தைக் கொண்டுதான் கவனிக்கிறோம். எந்தவித காரணமுமில்லாமலேயே நமக்கு மாறுபட்ட தரம் இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. வேறு தரங்களும் இருக்கக்கூடும் என்பதைக்கூட சிந்திக்க முடியாத அளவுக்கு அவ்வளவு அடிமைகளாகி விட்டோம் நாம் என்றுதான் கூறுகிறேன்.

உதாரணமாக நமது அரசியலையே எடுத்துக் கொள்ளுவோம். நாம் விரும்பும் அரசியலை அமைத்துக் கொள்ள நம்மாலாகவில்லை. ஆனால் நாம் தயாரித்திருக்கும் அரசியல், மேற்கத்திய நாடுகளின் அரசியல்களின் ஒரு பிரதி. இதில் புதியது எதுவுமில்லை. நாமாகவே சொந்தமாகச் செய்தது இது என்று சொல்லிக் கொள்ளுவதற்கும் இதில் எதுவும் கிடையாது. உதாரணமாக, ஜனநாயகத்தில் நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம். வயது வந்தவர்களுக்கெல்லாம் வோட்டுரிமை இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். நம் அரசியல் இதை அளிக்கிறது. ஒருவன் படித்தவனுயிருந்தாலும் சரி, துறவியாயினும் அல்லது திருடனுயினும் நல்லொழுக்கமுள்ளவனே அல்லது அயோக்கியனே, இவர்கள் எல்லாருடைய வோட்டும் சமம்! இது மாத்திரமல்ல. நமது சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்களுக்கு நிர்வாகத்தை நடத்தும் பொறுப்பு ஏற்படுகிறது. அப்படியிருந்தும் அவர்களுக்கு எந்தவித உண்மையான அல்லது விசேடமான தகுதிகளும் தேவையில்லை! ஒருவர் என்ன உதவாக்கரையாக இருந்தாலும் சரி, படிப்பும் பண்பும் இல்லாததினுலோ அல்லது ஒழுக்க மில்லாததினுலோ அந்த உதவாக்கரைத்தனமிருந்தாலும் சரி, அவர் தேர்ந்தெடுக்கப்படலாம். அவர் மக்களின் பிரதிநிதியாகவும் இருக்கலாம்! நாட்டின் நன்மையை நாம் விரும்புகிறோம். நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என்றும் விரும்புகிறோம். ஆனால் இதற்கு ஒழுக்கமும் திறமையும் அவசியமல்லவா? அவை வேண்டும் என்றால், இதற்கு நமது அரசியலில் எந்த வழி வகையையும் நாம் செய்யவில்லை. மேனாட்டு அரசியலில் இது இல்லாமலிருப்பது ஒன்றே இவ்விதம் நாம் செய்து விட்டதற்குக் காரணம். தேசத்தின் நிர்வாகத்தை நடத்தும் பொறுப்பை ஏற்க வேண்டியவர்களுக்கு அறி

வும், ஒழுக்கமும், அறிவும் அறிவையும் விட ஒழுக்கம், அதிகமாக இருக்கும்படிச் செய்ய நாம் ஏதாவது ஒரு வசதி செய்திருந்தால், அரசியலை அமைப்பதில் நாம் சொந்தமாக ஒரு காரியத்தைச் செய்தவர்களாவோம். ஆனால் நம்மால் அப்படிச் செய்ய முடியவில்லை. மேற்கத்திய எண்ணங்களே நம் புத்தியில் குடி கொண்டிருந்து விட்டதால், மேற்கத்தியதல்லாத ஒரு கருத்தை, சிந்தனையை, நாம் காணவும், கிரகிக்கவும் முடியவில்லை.

இன்னுமொரு சின்ன உதாரணத்தையும் எடுத்துக் கொள்ளுவோம். அபிவிருத்தியைப் பற்றிய பேச்சே எங்கும் இருந்து வருவதைக் காண்கிறோம். ஒருவர் எழுத்தாளரோ அல்லது கவியோ என்றால், அவர் முற்போக்கானவர், அல்லது பிற்போக்கானவர் என்று சொல்லப் படுகிறது. இதே போல ராஜீயத்தில் ஈடுபட்டிருப்பவர்களும், முற்போக்காளர் அல்லது பிற்போக்குவாதி என்று கூறப்படுகிறார்கள். இதைக் குறித்து நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் ஒன்று விளங்கும். ஐரோப்பிய எண்ணங்களுக்கு ஒத்து வராதவர்கள் பிற்போக்காளர்கள், முற்போக்கில்லாதவர்கள். அதாவது நாம் மேற்கொள்ளும் அபிவிருத்தியின் தரம் ஐரோப்பியத் தரம். நமது எண்ணங்களில் கூட, ஐரோப்பிய எண்ணங்களில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களின் செல்வாக்கு நிரம்பி யிருக்கிறது. இதனால் அசல் இந்திய மனோபாவம் பிற்போக்கானது என்று கருதப்படுவது இயற்கை! என்றாலும் ஐரோப்பிய தரத்தில் அதிகப் பற்று கொண்டிருப்பவர்களில் கூட சிலர் முற்போக்காளர்களாகவும் மற்றவர்கள் பிற்போக்கினராகவும் மதிக்கப்படுகின்றனர். அபிவிருத்தியை அளந்தறிய இதைவிட வேறு எந்த தரத்தையும் கொள்ளுவது சாத்தியமல்லவா? சாத்தியமே யென்றால் அதை ஒப்புக் கொள்ள நாம் தயாரா யிருக்கிறோமா? இல்லை! நமது படிப்பின் காரணத்தால் அப்படிச் செய்யத் தகுதியற்றவர்களாகி விட்டோம். மற்றோர் ரகம் என்பது நமக்கு சாத்தியமேயில்லை!

வேற்றுமையின் விதை

நாகபுரி காங்கிரஸ் மகாநாட்டுக்கு முன்னால் மகாத்மா காந்தி அலி சகோதரர்களுடன் நாடு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்தார். சட்டசபைகளுக்குத் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன. கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் வெளிவந்து விடும்படிச் செய்வதிலேயே இப்பொழுது அதிக கவனஞ் செலுத்தப்பட்டது. மகாத்மா காந்தி தாம் சென்ற இடங்களிலெல்லாம் ஒத்துழையாமைத் திட்டத்தைக் குறித்து விளக்கிக் கூறி வந்தார். மகாத்மாவின் சுற்றுப் பிரயாண காலங்களில், பிற்காலத்தில் நாம் கண்டு வந்ததுபோன்ற மக்களின் உற்சாகக் காட்சிகளை, அந்தப் பிரயாணத்தின் போதுதான் நாங்கள் முதன் முதலில் பார்த்தோம். எங்கும் ஒரே ஜனத்திரள்; மகாத்மா சென்ற வழிகளிலெல்லாம், ரஸ்தாக்களிலெல்லாம் மக்கள் கூட்டம்; ஒரே நாளில் பல பொதுக் கூட்டங்கள்! இவைகளையெல்லாம் கண்டோம். டிசம்பரில் அவர் பீகாருக்கு வந்து பல ஜில்லாக்களுக்கும் போனார். நானும் அவருடன் சென்றேன். தேசியக்கல்வி கல்லூரியை ஆரம்பிக்கும்படி அப்பொழுதுதான் என்னிடம் மகாத்மா கூறினார். அதன்படி பாட்னாவில் ஒரு தேசிய கல்லூரியை ஆரம்பித்தோம்.

அச்சமயம் பீகாரில் பரபரப்பு அதிகமாக இருந்தது. ஒரு நாள் பாட்னா சர்க்கார் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் பலர் அதிலிருந்து வெளியேறி என்னிடம் வந்தார்கள். அவர்களை வைத்து ஒரு தேசிய கல்லூரியை ஆரம்பித்தேன். இச்சம்பவத்திற்குச் சில தினங்களுக்கு முன்னால், இன்ஜினியரிங் கலாசாலை மாணவர்கள் தங்கள் வகுப்புகளிலிருந்து வெளியேறி மௌலானா மஜார்-உல்-ஹக்கின் வீட்டிற்கு ஊர்வலமாக வந்தனர். இப்பொழுது சதாகத் ஆசிரமம் இருக்கும் இடத்தைச் சுற்றி அந்த நாளில் குடியிருப்பு வீடுகள் கிடையாது. ரஸ்தா நெடுக நீண்ட தூரம் வரையில் ஒரே மாந்தோப்பு. இரவில் அவ்வழியில் ஆபத்தில்லாமல் நடந்துவிட முடியாது. அந்த மாந்தோப்பு

களில் ஒன்றில் ஒரு சிறு வீடு. அந்த வீட்டின் சொந்தக்காரரை நன்ருக அறிந்திருந்ததால் அவருடைய அனுமதியின் பேரில் அந்த வீட்டில் மௌலானு மஜார்-உல்-ஹக் பையன்களுடன் வசிக்க ஆரம்பித்தார். சதாகத் ஆசிரமம் இவ்விதம் ஆரம்பமாயிற்று.

கல்லூரியை ஆரம்பிப்பதற்காக சம்பரானில் கொஞ்சம் பணம் வசூல் செய்தோம். கைவிடப்பட்ட ஒரு காலேஜை திரும்பவும் ஆரம்பிக்கும் யோசனையை மகாத்மா அங்கீகரிக்கவில்லை என்பதை முன்பே சொல்லியிருக்கிறேன். ஆனல் அதற்கென்று வசூலித்த பணம் எங்களிடமிருந்தது. அந்தப் பணத்தையும், தேசியப் பள்ளிக்கூடத்தில் வேலை செய்யத் தயாராக வந்த சில இளைஞர்களின் உற்சாகமான உதவியையும் கொண்டு கல்லூரியை ஆரம்பித்தோம். சர்க்கார் கல்லூரிகளில் என்ன பாடங்களை, எந்த முறையில் போதிக்கிருர்களோ அதே போலவே இக் கல்லூரியிலும் போதித்தோம். மாணவர்களுக்கு நாமும் பரீட்சை வைக்க வேண்டும் என்று சில நண்பர்கள் வற்புறுத்தினர்கள். இது அவசியம் என்றும், பரீட்சை இல்லாது போய்விட்டால், பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் விட்டுப் போகும் மாணவர்கள் பரீட்சை ஏற்பாடு எதுவு மில்லாததினல் வழியற்றவர்களாகி விட்டதாக எண்ணி வருந்துவார்கள் என்றும் சொன்னர்கள். இதனல் மற்ற பல்கலைக் கழகங்களைப் போலவே ஒருவகை பரீட்சை ஸ்தாபனம் அவசியமாயிற்று. இந்த யோசனையில் எனக்கு உற்சாகமில்லை. ஏனெனில் உற்சாக வேகத்தில் பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் விட்டு வெளியேறி வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டிருப்பவர்கள் நீண்ட காலம் எங்களுடனிருக்க மாட்டார்கள், அவர்களுடைய படிப்புக்குப் போதுமான ஏற்பாடுகளை நம்மால் செய்ய முடியாது என்று நான் பயந்தேன். மேலும் எங்களுடைய பள்ளிக்கூடங்களில் படிக்கிறவர்களுக்கு சர்க்காரில் உத்தியோகம் கிடைக்காது. இது ஒன்றே பின்னடி கஷ்டமான பிரச்னையாகிவிடும். ஆகையால் இத்திட்டத்தை நான் ஏற்றுக்கொண்டு அதன்படி வேலையையும் செய்ய ஆரம்பித்தாலும் இதன் பயனைக் குறித்த அளவில் என் மனதில் சந்தேகம் இருந்தே வந்தது.

மகாத்மா பாட்னாவுக்கு வந்தபோது, நாங்கள் ஒரு கல்லூரியை ஆரம்பித்திருக்கிறோம் என்றும், இப்பொழுது இருக்கும் கொஞ்ச பணத்தைக் கொண்டு சிறிது காலம் நடத்திக் கொண்டு போகலாம் என்றும், பிறகுதான் பணக் கஷ்டமுண்டாகும் என்றும், எங்கே அதிகப் பணத்தைத் திரட்டலாம் என்பது எனக்குத் தெரியவில்லை என்றும் அவரிடம் சொன்னேன். அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும், பணம் எங்கிருந்தாவது எப்படியாவது வரும் என்றும் மகாத்மா கூறினார். நாங்கள் மேற்கொண்ட காரியம் சரியாக நடக்க வேண்டும். அது வரை பீகாரில் பொதுக் காரியங்களுக்காக பெரிய நிதி எதுவும் திரட்டப்பட்டதில்லை. நிதி திரட்டும் வகையில் அந்த மாகாணத்தில் நான் எதையும் செய்ததும் கிடையாது. எனக்கிருந்த இரண்டொரு அனுபவத்தைக் கொண்டு எனக்கு பயம் ஏற்பட்டது. நாகபுரி காங்கிரஸ் மகாநாடு நடப்பதற்கு முன்னாலிருந்த காங்கிரஸ் அமைப்பு விதியின்படி, செலவுக்காக ஒவ்வொரு மாகாண காங்கிரஸ் கமிட்டியும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்க வேண்டும். வருஷத்திற்கு பீகார் ரூ. 1500 கொடுக்க வேண்டும். இத்தொகை முழுதும் கொடுக்கப் பட்டதே இல்லை. வற்புறுத்தப்படும் போது சில பணக்காரர்கள் ஆளுக்கு ரூ. 100 அல்லது ரூ. 200 என்று போட்டுச் சேர்த்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பி வந்தோம். என்றாலும் பெரும் தொகை எப்பொழுதும் பாக்கியாகவே இருந்து வந்தது. கல்கத்தாவிலிருந்து பாட்னாவுக்கு வந்ததிலிருந்து மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கு நான் உதவிக் காரியதரிசி. ஆகையால் வருஷாந்தர சந்தாவுக்குப் பணம் வசூல் செய்வது எவ்வளவு கஷ்டமாயிருந்தது என்பது எனக்குத் தெரியும்.

பீகாரில் முதல் தடவையாக காங்கிரஸ் 1912-ல் நடந்தபோது அதன் செலவுக்கு வேண்டிய பணத்தை வரவேற்புக் கமிட்டியினால் திரட்ட முடியாது போயிற்று. அதன் காரியதரிசியான ஸ்ரீ சச்சிதானந்த சின்ஹாவுக்கு அது பெருந் தொல்லையாகப் போய்விட்டது. என்னை பயமுறுத்தி விட்ட மற்றோர் அனுபவம் இதுவேயாகும். இத

னுலேயே கல்லூரியின் மாதாந்தரச் செலவுகள் வந்த போது நான் கவலைப் பட்டதோடு இதன் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவும் தயங்கினேன். இவ்வேலையை ஏற்றுக் கொள்ளும்படி மகாத்மா கூறியபோது தைரியத்துடன் செய்தேன். சில தினங்களுக்கெல்லாம் மகாத்மா காந்தியிடமிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது. தாம் திரும்பவும் பீகாருக்கு வருவதாகவும் அச்சந்தர்ப்பத்தில் ஒரு தேசிய பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்கலாம் என்றும் அதில் கூறியிருந்தார். இதற்கென்று தாம் நல்ல தொகை கொண்டு வருவதாகவும் எனக்கு அறிவித்தார். நடந்தது என்னவென்றால், மகாத்மா வங்காளத்திற்குப் போய்விட்டு பீகாரிலுள்ள ஜாரியாவுக்கும் போயிருந்தார். அவ்விடத்தைச் சேர்ந்த நிலக்கரிச் சுரங்க முதலாளிகள் மகாத்மாவிடம் அறுபது, எழுபது ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்தார்கள். தேசிய பல்கலைக் கழகத்தை நடத்துவதற்காக காந்திஜி அப்பணத்தை எங்களிடம் ஒப்படைத்தார். இத் தொகை எங்களிடம் வந்ததால் கொஞ்ச காலத்திற்காவது பணத்தைப் பற்றிய கவலை இல்லாது போகவே சந்தோஷமாக தேசியப் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்தோம்.

காங்கிரஸ் ஆண்டு மகாநாடு டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் நடப்பது வழக்கம். 1920-ம் ஆண்டு மகாநாடு நாகபுரியில் அதிக உற்சாகத்தோடு நடந்தது. அப்பொழுதிருந்த காங்கிரஸ் விதிகளின்படி ஒரு மாகாணம் தனது பிரதிநிதிகளாக மகாநாட்டுக்கு எத்தனைப் பேரை வேண்டுமானாலும் அனுப்பலாம். கல்கத்தா விசேஷ மகாநாட்டில் நிறைவேறிய ஒத்துழையாமைத் தீர்மானம் நாகபுரியில் விவாதத்திற்கு வரவிருந்ததால் மற்ற காங்கிரஸ் மகாநாடுகளை யெல்லாம் விட நாகபுரி மகாநாட்டுக்கே அதிகப் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பலத்த விவாதத்திற்குப் பிறகு மீண்டும் ஒத்துழையாமைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மழைக் காலத்தில் எனக்கு உடம்பு சுகமிருப்பதில்லை. அந்த வருஷமும், மகாத்மாவுடன் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு திரும்பிய பிறகு, நான் நோயுற்றதால் நாகபுரி காங்கிரஸ் மகாநாட்டுக்குப் போக முடிய

வில்லை. நான் முன்னாடியே சொல்லியிருக்கிறபடி, தேர்தல் பகிஷ்கார விஷயத்தில் அபிப்பிராய பேதம் பலமாக இருந்த போதிலும், தேர்தல் முடிந்து விட்டதால் அதைப் பற்றிய கவலை இன்னும் இரண்டு வருடங்களுக்கில்லை என்றாகி விட்டது. ஒத்துழையாமைத் திட்டத்தை நாகபுரி மகா நாடு ஏற்றுக்கொள்ளுவதும் இதனால் எளிதாயிற்று.

நாகபுரி மகாநாட்டிற்குப் பிறகு நாடெங்கும் அதிக உற்சாகத்துடனும் தீவிரமாகவும் ஒத்துழையாமை இயக்கப் பிரசாரம் ஆரம்பமாயிற்று. காங்கிரஸில் சேர்ந்திருக்கும் புது விதியான நூற்பது, கதர் ஆகியவைகளைக் குறித்தும் பிரசாரம் பலமாயிற்று. பல பள்ளிக்கூடங்கள் ஆரம்பமாயின. சில மாகாணங்களில் தேசிய பல்கலைக் கழகங்களையும் ஆரம்பித்தார்கள். எழும் தகராறுகளை பஞ்சாயத்துக்கள் தீர்த்து வந்தன. குடிப் பழக்கத்தை எதிர்த்தும் பிரசாரம் துவங்கியது. எங்குமே என்றும் கண்டறியாத உற்சாகம். பள்ளிக்கூடங்களிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் மாணவர்கள் ஏராளமாக வெளியேறிவிட்டனர். இவர்களில் பலர் தேசிய பள்ளிக்கூடங்களில் சேர்ந்தனர். மற்றவர்கள் பிரசார வேலைகளில் ஈடுபட்டார்கள். இந்த வேலைகளில் வக்கீல்கள், பாரிஸ்டர்கள் போன்றவர்களும் ஈடுபட்டனர். தன்னுடைய முழு நேரத்தையும் பொதுஜன சேவைக்காக ஈடுபடுத்துகிறவர் ஒருவருமில்லை என்றிருந்த பீகாரில் அப் பணியில் ஈடுபட இப்பொழுது ஆயிரக்கணக்கானவர்கள் தயாராயிருந்தார்கள். இதன் பலனாக மாகாணத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் ஊழியர்கள் சென்றனர். ஒத்துழையாமைப் பிரசாரத்தோடு கிராமம் கிராமமாக சுயராஜ்யம், கதர், மதுவிலக்கு ஆகியவைகளைக் குறித்தும் பிரசாரம் செய்தார்கள். காங்கிரஸ் தொண்டர்கள் போகாத, காந்திஜியின் பெயரையும், காங்கிரஸ் செய்தியையும் அவர்கள் பரப்பாத கிராமமே கிடையாது என்பதே என் நம்பிக்கை.

மாகாணம் முழுதும் சுற்றுப்பிரயாணம் செய்தேன். இதற்கு முன்னால் சில ஜில்லாக்களில் மாத்திரமே எனக்குப் பழக்கமிருந்தது. ஆனால் அந்த வருஷம் மாகாணம் முழு

தும் ஒவ்வோர் சப்-டிவிஷனுக்கும், தாலுக்காவுக்கும் நான் போனதோடு அனேக கிராமங்களுக்கும் போனேன். இவ்விதம் மாகாணம் முழுதும் எனக்குப் பழக்கமாயிற்று. போன இடங்களிலெல்லாம் பெரிய பொதுக்கூட்டங்கள். மேடைகளில் பேசி எனக்கு அதிகப் பழக்கமில்லை. அந்த வருஷம் நான் அநேக கூட்டங்களில் பேச வேண்டியிருந்த தால் மணிக் கணக்கில் தொடர்ந்து பேசக்கூடிய நல்ல பேச்சாளனாகிவிட்டேன். அந்த நாட்களில் சாதாரணமாக பொதுக்கூட்டங்களுக்கு பத்தாயிரம், இருபதினாயிரம் பேர் வருவார்கள். அப்பொழுது ஒலிபெருக்கிக் கருவிகள் உபயோகத்திற்கு வந்து விடாததால் இப் பெரிய கூட்டங் களில் பிரசங்கிகள் தங்கள் தொண்டையின் சக்தியைக் கொண்டே சமாளித்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஐயாயிரம் பேர் வரையில் கொண்ட கூட்டமாயிருந்தால் நான் எந்தவித சிரமமுமின்றிப் பேசி விடுவேன். கூட்டம் பத்தாயிரத்திற்கு மேற்பட்டவர்களைக் கொண்டதாயிருந் தால் சிரமப்பட்டுதான் நான் பேச வேண்டி வந்தது. கூட்டத்தில் இருபதினாயிரம் பேருக்கு மேலிருந்துவிட்டால் அதில் எல்லோருக்கும் கேட்கும்படிப் பேசுவது கஷ்டமா யிருந்ததோடு எட்டு அல்லது பத்து நிமிஷங்களுக்குமேல் அதில் பேச என்னால் முடிவதில்லை.

அந்த சமயத்திலேயே மகாத்மா காந்தி, அலி சகோதரர் களுடன் நாடு முழுதும் சுற்றுப்பிரயாணம் செய்து வந் தார். பீகாரிலிருந்து போனதும் மற்ற இடங்களுக்குப் போய்விட்டு பின்னர் ஒரிஸ்ஸாவுக்குச் சென்றார். அவ ருடன் நானும் அங்கே சேர்ந்துகொண்டேன். அங்கிருந்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற்காக அவர் விஜயவாடாவுக்குப் போகவேண்டி யிருந்தது. நானும் அவருடன் போனேன். அவர் செல்லும் ரயிலைப் பார்ப்ப தற்காக இரவு நேரங்களில்கூட ரயில் பாதை நெடுகவும் ஜனங்கள் கூடி யிருப்பார்கள். அந்த ரயில் நிற்காத ஸ்டேஷன்களிலெல்லாம் கூட ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருப்பார்கள். ஓடும் ரயிலிலிருந்து அவர் முகம் தெரிந்தால் போதும், அதுவே அவர்களுக்குத் திருப்தி. பகல் நேரங்களில் ரயில் பாதை நெடுக மக்கள் கூடி நிற்பர். மகாத்மா போகும் ரயிலைப் பார்ப்பதில் அவர்களுக்கு அவ்

வளவு ஆனந்தம்! இத்தகைய காட்சிகளைப் பார்த்தபோது, ராமர் காட்டுக்குப் போன காட்சியைப் பற்றி துளசிதாஸ் கூறியிருக்கும் வர்ணனை என் நினைவுக்கு வந்தது.

திலகர் சுயராஜ்ய நிதி திரட்டுவது என்று விஜய வாடாவிலேயே முடிவு செய்யப்பட்டது. ஜூன் 30-ந் தேதிக்குள் ஒரு கோடி ரூபாய் வசூலிப்பது, 10 லட்சம் காங்கிரஸ் மெம்பர்களைச் சேர்ப்பது, 10 லட்சம் கைராட்டி னங்கள் வேலை செய்யும்படிப் பார்ப்பது என்று அங்கு முடிவாயிற்று.

என் மாகாணத்தைவிட்டு நான் வெளியே போனது அதுவே முதற் தடவை. பெரிய பொதுக்கூட்டங்களில் மகாத்மா எப்படிப் பேசுகிறார், தொண்டர்களின் சிறு கூட்டங்களில் எவ்வாறு உரையாடுகிறார் என்பதைக் கிட்டத்திலிருந்து பார்க்கும் வாய்ப்பு எனக்கு அப்பொழுது கிடைத்தது. வேலை செய்வதில் அவருக்கிருந்த ஆற்றலின் அற்புதத்தை சம்பரானில் கண்டோம். ஒரு பொதுக்கூட் டத்தில்கூட பேசாமலேயே காரியங்களை யெல்லாம் அவர் அங்கு செய்தார். இப்பொழுது அதெல்லாம் மாறி விட்டது. தொண்டர்களிடம் பேசுவது என்ருலுங்கூட அதுவும் ஒரு பொதுக்கூட்டம் மாதிரிதான். இவ்விதம் மாறுதலிருந்த போதிலும் மகாத்மாவின் வேலை முறை மாத்திரம் ஒரே மாதிரியாகவே இருந்தது. வெளித் தோற்றத் தில்தான் மாறுதல் தோன்றியது. இப்பொழுதெல்லாம் பிரிட்டிஷ் சர்க்காரை அதிகமாகக் கண்டித்துப் பேசுவார்; சில சமயங்களில் அதை சைத்தான் சர்க்கார் என்றும் வர்ணிப்பார். அவருடைய காரியங்களுக்கு அப்போதைக் கப்போது இடையூறுகளும் செய்யப்பட்டன. முக்கியமாக மதுவிலக்குப் பிரசார சம்பந்தமாகப் பலர் கைது செய்யப் பட்டார்கள். இவைகளெல்லாம் நடந்தபோதிலும் இரு விஷ யங்கள் முக்கியமாக வற்புறுத்தப்பட்டன; கலவரமோ, அமைதிக்கு பங்கமோ ஏற்பட்டுவிடாமலிருப்பதை முன் னிட்டு அஹிம்சையை கண்டிப்பாக அனுசரித்தாக வேண் டும்; அந்தக் கட்டத்தில் யாரும் சட்டத்தை மீறக் கூடாது. எனினும் மக்கள் உற்சாக வேகத்தில் சட்டத்தை மீற தங் களுக்கு அனுமதி வேண்டும் என்று கோரினார்கள். ஆனல்

இதற்கு உடன்பட மகாத்மா மறுத்துவிட்டார். விஜயவாடா வில் அங்கீகரிக்கப்பட்ட வேலைத் திட்டத்தை நிறைவேற்று வதில் அப்பொழுது முனைந்திருந்தோம். அந்த லட்சியம் நிறைவேறியதும் சத்தியாக்கிரகம் ஆரம்பமாகும் என்று நம்பினேம். இதை மகாத்மா அப்பொழுது ஆதரிக்கவில்லை. மக்களிடையே உற்சாகம் அதிகமிருந்த போதிலும் கட்டுப் பாடான முறையில் நடந்து கொள்ள அவர்கள் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை என்று அவர் எண்ணினர். சத்தி யாக்கிரகம் நடந்தால் வரக்கூடிய அடக்குமுறைக் கொடு மைகளைச் சமாளித்து நிற்பார்களா என்றும் பயந்தார். இதே சமயத்தில், தம்முடைய ஒத்துழையாமைத் திட்டத் தைத் தாம் கூறிய வகையில் மக்கள் நிறைவேற்றி வைத் தால் ஒரு ஆண்டில் சுதந்திரத்தை அடைந்து விடலாம் என்றும் கூறி வந்தார்.

இவைகளெல்லாம் நடப்பதற்குச் சில தினங்களுக்கு முன்னல் பாட்னுவில் "தேஷ்" என்ற ஒரு வாரப் பத்திரி கையைப் பிரசுரித்தேன். அதில் ஆசிரியர் என்று என் பெயர் அச்சிடப்பட்டது. அப்போதைக்கப்போது கட்டு ரைகளை எழுதுவதைத் தவிர நான் அதிகமாக அதற்கு எதுவும் செய்யவில்லை. ஒருவர் மீது குற்றச்சாட்டுகளைக் கூறி ஒரு நிருபர் எழுதிய கட்டுரையொன்று அப்பத்திரி கையில் பிரசுரமாகி விட்டது. இதற்காக அவர் என்மீது கிரிமினல் வழக்குத் தொடுத்தால் நான் அர்ரா மாஜிஸ் டிரேட் முன்னல் ஆஜராக வேண்டியதாயிற்று. விசாரித் ததில் அக்கட்டுரையில் கூறப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் உண்மையல்ல என்றும், ஆதாரமற்றவை என்றும் அறிந்தேன். ஆகவே குற்றத்தை ஒப்புக்கொண்டு மன் னிப்புக் கேட்பதைத் தவிர எனக்கு வேறு மார்க்கமில்லை. இதில் இன்னுமொரு விஷயமும் யோசிக்க வேண்டியதா யிற்று. என்னைப் போன்ற ஒருவர் மன்னிப்புக் கேட்ப தென்ருல், சிறைப்படுவதை தட்டிக் கழிக்க நான் முற்படு கிறேன் என்ற கருத்து உடனே ஏற்படுவதோடு மற்ற தொண்டர்களிடத்திலும் தவருன போக்கை இது உண் டாக்கி விடக்கூடும். என்ன செய்வது என்று தோன்ருமல் திகைத்தேன். தவறை நான் ஒப்புக் கொள்ளாவிட்டால் பொய் சொன்ன குற்றவாளியாவதோடு, யார்மீது புகார்

கூறப்பட்டதோ அவருக்கும் நான் பெரிய அநீதியைச் செய்தவனாவேன். தவறை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டுவிட்டாலோ, சிறைக்குச் செல்லாமல் தப்பித்துக் கொள்ள இப்படிச் செய்தேன் என்று குறை சொல்லுவார்கள். என்னுடைய செய்கைக்கு எந்த வியாக்யானம் கூறப்படுவதா யிருந்தாலும் சரி, உண்மையையே கடைப்பிடித்து நிற்பது என்ற திடமான முடிவுக்கு வந்துவிட்டேன். நான் இந்த முடிவுக்கு வர ஸ்ரீ மஜார்-உல்-ஹக்கும், பாபு பிராஜ்கிஷோரும் எனக்கு வழி காட்டிகளாகவும், தைரியம் கொடுத்தவர்களாகவுமிருந்தனர். தற்காலிகமாகத் தீமையே ஏற்படும் என்று தோன்றினாலும் முடிவில் நன்மையே பிறக்குமாதலால் உண்மையையே ஒருவர் கடைப் பிடித்து நிற்க வேண்டும் என்று மகாத்மா கூற அடிக்கடி நான் கேட்டிருக்கிறேன். அதன்படி நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். உண்மையோடும் ஒழுக்கத்தோடும் நடக்க வேண்டும் என்பதற்காக மன்னிப்புக் கேட்கிறேனேயல்லாமல் சிறை செல்ல பயந்து கொண்டல்ல என்றும் அதே சமயத்தில் கூறினேன். அதன் பேரில் வழக்கு வாபஸ் வாங்கிக் கொள்ளப்பட்டதால் அந்த விஷயம் அதோடு முடிந்தது. இச் சம்பவம் காங்கிரஸ் தொண்டர்களிடையே எந்த தவறான மனப்போக்கையும் உண்டாக்கி விடாததால் இதற்காக நான் பயந்தது தவறு என்பதையும் கண்டு கொண்டேன்.

விஜயவாடாவில் நிறைவேறிய வேலைத் திட்டம் முக்கியமாக ஜூன் 30-ந் தேதி வரையிலேயே வெற்றிகரமாக இருந்தது. ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வசூலாயிற்று. காங்கிரஸ் மெம்பர்களும் ஏராளமாக சேர்க்கப்பட்டனர். ஆனால் ராட்டினத்தைப் பரப்புவது என்ற வேலை முற்றுப் பெறவில்லை. ஏனெனில் தொண்டர்களில் நூற்கத் தெரிந்தவர்கள் மிகச் சிலரே. மேலும் அத்திட்டத்தைப் பற்றி எங்களுக்கே தெளிவு கிடையாததோடு அதை எப்படி நிறைவேற்றி வைப்பதென்பதையும் அறியோம். உற்சாகத்தில் மக்கள் ஏராளமான ராட்டினங்களைத் தயாரித்தார்களெனினும் முடிவில் பயன்படவில்லை. நூல் நூற்றார்கள். ஆனால் அதைத் துணியாக நெய்வதற்கு வேண்டிய வசதிகள் இல்லை. நூற்ற நூலில் பெரும் பகுதி நெய்வ

தற்கு ஏற்றதாகவுமில்லாமல் போய் வீணாயிற்று. தேசிய பள்ளிக்கூடப் பாடங்களில் நூல் நூற்பது முக்கிய இடம் பெற வேண்டும் என்று மகாத்மா வற்புறுத்தினர். தேசியப் பல்கலைக் கழகங்கள் வகுக்கும் படிப்பு முறையில் ராட்டினமே முக்கிய கேந்திரமாக அமையும் வகையில் அதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார். இதன்படி தேசியப் பள்ளிக்கூடங்களிலெல்லாம் ராட்டினத்தில் நூற்க சொல்லிக் கொடுத்தோம். ராட்டினத்தில் வேலை செய்யத் தெரிந்தவர்கள் மிகச் சிலரே இருந்ததால் இதில் அதிக அபிவிருத்தி உண்டாகவில்லை. இத்திட்டம் அநேகமாக உயிரற்ற நிலையிலேயே இருந்தது. தேசிய பல்கலைக் கழகங்களை நடத்தி வந்தவர்களுக்கும் ராட்டினத்தைப் பற்றியும் அதன் நுட்பத்தைப் பற்றியும் எதுவும் தெரியாததினுலும் அதனுடைய பயனில் அவர்களுக்கு அதிக நம்பிக்கை இல்லாததாலும் புத்தகப் படிப்பின் அறிவிலேயே அவர்கள் அதிக கவனஞ் செலுத்தினார்கள். ராட்டினத்தில் அதிக அக்கறை காட்டும் உபாத்தியாயர்கள் கிடைத்த பள்ளிக்கூடங்களில் இத்திட்டம் வெற்றிகரமாக இருந்தது. பெரும்பாலான பள்ளிக்கூடங்களில், இதுவும் பாடங்களில் ஒன்றாக இருந்ததேயன்றி இதில் அதிக சிரத்தை எதுவும் காட்டப்படவில்லை. பணம் வசூலானதும், கையினால் நூற்று கையினால் நெய்த துணியை உற்பத்தி செய்வதற்கு அதை உபயோகித்தனர். நூற்கும் பழக்கத்தை மக்கள் மறந்து விடாத இடங்களில் இத்திட்டம் கொஞ்சம் வெற்றி பெற்றது.

பீகாரில் இந்த வேலையில் நல்ல அபிவிருத்தி இருந்தது! மகாத்மா காந்திக்கு ஒரு ஜதை நயமான வேட்டியை அன்பளிப்பாகக் கொடுத்தது எனக்கு நினைவிருக்கிறது. இதை யாரோ எனக்குக் கொடுத்ததோடு அது கையினால் நூற்று நெய்யப்பட்டது என்றும் சொன்னார்கள். மகாத்மாவும், மௌலானா பூகமது அலியும் அளவு கடந்த ஆனந்தமடைந்தார்கள். சில வருஷங்களுக்குப் பிறகு அப்படிப்பட்ட நயமான நூலை பீகாரில் ஒரு குறிப்பிட்ட அளவுதான் தயாரிக்க முடிந்தது என்பதை நினைவு படுத்திப் பார்க்கும் போது, அந்த வேட்டிகளை அவர்கள் என்னிடம் கொடுத்துக் கதர் உற்பத்தி முன்னேறி யிருப்பதாகவும் சொன்ன

போது, நான் ஏமாற்றப் பட்டிருக்க வேண்டும் என்றே சந்தேகிக்கிறேன்.

அச்சமயத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒத்துழையாமை இயக்கத்தில் அதிக உற்சாகத்தோடு சேர்ந்தார்கள். அத்திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் இவ்விரு சமூகத்தினரிடையேயும் நட்பு முறையில் போட்டியுமிருந்தது. காங்கிரஸ் கமிட்டிகளுடன் கிலாபத் கமிட்டிகளும் பல இடங்களிலும் அமைக்கப்பட்டன. இவைகளை அமைப்பதில் ஹிந்துக்கள் அதிக உற்சாகம் காட்டியதோடு இதற்கு உதவி செய்வதற்காக நிதியும் திரட்டிக் கொடுத்தார்கள். முஸ்லிம்களும் சேர்ந்து காங்கிரஸுக்கு உதவி செய்தனர். இந்த ஒற்றுமை என்றுமே கெடாது என்றே அப்பொழுது தோன்றிற்று. நமது தேசிய வாழ்வில் இது நிரந்தரமானதாக இருக்கும் என்றும் அநேகர் நம்பினார்கள்.

பக்ரீத் பண்டிகையின் போது, முக்கியமாக வட இந்தியாவில், பசு கொல்லப்படும். இதனால் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அநேக சச்சரவுகள் நிகழுவதுண்டு. அந்த வருஷம் பக்ரீத் பண்டிகை சமீபித்து வந்ததால், இதைக் கொண்டாடுவதால் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சச்சரவு உண்டாகி விடாமலிருக்க வேண்டுமே யென்று அதிகக் கவலையுடனிருந்தோம். எனவே மகாத்மா காந்தி, மௌலானா முகமது அலியுடன் திரும்பவும் பீகாரில் சுற்றுப் பிரயாணம் செய்து சில தினங்களில் பல ஜில்லாக்களுக்கும் போனார்கள். சென்ற இடங்களிலெல்லாம் அவரும் மௌலானாவும் பொதுக்கூட்டங்களில் பேசினார்கள். பசுக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு முற்றிலும் முஸ்லிம்களுடையதே என்றார் காந்திஜி. சாத்தியமான வரையில் பசு வதையை நிறுத்திவிட வேண்டும் என்று முஸ்லிம்கள் சார்பில் கோரிக்கைகள் வெளியிடப்பட்டன. இதன் பலனாக முந்திய வருஷங்களை யெல்லாம்விட மிகக் குறைந்த தொகை பசுக்களே அந்த வருஷ ஈத் பண்டிகையின்போது வதை செய்யப்பட்டன. ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே ஒற்றுமையும் பலப்பட்டது. இந்த ஒற்றுமை நிரந்தரமானதல்ல என்பது பின்னடியே புல

னுயிற்று. மகாத்மா காந்தியின் இந்த சுற்றுப் பிரயாணம் முடிவதற்கு முன்னுலேயே ஒற்றுமை சிதைந்து வருகிறது என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

பீகாரிலிருந்து மகாத்மா கல்கத்தா போய்விட்டு அங்கிருந்து சென்னைக்குச் சென்றுர். சென்னைக்குப் போகும் வழியிலேயே மலையாளத்தில் மாப்பிளாக்களின் கிளர்ச்சியைப் பற்றிய செய்தி தெரிந்தது. மௌலானு முகமது அலி கைதியானுர். ஹிந்து-முஸ்லிம் மன மாறுபாடும், ஒருவர் மீது மற்றவருக்கு நம்பிக்கை இல்லை என்பதும் மாப்பிளா கலவரத்தின்போது வெளிப்பட்டன. மாப்பிளாக்கள் நல்லவர்கள்; ஆனுல் சுலபத்தில் ஆத்திரமடைந்துவிடக் கூடியவர்கள். கிலாபத் கிளர்ச்சியின் காரணமாக அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்தனர். இவ்விதம் இக் கலவரத்தின் முக்கியமான நோக்கம், மதத்தை அடிப்படையாகக் கொண்டது. மதவெறி கிளம்பிவிட்டால் பிறகு அது பலவகையான ரூபங்களைக் கொண்டுவிடும். மலையாளத்தில் அது ஒரு விசித்திரமான உருவெடுத்தது. மாப்பிளாக்களின் உண்மையான தகராறு பிரிட்டிஷாருடன்தான்; ஆனுல் ஹிந்துக்கள் பிரிட்டிஷாருக்கு உதவியாக இருக்கிறுர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் ஹிந்துக்களிடம் அவர்கள் அட்டூழியங்களைச் செய்தார்களாம். இதன் விளைவுகள் மிகவும் ஆபத்தானதாயின. ஏனெனில் தங்களுக்கிருந்த சச்சரவு பிரிட்டிஷ் சர்க்காரிடமேயாயினும், பிரிட்டிஷாருடன் சேர்ந்திருப்பதாக தாங்கள் நினைத்த ஹிந்துக்களையும் எதிரிகளாக அவர்கள் பாவித்தார்கள். இதன் விளைவு நாட்டின் மற்ற பகுதிகளிலிருந்த ஹிந்துக்களிடையேயும் பிரதிபலிக்காது போகவில்லை. எப்படி நடந்தது என்பது அப்பொழுது தெளிவாகத் தெரியாவிட்டாலும், அநேக ஹிந்துக்களை மாப்பிள்ளாக்கள் பலவந்தப்படுத்தி மதம் மாற்றிவிட்டார்கள் என்ற செய்தி எங்கும் பரவிவிட்டது. நாடெங்கும் வெறுப்பு உண்டாயிற்று. மகாத்மா அப்பொழுது சிறையிலில்லை. காங்கிரஸுக்கும் கிலாபத் கமிட்டிக்கும் நாட்டில் அதிக செல்வாக்கும் இருந்தது. ஆகையால் இரு சமூகங்களுக்குமிடையே தோன்றிய பகைமை நீடிக்கவில்லை; சீக்கிரத்தில் நீக்கப்பட்டுவிட்டது.

அலி சகோதரர்களும் மற்றுஞ் சில தலைவர்களும், ஹிந்து மதாச்சாரியரான ஸ்ரீ சங்கராச்சாரியாரும், கிலாபத் கூட்டங்களில் கலந்துகொண்டதற்காகவும், அவர்களுடைய கராச்சி பிரசங்கத்திற்காகவும் கைது செய்யப்பட்டனர். சர்க்கார் விதித்திருந்த தடையை மீறி ஒரு பத்வாவைச் சொன்னுர்கள், அதை விளம்பரப்படுத்தினர் என்பது இவர்கள் மீது சாட்டிய குற்றம். கராச்சி விசாரணை நாடெங்கும் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. இவ் வழக்கில் ஸ்ரீ சங்கராச்சாரியாரும் ஒரு எதிரியாக இருந்ததால் ஒரு அளவுக்கு ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை மேலும் பலப்பட்டது. ஆனால் மலபாரில் நடந்த மாப்பிளா கலவரத்தின்போது விதைக்கப்பட்டுவிட்ட வேற்றுமையின் விதையோ முளைத்து நாளா வட்டத்தில் வளர ஆரம்பித்துவிட்டது.

சத்தியாக்கிரக இயக்கத்தைத் தாமதமின்றி ஆரம்பித்துவிட வேண்டும் என்ற கோரிக்கை நாடெங்குமிருந்தும் பிறந்தது. வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வரும் சமயமும், ஆமதாபாத்தில் காங்கிரஸ் கூடவிருந்த சமயமும் சமீபித்தன. சட்டமறுப்பை ஆரம்பிப்பதை மகாத்மா அப்பொழுதும் விரும்பவில்லை. அவர் சில நிபந்தனைகளை விதித்தார் அவை சரியானபடி நிறைவேற்றப்படாத வரையில் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க அனுமதிக்கப்போவதில்லை என்ருர். இந்த நிபந்தனைகளில் ஒன்று, எந்தப் பகுதியில் கதரை உபயோகிப்பது நன்ருகப் பரவி, சாத்தியமானவரையில் நிர்மாண வேலைத் திட்டமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறதோ அப் பகுதிக்கு மட்டுமே சத்தியாக்கிரக அனுமதி அளிக்கப்படும் என்பதேயாகும். இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற பல இடங்களிலும் தீவிர முயற்சிகள் செய்யப்பட்டன. சாம்ரா ஜில்லாவில் (சரண்), வசந்தபுரி தாலுவில், அங்குள்ள மக்கள் அவசியமான நிலைமையைத் தாங்கள் நிறைவேற்றி விட்டதாகவும், சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க தங்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்றும் கேட்டார்கள்.

வேல்ஸ் இளவரசர் பம்பாயில் வந்திறங்கினுர். கலவரம் மூண்டது. இளவரசருக்கு வரவேற்பு அளிப்பதில்

உதவி செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொது ஜனக் கூட்டம் பார்ஸிகளிடம் அக்கிரமமாக நடந்து கொண்டுவிட்டது. மற்றப் பகுதிகளிலும் கலவரம் பரவக் கூடும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. மகாத்மா அதிகக் கவலைகொண்டார். உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். இதன் பலனாகச் சில தினங்களில் கலவரம் நின்றது. இது மக்களுக்கு ஏற்பட்ட புது அனுபவம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் பம்பாயில் நடந்தது. அதற்கு நானும் போயிருந்தேன். அக் கூட்டத்தில் நடந்த ஒரு சிறு சம்பவம், மகாத்மா காந்தியின் சகிப்புத்தன்மையையும் பெருமையையும் நாங்கள் நன்கு உணரும்படிச் செய்தன. இளவரசர் வருகையை பகிஷ்கரிப்பது என்பதை எதிர்த்தவர்கள், இந்த பகிஷ்காரத்தின் விளைவுதான் பம்பாய் கலவரம் என்று கூறி அக் கலவரத்தைத் தங்களுக்குச் சாதகமான வாதமாய் பயன்படுத்திக் கொண்டார்கள். இவர்கள் அதன்பேரில் மகாத்மாவின் வேலைத் திட்டம் முழுவதையுமே பலமாக எதிர்த்தனர்; கடுமையாகத் தாக்கியும் பேசினார்கள். இவ்விதம் தாக்கிப் பேசியவர்களில் முக்கியமானவர் ஸ்ரீமதி அன்னி பெஸண்டு. இவர் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்ப முதற் கொண்டே எதிர்த்து வந்தார். பம்பாய் கலவரத்திற்குப் பிறகு இவர் தன்னுடைய வாரப் பத்திரிகையில் கடுமையான கட்டுரை ஒன்றையும் எழுதினார். ஸ்ரீமதி பெஸண்டை எப்பொழுதும் எதிர்த்து வந்தவரான தேசபந்து தாஸ், அப் பத்திரிகையின் பிரதியொன்றை காரியக் கமிட்டிக் கூட்டத்திற்குக் கொண்டுவந்து, அந்தக் கட்டுரைக்கு மண்டையிலடிப்பது போன்ற பதில் ஒன்றை மகாத்மா விடமிருந்து "எங் இந்தியா" பத்திரிகையில் தாம் எதிர் பார்ப்பதாகக் கூறினார். உடனே மகாத்மா சிரித்துக் கொண்டே அத்தகையது எதையும் எதிர்பார்க்க வேண்டாம் என்றார். இதுதான் காந்திஜி தமது வாழ் நாளெல்லாம் பின்பற்றிய கொள்கை. தம்மை எதிர்ப்பவர்களைக் குறித்து, அவர்கள் மீது துவேஷத்தை எழுப்பும் வகையிலோ அல்லது அவர்களிடம் பகைமை இருப்பதாகத் தோன்றும் முறையிலோ அவர் எப்பொழுதும் எழுதுவது மில்லை, பேசுவதும் கிடையாது. தேசபந்து தாஸ், ஸ்ரீமதி

பெஸண்டின் வாதங்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான பதில் கூறித் தகர்த்தெறிந்தார்.

நவம்பர் பிறந்தது. மக்கள் சத்தியாக்கிரகத்திற்காக ஆவலுடன் பரபரப்போடிருந்தார்கள். இதை ஆரம்பிப்பதற்காக விசேஷ திட்டங்கள் எதையும் தயாரித்து அதை ஆரம்பித்து வைக்கவேண்டிய அவசியம் எதுவுமில்லை. இளவரசர் போகுமிடங்களில் எதிர்ப்பு ஆரவாரங்கள் நடக்கும் என்று அஞ்சி, இளவரசர் போவதற்கு நிச்சயித்திருந்த இடங்களிலெல்லாம் ஏராளமானவர்களை போலீஸார் கைது செய்து வந்தார்கள். இளவரசர் வருகைக்காக சர்க்கார் காத்திருக்கவில்லை. எதிர்ப்பு அமர்க்களங்களைத் தடுத்துவிட அநேகரைக் கைது செய்தார்கள். ஆனால் தடுத்துவிட அவர்களால் முடியவில்லை.

தொண்டர் படையைத் திரட்டும்படி எல்லா காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அனுப்பிய தாக்கிதை யொட்டி எங்கும் தொண்டர்கள் சேர்க்கப்பட்டனர். இத்தொண்டர் படைகள் சட்ட விரோதம் என்று கூறி அதிலிருந்தவர்களை ஏராளமாகக் கைது செய்தார்கள். இதனால் தொண்டர் படையில் சேராதிருந்திருக்கக் கூடியவர்களும் அதில் சேர்ந்து கொண்டு சிறை செல்லுவதைப் பெருமையாகக் கொண்டார்கள். இவ்விதம் சத்தியாக்கிரகம் ஆரம்பமாயிற்று; அதுவும் சர்க்காரின் செய்கையினாலேயே ஆரம்பமாயிற்று. மக்களிடையே உற்சாகம் அதிகமிருந்ததால் காங்கிரஸுடன் ஒரு சமரசத்திற்கு வர சர்க்கார் ஆவலுடனிருந்தது. தேசபந்துதாஸ், பண்டித மோதிலால் நேரு, லாலா லஜபதிராய், மௌலானா அபுல் கலாம் ஆஜாத் முதலிய பெரிய தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். எனினும் மக்களின் உற்சாகம் குன்றவில்லை. கல்கத்தாவுக்கு வேல்ஸ் இளவரசர் போகும்போது அந்நகரில் எந்த விதமான அசம்பாவிதமும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதில் வைசிராய் லார்டு ரீடிங் அதிகக் கவலை கொண்டிருந்தார். சமரசத்திற்கு வந்துவிடவும் அவர் தயாராயிருந்தார். ஆனால் சமரசத்திற்குக் கூறப்பட்டவை போதுமானவைகளாயில்லை என்று கூறி மகாத்மா நிராகரித்து விட்டார். மகாத்மா

வின் இந்தப் போக்கு தேசபந்துதாஸுக்குப் பிடிக்கவில்லை. அவர் சிறையிலிருந்து வந்ததும் இதை பலமாகக் கண்டித்தார்.

இந்த சமரசப் பேச்சுக்கள் முடிவடையாமலிருந்த கட்டத்திலேயே இளவரசர் கல்கத்தா சென்றார். பெருத்த எதிர்ப்பு ஆரவாரங்கள் நடந்தன. அவர் சென்ற இடங்களிலெல்லாம் இத்தகைய எதிர்ப்பையே அவர் கண்டார். எனவே இந்த இயக்கத்தை நசுக்கி விடுவதற்காக லார்டு ரீடிங் மேலும் கடுமையான அடக்குமுறைகளை மேற்கொண்டார்.

சமரசத்திற்குப் பேச்சு நடந்து கொண்டிருந்தபோது பீகாரில் நடந்த ஒரு சம்பவம் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடத் தக்கதாகும். பீகாரிலும் ஏராளமான காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டு வந்தனர்; நாங்கள் எல்லோருமே கைது செய்யப்பட்டு விடுவோம் என்று தோன்றியது. ஆனால் கைது செய்யப்படுவது திடீரென்று நின்றதோடு நானும் மற்றும் பல காங்கிரஸ்காரர்களும் கைது செய்யப்படவுமில்லை. கீழ்க் கண்டவாறு ஏற்பட்ட ஒரு தவறான எண்ணத்தினாலேயே இது என்று பிறகு அறிந்தேன்.

தேசபந்துதாஸுடன் லார்டு ரீடிங் பேச்சு நடத்திக் கொண்டிருந்தபோது, முன்னாடியே நிர்ணயிக்கப்பட்டு விட்ட சமரச முறைகளுக்கு அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தமது நிர்வாக சபையை வைஸ்ராய் கல்கத்தாவில் கூட்டியிருந்தார். சமரசம் நிச்சயம் என்ற கருத்து வளர்ந்தது. அந்த நிர்வாக சபையில் சர் தேஜ்பகதூர் சப்ருவும் ஒரு மெம்பராகையால் அக்கூட்டத்திற்காக கல்கத்தாவுக்கு பாட்னா வழியாக அவர் சென்றபோது பீகார் கவர்னருடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். சமரசம் ஏற்பட்டு விட்டது என்ற அபிப்பிராயத்தை இப்பேச்சு கவர்னரின் மனதில் உண்டாக்கிவிட்டது. அதன் பேரில் யாரையும் கைது செய்ய வேண்டாமென்று உத்தரவிட்டார். பிறகு சமரசம் ஏற்படாமலேயே போயிற்று; நானும் மற்றும் பலரும் கைதாகாமல் தப்பினோம்.

சில தினங்கள் கழிந்து காங்கிரஸ் ஆமதாபாத்தில் அதிக ஆடம்பரத்தோடும் உற்சாகத்தோடும் நடந்தது.

இதற்கு தேசபந்து தாஸை தலைவராகத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். ஆனால் அச்சமயம் அவர் சிறையிலிருந்ததால் அவருக்கு பதிலாக ஹகீம் அஜ்மல் கான் தலைமை வகித்தார். அதே சமயத்தில் ஒரு பொருட்காட்சியும் நடந்தது. பெருமளவில் காங்கிரஸ் நடக்க ஆரம்பமானது அதுதான் முதல் தடவை. இதற்கு முன்னால் காங்கிரஸுக்கு வரும் பிரதிநிதிகளும், விசிட்டர்களும் உட்கார நாற்காலிகளையும் பெஞ்சுகளையும் போடுவது வழக்கம். முதன் முறையாக எல்லோரும் தரையில் உட்காருவதென்பது ஆமதாபாத்திலேயே. அம்மகா நாட்டில் விவாதத்திற்கு வந்த தீர்மானங்களில், பூரண சுயேச்சையே காங்கிரஸின் லட்சியமாக இருக்க வேண்டும் என்றும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து விலகிவிட வேண்டும் என்றும் மௌலானா ஹஸரத் மோஹானி கொண்டு வந்த தீர்மானத்தின் பேரில் பலமான விவாதம் நடந்தது. இதை மகாத்மா காந்தி பலமாக எதிர்த்ததினால் அத் தீர்மானத்தை மகாநாடு நிராகரித்து விட்டது.

சத்தியாக்கிரகத்தின் உட்பொருளை நன்றாக அறிந்து கொள்ளாமல் அதை மேற்கொள்ளத் தாங்கள் விரும்புவதோடு மற்றவர்களையும் அப்படிச் செய்யக் கட்டாயப் படுத்துகிறவர்கள் விஷயத்தில் மகாத்மா எவ்விதம் நடந்து கொண்டார் என்பதைக் காட்டுவதற்கு விஷயாலோசனைக் கமிட்டியில் நடந்த ஒரு சிறு சம்பவத்தை இங்கு குறிப்பிடுகிறேன். ஒரு கனவான் பசு பாதுகாப்பில் பெரிய தீவிரவாதி. இவர் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் பிரதிநிதிகளுக்கு நடுவில் உட்கார்ந்து கொண்டு, பசு பாதுகாப்பு சம்பந்தமாக இக்கமிட்டி ஒரு தீர்மானத்தைச் செய்யாது போனால் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் நடக்க விடப்போவதில்லை என்று கூறினார். இவரைத் தொண்டர்கள் வெளியேற்றி விடும்படிச் செய்து விஷயாலோசனைக் கமிட்டி தனது வேலையை கவனித்துக் கொண்டு போகும்படிப் பார்ப்பது மிகச் சுலபம். அந்த வழி மகாத்மாவுக்குப் பிடிக்கவில்லை. அப்படிச் செய்யக்கூடாது என்று கண்டிப்பாகவும் சொல்லி விட்டார். சிறிது கூட பலவந்தத்தைப் பிரயோகிக்காமல் அந்த ஆசாமியை மகாத்மா எப்படிச் சமாளிக்கப் போகிறார், காங்கிரஸின் வேலைகளுக்கு

அந்த ஆசாமி இடையூறு செய்யாமல் எப்படித் தடுக்கப் போகிறார் என்பதைக் காண எல்லோரும் அதிக ஆவலுடனிருந்தார்கள். மகாத்மாவும் மற்றவர்களும் அந்த ஆசாமியிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள்; ஒன்றும் பலிக்கவில்லை. பிறகு மகாத்மா சிரித்துக் கொண்டு, "சத்தியாக்கிரக ஆயுதத்தை சரியானபடி உபயோகிக்க என்னைவிட உமக்கு அதிகமாகத் தெரிந்திருக்க முடியாது என்பது நிச்சயம். உம்மை ஒன்றுமே செய்யாமலேயே இக்கூட்டம் தொடர்ந்து நடக்கும்படி நான் எவ்விதம் செய்கிறேன் என்பதைப் பார்த்துக் கொள்ளும்" என்றார். பிறகு தொண்டர்களை அழைத்து அந்த ஆசாமியைச் சுற்றிலும் நின்று கொள்ளும்படிக் கூறினார். மற்றவர்கள் வேறு இடத்திற்கு நகர்ந்து போய் உட்கார்ந்து கொண்டு தங்கள் வேலையைக் கவனிக்கும்படியும் சொன்னார். பசுப் பாதுகாப்புத் தீவிரவாதி, இதன் பலனாக, தாம் இருந்த இடத்திலேயே இருந்தார்; கொஞ்ச தூரத்தில் எத்தகைய இடையூறுமில்லாது கூட்டம் நடந்து வந்தது. அந்த ஆசாமியை யாரும் ஏதும் செய்யவில்லை; கூட்டமும் அமைதியாக நடைபெற்றது

சிறைப்பட்டார் மகாத்மா

சத்தியாக்கிரகத்தை ஆரம்பிப்பதற்கான சகல அதிகாரங்களையும் ஆமதாபாத் காங்கிரஸ் மகாத்மா காந்திக்கு அளித்தது. இயக்கம் சீக்கிரமே ஆரம்பமாகிவிடும் என்றுமிருந்தது. சூரத் ஜில்லாவில் பார்டோலி தாலுக்காவை மகாத்மா மனதில் வைத்திருந்தார்; சத்தியாக்கிரகத்தை அங்கேயே முதலில் ஆரம்பிப்பதென்றும் தேர்ந்தெடுத்தார். எல்லா இடங்களிலும் போராட்டத்திற்குத் தயாராயிருக்கும்படி மக்களுக்கு அறிவித்தார். பார்டோலியை சத்தியாக்கிரகத்திற்கு முதலிடமாகத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம், அங்கு மக்கள் அதிக விழிப்படைந்திருந்ததோடு மற்றவர்களை விட அதிக உற்சாகமாகவும் இருந்ததுதான். கதரைப் பரப்புவதிலும் மற்ற தேசிய நடவடிக்கைகளிலும் அவர்கள் முன்னணியிலிருந்து தங்கள் தகுதியை நன்றாக நிரூபித்துமிருந்தார்கள். மற்றுமோர் காரணம், அங்கிருந்தவர்களில் அநேகர் தென்னாப்பிரிக்காவில் மகாத்மாவின் சகாக்களாக இருந்தவர்கள். அங்கே சத்தியாக்கிரக இயக்கத்தில் அவர்களும் சரியான பங்கு கொண்டிருந்ததால் நடைமுறை அனுபவமும் அவர்களுக்கு இருந்தது.

சில தினங்களுக்குப் பிறகு சில ஊழியர்களுடன் மகாத்மா அந்த தாலுக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அங்கு மக்கள் உற்சாகமாகத் தயாரா யிருந்ததோடு சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபட ஆர்வத்துடனுமிருந்தது காந்திஜிக்கு அதிக திருப்தியளித்தது.

மகாத்மா பார்டோலியில் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிப்பார் என்பது அப்பொழுது நிச்சயமாக இருந்தது. இதற்காக ஒரு மாமரத்து நிழலில் அந்தத் தாலுக்காவின் முக்கியமானவர்களடங்கிய ஒரு கூட்டமும் நடந்தது. அக்கூட்டத்தில் நானும் இருந்தேன். மக்கள் தைரியமாக இருந்தனர். சர்க்கார் கடுமையான அடக்குமுறைகளை மேற்கொண்ட போதிலும் அவர்கள் அகிம்சைக் கொள்கையைக் கடைப்பிடித்து நடந்து கொள்ள வேண்டும் என்று

மகாத்மா கேட்டுக் கொண்டார். சிறைப்பட நேர்ந்தாலும், போலீஸ் அடித்தாலும், அல்லது சொத்துக்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தாலும், கடைசி வரை உறுதியுடனிருப்பதாக பிரதிக்ஞை செய்யும்படி அங்கிருந்தவர்களில் ஒவ்வொருவரையும் மகாத்மா கேட்டார். அவர்களிடம் பயத்தையும் பலவீனத்தையும் தாம் காண்பதாகவும் அவற்றை விட்டொழிக்கும்படியும் கேட்டுக் கொண்டார். இதற்குப் பிறகு சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க தாம் முடிவு செய்திருப்பதைக் குறித்து வைசிராய் லார்டு ரீடிங்குக்குக் கடிதம் எழுதினார். இம்முடிவுக்கு வரவேண்டி நேர்ந்த சந்தர்ப்பங்களை அக்கடிதத்தில் விவரமாக எடுத்துக் காட்டினார். இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டாக வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது என்றும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பிறகு என் மாகாணமான பீகாருக்கு நான் திரும்பி மாகாணம் முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்தேன். ஏனெனில் சத்தியாக்கிரகம் ஆரம்பமானதும் நாடு முழுவதிலும் அமைதி நிலவுவது முக்கியமாவதோடு இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை முன்னடியே பூர்த்தி செய்ய வேண்டியதும் அவசியமாயிற்று. மாகாணத்தில் மூலை முடுக்குகளிலெல்லாம் இச்செய்தியைப் பரப்பினேன். ஒரு நாள் சீதாபார்கி ஜில்லாவில் புப்ரியில் நான் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த போது, பார்டோலியில் காங்கிரஸ் கமிட்டி கூடுகிறது என்றும், அதற்கு நானும் வரவேண்டும் என்றும் ஒரு தந்தி வந்தது. புப்ரியிலிருந்து நேரே பாட்னாவுக்குப் போய் அங்கிருந்து பார்டோலிக்குப் புறப்பட்டேன். பார்டோலி ஸ்டேஷனில், நான் போயிறங்கிய ரயிலில் புறப்பட்டுக் கொண்டிருந்த பண்டித மதன் மோகன மாளவியா, காரியக்கமிட்டிக் கூட்டம் முடிந்து விட்டதாகவும், சத்தியாக்கிரகத்தை ஒத்தி வைத்துவிட முடிவு செய்து விட்டதாகவும் என்னிடம் கூறினார். கோரக்பூர் ஜில்லாவில் சௌரிசௌரா என்ற இடத்தில் கலவரம் மூண்டதோடு அங்கு மக்கள் ஒரு போலீஸ் ஸ்டேஷனைக் கொளுத்திவிட்டு சில கான்ஸ்டபிள்களையும் கொன்று விட்டது காரியக்கமிட்டியை மேற்கண்ட முடிவுக்கு வரக் கட்டாயப்படுத்தி விட்டது.

சௌரிசௌராவில் மக்கள் அடைந்த ஆத்திரத்தில் கட்டுக்கு மீறிப் போய் போலிஸ் ஸ்டேஷனைத் தாக்கி அப்பகுதியில் கலவரத்தை உண்டாக்கி விட்டார்கள். இதை மகாத்மா அறிந்ததும், அஹிம்சையின் தத்துவத்தை இன்னும் மக்கள் சரியாக அறிந்து கொள்ளாததால் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்குவதற்கான பக்குவம் இன்னும் உண்டாகவில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டார். காரியக் கமிட்டியும் மகாத்மாவின் கருத்தை ஏகோபித்து அங்கீகரித்து விட்டதால் போராட்டம் ஒத்திவைக்கப் பட்டது.

மாளவியாஜி இதைச் சொல்லக் கேட்டதும், இத்தகைய முடிவால் மக்களின் உற்சாகம் குன்றிப்போகும், சத்தியாக்கிரக இயக்க ஆர்வமும் குறைந்து விடும் என நினைத்தேன். மகாத்மாவைப் பார்க்க நான் போனபோது வழி நெடுகவும் இதே எண்ணமே என் மனதிலிருந்தது. நான் மகாத்மாவைப் பார்த்தபோது, நான் கால தாமதமாக வந்து விட்டதாக அவர் கூறினார். காரியக் கமிட்டி செய்திருக்கும் முடிவு தெரியுமா என்றும் கேட்டார். தெரியும் என்று நான் சொன்னதும், அம்முடிவை ஆதரிக்கிறேனா என்றார். இக்கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. என்றாலும், மக்கள் ஏமாற்றமடைந்து விடுவார் என்றேன். இதைப்பற்றி என்னுடைய திட்டமான கருத்தை அறிய விரும்புவதாக மகாத்மா வற்புறுத்தினார். இதைப் பற்றி சிந்திக்க வேண்டி யிருக்கிறது என்று நான் சொன்னதும் அவர் திருப்தியடைந்தாகத் தோன்றியது.

காரியக் கமிட்டியில் நடந்தவை முழுவதையும் அறிந்த பிறகு நான் யோசித்துப் பார்த்தபோது அது செய்த தீர்மானம் சரியானதே என்ற முடிவுக்கு வந்தேன். பிறகு மகாத்மாவிடம் போய், காரியக் கமிட்டி முடிவு நல்லதற்கே என்றும், ஆனால் மக்களுக்கு ஓரளவு ஏமாற்றமே இருக்கும் என்றும் சொன்னேன். என் பதில் மகாத்மாவுக்கு திருப்தியளித்ததைக் கண்டேன். இதில் தமது கருத்து என்ன என்பதையும் எனக்கு எடுத்துக் கூறினார். சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்துவதற்கு அகிம்சை நிலவுவது

இன்றியமையாதது என்றும், எதிராளிக்குக் கஷ்டம் விளைவிப்பதோ அல்லது நம் நோக்கத்திற்குப் பணியும்படிக் கட்டாயப் படுத்துவதோதான் சத்தியாக்கிரக நோக்கம் என நினைப்பதோ தவறு என்றும் சொன்னார். கஷ்டங்களைத் தானே அனுபவித்துக் கொள்ளுவதன் மூலம் எதிராளியிடம் மனமாற்றத்தை உண்டாக்குவதே சத்தியாக்கிரக நோக்கம். தான் செய்வது சரி என்பதை, பலாத்காரத்தினாலல்லாமல், சத்தியத்தில் உறுதியுடன் நிற்பதன் மூலம் எதிராளி உணர்ந்து கொள்ளும்படிச் செய்ய சத்தியாக்கிரகி முயற்சிக்க வேண்டும். அந்த உணர்ச்சி மக்களுக்கு ஏற்பட்டாலன்றி, சத்தியாக்கிரகத்தின் உண்மைப் பொருளை அவர்கள் அறிந்து கொண்டாலொழிய, சர்க்காரைத் துன்பப்படுத்தாமலும், பலாத்காரத்தில் இறங்காமலுமிருந்தாலன்றி, சத்தியாக்கிரக இயக்கம் பலம் பெறவோ வேரூன்றவோ முடியாது. பொதுமக்கள் ஒருபுறமிருக்க, காங்கிரஸ் ஊழியர்கள் கூட, சத்தியாக்கிரகத்தின் தத்துவத்தைச் சரிவர புரிந்து கொள்ளவில்லை என்பதை சௌரிசௌரா சம்பவம் சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபித்து விட்டது. நடந்திருப்பவைகளிலிருந்து, போலீஸ் ஸ்டேஷனுக்குத் தீயிட்டு கான்ஸ்டபிள்களைக் கொல்லுவதற்கு மக்களைக் கிளறி விட்டதற்குக் காங்கிரஸ் ஊழியர்களே பொறுப்பாளிகள் என்பது தெளிவான விஷயம்.

ஒரு பானை சோறும் வெந்திருக்கிறதா என்பதை அறிய ஒன்றிரண்டு சோற்றையே எடுத்துப் பதம் பார்ப்பதைப்போல, நிலைமையை அறியவும், மக்களின் மனப்போக்கைத் தெரிந்துகொள்ளவும் சௌரி சௌரா சம்பவம் தமக்கு உதவியாக இருந்தது என்று மகாத்மா விளக்கிக் கூறினார். இத்தகைய நிலைமையில் சத்தியாக்கிரகப் போராட்டம் துவக்கப்படுமானால், சௌரி சௌரா போன்ற சம்பவங்கள் மற்ற இடங்களிலும் நடந்துவிடும். பார்தோலி சத்தியாக்கிரகத்திற்குப் பதிலாக இத்தகைய சம்பவங்களே அதிகமிருந்துவிடக் கூடும். இந்த வகையிலேயே நானும் சிந்தித்ததோடு என் கருத்தையும் உருவாக்கிக்கொண்டேன். மகாத்மா சொல்லக் கேட்டதும் இதுவே சரி என்பது உறுதியாயிற்று. இவ்விதம் இதைப் பற்றிப் பலர் ஆழ்ந்து சிந்திக்கப் போவதில்லையாகையால்

காரியக் கமிட்டி செய்த முடிவு அவர்களுக்குப் பிடிக்காது என்பதை அறிவேன். பிறகு நடந்ததும் அப்படித்தான்.

பார்தோலியின் அதே மாமரத்தின் நிழலில் சில முக்கிய மானவர்கள் திரும்பவும் கூடினார்கள். சத்தியாக்கிரக இயக்கத்தை ஒத்திவைத்ததின் காரணத்தை மகாத்மா காந்தி அவர்களுக்கு விளக்கிக் கூறினார். இம் முடிவு சரியானது அல்ல என்று மக்கள் மறுக்கவில்லை. என்றாலும் இதற்காக வருத்தமடைந்தார்கள். தாய் நாட்டிற்குச் சேவை செய்ய தங்களுக்கு இருந்த வாய்ப்பைத் தாங்கள் இழந்து விட்டதாகவும் கருதினர். நாட்டின் சுதந்திரத்தைப் பெறுவதற்காக என்ன தியாகத்திற்கும் அவர்கள் தயாராயிருந்தார்கள். சிலர் தேம்பித் தேம்பி அழுதும் விட்டனர். முடிவு எவ்விதம் சரியானது என்பதை மகாத்மா மீண்டும் விளக்கிக் கூறி அவர்களுக்கு ஆறுதல் சொன்னார்.

உடனே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை டில்லியில் கூட்டி பார்தோலியில் செய்த முடிவை அதன் முன்னால் ஆலோசனைக்கு வைப்பது என்று முடிவாயிற்று. இக் கூட்டத்திற்குக் குறிக்கப்பட்ட நாளும், மாசி மாதம் சிவராத்திரி தினமும் ஒத்துக்கொண்டது. சிவராத்திரி தினத்தில் ஹிந்துக்கள் சாப்பிடாமல் விரத மிருந்து அன்று முழுதும் சிவனைப் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பது வழக்கம். ஆகையால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை வேறு ஒரு நாளைக்கு ஒத்திவைத்துக் கொள்ளுமாறு மகாத்மாவுக்கு ஹிந்துக்களில் சிலர் கடிதங்களை எழுதியதோடு தந்திகளும் கொடுத்தார்கள். ஆனால் இந்த யோசனையை மகாத்மா ஏற்றுக் கொள்ளவில்லை. கூட்டம் அன்று நடப்பது ஓரளவுக்கு எனக்கும் பிடிக்கவில்லை. இதை ஹிந்துக்கள் விரும்ப வில்லை என்றும், இதில் நியாயமிருக்கிறது என்றும் காந்திஜிக்கு எடுத்துக் கூறினேன். கூட்டம் இரண்டொரு தினங்களுக்கு ஒத்திவைக்கப்படுவதால் எதுவும் கெட்டு விடாது என்றும் சொன்னேன். என் கருத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு முடிவைச் செய்துவிட்ட பிறகு கடுமையான காரணங்களிருந்தாலன்றி அதை மாற்றக்கூடாது என்றார். இதில் அத்தகைய அவசரமான

நிலைமை எதுவும் இருப்பதாக தாம் கருதவில்லை என்றும், பட்டினி விரதம் இருக்க விரும்புகிறவர்கள் அதை டில்லியிலேயே செய்யலாம் என்றும் கூறினார். மேலும் கூட்டம் இரவும் பகலும் நடக்கப் போவதில்லையாகையால் சிவப் பிரார்த்தனைக்கும் அவர்களுக்கு அவகாசம் இருக்கும் என்றார். நல்ல காரியங்களை, அதுவும் பொதுஜன நன்மைக்கான காரியங்களை, பண்டிகை தினங்களில் செய்வதை சாத்திரங்கள் மறுக்கவில்லை என்றும் மகாத்மா வாதித்தார். ஒரு முறை செய்துவிட்ட முடிவை மாற்றக்கூடாது என்பதில் மகாத்மா குறியாக இருந்ததின் முக்கியத்தை நானும் உணர்ந்தேன். முன்னுடியே முடிவு செய்திருந்தார் என்பதற்காக, சம்பாரனில் இரவு வேளையில் மூட்டை முடிச்சுகளுடன் புதிய ஜாகைக்குக் குடி போய்விட புறப்பட்ட சம்பவம் என் நினைவுக்கு வந்தது. முடிவை மாற்றக் கூடாது என்று அவர் விவாதித்த அதே சமயத்தில், நமது விரதங்கள், பண்டிகைகள் ஆகியவைகளின் முக்கியத்தையும் அவர் உணர்ந்தே இருந்தார். புண்ணிய தினங்களில் எதுவுமே செய்யாமல் சும்மா இருப்பது என்ற மனோபாவம் தவறு என்றும், அதைப் போக்கியாக வேண்டும் என்றும், தமது தெளிந்த அறிவினாலும், பிறர் உணரும்படிக்கூறும் ஆற்றலினாலும் அவர் தெளிவாக எடுத்துக் காட்டினார். நமது விரதங்கள், விழாக்களின் தத்துவங்களைப்பற்றி அவர் கூறியவை எனக்கும் திருப்தி யளித்துவிட்டன.

இயக்கத்தை ஒத்திவைப்பதென முடிவு செய்யப்பட்டது என்பது பொது மக்களுக்குத் தெரிந்ததும் நாடெங்கிலுமிருந்தும் அதற்கு எதிர்ப்புக் குரல்கள் கிளம்பின. முக்கியமான தலைவர்களெல்லோரும் அப்பொழுது சிறைகளில் அடைபட்டுக் கிடந்தார்கள். தாம் கருதியதற்கு மாறாக லார்டு ரீடிங்குடன் ஒரு சமரச முடிவுக்கு வர மகாத்மா மறுத்துவிட்டதைக் கண்டு வருத்தமடைந்திருந்த தேசபந்து தாஸ், போராட்டமும் ஒத்திவைக்கப்பட்டது என்பதை அறிந்து கோபமடைந்தார். மகாத்மா காந்தி, சமரசத்திற்கும் வர மாட்டேன் என்றிருந்ததோடு சர்க்காரோடு போராடவும் மாட்டேன் என்கிறார் என்று எண்ணினார். நாடெங்கும் உணர்ச்சி வேகத்தை உச்ச நிலைக்குக் கிளப்பி விட்டுவிட்டுப் பிறகு அதைத் தகர்த்தும் விடுகிறார். இதுவே

பண்டித மோதிலால் நேருவின் அபிப்பிராயமும். டில்லி கூட்டத்திற்கு அவர் தமது கருத்தை எழுதியனுப்பி யிருந்தார். இதே விதமாகவே லாலா லஜபதிராயும் நினைத்தார். இவ் விஷயத்தில் மகாத்மாவின் கருத்தை அலி சகோதரர்களும் ஆதரிக்கவில்லை என்பதே என் ஞாபகம். ஒரு சிறையிலிருந்து மற்றோர் சிறைக்கு இவர்கள் மாற்றப்பட்டபோது ஒரு ரயில்வே ஸ்டேஷனில் சிலரிடம் இதே கருத்தையே இவர்கள் தெரிவித்தார்கள் என்று பிறகு அறிந்தேன். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடப்பதற்குச் சிறிது முன்னால் நடந்த காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இந்த மாறுபட்ட அபிப்பிராயங்களெல்லாம் வெளியிடப்பட்டன. ஆனால் இவற்றை யெல்லாம் கேட்ட பிறகுங்கூட மகாத்மா தமது முடிவில் உறுதியுடனேயே இருந்தார்.

பார்தோலியில் செய்த முடிவை ஒப்புக்கொள்ளுவது என்ற தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் மகாத்மா காந்தியே கொண்டுவந்து இதைப் பற்றிய தமது கருத்தையும் விளக்கினார். மகாத்மாவின் செய்கை, வேலைத் திட்டம் ஆகியவைகளை யெல்லாம் கண்டிக்கும் திருத்தமொன்றை இத் தீர்மானத்திற்கு டாக்டர் மூஞ்சே கொண்டுவந்தார். இதனால் கூட்டத்தில் பலத்த விவாதம் எழுந்தது. இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஹகீம் அஜ்மல் கான் திடீரென்று நோயுற்றார். மகாத்மாவை கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படிக் கூறிவிட்டு அவர் போய்விட்டார். தீர்மானத்தின் மீது எழுந்த தகராறு அச்சமயத்திலும் இருந்து வந்ததால் அங்கத்தினர்களுக்கு இது அதிகக் கவலையை அளித்தது. மகாத்மா என்ன செய்வார்? ஒரு நூதனமான வழியை இவர் மேற்கொண்டார். ஒருவர் பேச எழுந்ததும், அவர் தீர்மானத்திற்குச் சாதகமாகப் பேசப் போகிறாரா, எதிர்த்துப் பேசப் போகிறாரா என்று மகாத்மா கேட்பார். டாக்டர் மூஞ்சேயை எதிர்த்துப் பேசப் போவதாக அவர் சொன்னால், கொஞ்சம் பொறுக்கும்படிக் கூறிவிடுவார். டாக்டர் மூஞ்சேயின் திருத்தத்தை ஆதரித்துப் பேசப் போவதாகச் சொல்லுகிறவர்களை உடனே பேச அனுமதித்து விடுவார். இவ்விதம் மகாத்மாவுக்கு எதிராகப் பேசுகிறவர்களின்

பேச்செல்லாம் முடிந்துவிட்டது. தீர்மானத்தை ஆதரித்துப் பேச விரும்பியவர்களெல்லோரும், தங்களை மகாத்மா பேச அனுமதிக்க மாட்டார் என்று எண்ணி எழுந்து பேச முயற்சிக்கவுமில்லை. இதனால் மகாத்மாவின் தீர்மானத்தை ஆதரித்துப் பேச ஆளே இல்லை. அவருடைய தீர்மானம் தோற்றுப் போய்விடும் என்ற அபிப்பிராயமே உண்டாயிற்று. இரவு மணி 10 ஆயிற்று. ஒவ்வொருவரும் மகாத்மாவை எதிர்த்தே பேசி வந்தார்கள். இவைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நான், மகாத்மா செய்த முடிவு நியாயமானதாக இருந்தும் வேண்டுமென்றே தமது நிலைமை பலவீனமாகிவிட அனுமதித்துக் கொண்டிருக்கிறார் என்று எண்ணி வருத்தமடைந்தேன். இயக்கத்தை ஒத்திவைத்தது நியாயம் என்பதை நான் அதிகமாக உணரும்படி காரியக் கமிட்டி நடவடிக்கைகளும், அ. இ. கா. கமிட்டி நடவடிக்கைகளும் செய்து விட்டன. தமது தீர்மானத்திற்குச் சாதகமாகப் பேச யாருக்குமே சந்தர்ப்பமளிக்காமலேயே தீர்மானத்தின் மீது வோட்டு எடுக்க மகாத்மா ஆரம்பித்தார். இது எனக்கு மேலும் அதிக கலக்கத்தை உண்டாக்கியது. அங்கத்தினர்களின் உணர்ச்சி இப்படித்தான் இருக்கும் என்பதை மகாத்மா நினைத்திருக்க வேண்டும். அல்லது, ஆரம்பத்தில் தீர்மானத்திற்கு ஆதரவாக இருந்த பேச்சுகள் பயனற்றுப் போயிருந்தால், மேற்கொண்டும் தீர்மானத்தை ஆதரித்துச் சிலரைப் பேச விடுவதனாலும் பயனில்லை என்று மகாத்மா அறிந்திருக்க வேண்டும். தீர்மானத்தை ஆதரித்துப் பேச விரும்புகிறவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று சிலர் கூச்சலிட்டனர். ஆனால் மகாத்மா தமது மனதை மாற்றிக் கொள்ளவில்லை. டாக்டர் மூஞ்சேயின் திருத்தத்திற்கு ஆதரவாக இருப்பவர்களின் கைகளை உயர்த்தும்படிக் கேட்டுக் கொண்டார். திருத்தத்தை ஆதரித்துப் பேசியவர்கள் மாத்திரமே அதை ஆதரித்து வோட்டுச் செய்தார்கள் என்பது தெளிவாயிற்று. இவ்விதம் திருத்தம் தோற்று மகாத்மாவின் தீர்மானம் நிறைவேறியது.

மகாத்மாவின் வேலைத் திட்டத்தையும் பார்தோலி தீர்மானத்தையும் பலமாக எதிர்த்துப் பேசப் பட்டவைகளே டாக்டர் மூஞ்சேயின் திருத்தத்திற்கு விரோதமாகப்

போய்விட்டன என்பது என் அபிப்பிராயம். ஏனெனில் டாக்டர் மூஞ்சேயின் ஆதரவாளர்கள், ஒத்துழையாமைத் திட்டத்தை அடியோடு ஒப்புக் கொள்ளாதவர்கள். ஒவ்வோர் சந்தர்ப்பத்திலும் மகாத்மா காந்திமீது குறை கூறுவதென்றே டாக்டர் மூஞ்சேயும் அவருடைய ஆதரவாளரும் கிளம்பி யிருக்கிறார்கள் என்பது கூட்டத்திற்குண்டான அபிப்பிராயம். மற்றுஞ் சிலரும் மகாத்மாவுக்கு எதிராக இருக்கிறார்கள் என்பதைக் கண்டதும் அதை டாக்டர் மூஞ்சே பயன்படுத்திக் கொள்ள விரும்பி மகாத்மாவைக் கண்டிக்கும் திருத்தத்தைக் கொண்டு வந்தார். இதன் பலன் என்னவென்றால், பார்தோலி முடிவை முன்னால் எதிர்த்தவர்கள் கூட டாக்டர் மூஞ்சேயின் திருத்தத்திற்கு விரோதமாக நின்று மகாத்மா காந்தியின் தீர்மானத்திற்குச் சாதகமாக வோட்டுப் போட்டு விட்டனர்.

காங்கிரஸுக்குள் இரு மாறுபட்ட அபிப்பிராயங்களிருப்பதோடு பிளவுமிருக்கிறது. இதை சர்க்கார் பயன்படுத்திக் கொண்டு விடக்கூடும் என்பது அக்கூட்டத்திற்குப் பிறகு தெளிவாகி விட்டது. வேல்ஸ் இளவரசர் விஜயம் முடிவடைந்து வந்ததால், சர்க்காருக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் சமரசம் ஏற்பட இனி சந்தர்ப்பமில்லை என்றே தோன்றியது. அப்பொழுதே அநேகர் சிறைப்பட்டிருந்ததால் மகாத்மா காந்தியையும் கைது செய்வதில் ஆபத்து எதுவும் உண்டாகிவிடப் போவதில்லை. டில்லி அதிகார வட்டாரங்களுடன் தொடர்பு வைத்திருந்த ஒரு நண்பரிடமிருந்து சர்க்காரின் இந்த மனோ நிலையையும் நான் தெரிந்து கொண்டேன். "எங் இந்தியா"வில் எழுதியிருந்த இரு கட்டுரைகளுக்காக, சில தினங்களுக்கெல்லாம் மகாத்மா காந்தியைக் கைது செய்தார்கள். செஷன்ஸ் கோர்ட்டில் 124 ஏ. பிரிவின் கீழ் இவர் மீது வழக்கு விசாரணையை நடத்தினர்; இவரை சபர்மதி சிறையிலும் வைத்தார்கள். மகாத்மாவைக் கைது செய்து விட்டார்கள் என்பதை அறிந்ததும் அவரைப் பார்க்கப் போனேன். வெளி வாசலில் இருந்தபடி நான் அவரைக் கொஞ்சம்தான் பார்க்க முடிந்தது. கோர்ட்டில் வழக்கு விசாரணைக்கு வந்த போது அங்கு மகாத்மாவை சந்தித்தேன்.

ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பமான பிறகு மகாத்மா காந்திமீது வழக்குத் தொடுத்து விசாரணைக்குக் கொண்டு வந்தது இதுதான் முதற் தடவை. சம்பரானிலும் அவர்மீது வழக்குத் தொடுத்தார்கள். ஆனால் இப்பொழுது நிலைமை முற்றிலும் மாறுனது. அப்பொழுது அவரைச் சிலருக்குத்தான் தெரியும்; இவர் இவ்வளவு பிரபலமாகவில்லை. அதற்குப் பிறகு அவர் இரண்டு அற்புதங்களைச் செய்திருக்கிறார். ஹிந்து—முஸ்லிம்கள் ஒன்றுபடும்படிச் செய்து விட்டார்; மக்களிடையே விழிப்பை உண்டாக்கி விட்டார். சம்பரானில் சர்க்கார் உத்தரவை மீறி சிறைப்படத் தயாராயிருந்தார். அவருக்குத் தெரிந்தவர்களும், அவருடைய முறைகளை நன்ருக அறிந்து கொண்டவர்களும் அப்பொழுது மிகச் சிலரே. இப்பொழுதோ பல்லாயிரக் கணக்கானவர்கள் அவரைப் பின்பற்றுகின்றனர். அவருடைய வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வருகிருர்கள். அவர் ஆக்ஞை யிட்டால் சர்வத் தியாகஞ் செய்யவும் இவர்கள் தயாராயிருக்கிருர்கள். சிறை செல்லுவதென்பதை கனவிலும் சிந்தித்தறியாத ஆயிரக்கணக்கானவர்கள், இவர் ஆக்ஞைக்கு உடன்பட்டு சிறைக்குள்ளிருக்கிருர்கள்.

என்ருலும் இவ்விரண்டு சமயங்களிலுமிருந்த நிலைமைகளுக்கும் ஒற்றுமையும் அதிகமுண்டு. அன்றைப் போலவே இன்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் போராட மகாத்மா தயாராயிருக்கிருர். கடவுளிடத்தில் அவருக்குள்ள நம்பிக்கையும், எந்த கஷ்டத்தையும் ஏற்றுக் கொள்ளுவதில் அவருக்குள்ள திடமும் அன்று போலவே இன்றும் அவருக்கு இருக்கின்றன. மோதிகரி கோர்ட்டில் நடந்த விசாரணையின்போது அவர் காட்டிய உறுதியும் நம்பிக்கையுமே இன்றும் அவரிடமிருக்கின்றன என்பதை கோர்ட்டில் அவர் இப்பொழுது கொடுத்த வாக்குமூலம் காட்டிவிட்டது.

விசாரணையின்போது கோர்ட்டுக்குள் போக எல்லோரும் அனுமதிக்கப்படவில்லை. எனினும் விசேஷ அனுமதி பெற்று நான் சென்றிருந்தேன். சிறைப்படாமல் இன்னும் வெளியிலிருந்து வந்த ஸ்ரீ கேல்கார் போன்ற முக்கியமான

சில தலைவர்களும் விசாரணையை கவனிக்க அனுமதிபெற்று வந்திருந்தார்கள். சம்பரானில் மகாத்மா சிறைத் தண்டனை விதிக்கப்படவில்லை; ஆனால் ஆமதாபாத்தில் அவருக்கு ஆறு வருஷ கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். அவரை வழி யனுப்பியபோது என்னைப் போன்றவர்கள் துக்கத்தை அடக்க முடியாமல் அழுது விட்டோம். திக்கற்றவர்களாகி விட்டோம் என்ற உணர்ச்சியோடு வீடு திரும்பினோம்.

சத்தியாக்கிரக இயக்கத்தைத் திரும்பவும் ஆரம்பிக்க வேண்டாம் என்று சிறை செல்லுவதற்கு முன்னால் மகாத்மா கூறிவிட்டுப் போனார். மக்களுடைய உற்சாகம் குன்றிப் போய்விடாதபடி எப்படிச் செய்வது என்பது எங்களுக்குப் பெரிய பிரச்னையாயிற்று. அது கஷ்டமான காரியமே என்பது தெளிவாயிற்று. ஆக்க வேலைத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவமளித்து மக்களின் உற்சாகம் நீடித்திருக்கும்படிச் செய்ய எங்களாலானதை யெல்லாம் செய்தோம். ஆனால் நாளாவட்டத்தில் மக்கள் உற்சாகத்தை இழந்து வந்தனர். இந்த உற்சாகம் அதிகமிருக்கிற இடங்களிலெல்லாம் அதை நசுக்கிவிட சர்க்கார் தன்னாலியன்றதை யெல்லாம் செய்தே வந்தது. எங்கள் வேலை பின்னடைந்தே இரும் என்பது எங்களுக்கு சீக்கிரமே புரிந்தது. ஆமதாபாத்திலிருந்து திரும்பியதும் பிகார் ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்தேன். எனக்கு இந்த வேலையே சரியாக இருந்தது. அடுத்த காங்கிரஸை பீகாரில் நடத்த வேண்டும் என்று ஆமதாபாத் காங்கிரஸில் அழைத்திருந்தோம். காங்கிரஸ் நடத்துவதற்கு இடத்தை நிர்ணயிப்பது, நிதி வசூலிப்பது, இதற்கான காரியங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது ஆகியவை எங்கள் முன்னிருந்த முதல் வேலை. பீகார் முழுவதிலும் நல்ல உற்சாகமிருந்தது. ஆகவே காங்கிரஸ் மகாநாட்டுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிடலாம் என்ற நம்பிக்கையுடனிருந்தோம்.

பிளவும் பலனும்

அடுத்தது என்ன? அதுவே எங்கள் முன்னுள்ள பிரச்னே. சிறைப்படாமல் வெளியிலிருந்த காங்கிரஸ் ஊழியர்களெல்லோரும், நாம் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றார்கள். ஆனால் மகாத்மா காந்தியோ, சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கப் போவதாக வைஸ்ராய்க்குத் தாம் அறிவித்திருந்தும், அஹிம்சை சூழ்நிலை இல்லை என்பதற்காக, அதை ஒத்திவைப்பதென்று பார்தோலியில் முடிவு செய்துவிட்டார். அதோடு தாம் சிறை செல்வதற்கு முன்னால், சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க வேண்டாம் என்றும், ஆக்க வேலைகளைச் செய்வதில் அதிக கவனஞ் செலுத்தும்படியும் ஆலோசனை கூறிவிட்டுப் போயிருக்கிறார். ஆக்க வேலையோ, நாள்பட்டுச் செய்து கொண்டு போகவேண்டிய வேலை; பரபரப்பை உண்டாக்கக் கூடியதாகவும் அது இல்லை. ஆகவே அது அனேகருக்குள் பிரதிபலிக்காமலிருந்ததில் ஆச்சரியமில்லை. என்னுடைய இருபத்தேழு வருட காங்கிரஸ் அனுபவத்தில் இந்த உண்மையை மிகத் தெளிவாக அறிந்திருக்கிறேன். அப்படியானல் அடுத்தபடி என்னதான் செய்வது? சில விஷயங்களில், முக்கியமாக மகாராஷ்டிரத்தில், சட்ட சபை பகிஷ்காரத்தை ரத்துச் செய்துவிட்டு தேர்தலில் போட்டி போடத் தயாராயிருக்க வேண்டும் என்ற மாறுபட்ட ஒரு யோசனையும் கூறப்பட்டு வந்தது. ஆனல் இந்த யோசனையை கவனிக்க காங்கிரஸ் ஊழியர்களில் பெரும் பகுதியினரும் மக்களும் தயாராயில்லை. என்றாலும் அந்த யோசனை வற்புறுத்தப்பட்டு வந்தது. இந்த யோசனையை ஆதரித்து வந்தவர்கள், காங்கிரஸ் இதை ஒப்புக்கொண்டு விடும்படிச் செய்வதற்கான வழிவகைகளைச் செய்வதில் மும்முரமாக இருந்தார்கள்.

ஆமதாபாத்தில் ஸ்ரீ விதல்பாய் பட்டேல் காங்கிரசுக்குப் பொதுக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒத்துழையாமைத் திட்டத்தை, முக்கியமாக சட்ட சபை

பகிஷ்காரத்தை, அப்படியே ஒப்புக் கொள்ளுகிறவரல்ல அவர் என்பது எல்லோருக்கும் தெரியும். மகாத்மா காந்தியும் ஸ்ரீ விதல்பாய் பட்டேலும் ஒத்துப்போவது சிரமமாக இருக்கும் என்று ஆமதாபாத்தில் எடுத்துக் கூறப்பட்டது. அப்பொழுது மகாத்மா, யார் பொதுக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டாலும் வேலைகள் நடந்து வரும்படியாகச் செய்ய தம்மால் முடியும் என்றும், இதற்காக யாரும் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் சொல்லிவிட்டார். ஸ்ரீ விதல்பாய் பட்டேல் எப்பொழுதுமே பம்பாயில்தான் இருந்து வந்தார். இவருடைய இளைய சகோதரரும், மகாத்மாவிடம் அதிக பக்தியுள்ளவரும், ஒத்துழையாமைத் திட்டத்தை முழு மனதுடன் ஆதரித்து வந்தவருமான ஸ்ரீ வல்லபபாய் பட்டேல், குஜராத்தில் வசித்து வந்தார். ஆமதாபாத் காங்கிரஸின் வரவேற்புக் கமிட்டித் தலைவரும் இவரே. இவர் கைதாகி சிறைப்படவில்லை. தெற்கில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும், வடக்கே டாக்டர் அன்சாரியும் சிறைப்படாமல் வெளியிலிருந்தார்கள்.

கொஞ்ச நாட்களில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், ஸ்ரீ விதல்பாய் பட்டேல் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். நாட்டின் எந்தப் பகுதி, எந்த அளவுக்கு சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பிக்கத் தயாராயிருக்கிறது என்பதை ஆராய ஒரு கமிட்டியை நியமிப்பது, அந்தக் கமிட்டி சிபார்சு செய்யும் முறையில் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிப்பது என்பது அந்தத் தீர்மானம். ஸ்ரீ விதல்பாய் பட்டேல் அதிக புத்தி கூர்மையுள்ள ராஜீயவாதி. சத்தியாக்கிரகத்திற்கு நாடு தயாராயில்லை என்று கமிட்டி சிபார்சு செய்துவிடுமானால், தேர்தலில் போட்டி போடுவதென்பது தானே ஒப்புக் கொள்ளப்பட்டு விடும் என்று அவர் கருதினார். சட்ட சபைத் தேர்தலுக்குப் போட்டியிடுவதென்பதை எதிர்த்தவர்களும், சத்தியாக்கிரகம் வேண்டும் என்றவர்களும், கமிட்டியின் அறிக்கையின் பலனாக சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கையில் அத்தீர்மானத்தை ஆதரித்தார்கள். தேர்தலில் போட்டியிடுவதை விரும்பாததோடு மகாத்மாவின் ஆக்ஞைப்படி சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க தயாராயில்லாதிருந்தவர்களுமான எங்களைப் போன்

றவர்களும் பலர் இருந்தனர். இத்தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர எங்களுக்கும் வேறு வழியில்லை.

அத்தீர்மானத்தின்படி கமிட்டி நியமிக்கப்பட்டது. அது பல மாத காலம் நாடு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்தது. கமிட்டியினுல் ஒரு நன்மை உண்டாயிற்று. இக்கமிட்டியின் மெம்பர்கள் சென்ற இடங்களிலெல்லாம், ஓரளவுக்கு மக்களின் விழிப்பு ஏற்பட்டதோடு அவர்களிடையே உற்சாகமும் அதிகமாயிற்று. அதே சமயத்தில், சத்தியாக்கிரகத்திற்கு நாடு தயாராயிருக்கிறதா என்பதை பரிசீலனை செய்ததோடு, சட்டசபைக்குப் போவதா என்பதைக் குறித்தும், அதில் வெற்றி பெற காங்கிரஸுக்கு இருக்கும் சந்தர்ப்பத்தைப் பற்றியும் மாகாண காங்கிரஸ் கமிட்டிகளின் அபிப்பிராயங்களையும் கேட்டு அதன் மெம்பர்கள் தெரிந்து கொண்டார்கள்.

ஒத்துழையாமை இயக்கத்தில் முஸ்லிம்கள் முக்கியமான பங்கு வகித்தார்கள். காங்கிரஸ் கமிட்டி கூட்டங்கள் நடந்த இடங்களிலெல்லாம் கிலாபத் கமிட்டிக் கூட்டங்களும் நடந்தன. சட்ட மறுப்பு விசாரணைக் கமிட்டி யொன்றை கிலாபத் கமிட்டியும் நியமித்ததோடு காங்கிரஸ் நியமித்தக் கமிட்டியுடன் இதுவும் சுற்றுப் பிரயாணம் செய்தது. காங்கிரஸ் சட்ட மறுப்பு விசாரணைக் கமிட்டி மெம்பர்களிடையே பலமான அபிப்ராய பேதம் இருந்தது. நாடு சத்தியாக்கிரகத்திற்குத் தயாராயில்லை என்பதில் அக்கமிட்டியின் ஆறு மெம்பர்களும் ஒருமித்த அபிப்பிராயம் கொண்டனர். ஆனல் சட்டசபைகள் பகிஷ்கார விஷயத்தில், மூன்று பேர் அதற்கு ஆதரவாகவும், மூவர் எதிராகவுமிருந்தனர். இந்த பகிஷ்காரத்தை வாபஸ் வாங்கிக் கொண்டுவிட வேண்டும் என்று விரும்பியவர்கள், தாங்களும் பகிஷ்காரத்திற்கு ஆதரவாகவே இருப்பதாகச் சொல்லிக் கொள்ள ஒரு திட்டத்தை வகுத்தார்கள். தாங்கள் விரும்புவது தேர்தல் பகிஷ்காரமல்ல என்றும், தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு சட்டசபைகளை பகிஷ்கரிக்கவே தாங்கள் விரும்புவதாகவும் சொன்னுர்கள். காங்கிரஸின் வேலைத் திட்டங்களை ஒப்புக் கொள்ளாதவர்கள் தேர்தலில் முறியடிக்கப் படுவார்க

ளாகையால், தேசம் முழுவதுமே ஒத்துழையாமையைத் தான் ஆதரிக்கிறது என்பதைக் காட்டுவது அதனுல் முடியும் என்றும் அவர்கள் சொன்னுர்கள். சட்ட சபைக்கு நிற்க முன்வராத அபேட்சகர் ஒருவராவது உண்டு என்பதைக் காட்ட முடியாது போய்விட்டபோது, தேர்தலில் அபேட்சகராக நிற்பவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுவிடுவது காங்கிரஸின் பகிஷ்காரத்திஞல் சாத்தியமாயிருக்கும் வரையில், தேர்தல்களும் நடந்து மந்திரி சபைகளும் அமைக்கப்பட்டு விடுவதால், காங்கிரஸின் சட்ட சபை பகிஷ்கார வேலை முற்றிலும் தோல்வியையே அடைந்ததென்றுதான் சர்க்கார் சொல்லும், சொல்லுகிறது என்றும் அவர்கள் வாதித்தனர். தேர்தலுக்கு நின்று, பெரும்பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்றிய பின்னர் மந்திரி சபைகளை அமைக்க முடியாதபடித் தடுத்து விடலாம்; அப்படிப்பட்ட ஒத்துழையாமையே சரியான பலனைத் தருவதாகவு மிருக்கும் என்றும் தேர்தல் பகிஷ்காரத்தை ரத்துச் செய்து விடவேண்டு மென்றவர்கள் சொன்னுர்கள். அப்பொழுது பிரிட்டிஷார், புதிய அரசியலின்படி எல்லா மாகாணங்களிலும் மந்திரி சபைகள் அமைந்து வேலை செய்து வருகின்றன என்றே, காங்கிரஸின் சட்ட சபை பகிஷ்காரம் அடியோடு தோற்றுவிட்டது என்றே சொல்லிக்கொண்டிருக்க முடியாது என்றும் சொன்னுர்கள்.

இந்த கோஷ்டிக்கு எதிர்ப்பாளர்களாக இருந்தவர்களோ, எல்லா பிரிட்டிஷ் ஸ்தாபனங்களையும் நாம் பகிஷ்கரிக்கவேண்டும் என்றனர். அந்த ஸ்தாபனங்களுடன் மக்கள் அன்றுடம் தொடர்பு கொள்ளுவதஞலும், அவைகளே சர்க்காரின் கௌரவத்தை அதிகரிப்பதஞலுமே, நாம் கோர்ட்டுகளையும் கல்வி ஸ்தாபனங்களையும் பகிஷ்கரித்தோம் என்றுர்கள். நாம் ஒரு முறை சட்ட சபைகளுக்குள் போய்விடுவோமாஞல், திரும்பவும் அந்த ஸ்தாபனங்களுடன் நமக்குத் தொடர்பு ஏற்பட்டுவிடுவதோடு மக்களிடையே சர்க்காரின் கௌரவமும் உயர்ந்து விடும். சர்க்கார் ஒரு பக்கத்தில் நமது கிளர்ச்சியை அடக்க விரும்புகிறது; மற்றேர் பக்கத்தில், கிளர்ச்சி செய்வது என்பதை மாத்திரமே அறிந்திருக்கும் ஒரு சிலரைத் தவிர

மற்ற எல்லோருமே, புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள அரசியல் சீர்திருத்தங்களைக் கண்டு திருப்தியடைந்திருக்கிறார்கள் என்று மக்களுக்குக் காட்ட முயற்சி செய்து வருகிறது. நாம் சட்டசபைகளுக்குப் போய்விட்டால் சர்க்காரின் இந்த இரட்டைக் கொள்கை வெற்றி பெற்றதாகிவிடும். மேலும், ஒத்துழையாமைத் திட்டத்தின் ஒரு பகுதியை விட்டுக் கொடுத்துவிட்டால், நாளாவட்டத்தில் அத் திட்டத்தின் ஒவ்வொரு பகுதியாக விட்டுக் கொடுத்து முழுத் திட்டத்தையுமே கைவிட்டுவிட நேரும் என்பதையும் உணர்ந்தோம். அதுவல்லாமல், சட்டசபையின் பெரும்பான்மை மெம்பர்கள் மந்திரி சபை அமைவதை எதிர்த்தபோதிலும், சர்க்கார் நிர்வாகம் ஸ்தம்பித்து விடாத வகையில் அரசியல் அமைக்கப்பட்டிருப்பதால், சட்டசபைக்குப் போனபின் ஒத்துழையாமையை மேற்கொள்ளுவது என்பதில் நாம் திடமாக இருந்துவிட முடியாது. சர்க்கார் விரும்பினால் சட்டசபையைக் கலைத்துவிட்டு மறு தேர்தலை நடத்தலாம். அம் முறை அனுசரிக்கப்படுமானால் தேர்தலுக்குப் பின் தேர்தலாக நாம் போட்டியிட்டுக் கொண்டே வர முடியாது போகும்.

இவ்விதம் கமிட்டியின் மெம்பர்களில் சரி பாதிப் பேர் இப் பக்கமும், பாதிப் பேர் அப் பக்கமுமாகப் பிரிந்திருந்ததால் இப் பிரச்னையில் அதிகப்படி வோட்டின் மூலம் அது எந்த சிபார்சையுமே செய்ய முடியாது போயிற்று.

எனவே இதில் காங்கிரஸ் ஒரு முடிவுக்கு வரவேண்டியதாயிற்று. கமிட்டியின் மெம்பர்களில், சிறைத் தண்டனையை அனுபவித்துவிட்டு வெளிவந்த பண்டித மோதிலால் நேரு, ஸ்ரீ விதல்பாய் பட்டேல், ஹகீம் அஜ்மல் கான் ஆகிய மூவரும் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்தார்கள். ஸ்ரீ ராஜகோபலாச்சாரியார், டாக்டர் அன்சாரி, ஸ்ரீ கஸ்தூரி ரங்க அய்யங்கார் ஆகிய மூவரும் எதிர்த்தனர். பண்டித மோதிலால் நேருவின் அபிப்பிராயம் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை. அறிய முடிந்தவரையில், சட்டசபை பகிஷ்காரம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்றே அவர் விரும்பினார் என்று தெரிந்தது. ஆனால் கமிட்டியின் அறிக்கை தயாரிக்கப்பட்டு வந்த சமயத்தில்

சட்டசபைப் பிரவேசத்திற்கு அவர் ஆதரவாளராகிவிட்டார். தேசபந்து தாஸும் சிறையிலிருந்து வெளிவந்ததும் இந்தக் கருத்தையே ஆதரித்தார். விடுதலையாவதற்கு முன்பும் அவர் இதே கருத்தையே கொண்டிருந்தார். பண்டித மோதிலால் நேருவையும் இக் கருத்திற்கு வரும்படிச் செய்தவரும் அவரே. மகாத்மா காந்திக்கு அடுத்தபடியாக இருந்த மூன்று பெரும் தலைவர்கள் ஒரே அபிப்பிராயத்தையே கொண்டிருந்தார்கள் என்பது இதிலிருந்து தெளிவாயிற்று. மக்களும், காங்கிரஸ் ஊழியர்களில் பலதரப்பட்டவர்களும், காங்கிரஸ் வேலைத் திட்டத்தில் எந்த மாறுதலையும் வெறுத்தார்கள். இதைப்பற்றி முதலில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் விவாதம் நடந்தது. ஆனால் இதில் கயாவில் கூடவிருந்த காங்கிரஸ் ஒரு முடிவுக்கு வரட்டும் என்று அக் கமிட்டி ஒத்தி வைத்துவிட்டது. ஆமதாபாத் காங்கிரஸுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தும், அதற்குள் சிறைப்பட்டுவிட்டதால் தலைமை வகிக்க முடியாது போன தேசபந்து தாஸ், முறைப்படி கயா காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு புறம் இம் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கப் போகிறவருக்கும், மற்றோர் பக்கம் பொதுவாகப் பிரதிநிதிகளுக்குமிடையே அதிக அபிப்பிராய பேதமிருந்து வருகிறது என்பது காங்கிரஸ் நடப்பதற்கு முன்னாலேயே தெரிந்துவிட்டது.

ஒத்துழையாமை வேலைத் திட்டத்தில் எந்த மாற்றத்தையும் விரும்பாதவர்கள், மாறுதல் வேண்டாதார் என்று அப்பொழுது அழைக்கப்பட்டனர், இந்த மாறுதல் வேண்டாதாரில் பலமானவர்களில் நானும் ஒருவனாகக் கருதப்பட்டேன். எங்கள் கோஷ்டியின் முக்கியமான மூன்று தலைவர்கள், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் அன்சாரி, சர்தார் வல்லபபாய் பட்டேல். காங்கிரஸ் மகாநாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகளை பீகார் மக்களே செய்ய வேண்டியிருந்ததால் அந்த வேலைக்கே என் நேரமெல்லாம் சரியாக இருந்தது.

இந்த சமயத்தில் ஒரு சம்பவத்தையும் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். நான் வரவேற்புக் கமிட்டிக் காரியதரிசி. கமிட்டிக்கு இன்னும் தலைவரைத் தேர்ந்

தெடுக்கவில்லை. பொதுக் காரியங்களை எவ்வளவு தூரம் சிக்கனமாகச் செய்ய முடியுமோ அவ்வளவும் சிக்கனமாக முடிக்கவேண்டும்; முற்றிலும் அவசியமானதாக இருந்தாலொழிய ஒரு காலணாகூடச் செலவாக அனுமதிக்கக் கூடாது என்று மகாத்மா எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருந்த பாடம் அனுபவத்தில் அதிக பலனுள்ளது என்று நிரூபணமாயிற்று, மக்கள் உதவி செய்து, அதற்கு வேண்டிய நிதியையும் கொடுக்க முன்வந்தால்தான் பொது ஜன காரியங்களை நிறைவேற்ற முடியும் என்று எங்களுக்குச் சொல்லியிருந்தார். ஏதாவது ஒரு பொதுஜன வேலைக்குப் பண உதவி செய்ய மக்கள் தயாராயில்லையென்றால், அந்த வேலையில் அவர்களுக்கு சிரத்தை இல்லை. அதை அவர்கள் அங்கீகரிக்கவில்லை என்று தெரிந்துகொள்ள வேண்டும். இந்த காரணத்தினாலேயே ஒரு பொது ஸ்தாபனத்திற்குச் சொத்து வைத்து. அந்தச் சொத்திற்கு வரும் வட்டி வருமானத்தைக் கொண்டு அதை நடத்திக் கொண்டு போவது என்பதை மகாத்மா எதிர்த்து வந்தார். ஒரு ஸ்தாபனத்திற்கு இவ்விதம் சொத்து வைக்கப்படுமானால், அதன் வேலை நாளாவட்டத்தில் மந்தமடைந்து கடைசியில் அந்த ஸ்தாபனமே அதனுடைய உயர்ந்த பொதுஜன சேவை லட்சியத்திலிருந்து விலகிவிடும் என்று அவர் நினைத்தார். இதற்கு மாருக ஒரு ஸ்தாபனம், பொது ஜனங்களுக்குச் சேவை செய்வதில் தனக்குள்ள சக்தியின் மூலம் பொதுஜன ஆதரவுக்கு உரியதாக ஆக முடியும். அத்தகைய பொதுஜன ஆதரவுக்கு அது தகுதியற்றது என்று மக்கள் கருத ஆரம்பித்ததும் அதற்குப் பண உதவி செய்ய அவர்கள் மறுத்து விடுவார்கள்; அந்த ஸ்தாபனமும் மறைந்து போகும்.

இதிலிருந்து பண உதவி செய்ய மக்கள் தயாராயில்லாத ஒரு பொதுஜன வேலையை இச் சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள் யாரும் ஆரம்பிக்க வேண்டியதில்லை என்ருகிறது. ஒரு ஸ்தாபனத்திற்கு மக்கள் உடனே பண உதவி செய்ய முன்வராது போனாலும் பரவாயில்லை என்று நினைத்துவிடும் தவறை நாம் அடிக்கடிச் செய்துவிடுகிரேம். வேலை தடைப்பட விடக்கூடாது என்றும், பின்னல் இதற்கு மக்கள் பண உதவி செய்வார்கள் என்

றும் கருதுகிறோம். வேறு வழிகளில் நடத்திக்கொண்டு போவது முடியாவிட்டாலும் வேலை தொடர்ந்து நடந்து கொண்டு போவதற்குக் கடன் வாங்கினாலும் தவறில்லை என்றும் நினைக்கிறோம். எண்ணுவது நிறைவேறாது போய் நம்பிக்கையும் வீணாகிவிடக்கூடும் என்பதற்கும் எப்பொழுதும் இடமிருப்பதால், தன்னுடைய சொந்த சொத்திலிருந்து அக் கடனைத் தீர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாலொழிய, பொதுமக்கள் தங்கள் பண உதவியைச் செய்ய முன்வராவிட்டால் தன்னுடைய சொந்தச் சொத்தையும் விற்றுக் கடனைச் செலுத்த ஒருவர் தயாராயிருந்தாலன்றி, பொதுஜன வேலைகளுக்காக யாரும் கடன் வாங்கக்கூடாது என்பதுதான் விஷயம். ஒரு ஊழியர், ஒரு வேலைக்கு வேண்டிய பணத்தை மக்கள் எவ்வளவு தூரம் கொடுக்கத் தயாராயிருக்கிறார்களோ அந்த அளவுக்குத்தான் செய்யவேண்டும் என்பதும் மகாத்மாவின் கருத்து. அப்படிச் செய்தால், ஏன் கடன் வாங்கி ஒரு வேலையைச் செய்யவில்லை என்றோ, பொதுஜன வேலையைச் செய்ய எப்படியாவது பணம் திரட்டவேண்டும் என்றோ, ஒரு ஊழியரைக் கேட்க பொதுமக்களுக்கு உரிமை இருக்காது.

மகாத்மா எங்களுக்கு போதித்த பாடம் என் நினைவிலிருந்தது. நான் முன்னால் சொல்லியிருக்கிறபடி பாட்னாவில் நடந்த காங்கிரஸின் கசப்பான அனுபவத்தை நான் மறந்து விடவுமில்லை. ஆகையால், செலவுக்கு எவ்வளவு பணம் சேகரிக்கப்படுகிறதோ அந்த அளவுக்குச் செலவு செய்வதற்கு மாத்திரமே காரியதரிசி என்ற முறையில் நான் பொறுப்பாளியாக இருக்க முடியும் என்பதை வரவேற்புக் கமிட்டியிடம் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன். கையில் பணமில்லாவிட்டாலும் பின்னால் வரவேற்புக் கமிட்டி வசூலித்துவிடும் என்று நம்பிக்கொண்டு கடனுக்கு நான் எதையும் வாங்க மாட்டேன், எந்த வேலையையும் செய்யச் சொல்லமாட்டேன் என்றும் கூறினேன். இதனால் வரவேற்புக் கமிட்டி என்னிடம் கொடுக்கும் தொகைக்கு அதிகமாக எந்தக் கடன் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள நான் தயாராயில்லை.

மழைக் காலத்தில் பீகாரின் எந்தப் பாகத்திலும் முழுதும் சுற்றுப்பிரயாணம் செய்வதோ அல்லது பணம்

வசூலிப்பதோ சாத்தியமில்லை. ஏனெனில் அந்த சமயம் விவசாயிகளிடமோ அல்லது நிலச் சுவான்தார்களிடமோ பணமே இருக்காது. வியாபாரமும் மந்தமாயிருந்தது. அந்த நாளில் இம் மாகாணத்தில் மிகச் சில தொழிற்சாலைகளே இருந்தன. மழை ஆரம்பமாகும் முன்பு கொஞ்ச தொகையையே வசூலிக்க முடியும். அதோடு வசூல் வேலையிலும் நாங்கள் அதிக கவனஞ் செலுத்தவில்லை.

பொதுவாக அப்பொழுதெல்லாம் காங்கிரஸ் டிசம்பர் கடைசி வாரத்தில் கூடி வந்ததால் மழைக் காலம் முடிவதற்கும் அதற்கும் மத்தியில் அதிக அவகாசமும் இல்லை. பிரதிநிதிகள் தங்குவதற்கு தற்காலிக குடிசைகளைக் கட்டுவதற்கு உடனே காண்டிராக்டு கொடுத்தாலொழிய காலத்தில் அவை தயாராகாது; இதற்கு வேண்டிய மற்ற சாமான்களையும் சேகரிப்பதும் முடியாது என்பதை உணர்ந்ததும் அதிகக் கவலை கொண்டோம். நிலைமையைப்பற்றி ஆலோசிக்க வரவேற்புக் கமிட்டியைக் கூட்டினோம். வரவேற்புக் கமிட்டி வேண்டிய தொகையை என் கையில் கொடுத்தாலொழிய எந்த வேலையையும் செய்யவும், எதையும் வாங்கவும் நான் தயாராயில்லாததால், பீகார் பாங்கியிலிருந்து வரவேற்புக் கமிட்டியின் முக்கியமான மெம்பர்கள் தங்களுடைய சொந்தப் பொறுப்பில் கடன் வாங்குவது என்று நிர்வாகக் கமிட்டி முடிவு செய்தது. ஆகவே பாங்க் ஒன்றிடமிருந்தே கடன் வாங்குவது; இக் கடனை தனது சொந்த சொத்திலிருந்து கொடுக்க ஒவ்வொரு மெம்பரும் தயாராயிருக்கவேண்டும்; பாங்கைப் பொறுத்தவரையில் கடன் திரும்பி வர அது வேறு யாரையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. காங்கிரஸ் ஊழியர்கள் அவரவர்களுடைய ஊர்களில் அதிகமான வரவேற்புக் கமிட்டி மெம்பர்களைச் சேர்க்கவேண்டும் என்றும், பணக்காரர்களிடமிருந்து நன்கொடைகளை வசூலிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு கமிட்டி மற்றோர் தீர்மானமும் செய்தது. நிலைமை எவ்வளவு சங்கடமானது என்பதை அவர்கள் அறியாததால் இதில் காங்கிரஸ் ஊழியர்கள் அதிகமாக சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் நான் மேலே சொன்ன தீர்மானம் நிறைவேறி பத்திரிகைகளில் வெளி வந்ததும் காங்கிரஸ் ஊழியர்கள் உஷாராகிவிட்டார்கள்.

தாங்கள் உற்சாகமாக வேலை செய்யாவிட்டால் மாகாணத்தின் கௌரவமே போய்விடும். தேசத்தின் முன்னால் மாத்திரமேயன்றி தங்கள் சொந்த மாகாண மக்கள் முன்னால்கூட தங்களுடைய முகத்தைக் காட்ட முடியாது போய்விடும். காங்கிரஸுக்கு நிதி வேண்டும் என்று தங்களிடம் வந்து யாருமே கேட்கவில்லை என மக்கள் மகாத்மாவிற்கு சமாதானம் கூறி விடுவார்கள் என்பதை ஊழியர் உணர்ந்தனர். இதனால் எல்லா காங்கிரஸ் ஊழியர்களுமே தீவிரமாக வேலை செய்யக் கிளம்பினர். வசூல் பணமும் வரத் தலைப்பட்டது.

மகாத்மா காந்தி சிறைப்பட்ட பிறகு காங்கிரஸ் மகாநாட்டுக்கு வேண்டிய நிதியைக் கூட திரட்ட முடியாத நிலைக்கு காங்கிரஸ் வந்துவிட்டது; ஒரு பாங்கிடமிருந்து கடன் வாங்கவேண்டிய கதிக்கு வந்துவிட்டது என்று சில்லுண்டி சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எண்ணினார்கள். ஆனால் மேலே சொன்னவாறு காங்கிரஸ் ஊழியர்கள் நிதி திரட்டக் கிளம்பிவிட்டதால் வசூலை முன்னிட்டு சுற்றுப்பிரயாணம் செய்தேன். பாங்கியிலிருந்து கடன் ஏற்பாடு செய்திருந்தோமே யன்றி இன்னும் கடன் வாங்கவில்லை. நான் ஐந்து நாட்களில் பல்லாயிரம் ரூபாய்களை வசூலித்துக்கொண்டு கயாவுக்குத் திரும்பினேன். அப்பொழுது மாலை 4 மணி இருக்கும். காங்கிரஸ் நடக்கப் போகிறது. கடன் வாங்குவதில் வெற்றி பெற்றுவிட்டோமா என்பதை அறிந்துகொள்ள போலீஸ் அதிகாரிகள் ஆவலுடனிருந்தார்கள். காங்கிரஸ் நடக்கவிருந்த இடம் டவுனுக்கு வெளியியில் கொஞ்சம் தூரத்திலிருந்தது. ஒரு சிறு தோட்டத்திலிருந்த ஒரு சிறு வீட்டில் வரவேற்புக் கமிட்டிக் காரியாலயத்தை அமைத்து அதிலேயே நாங்கள் இருந்து வந்ததால் நேரே பாங்கிக்குப் போய் அதில் பணத்தைப் போட்டுவிட்டு வரலாம் என்று ரயிலை விட்டு இறங்குவதற்கு முன்னடியே நினைத்தேன். எங்களுடன் பணத்தை வைத்துக்கொள்ளுவது பத்திரமானது அல்ல என்றும் எண்ணினேன். ரயிலைவிட்டு இறங்கி நான் பாங்குக்குப் போய்க்கொண்டிருந்தபோது ஒரு சப்-இன்ஸ்பெக்டர் என்னிடம் வந்து, பாங்கிலிருந்து கடன் வாங்குவது வெற்றிகரமாக முடிந்ததா என்றும், காங்கிரஸ்

வேலைகளை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்னும் விசாரித்தார். நாங்கள் கஷ்டத்திலிருக்கிறோம், கயா காங்கிரஸ் மகாநாடு நடக்காமலும் போகக்கூடும் என்னும் எண்ணத்தில் அவர் இருக்கிறார் என்பதை அறிந்து கொண்டேன். எங்களுக்குக் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை என்று அவருக்கு ஒளிக்காமல் சொன்னேன். இதைக் கேட்டு அவர் ஆச்சரியப்பட்டு விட்டார். நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது என்றும், நான்கு ஐந்து நாட்கள் சுற்றுப்பிரயாணத்தில் நானே பெருந் தொகையுடன் திரும்பியிருப்பதாகவும் சொன்னேன். இதை அவர் நம்பவில்லை; நான் அவரை ஏமாற்றப் பார்ப்பதாக நினைத்தார். நான் நேரே பாங்குக்குப் போனேன். அவரும் என்னைத் தொடர்ந்து சைக்கிளில் அங்கு வந்தார். பணத்தை பாங்கில் போட்டுவிட்டு நான் வரவேற்புக் கமிட்டிக் காரியாலயத்திற்குப் போன பிறகே நான் சொன்னதை அவர் நம்பினார். காங்கிரஸுக்கு நிதி திரட்ட மாகாணம் முழுவதிலும் வெற்றிகரமான முயற்சிகள் செய்யப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன என்பதையும் அறிந்தேன். வேண்டிய சாமான்களை வாங்கினோம்; குடிசைகளும் துரிதமாகக் கட்டப்பட்டன.

மகாத்மாவின் பாடத்தை முதலில் பலர் சரியாகத் தெரிந்து கொள்ளா விட்டாலும் அனுபவத்தில் அவை அதிகப் பலனுள்ளவைகளாக இருந்ததைக் கண்டேன். இன்னும் நான் அதன்படி நடந்து வருகிறேன்; எனக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய எத்தனையோ சங்கடங்களிலிருந்து இதனால் நான் தப்பியுமிருக்கிறேன்.

கயா காங்கிரஸில் சட்டசபைப் பிரவேசத்தைக் குறித்து நீண்ட விவாதம் நடந்தது; மகாநாடும் பல நாட்களுக்குத் தொடர்ந்தது. முடிவாக இவ்விஷயத்தை வோட்டுக்கு விட்டபோது, பிரதிநிதிகளில் மூன்றிலொரு பகுதியினர் அதற்கு எதிராக இருந்தார்களென்பதும் ஒரு பகுதியினரே ஆதரித்தார்கள் என்பதும் வெளிப்பட்டது. இவ்விதம் சட்டசபை பகிஷ்காரத்தை மிகப் பெரும்பான்மை பலத்துடன் கயா காங்கிரஸ் மீண்டும் வற்புறுத்தியது. ஆனால் கயா காங்கிரஸில் ஏற்பட்ட அபிப்பிராய பேதம்

இம்முடிவினால் முடிவடைந்து விடவில்லை. தம் கருத்துக்கு காங்கிரஸ் எதிரிடையாக இருந்ததால் தேசபந்து தாஸ் காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். தம் முடிவைப் புனராலோசனை செய்யும்படி பலமாக வற்புறுத்தப்பட்டும் அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. பண்டித மோதிலால் நேருவுடன் அவர் சுயராஜ்யக் கட்சியை ஆரம்பித்தார். தேர்தல்களில் போட்டியிடத் தயார் செய்து கொள்ளும் அதே சமயத்தில் தன் கருத்திற்கு காங்கிரஸ் உடன்படும்படிச் செய்யவும் சுயராஜ்யக் கட்சி முயற்சி செய்யும் என்று அவர் சொன்னார்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு என்னைக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாருடன் நான் பல மாகாணங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்தேன். சட்டசபைப் பிரவேச சம்பந்தமான அபிப்பிராய மாறுபாடு மாத்திரம் ஏதாவது ஒரு வகையில் இருந்து கொண்டே வந்தது.

இதற்கு மத்தியில் தேசீயக் கொடியை ஏற்றுவது சம்பந்தமாக நாகபுரியில் சத்தியாக்கிரகம் ஆரம்பமாயிற்று. மத்திய மாகாண சர்க்கார், முதலில் ஜபல்பூரிலும் பிறகு நாகபுரியிலும், தேசீயக் கொடிகளுடன் செல்லும் ஊர்வலங்களுக்குத் தடை விதித்தது. இதன் சம்பந்தமாக நாகபுரியில் சட்டமறுப்பை சேத் யமுனாலால் பஜாஜ் ஆரம்பித்தார். சத்தியாக்கிரகம் மூன்று மாதங்கள் தொடர்ந்து நடந்தது. இந்த இயக்கத்தில் கலந்து கொள்ள நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் தொண்டர்கள் வந்தனர். இந்த காலத்திற்குள் நான் பீகார் தொண்டர்களுடன் பன்முறை நாகபுரிக்குச் சென்ற போதிலும் சத்தியாக்கிரகத்தில் நான் ஈடுபடவில்லை. சேத் யமுனாலால் பஜாஜ் கைதியானதும் ஸ்ரீ வல்லபபாய் பட்டேலும், அதன் பிறகு ஸ்ரீ விதல்பாய் படேலும் நாகபுரிக்கு வந்து இயக்கத்தின் தலைமையை ஏற்றுக் கொண்டனர். எங்கெந்த இடங்களில் ஊர்வலம் தடுக்கப்பட்டிருந்ததோ அந்த இடங்களில் அவை செல்லுவதை முடிவாக சர்க்கார் அனுமதித்து விட்டதால் சத்தியாக்கிரகம் முடிந்தது. இதன் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருந்தவர்களெல்லோரும் விடுதலையாயினர்.

தேர்தலில் போட்டியிடுவதைப் பற்றிய விஷயத்தில் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் மிகவும் கடுமையானதாகி விட்டதால் விசேஷ காங்கிரஸைக் கூட்டினாலன்றி இதில் சமரசம் செய்வதென்பது அசாத்தியமானதாகி விட்டது. தேர்தல்கள் 1923 நவம்பரில் நடக்க இருந்தன. அதற்குள் அவ்விஷயத்தில் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டியிருந்ததால் காங்கிரஸ் விசேஷ மகாநாட்டை நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டு அது டில்லியில் மௌலானா அபுல் கலாம் ஆஜாத் தலைமையின் கீழ் நடந்தது. சமீபத்திலேயே சிறையிலிருந்து விடுதலையான மௌலானா சாஹிப், சட்டசபைப் பிரவேசத்திற்கு ஆதரவாயிருந்தார். அதை எதிர்த்து வந்த மௌலானா முகமது அலியும் சிறையிலிருந்து விடுதலையாகி விட்டதால் காங்கிரஸ் மகாநாட்டுக்கு வந்திருந்தார். இவருடைய முயற்சியால் ஒரு சமரசம் ஏற்பட்டது. காங்கிரஸ், ஸ்தாபன ரீதியில் தேர்தலில் போட்டி யிடுவதில்லை; ஆனால் யாராவது ஒரு காங்கிரஸ்காரர் சட்டசபைக்குப் போக விரும்பினால் அதற்கு அவரை அனுமதிப்பது என்பதே சமரச முடிவு. எனவே சுயராஜ்யக் கட்சி தன்னுடைய சொந்த பலத்தில் தேர்தலில் போட்டி போட சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் சார்பில் பல காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் அபேட்சகர்களாக நின்றார்கள். சுயராஜ்யக் கட்சி மத்திய மாகாணத்தில் பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றியதோடு வங்காளத்தில் பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெறாவிட்டாலும் பல ஸ்தானங்களைக் கைப்பற்றியது. மற்ற மாகாணங்களிலோ சுயராஜ்யக் கட்சி சில ஸ்தானங்களையே பெற்றதால் தங்களுடைய சொந்த மந்திரி சபைகளை அமைக்கவோ அல்லது மற்றக் கட்சிகள் மந்திரி சபையை அமைக்க முடியாதபடித் தடுக்கவோ முடியாது போயிற்று. மத்திய மாகாணத்தில் எந்த மந்திரி சபையையும் அமைக்க முடியவில்லை. வங்காளத்தில் வேறு கட்சிகளைச் சேர்ந்த சிலரும் சுயராஜ்யக் கட்சியுடன் சேர்ந்து கொண்டதால் மந்திரி சபை தோல்வியடைந்து ராஜிநாமாச் செய்ய நேர்ந்தது. அடுத்த காங்கிரஸ் மகாநாடு காகிநாடாவில் மௌலானா முகமது அலி தலைமையில் நடந்து சட்டசபை பகிஷ்கார தீர்மானத்தை வலியுறுத்தியது.

சமரச ஏற்பாடு

தேர்தலில் போட்டியிடுவதைப் பற்றிய தகராறு தொடர்ந்து இருந்து வந்த வரையில், 1924-ல் மகாத்மா காந்தி விடுதலையானதும் அதைத் தீர்க்க அவராலும் முடியாமலிருந்த வரையில், தேசத்தின் நேரத்தில் முக்கிய பகுதியை அத்தகராறு கவர்ந்துவிட்டது. எந்தப் பொதுஜன வேலையும் துரிதமாகவும் உற்சாகத்தோடும் நடப்பதற்கும் அது இடையூறாகவே இருந்து வந்தது. ஆக்க வேலைகளின் முக்கியத்தை மகாத்மா காந்தி வற்புறுத்தி யிருந்தார். அந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கு எங்களால் முடிந்ததையெல்லாம் செய்து கொண்டுதான் இருந்தோம். காகிநாடா காங்கிரஸ் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தை அனுசரித்து கதர் போர்டு ஆரம்பமாயிற்று. ஒழுங்கான முறையில் கதர் பிரசாரம் செய்வது இந்த போர்டின் வேலை. சேத் யமுனலால் பஜாஜின் தலைமையில் ஒழுங்காக வேலையும் ஆரம்பமாயிற்று. கதர் வேலையிலும் தேசியக் கல்வியிலும் நான் முழு நேரமும் ஈடுபட்டிருந்தேன். கதர் அதிக அபிவிருத்தியடைந்த போதிலும் தேசியக் கல்வியிலிருந்த உற்சாகம் மாத்திரம் மங்கியது. சட்டசபைப் பிரவேசத்திற்குச் சாதகமான கட்சியோ அதிக பலம் பெற்று வந்தது. தண்டனைக் காலம் முடிந்து சிறையிலிருந்து வெளிவந்த பலரும் சுயராஜ்யக் கட்சியின் திட்டத்தை ஒப்புக் கொண்டனர்.

தேசியக் கல்வி சம்பந்தமாக நாம் ஆரம்பத்திலேயே செய்துவிட்ட தவறுதான் அதன் தோல்விக்குக் காரணமாயிற்று. சர்க்காரின் அங்கீகாரம் பெற்ற பள்ளிக்கூடங்களையும் பல்கலைக் கழகங்களையுமே பல வகைகளிலும் பின்பற்றிவிட்டோம். அவைகளுடன் போட்டி போடுவதற்கு வேண்டிய பணவசதியோ அல்லது ஆள் வசதியோ நமக்குக் கிடையாது. தேசிய ஸ்தாபனங்களில் படித்த மாணவர்களுக்கு சர்க்காரிலோ அல்லது மற்ற ஸ்தாபனங்களிலோ வேலை கிடைக்கவில்லை. சர்க்காரின் அங்கீகாரம் பெற்ற

பள்ளிக்கூடங்களில் படிப்பவர்களுக்கிருந்த மற்ற வசதிகளும் இவர்களுக்கு இல்லை. என்றாலும் நம்மிடம் சில விசேடங்களிருந்தன. உதாரணமாக, தேசியப் பள்ளிக்கூடங்களில் படித்தவர்கள் நூற்பது கட்டாயம் என்று செய்திருந்தோம். சர்க்கார் அங்கீகாரம் பெற்ற பள்ளிக்கூட மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்கும் இவர்கள் வாழ்க்கைக்கும் வித்தியாசமும் இருந்தது. இவர்கள் சத்தியம், அஹிம்சை சூழ்நிலையில் எளிய வாழ்க்கை நடத்தி வந்தார்கள், ஆகவே எளிய வாழ்க்கை நடத்தும் திறன் இவர்களுக்கு இருந்ததோடு, பொதுவாக உயர்ந்த ஒழுக்கமும் இருந்தது. சர்க்கார் பல்கலைக் கழகங்களில் படித்தவர்களைப் போலவே உயர்ந்த படிப்பு இருந்த மாணவர்களும் நம்மிடம் சிலரிருந்தார்கள். ஆனால் தங்கள் வாழ்க்கைக்குச் சம்பாதித்து, அதே சமயத்தில் தேசப் பணியையும் செய்வதற்கு இவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆகையால் தேசப் பணியையே லட்சியமாகக் கொண்ட மாணவர்களும், இதற்கே தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டுமென பெற்றோர்களால் அனுப்பப்பட்டவர்களும் மாத்திரமே நமது கல்வி ஸ்தாபனங்களுக்கு வந்தார்கள். இம்மாணவர்களின் தொகை குறைந்துகொண்டே வந்தது. பாட முறையில் அப்போதைக்கப்போது மாறுதல்களையும் செய்து வந்தோம். ஆரம்பத்திலேயே மகாத்மா எங்களுக்குச் சொல்லியிருந்ததை யொட்டி சர்க்கார் பல்கலைக் கழகங்களைப் போல் நடப்பதைக் கைவிட்டு, நாட்டிற்குச் சிறந்த ஊழியர்களைத் தயாராக்குவது என்பதிலேயே கவனஞ் செலுத்தினோம். ஆனால் இதில் முற்றிலும் வெற்றி பெறவில்லை. இந்த ஸ்தாபனங்களின் நிலைமை மேலும் மோசமாகி வந்தது. பல மூடப்பட்டு விட்டன; நடந்தவைகளும் சிரமப்பட்டு நடந்து வந்தன. தேச ஊழியர்களைத் தயாரிப்பது என்ற அளவிலேயே இந்த தேசியப் பள்ளிக்கூடங்கள் நடக்க முடியும் என்பது தெளிவாகிவிட்டது. இப்படியே ஈடுபடுவது என்று முன்கூட்டியே முடிவு செய்து கொண்ட மாணவர்களின் தொகை மிகச் சிறியதாகவே இருக்க முடியும். நாளாக வாக எங்கள் மாணவர் தொகையும் குறைந்துகொண்டே போனதில் அதிசயமில்லை.

கதர் வேலேயோ அபிவிருத்தி யடைந்துகொண்டு போயிற்று. மற்ற ராஜீயக் கட்சிகளுக்கு சுயராஜ்யக் கட்சி எதிரானதாக இருந்தாலும், மற்ற கட்சிகளுக்கும் இதற்கு முள்ள மாறுபாட்டை கதர் ஒன்றே காட்டக்கூடுமாகையால், அக்கட்சியும் கதர் திட்டத்தை மேற்கொண்டது. நயமான கதர் உற்பத்தியாவதற்கு முயற்சிகள் நடந்தன. கதருக்கு கிராக்கியும் அதிகரித்தது. கதரை எல்லோரும் ஆதரிக்கும்படிச் செய்யவும், அதன் விற்பனையை அதிகரிக்கவும் பல இடங்களிலும் கதர் கண்காட்சிகளை நடத்தி, அவற்றில் நயமான உயர்ந்த ரகக் கதரையும் காட்சியில் வைத்தனர். இந்தக் காட்சிகளில், முக்கியமாக பீகாரில் நடந்தவைகளில், நான் தீவிரமான பங்கு எடுத்துக்கொண்டேன். பல சமயங்களில் கதர் விற்பனையாளனாகவும் இருந்திருக்கிறேன். கதர் உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கும் அடிக்கடி போவேன். அங்குதான் கதரின் உபயோகத்தில் என் நம்பிக்கை உறுதிப்பட்டது; இதில் என் ஊக்கமும் வளர்ந்தது. நான்கு, ஐந்து மைல்களுக்கு அப்பாலிருந்து கந்தைத் துணிகளணிந்த பெண்கள், மற்றேர் கந்தைத் துணியில் கொஞ்சம் நூலைச் சுற்றிக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக பஞ்சையும் கூலியாகச் சில அணுக்களையும் பெற்றுச் செல்வதை அங்கு பார்ப்பேன். இந்த கதர் உற்பத்தி இடங்கள் சிலவற்றில் நாளெல்லாம் இவ்விதம் வந்து போய்க்கொண்டிருப்பார்கள். பருத்தி இல்லாது போய், கூலி கொடுப்பதும் அகஸ்மாத்தாக நின்றுவிட்டால், நூலுக்குப் பதிலாக பருத்தி கொடுப்பதும், கூலி கொடுப்பதும் நிற்க வேண்டி வரும். இதனுல் அந்த ஏழைப் பாட்டாளிகளின் முகத்தில் ஏற்படும் ஏமாற்றம் காண்போருக்கு வேதனை தரும் காட்சியாக இருக்கும். கதரை எங்கும் பரப்புவதைத் தவிர இவர்களுக்கு உதவி செய்ய வேறு வழியே கிடையாது என்பதை உணர்ந்தேன். எங்கெங்கெல்லாம் கதர் உற்பத்தி நிலையங்கள் ஆரம்பமாகின்றனவோ அங்கெல்லாம் உற்சாகமும் தென்படலாயிற்று.

அப்பொழுதெல்லாம் பீகாரில் இருந்த முக்கியமான கஷ்டம், கதரை விற்பதில்தான். விற்பனையைவிட அதிகமாக உற்பத்தி செய்து வந்தோம். ஆகவே மாகாணத்துக்

குள்ளும் வெளியிலும் அதை விற்பதற்கான ஏற்பாடுகளை கவனிப்பதற்கே எங்களுக்கு வேலை சரியாக இருந்தது. கதருக்கு கிராக்கி யிருந்தால் தேவைக்கு வேண்டியதைத் தயாரித்து விடுவதில் கஷ்டமிராது என்பதை அறிந்தோம். இத்தகைய வேலையில் சிரத்தை கொள்ளாதவர்கள், என் நேரத்தை நான் எப்படிக் கழித்து வருகிறேன் என்று ஆச்சரியப்பட்டு வந்தனர். ஆனால் நான் மேற்கொண்ட இந்த மாதிரி வேலைக்கு என் நேரமே போதவில்லை என்பதையே நான் அனுபவத்தில் கண்டேன். சட்ட சபைப் பிரவேசத் தகராறு விஷயத்தில்கூட எனக்கு சிரத்தை இல்லை. காங்கிரஸ்காரர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு பரபரப்பை உண்டாக்கும் வேலைகளில் மாத்திரமே சிரத்தை இருக்கிறது. அமைதியான வகையில் செய்ய வேண்டியதான நிர்மாண வேலைத் திட்டத்தில் அவர்களுக்கு அக்கரையில்லை என்பதையும் கண்டுகொண்டேன்.

சட்டசபைப் பிரவேச சம்பந்தமான வாதப் பிரதிவாதங்கள் பலமாக நடந்துகொண்டிருந்தபோது இதைப் பற்றி மகாத்மா காந்தியின் கருத்து என்ன என்பதை அறிந்து கொள்ள ஆவலுடனிருந்தோம். பெரிய தலைவர்களுக்கு நாங்கள் எதிர்ப்பு செய்து கொண்டிருப்பதை அவர் அங்கீகரிப்பாரா? சட்டசபைப் பிரவேச சம்பந்தமாக அவருடைய கருத்துதான் என்ன? அவருடைய கருத்து எதுவாக இருக்கும் என்பதைக் குறித்து எங்களுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை; அவர் சிறையிலில்லாது வெளியிலிருந்தால் அவர் அதை எதிர்ப்பார் என்றே எண்ணினோம். ஆனால் நமது பெரும் தலைவர்களுக்கு நாங்கள் எதிர்ப்பு செய்துவந்தோம். முக்கியமாக அந்த எதிர்ப்பு பரபரப்பை அதிகமாக்கி காங்கிரஸுக்குள் மற்றோர் கட்சியும் தோன்றும்படிச் செய்து விட்டது. இதை மகாத்மா அங்கீகரிப்பாரா என்பதே எங்களுக்குச் சந்தேகமாக இருந்தது. சிறையிலிருந்து விடுதலையாகும் மற்ற கைதிகளைக் கொண்டாவது மகாத்மாவின் கருத்தை நாங்கள் அறிய முடியும். ஆனால் சிறையில் மற்றக் கைதிகள் அவரைச் சந்திக்க அனுமதிக்கப் படாததால் இதன் மூலமும் அவர் எண்ணத்தை அறிய முடியவில்லை. வேறு வழிகளிலும் தெரிந்து கொள்ள இயலவில்லை. அவரைக் கண்டு பேச சிறைக்குப் போகிற

வர்களிடம் அவர் ஒன்றும் சொல்ல மாட்டார். ஏனெனில் சாதாரணமாக அவர் பிறருக்குச் சொல்லக்கூடாது என்று அனுமதி மறுக்கப்பட்டிருக்கும் எதையும், சமிக்ஞை, ஜாடை ஆகியவைகளினுலகூட அவர் தெரிவிக்கக் கூடாது. மகாத்மா மீது குற்றம் சாட்டப்பட்ட அதே வழக்கில் "எங் இந்தியா"வின் அச்சிடுபவர், பிரசுரகர்த்தா என்ற முறையில் இரண்டு வருஷ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஸ்ரீ சங்கரலால் பாங்கர் விடுதலையடைந்த பிறகே முதன் முதலில் மகாத்மாவின் கருத்தை நாங்கள் அறிந்து கொள்ள முடிந்தது. காந்திஜியின் கருத்தில் எந்தவித மாறுதலுமில்லை என்று அவர் சொல்லக் கேட்டு திருப்தியடைந்தோம்.

டில்லியில் நடந்த காங்கிரஸ் விசேஷ மகாநாட்டில் மௌலானு முகமது அலி ஒரு சமரச ஏற்பாட்டைக் கொண்டு வந்தார் என்பதைக் குறித்து முன்னுடியே சொல்லி யிருக்கிறேன். இதை நாங்கள் விரும்பவே இல்லை. மாறுதல் வேண்டாதவர்களான எங்களுக்குத் தலைமை தாங்கியவரான ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார், வேண்டுமென்றே டில்லி மகாநாட்டுக்கு வரவில்லை. சமரச யோசனையைக் கண்டு சர்தார் வல்லபபாய் பட்டேலும் நானும் மனவேதனை யடைந்தோம். நாங்கள் இதை ஒப்புக் கொள்ளாது போனல், மற்ருெர் பெரிய தலைவரும் எங்களுக்கு விரோதமாகப் போய் விடுவார் என்று நாங்கள் நினைத்ததால் அதை ஒப்புக் கொண்டு விடுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. தம்மைப் பொறுத்த வரையில், சட்டசபைப் பிரவேசத்தை மௌலானு முகமது அலி எதிர்த்தே வந்தார். ஆனல் காங்கிரஸின் பெயரையும் அதிகாரத்தையும் உபயோகித்துக் கொள்ளாமல் சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிட சுயராஜ்யக் கட்சியை அனுமதிப்பதை அவர் அங்கீகரித்தார். இந்த சமரச ஏற்பாடு சம்பந்தமான தீர்மானத்தின் மீது அவர் பேசுகையில், அப்படிச் செய்வதால் ஏற்படக்கூடிய கெடுதல்களையெல்லாம் அவர் எடுத்துக் கூறினர். அதோடு சிலர் அப்படித்தான் நடப்போம் என்று இன்னும் பிடிவாதமாக இருப்பார்களானல், அவர்களை அனுமதிக்கத் தாம் தயார் என்றும், அவர்கள் ராஜீய தற்கொலை செய்து கொள்ளட்டும்

என்றும் அவர் சொன்னார். ஆனால் அதே சமயத்தில் மௌலானா சாஹிப் கூறிய ஒரு விஷயம் எங்களை யெல்லாம் அதிக தூரம் கவர்ந்து விட்டது. யாரோ ஒருவரிடமிருந்து தமக்கு ஒரு 'ஆகாசச்' செய்தி வந்திருக்கிறது என்றும், தகராறு ஒரு முடிவுக்கு வரவேண்டும், தேர்தலில் போட்டியிட விரும்புகிறவர்களை அனுமதித்து விட வேண்டும் என்று அச்செய்தி கூறுவதாகவும் அவர் சொன்னார். மகாத்மா காந்தியிடமிருந்து தகவல் வந்திருப்பதாகவே எல்லோரும் பொதுவாக எண்ணினார்கள்; அந்த யோசனையையும் ஏற்றுக்கொண்டனர். ஆனால் அப்படி எந்தவிதமான தகவலும் மகாத்மா காந்தியிடமிருந்து வரவில்லை என்று பின்னால் தெரிந்து கொண்டோம்.

மகாத்மா வடித்த கண்ணீர்

1920 ல் நான் ஆஜரான அதே வழக்கில் 1924 ஆரம்பத்தில் மீண்டும் நான் ஆஜரானேன். இவ்வழக்கு அப்பொழுது ஹைகோர்ட்டில் அப்பீலில் இருந்தது. ஜில்லாக் கோர்ட்டில் என் கட்சிக்காரர் தோற்றுவிட்டார். ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பமாவதற்கு முன்னால் நான் அவருக்கு வாக்குறுதி யளித்திருந்தேன். இவ்வழக்கிற்கு ஆஜராக வேண்டியிருக்கும் என்று நண்பர்களிடமும் சொல்லி யிருந்தேன். 1920-க்கும் 1924-க்கும் மத்தியில் ஒரே ஒரு முறையே நான் ஹைகோர்ட்டு முன்னால் ஆஜரானதாக ஞாபகம். என் கட்சிக்காரரின் சொத்துக்களை யெல்லாம் தங்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று எதிர் தரப்பார் கோர்ட்டில் மனுச் செய்திருந்தபோதுதான் அது. இப்பொழுதோ வழக்கின் அப்பீல் விசாரணை ஹைகோர்ட்டிற்கு வந்தது. என் கட்சிக்காரர் ஜில்லாக் கோர்ட்டில் தோற்றுவிட்டார். இந்த அப்பீலிலாவது வெற்றி பெறாது போனால் அவர் தம் சொத்து முழுவதையும் இழந்துவிட நேரும். ஆகையால் இவ்வழக்கில் நான் ஆஜராக வேண்டியது என் கடமை என்று கருதினேன். நான் மாணவனாக இருந்த காலம் முதலே எனக்கு அவரைத் தெரியும். இங்கிலாந்திற்குப் போவதற்கு நான் ஏற்பாடுகளைச் செய்து வந்தபோது அவர் எனக்குப் பண உதவியும் செய்தார். பிறகு வக்கீலாக நான் தொழிலை ஆரம்பித்தபோது, ஹைகோர்ட்டிலிருந்த தமது வழக்குகளை யெல்லாம் என்னிடம் ஒப்படைத்த ஒரே பணக்கார கட்சிக்காரர் இவர்தான். இவர் மீது இந்த வழக்குத் தொடரப்பட்டபோது ஆரம்ப முதல் என்னையே தமது வக்கீலாக அமர்த்திக் கொண்டிருந்தார். இவருக்குக் கஷ்டம் வந்திருக்கும்போது என்னாலியன்ற உதவிகளை யெல்லாம் இவருக்குச் செய்யவேண்டியது என் கடமை என்று கருதினேன். எனவே அந்த அப்பீல் சம்பந்தமான வேலைகளை கவனிக்க ஆரம்பித்தேன்.

ஹைகோர்ட்டில் சில தினங்கள் இரு தரப்பு வாதங்களும் நடந்துகொண்டிருந்த சமயத்தில், சிறையில் மகாத்மா காந்தி அதிக நோயுற்றதாகவும், புனாவில் ஒரு ஆஸ்பத்திரிக்கு அவரைக் கொண்டுபோய் வயிற்றில் ரண சிகிச்சையும் செய்தார்கள் என்றும் பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று. நான் அதிகக் கவலை கொண்டேன். சில தினங்கள் ஓய்வு பெற்றுக்கொண்டு புனாவுக்குப் புறப்பட்டேன். ஆஸ்பத்திரியில் மகாத்மாவைப் பார்த்தேன். அவர் அதிக பலவீனமாக இருந்தார்; ஆனால் ஆபத்து எதுவுமில்லை. என்னைப் பார்த்ததில் அவருக்கு மிகவும் திருப்தி. அவர் அதிக பலவீனமாக இருந்ததால் எதைக் குறித்தும் அவரிடம் பேசுவது சரியல்லவென்று நினைத்தேன். நான் பேச விரும்பியிருந்தால்கூட, அவர் அப்பொழுதும் கைதியாகவே இருந்து வந்ததால், ராஜீய விஷயங்களைக் குறித்துப் பேச அநேகமாக அவர் மறுத்திருக்கவும் கூடும். அவரை சந்தித்துவிட்டு நான் திரும்பினேன். சில தினங்களுக்கெல்லாம் அவரை சர்க்கார் விடுதலை செய்துவிட்டது. ஆனால் முற்றிலும் குணமடையும் வரையில் அவர் புனாவிலேயே இருந்தார். ராஜீய விவாதங்களில் கலந்துகொள்ளுவதற்கான அளவு குணமடைந்ததும் அவர் சட்டசபைப் பிரவேசத்தை எதிர்த்துத் தமது கருத்தை வெளியிட்டார். அதோடு அதைக் குறித்து நாங்கள் மேற்கொண்ட போக்கையும் ஆதரித்தார், அதே சமயத்தில் எங்களுக்கு இன்னொன்றும் சொன்னார். அப்பொழுது தமது அபிப்பிராயம் அதுவே என்றும், நிலைமையைக் குறித்து தேசபந்து தாஸுடனும் பண்டித மோதிலால் நேருவோடும் பேசிய பிறகே ஒரு முடிவான தீர்மானத்திற்கு தாம் வர முடியும் என்றும் கூறினார்.

மே மாத முடிவு வரையில் நான் என் வழக்கில் ஈடுபட்டிருந்தேன். இதற்கு மத்தியில் மகாத்மா மற்றவர்களுடன் விவாதித்து ஒரு சமரச முடிவுக்கு வர விரும்பினார். சுயராஜ்யக் கட்சி, அதன் திட்டப்படி வேலை செய்துகொண்டு போவது; ஆனால் அதே சமயத்தில் காங்கிரஸின் நிர்மாண வேலைத் திட்டத்திற்கு அவர்கள் உதவி செய்யவேண்டும் என்பது அவர் விரும்பிய சமரசம். இந்த வேலைத் திட்டத்தின் முக்கியப் பகுதி கதர் அபிவிருத்தியேயாகையால்,

ஒவ்வொருவரும் நூல் நூற்க வேண்டும் என்றும், காங்கிரஸ் மெம்பர்கள் கையினால் நூற்ற நூலையே சந்தாவாகக் கொடுக்கவேண்டும் என்றும் சொன்னார். தங்கள் கட்சி அங்கத்தினர்களில் எல்லோருக்குமே ராட்டினத்தில் நம்பிக்கையில்லை யாகையால் இந்த சமரசத்தை ஒப்புக்கொள்ளுவதற்கில்லை என்று சுயராஜ்யக் கட்சி கூறிவிட்டது. ராட்டினத்தில் நூல் நூற்றுக் கொண்டிருப்பது நேரத்தை வீணாக்கும் வேலை என்று பலர் கருதினார்கள். காங்கிரஸுக்குச் சந்தாவைக் கையினால் நூற்ற நூலாகத் தரவேண்டும் என்ற கொள்கையை ஒப்புக்கொண்டு விட்டால், காங்கிரஸ் நூற்போரின் கைக்குப் போய்விடும், பிறகு அவர்கள் சுயராஜ்யக் கட்சி விஷயத்தில் என்ன போக்கில் இருப்பார்கள் என்பதும் நிச்சயமில்லை என்றும் பலர் பயந்தார்கள்.

இந்த விஷயங்களை யெல்லாம் யோசிப்பதற்காக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் ஆமதாபாத்தில் நடந்தது. அதன் முன்பு மகாத்மா தமது சொந்த தீர்மானத்தைக் கொண்டுவந்தார். சுயராஜ்யக் கட்சித் தலைவர்கள் அதை எதிர்த்தபோதிலும் சில அதிகப்படியான வோட்டுகளால் அது நிறைவேறிவிட்டது. இந்த வெற்றியை மகாத்மா காந்தி தமது தோல்வியாகவே கருதினார். இதைக் குறித்து உணர்ச்சி மிக்க கட்டுரைகள் பலவற்றையும் "எங் இந்தியா"வில் எழுதினார். அதன் பிறகு சுயராஜ்யக் கட்சியுடன் ஒரு சமரசத்திற்கு வரவேண்டும் என்று மகாத்மா கவலையுடனிருந்தார். முடிவில் ஒரு சமரசமும் ஏற்பட்டது. பாட்னாவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடந்தது. சமரசத்தின் பலனாக அகில இந்திய நூற்போர் சங்கம் அமைக்கப் பெற்றது. அதற்குத் தனி அதிகாரங்களிருந்தாலும் அதை காங்கிரஸின் ஒரு பகுதியாக அங்கீகரித்தார்கள். கதர் போர்டுக்குக் காங்கிரஸ் கொடுத்திருந்த தொகை இந்த ஸ்தாபனத்தினிடம் ஒப்படைக்கப்பட்டது. காங்கிரஸில் இரண்டு பகுதிகள் அமைந்ததே சமரசத்தின் பலன். ஒன்று சட்டசபைகளில் வேலை செய்து கொண்டு போவது; இதை நடத்துவதும் நிர்வகிப்பதும் சுயராஜ்யக் கட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. மற்றொன்று, மகாத்மா காந்தியின்

தலைமையில் நிர்மாண வேலைத் திட்டத்தை நடத்திக் கொண்டு போவது. சட்டசபைக்குப் போவதையோ அல்லது சட்டசபைப் பிரவேசத்திற்கு எந்த வகையிலும் உதவி செய்வதையோ விரும்பாதவர்களுக்கு நடுநிலைமை வகித்துவிடும் வசதி இதனால் உண்டாயிற்று. இந்த வேலைத் திட்டத்தை மேற்கொண்டு நடத்துவதுடன் சட்டசபைத் தேர்தலுக்கும் நிற்க விரும்புகிறவர்களும் அதே சமயத்தில் அனுமதிக்கப்பட்டு விட்டனர். சுயராஜ்யக் கட்சியினர், நிர்மாண வேலைத் திட்டத்தை நிறைவேற்றி வைக்க சட்டசபைக்குள்ளும் வெளியிலும் தங்களாலான உதவிகளைச் செய்ய தங்களளவில் ஒப்புக் கொண்டார்கள்.

இந்த சமரசத்தை அந்த வருஷம் பெல்காமில் நடந்த காங்கிரஸ் மகாநாடு அங்கீகரித்தது. அதற்கு மகாத்மா காந்தி தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஆமதாபாத் கூட்டத்தில் நடந்த துரதிருஷ்டமான சம்பவம் அநேகருடைய உள்ளத்தில் நீங்காத வருத்தத்தை உண்டாக்கி விட்டது. தமது சொந்த தீர்மானத்தின் மீது மகாத்மா பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு அங்கத்தினர் குறுக்கிட்டதோடு எதையோ பேசியும் விட்டார். இதைக் கேட்டதும் மகாத்மா அதிக மனவேதனையை அடைந்துவிட்டார். சிறிது நேரம் பேச முடியாமல் மௌனமாயிருந்தார். பிறகு அவருடைய கண்களிலிருந்து நீர் வடிந்தது. இக்காட்சி கமிட்டி அங்கத்தினர்கள் பலருடைய உள்ளங்களைக் கலக்கிவிட்டது; பல கண்களில் நீரும் வடிந்தது. அந்த ஆட்சேபம் மகாத்மாவின் நம்பிக்கையான சகா ஒருவரிடமிருந்து வந்தது. அத்தகையவர் அப்படிப்பட்ட ஆட்சேபத்தை எழுப்பியது அவர் மனதைப் புண்படுத்திவிட்டதாலேயே மகாத்மா இவ்வளவு துக்கமடைந்துவிட்டார். குறுக்கிட்டுப் பேசியவரோ, அதிக மனவருத்தமடைந்து மிகப் பணிவாக மன்னிப்பும் கேட்டுக்கொண்டார். இச் சம்பவம் நிகழ்வதற்கு முன்னாலேயே மகாத்மா மனக் கஷ்டத்துடனிருந்தார். மகாத்மாவின் தீர்மானம் சில அதிகப்படியான வோட்டுக்களினால் நிறைவேறியதும் தேசபந்து தாஸும் பண்டித மோதி நேருவும் அவர்

களுடைய கட்சியின் மெம்பர்களும், காந்திஜியின் ஆதரவாளர்கள் என்று கருதப்பட்டவர்களே மாத்திரமே கூட்டத்தில் விட்டு விட்டு, வெளியேறி விட்டார்கள். மகாத்மா வேதனைப் பட்டுக் கொண்டிருந்ததற்கு இது ஒரு காரணம். இதனாலேயே தமது வெற்றி உண்மையில் தோல்வியே என்று அவர் சொன்னார். இதை முன்னிட்டே காங்கிரஸிற்குள்ளிருக்கும் கட்சிப்பிளவுகளைப் போக்கி சுயராஜ்யக் கட்சியுடன் ஏதாவது ஒரு வகையில் உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்று முயற்சி செய்தார். தம் போக்கில் காங்கிரஸை நடத்திக் கொண்டு போவது என்று மகாத்மா விரும்பியிருந்தால் அவர் அவ்விதமே நன்றாகச் செய்திருக்க முடியும்; சுயராஜ்யக் கட்சி காங்கிரஸுக்கு வெளியே போய், வெளியிலிருந்து வேலை செய்ய நேர்ந்திருக்கும் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் தமக்குச் சரியெனப்பட்டதில் மகாத்மா உறுதியுடனிருந்ததைப் போலவே, மற்றவர்கள் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பதிலும் உறுதியுடனிருந்தார். ஆகையால் தேசபந்துதாஸும் பண்டித மோதிலால் நேருவும் தங்கள் கருத்தை விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்பது தெரிந்ததும் மகாத்மாவின் எதிர்ப்பு நின்றுவிட்டது. தமது அபிப்பிராயத்தில் அவர் திடமாக இருந்தாலும், சுயராஜ்யக் கட்சிக்கு உதவி செய்ய விரும்பிய காங்கிரஸ்காரர்களை அப்படிச் செய்து கொண்டு போக அவர் அனுமதித்தார். மகாத்மாவின் பெருமையை இது காட்டியது. அவருடைய பெருமைக்கு மற்றோர் உதாரணத்தை 1947-ல் கண்டோம். அதைப் பற்றி பின்னால் கூறுகிறேன்.

1922-ல் மகாத்மா சிறைப்பட்ட பிறகு ஹிந்து — முஸ்லிம் ஒற்றுமை சிதைவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அப்பொழுது காங்கிரஸ், கிலாபத் கமிட்டி மெம்பர்களிடையே அபிப்பிராயபேதம் எதுவும் அவ்வளவாக இல்லை. ஆனால் இரு சமூகங்களையும் சேர்ந்த சாதாரண மக்கள் ஒருவர்மீது மற்றொருவர் அவநம்பிக்கையும் சந்தேகமும் கொள்ளத் தலைப்பட்டனர். எல்லா சம்பவங்களுக்குமே மலையாள மாப்பிள்ளைமார்களே காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது என்பதை முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். இப்படி அவர்கள் குறை

கூறிக்கொண்டிருந்ததற்குக் காரணம் எதுவாயிருந்தாலும், ஹிந்துக்களிடத்தில் சில மாப்பிள்ளைமார்கள் அக்கிரமமாக நடந்து கொண்டு விட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த அக்கிரமங்கள் மிகைப்படுத்தப்பட்டு இந்தியாவின் பல பகுதிகளிலும் பிரசாரம் செய்யப்பட்டு விட்டன. கிலாபத் கிளர்ச்சியில் முஸ்லிம்களுக்கு ஆதரவளித்ததில் மகாத்மா காந்தியும் பல ஹிந்து தலைவர்களும் பெருந் தவறைச் செய்து விட்டார்கள்; முஸ்லிம்களிடையே அவர்கள் விழிப்பை உண்டாக்கி விட்டதால் அதன் பலனாக மலையாளத்தில் ஹிந்துக்கள் துன்பப்படுத்தப் பட்டனர் என்ற அபிப்பிராயமும் உண்டாயிற்று. தங்களுக்கே எல்லாம் நன்றாகத் தெரியும் என்று சொல்லிக் கொண்டவர்கள், இன்னுமொன்றும் கூறி வந்தனர். இஸ்லாம் மதவெறியையே போதித்தது; மத ஆவேசத்திலேயே கிலாபத் இயக்கம் வளர்க்கப் பட்டதால் முஸ்லிம்களை மதவெறியர்களாகவே அது ஆக்கும்; எனவே மலையாளத்தில் ஹிந்துக்களைக் கட்டாயப்படுத்தி மதம் மாற்றியது, ஹிந்துக்கள் என்பதற்காக அவர்களுடைய சொத்துக்களைக் கொள்ளையடித்தது போன்ற சம்பவங்களில் போய் அது முடிந்திருக்கிறது என்றும் அவர்கள் சொன்னார்கள். ஆனால் முஸ்லிம்களோ, முஸ்லிம்களுக்கு எதிராக ஹிந்துக்களைக் கிளறிவிடுவதற்காக மலையாள சம்பவங்கள் மிகைப்படுத்திக் கூறப்படுகின்றன என்றார்கள். ஒரு ஹிந்துவுக்கு முஸ்லிம்கள் கொடுமைகளை இழைத்திருப்பார்களானால், அப்படிச் செய்தது அவர் ஹிந்து என்பதற்காக அல்ல என்றும், தங்களுக்கு எதிராக அவர் பிரிட்டிஷ் சர்க்காருக்கு உதவி செய்கிறார் என்று அவர்கள் நினைத்து விட்டதனாலேயே என்றும் சொன்னார்கள். முஸ்லிம்களுக்கு உண்டாகியிருக்கும் விழிப்பு, காங்கிரஸினாலோ அல்லது ஹிந்துக்களினாலோ அல்ல என்றும், பிரிட்டிஷ் சர்க்கார் தன்னுடைய கொள்கையின் மூலம் முஸ்லிம்களின் மத உணர்ச்சியைத் தாக்கி விட்டதே அதற்குக் காரணம் என்றும் அலி சகோதரர்கள் அபிப்பிராயப்பட்டனர். காங்கிரஸோ, மகாத்மா காந்தியோ தங்களுக்கு உதவி செய்யாதிருந்தாலும், போராட்டம் வேறு வகையில் போயிருந்தாலுங்கூட, என்னவானாலும் சரி என்று பிரிட்டிஷ் சர்க்காருடன் முஸ்

லிம்கள் போராடியே இருப்பார்கள் என்றும் கூறினர். தங்களுக்கு அளித்த உதவிக்காக காங்கிரஸுக்கும் ஹிந்துக்களுக்கும் நன்றி தெரிவித்தனர். ஆனால் அதே சமயத்தில் முஸ்லிம்களும் சேர்ந்து காங்கிரஸை பலப்படுத்தியபோது பிரிட்டிஷ் சர்க்காரை எதிர்த்து நிற்கும் சக்தி அதற்கு வரும்படியும் செய்திருக்கிறார்கள் என்பதை காங்கிரஸும் ஹிந்துக்களும் மறந்துவிடக் கூடாது என்றனர்.

1919 ல் டில்லி, ஜாலியன்வாலா பாக் ஆகிய இடங்களில் ஹிந்து—முஸ்லிம் ரத்தம் ஒன்றாக ஓடியது. பிரிட்டிஷ் சர்க்காரின் பலத்திற்கு இவ்விருவரும் ஒன்று சேர்ந்து சவால் விட்டனர். ஜாலியன்வாலா பாக் சம்பவத்திற்குப் பிறகு ஒற்றுமையும் அன்பும் மிக அதிகமாக பலப்பட்டிருந்ததால் இவற்றை எதுவுமே சிதைத்துவிட முடியாது என்றே தோன்றியது. பிறகு எங்கோ ஒரு இடத்தில் நடந்துவிடும் ஒரு சம்பவத்தினால் வேற்றுமை விதை மெள்ள முளை காண ஆரம்பித்தது. இதன் விளைவு உடனடியாகத் தெரியாது போயினும் நாளா வட்டத்தில் பகிரங்கமாகத் தெரிந்து விட்டது. மகாத்மா காந்தி சிறைப்பட்டு ஐந்தாறு மாதங்கள் கழித்து 1922-ல், மூல்டானிலேயே இந்த வேற்றுமையின் வளர்ச்சிக்கு சந்தேகத்திற்கிடமில்லாத முதல் சாட்சியம் தென்பட்டது. மூல்டானில் முஸ்லிம்களே ஏராளம்; ஹிந்துக்கள் மிகச் சிறுபான்மையினர். அதிக ஆடம்பரமாக முஸ்லிம்கள் ஒரு மொகரம் ஊர்வலத்தை நடத்தினார்கள். ஹிந்துக்களுடன் சச்சரவுக்கு இதுவே ஒரு சமிக்ஞையாயிற்று. அதில் ஒரு பாவமும் அறியாத ஹிந்துக்கள் பலர் கொல்லப்பட்டனர்; பலருடைய வீடுகள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன. அவர்களுக்கு எதிராக எத்தனையோ அட்டூழியங்களையும் செய்து விட்டார்கள். ஹிந்துக்கள் "தாஜியா" மீது கற்களை எறிந்து அதை அவமதித்து விட்டார்கள், இதனாலேயே முஸ்லிம்கள் ஆத்திரமடைந்து கலவரஞ் செய்து விட்டார்கள் என்று முஸ்லிம்கள் கூறினர். ஆனால் ஹிந்துக்களோ, அவ்விதம் "தாஜியா" மீது கற்களைத் தாங்கள் எறிவதற்கு சந்தர்ப்பமே இல்லை என்றும், அடிதடிக்குத் தாங்கள் தயாரில்லாதபோது இத்தகைய பைத்தியக்காரத்தனத்தைச்

செய்ததாக குற்றஞ் சாட்ட நியாயமில்லை என்றும் கூறினர். ஆனால் முஸ்லிம்களோ, நகரிலிருந்தும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும் ஏராளமாக வந்து கூடியிருந்தனர். "தாஜியா" ஊர்வலத்துடன் போகிறவர்கள் வழக்கமாக ஆயுதங்களை வைத்திருப்பதைப் போல ஆயுதபாணிகளாகவுமிருந்தனர். ஹிந்துக்களுக்கு விஷம நோக்கம் இருந்ததாகவே வைத்துக் கொண்டாலும், அத்தகைய ஆயுதபாணிகளடங்கிய கூட்டத்துடன் சச்சரவு வைத்துக் கொள்ள அவர்கள் அவ்வளவு முட்டாள்களல்ல. கொள்ளையிடுவதற்கும் கொலைகளைச் செய்வதற்கும் வேண்டிய தயாருடனேயே முஸ்லிம்கள் வந்திருக்கிறார்கள்; தங்களுடைய உண்மையான ஏற்பாட்டை மறைக்கவே ஹிந்துக்கள் பேரில் பொய்யான குற்றச்சாட்டுகளைக் கூறுகின்றனர் என்றும் சொல்லப்பட்டது.

இதற்கு ஹிந்துக்களையோ அல்லது முஸ்லிம்களையோ குறை சொல்லிப் பயனில்லை என்பது காங்கிரஸ்காரர்கள், கிலாபத்காரர்களின் அபிப்பிராயம். ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை வளர்ந்து வருவதைக் கண்டு பிரிட்டிஷ் சர்க்காருக்கு அதிகக் கவலையுண்டாகி விட்டது. ஏனெனில் அந்த சர்க்காரின் ஏஜண்டுகளே அக்கலவரத்திற்குக் காரணம் என்றும் கருதினார்கள். முஸ்லிம்கள் சொன்னது போல "தாஜியா" மீது கற்கள் எறியப்பட்டது உண்மையாக இருக்கலாம்; ஆனால் அதை ஹிந்துக்கள் செய்திருக்க மாட்டார்கள். சில சர்க்கார் ஆசாமிகளோ, அல்லது அவர்கள் சார்பில் வேறு யாரோ இதைச் செய்திருக்கலாம். முஸ்லிம்களுக்கு ஆத்திரத்தைக் கிளப்பி விட்டு ஹிந்துக்களுக்கு அவர்கள் கொடுமைகளைச் செய்யும்படி தூண்டியது சர்க்காரே. அந்த நாளில் மூல்டானில் டிபுடி கமிஷனராயிருந்த ஸ்ரீ எமர்ஸன், அதிக புத்தி கூர்மையுள்ள அதிகாரி என்று பெயரெடுத்தவர். அங்கு மூண்ட கலவரத்திற்கு மூல கர்த்தா அவரே என்று அநேகர் சொன்னார்கள். அதற்குப் பின்னால் அவருக்கு வெகு துரிதமாக உத்தியோக உயர்வுகள் கிடைத்தன; இந்திய சர்க்காருக்கு உள்நாட்டுக் காரியதரிசியாகி, பிறகு பஞ்சாப் கவர்னராகவும் அவர் ஆனார்.

காரணம் எதுவானலும், முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்கு எதிராக எத்தனையோ அட்டூழியங்களைச் செய்துவிட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவைகளைப் பற்றிய செய்தி கிடைத்ததும் அப்பொழுது காங்கிரஸ் தலைவராயிருந்த ஹகீம் அஜ்மல் கானும், பண்டித மதனமோகன மாளவியா, சேத் யமுனலால் பஜாஜ், ஸ்ரீ பிரகாசம் ஆகியவர்களும் நானும் மற்றுஞ் சிலரும் கூல்டானுக்குப் போனேம். இரு சமூகங்களுக்குமிடையே பகைமையும், அவநம்பிக்கையும் அதிகமிருக்கிறது என்பதை ரயிலை விட்டு இறங்கியதுமே கண்டு கொண்டோம். எங்களை எங்கு தங்கச் செய்வது? இதில் அவர்கள் தங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக் கொண்டார்கள். நாங்கள் அங்கு தங்குவதற்கான ஏற்பாடுகளை முஸ்லிம்கள் செய்தால், சம்பவத்தைப் பற்றி அவர்கள் கூறும் விவரங்களையே நாங்கள் கேட்டுக்கொண்டு, அவர்கள் கூற்றை ஏற்றுக்கொண்டு அவர்கள் குற்றமற்றவர்கள் என்று சொல்லி விடுவோம் என்று ஹிந்துக்கள் எண்ணினர்கள். அதே போல முஸ்லிம்கள் சந்தேகப்பட்டனர். நாங்கள் எங்கு தங்க வேண்டுமென்று ஹிந்துக்கள் விரும்புகிறர்களோ அங்கு தங்கி விடுவோமானல், சம்பவத்தைப் பற்றி அவர்கள் கூறும் விவரங்களைக் கேட்டுவிட்டு குற்றத்தையெல்லாம் முஸ்லிம்கள் தலையில் போட்டு விடுவோம் என்று அவர்கள் நினைத்தார்கள். குற்றஞ் செய்தது யார் என்பதைக் கண்டு பிடிப்பதல்ல நாங்கள் அங்கே சென்றதின் நோக்கம். துன்பமடைந்து விட்டவர்களுக்கு ஆறுதல் கூறிச் சாந்தப்படுத்தி, சாத்தியமானல் இரு சமூகத்தினருக்கு மிடையே சமரசத்தை உண்டாக்குவதற்காகவே போயிருந்தோம். ஆகையால் நாங்கள் இரு கோஷ்டிகளாகப் பிரிந்து கொள்வது, ஒரு கோஷ்டிக்கு வேண்டிய வசதிகளை ஹிந்துக்கள் செய்வது, மற்றொரு கோஷ்டிக்கு முஸ்லிம்கள் செய்வது என்று முடிவு செய்தோம். ஹகீம் அஜ்மல் கானும் நானும் ஒரு முஸ்லிம் நவாபின் வீட்டில் தங்கினேம். மற்றவர்கள் மாளவீயாஜியுடன் ஒரு ஹிந்துவின் தோட்ட வீட்டில் தங்கினர்கள். ஆனல் முஸ்லிம்கள் கொளுத்தி விட்ட, கொள்ளையடித்த இடங்களைப் பார்ப்பதற்கு நாங்கள் எல்லோரும் சேர்ந்தே போனேம். கொலையுண்ட

வர்களின் உறவினர்களான பல ஆண்களையும் பெண்களை யும் சந்தித்தோம். நாங்கள் பார்த்த இடங்களிலெல்லாம் உள்ளத்தைப் பிளக்கும் பரிதாபக் காட்சிகள்! ஒரு ஹிந்து வின் சொத்துக்களை, கலகக்காரர்கள் தூக்கிச் செல்ல முடி யாத இடங்களில், அவற்றை அவர் வீட்டின் முற்றத் திற்குக் கொண்டு வந்து சேர்த்துக் கொளுத்தி விட்டார்கள். அவர்கள் கொளுத்தாத இடங்களில் அந்தச் சாமான்களை மற்ற வகைகளில் நாசப்படுத்தினார்கள். ஒரு எந்திரங்கூட நாசமாக்கப்படாமல் தப்பவில்லை. கிளியை அடைத்து வளர்க்க வைத்திருந்த ஒரு இரும்புக் கூண்டும், மற்ற சாமான்களுடன் தீயில் போட்டுக் கொளுத்தப்பட்டிருந் ததை ஒரு இடத்தில் பார்த்தேன். பெண்கள் அழுது புலம்பிக்கொண்டே தங்களுடைய சோகக் கதைகளை எங்க ளிடம் சொன்னார்கள். இவற்றைக் கேட்டு ஹிந்துக்களா கிய நாங்கள் அளவு கடந்த துக்கமடைந்தோம். ஹக்கீம் அஜ்மல் கானும் கண்ணீர் சொரிந்தார்.

டிபுடி கமிஷனரை சந்தித்தோம். குற்றஞ் செய் தோர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பண்டித மாளவியா வற்புறுத்தினார். இந்தப் போக்கை நான் விரும்பவில்லை; ஆனால் இதைக் குறித்து நான் எது வும் செய்வதற்குமில்லை.

முதலில் ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் தனித் தனி யாகச் சந்தித்தோம். அவர்கள் கூட்டத்தில் ஹக்கீம் அஜ்மல் கானும் மாளவியாவும் பேசினார்கள். பின்னர் இரு சமூகத்தினரையும் கொண்ட கூட்டங்கள் நடந்தன. இவ் விரு சமூகத்தாருக்குமிடையே ஏற்பட்டிருந்த துவேஷம் சாந்தமடைவதற்கு இது ஓரளவுக்குப் பயன்பட்டது. மொத்தத்தில் எங்களுடைய விஜயம் நல்ல பலனையளித் தது. மூல்டானிலிருந்து நாங்கள் புறப்பட்டபோது அங்கு பரபரப்பு நீங்கியிருந்ததோடு, பொதுவாக அமைதியான சூழ்நிலையு மிருந்தது. ஹிந்துக்கள் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்றும், அவர்கள் ஒன்றுபட்டு உறுதியுடன் இல்லாததினாலேயே இத்தகைய அக்கிரமங்கள் சாத்திய மாயின என்றும் மாளவியாஜி ஹிந்துக்களிடம் கூறினார். இதை அவர், தமது சுபாவமான முறையில், இரு சமூகத்

தினருக்கு மிடையே துவேஷத்தை வளர்த்து விடாத வகையில் கூறினர். ஆகையால் முஸ்லிம்களுடன் சண்டை போடுவதற்காகவே ஹிந்துக்களை ஒன்றுபடும்படி அவர் கூறுகிருர் என்று யாரும் குறை சொல்ல முடியாது.

முஸ்லிம்களிடையே இருந்த சூழ்நிலையும் தெளிவடைந்தது. ஆனல் மூல்டான் சம்பவம் நாட்டின் மற்ற பகுதிகளுக்குத் தெரிந்துவிடாதபடி மறைத்துவிட முடியாது. எனவே மற்ற இடங்களில் ஹிந்துக்கள் ஆத்திரமடைந்தார்கள். ஹிந்து ஸ்தாபனம் ஒன்றிருப்பது அவசியம் என்று சிலர் எண்ணினுர்கள். சமீபத்தில் காங்கிரஸ் மகாநாடு கயாவில் நடப்பதாயிருந்ததால் ஹிந்து சபையின் மகாநாட்டையும் அங்கு நடத்துவதென்று ஹிந்துக்கள் முடிவு செய்ததோடு அதற்குத் தலைமை வகிக்க பண்டித மதனமோகன மாளவியாவைக் கேட்பதென்றும் தீர்மானித்தார்கள். நானும் ஹிந்து சபையில் ஈடுபட்டு, தலைமை வகிக்க வேண்டும் என்று சேர்ந்து தம்மை ஆதரிப்பதாயிருந்தால், அத்தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ள மாளவியாஜி சம்மதித்தார். இதில் எந்தத் தவறு மிருப்பதாக நான் நினைக்கவில்லை யாகையால் அதற்கு ஒப்புக்கொண்டேன். பிறகு ஹிந்து சபைக்கும் காங்கிரஸுக்கும் அபிப்பிராய பேதம் எழுந்தபோது, என் வேண்டுகோளின் பேரிலேயே கயா சபாவின் தலைவராக இருக்க தாம் சம்மதித்ததை மாளவியாஜி எனக்கு ஞாபகமூட்டினர். ஹிந்து சபையின் கயா மகாநாட்டைப் பொறுத்தவரையில் அது வெற்றிகரமாகவே நடந்தது; அதில் செய்யப்பட்ட முக்கியமான முடிவு ஹிந்துக்கள் ஒற்றுமையடைய வேண்டும் என்பதுதான்.

முஸ்லிம்களாயினும், ஹிந்துக்களின் பல பழக்க வழக்கங்களையே அப்படியே அனுசரித்து வந்ததோடு ஹிந்துக்களின் கலாச்சாரச் சின்னங்கள் பலவற்றையும் அப்படியே கொண்டிருந்தவர்களான மால்கான ரஜபுத்திரர்களைத் திரும்பவும் ஹிந்துக்களாக மதம் மாற்றுவதற்காக சுவாமி சிரத்தானந்தர் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். மற்ற விஷயங்களில் ஒருவருடைய அபிப்பிராயம் எப்படி யிருந்தாலும், முஸ்லிம்களல்லாதவர்களை இஸ்

லாத்தில் சேர்ப்பது தவறு என்று எந்த முஸ்லிமும் நினைப்பதுமில்லை, நம்புவதும் கிடையாது, எனினும் ஹிந்து மதத்திற்குத் திரும்ப மதம் மாற்றுவதற்கு சுவாமி சிரத்தானந்தர் ஆரம்பித்த இயக்கம், முஸ்லிம்களிடையே அதிக ஆத்திரத்தை உண்டாக்கி விட்டது. அவருக்கு அவர்கள் கொடிய விரோதிகளாகவும் ஆகி விட்டனர். அப்போதைக்கப்போது நாட்டின் பல பகுதிகளிலும் ஹிந்து—முஸ்லிம் கலவரங்கள் நடந்து கொண்டு வந்ததின் விளைவாக இரு சமூகத்தினருக்குமிடையே துவேஷமும் வளர்ந்து வந்தது.

எனினும் 1919-ல் ரௌலட் சட்டத்தை எதிர்த்து டில்லியில் கிளர்ச்சி நடந்தபோது இதே சுவாமி சிரத்தானந்தரே ஹிந்து—முஸ்லிம் கூட்டத்திற்குத் தலைமை வகித்து நின்று பிரிட்டிஷ் துப்பாக்கி வேட்டுகளுக்குத் தமது மார்பைத் திறந்து காட்டினார். அப்பொழுது முஸ்லிம்களிடையே அவருக்கு அதிக செல்வாக்கிருந்ததால் டில்லி ஜும்மா மசூதியில் தங்கள் கூட்டத்தில் பேசவும் அவரை அழைத்துச் சென்றார்கள். ஆனால் அதே சுவாமி சிரத்தானந்தர், சுத்தி என்று கூறப்பட்ட இயக்கத்தை ஆரம்பித்து விட்டார் என்பதற்காக, முஸ்லிம்களின் மகா கொடிய விரோதியாகக் கருதப்பட்டார். கடைசியாக 1926 டிசம்பரில் ஒரு முஸ்லிமினால் அவர் கொலையுண்டார். இந்நிலைமை ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தது 1923-லேயே தோன்றி விட்டது.

சிறையிலிருந்து மகாத்மா வெளியே வந்ததும், ஒரு பக்கம், சட்டசபைப் பிரவேச சம்பந்தமாக காங்கிரஸ்காரர்களிடையே தகராறு முற்றியிருப்பதையும், மற்றோர் பக்கத்தில், அநேகர் கஷ்டப்பட்டு எத்தனையோ தியாகங்களைச் செய்து வளர்த்து வைத்திருந்த ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை நாளா வட்டத்தில் சிதைந்து ஹிந்து—முஸ்லிம் கலவரங்களில் முடிந்து வருவதையும் கண்டார். அதே ஆண்டில் கோஹட்டில் பெருங் கலவரமொன்று நடந்தது. அங்கு ஹிந்துக்களுக்கு விரோதமாக அநேக அட்டூழியங்கள் செய்யப்பட்டன. அலி சகோதரர்களிடம் மகாத்மாவுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு; அவர்களும்

இவரிடம் அதிக நம்பிக்கை வைத்திருந்தார்கள். மௌலானா ஷௌகத் அலியுடன் சேர்ந்து போய் கோஹட் சம்பவங்களைப் பற்றிப் பரிசீலனை செய்வதென்று மகாத்மா முடிவு செய்தார். அந்த விசாரணையின் முடிவைப் பற்றி இருவரும் ஒத்துப் போக முடியவில்லை; இவர்களிருவருக்குமிடையே அபிப்பிராய பேதமுண்டாயிற்று. மகாத்மா மிகவும் நிதானமானவர். மற்றவர்களிடம் குற்றங் காணும் வழக்கம் அவருக்கில்லை; இச்சந்தர்ப்பத்திலும் அவர் அப்படிச் செய்ய வில்லை. ஆனால் பரஸ்பர மதிப்பையும் நம்பிக்கையையும்கொண்ட உறவு அவர்களிடையே நீடிக்க வில்லை என்பது தெளிவாயிற்று. என்றாலும் இதை அவர் வெளிக்குக் காட்டவில்லை; எப்பொழுதும் போலவே காரியங்கள் நடந்து வந்தன.

அடிக்கடி வகுப்புக் கலவரங்கள் நடப்பதைக் கண்டு மகாத்மா வேதனைப்பட்டார். இவைகளுக்கு ஒரு முடிவு கட்ட ஏதாவது கடுமையான நடவடிக்கையை எடுத்தாக வேண்டியது அவசியம் என்றும் கருதினார். சில மாதங்களுக்கு முன்னால்தான் கடுமையான நோய்வாய்ப்பட்டு சத்தர சிகிச்சையும் செய்து கொள்ள நேர்ந்தது. மகாத்மா, தம் உயிரைப் பற்றியும் கவலைப்படாமல் இருபத்தோரு நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். இம்முடிவுக்கு வந்தபோது இவர் டில்லியில் மௌலானா முகமது அலியின் விருந்தினரா யிருந்தார். அப்பொழுது காங்கிரஸ் தலைவராயிருந்த மௌலானா முகமது அலியும் மற்றும் அநேகரும் உண்ணாவிரத முடிவை மகாத்மா கைவிடும்படி செய்வதற்காக தங்களாலான வரையில் வற்புறுத்திப் பார்த்தார்கள். ஆனால் காந்திஜி உறுதியுடனிருந்து விட்டதோடு உண்ணாவிரதத்தையும் ஆரம்பித்தார்.

மகாத்மாவின் உண்ணாவிரதச் செய்தி வெளியானதும் நாடு முழுவதிலும் பெருங்கவலை ஏற்பட்டது. மௌலானா முகமது அலி, எல்லா கட்சிகள், மதங்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு கூட்டத்தைக் கூட்டினார். இதற்கு காங்கிரஸ் பிரதிநிதிகள் மாத்திரமேயன்றி ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்தவர், பார்சிகள், சீக்கிய சமூகம் ஆகியவைகளின் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். கல்கத்தாவின் பிரதம

பாதிரியாரும் வந்திருந்தார். பல நாட்கள் விவாதங்கள் நடந்தன. முடிவில், வகுப்புத் தகராறுகள் மூளுவதற்குக் காரணமான சுத்தி, பசுவதை, மசூதி முன்னால் மேளம் போன்ற எல்லா விஷயங்களைக் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேறின. மகாத்மா அதிக திருப்தியடைந்தார். என்றாலும் இருபத்தோரு நாட்கள் உண்ணுவிரதமிருந்து பூர்த்தி செய்தார்.

உண்ணுவிரதம் ஆரம்பமான இரண்டொரு நாட்களுக்குப் பிறகு நான் டில்லிக்கு வந்தேன். அதுவரையில் மௌலானு முகமது அலியின் வீட்டிலேயே மகாத்மா இருந்தார். ஆனல் நான் வந்த இரண்டொரு நாட்களுக்குப் பிறகு நகருக்கு வெளியிலுள்ள ஒரு வீட்டிற்கு அவரைக் கொண்டு போனுர்கள்; விரதம் முடியும் வரையில் அங்கு தானிருந்தார். நான் வெளியில் தங்கியபோதிலும் நாள் பூராவும், இரவில் ஒரு பகுதி நேரம்கூட, அவருடனேயே இருந்தேன். இதற்கு முன்னுல் நான் பார்த்ததைவிட அப்பொழுதுதான் மகாத்மாவின் உறுதி, கடவுளிடம் அவர் கொண்ட நம்பிக்கை, தமது வேலைகளை யெல்லாம் செய்து முடிப்பதில் அவர் காட்டிய திடம் ஆகியவைகளை நான் நன்ருகக் கண்டேன்.

நூற்பதும் மகாத்மாவின் அன்றுட வாழ்க்கையில் ஒரு பகுதி. எந்த நாளும், உண்ணுவிரதமிருந்து வந்த காலத்தில்கூட, அவர் அதைக் கைவிட்டதில்லை. உண்ணுவிரத காலத்தில், சில தினங்களானதும் அவர் அதிக பலவீனமடைந்து விட்டதால், அவரால் உட்கார முடியவில்லை எனினும் அவருக்குப் பின்னுலும் பக்கங்களிலும் தலையணைகளை வைத்துக் கொண்டு உட்கார்ந்து தினப்படி நூற்றே வந்தார். நூற்று விட்டுதான் உண்ணுவிரதத்தையும் நிறுத்தினுர்.

தினந்தோறும் மதிப்பிற்குரிய மாளவியாஜி கொஞ்ச நேரம் பகவத் கீதா சுலோகங்களைக் கூறுவார். மகாத்மா அப்பொழுதும் காலை மாலைகளில் பிரார்த்தனை செய்து வந்தார். கடவுளிடம் அவருக்கு அசைக்க முடியாத பக்தியுண்டு. தாம் எதையாவது செய்து முடிக்க வேண்டுமென்பதே ஆண்டவன் சித்தமாளுல், உண்ணுவிரதத்தை முடிக்

கும் ஆற்றலை அவர் நிச்சயம் தமக்கு அளிப்பார் என்று அவர் நம்பினர். தினந்தோறும் டாக்டர் அன்சாரி மகாத்மாவைப் பார்த்து வந்ததோடு அவருடைய நீரைப் பரிசோதித்து அவருடைய உடல் நிலையையும் கவனித்து வந்தார். சாகும் வரையில் உண்ணுவிரதமிருப்பது என்று மகாத்மா அந்த விரதத்தை ஆரம்பிக்காததால், உயிருக்கு ஆபத்து என்ற கட்டம் வந்து விடுமானுல், உடனே விரதத்தை நிறுத்தி விட்டு சாப்பிடுவது என்ற வாக்குறுதியை டாக்டர் அன்சாரி மகாத்மாவிடம் முதலிலேயே வாங்கிக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவருடைய நீரைப் பரிசோதித்துப் பார்த்ததில், அவர் நெருக்கடியான கட்டத்தை அடைந்து வருகிருர் என்று தெரிந்தது. இதை டாக்டர் அன்சாரி மகாத்மாவுக்குத் தெரிவித்தார். மேற்கொண்டும் தாமதிப்பது ஆபத்து என்றும், அன்று உண்ணுவிரதத்தை நிறுத்திவிட வேண்டும் என்றும் கூறினுர். இதற்கு மகாத்மா கூறியதாவது: "எல்லா அம்சங்களையும் பரிசீலனை செய்து கவனித்தீர்களா? எல்லாவற்றையுமே பார்த்த பிறகுதான் இது உங்கள் அபிப்பிராயமா? ஆனுல் உங்கள் விஞ்ஞானம் ஒன்றைப்பற்றி மாத்திரம் சொல்லவில்லை; அதுதான் பிரார்த்தனை. நாளைக்கும் என் நிலைமை இப்படியே இருக்குமானுல் கொஞ்சம் சாப்பிடுகிறேன்." மறுநாள் மகாத்மாவை டாக்டர் அன்சாரி சோதித்துப் பார்த்தபோது தமக்கு முதல்நாள் கவலையளித்த அடையாளங்களெல்லாம் அன்று அடியோடு மறைந்து விட்டதைக் கண்டார். அளவு கடந்த ஆச்சரியத்திலும் மூழ்கினுர். இது ஒரு பெரிய அதிசயம் என்று எங்களிடமும் தமது நெருங்கிய நண்பர்களிடமும் சொன்னுர்.

தேசத்தில் அதிகக் கவலையை அளித்து வந்த இரு காரியங்களிருந்தன. மகாத்மா ஆனுல் பெல்காமில் காங்கிரஸ் மகாநாடு நடப்பதற்கு முன்னுல் அவற்றில் ஒரு சமரசத்தை உண்டாக்கியதோடு அம்மகாநாடு வெற்றிகரமாக முடிவதற்கு வேண்டிய சரியான சூழ்நிலையையும் உருவாக்கினுர்.

டில்லி மகாநாட்டிற்குப் பிறகு நாட்டின் சூழ்நிலையில் அபிவிருத்தி உண்டாயிற்று. இனிமேல் வகுப்புச் சச்சரவுகளே ஏற்படாது; ஏதாவது ஒரு இடத்தில் சச்சரவு ஏற்-

படக்கூடும் என்பதற்கான அறிகுறி இருந்த போதிலும் விவாதித்தோ அல்லது மத்தியஸ்தத்தின் மூலமோ சமாளிக்கப்பட்டு விடும் என்று எண்ணும்படி இருந்தது அப்பொழுது நிலைமை. ஆனால் எந்த உற்சாக, தோழமை உணர்ச்சியுடன் அம்மகாநாடு முடிவடைந்ததோ அவை நீடித்து நிற்கவில்லை. மகாநாட்டுத் தீர்மானங்களும் அவசியமான அளவுக்குச் சரிவர பிரசாரஞ் செய்யப் படவில்லை. மகாத்மா காந்தி உண்ணுவிரதமிருந்ததால், அந்தக் கவலையினால் தூண்டப்பட்டுதான் அத்தீர்மானங்களைச் செய்தார்களேயல்லாமல், ஹிந்து முஸ்லிம்களின் உணர்ச்சியில் நீடிக்கவல்ல மாறுதல் உண்டானதினால் அல்ல என்பது சீக்கிரத்திலேயே தெரிந்து விட்டது. கொஞ்ச கால அமைதிக்குப் பிறகு மீண்டும் அடிக்கடி சச்சரவுகள் நிகழ்ந்தன.

அதற்குப் பிறகும் மகாத்மா பன்முறை உண்ணுவிரதமிருந்திருக்கிறார். ஒவ்வொரு சமயமும் சில விசேஷ காரணங்களுக்காகவே அவ்விரதத்தை மேற்கொண்டார். பட்டினி விரதத்தின் நன்மையில் அவருக்கு திடமான நம்பிக்கையுண்டு; தன்னைத்தானே புனிதமாக்கிக் கொள்ளுவதற்குச் சிறந்த வழி அது என்று அவர் கருதினார். ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் வெற்றி கிடைக்காது போகுமானால், அவரிடமிருக்கும் ஏதோ தவறுதான் இதற்குக் காரணம் என்பது அவர் நம்பிக்கை. அந்தத் தவறோ அல்லது குற்றமோ, தன்னைத்தானே பரிசுத்தமாக்கிக் கொள்ளுவதன் மூலம் போக்கப்பட்டு விட்டால் வெற்றி தானே வரும் எனக் கருதினார். மகாத்மாவின் மனதை நன்கு புரிந்து கொள்ள முடியாதவர்கள்—ஏராளமானவர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களேயாகையால்—மற்றவர்களைக் கட்டாயப்படுத்தி காரியத்தை நடத்தி விடுவதற்காகவே அவர் உண்ணுவிரதத்தை மேற்கொள்ளுகிறார் என்று எண்ணினார்கள். பிறரைக் கட்டாயப் படுத்துவதற்கு ஒரு ஆயுதமாகவே அவருடைய உண்ணுவிரதமிருந்தாலும் அது அன்பு நிறைந்ததேயாகும். அவர் மீது அன்பு கொண்டவர்கள், இதை உணர முடியுமேயன்றி எதிரிகள் என்றும் அறிய முடியாது. எதிரிகள் கூட, அவருடைய உண்ணுவிரதத்தினால் எழும் பொது

அபிப்பிராயத்திற்கு அஞ்சியிருக்கக்கூடும். இந்த பொது ஜன அபிப்பிராயத்திற்குக் கூட பயப்படாதிருந்து விட்டவர்கள், மகாத்மாவால் மாறுதலடைந்தார்கள் என்பதற்கான அறிகுறி இருந்ததே இல்லை. என்றாலும் தன்னைத் தானே புனிதப்படுத்திக் கொள்ளுவதுதான் உண்ணாவிரதத்தின் லட்சியமாகையால், அப்படிப் பட்டவர்களிடம் எந்த மாறுதலும் தென்படாது போனாலும், அவர்கள் விஷயத்திலும் பயனுள்ளதாகவே அதுஇருக்கும் என்றுதிடமாக நம்பினார். ஒன்றைச் செய்யும்படி எதிராளியைக் கட்டாயப்படுத்துவதற்காக மாத்திரம் ஒரு உண்ணாவிரதம் மேற்கொள்ளப் படும்போதெல்லாம், அது அதன் நோக்கத்தில் பூர்த்தியடைவதாகவே இருந்தாலும், அப்படிப்பட்ட உண்ணாவிரதம் சரியானதல்ல, வெற்றிகரமானதல்ல என்று அவர் எண்ணினார். ராஜகோட்டில் அவர் உண்ணாவிரதமிருந்தபோது, உண்ணாவிரதத்தின் இந்த அம்சத்தைக் குறித்து அவர் அதிக விளக்கங்கூறி எழுதி யிருக்கிறார்.

புதியதோர் சூழ்நிலை

பிறகு ஐந்து வருஷ காலம் மகாத்மா காந்தி நிர்மாண வேலையிலேயே அதிகமாக ஈடுபட்டிருந்தார். ராஜீய வேலைகளை, அதாவது பிரிட்டிஷ் சர்க்காரிடமிருந்து சுயராஜ்யத்தைப் பறிப்பதை நோக்கமாகக் கொண்ட வேலையை, சுயராஜ்யக் கட்சியிடமே முற்றிலும் விட்டு விட்டார். அவர்களுக்கு மத்திய சட்டசபையில் பெரும்பான்மை பலம் இல்லாது போனாலும், மற்ற கட்சிகளின் ஒத்துழைப்பைப்பெற்று தங்களுடைய வேலைகளில் ஓரளவு வெற்றியையே அடைந்தார்கள். சர்க்காரின் வரவு செலவு திட்டத்தை அங்கீகரிக்காமல் நிராகரித்து, வைசிராய் தன்னுடைய விசேஷாதிகாரத்தைக்கொண்டு அதற்கு உயிர்கொடுக்கும்படிச் செய்ய நிர்ப்பந்திப்பதில் சுயராஜ்யக்கட்சி வெற்றிபெற்றது என்றாலும் சட்டசபையில் எந்த முறையில், எந்த அளவுக்கு ஒத்துழையாமையை அனுசரிப்பது என்னும் விஷயத்தில் அக் கட்சியில் ஏகோபித்த அபிப்பிராயம் இல்லை என்பது தெரிந்து விட்டது. சர்க்காருடன் ஒத்துழையாமலிருக்க வேண்டியதை சர்க்காரின் ஒருகொள்கை அத்யாவசியமாக்கும்போது ஒத்துழையாதிருந்து, அந்தக் கொள்கை தேசத்திற்கு நல்லதாக இருக்கும்போது ஒத்துழைப்பதா? தேசபந்து தாஸ் காலமான பிறகு சுயராஜ்யக் கட்சியின் தலைவரான பண்டித மோதிலால் நேரு, பூரண ஒத்துழையாமையை திடமாக நம்புகிறவர். சுயராஜ்யக் கட்சி தோன்றியதே இதே நோக்கத்திற்காகவே; எனவே அதன் மெம்பர்களும் ஒத்துழையாமைப் பிரதிக்ஞையே கொண்டிருந்தார்கள். என்றாலும் இவர்களல்லாமல், மற்றோர்தரத்தினருமிருந்தார்கள்; இவர்களில் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் சிலர் சேர்ந்திருந்தனர், பரஸ்பர ஒத்துழையாமையே வேண்டும் என்று இவர்கள் சொன்னார்கள். இதனால் கட்சி அங்கத்தினர்களுக்குள்ளேயே தகராறு முற்றியது. முடிவாக சுயராஜ்யக் கட்சியும், அக்கட்சியின்

சிபார்சை அனுசரித்து காங்கிரஸும், அந்த மெம்பர்களெல்லாம் மத்திய சட்டசபையிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்று முடிவு செய்தது; அங்கத்தினர்களும் வெளியேறிவிட்டார்கள்.

அதற்குக் கொஞ்ச காலத்திற்கெல்லாம் தேர்தல்கள் நடக்கவிருந்தன. தன் பெயரின் பேரிலேயன்றி காங்கிரஸின் பெயராலும் சுயராஜ்யக்கட்சி அத் தேர்தலில் போட்டியிட்டது. ஹிந்து முஸ்லிம் கலவரங்களினால் வகுப்புத்துவேஷம் மிகுந்ததின் விளைவாக, பண்டித மதன்மோகன் மாளவியா, லாலா லஜபதிராய் போன்ற முக்கியமானவர்கள், ஹிந்துமகாசபையின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு பரஸ்பர ஒத்துழையாமைகாரர்கள் போல, காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்து நின்று வெற்றிபெற்றபோதிலும், அத்தேர்தலில் சுயராஜ்யக்கட்சி அதிக வெற்றியையே அடைந்தது. அந்த நிலைமையில் சாத்தியமானதான வெற்றியை காங்கிரஸ் அடைந்தது.

சுயராஜ்யக்கட்சியினர், தங்களுக்கு உசிதம் என்று தோன்றிய வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கும், தாங்கள் விரும்பும் வகையில் காங்கிரஸ் ஸ்தாபனத்தை உபயோகித்துக்கொள்வதற்கும் மகாத்மாகாந்தி அவர்களுக்கு முழு வாய்ப்பையும் அளித்தார். இதன் பலன் என்னவென்றால், நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் சட்டசபைக்குள்ளிருந்து தங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்து பார்த்துவிட்டு பண்டித மோதிலால் நேருவும் மற்றவர்களும் வெளியேறி ஒத்துழையாமை, சத்தியாக்கிரகத் திட்டத்திற்கே திரும்பிவிட்டார்கள். 1925 – ல், தேசபந்து தாஸின் கடைசி நாட்களிலேயே, இந்த மாறுதலுக்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்த போதிலும், இந்த கட்டத்திற்கு வந்துசேரப் பல வருஷங்களாயின.

சுயராஜ்யக் கட்சியின் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்காக தேசபந்து தாஸ் தம்மால் முடிந்ததையெல்லாம் செய்தார். மத்திய மாகாணத்திலும், வங்காளத்திலும், மந்திரிசபை அமைக்க முடியவில்லை; அமைந்

தாலும் உடனே வீழ்த்தப்பட்டது. மத்திய அசெம்பிளியிலும் வருடந்தோறும் வரவு செலவுத் திட்டத்தை சபை நிராகரித்து வந்தது. ஆனால் அப்போதைக்கப்போது சர்க்கார் மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளை அது கைவிடும்படிச்செய்ய சுயராஜ்யக்கட்சியால் முடியாது போயிற்று. சட்டசபைக்குள்ளிருந்து ஒத்துழையாமை நடத்துவதென்பது போதுமானதல்ல என்பது இதன்மூலம் தெளிவாகிவிட்டது. என்றாலும் சுயராஜ்யக்கட்சி தன்னுடைய பலத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டி விட்டதால், பிரிட்டிஷாருடன் சமரசத்திற்குவர காங்கிரஸ் தயாராயிருக்கிறது என்று காட்டிக்கொண்டால் ஒருவேளை சர்க்கார் சமரசப் பேச்சை நடத்த முன்வந்து ஒருவழி ஏற்படலாம் என்று தேசபந்து தாஸ் கருதினார். இந்த சமயத்தில்தான் மிகத்தீவிரமான கன்சர்வேடிவும், புத்திசாலியான அஞ்சாத ராஜதந்திரி என்று பெயரெடுத்தவருமான லார்டுபர்க்கென்ஹெட் இந்தியா மந்திரியானார். அப்பொழுது பாட்னாவிலிருந்த தேசபந்து தாஸுக்கு லார்டு பர்க்கென்ஹெட்டிடம் அதிக நம்பிக்கை இருந்தது. என்னிடம் அவர் பேசிக்கொண்டிருந்தபோது இதையே சொன்னார். தாம் ஏமாற்றமடையும்படி லார்டு பர்க்கென்ஹெட் செய்துவிட்டால், மகாத்மா காந்தியின் ராட்டினத்திற்கே திரும்பப்போய், மீண்டும் அவருடைய திட்டத்தை ஒப்புக்கொண்டு விடுவதைத்தவிர தமக்கு வேறு வழியில்லை என்றும் தேசபந்துதாஸ் கூறினார். லார்டு பர்க்கென்ஹெட் ஆதரவோடு கவனிப்பார் என்ற நம்பிக்கையில் அவர் ஒரு அறிக்கையையும் வெளியிட்டார். சில நாட்களுக்கெல்லாம் வங்க மாகாண ராஜீய மகாநாட்டுக்கு அவர் தலைமை வகித்தபோது, தமது தலைமையுரையில், சமரசத்தில் தமக்கிருந்த ஆர்வத்தையும் வெளியிட்டார். லார்டு பர்க்கென்ஹெட்டோ, தாம் வெளியிட்ட மரியாதையான, ஆனால் எந்தவித சந்தேகத்திற்கும் இடந்தராத ஒரு அறிக்கையில், சுயராஜ்யக் கட்சி தன்னுடைய ஒத்துழையாமைத் திட்டத்தைக் கைவிடும் வரை எந்த சமரசத்தைக் குறித்தும் தாம் சிந்திக்கவும் தயாராயில்லை என்று சொல்லி விட்டார். தாம் அவமதிக்கப்பட்டு விட்டதை தேசபந்துதாஸ், உடனே உணர்ந்தார். இதற்கு

முன்னல் சில மாதங்களாகவே நோயுற்றிருந்த அவர் பிறகு டார்ஜிலிங்கில் காலமானர்.

மேலே சொன்னேற் போல, தேசபந்துதாஸ் காலமான பிறகு பண்டித மோதிலால் நேருவின் தலைமையில், பெரும் பாலான அங்கத்தினர்கள் ஒத்துழையாமைத் திட்டத்தைத் தீவிரமாக ஆதரிப்பவர்களாகி விட்டார்கள். மிகச் சில மெம்பர்கள் மாத்திரமே பரஸ்பர ஒத்துழையாமை என்ற போக்கிலிருந்தார்கள். கட்சிக்குள்ளேயே அபிப்பிராய பேதங்கள் எழுந்து விட்டன. தேசபந்துதாஸின் கடைசி நாட்களில் மிகக் கொஞ்சமே புலப்பட்டு வந்த எண்ணப் போக்கு நாளா வட்டத்தில் அதிகத் தெளிவாகத் தெரிந்து விட்டது. சட்டசபை வேலையில் எதையும் எதிர்பார்த்துப் பயனில்லை; ஒத்துழையாமையே சரி, அதைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டியதுதான் என்ற நிலைமைக்கு 1928-ல் வந்து விட்டார்கள்.

இந்த நான்கு, ஐந்து வருடங்களிலும், நான் முன்னல் குறிப்பிட்டதைப் போல, மகாத்மாகாந்தி நிர்மாண வேலைத் திட்டத்திலேயே பெரும்பாலும் ஈடுபட்டிருந்தார். ஆகையால் அதைப் பற்றியும் சுருக்கமாக இங்கு கூறுவது அவசியமாகும்.

சுயராஜ்யக் கட்சியுடன் சமரச முடிவுக்கு வந்ததின் காரணமாக அகில இந்திய நூற்போர் சங்கம் தோன்றிய பிறகு, அதனுடைய மாகாண கிளைகளை அமைப்பதிலேயே மகாத்மா அதிகமாக கவனஞ் செலுத்தி வந்தார். இச் சங்கத்தின் வேலைகளை விஸ்தரிப்பதற்கு வேண்டிய நிதியைத் திரட்டுவதை முன்னிட்டு சுற்றுப் பிரயாணமும் செய்தார். அச்சங்கத்திற்கு அவரே தலைவராகையால், அதன் நடவடிக்கைகளை கவனிப்பதோடு அதனுடைய முக்கியமான வேலைகளில் அதற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியதும் அவருடைய கடமையாயிற்று. நூற்கும் நூலின் அளவும் தரமும் அதிகரிக்கும்படிச் செய்யும் வகையில் அபிவிருத்தியோடு கூடிய புதுரக ராட்டினத்தைக் கண்டு பிடிக்கும்படிச் செய்து, நெசவிலும் முன்னேற்றத்தை உண்டாக்குவது என்ற வகையிலேயே அந்த நாளில் அச்சங்கத்தின் கொள்கை வகுக்கப்பட்டிருந்தது. ஆகவே

இதைக் குறித்து மகாத்மா பல கட்டுரைகளை எழுதினர்; அநேக பிரசங்கங்களையும் செய்தார். இதன் பயனாக அபி விருத்தியோடு கூடிய புது ராட்டினம் கண்டு பிடிக்கப் பட்டது. பல இடங்களில் ஒழுங்கான வகையில் நூற் பதும் ஆரம்பமாயிற்று. நல்ல, திறமைசாலிகளான ஊழி யர்களும் முன் வந்ததோடு சிறந்த முறையில் வேலை நடப்ப தற்கு அதிக உதவியையும் செய்தார்கள்.

இப்பொழுது நல்ல நயமான நூலும் நூற்கப்பட்டு வந்தது. முரட்டுத் துணி மாத்திரமேயன்றி, மில் ஜவுளிக் குச் சமம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நயமான சிறந்த கதரும் உற்பத்தியாயிற்று. இது கவர்ச்சிகரமான தாக இருக்கும்படிச் செய்வதற்காக, சாயம் போடுவது, பூ அச்சிடுவது போன்றவைகளும் உபயோகிக்கப் பட்டன. ஒவ்வொரு கதர் ஸ்டோரும், அகில இந்திய நூற்போர் சங்கத்தின் ஒவ்வோர் கிளையும், ஏராளமான சிறந்த ரக கதரை உற்பத்தி செய்து விற்க முயன்றன. தங்கள் மாகாணத்திற்குள்ளும் வெளியிலும் முடிந்த இடங்களி லெல்லாம் விற்று வந்தார்கள். விலையில்கூட மில் துணிக்கு போட்டியாக இருக்கும் வகையில் கதரை உற்பத்தி செய்ய வேண்டுமென்பதே அவைகளின் நோக்கமாகையால், குறைந்த செலவில் தயாரிக்க முற்பட்டார்கள். நயமான கதர் அதிக விலை; அதே ரக மில் துணியைவிட இதன் விலை அதிகமிருக்கும். ஆனல் முரட்டு ரக கதர் விலைக்கும் மில் துணி விலைக்குமுள்ள வித்தியாசம் அவ்வளவு அதிக மல்ல. மக்கள் பொதுவாக நய ரகத் துணியையே விரும்பி னர்கள்; ஆனல் அது போதுமான அளவு அதிகமாக உற்பத்தியாகவில்லை. கதரைப் பிரபலமாக்கி அதன் விற் பனையை அதிகப் படுத்த வேண்டும் என்பதற்காக கதர் காட்சிகள் நடத்தப்பட்டன; அங்கு எல்லா வகையான கதரும் வைக்கப்பட்டு விற்கப்பட்டன. பெரிய அளவில் நடக்கும் காட்சியில், கதர் தயாரிக்கப்படும் விதத்தையும் காட்டினர்கள். பஞ்செடுப்பது, கொட்டையை நீக்கு வது, பஞ்சு அடிப்பது, நூற்பது, நெய்வது, சாயம் போடு வது, அச்சிடுவது ஆகியவைகளை யெல்லாம் தொழிலாளர் செய்து காட்டுவார்கள். இவ்வேலைகளுக்காக புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்டிருக்கும் கருவிகளும் காட்டப்

பட்டன. சுலபமாகத் துணியாக நெய்வதற்கு வசதியாக இருப்பதை முன்னிட்டு கரடு முறடு இல்லாத நயமான நூலை நூற்கக்கூடிய ராட்டினத்தைக் கண்டு பிடிப்பதற்காக சபர்மதி ஆசிரமம் ஆராய்ச்சி செய்து வந்தது. இவ்விதம் இது இந்த வேலையின் பரீட்சார்த்த சாலையாகவே இருந்தது. மற்ற இடங்களில்கூட மாகாண கிளைகள் இதே முறையில் ஆராய்ச்சிகளைச் செய்து வந்தன. இதன் பலனாக கதர் உற்பத்தியைத் துரிதப்படுத்துவதோடு நூல் மெலிதாகவும், கரடு முறடு இல்லாமலும், அதே சமயத்தில் பலமுள்ளதாகவும் இருக்கும்படிச் செய்வதற்குப் பல வகையான புது ராட்டினங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

பருத்திக் கதர் மாத்திரமேயன்றி பட்டுக் கதர் உற்பத்தியிலும் அதிக அபிவிருத்தி இருந்தது. இந்த வகையான கதர் உற்பத்தியாகுமிடங்களிலெல்லாம், அதன் விற்பனைக்கு அகில இந்திய நூற்போர் சங்கம் ஏற்ற வசதியாக இருந்ததால், பட்டு ஜவுளி தயாரிப்புத் தொழில் புது ஆதரவைப் பெற்றது. வெளி நாட்டுப் பட்டு ஜவுளி பிரபலமாயிருந்தது. ஆனால் கையினால் நூற்று, கையினாலேயே நெய்த பட்டோ, அழகிலும் விலையிலும் அதற்கு நல்ல போட்டியாக அமைந்தது. பட்டைவிட நூல் ஜவுளியிலேயே அபிவிருத்தி வாய்ப்பு அதிகமாகையால் பருத்திக் கதர் உற்பத்திக்கு அதிக ஆக்கமளிப்பதே அகில இந்திய நூற்போர் சங்கத்தின் கொள்கை. எல்லோரும் பட்டு வாங்க முடியாது. பலர் வாங்குவார்கள் என்றிருந்தாலும் தேவைக்கு வேண்டிய அளவு உற்பத்தி செய்ய முடியாது. பட்டில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டு விடுமானால், மற்றதில் வேண்டிய அளவு கவனஞ் செலுத்த முடியாது போகுமாகையால், பருத்தி கதர் உற்பத்தி பின்னடைந்து விடும் என்றும் பயந்தார்கள். என்றாலும் பருத்தி கதர் உற்பத்தியைப் போலவே பட்டுக் கதர் உற்பத்தியும் அநேக ஏழைகளுக்கு உதவி செய்வதாக இருந்ததால் பல கிளைகள் அதையும் அதிகமாக உற்பத்தி செய்து வந்தன. கடைக்கு வருகிற ஒருவர் அழகான பட்டையும் நயமான கதரையும் வாங்க முடிந்தால் கொஞ்சம் முரட்டுக் கதரையும் அவர் வாங்கும்படிச் செய்வது எளிதாகையால், முரட்டு ரக கதர் விற்பனைக்கு பட்டும் உதவியாகயிருந்தது.

இதே வகையில் கம்பளிக் கதரும் உற்பத்தியாயிற்று. கையால் கம்பளி நூற்கும் தொழில் காஷ்மீரத்தில் இருந்து வந்ததால் அங்கு இதை நூற்பதற்கு விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வட இந்தியாவில் கம்பளித் துணிகள் குளிர்காலத்திற்கு அவசியம். அகில இந்திய நூற்போர் சங்கம், தன்னிடம் துணி வாங்க வருவோருக்கு எல்லா கிளைகளிலும் கம்பளித் துணிகளையும் விற்றது. இந்த ரக கதர் உற்பத்தியிலும் அதிக அபிவிருத்திகள் செய்யப் பட்டதோடு கம்பளித் துணிகளும் ஏராளமாக விற்பனை யாயின.

பருத்தித் துணி மாதிரியல்ல, கையினுல் நூற்றுக் கையினுல் நெய்த கம்பளித் துணி. ரகத்திலும் விலையிலும் மில்லில் தயாரான கம்பளித் துணியோடு சரியானபடி அது போட்டி போட முடியும். ஆகையால் இதற்கு கிராக்கி எப்பொழுதுமிருந்ததோடு பருத்திக் கதர் விற்பனை போல இதற்கு எந்த விதமான விசேஷ சிரமமும் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமுமில்லை.

தீண்டாமை ஒழிப்பும் முக்கியம் என்று மகாத்மா வற் புறுத்தி வந்ததால் இதில் பல காங்கிரஸ்காரர்கள் தீவிரமாக வேலை செய்தார்கள். சேரிகளுக்குப் போய் அவர்களுடைய வேலைகளில் அவர்களுக்கு உதவி செய்வது, தங்களுடைய சொந்த வாழ்க்கையில் தீண்டாமையை அனுசரிக்க வேண் டாம் என்று எல்லோரையும் கேட்டுக் கொள்வது, கோயில் கள் பொன்றவைகளில் அவர்களை அனுமதிக்கும்படிச் செய்ய முயற்சி செய்வது ஆகியவைகளைப் போன்ற சில வேலைகளிலும் காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்டிருந்தார்கள் அதற்கு ஏற்ற சூழ்நிலை உண்டாக்கப் பட்ட போதிலும் பின்னுடி ஏற்பட்ட அளவு அபிவிருத்தியை ஹரிஜன முன் னேற்ற வேலை திட்டம் அப்பொழுது அடைந்துவிடவில்லை. தாமே மேற்கொள்ளாத எந்த வேலையையும் செய்யும் படி மற்றவர்களிடம் மகாத்மா கூறுவதில்லை. உதாரணமாக காந்திஜீ சபர்மதி ஆசிரமத்தில் ஒரு ஹரிஜனப் பெண்ணை தமக்கு மகளாக சுவீகாரம் செய்து கொண்டார். அப்பெண் பின்னுல் கல்யாணம் செய்து கொள்ளும் வரையில், மகாத்மா காந்தியோடும் கஸ்தூரிபாயுடனும் அங்கேயே

வாழ்ந்து அங்கேயே வளர்ந்தாள். மகாத்மாவுக்கு நான்கு மகன்கள்; மகள் இல்லை. ஆகையால் அப்பெண் ஒரு மகளின் ஸ்தானத்தை வகித்து வந்தாள்.

தீண்டாமை நோய் ஹிந்து சமூகத்தை எந்தக்காலத்தில் பற்றியது என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் பல இடங்களில் பல வகைகளில் அது தன்னுடைய கோர சொரூபத்தைக் காட்டி வந்தது. மற்ற சாதியாருடன் சாப்பிடக் கூடாது, அவர்களுடன் மணத் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்றிருக்கும் தடையும் அதன் கோரங்களில் ஒன்றேயாகும். இது தீண்டாமையில் அவ்வளவு கொடிய கோரமல்ல எனினும், இது மெள்ள மறைந்து கொண்டு வந்தாலும், இன்னும் கூட இது இருந்து வருகிறது. ஆதியில் தோன்றியதான பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வர்ணங்களுடன், இதில் ஒவ்வொன்றிலும் பல கிளைகள், அந்த கிளைகளுக்கு உப கிளைகள் ஆகியவைகளையெல்லாம் கொண்டதே ஹிந்து சமூகம். நாட்டில் ஒன்றுக்கொன்று அதிகதூரமிருப்பதாலும் வேறு காரணங்களைக் கொண்டும், ஒரு ஜாதியின் பிரிவிலும் உபப் பிரிவிலும் கூட ஒன்றுக்கொன்று இந்த சமூக உறவுகள் வெறுக்கப் படுகின்றன. ஆகையால் இரு வர்ணத்தாரிடையே இத்தகைய உறவுகள் சாத்தியமில்லாதிருந்ததில் ஆச்சரியமில்லை. பிராமணர்கும் க்ஷத்திரியரும், வைசியரும், சூத்திரர்களுடன் சேர்வது என்பது முடியாததாயிற்று, சூத்திரர்களுக்குள்ளேயும் பல ஜாதிகள் தோன்றியதால் அவர்களுக்குள்ளும் சமூக உறவு அசாத்தியமாய்ற்று. சேர்ந்து சாப்பிடுவது, கல்யாண உறவு கொள்ளுவது என்பது போன்ற சமூக உறவுகள் சில சாதியாருக்குள் தடையாக இருந்தாலும் இவர்கள் ஒருவருக்கொருவர் தொட்டுக் கொள்ளுவதற்கு எந்த தடையும் கிடையாது. சமைத்த சாதத்தை சில சாதியார் தொட்டு விட்டால் சாப்பிடக் கூடாது என்றிருந்த போதிலும் இவர்கள் தொட்ட நீரைக் குடிக்கலாம் என்றிருந்தது. ஒரு சாதியார் தொட்ட சாப்பாட்டைச் சாப்பிடக்கூடாது என்பதிலும், சாப்பாட்டில் இன்னின்ன வகையைப் பிற சாதியினர் தொட்டு விடக் கூடாது என்பதிலும் வித்தியாசம் அனுசரிக்கப் படு

கிறது. இந்த நான்கு வர்ணத்தாரல்லாமல் ஐந்தாவது வர்ணத்தார் இருக்கிறார்கள்; அவர்களை உடலால் தீண்டி விட்டாலே சுத்தமாவதற்காக உடனே தலை முழுக வேண்டும்! உடலுக்கு உடல் தீண்டா விட்டாலும், ஒரு கோலின் மூலமோ அல்லது ஒரு நீண்ட கயிற்றினாலோ அந்த உடலுக்கும் இதற்கும் தொடர்பு வந்தாலும் அப்பொழுதும் தீட்டுப்பட்டுவிடும் என்ற அளவுக்குக்கூட சில சமயங்களில் இத் தீண்டாமை உருவெடுத்தது. எனவே தீண்டாதார் பொதுத் தெருக்களில் கூட நடக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டார்கள். ஆகையால் அவர்கள் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை என்பதைச் சொல்லவே வேண்டியதில்லை.

இந்தவித தீவிரத் தீண்டாமையை ஒழித்துக் கட்ட மகாத்மா முற்பட்டார். ஏனெனில் இதை ஒழித்து விட்டால், அவ்வளவு கடுமையானதல்லாத அதனுடைய மற்ற அம்சங்களெல்லாம் சக்தியை இழந்து, நாளா வட்டத்தில் மறைந்து விடும் என்று அவர் கருதினார். மகாத்மா அதிக காலம் வெளி நாடுகளில் இருந்திருக்கிறார் ஆகையால் பிற சாதிக்காரர்கள் தொட்ட உணவை சாப்பிடக் கூடாது என்பது போன்ற தடைகளையெல்லாம் அவர் அனுசரிக்காமலிருந்தது இயற்கையே, ஆனால் இந் நாட்டவருக்கு, அதிலும் முக்கியமாக கிராமத்திலிருப்பவர்களுக்கு இது புதிதானது. நான் முன்னால் சொல்லியிருப்பதைப் போல மகாத்மாவுடன் பழகியவர்களெல்லோருமே இந்தத் தடைகளையெல்லாம் பார்ப்பதில்லை. சம்பாரனில் மகாத்மாவுடன் வேலை செய்து வந்த நாங்கள், அதற்கு முன்னால் இத் தடைகளையெல்லாம் அனுசரித்து வந்தவர்களே. சொந்த சாதியாரைத் தவிர மற்ற சாதியாருடன் சேர்ந்திருந்து சாப்பிடுவதில்லை என்றிருந்தவர்களே. என்றாலும் அவைகளையெல்லாம் கைவிட்டதோடு எல்லாருடனும் சேர்ந்து சாப்பிட்டோம், உயர்ந்த சாதியார் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களுடனேயன்றி, எந்தச் சாதியார் தண்ணீரைத் தொட்டு விட்டாலும் அதைக் குடிக்கக் கூடாது என்றிருந்ததோ அந்த சாதியாரோடும் சேர்ந்து சாப்பிட்டோம். நாங்கள் பகிரங்கமாக, எந்த ரகசியமுமில்லாமல் இதைச் செய்ததுதான் இதில் முக்கியமானது. தார

கிராமங்களிலிருந்து வரும் கிராம வாசிகளெல்லாம் எங்களைச் சுற்றி இருப்பார்கள்; அவர்கள் முன்னால் நாங்கள் ஒன்றாயிருந்து சாப்பிட்டோம். இது ஒரு வேளை சிலருக்குப் பிடிக்காமலுமிருந்திருக்கலாம். ஆனால் எவரும் ஆட்சேபித்ததில்லை; நாங்கள் செய்தது தவறு என்று யாரும் சொல்ல நாங்கள் கேட்டதுமில்லை. சாதி வேறுபாட்டை பாவிக்காத ஒரு சன்னியாசிக் கூட்டம் என்று ஒரு கால் அவர்கள் எங்களை எண்ணியிருக்கலாம்.

கயா காங்கிரஸுக்கு வேலை செய்ய வந்த தொண்டர்களில் பெரும்பாலானவர்கள் கிராமங்களிலிருந்து வந்தவர்கள். அவர்கள் சாதித் தடைகளையெல்லாம் தங்களுடன் கொண்டு வந்திருந்தனர். எனவே ஆரம்பத்தில் அவர்களுக்கு பிராமண சமையற்காரர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர். தொண்டர்களோ பெருந்தொகையினர். ஆகையால் பிராமணர்கள் சமைப்பிலும் அவர்களே தொண்டர்களுக்குப் பரிமாறுவது என்பது முடியவில்லை. இரண்டொரு வேளை சாப்பாட்டுக்குப் பிறகு, சமையற்காரர்களே பரிமாறுவது என்பது முடியாத காரியம் என்பதைத் தொண்டர்கள் உணர்ந்ததால் தாங்களே ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள ஆரம்பித்து விட்டனர். இவ்விதம் இரண்டொரு வேளையே பிராமணர் பரிமாறினார்கள். மற்ற நாளெல்லாம் மற்ற சாதிகளைச் சேர்ந்த தொண்டர்கள் இதில் உதவினர். இரண்டு மூன்று நாட்களில் எல்லா வித்தியாசங்களும் மறைந்துவிட்டதோடு சாதி வித்தியாசம் பாராமல் எல்லாத் தொண்டர்களும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டார்கள். அதன் பிறகு எல்லா காங்கிரஸ் கூட்டங்களிலும், அவை பீகாரில் நடக்கும்போது, பல சாதியாருக்கும் தனித்தனி சாப்பாடு ஏற்பாடு செய்வது என்பதே கிடையாது.

தீண்டாமையை போக்கும் வேலையை மகாத்மா மேற்கொண்டதும், எல்லா சாதியைச் சேர்ந்தவர்களும் ஒன்றாக உட்காருவதோடு காங்கிரஸ் மகாநாடுகளில், ஒன்றாகவும் சாப்பிட்டனர். எனவே கொஞ்சகாலத்திற்குள்ளேயே சாப்பிடுவது சம்பந்தமாக இருந்த சாதித்தடைகளெல்லாம் காங்கிரஸ்காரர்களைப் பொறுத்தவரையில் போய்விட்டன.

இதைக்கொண்டு தீண்டாமையும் நீங்கிவிட்டது என்று எண்ணிவிடக்கூடாது. அதன் அடிப்படையில் அசைப்புக் கண்டுவிட்டது. அதனுடைய தளைகள் மேலும் மேலும் தகர்க்கப்படலாயின; அது முதல் அவைகள் தகர்ந்து கொண்டே வந்துள்ளன.

திருமண விஷயங்களில் பல சாதியார்க்கிடையேயு மிருந்த சமூக பழக்க வழக்கங்களில் மகாத்மா ஒரு மாறுதலை உண்டாக்கினார். பிறப்பில் அவர் வைசியர், ஆனால் அவருடைய மகன் தேவதாஸ்காந்தி, உயர்சாதிப் பிராமணரான ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் மகளான ஸ்ரீமதி லட்சுமியை திருமணம் செய்துகொண்டார். இத்தகைய கலப்பு சாதித் திருமணங்கள் பல நடந்தன. பிறகு மகாத்மா, மற்ற சாதிக்காரர்கள் தீண்டாதாரரான ஹரிஜனங்களுடன் கல்யாண சம்பந்தங்கள் வைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார். தம்பதிகளில் ஒருவர் ஹரிஜனாக இருக்கும் திருமணங்களுக்கு மாத்திரமே தாம் செல்லுவது என்பதை ஒரு வழக்கமாகவும் வைத்துக் கொண்டார். சாதாரணமாக கல்யாண வைபவங்களுக்கு அவர் போவது கிடையாது. என்றாலும் ஆசிரமத்தைச் சேர்ந்த ஒருவருக்கோ அல்லது ஆசிரமவாசியின் உற வினருக்கோ மணம் நடந்தால் அப்பொழுது போவார். இத்தகைய மணங்களில் எல்லா சாதித்தடைகளும் நீக்கப் பட்டிருக்கும்; சடங்குகளிலும் அநேக சீர்திருத்தங்க ளிருக்கும்.

நமது சமூகத்தில் கல்யாணங்களில் மிகவும் ஆடம் பரங்கள் செய்யப்படுவதோடு செலவும் ஏராளமாகச் செய்யப்படுகிறது. விவாகச் சடங்கின்போது மந்திரம் சொல்லப்படுகிறது; அது சம்ஸ்கிருதத்திலிருக்கும்; சாதா ரணமாக மாப்பிள்ளைக்கோ மணப் பெண்ணுக்கோ அந்த மந்திரம் இன்னதென்பதே புரியாது. என்றாலும் சடங்கை நடத்தும் பிராமணப் புரோகிதர் சொல்லுவதைத் தொடர்ந்து மந்திரங்களை மணமக்களும் சொல்லவேண்டும்! மகாத்மாகாந்தி, மந்திரத்தின் அனுவசியப் பகுதிகளை யெல்லாம் நீக்கிவிட்டு மணமக்களுக்குப் புரியும் சொந்த பாஷையில் அவற்றை மொழி பெயர்த்துக்கூறும்படி செய்த

தோடு சடங்குகளை அதிகமாகவும் குறைத்து விட்டார். ஊர்வலம் ஆடம்பரம், விருந்துகள் எல்லாம் போய் விட்டன எந்தச் செலவுமில்லாமலேயே சில நிமிஷங்களில் விவாகச் சடங்கு முடிந்துவிடும். பழைய கல்யாண முறையில் அநேக பழக்க வழக்கங்கள் இன்னும் இருந்து வந்தாலும் அதில் எத்தனையோ சீர்திருத்தங்கள் வந்து விட்டன என்பதில் சந்தேகமே இல்லை. இவ்விதம் சாதிகள் சம்பந்தமாகவும் சமூகச் சடங்குகளிலும் மகாத்மா செய்த புரட்சிகரமான மாறுதல்களால் எவ்வளவோ நன்மைகளுண்டாயின. என்றாலும் அவை எவ்வளவு தூரம் பரவி யிருக்க வேண்டுமோ அந்த அளவுக்குப் பரவி விடவில்லை.

விதவைகளுக்கு திரும்ப திருமணம் செய்வது பற்றி மகாத்மாவின் கருத்து என்ன என்பது அவ்வளவாகத் தெரியவில்லை, இதைப்பற்றி அபிப்பிராயம் கூற வேண்டிய சந்தர்ப்பம் அவருக்கு ஏற்படாததே ஒருவேளை இதற்குக் காரணமாயிருக்கலாம், பீகாரில் அவருடைய ஒரு சுற்றுப் பிரயாணத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தில் அவருடைய கருத்து மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் தெரிந்தது. அர்ராடவுனுக்கு அருகாமையில் ஜயினர்களால் நடத்தப் படும் விதவைகள் விடுதியொன்றுண்டு. ஜயின சமூக விதவைகள் அங்கு பராமரிக்கப்படுவதோடு அவர்களுக்கு மற்றவர்களுடன் கல்வியும் போதிக்கிறார்கள். மகாத்மா காந்தி போகுமிடங்களிலெல்லாம், அங்குள்ள பொது ஸ்தாபனங்களுக்கெல்லாம் வருமாறு அவர் அழைக்கப் படுவது வழக்கம். அர்ராவிலுள்ள எல்லா ஸ்தாபனங் களுக்கும் அவர் போகமுடியாவிட்டாலும் விதவைகள் விடுதிக்குச் சென்றார். பத்து அல்லது பதினொரு வயதுள்ள ஒரு குழந்தை விதவை அவரை வணங்க முன்னால் வந்தது. "நீயும் விதவைதானா?" என்று மகாத்மா அக்குழந்தையைக் கேட்டார், " ஆம் " என்று அவள் சொன்னதும், அந்த நிலையிலேயே அவள் வாழ்நாளை யெல்லாம் கழிக்க வேண்டும் என்றதும், மகாத்மாவின் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வழிந்தது. பிறகு அவர் எழுதிய ஒரு கட்டுரையில், விதவைகள் வாழ்நாளெல்லாம் விதவை களாகவே இருக்கும்படி கட்டாயப்படுத்தப்படுவது நியாயமே அல்ல என்றும், திரும்ப மணம் செய்துகொள்ள

விரும்புகிறவர்கள் அப்படிச் செய்துகொள்ள அனுமதித்து விடவேண்டும் என்றும் கூறினர். அதற்குப் பின்னல், இந்த சீர்திருத்தத்தை அவர் அதிகமாக வற்புறுத்தியதோடு, மனைவியை இழந்த ஒருவர் திரும்பக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினல் அவர் ஒரு விதவையையே மணந்துகொள்ள வேண்டும் என்றும் சொன்னர். விதவா விவாகம் இப்பொழுது சர்வ சாதாரணமாகிவிடாத போதிலும் முன்னைவிருந்ததைப்போல் இது அவ்வளவு தூரம் வெறுக்கப்படுவதில்லை என்பது நிச்சயம்.

படுதாமுறை (கோஷா முறை) எந்த ஆபாசமான அளவுக்கு அனுசரிக்கப்படுகிறது என்பதை மகாத்மா பீகாரில் நேரில் கண்டார். படுதா முறை குஜராத்திலும் தெற்கிலும்கூட இருக்கிறது; ஆனல் அங்கெல்லாம் இவ்வளவு கடுமையாகக் கையாளப்படுவதில்லை. இந் நாட்டில் வேறு எந்தப் பகுதியிலும் பீகாரைப்போல இது அவ்வளவு கடுமையாக இல்லை என்று நினைக்கிறேன். கஸ்தூரிபாய் சம்பரானுக்கு வந்த பிறகு மக்களுக்குக் கொஞ்சம் கண் திறந்தது. பிறகு பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவைகளில் பல குஜராத்தி, மராத்திப் பெண்கள், முக்கியமாகப் பெண்களிடையே வேலை செய்ய ஆரம்பித்ததும், அவர்களுக்கு அதிக விழிப்பு ஏற்பட்டது. மேலும் கயாவில் காங்கிரஸ் மகாநாடு நடந்தபோது, மற்றவர்கள் தங்களைப் பார்க்க முடியாமல் தாங்கள் மாத்திரம் எல்லோரையும் பார்த்து, எல்லா நடவடிக்கைகளையும் கவனிக்கும் வகையில் பெண்களுக்கென்று மகாநாட்டுப்பந்தலில் தனி யிடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகளுடன் பல பெண்களும் வந்திருந்தார்கள். மகாநாட்டின் முதல் நாளன்று அந்தப் பெண்களும் உள்ளூர் பெண்களுடன் அந்தத் தனி இடத்தி லேயே உட்கார்ந்திருந்தனர். படுதாமுறையை அனுசரிக்க விரும்பாத பெண்களுக்கென்றும் தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. மிகச் சில பெண்கள், அதுவும் தெற்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள், அதுவும் முதல் நாள் மாத்திரம் அந்த இடத்தில் தனியாக உட்கார்ந்திருந் தார்கள். பிறகு கோஷா முறையை அனுஷ்டித்துவந்த

பெண்களில் தைரியமான சிலரும் அங்குவந்து உட்கார ஆரம்பித்து விட்டார்கள். இரண்டாவது, மூன்ருவது நாட்களிலோ கோஷாக்களுக்கு என்று அடைப்பு வைக்கப்பட்டிருந்த இடம் காலியாக இருந்தது; திறப்பாக வைக்கப்பட்டிருந்த தனிஇடத்திலேயே பெண்கள் கூட்டம் நிறைந்திருந்தது.

தங்களுக்குத் தெரிந்தவர்களிடத்திலும், தங்கள் உறவினருக்குத்தெரிந்தவர்களிடத்திலும், தாங்கள் இன்னர் என்பதைத்தெரிந்துகொள்ளுவார்கள் என்று உத்தேசிக்கக்கூடியவர்களிடமும்கூட, பீகாரில் பெண்கள் கோஷா முறையை அனுசரிப்பதைப் பார்த்திருக்கிறேன். இதனுலேயே பெருங் கூட்டங்களில் தாங்கள் இன்னரென்பதை வெளியார் யாரும் அடையாளம் கண்டுகொள்ள முடியாது என்ற எண்ணத்தில் பெரிய விழாக்களுக்கும் விழாக்காலங்களில் கங்கையில் முழுகுவதற்கும் எல்லா குடும்பங்களையும் சேர்ந்த பெண்கள் போகிருர்கள். இதனுலேயே கயா காங்கிரஸின் முதல் நாளில், பெண்களெல்லோரும் தனியாக அடைப்புடனிருந்த இடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். ஏராளமான பெண்கள் வந்திருந்தார்கள். இதில் தாங்கள் இன்னரென்று அடையாளம் கண்டுகொள்ள முடியாது என்று கண்டு கொண்டதும் மறுநாள் எந்தவித தயக்கமுமில்லாமல் திறப்பான தனியிடத்திற்குப் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

ஆண்களும் வரும் பொதுக் கூட்டங்களுக்குத் தாங்களும் வர விரும்பாததினுலோ அல்லது ஒருவேளை தனியான கூட்டமானுல் மகாத்மாவைப் பார்ப்பதற்கு தங்களுக்கு சௌகரியமாயிருக்கும் என்று அவர்கள் கருதியதினுலோ, மகாத்மா போகுமிடங்களிளெல்லாம் பெண்களுக்கென்று தனிக் கூட்டங்களும் நடப்பதுண்டு. அவர் முன்னிலேயில் அவர்கள் கோஷா முறையை அனுசரிப்பதில்லே. காங்கிரஸ் வேலேயாகச் சென்ருலும் அல்லது அகில இந்திய நூற் போர் சங்கத்திற்கு போனுலும் அல்லது அகில இந்திய நூற்போர் சங்கத்திற்கு நிதி திரட்டுவதற்காக போனுலும், மகாத்மா காந்தி போகுமிடங்களிலெல்லாம் பெண்களுக்கு என்று தனியான

கூட்டங்கள் நடப்பது வழக்கமாகி விட்டது. நிதிக்கு தங்கள் பங்காக பெண்கள் மகாத்மாவிடம் தங்களுடைய நகைகளைக்கொடுப்பார்கள். இவ்விதம் மகாத்மா ஏராள மான நகைகளைச் சேகரித்து அவற்றை விற்றுப் பணமாக்கி விடுவார்.

படுதா முறையை ஒழிப்பதற்காக பாபு பிராஜ் கிஷோர் பிரஸாதின் தலைமையில் பீகாரில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. இதற்கென்று இம் மகாநாடு ஆரம் பித்த ஒரு ஸ்தாபனம் கொஞ்சகாலம் நடந்து வந்தது. இப்பொழுது பெண்கள் பொது வைபவங்களில் அதிக மாகக் கலந்துகொள்ளுகின்றார்களென்றாலும், பம்பாயிலோ மகாராஷ்டிரத்திலோ அல்லது தென் இந்தியப் பகுதி யிலோ இருக்கும் அளவுக்கு கோஷா முறை பீகாரில் மறைந்திருந்தது என்று சொல்ல முடியாது. அதனுடைய கட்டுத் திட்டங்கள் முன்னாலிருந்த அளவுக்கு இப் பொழுது அவ்வளவு கடுமையாக இல்லை; யாராவது ஒரு பெண் தைரியமாக கோஷா முறையைக் கைவிட முன் வந்தால் அவளை வெறுப்போடு யாரும் பார்ப்பதுமில்லை என்பது உண்மை.

சபர்மதி ஆசிரமத்தில் வசித்த பெண்கள், ஆண்களைப் போலவே சகல சுதந்திரங்களுடனிருந்தார்கள். ஆசிரமம் சம்பந்தமான ஏதாவது ஒரு காரியத்தில் அபிப்பிராயம் கேட்கப்பட்டால் ஆண்களைப் போலவே பெண்களும் தங்கள் அபிப்பிராயங்களை சுதந்திரமாகக் கூறுவார்கள். ஆண்கள் செய்யும் வேலைகளைப் பெண்களும் செய்வார்கள். அந்த நாட்களில் முக்கியமாக இருந்த வேலை நூற்பதே யாகையால் அதில் பெண்களும் முழுப் பங்கு கொண்டிருந் தனர். இந்த வகையிலேயே மகாத்மா, பெண்களிடையே மகத்தான விழிப்பை உண்டாக்கினார். பின்னால் சத்தி யாக்கிரக அவசியம் ஏற்பட்டபோது, ஆண்களைப் போலவே பெண்களும் அச்சமின்றி அதில் கலந்துகொண் டார்கள். உதாரணமாக, பார்தோலி சத்தியாக்கிரகத்தில் பெண்கள் சிறப்பான பங்கு கொண்டதோடு காரியங்களை செய்து முடிப்பதில் தங்களுக்குள்ள திறமையையும் நிரூபித்தார்கள். பொறுமை, சகிப்புத் தன்மை ஆகியவை பெண்களுக்கு இருக்க வேண்டிய முக்கியமான குணங்க

ளாக இந்தியாவில் கருதப்படுகிறது. ஆகையால் சத்தியாக்கிரகத்தினல் ஏற்பட்ட துன்பங்களைச் சகித்துக் கொள்வது அவர்களுக்கு எளிதாகவும் அதிக இயற்கையாகவுமிருந்தது. 1930-ல் மகாத்மா காந்தி நாடு முழுவதிலும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தபோது, மதுவிலக்கு சத்தியாக்கிரகத்தைச் செய்ய பெண்களையே முக்கியமாக அவர் அழைத்தார். அது வேறு விதமான வேலை; ஆபத்தில்லாததுமல்ல. ஏனெனில் குடிகாரர்களை அவர்கள் மறியல் செய்யவேண்டியிருந்தது. குடிகாரர்கள் கொடியவர்கள்; செய்வது சரியா, இல்லையா என்பதை உணரும் சக்தியற்றவர்கள், எங்கே, எப்பொழுது அவர்கள் அத்துமீறிப்போய் விடுவார்களென்பதும் தெரியாது. என்ருலும் அநேக பெண்கள் திறமையாகவும் தீரத்தோடும் தங்கள் வேலைகளைச் செய்து முடித்தார்கள். இதன் பலனுக அநேக கள்ளுக்கடைகள் மூடப்பட்டுவிட்டன; மற்றவைகளில் வியாபாரம் அதிகமாகக் குறைந்து விட்டது. இக் கெட்ட பழக்கத்திலிருந்து எத்தனை பேர் மீண்டனர் என்று சொல்ல முடியாவிட்டாலும் சிலர் குடிப்பதை அடியோடு நிறுத்தி விட்டார்கள்.

1930-ல் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுகிறேன். வெளிநாட்டுத் துணி பகிஷ்காரத்தை வெற்றிகரமானதாக்குவதற்கு அநேக இடங்களில் பெண்களின் உதவியை நாடவேண்டியதாயிற்று. வெளி நாட்டுத் துணி விற்பனேயே நின்று விடும்படிச் செய்ய அப்பொழுது முயற்சி செய்யப்பட்டது. கைவசமிருக்கும் அன்னியத் துணி விற்காதுபோனல் வர்த்தகர்கள் மேற்கொண்டும் அதை இறக்குமதி செய்ய மாட்டார்கள். ஆனல் விற்பனை இருந்துவரும் வரையில் இறக்குமதியை தடுப்பது எளிதல்ல என்பது தெளிவானது. ஆகையால் கடைகளிலிருக்கும் வெளிநாட்டுத் துணிகளையெல்லாம் விற்பனைக்கு வெளியில் வைக்காமல் மூட்டைகட்டி வைத்துவிடும்படி செய்வது அவசியம் என்று கருதப்பட்டது. அப்படிச் செய்வதுவிட பல வியாபாரிகள் சம்மதித்தார்கள்; மூட்டைகள் மீது காங்கிரஸும் முத்திரை வைத்து விட்டது. விற்காது வைக்கப்பட்டு விட்ட இந்த சரக்குகளை வேறு வெளி நாட்டுக்கு ஏற்றுமதி

செய்து அதன் மூலம் அந்த வர்த்தகர்கள் நஷ்டமடையாது செய்வது என்பது நோக்கம்.

வெளி நாட்டுத் துணிகளை விற்று வந்த கடைகள் முன்னால் மறியலை பீகார் பெண்கள் ஆரம்பித்தனர். வாங்க வரும் கண்யமானவர்கள், இப் பெண்களைப் பார்த்து விட்டுத் திரும்பிப் போய் விடுவார்கள். கடைக்காரர்களுக்கும் சங்கடமாயிருக்கும்; இப் பெண்களுக்கு உட்கார ஆசனங்களை அளித்து பொதுவாக நன்ருகவே நடத்தினார்கள். சில தினங்களுக்கெல்லாம் பீகார் கடைகளிலிருந்த அன்னியத் துணிகளெல்லாம் மூட்டை கட்டப் பட்டு அவற்றின் மீது காங்கிரஸ் முத்திரையும் வைக்கப் பட்டு விட்டது.

பெண்களின் உதவியினாலேயே இவ்வளவும் நடந்தது. இதில் சில பெண்கள் கடுமையான கோஷா முறையை அனுசரித்து வந்தவர்கள்; வெளிநாட்டு ஜவுளிக்கடைகளின் முன்னால் மறியல் செய்ததைப் போன்ற வேலை எதிலும் இதற்கு முன்னால் ஈடுபட்டுப் பழக்கமில்லாதவர்கள். அக் கடைகளுக்கு முன்னால் நின்று கொள்ள வேண்டும், வாங்க யாராவது வந்தால் அவர்களைக் கும்பிட்டு,வெளிநாட்டுத் துணியை வாங்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள வேண்டும்; இவ்விதம் நாட்டின் சுதந்திரப் போராட்டத் திற்கு உதவி செய்து காந்திஜி விரும்புவதை நிறைவேற்றி வைக்க வேண்டும்; அவர்களுக்குச் சொல்லப்பட்டதெல் லாம் இவ்வளவுதான். நான் மேலே சொன்னது போல, மறியல் காரர்களைக் கண்டதுமே துணி வாங்க வருபவர் களில் பலர் போய் விடுவார்கள். சிலர், கேட்டுக் கொள்ளப் பட்டதும் திரும்புவார்கள்; மற்றுஞ் சிலர் வாங்குவதில் பிடிவாதமா யிருப்பார்கள். கடைக்காரர்களும் அதிக உதவியா யிருந்தார்கள். இப்பெண்கள் மறியல் செய்து கொண்டிருக்கும் வரையில் தங்களுக்கு விற்பனை யிருக் காது, தங்களுக்குக் கெட்ட பெயரும் வரும், ஆகையால் கடைகளைத் திறந்து வைத்திருந்து பயனில்லை என்பதை கடைக்காரர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

ஒரு நாள் ஒரு பெண் ஒரு கடையில் மறியல் செய்து கொண்டிருந்தாள். இப்பெண் இதற்கு முன்னால் தன் வீட்டை விட்டு வெளியே போனதேயில்லை. ஆகையால்,

தன்னுடைய வீடு எவ்வளவு தூரத்திலிருக்கிறது, கடைக்கு எந்தப் பக்கத்தில் இருக்கிறது என்பது அவளுக்குத் தெரியாது. மறியல் செய்ய விரும்பும் பெண்களை அவர்கள் வீடுகளிலிருந்து காங்கிரஸ் ஊழியர்கள் அழைத்து வந்து, அவரவர்கள் மறியல் செய்ய வேண்டிய கடைகளின் முன்னுல் அவர்களை விட்டு விடுவார்கள். மாலையில் திரும்பவும் வந்து அவர்களை அவரவர்களுடைய வீடுகளுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள். அந்த குறிப்பிட்ட நாளில் இப்பெண்ணை அவளுடைய வீட்டுக்குத் திரும்பவும் கொண்டு போய்விட காங்கிரஸ் ஊழியர் மறந்து விட்டார். எனவே இப்பெண், கடை மூடிய பிறகும் அக்கடை முன்னுலே நின்று கொண்டிருந்தாள். மறியல் செய்து வந்த தன் மனைவியை ஒரு கடைக்கு முன்னுலிருந்து வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்த ஒரு கனவான், இப்பெண் மூடிய கடைக்கு முன்னுல் நின்றதை தற்செயலாகப் பார்த்தார். ஏன் இன்னும் அப்பெண் நின்று கொண்டிருக்கிருள் என்று அவரும் அவர் மனைவியும் ஆச்சரியப்பட்டார்கள். உடனே தங்கள் மோட்டாரை நிறுத்தி இப்பெண்ணை விசாரித்தார்கள். தன்னை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போக இன்னும் யாரும் வரவில்லை என்று அவள் சொன்னுள். ஏதோ தவறு நடந்து விட்டது என்பதை உணர்ந்த அவர்கள், அப்பெண்ணை தங்கள் மோட்டாரில் ஏற்றிக் கொண்டனர். தன் வீடு எங்கிருக்கிறது என்பது அந்தப் பெண்ணுக்கே தெரியாததால் அவர்கள் பாடு திண்டாட்டமாகி விட்டது. அவளை எங்கே கொண்டு போவது என்று தெரியாமல் திகைத்தார்கள். இவர்கள் அவளை அழைத்துச் சென்ற ஒவ்வொரு தெருவும் தன் வீடிருக்கும் தெருவாகவே அப்பெண்ணுக்குத் தோன்றியது. ஆனுல் ஒரு வீட்டின் முன்னுல் மோட்டாரை நிறுத்தும் போதெல்லாம் அது தன் வீடல்ல என்பாள். கணவன் பெயரைச் சொல்லாதது பீகார் பெண்களுக்கு வழக்கம். ஆகையால் இப்பெண் தன் கணவன் பெயரையும் அவர்களிடம் சொல்லவில்லை. என்ருலும் கடைசியாக அப்பெயரை அவள் ஒரு காகிதத்தில் எழுதிக் காட்டியதின் பேரில் அவள் வீட்டை கண்டு பிடித்து, அவளை அங்கே சேர்ப்பித்தார்கள்.

இவ்விதம் பெரிய குடும்பத்துப் பெண்களும் இந்த மறியலில் ஈடுபட்டதால் வெகு சீக்கிரத்தில் லட்சியம் நிறைவேறி விட்டது. வெளி நாட்டுத் துணி விற்பனை நின்று போனதும் அதன் இறக்குமதியும் நின்றது. சாதாரணமாக இந்திய வர்த்தகர்கள் அன்னியத் துணி இறக்குமதிக்காக வெளிநாட்டுக் கம்பெனிகளுடன் செய்து கொண்டிருந்த ஒப்பந்தங்களும், ஆர்டர்களும் அந்த ஆண்டு நிறைவேற்றப்படவில்லை. இதன் விளைவுகள் இந்தியாவிலேயேயல்லாமல், வெளி நாடுகளிலும், முக்கியமாக இங்கிலாந்தில் நன்ருகத் தெரிந்தன.

1925 முதல் 1928 வரை மூன்று ஆண்டுகளும் அதிக முக்கியமான ஆண்டுகளாகும். ஏனெனில் அக்காலத்தில் மகாத்மா தமது பெரிய சக்திகளை யெல்லாம் நிர்மாண வேலைத் திட்டத்தில் உபயோகித்தார் அநேகமாக ராஜீய காரியங்களிலிருந்து விலகியே இருந்தார். காங்கிரஸின் சார்பில் சுயராஜ்யக் கட்சி ராஜீய வேலைகளை நடத்தி வந்தது. என்ருலும் காங்கிரஸ் மகா நாடுகளுக்கும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டங்களுக்கும் அவர் வருவார்; ராஜீய விஷயங்களில் தமது கருத்தைத் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்று நினைக்கும்போது தெரிவிப்பார். ஆனல் முடிவுக்கு வருவதை யெல்லாம் சுயராஜ்யக் கட்சியிடமே விட்டு விட்டார். ஆயினும் முக்கியமானவைகளிலெல்லாம் பண்டித மோதிலால் நேரு மகாத்மாவைக் கலந்தாலோசிப்பார். இவ்விதம் இரு கட்சியினரும் தங்களுடைய வேலைத் திட்டங்களை யோக்கியமாகச் செய்து கொண்டு போனதால், சட்டசபைத் தேர்தலுக்குப் போட்டியிடுவதா என்ற விவகாரத்தில் ஏற்பட்ட மனக்கசப்பு நாளா வட்டத்தில் மறைந்தது.

1926-ல் சட்டசபைத் தேர்தல்கள் நடந்தன. ஏராளமான ஸ்தானங்களை சுயராஜ்யக் கட்சி இத்தேர்தலில் கைப்பற்றியதால் மேற்கொண்டும் சரியானபடி காரியங்களைச் செய்ய அதனல் முடிந்தது. என்ருலும் கட்சிக்குள் பிளவு மாத்திரம் பலமாகவே இருந்தது.

பத்து வருஷங்களுக்குப் பிறகு, அரசியல் எவ்விதம் நடந்திருக்கிறது என்பதைப் பற்றி விசாரித்து, மேற்கொண்டும் சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டு வருவ

தற்கு பார்லிமெண்டு ஒரு கமிஷனை நியமிக்க வேண்டும் என்று 1920 ம் வருட அரசியலில் விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் மத்திய அஸெம்பிளியில் சுயராஜ்யக் கட்சியினர் நிறைவேற்றிய ஒரு முக்கியமான தீர்மானமோ, மேற்கொண்டும் அரசியலில் சீர்திருத்தம் கொண்டு வருவதை பத்து வருஷங்களுக்கு ஒத்திப்போட்டுவிடாமலும், அக்காலத்திற்குப் பிறகு கமிஷனை நியமித்து விசாரிப்பது என்பதில்லாமலும், இரு தரப்பாரும் ஒத்துக்கொள்ளக் கூடிய ஒரு அரசியலை உருவாக்குவதற்காக தங்கள் பிரதிநிதிகளும் இந்தியப் பிரதிநிதிகளுமடங்கிய சமரச மகாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டும் என்று கோரியது. 1927-ல் டாக்டர் அன்சாரியின் தலைமையில் சென்னையில் நடந்த காங்கிரஸ் மகாநாடு, ஒரு கமிட்டியை நியமித்து, வேறு அபிப்பிராயங்கொண்டிருந்தவர்களுடனும், மற்ற கட்சிகளுடனும் கலந்தாலோசித்து ஒரு நகல் அரசியலைத் தயாரிக்கும் வேலையை அதனிடம் ஒப்படைத்தது. பண்டித மோதிலால் நேருவின் தலைமையிலிருந்த இந்தக் கமிட்டியே, மற்ற கட்சிகளின் பிரதிநிதிகளுடன் சேர்ந்து, நேரு கமிட்டி அறிக்கை என்று சொல்லப்படும் நகல் அரசியல் திட்டத்தைப் பிறகு தயாரித்தது. இதற்கு மத்தியில் பிரிட்டிஷ் சர்க்கார், அரசியலை அனுசரித்து, ஸர் ஜான் ஸைமனின் தலைமையில் ஒரு கமிஷனை நியமித்தது. இக்கமிஷனில் ஒரு இந்தியர்கூட நியமிக்கப்படாததினால், எல்லாத் தரப்பட்ட அபிப்பிராயமுள்ளவர்களிடையேயும் பலமான எதிர்ப்பு எழுந்தது. இவர்களெல்லாம் சர்க்காரின் இச் செய்கையைக் கண்டித்ததோடு தங்களுடைய எதிர்ப்புக்கு அறிகுறியாக ஏதாவது நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்றும் எண்ணினர்.

மிதவாதக் கட்சி மெம்பர்கள், 1920-ல் காங்கிரஸிலிருந்து வெளியேறிப்போய் அந்த ஆண்டு அமுலுக்கு வந்த அரசியலின்படி மாகாணங்களில் மந்திரி சபைகளையும் அமைத்தார்கள். அப்பொழுது தேர்தல்களில் காங்கிரஸ் கலந்து கொள்ளாததால் அவர்கள் சிரமமில்லாது சட்ட சபைகளுக்குள் போய்விட்டார்கள். 1923-லும் அநேகமாக அவர்களுக்கு இது சுலபமாகவே இருந்தது. வங்காளத்தில் ஸ்ரீ. சுரேந்திரநாத பானர்ஜி, ஐக்கிய மாகாணத்தில் ஸ்ரீ. சி. ஒய். சிந்தாமணி போன்ற அக்கட்சியின் முக்கிய

மான தலைவர்கள் மந்திரிகளானார்கள், ஆனால் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் சந்தோஷகரமானதாயில்லை.

ஆரம்பத்தில் ஒத்துழையாமை இயக்கம் உச்ச நிலையிலிருந்தபோது சர்க்கார் இவர்களுக்கு அதிக கௌரவம் கொடுத்துவந்தது. ஆனால் இயக்கம் தளர ஆரம்பித்ததும் இவர்களை அலட்சியம் செய்ய ஆரம்பித்துவிட்டார்களாகையால், மந்திரி சபையிலிருந்து வெளிவந்துவிட வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை என்று ஸ்ரீ சிந்தாமணி உணர்ந்தார். நடந்துவந்த காரியங்களைப்பார்த்து மிதவாதிகளும் அதிருப்தியடைந்தார்கள். சைமன் கமிஷன் மெம்பர்களின் ஜாபிதா வெளியாகி, அதில் ஒரு இந்தியர்கூட சேர்க்கப்படவில்லை என்பது தெரிந்ததும் அந்த அதிருப்தி அதிகரித்துவிட்டது. ஆகையால் 1928-ல், ஒரு பக்கத்தில் நகல் அரசியலைத் தயாரிப்பதில் நேரு கமிட்டி தீவிரமாக இருந்தது; மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அதற்கு ஆதரவளித்து ஒத்துழைத்தும் வந்தனர். மற்றோர் பக்கத்தில், சைமன் கமிஷனில் இந்தியர் எவரையும் சேர்க்காமலிருந்ததின் மூலம் இந்தியாவுக்குச் செய்யப்பட்டிருந்த அவமதிப்பைக் கண்டிப்பதற்காக என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றியும் மக்கள் யோசித்து வந்தனர். பல இடங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடந்தன. இவைகளில் காங்கிரஸ்காரர்களுடன் மிதவாதக் கட்சியினர், கிலாபத் கமிட்டியினர், மற்ற கட்சியார்கள் ஆகிய எல்லோரும் கலந்து கொண்டார்கள். கமிஷன் நியமனத்தை எல்லோரும் சேர்ந்து கண்டித்தார்கள். ஒரே கூட்டத்தில், ஒரே மேடை மீது, காங்கிரஸ்காரர்களும், சர் அலி இமாம் போன்றவர்களும் ஒன்றாகச் சேர்ந்திருப்பதை வெகு காலத்திற்குப் பிறகு அப்பொழுதே நாங்கள் பார்த்தோம்; கமிஷன் நியமனத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேறியது. நிலைமை இவ்விதம் மாறுதலடைந்து, எங்களிடமிருந்து பிரிந்து போய்விட்டவர்கள், பிரிட்டிஷ் சர்க்காருடன் போராடுவதற்காகத் திரும்பவும் எங்களோடு வந்து சேர்ந்திருப்பதைக்கண்டு ஆனந்தமடைந்தோம். என்றாலும் எங்களுடைய ஒத்துழையாமை, சத்தியாக்கிரகத் திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆயினும் எங்கள் திட்டத்தை

காங்கள் நடத்திக்கொண்டுபோனால், எங்களை அவர்கள் எதிர்க்கவே மாட்டார்கள் என்பது தெரிந்தது. இவ்விதம் நாட்டில் புதியதானதோர் சூழ்நிலை தோன்றியது.

மகாத்மா காந்தி எதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாரோ அது இப்பொழுது கிட்டத்தில் வந்துவிட்டதாகவே தோன்றியது. 1928-ம் ஆண்டு. காத்திருப்பது, தயாராவது ஆகிய இரண்டுமிருந்த ஆண்டு. கூட்டு நடவடிக்கையினால் அடையப்போவது என்ன என்பதைப் பார்ப்பதற்காகக் காத்திருந்தோம். கமிஷனே ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தும் வகையில் கூட்டு முயற்சியில் ஒரு அரசியலை உருவாக்குவதற்குத் தயார் செய்துகொண்டுமிருந்தோம். இந்த வேலையில் ஏற்பட்ட மிகப் பெரிய கஷ்டம், வகுப்புச் சிக்கலினால் உண்டானதாகும். இந்தச் சிக்கலை நீக்குவது மாத்திரமல்லாமல், நாட்டிலுள்ள சிறுபான்மையினருக்கு ஓரளவு நம்பிக்கையையும், திருப்தியையும் உண்டுபண்ணக் கூடியதொரு வழியை நாம் கண்டுபிடித்தாக வேண்டியிருந்தது. இவ்விஷயத்தில் நேரு கமிட்டி அதன் அறிக்கையில் பெருமளவு வெற்றிபெற்றது. ஆனால் சிலவற்றில் அப்பொழுது ஏகோபித்த சமரசத்திற்கு வர முடியவில்லை. என்றாலும் கமிட்டியின் இந்த அறிக்கை எல்லா சமூகங்கள், கட்சிகளின் பிரதிநிதிகளுடங்கிய மகாநாட்டின் முன்னால் வரும்போது, சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான வழிவகைகளைக் கண்டுபிடித்துவிட முடியும் என்று நம்பப்பட்டது.

நாட்டில் புதிய விழிப்பு ஏற்பட்டிருந்தது. பார்தோலி சத்தியாக்கிரகம் அடைந்த வெற்றி இதற்கு ஒரு சரியான சாட்சி. 1921 இறுதியிலும் 1922 ஆரம்பத்திலும் சுயராஜ்யம் பெறுவதற்காக சத்தியாக்கிரகம் நடத்த பார்தோலியை மகாத்மா அனுமதித்தார், இதற்குத் தலைமை தாங்கி நடத்த அவரும் தயாராயிருந்தார். இதைக் குறித்து அவர் வைசிராய்க்கும் அறிவித்துவிட்ட போதிலும் சௌரி சௌரா சம்பவத்தை முன்னிட்டு இந்த சத்தியாக்கிரகத்தை அவர் நிறுத்திவிட நேர்ந்தது என்பவைகளைக் குறித்து முன்பே கூறியிருக்கிறேன். 1928-ல் விளைச்சல் சரிவர இல்லாதுபோனதினால் தங்க

ளுக்கு நிலத் தீர்வையில் வஜா செய்து கொடுக்கவேண்டு மென்று பார்தோலி விவசாயிகள் கோரினர். இதற்குச் சம்மதிக்க சர்க்கார் மறுத்துவிடவே சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்து வரி செலுத்த மறுத்துவிடுவது என்று முடிவு செய்தார்கள். சர்தார் வல்லபபாய் பட்டேல் அதிக உறுதி யோடும் திறமையோடும் சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்தினர். இதை நசுக்கிவிடுவதற்கு தங்களால் செய்ய முடிந்ததை யெல்லாம் அதிகாரிகள் செய்து பார்த்துத் தோல்வியடைந்தார்கள். முடிவில் ஒரு சமரசத்திற்கும் உடன்பட்டார்கள். இந்த சத்தியாக்கிரகத்தின் வெற்றி நாடெங்கும் பெரும் குதூகலத்தை உண்டாக்கியது. தீவிரமாக முயற்சி செய்தால் இதே போன்ற சத்தியாக் கிரகத்தை நாட்டின் மற்ற பகுதிகளிலும் நடத்தி இதே போல வெற்றிபெற்றுவிட முடியும் என்று மக்கள் எண்ணினர்கள்.

இதற்கு முன்னல் வரையில் சத்தியாக்கிரகம் என்பது கொள்கை அளவில்தான் இருந்ததேயல்லாமல் அதை எந்த இடத்திலும் பெரிய அளவில் பரீட்சித்துப் பார்த்ததில்லை. கேடா, போர்ஸாத், நாகபுரி ஆகிய இடங்களில் சத்தியாக் கிரகம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது என்பது உண்மை. ஆனல் அங்கெல்லாம் அது சிறிய அளவில், ஒரு குறிப் பிட்ட லட்சியத்துடன் நடத்தப்பட்டது. மேலும் அவற் றில் ஈடுபட்டவர்களும் சிறு தொகையினர். பார் தோலியிலோ, அந்த தாலுக்கா முழுவதுமே இந்த சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தது. அதனல் ஏராள மான மக்கள், ஆண்களும் பெண்களும், கஷ்ட நஷ்டங் களை யடைந்தார்கள். பக்கத்துப் பகுதிகளில் இருந்தவர் கள், இவர்களில் பரோடா சமஸ்தானத்தைச் சேர்ந்த பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு உதவி செய் தார்கள். உண்மையில் இந்நாடு முழுவதுமே இந்த சத்தி யாக்கிரகத்தை அதிக ஆர்வத்துடன் கவனித்து வந்தது. மக்கள் கற்பாறைபோல உறுதியுடன் இருந்துவந்தால், கல வரஞ் செய்யாமலோ, வேறு வகை பலாத்காரங்களில் இறங் காமலோ இருப்பார்களானல், முடிவில் பிரிட்டிஷ் சர்க்கார் பணியவே நேரும் என்பதை இந்த வெற்றி நிரூபித்தது. மகாத்மா காந்தி தம் மக்களை நிராயுதபாணிகளாக்கியதன்

மூலம் பிரிட்டிஷாரையும் நிராயுதபாணிகளாக்கிவிட்டார் என்று ஒரு வெளி நாட்டினர் கூறினர். அதாவது, தம் மக்களை பலாத்காரமற்றவர்களாக்கியதன் மூலம் சர்க்காரின் ஆயுத பலத்தைப் பலனில்லாததாக்கிவிட்டார். இது முற்றிலும் உண்மை. அஹிம்சையின் தத்துவத்தை நாம் முற்றிலும் உணர்ந்திருப்போமானால், நாம் முன்னடியே சுதந்திரத்தை அடைந்திருப்பதோடு எல்லாச் சமயங்களிலும், எல்லா சந்தர்ப்பங்களிலும், உலகத்தையே சமாளித்து நிற்கும் பலத்தையும் நாம் அடைந்திருப்போம். ஆனால் இந்த நம்பிக்கையை நாம் இன்னும் பெற்றபாடில்லை. நாம் சுதந்திரத்தை அடைந்து விட்டோம் என்பது சந்தேகத்திற்கிடமில்லாத உண்மையே. என்றாலும் நம் பாதுகாப்புக்கு ஆயுதபாணியான படையையே நம்பியிருக்க வேண்டியவர்களாயுள்ளோம்!

பூரண சுதந்திர லட்சியம்

1928—ம் வருஷ காங்கிரஸ் மகாநாடு கல்கத்தாவில் பண்டித மோதிலால் நேருவின் தலைமையில் நடந்தது. அதே சமயத்தில் சர்வகட்சி மகாநாடு ஒன்றும் அங்கு நடந்தது. நேரு கமிட்டியின் அறிக்கை அதன் முன்னால் வைக்கப்பட்டது. அப்பொழுது சைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்து விட்டதால், நம் மக்கள் யாவரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டி, பிரிட்டிஷ் சர்க்கார் நமது கோரிக்கையை ஒப்புக்கொள்ளும் படிச் செய்வேண்டும். இதற்கு நேரு கமிட்டி அறிக்கையை சர்வகட்சி மகாநாடு ஏற்றுக்கொள்ளும்படிச் செய்வது அத்யாவசியமாயிற்று. இரண்டு விஷயங்களில் அபிப்பிராய பேதங்களிருந்தன. முதலாவது, பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்தை அளிப்பது என்பதைப்பற்றியது. இதில் காங்கிரஸுக்குள்ளேயே கருத்து வேற்றுமை இருந்தது. ஸ்ரீ சீனிவாச ஐயங்கார், பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் முதலியவர்கள், பூரண சுதந்திரம் என்பதைப்பற்றியே நாம் பேசவேண்டுமேயன்றி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள் ஒரு அந்தஸ்தைப் பெறுவதைப் பற்றிப் பேசவே கூடாது என்று கூறி எதிர்த்தனர். மற்றவர்களோ, பிரிட்டிஷ் சர்க்கார் உடனே டொமினியன் அந்தஸ்தைக் கொடுப்பதாயிருந்தால் அதைக்கொண்டு திருப்தி யடைந்து விடத்தயாராக இருந்தார்கள்.

கருத்து வேறுபாடு உண்டான மற்றோர் விஷயம், வகுப்புப் பிரச்னை; முக்கியமாக ஹிந்து - முஸ்லிம் பிரச்னை. ஹரிஜனங்களின் நிலைமையைப்பற்றி எந்த விதமான தகராறுமில்லை; சர்வகட்சி மகாநாட்டில் இவர்கள் சார்பில் எந்தவிதமான கோரிக்கைகளும் கிளம்பவுமில்லை. இவர்கள் ஹிந்து சமூகத்தின் ஒரு பகுதியினரே என்று காங்கிரஸ்காரர்களும் மற்றவர்களும் கருதியதால் இவர்களுக்கு விசேஷ ஏற்பாடுகள் என்ற பிரச்னையே இல்லை என்றனர். சீக்கியர்களோ, தங்களுக்குத் தனியான உரிமைகள் வேண்டுமென்று கேட்டார்கள்.

பூரண சுதந்திரமே வேண்டும் என்று கூறியவர்கள், சர்வகட்சி மகாநாட்டில் அதைக் கிளப்பியபோதிலும், டொமினியன் அந்தஸ்து சம்பந்தமாக அம் மகா நாட்டில் அதிக விவாதம் எதுவுமில்லை. வகுப்புப் பிரச்னையே அதில் முக்கியமாக இருந்ததால் இதன் முக்கிய யத்துவம் குறைந்து விட்டது. முக்கியமாக இந்த வகுப்புச் சிக்கலின் காரணமாகவே சர்வகட்சி மகாநாடு வெற்றி பெறாது போயிற்று. முஸ்லிம்களின் கோரிக்கைகள் ஒப்புக்கொள்ளப் பட்டாலும் தேசத்திற்குப் பிரமாதமான கஷ்டமெதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை யாகையால், முஸ்லிம்களுடன் ஒரு உடன்பாட்டுக்கு வருவதைப் பலர் ஆதரித்தார்கள். அப்பொழுது அந்தக் கோரிக்கைகளை ஒப்புக்கொள்ளாதது நாட்டையே பிரிவினை செய்வதில் போய் முடியும் என்று யாரும் அப்பொழுது கனவிலும் கருதவில்லை. அந்த நாட்களில் மகாத்மா காந்தியின் ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்குமானல் இந்திய சரித்திரத்தின் போக்கே வேறு விதமாக இன்று இருந்திருக்கும் என்பது மறுக்க முடியாதது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நிலைபெற்றிருக்கும்படிச் செய்ய நாம் நமக்குள் சச்சரவிட்டுக்கொண்டிருக்கும்படி பார்த்துக்கொள்வதே பிரிட்டிஷ் ராஜதந்திரத்தின் நோக்கமாக இருந்தது என்பதை நம்மவர்கள் உணரத் தவறி விட்டார்கள். நமது கோரிக்கைகள் நியாயமானவைகளாக இருந்தால் பிரிட்டிஷ் சர்க்கார் கட்டாயம் அவற்றை ஏற்றுக்கொண்டு விடவே நேரும் என்று நினைத்துவிட்டோம். அதாவது பிரிட்டிஷாரின் நல்லெண்ணத்தில் நம்மவர்கள் நம்பிக்கை வைத்ததோடு, ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நியாயம் எதுவோ அதைச் செய்வார்கள் என்றும் நம்பினர்கள்.

சர்வகட்சி மகாநாட்டுக்குப் பிறகு பெரும்பாலான முஸ்லிம்கள் காங்கிரஸிலிருந்து வெளியேறி தங்களுக்கென ஒரு தனி ஸ்தாபனத்தை அமைத்துக்கொண்டார்கள். சிறிது காலம் ஸ்ரீ ஜின்னு போன்றவர்கள், முஸ்லிம்களுக்கும் காங்கிரஸுக்கும் சமரசத்தை உண்டாக்குவதற்கு முயற்சி செய்து வந்தார்கள். ஆனல் கொஞ்ச காலத்திற்கெல்லாம் எல்லா முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து கொண்டு சர்வகட்சி முஸ்லிம் மகாநாட்டை நடத்தினர்.

டொமினியன் அஸ்தஸ்து சம்பந்தமாக காங்கிரஸுக்குள்ளேயே ஏற்பட்ட தகராறில் ஒரு சமரசத்தை உண்டாக்க மகாத்மா முயற்சி செய்தார். முடிவில் ஒரு சமரசத்திற்கும் வந்தனர். பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு வருஷத்திற்குள் டொமினியன் அந்தஸ்தை இந்தியாவுக்கு அளிப்பதானால் அதை ஏற்றுக் கொள்ளுவது; 1929 டிசம்பர் 31 ந் தேதிக்குள் பிரிட்டிஷ் சர்க்கார் இக்கோரிக்கையை நிறைவேற்றிவைக்காவிட்டால், சுயராஜ்யம் அடைவதே லட்சியம் என்று அதுவரை இருந்த காங்கிரஸின் லட்சியத்தையே மாற்றிவிடுவது என்பது காங்கிரஸில் ஏற்பட்ட உடன்பாடு. சுயராஜ்யம் என்பதை டொமினியன் அந்தஸ்து என்றும் சொல்லாம். பூரண சுதந்திரம் என்றும் சொல்லலாம். டொமினியன் அந்தஸ்துபெற்ற நாடுகள் ஒவ்வொன்றும் பூரண சுயேச்சை வாய்ந்தவை என்று கருதப்பட்டதால் டொமினியன் அந்தஸ்து என்பதும் பூரண சுயேச்சையே. இதனாலேயே 1929 முடிவுக்குள் இந்தியா டொமினியன் அந்தஸ்தை அடையாவிட்டால் அது பூரண சுயேச்சைப் பிரகடனம் செய்து விடுவது. பின்னால் டொமினியன் அந்தஸ்து அளிக்கப்பட்டாலும் ஏற்றுக்கொள்வதில்லை என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

எதையும் மிகைப்படுத்துவதே இல்லை என்பது மகாத்மாவின் கொள்கைகளில் ஒன்று. தாம் கூறும் ஒவ்வொரு வார்த்தையையும் நிதானிப்பார்; அதன் முழுப் பொருளையும், முக்கியத்துவத்தையும் அதற்கு அளிப்பார். முக்கியமாக தீர்மானங்களைத் தயாரிக்கும் போது வாக்கியத்தை அழகு படுத்துவதற்கென்றோ பிறவற்றிற்காகவோ, அனாவசியமாக ஒரு வார்த்தையையும் சேர்க்க மாட்டார். ஆகவே அவ்வருஷத்திற்குள் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து கொடுக்கப்பட வில்லையானால் பூரண சுயராஜ்யப் பிரகடனம் செய்வேன் என்று அவர் கூறியபோது, ஒவ்வொரு வார்த்தையையும் அவர் உணர்ந்தே சொன்னார். ஆகையால் அவர் சொன்னதைக் கேட்டவர்கள் அதை நம்பினர். எனவே அவர் கூறிய சமரச யோசனையை காங்கிரஸின் எல்லா கோஷ்டியினரும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நம்பப்பட்டது. ஆனால் அப்படி நடக்க

விலை. சமரசத்தை ஏற்றுக் கொண்ட ஸ்ரீ சீனிவாச ஐயங்காரும் பண்டித ஜவஹர்லால் நேருவும் அதில் உறுதியுடன் நின்றார்கள். ஆனால் காங்கிரஸ் மகாநாட்டில் இச்சமரச முடிவைக் கொண்ட தீர்மானம் வந்தபோது ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் அதை பலமாக எதிர்த்தார். ஏகோபித்ததாக நிறைவேறாவிடினும் தீர்மானம் நிறைவேறிவிட்டது.

தாம் சொன்னபடிச் செய்து நிருபிப்பவர் மகாத்மா காந்தி. அந்த வருஷ முடிவுக்குள் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து கிடைக்காமற்போகவே. காங்கிரஸின் லட்சிய விதியில், "சுயராஜ்யம்" என்றிருப்பதற்கு பதிலாக "பூரண சுதந்திரம்" என்பதைச் சேர்த்துக்கொள்ளவேண்டு மென்ற திருத்தமடங்கிய தீர்மானத்தை லாகூர் காங்கிரஸ் மகாநாட்டில் அவரே கொண்டு வந்தார். அத்தீர்மானமும் நிறைவேறியது.

வேண்டிய தயாரிப்புகள் நடந்த ஆண்டே 1929. லட்சிய விதிகளில் மாறுதல் செய்ததோடு திருப்தியடைந்து விடமுடியாது. பூரண சுதந்திரத்தை அடைவதற்குத் தீவிரமான நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டியது முக்கியம் என்றாகிவிட்டதால் மகாத்மா காந்தி திரும்பவும் காங்கிரஸின் தலைமையை ஏற்றுக்கொண்டார். இதற்கு நாட்டையும் தயார் செய்ய வேண்டும். நிர்மாண வேலைத் திட்டத்தின் மூலமே இந்த தயாரிப்பை சரியானபடி செய்ய முடியும் என்று மகாத்மா நம்பியதால் இதை அவர் மீண்டும் வற்புறுத்தியதோடு அத்திட்டத்தில் கதரை முக்கியமாகவும் குறிப்பிட்டார். வெளி நாட்டுத் துணியை பகிஷ்கரித்து கதரைப் பரப்ப வேண்டும் என்பது அதன் பொருள். தேசத்தின் பல பகுதிகளிலும் திரும்பவும் பிரயாணம் செய்தார். பல இடங்களில் வெளிநாட்டுத் துணிகளைச் சேகரித்துக் கொளுத்தினார்கள். பர்மாவின் அழைப்பின் பேரில் மகாத்மா அங்கே போய்க்கொண்டிருந்த போது அவர் கல்கத்தாவில் தங்க நேர்ந்த சமயம் அங்கும் ஒரு பொது நந்தவனத்தில் ஏராளமான அன்னியத் துணிகளைப் போட்டுக் கொளுத்தினர். இதற்காக மகாத்மா மீது சர்க்கார் வழக்குத் தொடுத்தனர். அவர் சட்ட விரோதமான காரியம் எதையும் இதன் மூலம் செய்து விடவில்லையாகையால் அவ்வழக்கு நிற்காது என்று கல்கத்தா வக்கீல்

கள் கருதினர். எந்தவித சட்டமறுப்பும் இருக்கக்கூடாது, ஒரு சட்டத்தையோ அல்லது சர்க்காரின் ஒரு உத்திரவை யோ வேண்டுமென்றே யாரும் மீறக்கூடாது என்று மகாத்மா அந்த சமயம் பகிரங்கமாகக் கூறியிருந்தார். வழக்கு விசாரணைக்கு வந்தது. கோர்ட்டு முன்பு வக்கீல்கள் தங்கள் வாதங்களைப் பொழிந்தனர். முடிவாக மகாத்மா வுக்கு ஒரு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது: அதை யாரோ ஒருவர் செலுத்தி விட்டார்,

மகாத்மா பர்மாவுக்குச் சென்றார். அவர் திரும்பி வந்தபோது நாடு முழுவதும் அதிகப் பரபரப்புடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தது. வருஷ முடிவில் நடக்கப் போவது என்ன?

தேசத்தில் புதிய விழிப்பு ஏற்பட்டதன் காரணங்களில் ஒன்று, சைமன் கமிஷன் நியமனம். கமிஷன் இந்தியா வுக்கு வந்த போது அதை பகிஷ்கரிப்பதில் எல்லாக் கட்சி யினரும் சேர்ந்து கொண்டார்கள். அங்கும் இங்குமாக யாரோ ஒரு சிலரைத் தவிர, காங்கிரஸ்காரர்கள், காங் கிரஸுக்கு வெளியிலிருந்தவர்கள் ஆகிய எல்லோருமே கமி ஷன் முன்பு சாட்சியம் கொடுக்க மறுததுவிட்டார்கள்.

காங்கிரஸ்காரர்கள் ஒரு படி அதிகமாகவும் போயி னர். கமிஷன் சென்ற இடங்களிலெல்லாம் எதிர்த்து கருப் புக் கொடி ஊர்வலங்கள் நடத்தியதோடு, "சைமனே திரும்பிப்போ" என்றும் கோஷித்தார்கள். போலீஸார் சும்மா இருந்து விடவில்லை. பல இடங்களில் இந்த எதிர்ப்பு ஊர்வலத்தினர் மீது தடியடிப்பிரயோகம் செய் தார்கள். கடுமையாக அடித்தும் ஊர்வலங்களைக் கலைத் தார்கள். ஐக்கிய மாகாணத்தில் பண்டித ஜவஹர்லாலும் மற்றவர்களும் தடியடி பட்டார்கள். அவ்விதமே பாஞ் சாலத்தில் லாலா லஜபதிராய் தடியடிப்பட்டு அதனால் ஏற் பட்ட காயத்தினால் பிறகு இறந்து போனார். இதனால் மக் கள் மேலும் உறுதி கொண்டதோடு பகிஷ்காரமும் பல மானதாயிற்று. அந்தக் காலத்தில் மந்திரி சபைகளிலிருந்த வர்கள் மாத்திரமே கமிஷன் முன்பு சாட்சியம் கூறினர். யார் சுயேட்சையான கருத்துடனிருந்தனரோ, யாரைப் பின்பற்ற மக்கள் தயாராயிருந்தார்களோ, அத்தகையவர் களில் யாரும் கமிஷனுக்கு முன்னால் போகவேயில்லை.

சைமன் கமிஷன் பகிஷ்காரத்தை மகாத்மாவும் ஆதரித்தார். .

பீகாரில் அசம்பாவிதம் எதுவும் நிகழவில்லை. அந்த மாகாணத்தின் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் புத்திசாலியாகவும், சாமர்த்தியசாலியாகவும் இருந்ததே அதற்குக் காரணம். மற்ற இடங்களில் நடந்திருப்பதைப் போல தாமும் பலாத்காரத்தை மேற்கொண்டால் தமக்குக் கெட்ட பெயர் வருவதைத் தவிர நன்மை எதுவும் உண்டாகி விடாது என்பதை அவர் உணர்ந்தார். சைமன் கமிஷன் வருவதற்கு முதல் நாள் நான் அவரை சந்திக்க நேர்ந்தது. அத்தகைய ஒரு சந்திப்பு ஏற்படும் என்று எனக்கே தெரியாது. நான் டாக்டர் சச்சிதானந்த சின்ஹாவின் வீட்டிற்குப் போனபோது எனது வருகைக்காக அவர் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார். மற்ற இடங்களில் நடந்திருப்பதைப் போன்ற சம்பவங்கள் பாட்னாவிலும் நடப்பதை தாம் விரும்பவில்லை என்றார். ஒருவருக்கொருவர் சச்சரவு ஏற்பட்டு விடாமலிருப்பதை முன்னிட்டு, கமிஷனை வரவேற்க விரும்புகிறவர்களும், அதை எதிர்க்க விரும்புகிறவர்களும் தனித் தனியாக தூரத்தில் வைக்கப்படவேண்டும் என்று நான் சொன்ன யோசனையை அவர் ஏற்றுக் கொண்டார். கமிஷன் டிசம்பரில் அதிகாலையில் பாட்னாவுக்கு வருவதால், அப்பொழுது குளிர் அதிகக் கடுமையாய் இருந்த போதிலும், கமிஷனை எதிர்த்து ஆரவாரஞ் செய்ய குறைந்தது இருபதினாயிரம் பேராவது ஸ்டேஷனில் கூடுவார்கள் என்று அவரிடம் சொன்னேன். கூட்டம் அவ்வளவு இருக்காது என்று ஒரு வேளை அவர் எண்ணியிருக்கக்கூடும். இதனுலேயே, கமிஷனை வரவேற்கும் வரவேற்புக் கமிட்டியும் அதனுடன் கலந்துகொள்ளுகிறவர்களும், கமிஷன் இறங்குவதற்கென்று புதிதாகக் கட்டப்பட்டிருந்த பிளாட்பாரத்திற்குப் பக்கத்திலுள்ள ரஸ்தாவிலிருப்பது, எதிர்ப்புக் கூட்டத்தினர் பிளாட்பாரத்தின் மற்ருேர் பக்கத்திலிருக்கும் ரஸ்தாவிலிருப்பது என்று நான் கூறிய யோசனைக்கு அவர் சம்மதித்தார். கமிஷனை வரவேற்கிறவர்கள் மிகச் சிலரே இருப்பார்கள். எதிர்ப்பவர்களின் கூட்டமே பெரிதாக இருக்கும் என்பதை நான் அறிவேன். அப்

படியேதான் இருந்தது. ரயில்வே பிளாட்பாரத்திற்கு அருகில் சுமார் இரு நூறு பேர்களிருந்தார்கள். ரஸ்தாவின் மற்றப் பக்கத்திலோ முப்பது முதல் நாற்பதினாயிரம் பேர்களிலிருந்தார்கள். அங்கும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலை சந்தித்தேன். எல்லாம் அமைதியாக முடிந்த பிறகு அவர் என்னைப் பாராட்டினார். எதிர்ப்பாளர்கள் இருபதினாயிரத்திற்கு மேலிருப்பார்களென்று நான் சொன்னதற்கு அதிகமாகவே நிறைவேற்றிவிட்டேன் என்றும் சொன்னார்.

நான் மேலே சொன்னதைப்போல 1929 ம் ஆண்டு தயார் செய்துகொண்ட ஆண்டு. பிரிட்டிஷ் சர்க்காரும் முற்றிலும் சும்மா இருந்துவிடவில்லை. அப்பொழுது வைசிராயாக இருந்த லார்டு இர்வின் இங்கிலாந்துக்குப் போனார். அங்கிருந்து திரும்பி வந்ததும் வெளியிட்ட அறிக்கையில், பிரிட்டிஷ் சர்க்கார் அனுசரித்து வரும் கொள்கையில் டொமினியன் அந்தஸ்தை அளிப்பதென்பதும் அடங்கியிருக்கிறது என்றார். ஆனால் இந்தியா அந்த ஆண்டிற்குள் டொமினியன் அந்தஸ்தைப் பெறுமா என்பது தெளிவாகச் சொல்லப்படவில்லை. ஆகையால் மக்கள் இதற்குப் பல வழிகளிலும் வியாக்யானம் செய்துகொண்டனர். ஆனால் மகாத்மா காந்தியோ, நமக்குத் தோன்றும் பொருள்களையெல்லாம் அதற்குக்கொண்டிருப்பதில் பயனில்லையென்று கூறி, அந்த அறிக்கை நம்மை எந்த அளவுக்குக்கொண்டு போகும் என்பதை லார்டு இர்வினிடமே கேட்டுவிடுவதே சரி என்று எண்ணினார். காங்கிரஸ் மகாநாடு கூடுவதற்கான நாளும் நெருங்கிக்கொண்டிருந்தது. மகாத்மா காந்தி, பண்டித மோதிலால் நேரு, ஸ்ரீ ஜின்னா ஆகிய மூவரும் லார்டு இர்வினை சந்தித்துப் பேசினர். அவருடன் பேசியதிலிருந்து, உடனே டொமினியன் அந்தஸ்தை அளித்து விடுவது என்பதே கிடையாது, மெதுவாகப் படிப்படியாகவே அது கிடைக்கும் என்பது தெளிவாகி விட்டது. எனவே கல்கத்தா காங்கிரஸின் தீர்மானத்தை அனுசரித்து, பூரண சுதந்திரத்தை அடைவதையே நோக்கமாகக்கொண்டு காரியத்தில் இறங்குவதைத் தவிர வேறு வழி கிடையாது என்ற முடிவுக்கு மகாத்மா வந்துவிட்டார்.

உலகைக் காக்கவல்ல அகிம்சை

அந்த ஆண்டு நவம்பரில் நான் பர்மாவில் பத்துப் பன்னிரண்டு நாட்கள் தங்கியிருந்தேன். நான் அங்கு போனதற்கு காரணங்கள் இரண்டு. அந் நாட்டில் ஏராளமான ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரரான என் நண்பரொருவர், அங்கு வந்துபோகும்படி என்னை வற்புறுத்தி வந்தது முதல் காரணம். அந்த சொத்தைப்பற்றிய ஒரு வழக்கு சம்பந்தமாக அவருடைய சார்பில் நான் இங்கிலாந்துக்கும் போயிருந்தேன். மற்றோர் காரணம், பீகாரிலிருந்து பல விவசாயிகள் போய் பர்மாவில் இரண்டு மூன்று இடங்களில் குடியேறியிருந்தது. அந்த இடங்களில் ஒன்று, என் நண்பரின் ஜமீந்தாரி இருந்த இடம். தங்களுடைய நிலச்சுவான்தார்கள் தங்களை நடத்தும் விதத்தைக் குறித்து சில விவசாயிகள் எனக்குப் புகார் எழுதியிருந்தனர். இந்த இடங்களை நேரில் வந்து பார்த்து, தங்கள் குறைகளை கவனித்து, முடிந்தவரையில் தங்களுக்கு நான் உதவி செய்யவேண்டும் என்றும் கேட்டிருந்தார்கள்.

பீகாரி விவசாயிகள் ஒரு விசேஷ நிலைமையில் அங்கே போனவர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வடக்கு பர்மாவை பிரிட்டிஷார் வென்றபோது, அங்கு தரிசாகக்கிடந்த ஏராளமான நிலம் சாகுபடியாவதற்கு இந்திய விவசாயிகளை பர்மாவுக்குக்கொண்டு வருவது அவசியம் என்று நினைத்தார்கள். பர்மா மக்களுக்கு நடுவில் இந்தியரையும் அதிகமாக வைத்தால், அந்நாட்டைத் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் வைத்திருப்பது சுலபமாக இருக்கும் என்றும் அவர்கள் எண்ணியிருக்கலாம். ஆகையால், இந்தியாவில் சாகுபடிக்கு நிலமில்லாமல் திண்டாடும்போது பர்மாவில் ஏராளமாக நிலம் சாகுபடிக்கு இருக்கிறது; இந்திய ஜமீன்தார்களும் மற்ற பணக்காரர்களும் அங்கே போய் அந்த நிலத்தைச் சாகுபடி செய்தால் ஏராளமாக லாபம் சம்பாதிக்கலாம்; அங்கேயே தங்கிவிட விரும்புகிறவர்களுக்கு

நிலமும் சொந்தமாகி விடும்; தங்களளவில் சர்க்காரும் வேண்டிய உதவிகளை யெல்லாம் செய்வார்கள் என்று அந்த அறிக்கை கூறியது. இதை அனுசரித்து இந்தியர் பலர் பர்மாவுக்குப் போனதோடு அவர்களுக்கு சர்க்காரும் நிலம் கொடுத்தது. சிலர் அங்கு தங்கிவிடாது திரும்பிவிட்டனர்; சிலர் அங்கேயே இருந்துவந்தார்கள். இவர்களில் ஸ்ரீ மைல்னே என்ற அவுரி சாகுபடிக்காரரான ஆங்கிலேயரும் ஒருவர். இவர் அங்கே சர்க்காரிடம் இருபதாயிரம், இருபத்தையாயிரம் ஏக்கர் நிலத்தைப்பெற்று, ஷாகாபாத் ஜில்லாவிலிருந்து பல விவசாயிகளைக்கொண்டுபோய் அந்த நிலத்தில் குடியேறும்படிச் செய்தார். அந்த ஜமீன்தாரியிலிருந்து அவருக்குப் பல லட்ச ரூபாய் வருமானம் வந்து கொண்டிருந்தது. இதேபோல என் நண்பர் ராய்பகதூர் ஹரிஹர பிரசாத் சின்ஹாவின் தந்தை ராய்பகதூர் ஜெயப்பிரகாச லாலும் பதினைந்தாயிரம் ஏக்கர் நிலத்தைப் பெற்றார். அவர் இறந்த பிறகு அவருடைய குமாரர் அந்த நிலத்தை சாகுபடிக்குக்கொண்டு வந்தார். இந்த நிலத்தை எடுத்துக்கொண்ட போது அது அடர்ந்த காடாகக் கிடந்தது. இதில் யானைகள், புலிகள் முதலிய மிருகங்களுமிருந்தன. அதிக சிரத்தோடும், பல கஷ்டங்களை அனுபவித்தும் இந்த நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது. நான் அங்கே போய்ப் பார்த்தபோது அதிலும், சுற்றுப் பக்கங்களிலும் காட்டையே காணேம். அங்கு இருந்தவர்கள், பழக்க வழக்கம், பாஷை, தங்களுக்குக் கட்டிக் கொண்ட வீடுகளின் தன்மை ஆகியவைகளெல்லாமே ஷாகாபாத் ஜில்லா மக்களாகவே இருந்தனர். எனவே அங்கு அவர்களிருந்த கிராமங்களுக்கும் சாகாபாத் கிராமங்களுக்கும் எந்தவித வித்தியாசமுமே தெரியவில்லை.

ஸ்ரீ மைல்னேயின் கிராமத்திலிருந்த விவசாயிகளுக்குச் சில குறைகளிலிருந்தன. தங்கள் ஜமீனுக்கு வந்து தங்கள் குறைகளுக்குப் பரிகாரம் தேடித் தர வேண்டும் என்று என்னைக் கேட்டுக்கொண்டார்கள். நான் முன்னுல் சொன்னதுபோல, நான் பர்மாவுக்குப்போனதற்கு இது ஒரு காரணம். இதனுல் பர்மாவுக்குப்போகும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. ஸ்ரீ மைல்னேயின் மானேஜரைக் கண்டு பேசினேன். இதனுல் அவர்களுடைய எல்லாக்

குறைகளும் நீங்காது போயினும் கொஞ்சம் பரிகாரம் பெற்றூர்கள்.

பர்மியர் அதிக மத நம்பிக்கையுள்ள மக்கள். "பொங்கிகள்" என்று சொல்லப்படும் பௌத்த பிக்ஷுக்களிடம் பர்மிய மக்கள் அதிக மரியாதை வைத்திருக்கிறூர்கள். ஓங் உத்தமாவின் தலைமையில் இவர்களுடைய கோஷ்டி யொன்று கயா காங்கிரஸுக்கு வந்திருந்தது. பர்மாவில் அதிக விழிப்பு தென்பட்டது; அதை உண்டாக்குவதில் பொங்கிகள் சிறந்த சேவை செய்திருந்தனர். அச்சமயத்தில்தான் ஒரு பிரபலமான பொங்கி, பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கையை ஆட்சேபித்துஉண்ணு விரதம் மேற்கொண்டு இறந்துபோனூர். அங்கிருந்துவரும் வழக்கத்தை அனுசரித்து, காலஞ்சென்ற அவருக்கு மக்கள் கடைசி மரியாதை செலுத்துவதற்காக, அவருடைய சடலத்தைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள். நானும் சென்று மரியாதை செலுத்தினேன்.

இரண்டு விஷயங்கள் என்னை அதிகமாகக் கவர்ந்தன. பர்மாவுடன் இந்தியா நீண்டகாலமாக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்பது முதலாவது. எப்படி, யார், புத்த மதத்தை அங்கு கொண்டுபோனூர்கள் என்று என்னுல் சொல்ல முடியாது. ஆனுல் மக்களிடையே வாழ்க்கையுடன் ஒன்றியிருக்கும் மதமாக அது இருக்கிறது. இதற்கான அறிகுறிகள் புத்தர்களின் பெரிய தங்கக் கோபுரத்திலேயே யன்றி பொங்கிகளின் வாழ்க்கையிலும், காரியங்களிலும், பர்மிய மக்களின் அன்றாட வாழ்க்கைப் பழக்க வழக்கங்களிலும் காணப்படுகின்றன. குழந்தைகளுக்குக் கல்வி போதனை பெரும்பாலும் இந்தப் பொங்கிகளின் கையிலேயே இருக்கிறது. அநேக சிறு குழந்தைகள் காலையில் ஊர்வலமாகப் போவது சாதாரணமானதாகும். இக் குழந்தைகளெல்லாம் பொங்கிகளின் புது சிடர்கள்; பிற்காலத்தில் இவர்களே பொங்கிகளாகி விடுவார்கள். இத்தகைய வாழ்க்கை முறைக்கு இவர்கள் தங்கள் சிறு வயதிலேயே பழகிக்கொள்ளுகின்றனர்.

என்னை அதிகமாகக் கவர்ந்துவிட்ட மற்றூர் விஷயமும் உண்டு. மற்ற நாடுகள்மீது தன்னுடைய ராஜீய ஆதிக்

கத்தை உண்டாக்கிக்கொள்ள இந்தியா என்றும் முயற்சி செயததில்லை; இதற்காக எந்த நாட்டின் மீதும் அது படையெடுத்ததுமில்லை. என்றாலும் இந்தியாவின் ஒழுக்க, ஆத்மிக. மத ஆதிக்கம் உலகத்தின் பல பகுதிகளின் மீதும் பரவி யிருக்கிறது; இன்றும் இருந்து வருகின்றது என்பதே என்னைக் கவர்ந்தது. இந்த ஆதிக்கம் வாள் வலியால் ஏற்பட்ட தன்று. மதத்தின் சக்தி, நல்லொழுக்கம், நட்புறவு, அன்பு. சகோதரத்துவத்துடன் நடப்பது ஆகியவைகளினால் ஏற்பட்டதே இது. இதனாலேயே மற்ற ஆதிக்கங்களெல்லாம் அநேக தடவைகள் தோன்றி அழிந்துபோயிருக்கும் போது இந்த ஆத்மீக ஆதிக்கம் மாத்திரம் நீடிக்கிறது. பர்மிய மக்கள், இந்தியாவில் புத்தரின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட இடங்களை புண்ணிய க்ஷேத்திரங்களாக இன்றும் மதிக்கின்றனர். இந்த இடங்களில் புத்த காயா, சாரனாத், காசியா, லும்பினி ஆகியவை அதிக முக்கியமானவை. இந்தியாவிலுள்ள இந்த இடங்களை பர்மிய மக்கள் மாத்திரம் புண்ணிய ஸ்தலங்களாக நினைக்கிறார்கள் என்பதல்ல. புத்த மதம் பரவியிருக்கும் நாடுகளிலுள்ள எல்லாருமே அவ்வாறு மரியாதையாகவும் பக்தியோடும் அவ்விடங்களை மதித்து வருகின்றனர்.

சென்னை காங்கிரஸுக்குப் பிறகு 1927 டிசம்பர், 1928 ஜனவரியில் நான் இலங்கைக்குப் போய் சில தினங்களிருந்த சமயத்திலும் இதே எண்ணமே எனக்குத் தோன்றியது. அதிலிருந்து நான் ஒரு வகை உற்சாகத்தையும் பெற்றேன். உலகிலுள்ள புத்தர்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் புத்தர்களின் க்ஷேத்திரங்களான புத்த கயா போன்ற இடங்களில் தக்க ஏற்பாடுகளைச் செய்வதோடு அந்த ஸ்தலங்களுக்கு ஏற்றவைகளாக அந்த ஏற்பாடுகளிருக்கும்படிப் பார்க்கவேண்டியதும் நம் கடமை. புத்த மதம் அது பிறந்த இடத்தில் நிலைத்திராமல் போனது சரித்திரம் கண்டறிய முடியாத ஒரு விசித்திரமாகும். புத்தர் பிறந்து, தவம் செய்து, நிர்வாணத்தையும் அடைந்த இடமான பீகாரிலும், ஐக்கிய மாகாணத்திலும் அம் மதத்தைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணி விடலாம். ஆனால் மற்ற நாடுகளிலோ இன்று பல கோடிப் பேரிருக்கிறார்கள்.

நமக்கு ஒரு பக்கத்திலிருக்கும் திபேத், துருக்கிஸ்தான், மங்கோலியா, சீனு, கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளும், மற்ருேர் பக்கத்திலுள்ள இலங்கை, பர்மா, சயாம், இந்தோசைனு, இந்தோனேசியத் தீவுகள் ஆகியவைகளிலும் பல கோடி மக்களுக்கு முக்கியமான ஆத்மார்த்திக மதமாக புத்த மதம் இருக்கிறது. இவ்விதமாகிவிட்ட விதம் எப்படி என்பது எனக்குத் தெரியாது. புத்த மதம் இந்தியாவிலிருந்து மறைந்தது ஏன், எப்படி என்பதைக் கண்டு பிடிக்க வேண்டியது சரித்திரக்காரர்களின் வேலை.

புத்த மதத்தை ஹிந்து மதம் பலாத்காரத்தினல் அழித்து விட்டது என்று சொல்லிவிட முடியாது. இதற்கு ஆட்சேபிக்கவே முடியாததான ஒரு வாதமுண்டு. ஹிந்து மதம் மற்ற மதங்களிடத்தில் தனக்குள்ள சகிப்புத் தன்மையை நிரூபித்திருப்பதோடு புத்த மதத்திற்கு தன்னுடைய சாத்திரங்களில் மிக கௌரவமான ஸ்தானத்தையும் அளித்திருக்கிறது. புத்தரை கடவுளின் அவதாரங்களில் ஒன்ருக ஹிந்துக்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இதிலிருந்து இந்தியாவில் புத்த மதம் பலாத்காரத்தினல் அழிக்கப்பட்டிருக்காது என்பது தெளிவாகிறது. புத்த மதத்தின் அடிப்படையான தத்துவங்களில் பல புராதன ஹிந்து மதத் தத்துவங்களிலிருந்து வந்தவை. புத்த மதக் கோட்பாடுகளில் எவை புதியவைகளாகவும் இருந்தனவோ அவைகளையெல்லாம் ஹிந்து மதம் ஏற்றுக்கொண்டது. தனிப்பட்டவர்களின் வாழ்க்கை முறையிலும் நடத்தையிலும் புத்த மதம் கொண்டு வந்த மாறுதல்களையும் ஹிந்து மதம் அனுசரிக்க முற்பட்டது. நாளாவட்டத்தில் ஹிந்து மதத்திற்கும் புத்த மதத்திற்குமுள்ள வித்தியாசம் மிகச் சிறியதாகி ஹிந்து மதம் மாத்திரம் நின்றுவிட்டது. அப்படியிருக்கலாம் என்பதற்கு இந்தியாவில் சமீபத்தில் ஏற்பட்ட மத சீர்திருத்த இயக்கங்களின் சரித்திரத்தில் ஆதாரங்களிருக்கின்றன.

பிரம சமாஜம் ஹிந்து மதத்தின் ஒரு கிளை என்று கருதப்படுகிறது. என்ருலும் புராதனமான ஹிந்து தர்மத்திற்கும் அதற்கும் மாறுபாடுகள் அதிகமுண்டு. நாளாவட்டத்தில் இந்த மாறுபாடுகள் குறைந்துக் கொண்டே

போய் வெகு சீக்கிரத்தில் அது முற்றிலும் மறைந்தே போகும். இதே மாதிரி புராதன ஹிந்து மதத்திலிருந்து பல புதிய பிரிவுகள் தோன்றி அவை நாளாவட்டத்தில் ஹிந்து மதத்துடன் கலந்து விட்டன. புத்த மதம் மற்ற நாடுகளுக்குப் பிரயாணம் செய்ததால் அது நிலைத்திருந்தது. இதனாலேயே அது பிறந்த இடத்தில் அது காணப்படவில்லை. இலங்கை, திபேத், சீனா முதலிய நாடுகளுக்கு புத்த மதத்தை எப்படி, எப்பொழுது கொண்டு போனார்கள். இதை அங்கு பரப்புவதற்குக் காரணமாயிருந்தவர்கள் யார் என்பதை சரித்திரக்காரர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இது நமது மக்கள் அறிய வேண்டிய மிக ருசிகரமான கதை. இது மக்களுக்குச் சரிவர தெரிந்திருக்கும் வகையில் சரித்திர புத்தகங்களில் இந்த வரலாற்றுக்கு முக்கியமான இடமளிக்க வேண்டியது நமது சரித்திராசிரியர்களின் கடமை.

புத்த மதத்தைப் போலவே ஏறக்குறைய அதே காலத்தில் ஜெயின மதமும் பிரசாரம் செய்யப்பட்டு வந்தது. நானறிந்த வரையில், நவீன ஜெயின மதத்தை ஸ்தாபித்த மகாவிரர், புத்தருக்கு கொஞ்சம் முன்னால் பிறந்தவர். இருவரும் ஒரே காலத்தினர். இருவரும் அஹிம்சையையே தங்கள் மதங்களின் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டார்கள். இருவரும் தங்கள் காலத்தில் நாடெங்கும் சென்று தங்கள் தங்கள் மதங்களைப் பிரசாரம் செய்தனர். இருவரும் ஒரே காலத்தில் இருந்தவர்கள் என்பதோடு, இந்தியாவில் பீகார், உத்திரப் பிரதேசத்தில் கிழக்குப் பகுதி ஆகிய அதே இடத்திலேயே இருவரும் வேலை செய்து இருவர் மதங்களையும் பரப்பினார்கள். பிறகு நாளாவட்டத்தில் புத்த மதம் வெளி நாடுகளில் பரவியது. அசோக மன்னன் காலத்தில் அது இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் பிரபலமாயிற்று. பீகாரிலிருந்து தென் கிழக்கிற்குப் போய் தென் கோடி வரை சென்று பிறகு மீண்டும் வடக்குக்கு வந்து வட மேற்குக்கும் பரவிற்று. இவ்விரு மதங்களுமே அவை பிறந்த இடங்களிலிருந்து மறைந்து விட்டது சரித்திரத்தில் பெரிய புதுமையாகும். புத்த மதம் அடியோடு மறைந்து விட்டது; ஆனால் ஜெயினர்களை பீகாரைத் தவிர மற்ற இடங்களில் அதிகமாகக்

காண்கிறோம். பீகாரிலிருக்கும் கொஞ்ச ஜெயினர்களும் ஆதியில் ஜெயினர்களானவர்களின் சந்ததியில் வந்தவர்கள் அல்ல. நாட்டின் மற்ற பகுதிகளிலிருந்து வந்து பீகாரில் பிறகு குடியேறியவர்களே இவர்கள். ஆயினும் புத்தர்களுக்கு இருப்பதைப் போன்று ஜெயினர்களுக்கும் பீகாரிலிருக்கும் பவபுரி, ராஜக்கிரகா, பரஸநாத் அகிய இடங்களே புண்ணிய க்ஷேத்திரங்களாக இருக்கின்றன.

இதில் கவனிக்க வேண்டிய மற்றோர் முக்கியமான விஷயம் இவ்விரு மதங்களையும் ஸ்தாபித்தவர்கள் அகிம்சையையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்டிருந்தும் அந்த அகிம்சை பிறகு மாறுபட்ட பொருள்களை அடைந்தது என்பது. எனக்குத் தெரிந்த வரையில் மாமிசம் சாப்பிடாமலிருக்கும் புத்தரே இல்லை. ஒரு மிருகத்தைக் கொல்லுவது பாபம் என்று எண்ணுகிறார்கள்; ஆனால் இன்னொருவர் கொன்ற மிருகத்தின் மாமிசத்தைச் சாப்பிட அவர்கள் மறுப்பதில்லை. இதற்கு நேர் மாறாக ஜெயினர்களோ, ஒரு கொசுவைக் கொன்றாலும், கொடிய மிருகத்தைக்கொன்றாலும் அது மகாபாபமே என்று கருதுகிறார்கள். பிறருக்கு இம்சை செய்து விடக்கூடாது என்பதற்காக இவர்களுடைய மதத் தலைவர்கள் எத்தனையோ சிரமங்களை அனுபவிக்கிறார்கள். ஜெயின மதத்தைப் பின்பற்றும் சாதாரணமானவர்கள் கூட, தங்களைப் பொருத்த வரையில் அறியாமலும் ஒரு ஜீவனுக்குத் துன்பம் விளைவித்து விடக்கூடாது என்பதற்காக, சாப்பாட்டு விஷயத்திலும் எத்தனையோ தடைகளை அனுசரிக்கிறார்கள். காரணம் எதுவானாலும், இவ்விரு மதத்தினரும் அகிம்சைக் கொள்கையை நடைமுறையில் மேற்கொள்ளுவதில் அதிக வித்தியாசமிருக்கிறது என்பது மாத்திரம் உண்மை. மகாத்மா காந்தி தமது வாழ்க்கையில் எந்த வித அகிம்சையை அடைய முயன்றாரோ, கஷ்டங்களை அனுபவித்துக்கொள்ளுவதன் மூலம் உதாரணமாக எதைச் செய்து காட்டினாரோ, அத்தகைய அகிம்சையே உலகிற்குத் தேவை. அத்தகைய அகிம்சையே நாசத்திலிருந்தும் அழிவிலிருந்தும் உலகத்தைக் காக்க முடியும்.

மகாத்மாவின் தண்டி யாத்திரை

காங்கிரஸின் லட்சிய விதிகளை லாகூர் காங்கிரஸ் மாற்றி, சுயராஜ்யம் அடைவதே லட்சியம் என்றிருந்ததற்குப் பதிலாக பூரண சுதந்திரத்தை அடைவதே லட்சியம் என்று பிரகடனம் செய்தது. இதை அடைவதற்காக சத்தியாக்கிரகத்தை ஆரம்பிப்பது என்றும் முடிவு செய்தது. அச்சமயத்தில் நான் அதிக நோயுற்றிருந்ததால் அந்த மாகாநாட்டிற்குப் போகவில்லை. நான் குணமடைந்து பலம் பெற்றதும் ஜனவரி 26-ந் தேதி வெளிவந்து, முதலில் என்னுடைய கிராமமான ஜேராடேயில், முதல் சுதந்திர தின சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் கலந்துகொண்டேன். இவ்வைபவத்திற்குப் பிறகு சத்தியாக்கிரகத்திற்கு ஏற்பாடுகள் அதிக உற்சாகத்தோடு செய்யப்பட்டன. காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் சபர்மதியில் நடந்தது. நானும் அதற்குப் போயிருந்தேன். சத்தியாக்கிரகத் திட்டத்தை மகாத்மா காந்தி அறிவித்ததோடு உப்புச் சட்டங்களை மீறுவதன் மூலம் சட்ட மறுப்புச் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. உப்புக்கு வரி இருந்தது; இதனால் இந்திய சர்க்காருக்கு ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வந்துகொண்டிருந்தது. சர்க்காரின் அனுமதியின்றி யாரும் உப்பு தயாரிக்கவோ, விற்கவோ கூடாது, இந்த வரியிலிருந்து எவரும் தப்பவும் முடியாது. உப்பில்லாமல் யாரும் சாப்பிட முடியாதாகையால், ஏழையிலும் பரம ஏழைகூட, இரண்டு நாட்கள் பட்டினி கிடந்த பிறகு எப்படியோ தனக்குக் கிடைக்கும் கொஞ்ச சாப்பாட்டிற்கும், அவன் சாப்பிடும் ஒவ்வொரு வாய்ச்சோற்றுக்கும், அந்த வரிக்குத் தன்னுடைய பங்கை அவன் செலுத்த வேண்டியிருந்தது.

முப்புறங்களிலும் கடல் சூழ்ந்தது இந்தியா. கடற்கரையில் வேறு ஒன்றும் செய்யாமலேயே உப்பைச் சேகரித்து ஒருவர் எடுத்துக்கொள்ளலாம், ஆனால் ஏழையிலும் ஏழைகூட, இயற்கை ஏராளமாக அளித்திருக்கும்

இந்த உப்பை எடுக்கக்கூடாது; வரியைக் கொடுக்காமல் அதை அவன் சாப்பிடவும் முடியாது. இதன் பலன் என்ன? இந்நாட்டில் ஒருவர் சராசரி சாப்பிடும் உப்பு, மற்ற நாட்டு மக்கள் சராசரி சாப்பிடும் உப்பைவிடக் குறைவு. உப்பும் அத்தியாவசியமான உணவாகையால் இந்த உப்புக்குறைவு மக்களின் உடல் நிலையை பாதித்தது. சட்டமறுப்பு இயக்கம் ஏழைகளுக்கு உதவி செய்யும் நோக்கத்தோடேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை பரம ஏழைகளும் அறியும்படிச் செய்வதற்கு உப்புச் சட்ட மறுப்பு உதவியாக இருக்கும் என்று மகாத்மா கருதினார், அதே சமயத்தில் இந்த வரியை மறுப்பதால் சர்க்கார் தன்னுடைய வருமானத்தை இழக்குமேயல்லாமல் மூன்றாம் மனிதர் யாருக்கும் இதனால் தொந்தரவு இருக்காது. இந்தச் சட்ட மறுப்பு யோசனையை காரியக் கமிட்டியிடம் மகாத்மா கூறினார். கடலுக்கு அதிக தூரத்தில் இருப்பவர்கள், வியாபாரிகளிடமிருந்து வாங்கிய உப்பையே உபயோகிக்கிறார்களாகையால் முக்கியமாக அவர்களுக்கு, பொதுவாக மக்களுக்கு, இது உற்சாகத்தையும் உணர்ச்சியையும் அதிகரிக்காது என்று எங்களில் பலர் அப்பொழுது எண்ணினோம். உப்பை வாங்கும்போது அதற்கு எவ்வளவு வரி கொடுக்கிறோம் என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். உப்பை உற்பத்தி செய்வதற்காகும் செலவைவிட உப்பு வரி அதிகம் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் கடற்கரையிலில்லை. ஆதலால் சர்க்கார் அங்கீகாரமின்றி அவர்கள் உப்பை எடுத்துவிடலாம் என்பதற்கில்லை; கடல் நீரை எடுத்து சட்டவிரோதமாக உப்புக் காய்ச்சி விடலாம் என்று அவர்கள் நினைப்பதற்கும் இடமில்லை. ஆகையால் உப்புச் சட்டத்தை தாங்கள் எப்படி மீறுவது என்பதே அவர்களுக்குப் புரியாது. ஆகையால் இச் சட்டத்தை மீறுவதில் அனுபவ சாத்தியமான கஷ்டங்கள் அநேகமிருக்கும். ஆனால் மகாத்மா காந்தியோ தமது அபிப்பிராயத்தில் உறுதியுடனிருந்ததால் அச்சட்டத்தை மீறுவது என்று முடிவு செய்யப்பட்டது.

பீகாரில் பல ஜில்லாக்களில் உப்பு மண்ணிலிருந்தே தயாரிக்கப்பட்டு வந்தது. எங்கள் ஊரிலேயே ஒரு குறிப்பிட்ட சாதியார் இவ்விதம் தயாரித்து வந்ததை நான்

பார்த்திருக்கிறேன். அவர்கள் செய்து வந்த இத்தொழிலின் காரணமாக அச்சாதியினருக்கு நோனியர் என்று பெயர். மண்ணிலிருந்தே உப்பு தயாரிக்கக்கூடிய இடங்கள் பல இருக்கின்றன. இதல்லாமல் உப்பு நீரைக் கொண்ட ஏரிகளும் சில இருக்கின்றன. அவற்றிலிருந்து சுலபமாக உப்பு உற்பத்தி செய்யலாம். கடலோர டவுன்களிலும் கிராமங்களிலுமுள்ள மக்கள், கடற்கரையில் சாதாரணமாக உப்பெடுப்பதன் மூலமே உப்புச் சட்டத்தை மீறிவிடலாம் என்று கருதப்பட்டது. மற்ற இடங்களில், மண்ணிலிருந்து உப்புக் காய்ச்சியும், அப்படித் தயாரிக்கப்பட்ட உப்பை விற்பது, வாங்குவதன் மூலமும் அச் சட்டத்தை மீறலாம். மண்ணிலிருந்து உப்பெடுக்கும் முறை பத்திரிகைகளின் மூலமும் துண்டுப் பிரசுரங்களினாலும் எல்லோருக்கும் தெரியும்படி விளம்பரப்படுத்தப்பட்டது. உப்புச் சட்டத்தை மீறும்படி பீகார் மக்களுக்கு உற்சாகமளித்து விட முடியுமா என்பதில் எனக்கு அதிக சந்தேகமிருந்தது. அந்த அளவுக்கு நான் மகாத்மாவிடம் கூறியதோடு, மக்களுக்கு அதிருப்தியையும் வெறுப்பையும் உண்டாக்கிவரும் மற்ருேர் சட்டமும் கிராமங்களிலெல்லாம் இருந்து வருகிறது என்பதையும் அவரிடம் சொன்னேன்.

பீகாரில் ஒவ்வோர் கிராமத்திலும் சர்க்கார் ஒன்று அல்லது அதற்கதிகமான காவற்காரர்களை நியமித்திருந்தார்கள். திருட்டுகள், கொள்ளைகள் நடக்காமல் கிராமங்களைக் காவல் புரிந்து, அங்கு நடக்கும் சம்பவங்களையெல்லாம் பற்றிப் போலீஸுக்குத் தகவல் கொடுத்து, பிறப்பு இறப்புக் கணக்கு அனுப்பி, கிராமத்தில் நடக்கிறவை எல்லாவற்றையும் குறித்து சர்க்காருக்குத் தெரிவித்துக்கொண்டிருக்க வேண்டியது அவர்கள் வேலை. அதோடு சர்க்கார் போடும் உத்தரவுகள், அறிவிப்புகளையெல்லாம் அக்காவற்காரன் கிராமத்தாருக்குக் கூறுவான். பீகாரில் நிரந்தர செட்டில்மெண்டு ஏற்பட்ட பிறகு, நிலத்தீர்வையை சர்க்கார் வசூலிக்க வேண்டிய வேலை இல்லாது போய் ஜமீன்தார்களே வசூலித்து சர்க்காருக்குக் கட்டிக்கொண்டு வந்ததால், பீகார் கிராமங்களில் சர்க்காரின் ஆசாமிகளாக இக்காவற்காரர்களைத் தவிர வேறு யாருமே கிடையாது. சௌக்கிதார்கள் என்ற இந்த காவற்

காரர்களே பீகார் கிராமங்களில் சர்க்காரின் ஏஜண்டுகளும் பிரதிநிதிகளும், இவர்களுக்குச் சம்பளத்திற்காக சௌக்கிதாரி என்ற ஒரு வரி மூலம் கிராமவாசிகள் எல்லாருமே கொடுத்துவர வேண்டியிருந்தது. இந்த வரி கிராமவாசியின் சொத்துக்குத் தகுந்தபடி விதிக்கப்பட்டுவந்ததால் வருஷத்திற்கு ஆறு அணு முதல் ரூ. 12 வரையில் இருந்தது. இந்த வரி வசூல் அதிகக் கடுமையாக இருந்ததால் இவ்வரி மீது கிராம மக்களுக்குப் பெரும் வெறுப்பும் இருந்தது. அது மாத்திரமல்ல, தனிப்பட்டவர்களிடமிருந்து இவ்வரியை வசூலிப்பதில் அதிகக் கொடுமைகளும் செய்யப்பட்டன. ஏழைகள், தாங்கள் நியாயமாகச் செலுத்த வேண்டியதற்கு அதிகமாகவே கொடுக்கும்படி அல்லல் படுத்தப்பட்டனர்; பணக்காரர்களோ சிறு தொகை கொடுத்துவிட்டுத் தப்பி வந்தனர்.

இந்த வரி ஒவ்வொருவரும் செலுத்தியாக வேண்டிய நேர் வரி என்றும், இதனுல் தங்களுக்கு எவ்வளவு சங்கடமிருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருந்ததால் அவர்களுக்கு அதிருப்தி இருக்கிறது என்றும் மகாத்மாவிடம் கூறினேன். உப்புக்கு விதித்திருந்த வரியை கண்டிராக்டர்கள் செலுத்திவிடுவதால் உப்பு வாங்குகிறவர்களுக்கு அதை அறிய சந்தர்ப்பமில்லை. தாங்கள் அதற்காகச் செலுத்தும் வரி எவ்வளவு என்பதும் சாதாரணமாக பொது ஜனங்களுக்குத் தெரியாது. ஆகையால் உப்பு வரி மக்களிடையே அதிக வெறுப்பை உண்டாக்கிவிடவில்லை. அந்த வரிச் சட்டத்தை மீறவேண்டும் என்ற உற்சாகம் அவர்களுக்கு உண்டாகாது. எனவே சௌக்கிதாரி வரிச் சட்டத்தை மீறும் வகையில் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கலாம் என்று மகாத்மாவை நான் அனுமதி கேட்டேன். ஆனுல் அவர், அத்தகைய முறையை நாம் மேற்கொண்டால் நாம் தோல்வியுறுவதோடு நம்மை அடக்கிவிடுவதும் சர்க்காரால் சுலபமாக முடிந்துவிடுமாகையால் அதைச் செய்யவேண்டாம் என்று சொல்லிவிட்டார். அவர் சொன்னதின் பொருள் எனக்கு நன்முக விளங்கவில்லை. ஆனுல் இத்தகைய காரியங்களில் நான் எப்பொழுதுமே எந்தவித முணுமுணுப்புமின்றி அவர் கூறுவதற்கு உட்பட்டு வந்திருப்பதைப் போலவே இப்பொழுதும் என் மாகா

ணத்தில் உப்புச் சட்டங்களை மீறுவதன் மூலம் சாத்திய மான வரையில் சத்தியாக்கிரகம் செய்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். அநேக கிராமவாசிகளுக்கு மண்ணி லிருந்து உப்பு தயாரிப்பது எப்படி என்பது தெரியும். இதை அவர்கள் மற்றவர்களுக்கும் சொல்லிக்கொடுத்து விடலாம். ஆகையால் உப்புச் சட்டத்தை மீறுவதில் அதிகக் கஷ்டமிருக்காது என்பது எனக்குத் தெரிந்திருந் தும் அதில் வெற்றி ஏற்படாது போகக்கூடும் என்ற பயம் எனக்கு இருந்தது. நான் பிகாருக்குத் திரும்பியதும் இதன் சம்பந்தமாக வேலை செய்ய ஆரம்பித்தேன். அங்கும் மற்ற இடங்களிலும் மகத்தான வெற்றியைக் கண்டேன்.

உப்புச் சட்டத்தை தாமே முதலில் மீறுவது என்று மகாத்மா முடிவு செய்தார். இதற்காக அவர் ஆமதாபாத் திற்கு அருகிலுள்ள சபர்மதி ஆசிரமத்திலிருந்து புறப்பட்டு கடற்கரையிலுள்ள தண்டிக்குப்போவது என்பது ஏற் பாடு. தேதியும் குறிப்பிடப்பட்டது. தண்டியில் ஏப்ரல் 6 - ந் தேதி உப்பை எடுத்து அவர் உப்புச் சட்டத்தை மீறு வது. தண்டிக்கும் சபர்மதிக்கும் அதிக தூரம்; கால் நடை யாகவே அங்கு அவர் போய்ச் சேருவதற்கு மூன்று வாரங் களுக்கு மேலாயிற்று. நடுவில் எந்தெந்த இடங்களில் அவர் தங்குவது என்பதும் முன்னுடியே முடிவாயிற்று. எண்பது தொண்டர்களுடன் மகாத்மா தண்டி யாத்திரைக்குப் புறப் பட்டார். புறப்படும் முன்பு, "சுயராஜ்யத்தை அடைந்த பிறகே நான் ஆசிரமத்திற்குத் திரும்புவேன்; அதைப் பெற வில்லையானுல் என் உடல் தண்டிக் கரையில் மிதப்பதை மக்கள் காணலாம்" என்று அறிவித்தார். சட்ட மறுப்புச் செய்வதற்கு மக்கள் தயாராயிருக்கவேண்டும் என்றும், சட்டத்தைத் தாம் மீறுகிற வரையில், மற்றவர்களையும் அப்படிச் செய்யும்படிக் கூறும் வரை, யாரும் சத்தியாக் கிரகம் செய்யக்கூடாது என்றும் சொன்னுர்.

மகாத்மாவின் யாத்திரை ஆரம்பமானதும் நாடெங் கும் பெரும் உற்சாகம் எழுந்தது. மகாத்மாவுக்கும் அவரு டைய எண்பது தொண்டர்களுக்கும் பின்னுல் பெரும் மக்கள் திரளும் செல்லும்; இவர்களை மற்ற கிராம மக்கள் தொடர ஆரம்பித்த பின்னர் இவர்கள் வீடு திரும்புவார்கள்.

இவ்விதம் அந்த யாத்திரை நெடுக இவர்களுடன் எப்பொழுதுமே பெருங் கூட்டமிருந்தது. உற்சாகம் அதிகரித்துக் கொண்டே போயிற்று. அவர் யாத்திரை செய்த இடங்கள் அல்லாமல் நாடெங்குமே இந்த பெரும் உற்சாகம் தென்பட்டது. எல்லா இடங்களிலும் சத்தியாக்கிரகத்திற்கு மக்கள் தயாரானதோடு மகாத்மாவின் ஆக்ஞை என்று பிறக்கும் என்பதற்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வருஷம் காங்கிரஸுக்கு தலைவராயிருந்த பண்டித ஜவஹர்லால் நேருவை என் மாகாணத்திற்கு அழைத்தேன்; இருவரும் சேர்ந்து பல ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்தோம்.

சொன்ன சொல் தவறாத தீரர்

சத்தியாக்கிரக இயக்கத்தின் சரித்திரம் முழுவதையும் இங்கு கூறுவதற்கில்லை. என்றாலும் முக்யத்துவம் வாய்ந்த சில சம்பவங்களைக் கூறலாம். மகாத்மா தண்டி யாத்திரைக்குப் புறப்படுவதற்கு முன்னால், சுயராஜ்யத்தைப் பெற்றாலே தாம் ஆசிரமத்திற்குத் திரும்புவதாகவும், இல்லையானால் வரப்போவது கிடையாது என்றும் சொல்லிப் புறப்பட்டதை முன்னால் கூறியிருக்கிறேன். 1930—ம் ஆண்டு சட்டமறுப்பு இயக்கத்திற்குப் பிறகு அவர் வார்தாவுக்குப் போய் அங்கு சிறிது காலம் இருந்துவிட்டு, அதற்குப் பக்கத்திலுள்ளதும், பின்னால் சேவா கிராமம் என்று அழைக்கப்பட்டதுமான கிராமத்திற்குச் சென்றார். தாம் கூறும் சொல்லின் முழு பொருளோடுமல்லாமல் மகாத்மா ஒரு வார்த்தையையும் சொல்லுவதில்லை; சொன்னபடி நடக்கவும் அவர் என்றும் தயாராயிருந்தார். சபர்மதி ஆசிரமத்தை அமைப்பதற்குப் பல லட்ச ரூபாய்கள் செலவாயின. இதைக் கட்டி ஒழுங்குபடுத்துவதில் தமது அருமையான காலத்தின் 15 ஆண்டுகளை அவர் செலவிட்டிருந்தார். நிர்மாண வேலைகளுக்கெல்லாம் கேந்திரமாக இருந்தது அந்த ஆசிரமம். தேசத்திற்குத் தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்ளுகிறவர்களுக்கெல்லாம் சிறந்த வாழ்க்கை உதாரணமாக விளங்கிய, பல பரீட்சைகளுக்கும் உட்பட்டுத் தேறிய, சத்தியாக்கிரகிகள் அங்கே தேர்ச்சி பெற்று வந்தனர். ஒரு தாய் தனது அருமைக் குழந்தையை எந்தவித ஆசையோடும், அன்போடும் பேணி வளர்ப்பாளோ அதே போன்ற அன்போடும் ஆசையோடும், மகாத்மாவால் வளர்க்கப்பட்ட ஆசிரமம் சபர்மதி. எனினும் சொன்ன சொற்படி நடப்பதற்காகவே மகாத்மா திரும்ப அந்த ஆசிரமத்திற்குப் போகாமலேயே இருந்து விட்டார். ஆசிரமம் நடக்காது போகவில்லை. அதில் நடந்துவந்த வேலைகள் நின்றுவிடவுமில்லை. ஆனால் மகாத்மாவோ அந்த ஆசிரமத்திற்குப்

போகவில்லை. அங்கிருந்தவர்கள் வேலைகளை நடத்திக் கொண்டு போயினர். ஆசிரமம் பிறகு ஹரிஜன சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டது; இப்பொழுதும் அந்த வேலையிலேயே அது ஈடுபட்டிருக்கிறது. "சொன்ன சொல்லை மீறுவதைவிட உயிரையே தியாகஞ் செய்து விடுவது மேல் என்பதுதான் ரகு வமிசத்தாரின் பரம்பரை தர்மம்" என்ற துளசிதாசரின் மணி வாசகம் என்றும் மகாத்மாவின் மனதில் இருந்து வந்தது; தவறாது அதன்படி நடந்தும் வந்தார்.

பிறகு ஹரிஜனங்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி அளிக்கப்பட்டதை எரவாடா சிறைக்குள்ளிருந்தபடியே மகாத்மா 1932—ல் எதிர்த்தபோது மேலே கண்டதற்கு மற்றோர் பிரகாசமான உதாரணத்தையும் பார்த்தோம். 1931—ல் அவர் வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்றிருந்தபோது, ஹிந்து-முஸ்லிம் சிக்கலில் ஒரு சமரச முடிவு ஏற்படும்படிச் செய்ய அவரால் முடியவில்லை. ஹரிஜனங்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி வேண்டும் என்ற கோரிக்கை அவர்கள் சார்பில் கிளப்பப்படுகிறது என்பதை அங்கு மகாத்மா அறிந்தார். அவர்களுக்குத் தனி வாக்காளர் தொகுதியை அளிப்பதென்பது ஹிந்துக்களிலிருந்து அவர்களை நிரந்தரமாகப் பிரித்து வைத்துவிடுமாகையால், இந்த யோசனையை தம் உயிரைக்கொடுத்தும் எதிர்க்கத் தயாராயிருப்பதாக அங்கு ஒரு பிரசங்கத்தில் மகாத்மா கூறியிருந்தார். எனினும் பிரதம மந்திரி ராம்ஸே மாக்டொனல்டு, ஹரிஜனங்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி என்பதை தமது வகுப்புத் தீர்ப்பில் ஒப்புக் கொண்டு விட்டார். இம் முடிவு அறிவிக்கப்பட்டபோது மகாத்மா சிறையிலிருந்தார். சிறைக்குள்ளிருந்தபடியே சர்க்காருடன் கடிதப் போக்குவரத்தை நடத்தியதோடு வட்ட மேஜை மகாநாட்டில் தாம் கூறியதையும் அவர்களுக்கு ஞாபகப்படுத்தினார். இம் முறையை அவர்கள் மாற்றிக்கொண்டாலொழிய, தாம் முன்னடியே சொல்லியிருப்பதைப்போல, அதை மாற்றியாகும்படிச் செய்ய தம் உயிரையும் பணயமாக வைக்கத் தயாராயிருப்பதாகச் சொன்னார். சர்க்கார் சம்மதிக்காது போகவே, அந்தத் தீர்ப்பை சர்க்கார் மாற்றும் வரையில் தாம் சாப்பிடப்

போவதில்லை என்று கூறி மகாத்மா உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். அந்தத் திர்ப்பின் ஏதாவது ஒரு பகுதியை, சம்பந்தப்பட்ட எல்லா கட்சியினரும் தங்களுக்குள் ஒருமித்து, அந்தப் பகுதியை மாற்றவேண்டும் என்று ஏகோபித்து விரும்பினால், அது மாற்றப்படும் என்ற விதியொன்றும் அதிர்ஷ்ட வசமாக அத்தீர்ப்பிலிருந்தது. இதன் பலனாக ஹிந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஹரிஜனங்களுக்கு தனி வாக்காளர் தொகுதி இருப்பதில்லை, அதற்கு பதிலாக அவர்களுக்கு அவர்களுடைய ஜனத்தொகையின் விகிதாசாரப்படி சட்ட சபைகளில் ஸ்தானங்களை ஒதுக்கிவிடுவது என்பது ஒப்பந்தம். ஸ்ரீ மாக்டொனல்டின் தீர்ப்பினால் கிடைத்ததைவிட அதிகமான ஸ்தானங்கள் இதனால் ஹரிஜனங்களுக்குக் கிடைத்தன. ஆனால் தேர்தல் முறை மாறியது; தனி வாக்காளர் தொகுதி என்பது இல்லாது போயிற்று. இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதும் அதை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக்கொண்டு அதன்படி சமூகத் தீர்ப்பை மாற்றிவிட்டார்கள். உயிரைப் பணயம் வைத்து மகாத்மா அறிக்கை வெளியிட்டபோது, அதன்படி நடந்தும்விடுவார் என்று யாரும் நினைக்கவே இல்லை. தாம் சொன்னதை உண்ணாவிரதமிருந்து தாம் நிறைவேற்றியே தீரப்போவதாக மகாத்மா எழுதிய கடிதத்தை சர்க்கார் பிரசுரித்தபோது தேசத்தில் பெரும் கலக்கம் ஏற்பட்டு, அதன் பலனாக மேலே சொன்ன சமரச ஒப்பந்தமும் உண்டாகி, வகுப்புத் தீர்ப்பும் மாற்றப்பட்டது.

தண்டி யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளை மகாத்மா செய்து கொண்டிருந்த போது அவரிடம் ஒரு யோசனை கூறப்பட்டது. தேசத்திற்கு மகாத்மா ஒரு செய்தியை வெளியிடுவது; ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் அதைக் கேட்பதற்கு சௌகரியமாயிருப்பதற்காக அச் செய்தி கிராமபோன் ரிகார்டிலிருக்கும்படிச் செய்வது நல்லது என்பதே சிலர் கூறிய அந்த யோசனை. சரித்திரபூர்வமான அச்செய்தியை, அவர் வார்த்தையில், அவர் குரலில், ஒவ்வோர் கிராமவாசியும் கேட்கும் வகையில் நாடெங்கும் பரப்பலாம் என்றும் நம்பப்பட்டது. மகாத்மாவைச் சிறைப்படுத்தாமல் எவ்வளவு

காலத்திற்கு சர்க்கார் விட்டுவைக்கும் என்பது தெரியாது. ஆகையால் அவர் சிறை சென்ற பிறகும் அவருடைய சத்தியாக்கிரகச் செய்தியை அவருடைய குரலிலேயே கேட்க மக்களுக்கு இவ்வசதி இருந்தால் அது சத்தியாக்கிரக இயக்கத்திற்கும் அதிக உதவியாக இருக்கும் என்றும் கருதப்பட்டது. நான் அப்பொழுது சபர்மதியில் இருந்தேன். இந்த யோசனையை மகாத்மாவிடம் சொல்லும்படி நண்பர்கள் என்னைக் கேட்டுக் கொண்டார்கள். இதற்கு அவர் சொன்ன பதில், சத்தியத்திலும், முடிவாக அதுவே வெற்றி பெறும் என்பதிலும் அவருக்கு இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையைத் தெளிவு படுத்தியது. அவர் சொன்னுர்: "என்னிடம் சத்தியம் இருக்குமாளுல், நான் சிறைக்குள்ளிருந்தாலும் வெளியிலிருந்தாலும், அதை மக்கள் உணர்ந்தே தீருவார்கள். ஆனுல் அதில் உண்மையில்லாது போகுமாளுல், நீங்கள் என்ன முயற்சி செய்தாலும், கிராமபோனின் உதவியைக் கொண்டுங்கூட, அதை நீங்கள் மக்களிடம் பரப்பிவிட முடியாது. நாம் ஆரம்பிக்கப் போகும் சத்யாக்கிரகம் உண்மையில் சத்தியாக்கிரகமாயிருந்தால், அதாவது சத்தியத்தை வற்புறுத்தி, சத்தியம் அகிம்சை வழியில் செல்ல நாம் தயாராயிருந்தால், நான் பேசுவதை மக்கள் கேட்டாலும் கேளாது போனுலும், அது அவர்கள் காதுக்கு எட்டினுலும் எட்டாது போயினும், அது வெற்றி பெற்றே தீரும்." இதைக்கேட்ட பிறகு மகாத்மாவிடம் வற்புறுத்தும் தைரியம் யாருக்கும் வரவில்லை.

சத்தியாக்கிரகம் ஆரம்பமாகி, கௌரவம் வாய்ந்தவர்களெல்லாம் சிறைப்பட முன்வந்ததும், இதனுல் பாதிக்கப்பட்டவர்கள் பொது ஜனங்கள் மாத்திரமல்ல, இயக்கத்தை நசுக்குவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டிய கடமை சர்க்கார் அதிகாரிகளுடையதானதால், முக்கியமாக அவர்களுக்கும் சங்கடமேற்பட்டது. நாட்டின் ஒவ்வோர் பகுதியிலும் இதைக்காண முடிந்தது. பீகாரில் இதன் சம்பந்தமாக நானே நேரில் கண்ட சில சம்பவங்களைக் கூறுகிறேன்.

சம்பரானில் நடந்தது இது. உப்புச் சட்டத்தை மீறுவதற்கு முன்னுல் மகாத்மா காந்தி சபர்மதியிலிருந்து

தண்டிக்கு நடந்து சென்றதைப் போல, சம்பரான் ஜில்லா வின் முக்கியமான காங்கிரஸ் ஊழியர்களில் ஒருவரான ஸ்ரீ விபின் பிகாரி வர்மா, சத்தியாக்கிரகம் செய்வதற்கு முன்னால் அந்த ஜில்லாவின் பாதியில் சுற்றுப் பிரயாணம் செய்து விடுவது என்று முடிவாயிற்று. விபின் பாபு சில சீடர்களுடன் கால்நடையாகப் புறப்பட்டு சில மைல் தூரம் சென்றதும் தகுதியான இடமொன்றில் தங்கினார். இவ் விதம் சத்தியாக்கிரகம் செய்யவேண்டிய இடத்தை இவர் அடைவதற்கு நாட்கள் பலவாயின. அங்கு போகும் வழி யில் மக்கள் இவரை குதூகலமாக வரவேற்றார்கள். வழி நெடுக இவருக்கு பலத்த ஏற்பாடுகளெல்லாம் செய்யப் பட்டதால் அப்பகுதி மக்கள் விழிப்பும் உற்சாகமுமடைந் தார்கள். உப்பு தயாரிப்பதற்காக அந்த இடத்தில் உப்பு மண்ணும் நீரும் தயாராக வைக்கப்பட்டிருந்தது. போலீ ஸாரும் அவரைக் கைது செய்வதற்குத் தயாராக இருந் தார்கள். சத்தியாக்கிரக இடத்திற்குச் சிறிது தூரத்தி லிருந்த மாந்தோப்பில் அதிகாரிகளுக்கு சில கூடாரங் களும் அடித்திருந்தார்கள். சட்டத்தை மீறியதும் அங் கேயே விசாரணை நடத்திவிடுவதற்காக ஒரு மாஜிஸ் டிரேட்டும் அங்கே தயாராக இருந்தார். மகாணத்தில் சட்ட மறுப்பை ஆரம்பித்த முதல் நாள் அது. மற்ற ஜில் லாக்களிலும் மக்கள் இதே போன்ற ஏற்பாடுகளைச் செய் திருந்தார்கள்.

சம்பரானுடன் மகாத்மா நெருங்கிய தொடர்பு வைத் திருந்ததால் முதலாவதாக நான் அந்த ஜில்லாவுக்குப் போனேன். அந்த இடத்திற்கு நான் சென்றபோது, உப்புக் காய்ச்சுவது முடிந்து சத்தியாக்ரஹிகளைக் கைது செய்து மாஜிஸ்டிரேட் முன்பு கொண்டு போயிருந்ததை யும், அவர் விசாரணை நடத்தும் தருவாயிலிருந்ததையும் கண்டேன். அந்த மாஜிஸ்டிரேட் அதிக துக்கத்துடனிருந் ததைப் பார்த்தேன். நாங்கள் அங்கு இருந்த வரையில், அவர் தம் முன்னிருந்த மேஜையைப் பார்த்த வண்ணமிருந் தாரேயன்றி நிமிர்ந்து பார்க்கவில்லை. தலை குனிந்தவாறே தாம் எழுதவேண்டியிருந்ததை எழுதினார். அதே நிலை யிலேயே, விபின் பாபு குற்றவாளி எனக்கூறி ஆறு மாத தண்டனையையும் விதித்தார். மாஜிஸ்டிரேட்டுக்கு அதிக

வருத்தமிருந்தது என்பது நன்ருகத் தெரிந்தது: ஆனால் தாம் செய்ததைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாத வராகவும் இருந்தார் அவர் என்றும் தோன்றியது.

மாஜிஸ்டிரேட்டின் இந்த அவதிக்கு ஒரு விசேட காரணமும் உண்டு. 1921-ல் ஒத்துழையாமை இயக்கம் உச்ச நிலையிலிருந்த சமயம், மாணவர்கள் கல்லூரிகளை விட்டு வெளியேறி இயக்கத்தில் ஈடுபடும்படி அழைக்கப் பட்டபோது, இந்த குறிப்பிட்ட மாஜிஸ்டிரேட் பாட்னு கல்லூரி மாணவராயிருந்தார். இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் பின்னால் நடக்கவிருந்த பி. ஏ. பரிட்சை எழுதுவதற்கும் தயார் செய்து வந்தார். இவர் மிகவும் திறமைசாலியான மாணவராகையால் உபகாரச் சம்பள உதவியும் பெற்றிருந்தார். மற்ற மாணவர்கள் அந்தக் கல் லூரியை விட்டு விட்டு நாங்கள் ஆரம்பித்திருந்த தேசியக் கல்லூரியில் சேர வந்ததும் இவரும் அவர் களுடன் வந்து விட்டார். இவருடைய வீட்டாருக்கு இது தெரிந்தது. அவர்கள் பாட்னுவுக்கு வந்து இவரை பல வந்தமாக இழுத்துச் சென்று விட்டனர். ஒன்பது வரு ஷங்களுக்குப் பின்னால் அவர் மாஜிஸ்டிரேட்டாக உட் கார்ந்திருந்தபோது இவர் முகத்தில் என்ன துக்கமிருந் ததோ அதே துக்கத்தை அவர் முகத்தில் அப்பொழுது பார்த்தேன். தேசியக் கல்லூரியை விட்டுப் போனதும் பி. ஏ. பரிட்சையில் முதல் தரமாகத் தேறி மாஜிஸ்டிரேட் ஆனுர். இக்காரணத்தினுலேயே தலை நிமிர்ந்து அவரால் எங்களைப் பார்க்க முடியவில்லை.

தீர்ப்புக் கூறப்பட்டதும் விபின் பாபுவை மோதிகரி சிறைக்குக் கொண்டு போனுர்கள். சிறை வாசலில் பெருங் கூட்டமிருக்கவே சிறை அதிகாரிகள் பயந்துவிட்டார்கள். கலகம் ஏற்படும் என்றும் அஞ்சினர். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

சில வாலிபர்கள், சட்டத்தை மீறி தாங்கள் உப்புச் காய்ச்சப் போவதாக அறிவித்து விட்டு, பங்கிப் பூரிலிருந்து பாட்னு நகருக்கு ஊர்வலமாகப் புறப்பட்டிருக் கிருர்கள் என்று நான் பாட்னுவுக்குத் திரும்பியதும் அறிந்தேன். இவர்களை நடுவழியில் போலீஸார் தடுத்

தனர். ஆனால் திரும்பிப் போய்விட அவர்கள் மறுத்து விட்டார்கள். அவர்கள் மேற்கொண்டும் போக முடியாதபடி போலீஸார் பார்த்துக் கொண்டிருந்தார்களேயன்றி அவர்களைக் கைது செய்யவில்லை. அதன்பேரில் மாணவர்கள் ரஸ்தாவில் படுத்துக்கொண்டார்கள். கப்பல் மூலம் நடு ராத்திரியில் நான் அங்கு சென்று, இளைஞர்கள் படுத்திருந்த தாகக் கூறப்பட்ட இடத்திற்கு அருகிலிருந்த சுல்தான் கஞ்ச் போலீஸ் ஸ்டேஷனுக்கு நேரே போனேன். சாலையின் நடுவில் படுத்து அவர்கள் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந் ததைக் கண்டேன். பக்கத்தில் சில போலீஸ்காரர்கள் நின்றார்கள், ராத்திரியில் எதுவும் நடந்துவிடாதெனத் தெரிந்தது. காலையில் திரும்பி வரலாம் என்று சதாகத் ஆசிரமத்திற்குப் போனேன்.

மறுநாள் காலையில் நான் அங்கு போனபோது, அம் மாணவர்களும் போலீஸாரும் எதிரெதிரில் நின்றுகொண் டிருந்ததைக் கண்டேன், ஒரு பக்கத்தில் பொதுஜனக் கூட்டம் பெருகிக் கொண்டிருந்தது, மற்றோர் பக்கத்திலோ போலீஸ்காரர்கள். சாதாரண போலீஸாரும், குதிரைப் போலீஸாரும் துப்பாக்கி முதலிய ஆயுதங்களுடன் அதிக மாகிக் கொண்டே யிருந்தனர். ஆங்கிலேயர்களான ஜில்லா மாஜிஸ்டிரேட்டும் போலீஸ் சூப்பரின்டெண்டும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்ததும் என்ன நடக்கும் என்பதைக் குறித்து ஆச்சரியப்பட்டு வந்தோம். நான் அங்கிருந்த ஜனக்கூட்டத்தை சாந்தப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்பதை அவர்கள் அறிந்ததும் எனக்குச் சொல்லியனுப்பி னார்கள். அம்மாணவர்களை நான் திருப்பியனுப்பிவிடாது போனால் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரும் என் றார்கள், அம்மாணவர்கள் ஏதாவது குற்றஞ் செய்திருந்தால் அவர்களைக் கைது செய்து குற்றத்திற்குரிய தண்டனையை விதிக்கலாமே யல்லாமல் அவர்களைத் திரும்பிப் போகும்படி நான் சொல்ல முடியாது என்றேன். அதற்கு அவர்கள், அங்கு பெருங்கூட்டம் கூடியிருக்கிறது என்றும், ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்துவிட்டால் நானே அதற்குப் பொறுப்பாளியாக்கப்படுவேன் என்றும் சொன்னார்கள். அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளுவதாகக் கூறி னேன். கூட்டத்தினரால் எந்த விதமான தொந்தரவும்

உண்டாகாது என்றும், மாணவர்களைப் போகவிட்டு விட்டால் கூட்டமும் கலைந்து போகும் என்றும் சொன்னேன். ஆனால் அப்படி மாணவர்களைப் போக விட்டுவிட அவர்கள் தயாராயில்லை. போலீஸார் சுட ஆரம்பித்தால் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிடக் கூடுமாகையால் இதைப்பற்றி மற்ற நண்பர்களையும் கலந்தாலோசிப்பது நல்லது என எண்ணினேன். இதை நான் அதிகாரிகளிடம் கூறியபோது நான் பலவீனப்பட்டு வருகிறேன் என்று நினைத்துக்கொண்டார்கள். அதன்பேரில் தங்கள் போக்கைக் கடுமையானதாக்கிக்கொண்டு, இதற்காக எனக்கு அரை மணி நேரம் அவகாசம் கொடுப்பதாகவும், தங்களுடைய கடிகாரத்தைப் பார்த்து என் கடிகாரத்திலும் மணியைச் சரியாக வைத்துக்கொள்ளும்படியும் சொன்னார்கள். இது எனக்குப் பிடிக்கவில்லை. சாதாரணமான பதிலையோ அல்லது எந்த பதிலையுமோ அரை மணி நேரத்தில் அவர்களுக்குக் கூற என்னால் முடியாது போனால், மாணவர்களைத் திருப்பி அழைத்துக்கொள்ள நான் மறுப்பதாக வைத்துக்கொண்டு அவர்களுக்கிஷ்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று அவர்களிடம் கூறிவிட்டேன். பிறகு ஆசிரமத்திற்குப் போனேன்.

சதாகத் ஆசிரமத்திலிருந்த நண்பர்களுடன் கலந்தாலோசித்தேன். மாணவர்களைத் திருப்பி அழைத்துக்கொண்டுவிடக் கூடாது என்ற முடிவுக்கே எல்லோரும் வந்தோம். அரை மணி நேரம் கழிவதற்கு முன்னாலேயே ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு இதை டெலிபோன் மூலம் அறிவித்து, சிறந்ததெனத் தமக்குத் தோன்றும் நடவடிக்கையை எடுத்துக்கொள்ளும்படியும் அவருக்குச் சொன்னேன், பிறகு சுல்தான்கஞ்ச் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனேன். நெருக்கடியான நிலைமை உண்டாகியிருக்கும், நாம் அங்கு போவதற்குள் கூட்டத்தின் மீது போலீஸார் சுட்டிருக்கவும் கூடும் என்று எண்ணிக்கொண்டே போனேன். ஆனால் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகும் வழியில் எதிர்ப் பக்கத்திலிருந்து ஜில்லா மாஜிஸ்டிரேட் தமது மோட்டாரில் வந்ததைப் பார்த்தேன். அவரும் என்னைப் பார்த்து புன்முறுவல் செய்தார். எந்த நெருக்கடியும் ஏற்பட்டுவிடவில்லை என்பது தெளிவாயிற்று.

இடத்திற்கு வந்து சேர்ந்தபோது, அம்மாணவர்களை அடித்து விரட்டும்படி குதிரைப் போலீஸுக்கு உத்தரவு போட்டுவிட்டு அவர் போய்விட்டார் என அறிந்தேன். அம்மாணவர்களோ, குதிரைகள் வருவதைக் கண்டதும் அஞ்சாமல் வழியில் ரஸ்தாவின் குறுக்கே படுத்துக் கொண்டுவிட்டார்கள். குதிரைப் போலீஸார் அவர்கள் கிட்டத்தில் வந்து திரும்பிவிட்டனர். இதே போல இரண்டு மூன்று தடவைகள் செய்தனர். ஆனால் மாணவர்களோ உறுதியுடன் அசைய மறுத்து விட்டார்கள். மாணவர்களை இவ்விதம் பயமுறுத்திவிட முடியாது என்பதைக் கண்டுகொண்டதும் போலீஸார் அவர்களைத் தூக்கி போலீஸ் மோட்டார்களில் ஏற்றிச் சிறைக்கு அனுப்பிவிட்டார்கள். இவர்கள் அகற்றப் பட்டதும் கூட்டமும் கலைந்தது. இந்த வேளையில்தான் நானும் அங்கு போய்ச் சேர்ந்தேன். நடந்ததையெல்லாம் சொன்னார்கள். சத்தியாக்கிரகிகள் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட வேண்டும்; அல்லது தனக்குச் சரியெனத் தோன்றும் வேறு நடவடிக்கைகளை யாவது சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும்; நாங்கள் விரும்பிய தெல்லாம் அவ்வளவுதான். ஆனால் சத்தியாக்கிரகத்தைக் கைவிட மாத்திரம் நாங்கள் தயாராயில்லை. சதகத் ஆசிர மத்திற்குத் திரும்பியதும் மேற்கொண்டு செய்யவேண்டிய தற்கான திட்டத்தைச் சிந்தித்தோம்.

இச்சம்பவத்திற்குப் பிறகு, சத்தியாக்கிரக கோஷ்டி யினர் தினம் நான்கு முறை ஊர்வலம் போவார்கள். ஊர் வலம் எப்பொழுது வந்துவிடுமோ என்பதற்காக போலீஸார் நாளெல்லாம் அங்கு காத்திருக்காமல் சரியாக அந்த சமயத் தில் வந்து சேரும்படிச் செய்வதற்காக, ஊர்வலம் புறப்படும் நேரம் முன்கூட்டியே ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு அறி விக்கப்படும். சரியான நேரத்தில் வந்து கைது செய்யட்டும் அல்லது அவர்களுக்குத் தோன்றுகிறபடி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளட்டும் என்பதற்கே இவ்விதம் செய்யப் பட்டது. அத்தகைய ஊர்வலம் போகும்போது பெருங் கூட்டம் சேர்ந்துவிடும். பெரிய கூட்டங்கள் சேர்ந்துவிடும் போதெல்லாம் அக்கூட்டத்தைக் கலைப்பதற்காக அதி காரிகள் தங்கள் சாட்டைகளையும் தடிகளையும் உபயோ

இத்துவிடக் கூடுமாகையால் போலீஸாருடன் எங்கு அடிதடி மூண்டுவிடுமோ என்ற பயம் மாத்திரம் எங்களுக்கு எப்பொழுதும் இருந்துவந்தது. நாங்கள் அந்த வேளைகளில் அங்கு வந்து கூட்டத்தினர் அமைதியாக இருக்கும்படிச் செய்வோம். குதிரைப் போலீஸார் பலூச் முஸ்லிம்கள்; பீகாரில் சர்க்காரில் நீண்ட காலமாக ஊழியம் செய்து வருபவர்கள். குதிரைமீது ஏறிக்கொண்டு இரு பிரிட்டிஷ் அதிகாரிகளும் இவர்களுடனிருப்பார்கள். கூட்டத்தினரின்மீது பெரும்பாலும் தங்களுடைய சாட்டைகளையும் குண்டாந்தடிகளையும் உபயோகிப்பவர்கள் இவர்களே. யாராவது ஒருவரைக் கைது செய்வதாயிருந்தால், அவரைப் பிடித்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகும்படி சாதாரண போலீஸாரோ அல்லது குதிரைப் போலீஸாரோ உத்தரவிடப்படுவார்கள். மற்ற காங்கிரஸ் ஊழியர்களுடன் பேராசிரியர் அப்துல் பாரியும் நானும் இருப்போம்.

ஒரு நாள் பேராசிரியர் அப்துல் பாரிக்கு தடியடிகள் பல விழுந்தன. குதிரைப் போலீஸார் குதிரைகளை என் கிட்டத்தில் கொண்டுவந்த போதிலும் தடிகளால் என்னை அடிக்கவில்லை. அகஸ்மாத்தாக நான் விடப்பட்டேனு அல்லது வேண்டுமென்றே என்னை அடிக்காமலிருந்து விட்டார்களா என்பது எனக்குத் தெரியாது. பேராசிரியர் அப்துல் பாரி காயமடைந்தார்; அவர் உறுதியான பல முள்ள தேகமுடைய வராகையால் கீழே விழுந்துவிடவில்லை. தாடி வைத்துக்கொண்டு முஸ்லிம் தோற்றத்திலிருப்பார். ஒரு பலுச்சி குதிரைப் போலீஸ்காரர் இவர் பக்கத்திற்கு வந்து மெல்லிய குரலில், "மௌல்வி, இந்தக் கூட்டத்தில் நீங்களும் ஏன் இருக்கிறீர்கள்?" என்று கேட்டான். அதற்கு பேராசிரியர் அப்துல் பாரி, "உங்களுக்காக அல்லவா என்னை இங்கு அனுப்பினர்" என்றுர். அவன் திகைத்துப் போனுன். பேராசிரியரைக் கூட்டத்தின் மற்றோர் பகுதிக்கு இட்டுச் சென்று விட்டுவிட்டு வேகமாகப் போய்விட்டான்.

சில தினங்கள் இவ்வாறே நடந்து வந்தது. சத்தியாக்கிரகிகளை சில சமயங்களில் கைது செய்வார்கள்; சில சமயங்களில் கைது செய்யாதிருந்து விடுவார்கள். கூட்டம்

மாத்திரம் ஒவ்வோர் தடவையும் தாக்கி விரட்டப்படும். சிலர் காயமடைவார்கள். ஆனால் நாளுக்கு நாள் கூட்டம் அதிகமாகிக்கொண்டே வந்தது.

சர் ஹாஸன் இமாம் பிரபலமான பாரிஸ்டர்; நாட்டின் தலைவர்களில் ஒருவர். இவர் கல்கத்தா ஹைகோர்ட் ஜட்ஜாக இருந்திருப்பதோடு காங்கிரஸின் தலைவராகவு மிருந்தார். ஆனால் சத்தியாக்கிரக இயக்கத்தில் அவர் சேரவில்லை. எனவே பொதுவாக மக்கள் அவர்மீது அதிருப்தி கொண்டிருந்தார்கள். தினந்தோறும் பொது ஜனக் கூட்டம் தாக்கப்படும் இடத்திற்கு வெகு தூரத்தில் அவர் வீடு இருந்ததால் என்ன நடக்கிறது என்பது அவருக்குத் தெரியாது. இவருடைய மனைவி ஒரு நாள் நகருக்கு வந்துவிட்டு திரும்பிக்கொண்டிருக்கையில் கூட்டம் தாக்கப் பட்டதைக் கண்டு விட்டார். இளைஞர்களின் தலையிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருப்பதையும் தமது கண்ணால் பார்த்தார். தாம் கண்ட விவரங்களை அவர் தமது கணவ ரிடம் கூறியதோடு நிராயுதபாணிகளான மக்கள் மிருகத் தனமாகத் தாக்கப்படுகிறார்கள் என்றும், அடிக்கப்பட்டும் கூட்டத்தினர் அமைதியோடு நடந்துகொள்ளுகின்றனர் என்றும் விளக்கினார். சர் ஹாஸன் இமாம் அதிக மன வேதனையடைந்து விட்டார். என்னை டெலிபோனில் அழைத்து தம்மைச் சந்திக்கும்படிக் கூறினார். நான் எல்லா விபரங்களையும் சொல்லவே, அவர் உணர்ச்சி வேகம் மிக்கவ ராகையால், மனமுருகிப் போனார். எங்கள் போராட்டத் திற்கு வேண்டிய உதவிகளை தாம் செய்வதாக என்னிடம் தெளிவாகக் கூறினார். நான் அதிக திருப்தியடைந்தேன். மக்களைப் பொறுத்தவரையில் எந்த வகையிலும் அமைதிக் குறைவே ஏற்படாது என்று அவருக்கு உறுதி கூறினேன்.

காலம் போய்க்கொண்டிருந்தது. நல்ல வெள்ளி, ஈஸ்டர் விடுமுறை நாட்கள் வந்தன. எதனால் என் மனதில் அது தோன்றியது என்பது எனக்குத் தெரியாது. சத்தியாக்கிரகம் ஆத்மிகப் போராட்டமேயாகையால், ஒரு வர் தன்னுடைய மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நாம் தடையாக இருந்துவிடக்கூடாது என்று என் மனதில்

பட்டது, எல்லா அதிகாரிகளும் ஆங்கிலேயர்களாகவும் கிறிஸ்தவர்களாகவுமிருந்தனர். குதிரைப் போலீஸாரெல்லாம் முஸ்லிம்கள். முஸ்லிம்கள் வெள்ளிக்கிழமை தொழுகின்றனர். கிறிஸ்தவர்கள் நல்ல வெள்ளி, ஈஸ்டர் திங்கள் ஆகிய நாட்களில் மாதா கோயிலுக்குப் போகின்றனராகையால், அவர்களுடைய மத காரியங்களுக்கு நாம் இடையூறாக இருக்கக் கூடாது. எனவே உடனே ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு எழுதினேன். குதிரைப் போலீஸார் விரும்பினால் எவ்விதத் தடையுமின்றி அவர்கள் தங்களுடைய பிரார்த்தனையைச் செய்து கொள்ளுவதை முன்னிட்டு, முஸ்லிம்களின் பிரார்த்தனை நேரமான வெள்ளிக்கிழமை பிற்பகலில் தொண்டர்கள் கோஷ்டி எதுவும் ஊர்வலமாக வராது என்றும், நல்ல வெள்ளி, ஈஸ்டர் திங்கள் ஆகிய நாட்களில் கிறிஸ்தவ அதிகாரிகள் தங்கள் கோயில்களுக்குப்போக விரும்புவார்களாகையால் அப்பொழுதும் தொண்டர்களின் ஊர்வலம் இருக்காது என்றும் ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு எழுதினேன். மற்ற நாட்களில் வழக்கம்போல் தொண்டர்கள் கோஷ்டிகளின் ஊர்வலமிருக்கும்.

இக்கடிதம் கிடைத்ததும் ஜில்லா மாஜிஸ்டிரேட் என்னை டெலிபோனில் அழைத்து, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் என்னை சந்திக்க விரும்புவதாகச் சொன்னார். அவர் வீட்டிற்குப் போயிருந்தேன். முதலில் என்னிடமிருந்து அவர் அறிய விரும்பியதெல்லாம், நான் எழுதியது யாவும் உண்மையில்தானா என்பதே. ஆம் என்று நான் சொன்னதும், தாம் ஆங்கிலேயரும் கிறிஸ்தவருமாகவே இருந்தாலும், எப்பொழுதுமே வானைச் சுற்றிக் கொண்டிருக்கும் ஆங்கிலேயர்களைச் சேர்ந்தவரல்ல தாம் என்றும், சர்க்கார் உத்தரவு நிறைவேற்றப்பட்டு சச்சரவு தீருவதற்கு ஒரு வழியைக் காண தாம் விரும்புவதாகவும் சொன்னார். சத்தியாக்கிரகிகளின் ஊர்வலம், இப்போது அவர்கள் போக முயற்சிக்கும் முக்கிய சாலை வழியாக வல்லாமல் வேறு சாலை வழியாகச் செல்ல அனுமதிக்கத் தாம் தயாராயிருப்பதாகவும் கூறினார். அது முடியாது என்று சொல்லி விட்டேன். முக்கியச் சாலையின் வழியாகவே ஊர்வலம் போயாக வேண்டும் என்றும், அது தடுக்கப்படும் வரையில்

அப்படி அது போய்க்கொண்டுதானிருக்கும் என்றும் சொன்னேன். ஊர்வலம் போக அனுமதிக்கப்பட்டு விடுமானால், இயற்கையாகவே அது தினம் போய்க் கொண்டிருக்க வேண்டிய அவசியமிருக்காது; கூட்டமும் இவ்வளவு இருக்காது என்றேன். கூட்டம் சேருவது ஊர்வலத்தைப் பார்க்கவல்ல என்றும், சத்தியாக்கிரகிகள்மீது போலீஸ் எடுக்கும் நடவடிக்கையைக் காண்பதற்கே என்றும் சொன்னேன்.

இதே மூச்சில் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தோம். எந்த முடிவும் ஏற்படவில்லை என்பதை முடிவாகக் கண்டேன். ஆனால் மறு நாள் காலை ஒரு சத்தியாக்கிரக கோஷ்டி ஊர்வலமாகச் சென்றபோது கூடியிருந்த கூட்டம் தாக்கப்படவில்லை. சத்தியாக்கிரகிகளைக் கைது செய்து மாஜிஸ்டிரேட் முன்பு கொண்டு போயினர். கூட்டமும் தானே கலைந்து போய்விட்டது. சத்தியாக்கிரகிகளுக்கு என்ன மாதிரியான தண்டனை விதிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்பி நான் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குப் போனேன். நான் அங்கிருந்தபோது இரண்டாவது கோஷ்டி ஊர்வலமாகப் போக வேண்டிய நேரம். எப்பொழுதும் போல் போலீஸார் அங்கு அதிகமிருந்த போதிலும் இரண்டாவது சத்தியாக்கிரக கோஷ்டியை அவர்கள் தடுக்கவில்லை யென்றும், சாலை வழிப் போக அனுமதித்து விட்டார்கள் என்றும் அறிந்தேன். தம் முன்பு நிறுத்தப்பட்டிருந்த சத்தியாக்கிரகிகளுக்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டு கலையும் வரை சிறைத் தண்டனை விதித்தார். தீர்ப்புக் கூறியவுடனேயே தண்டனையும் அனுபவிக்கப் பட்டு முடிந்து விட்டது. பின்னர் மற்றோர் கோஷ்டியும் ஊர்வலமாகப் போயிற்று. அதையும் போலீஸார் தடுக்கவில்லை. மறுநாள் அந்த இடத்திற்குப் போலீஸார் வரவேயில்லை. இவ்விதம் சத்தியாக்கிரகம் வெற்றிகரமான முடிவுக்கு வந்தது. முற்றிலும் பலாத்காரமற்ற முறையில் சத்தியாக்கிரகம் நடந்தால் மக்களிடம் அதனால் நல்ல பலன் ஏற்படுகிறது என்பதை அறிந்தேன். சத்தியாக்கிரகத்தை நசுக்கிவிடுவதற்கு அவர்கள் மீது சர்க்கார் உபயோகிக்கும் பலாத்காரத்தின் அளவுக்கு மக்களின் உற்சாகம் அதிகரிக்கிறது; அதோடு அடக்குமுறையைக் கண்டு பயமற்றவர்களு

மாஜினார்கள். ஆரம்பத்தில் போலீஸார் கூட்டத்தைத் தடியாலடித்தபோது ஜனங்கள் குழப்பத்தில் அங்கு மிங்கும் சிதறி ஓடினர். நாளாவட்டத்தில் அவர்களுக்கு பயம் போய்விட்டது; அவர்கள் ஓடுவதில்லை, தடியடி வாங்கிக்கொண்டு இடத்தைவிட்டு அசையாது நின்றார்கள். இதைப்பார்த்து போலீஸாரும் முற்றிலும் இரக்கமடையாம லிருந்துவிட முடியாது. நான் எழுதிய கடிதம் ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் உள்ளத்தில் மாற்றத்தை உண்டாக்கி விட்டதால், சத்தியாக்கிரகிகளைத் தடை செய்யாமல் அனுமதித்து விடுவதாக என்னிடம் சொல்லாவிட்டாலும், உண்மையில் அப்படிச் செய்தார்; சத்தியாக்கிரகிகள் போக அனுமதித்து விட்டார்.

உப்பு தயாரிக்கப்பட்ட இடங்களிலெல்லாம், போலீ ஸார் அவ்விடங்களுக்குப்போய், உப்புக் காய்ச்சுவதற்கு வைத்திருந்த சட்டிப்பானைகளை உடைத்ததோடு சில இடங்களில் அங்கு கூடியிருந்த மக்களையும் அடித்தார்கள் என்று எனக்கு இடைவிடாது செய்திகள் கிடைத்து வந்தன. பொதுவாக போலீஸார் கைது செய்வதில்லை. கைது செய்த சில இடங்களிலும் மிகச் சிலரையே கைது செய்தார்கள். இது ஏன் என்பது எனக்குத் தெரியாது; நான் கொஞ்ச காலம் வரையில் கைது செய்யப்படவில்லை. ஜில்லாக்களில் புயல் வேகத்தில் சுற்றுப் பிரயாணம் செய் தேன். ஒரு ஜில்லாவுக்குப் போனால், ஒரு மோட்டாரை எடுத்துக்கொண்டு, இரண்டு தினங்களில் அல்லது எப்படி யும் மூன்று தினங்களில் அந்த ஜில்லாவின் மூலை முடுக்கு களுக்கும் போய் வந்துவிடுவேன். வழியில் உப்பு செய் யப்படும் இடங்களுக்கும் போவேன். அங்கே என்ன நடக் கிறது என்பதைச் சுற்றிப்பார்த்து மக்களை உற்சாகப் படுத்துவேன். இவ்விதம் தினத்திற்கு பத்து அல்லது பன்னி ரண்டு சிறியதும் பெரியதுமான பொதுக்கூட்டங்களில் பேசிவிடுவேன். எங்கும் உற்சாகம் உச்ச நிலையிலிருந்தது. உப்புச் சட்டத்தை மீறுவதில் தங்கள் கிராமம் பின் னடைந்திருக்கவில்லை என்பதை எனக்குக் காட்டுவதற் காக என்னைத் தங்கள் கிராமங்களுக்கு அழைத்துச் செல்ல கிராமவாசிகள் ஆர்வத்துடனிருந்தார்கள். காய்ச்சப்பட் டிருந்த உப்பை பொதுக்கூட்டங்களில் ஏலம் போட்டு

அதன் மூலம் இயக்கத்திற்குக் கொஞ்சம் நிதியும் திரட்டுவேன். அரை அவுன்ஸ் உப்பைக்கொண்ட சிறு பொட்டலமும் ரூ. 20-க்கும் அதற்கு அதிகமாகவும் ஏலத்தில் போயிற்று. மக்களிடையே இவ்வளவு உற்சாகமும் பரபரப்பும் இருந்த போதிலும், நான் அறிந்தவரையில், அந்த மாகாணம் முழுவதிலுமே, மக்கள் பலாத்காரம் செய்தனர், கலவரத்தில் இறங்கினுர்கள் என்ற சம்பவம் எதுவுமே கிடையாது.

அதிகாரிகளின் மனோநிலை

மகாத்மா காந்திஜியின் கட்டளைப்படி மக்கள் எவ்வளவு நம்பிக்கையுடனும் உறுதியோடும் நடந்துகொண்டார்கள் என்பதற்கு பகல்பூரிலுள்ள பீகப்பூரே ஒரு சரியான உதாரணம். பீகப்பூர் கங்கைக் கரையிலிருப்பதால் அடிக்கடி வெள்ளக் கஷ்டத்திற்கு உள்ளாவதுண்டு. கங்கைக் கருகிலுள்ள எல்லா இடங்களிலும் ஏற்படுவதைப்போல அங்கும் நதியின் போக்கு மாறிவிடும். ஒருவர் நிலத்திற்கும் மற்றொருவருடைய நிலத்திற்கும் மத்தியில் எல்லைக்கு அடையாளமாக இருக்கும் பொழிகள் பிரவாகத்தில் போய் விடுமாகையால், வெள்ளம் வடிந்ததும் நிலம் யாருடையது என்பதில் அவர்களுக்குள் அடிக்கடி சச்சரவு நிகழுவதுண்டு. அப்பகுதியில் ஒரு ஆங்கிலேயர் பெரும் பகுதி நிலத்தை வாங்கியிருந்தார். இதனால் அவருக்கும் அங்கிருக்கும் மக்களுக்கும் நீண்ட காலமாகத் தகராறு இருந்து வந்தது. தன்னுடைய நிலத்தைக் காவல் புரிய பல கூர்க்காக்களை அவர் அமர்த்தியிருந்தார். இது அங்குள்ள மக்களுக்கு சகிக்கவில்லை. ஒரு நாள் எல்லோரும் ஒன்று திரண்டு அந்தக் கூர்க்காக்கள் எல்லோரையும் கொன்று, அவர்களுடைய கதியைப்பற்றி எதுவுமே தெரியாமலிருப்பதற்காக சவங்களை ஆற்றில் எறிந்து விட்டார்கள்.

1929—ல் நான் அப்பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது அங்கு மக்களுக்கு அதிக உற்சாகமிருந்ததைக் கண்டேன். சத்தியாக்கிரகம் ஆரம்பமாகும்போது அங்குள்ளவர்கள் அதிக உற்சாகத்துடன் ஈடுபடுவார்கள் என எண்ணினேன். அங்கு ஏற்பட்ட ஒரு சம்பவத்தினால் இந்த அபிப்பிராயத்தோடேயே திரும்பினேன். என் சுற்றுப் பிரயாணத்தின்போது ஒரு நாள் பகல் 2 மணிக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தேன். அதற்கு முன்னால், கொஞ்சம் தூரத்திலிருந்த ஒரு கிராமத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசப் போயிருந்தேன்; நேரத்தில் திரும்பி விடலாம் என்று

மிருந்தேன். திரும்பி வழியில் வந்துகொண்டிருந்தபோது கடுமையாக மழை பெய்தது. பலமான காற்றுமடிக்கவே இரண்டு அல்லது மூன்று மணி நேரம் காலதாமதமாகி விட்டது. முற்றிலும் நனைந்துபோய் நான் வந்து சேர்ந்த போது, அங்கு பெருங் கூட்டமிருக்கக் கண்டேன். என் வருகைக்காகக் காத்துக்கொண்டு சில மணி நேரமாக அம் மக்கள் மழையில் நனைந்துகொண்டு அப்படியே இருந்த வர் என்றும் அறிந்தேன். மழையில் அக்கூட்டத்தில் எழுந்து நின்று பேசினேன். இப்பகுதி மக்களுக்கு தீரமும் உறுதியுமிருக்கிறது என்ற எண்ணத்தை அச்சம்பவமே எனக்கு உண்டாக்கியது.

சில மாதங்களுக்குப் பிறகு சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது அப்பகுதி மக்களும் சத்தியாக் கிரகத்தை ஆரம்பித்தார்கள். உப்புச் சட்டத்தையும் அவர்கள் மீறியதோடு மதுபான விலக்கு இயக்கத்தையும் அவர்கள் நடத்தினார்கள். அங்கே ஒரு கஞ்சாக் கடை இருந்தது. அதற்குச் சிறிது தூரத்தில் காங்கிரஸ் ஆசிரமம். ஒரு பக்கத்தில் ரயில்வே ஸ்டேஷனும் சில கடைகளைக் கொண்ட சிறு மார்க்கெட்டும்; மற்றோர் பக்கத்திலோ முஜா பரி பங்களா ; இன்னும் கொஞ்சம் அப்பால் போலீஸ் ஸ்டேஷன். கஞ்சாக் கடையை மறியல் செய்கிறார்கள் என்று போலீஸ் அறிந்தும், மறியல் தொண்டர்களை அடித் தார்கள். ஆனால் தொண்டர்களின் உற்சாகம் மேலும் அதிகரித்ததால் மறியல் அதிகத் தீவிரமாயிற்று. இந்த தகவல் ஜில்லா அதிகாரிகளுக்கு கிடைத்ததும் அவர்கள் மேலும் அதிகப் போலீஸ் படையை அனுப்பினார்கள். ஒரு நாள் போலீஸார் பலவந்தமாக ஆசிரமத்திற்குள் புகுந்து தொண்டர்களையும் மற்ற ஊழியர்களையும் வெளியே துரத்திக் கொள்ளையிட்டு, பல கெஜங்கள் கத்தரையும், அதைத் தயாரிப்பதற்கு வைத்திருந்த மற்ற சாமான்களையும் சின்னுபின்னப் படுத்திவிட்டனர். போலீ ஸாரின் இந்த அட்டகாசங்களைக் கண்டு பீதியடைந்து விட்ட கஞ்சாக் கடைக்காரர் எங்கோ ஓடி விட்டார். இவ்விதம் அக்கடையும் தானே மூடப்பட்டுவிட்டது.

ஆசிரமத்தைப் போலீஸார் கைப்பற்றிக்கொண்டு அங்கேயே தங்கினார்கள். உடனே தொண்டர்கள் ஆசிர

மத்தைத் திரும்பப் பெறுவதற்காக சத்தியாக்கிரகம் செய்தார்கள். இந்த சத்தியாக்கிரகம் செய்யப்பட்ட முறை வருமாறு: சிலர் தேசியக்கொடியேந்தி ஆசிரமத்திற்குப் போவார்கள்; அவர்களைப் போலீஸார் தடுப்பார்கள். தினந்தோறும் ஒரு தொண்டர் கோஷ்டி இவ்விதம் போய்க்கொண்டிருக்கும். பொதுவாக போலீஸார் அவர்களை அடித்துக் கலைப்பார்கள். சில சமயங்களில் கைதும் செய்வார்கள். இச் செய்தி சுற்றுப்புற கிராமங்களுக்கு எட்டிவிடவே, சத்தியாக்கிரகம் நடக்கும் சமயத்தில் ஏராளமாக மக்கள் வந்து கூடிவிடுவார்கள். கூட்டம் அதிகமாகிவிடவே போலீஸார் தடியாவடித்துக் கூட்டத்தைக் கலைப்பார்கள். சில சமயங்களில் தொண்டர்களை அடிப்பார்கள்; சில சமயங்களில் அவர்களைக் கைது செய்து ஆசிரமத்தில் வைத்திருந்து கூட்டம் கலைந்த பிறகு அவர்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கோ அல்லது சிறைக்கோ அனுப்புவார்கள். இவ்விதம் நடந்துகொண்டே வந்தது. நாளுக்கு நாள் கூட்டமும் அதிகமாகிக்கொண்டே வந்தது. தூரத்திலிருக்கும் கிராமங்களிலிருந்தும் மக்கள் வர ஆரம்பித்துவிட்டதால் கூட்டம் ஏராளமாகி பதினாயிரம் இருபதாயிரத்துக்கும் வந்துவிட்டது. இவர்கள் போலீஸ் தடியடியை வாங்கிக்கொண்டு கலைந்து போவார்கள். போலீஸ் படை மிகப் பெரியதல்ல. நான் மேலே சொன்னதுபோல, அப்பகுதி மக்கள் சண்டை போடுவதில் தீரர்கள். அவர்கள் விரும்பியிருந்தால், போலீஸை இருந்த இடம் தெரியாதபடிச் செய்திருப்பார்கள். ஆனால் அவர்களில் ஒருவர்கூட திருப்பி அடிக்கவோ, போலீஸாரை ஒரு கடுஞ்சொல் சொல்லவோ முற்பட்டதில்லை.

நான் அங்கு ஒரு நாள் போனேன். போலீஸ் ஸ்டேஷன் கங்கைக்கு வடக்கில், பகல்பூரிலிருந்து கொஞ்ச தூரத்திலிருந்தது, பீகப்பூர் ஸ்டேஷனிலிருந்து கங்கைக் கரைக்கு ஒரு கிளை ரயில் பாதையுண்டு. அங்கு போய் படகேறியே பகல்பூருக்குப் போவார்கள். நான் பகல்பூரிலிருந்தே அங்கு போனதால் அவ்வூர்க்காரர்கள் சிலரும் என்னுடன் வந்தனர். இவர்கள் சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்துகொள்வதற்காக வரவில்லை. அங்கு நடப்பவைகளைக் குறித்துக் கேள்விப்பட்டிருந்ததால் என்ன நடக்கிறது

என்பதை நேரில் பார்க்கவே வந்தார்கள். பாட்னாவிலிருந்து சில நண்பர்களும் என்னுடன் வந்திருந்தார்கள்.

நாங்கள் அங்கு போகிறோம் என்ற செய்தி எங்களுக்கு முன்னாலேயே அங்கு போய்விட்டது. வழக்கமாக இருப்பதைவிட ஜனக்கூட்டம் அன்று அதிக ஆர்வத்துடனிருந்தது. தமது போலீஸ் படையுடன் போலீஸ் சூப்பரின்டெண்டும் அங்கிருந்தார். குறிப்பிட்ட நேரத்தில் சில தொண்டர்கள் புறப்பட்டார்கள். சாலையின் இரு பக்கங்களிலும் கூட்டமிருந்தது. கொஞ்ச தூரத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அதில் நான் பேசினேன். போலீஸாரும் வந்திருந்தபோதிலும் கூட்டத்தில் குறுக்கிடவில்லை. சத்தியாக்கிரகத் தொண்டர்கள் ஆசிரமத்தின் வாசலை அடைந்ததும் அவர்களைக் கைது செய்து ஆசிரமத்திற்குள் கொண்டுபோய் விட்டனர். வேறு எதுவும் நடக்கப்போவதில்லை என்று எண்ணியிருந்தோம். ஆனால் போலீஸ் சூப்பரின்டெண்டு தடிகள் தாங்கிய சுமார் பதினைந்து போலீஸாருடன் வந்து கூட்டத்தைத் தடியாலடிக்கும்படி உத்தரவிட்டார். போலீஸார் தடிகளைத் தாராளமாக உபயோகித்ததோடு சாலையின் இரு பக்கங்களிலுமிருந்த கூட்டத்தினரை வெகு தூரம் வரையில் அடித்துக்கொண்டே போனார்கள். அடித்துக்கொண்டே சாலை நெடுகச் சென்றார்கள். கூட்டத்திலிருந்தவர்களில் ஒருவர்கூட எதிர்க்கவில்லை. ஒருவரும் ஓடவுமில்லை. நாங்கள் கொஞ்சம் தூரத்திலிருந்தோம். என்னுடன் வந்தவர்கள் கூட்டத்தில் பல பகுதிகளிலும் இருந்தார்கள். போலீஸ் சூப்பரின்டெண்டு தமது ஆட்களுடன் நானிருந்த இடத்திற்கு வந்தார். நானும் தடியடிகள் பல பட்டுக் காயமடைந்தேன். என்மீது படவிருந்த அநேக அடிகளை ஒரு தொண்டர் என்னை மறைத்துக் கொண்டு முன்னால் நின்று தாமே வாங்கிக்கொண்டுவிட்டதால் நான் பலத்த காயமடையவில்லை. ஆனால் அத் தொண்டர் பலத்த காயமடைந்தார். இன்னும் கொஞ்சம் தூரத்தில் நின்ற பேராசிரியர் அப்துல் பாரிக்கு பலத்த காயம்பட்டு ரத்தம் வழியக் கீழே விழுந்துவிட்டார். பிறகு சூப்பரின்டெண்டும் போலீஸாரும் கூட்டத்தின் நடுவே நெடுகக் கண்டபடி யெல்லாம் அடித்துக்கொண்டே போய் ஆசிரமத்திற்குத் திரும்பினார்கள்.

இதே போலவே தினமும் நடந்து வந்ததால், அன்றைய வேலை அத்துடன் முடிந்துவிட்டது என்று எண்ணிய கூட்டம், நாலா பக்கங்களிலும் கலைந்துபோயிற்று. தாங்கள் திரும்புவதற்குப் புறப்படும் ரயிலுக்குக் கொஞ்ச நேர மிருந்ததால் பகல்பூரிலிருந்து வந்தவர்கள் மாத்திரம் அங்கேயே நின்றனர். கூட்டம் கலைந்ததும் அங்கு வசித்து வந்த ஒரு டாக்டர் வந்து எங்கள் காயங்களுக்குக் கட்டுக் கட்டினார். நாங்கள் புல் தரையில் உட்கார்ந்தோம், எங்கள் காயங்கள் சுத்தஞ் செய்யப்பட்டு வந்தபோது, சூப்பரின்டெண்டு, ஒரு இன்ஸ்பெக்டர் சில கான்ஸ்டபிள்களுடன் எங்களை நோக்கி வருவதைப் பார்த்தோம். மற்றோர் தடியடி நடக்கப்போகிறது என்று எண்ணினோம். ஆனால் கொஞ்ச தூரத்தில் நின்றுகொண்டு எங்களில் ஒருவரைக் கைது செய்துகொண்டு போய்விட்டார்கள்.

ரயிலுக்குக் காத்துக்கொண்டிருந்தோம். கூட்டத்துடன் கலைந்து போய்விடாத சிலர் எங்களுடன் வந்தார்கள். இவர்கள் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அதிக ஆத்திரமடைந்திருந்தார்கள். இவர்கள் என்னைச் சுற்றி தரையில் உட்கார்ந்துகொண்டு கோபத்தோடு வருமாறு சொன்னார்கள்; "நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். எங்கள் கண் முன்பு நீங்களும் மற்ற தலைவர்களும் அடிபடப் பார்க்கும் விதி எங்களுக்கு ஏற்பட்டுவிட்டது. நாங்கள் எதுவும் செய்ய முடியவில்லை. உங்கள்மீது மாத்திரமல்ல, எவர் பேரிலுமே கையைத் தூக்கி அடிக்கும் துணிவு இந்தப் போலீஸ்காரர்களுக்கு வந்திருக்காது. ஆனால் நாங்கள் என்ன செய்ய முடியும்? மகாத்மாவோ எங்கள் கைகளைக் கட்டிவிட்டார்; போலீஸாருக்கு எதிராக நாங்கள் கையைத் தூக்கவும் கூடாது. அப்படி இல்லாதிருந்தால், என்ன வந்தாலும் சரி என்று போலீஸ்காரர்களை ஒழித்துக் கட்டியிருப்போம்."

பிறகு அவர்கள் தேம்பித் தேம்பி குழந்தைகள் போல அழ ஆரம்பித்துவிட்டனர். அமைதியாக இருப்பதில்தான் அவர்களுடைய தீரம் அடங்கியிருக்கிறது என்றும், முடிவில் இதுதான் வெற்றி யளிக்கும் என்றும் அவர்களுக்கு விளக்கிக் கூறினேன்.

நாங்கள் பகல்பூருக்குச் சென்ற அதே ரயிலில் சில போலீஸ்காரர்களும் வந்தார்கள். இச்சம்பவத்திலிருந்த முக்கியத்துவம் எங்களுக்கு அப்பொழுது தெரியவில்லை, மறு நாள் காலையில் நான் குளிக்க கங்கைக்குப் போனேன். அங்கு குளிப்பதற்காக வந்திருந்த சில ஹிந்து கான்ஸ்டபிள்கள், முதல் நாள் என்ன நடந்தது என்பதை என்னிடம் சொன்னார்கள். அவர்கள் கூறியதாவது; "சீகப்பூரில் போலீஸாரிடையே இரண்டு கட்சிகள். கூட்டத்தை, முக்கியமாக உங்களைப் போன்றவர்களை, அடிக்கும்படி போலீஸ் சூப்பரின்டெண்டு உத்தரவிடும்போது அது எங்களுக்குப் பிடிப்பதில்லை, எனவே தடியால் அடிப்பதைப் போல பாவனை செய்வோமே யொழிய நாங்கள் கூட்டத்தினரை அடிப்பதில்லை. ஆனால் தங்கள் தடிகளால் நன்றாகவும் பலமாகவும் அடித்துவிடும் கான்ஸ்டபிள்களும் சிலரிருந்தனர். நீங்கள் அடிபட்டு, அப்துல் பாரி சாஹிபும் பலத்த காயமடைந்து பிரக்ஞையற்றுக் கீழே விழுந்துவிட்டபோது எங்களால் சும்மா இருக்க முடியவில்லை, அந்த விதமாக இனியும் தங்கள் தடிகளை உபயோகிப்பார்களானால், அது அவர்களுக்கே நல்லதல்ல என்று அந்த கான்ஸ்டபிள்களிடம் சொன்னோம், அவர்கள் கேட்காமல் பாரி சாஹிபை திருப்பவும் அடித்தார்கள். அந்தத் தடியடிகளை நாங்கள் எங்கள் மீது வாங்கிக்கொண்டு அப்துல் பாரி சாஹிபைக் காப்பாற்றியதோடு எங்கள் தடிகளால் அந்த கான்ஸ்டபிள்களையும் அடித்தோம். எங்களுக்கு முன்பக்கமாக சூப்பரின்டெண்டு இருந்ததால் தமக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பதோ, யார் தடி யாரை அடிக்கிறது என்பதோ அவருக்குத் தெரியாது, இவ்விதம் அப்துல் பாரி சாஹிபின் உயிரைப் பாதுகாக்க எங்களால் முடிந்தது. அந்த கான்ஸ்டபிள்களுக்கும் நல்ல அடி கொடுத்தோம், அவர்கள் எங்கள்மீது புகார் சொல்லிவிடுவார்களே என்று பயந்தோம். இச்சம்பவம் முடிந்ததும் நாங்கள் முந்திக்கொண்டு அந்த கான்ஸ்டபிள்கள் பேரில் புகார் கூறினோம். தடிகளை உபயோகிப்பது எப்படி என்பதே அவர்களுக்குத் தெரியவில்லை என்றும், கூட்டத்தை அடிப்பதற்கு பதிலாக ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்ளுகிறார்கள் என்றும் சொன்னோம். ஆனால் அவர்களோ,

நாங்கள் கூறியது உண்மையல்ல என்றும், நாங்கள் ஒன்றும் செய்யாமலிருந்துவிட்டதோடு, தடிகளைத் தாங்கள் உபயோகிக்க முடியாதபடித் தடுத்து தங்களையும் நாங்கள் அடித்துவிட்டதாகவும் சொன்னார்கள். சூப்பரின்டெண்டு இதையெல்லாம் கேட்டுக்கொண்டு ஒன்றுமே சொல்லவில்லை. இரவில் எங்களை பகல்பூருக்கு அனுப்பிவிட்டார். இதனாலேயே நீங்கள் இங்கு திரும்பிய கப்பலிலேயே நாங்களும் வந்தோம்''.

எங்களுக்கு எதிராகச் செய்ய தாங்கள் விரும்பப்படும் அளவுக்கு எங்களுக்கு எதிரானது எதையுமே செய்துவிட போலீஸார் தயாராயிருந்தார்கள். ஆனால் அந்தப் போலீஸாரிடையேயும் எங்கள்மீது அனுதாபம் இருந்து வந்தது என்பதை இதனால் அறிந்தோம். தங்களுடைய உத்தியோகங்களை விட்டுவிட அவர்கள் தயாராயில்லை; ஆனால் அதே சமயத்தில் சத்தியாக்கிரகிகள் மீது அதிக்கிரமங்களைச் செய்யவும் அவர்கள் தயாராயில்லை. அதிகாரிகளில் சிலர் கண்ணியமானவர்களாயிருந்தாலும் பொதுவாக அதிகாரிகளும் இப்படித்தான் இருந்தார்கள் என்று சொல்லிவிட முடியாது. பகல்பூரில் எனக்கு மற்றோர் சந்தோஷகரமான அனுபவமும் உண்டு.

எங்கள் காயங்களுக்குக் கட்டுக் கட்டிக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு போலீஸ் சூப்பரின்டெண்டு, ஒரு இன்ஸ்பெக்டர், சில கான்ஸ்டபிள்களுடன் நாங்களிருந்த இடத்திற்கு வந்து எங்களில் ஒருவரைக் கைது செய்துகொண்டு போனார் என முன்னால் கூறினேன். அந்த இன்ஸ்பெக்டர் யாரென்பதை நான் அப்பொழுது அடையாளம் தெரிந்து கொள்ளாவிட்டாலும் பிறகு தெரிந்தது. அவர் என்னுடன் படித்தவர் என்பதும், அப்பொழுது போலீஸில் இன்ஸ்பெக்டராயிருக்கிறார் என்பதும் ஞாபகம் வந்தது. பீகப்பூரில் போலீஸார் எடுத்துக்கொண்ட கதரும் நூலும் அகில இந்திய நூற்போர் சங்கத்தைச் சேர்ந்தவையாகையாலும், அதன் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும்படி சர்க்கார் உத்தரவு பிறப்பிக்காததாலும், அவற்றைத் தாம் ஒப்படைத்துக்கொள்ளும்படி அங்கே பாகல்பூரிலிருந்து ஒருவரை அனுப்பினேன். நான் அனுப்பியவர் இந்த போலீஸ் இன்ஸ்பெக்டரைச் சந்தித்தார். பேசிக்கொண்

டிருந்தபோது, நான் சொன்னதைக் கூறியிருக்கிறார். அதாவது, அந்த இன்ஸ்பெக்டரின் பெயரைக் கொண்டவர் என்னுடன் படித்தவர் என்றும், அன்று மாலை நான் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை என்றும் நான் சொன்னதை இவர் அந்த இன்ஸ்பெக்டரிடம் சொல்லியிருக்கிறார். இதைக் கேட்டதும் இன்ஸ்பெக்டர் கலங்கி விட்டார் என்பது நன்றாகத் தெரிந்ததாம். கதரைப் பற்றி மாத்திரமே பேசும்படியும், மற்றவைகளைப்பற்றி யெல்லாம் பேச வேண்டாம் என்றும் கூறி விட்டாராம். ஆனால் போனவர் கெட்டிக்காரர். கொஞ்ச நேரம் கதரைப் பற்றிப் பேசி விட்டுத் திரும்பவும் என் பெயரைச் சொன்னாராம். திரும்பவும் இன்ஸ்பெக்டர் கலக்கமடைந்து விட்டாராம்.

போய் விட்டுத் திரும்பியவர் இதை என்னிடம் சொன்னதும் ஒன்று தெரிந்து கொண்டேன். தங்களுடைய உத்தியோகங்களின் நிமித்தம் பலர் நம்மை எதிர்ப்பதாகத் தோன்றினாலும், அவர்களுக்கு உள்ளுக்குள் சத்தியாக்கிரகிகளிடம் அனுதாபமும் மதிப்புமிருக்கிறது என்பதை அறிந்து கொண்டேன். மகாத்மாவின் அஹிம்சைக் கொள்கை எவ்விதம் எதிராளிகளின் உள்ளங்களையும் உருக்கி வருகிறது என்பதையும் உணர்ந்தேன்.

அந்த இடத்தில் ஜில்லா மாஜிஸ்டிரேட் ஒரு இந்தியர். அவருடைய மூத்த சகோதரர் எங்களுடன் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்தார். சிறைக்குச் சென்று அங்கு பலத்த நோயுற்றார். அவருடைய தேக நிலை மோசமாகி விடவே அவரை விடுதலை செய்து விட்டார்களெனினும் சீக்கிரத்தில் இறந்து விட்டார். இதனால் அவருடைய குடும்பத்திற்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஆனால் ஜில்லா மாஜிஸ்டிரேட் உத்தியோகத்திலிருந்ததால் அவருடன் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ள முடியவில்லை. பீகப்பூரிலிருந்து நான் பகல்பூருக்குத் திரும்பியதும், என்னை சந்திக்க தாம் ஆவலுடனிருப்பதாக, எங்கள் இருவருக்கும் தெரிந்தவரான ஒரு நண்பரிடம், அந்த ஜில்லா மாஜிஸ்டிரேட் சொல்லியனுப்பினார். தாம் வகிக்கும் பதவியின் காரணமாக பகிரங்கமாகச் சந்திக்க இயலவில்லை என்றும், அந்த

நண்பருடன் நான் தம் வீட்டுக்கு வந்தால் நன்றியறித லுள்ளவராவார் என்றும் சொல்லியனுப்பியிருந்தார். அவர் ஜில்லா மாஜிஸ்டிரேட்டாயிருந்தாலும் அந்த ஜில்லாவில் அவருக்கு அதிக அதிகாரமில்லை என்று முன்னாலேயே கேள்விப்பட்டிருந்தேன். பகல்பூர் டிவிஷன் கமிஷனர் தமது தலைமை ஸ்தானத்தை பகல்பூரிலேயே வைத்துக் கொண்டிருந்தார். அப்பகுதியில் சத்தியாக்கிரக இயக்கத்தை அடக்குவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் அவரும் போலீஸ் சூப்பரின்டெண்டுமே செய்து வந்தார்கள்.

அந்த நண்பருடன் இரவில் ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் வீட்டுக்குப் போனேன். என்னைப் பார்த்ததும் அவர் என் காலடியில் விழுந்து தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார். அவர் சொன்னதாவது: "என் அண்ணாவும் நீங்களும் எவ்வளவு அன்யோன்யமாயிருந்தீர்கள் என்பதை நான் அறிவேன். ஆகையால் நீங்கள் என் அண்ணன் போன்றவர்கள். நான் இங்கே ஜில்லா மாஜிஸ்டிரேட். இங்கு நடக்கிறவைகளெல்லாம் என் உத்தரவின்படியே நடப்பதாகக் கருதப்படுகிறது. நான் ஜில்லா மாஜிஸ்டிரேட்டாக இருந்தும் நீங்களும் உங்களைப் போன்ற மற்ற தலைவர்களும் அடிக்கப் பட்டிருக்கிறீர்கள். இவையெல்லாம் என் உத்தரவுக்கு மாறாக நடந்திருக்கின்றன. அவைகளுக்கும் எனக்கும் எவ்விதமான சம்பந்தமுமில்லை". என்னாலான வரையில் அவருக்கு ஆறுதல் கூறிவிட்டு என் இடத்திற்குத் திரும்பினேன்.

பகல்பூர் ஜவுளி வியாபாரத்திற்கு முக்கியமான இடம். அந்தக் காலத்தில் வெளிநாட்டுத் துணிகளுக்கு அவ்வூரே பெரிய மார்க்கெட். பீகப்பூரில் நடந்த தடியடியின் விளைவாக பகல்பூர் வர்த்தகர்களிடையே வெறுப்பு மிஞ்சி விட்டது. இரண்டொரு நாட்களுக்கெல்லாம், அன்னியத் துணிகளைத் தாங்கள் விற்காமலிருந்து விடுவதாக உறுதிமொழி அளித்தனர். தங்களிடமிருந்த வெளிநாட்டு ஜவுளியையெல்லாம் மூட்டை கட்டி, காங்கிரஸ் கமிட்டி அதில் முத்திரை வைத்து விடும்படிச் செய்ததோடு, காங்கிரஸின் உத்தரவில்லாமல் அம் மூட்டைகளை

அவிழ்த்து விற்பதில்லை என்றும் வாக்களித்தனர். வெளி நாட்டுத் துணிக் கடைகளை பகல்பூரில் மறியல் செய்ய நாங்கள் தயாரா யிருந்தோம். ஆனால் நான் கூறியபடி வெளி நாட்டுத் துணி முழுதும் மூட்டை கட்டப்பட்டு முத்திரையும் வைக்கப்பட்டு விட்டதால் மறியலுக்கு அவசியமில்லாது போயிற்று.

பிகப்பூர் மக்களின் உற்சாகம் திடீரெனத் தோன்றிக் குறைந்துவிடும் ரகத்தது அல்ல. சத்தியாக்கிரகம் நாட்டில் நடந்து கொண்டிருந்த வரையில், காந்தி—இர்வின் ஒப்பந்தத்தை அனுசரித்து அது நிறுத்தப்பட்ட வரையில், அவர்கள் விடாமல் தொடர்ந்து தொண்டர்கள் கோஷ்டிகளை தினந்தோறும் அனுப்பிக் கொண்டே இருந்தார்கள். நான் மேலே சொன்ன சம்பவத்திற்குப் பிறகு கூட்டத்தின் மீது அடிப்பதை நிறுத்தி விட்டனர். இதனால் நாளாவட்டத்தில் கூட்டமும் குறைந்தது. ஆனால் சத்தியாக்கிரகள் மீது அநேக அட்டூழியங்களைச் செய்து கொண்டுதான் வந்தனர். அடிப்பது, கைது செய்வது ஆகியவைகளோடு சித்திரவதையும் செய்தார்கள். ஒரு சமயம் ஒரு சத்தியாக்கிரகியின் காதில் சைக்கிள் பம்பை வைத்து பலமாகக் காற்றடித்தார்கள். இதனால் அவருடைய காதின் உள் ஜவ்வு உடைந்து இதன் விளைவாக அவர் இன்றுங் கூட கஷ்டமனுபவித்து வருகிறார். என்றாலும் மக்களும் சத்தியாக்கிரகிகளும் அஞ்சாமல் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டு போனார்கள்.

முதல் சிறைவாசம்

சத்தியாக்கிரகம் ஆரம்பமாகி இரண்டு மாதங்களாகி விட்டன. நானும் பண்டித மோதிலால் நேருவுமே நாடெங்கும் சத்தியாக்கிரக ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாலும் எங்களிருவரையும் கைது செய்யவில்லை. பண்டிதஜி ஆமதாபாத்திலிருந்து கொண்டு காரியங்களை கவனித்து வந்தார். அங்கு காங்கிரஸ் காரியக் கமிட்டியும் அடிக்கடி கூடி வந்தது. அக் கூட்டங்களுக்குப் போவேன். ஆனால் என் மாகாணத்தில் சுற்றுப் பிரயாணம் செய்வதிலேயே பெரும்பாலும் நான் ஈடுபட்டிருந்தேன். என்னைக் கைது செய்யாதது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. என்னைக் கைது செய்யக் கூடாது என்று மாகாண சர்க்கார் ஆங்காங்கு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தது என்று தெரிந்தது. தனியாகவே சுற்றுப் பிரயாணம் செய்து வந்தேன். கொஞ்ச காலத்திற்குப் பிறகு, என்னைக் கைது செய்ய வேண்டாம் என்றிருந்த தடை வாபஸ் வாங்கப்பட்டு விட்டது என்றும், என்னைக் கைது செய்வது அவசியம் என்று எந்த ஜில்லா மாஜிஸ்டிரேட்டாவது கருதினால் கைது செய்யலாம் என்றும் அறிவிக்கப் பட்டது என்று அறிந்தேன். இவைகளை யெல்லாம் போலீஸ் அதிகாரிகளிடமிருந்தே நான் அறிந்ததோடு மாகாண சர்க்கார் அப்போதைக்கப்போது பிறப்பிக்கும் உத்தரவுகளையும் அவர்கள் எனக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். என்னைக் கைது செய்ய வேண்டாம் என்றிருந்த தடை நீக்கப் பட்டுவிட்டது என்பதை என்னிடம் கூறியவர், நான் இனி தனியாகச் சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டாம் என்றும், யாரையாவது உடனழைத்துச் செல்லும்படியும், ஒரு வேளை நான் கைதானால் மற்றவர்களுக்கு இத்தகவலை அவர் கொடுக்கச் சௌகரியமாகும் என்றும் கூறி எச்சரிக்கை செய்தார். அந்த எச்சரிக்கைகளை யெல்லாம் பொருட்படுத்தாமல் நான் என் வேலையைச் செய்து கொண்டு போனேன். என்னை எங்கு கண்டாலும் கைது

செய்யும்படி பல ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளுக்கும் மாகாண சர்க்கார் உத்தரவு பிறப்பித்துவிட்டது என்றும் பிறகு தெரிந்தது. இத்தகவல் கிடைத்த பிறகும் நான் பல ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்தும் என்னைக் கைது செய்யவில்லை. என்னைக் கைது செய்தால் மக்களிடையே கிளர்ச்சியும் ஆத்திரமும் அதிகமாகி விடுமாகையால் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள எந்த மாஜிஸ்டிரேட்டும் தயாரா யில்லாததே கைது செய்யாததற்குக் காரணம் என்று கண்டேன். என்னைக் கைது செய்யாததற்கு அவர்களுக்கு வேறு ஒரு சமாதானமும் இருந்தது. ஒரு ஜில்லா முழுவதையும் இரண்டொரு நாட்களில் சுற்றி வெகு வேகத்தில் நான் பிரயாணம் செய்து வந்ததால், என்னைக் கைது செய்ய ஒரு ஜில்லா மாஜிஸ்டிரேட் நினைப்பதற்குள் நான் அவருடைய எல்லையை விட்டு இன்னுமொரு மாஜிஸ்டிரேட்டின் எல்லைக்குப் போய் விடுவேன்.

கடைசியாக நான் என் சொந்த ஜில்லாவான சாராவுக்குப் போனபோது என்னைக் கைது செய்துவிட வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. நான் அந்த ஜில்லாவாசி. ஆகையால் என்னைக் கைது செய்ய வேண்டியது அந்த ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் விசேஷக் கடமையாயிற்று. எனவே போலீஸார் என்னைத் தேடிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இரண்டு நாட்கள் வரை என்னைக் கைது செய்ய அவர்களால் முடியவில்லை. நான் ஒளிந்திருந்து வேலை செய்யவுமில்லை; அவர்களிடம் அகப்படாமல் தப்ப முயற்சிக்கவுமில்லை. உண்மையில் எங்கெந்த இடங்களுக்குப் போவது என்பதைக் குறித்து எனக்குத் திட்டமான வேலை முறை எதுவும் கிடையாது. என்றாலும் ஜில்லாவின் இரண்டு நாட்கள் சுற்றிவிட்டு சப்ராவில் என் அண்ணனுடனும் என் குடும்பத்தினர் மற்றவர்களுடனும் தங்கப் போகிறேன் என்பது தெரிந்திருந்தது. நான் அங்கு வருவேன் என்று போலீஸார் இரவு பத்து அல்லது பதினொரு மணி வரையில் காத்திருந்தார்கள். நான் வராது போகவே, வேறு எங்காவது நான் போயிருக்கக்கூடும் என்று அவர்கள் நினைத்து என்னை மற்ற இடங்களில் தேடப் போய்விட்டார்கள். நான் வழியில் பல கிராமங்களுக்கும் போகவேண்டியிருந்ததால்

காலதாமதமாகி நடுநிசியில் திரும்பினேன். மறுநாள் நான் போக இருந்த ஒரு இடத்தில் போலீசார் எனக்காகக் காத்திருந்தார்கள். இரவு சப்ராவில் இருந்துவிட்டு காலையில் நான் அன்று போக வேண்டியிருந்த ஊருக்குப் புறப்பட்டேன். நான் டவுனுக்கு வெளியே போகும் முன்பு வழியில் போலீசார் சந்தித்து என்னைக் கைது செய்தார்கள். என்னை சப்ரா சிறைக்குக் கொண்டு போகும் முன்பு என்னை என் வீட்டுக்கு இட்டுச் சென்று என் குடும்பத்தினரிடம் விடை பெற்றுக்கொள்ள அனுமதித்தனர். நான் கைதியான செய்தி டவுனில் பரவியதும் ஆரவாரம் செய்வதற்காக மக்கள் ஒரு ஊர்வலத்தை நடத்தினர்.

இதுவே என் சிறை வாழ்க்கையின் முதல் அனுபவம். நான் சிறைக்குள் கொண்டு போகப்பட்டதும், அதற்குள் முன்னுலேயே இருந்த முன்னூறு, நானூறு சத்தியாக்கிரகிகளுக்கும் நான் வந்துவிட்டது தெரிந்தது. எனவே இவர்கள் கோஷங்களை முழங்கியதோடு சிறை வாசலுக்கு வரவும் ஆரம்பித்தார்கள். டவுனில் முன்னுல் ஆரம்பமான ஊர்வலம் அந்த வழியாகச் சென்ற போது நான் ஜெயிலருடன் அவரது அறையிலிருந்தேன். எனக்குத் தங்கள் வரவேற்பை அளிப்பதற்காக நான் சீக்கிரத்தில் உள்ளே கொண்டுவரப்பட வேண்டுமென்று உள்ளேயிருந்த சத்தியாக்கிரகிகள் விரும்பினுர்கள். ஆனுல் சிறைக்கு வெளியில் கூட்டமிருந்ததோடு சிறைக்குள்ளேயும் கூச்சலிருந்ததால் ஜெயிலர் பயமடைந்து நிதானமிழந்துபோய், வெளியிலிருந்த ஊர்வலம் சிறை மதிலுக்குள் வராமல் சாலை வழியே போய்க்கொண்டிருந்தும், வெத்துத் தோட்டாக்களைச் சுடும்படி உத்தரவு போட்டார். சிறைக்குள்ளிருந்தவர்கள் துப்பாக்கி வெடிச் சப்தத்தைக் கேட்கவே, வெளியிலிருந்தவர்கள் சுடப்படுகின்றனர் என்று நினைத்துவிட்டதால் முன்பைவிட அவர்கள் அதிக ஆத்திரமடைந்து விட்டார்கள். அவர்களை சாந்தப்படுத்த என்னை உள்ளே அனுப்பும்படி ஜெயிலரைக் கேட்டேன். வெளியிலிருந்த ஊர்வலம் சிறைக்குக் கிட்டத்திலிருந்ததாலோ என்னவோ, சிறையின் உள் கதவைத் திறக்கவே ஜெயிலருக்குப் பயம். சிறைக்குள்ளிருக்கும் கைதிகளை

என் உதவியின்றி அமைதிப்படுத்த முடியாது என்பதைக் கடைசியாக உணர்ந்ததும் ஜன்னல் வழியாக அவர்களுக்குப் பேசும்படிக் கேட்டுக்கொண்டார். இதனால் அவர்கள் சாந்தமடைந்தார்கள்.

என்னைக் கைது செய்தபோது என் அண்ணன் சப்ராவில் இல்லை. என் மீதிருந்த வழக்கு சிறையில் விசாரிக்கப்பட்டபோது என்னைப் பார்க்க அவர் வந்தார். எனக்கு ஆறு மாத சிறைத் தண்டனை விதித்தார்கள். இரு முறைகளில், ஒன்று சப்ராவிலும், பிறகு பாட்னாவிலும், என் வழக்குகளை விசாரித்து தண்டனை விதித்த மாஜிஸ்டிரேட் எனக்கு முன்பே தெரிந்தவர். நான் வக்கீல் தொழில் நடத்தி வந்தபோது அவர் என் கட்சிக்காரர்; ஹைகோர்ட்டு முன்பு அப்பீலிலும் அவருக்காக ஆஜராகியிருக்கிறேன். எனக்கு தண்டனையை விதித்தாரேயன்றி தலை நிமிர்ந்து என்னை அவர் பார்க்கவேயில்லை. ஜில்லா மாஜிஸ்டிரேட் பஞ்சாப்காரரான ஒரு முஸ்லிம்.

என்னை வெகு ரகசியமாக ஹாஸாரிபாக் சிறைக்கு மாற்றிவிட்டனர். அங்கு பல சத்தியாக்கிரகிகள் இருந்தார்கள். சம்பரானிலிருந்து ஹாஸாரிபாக்குக்கு நேர் வழியாகப் போவதானால், பாட்னா, கயா ஆகிய இரு பெரிய ரயில்வே சந்திப்பில் ரயில் மாறிப் பிறகு படகில் கங்கையைக் கடக்கவேண்டும். இந்த இடங்களிலெல்லாம் ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடுகள் நடந்துவிடக் கூடும். இவைகளையெல்லாம் தவிர்ப்பதற்காக காசி வழியாகச் சுற்றி 150 மைல்கள் என்னை மோட்டாரில் கொண்டுபோய் ஹாஸாரிபாக்குக் கொண்டுபோக முடிவு செய்தனர். ஹாஸாரி சிறைக்குள் நான் போய்ச் சேரும் வரையில் என்னை எங்கே அனுப்பியிருக்கிறார்கள் என்பது சப்ரா சிறை அதிகாரிகளுக்குக்கூட தெரியாது. ஜில்லா மாஜிஸ்டிரேட் அழைக்கிறார் என்று சொல்லி என்னை சிறைவாசலுக்குக் கொண்டு வந்தார்கள். அவர் எனக்காக தமது மோட்டாரில் தயாராகக் காத்துக்கொண்டிருந்தார். என்னுடைய சாமான்களை எடுத்துவரக்கூட என்னை அனுமதிக்காமல் என்னை மோட்டாரில் ஏற்றிக்கொண்டு உடனே புறப்பட்டு விட்டார். டவுனை விட்டு வெளியே

போய்விட்ட பிறகு, நான் ஹாஸாரிபாக்குக்குக் கொண்டு போகப்படுவதாக என்னிடம் சொன்னார்கள். எந்த வழி யாகப் போகிறோம் என்பதையும் கூறினர். என்னை எங்கோ கொண்டுபோய் விட்டார்களென்பது அந்தச் சிறையிலிருந்த கைதிகளுக்குத் தெரிந்ததும் ஆரவாரஞ் செய்தனர். சிறைக் கட்டிடம் ஒன்றின் இரண்டாவது மாடியிலிருந்து கொண்டு இத் தகவலை அவ் வழியாகச் செல்பவர்களுக்குச் சப்தம் போட்டுக் கூறினர். இதை என் சகோதரர் அறிந்ததும், எல்லா சத்தியாக்கிரகக் கைதி களும் ஹாஸாரிபாக் சிறையிலேயே வைக்கப்பட்டிருப்ப தால் என்னையும் அங்கேயே கொண்டு போயிருப்பார்கள் என நினைந்தார். எனவே என்னை சோனேப்பூர் ஸ்டேஷ னில் சந்திப்பதற்காக தம் மோட்டாரை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். ஆனால் நான் முன்னாலேயே கூறியிருக்கிற படி என்னை அந்த வழியாகக் கொண்டு போகவில்லை.

நான் ஹாஸாரிபாக் சேர்ந்த பிறகு, நான் இருக்கு மிடத்தை மாஜிஸ்டிரேட் என் சகோதரரிடம் கூறினார். சப்ராவுக்கு வெளியில் என்னை இட்டுச் செல்லும்போது தாம் செய்துவரும் இந்த மறைமுகமான காரியங்களுக்கு என்னிடம் மன்னிப்புக் கேட்டதோடு தாம் வகிக்கும் உத்தி யோகத்தின் காரணமாக இதை யெல்லாம் செய்யவேண்டி யிருக்கிறது என்றும், உத்தியோகத்தை விட்டுவிடும் வசதி தமக்கு இல்லை யென்றும் மாஜிஸ்டிரேட் சொன்னார். எனக்கு எந்தவிதமான அசௌகரியமும் ஏற்படாத வழியில் அவர் ஏற்பாடுகளை எல்லாம் செய்திருந்தார். வழியில் எனக்கு அசௌக்கியம், கஷ்டம் என்பது எதுவுமே இல்லை. எனக்கு பந்தோபஸ்தாக வந்த போலீஸ் அதிகாரிகளும் என்னை நன்றாக நடத்தினார்கள்.

நான் அந்த மோட்டாரில் போகிறேன் என்பது யாருக் கும் தெரியாமலிருப்பதை முன்னிட்டு, கயா ஜில்லா அவுரங்காபாத் வழியாகப் போகும்போது வேகமாக ஓட்ட வேண்டும் என்று நான் இருந்த போலீஸ் மோட்டாரின் ஓட்டிக்கு உத்தரவு. என்னுடனிருந்த போலீஸ் அதிகாரி, அனுக்கிரக பாபுவின் வீடு பக்கத்தில் ஒரு கிராமத்தில் இருக்கிறது என்றும், அவர் நோயுற்றிருக்கிறார் என்றும்

சொன்னார். அதோடு எங்கள் மோட்டாருக்குப் பின்னால் போலீஸ் சூப்பரின்டெண்டு தமது மோட்டாரில் பின் தொடராமலிருந்தால், நான் விரும்பினால் அனுக்கிரக பாபுவின் வீட்டிற்கு என்னை அழைத்துப் போக தாம் தயாராக இருப்பதாகவும் சொன்னார். அனுக்கிரக பாபு எங்கு வசிக்கிறார் என்பதும், அவருக்கு உடம்பு சுகமில்லை என்பதும் எனக்குத் தெரியும் என்று அவரிடம் சொன்னேன். அனுக்கிரக பாபுவைப் பார்க்க நான் விரும்பாததால், தமக்கு விதிக்கப்பட்டிருக்கும் உத்தரவை மீறி எதுவும் செய்யவேண்டாம் என்றும் அந்த அதிகாரிக்குக் கூறி விட்டேன்.

சிறை வாழ்க்கை அனுபவம்

நாளடைவில் சிறை அதிகாரிகளின் அபிப்பிராயமும் போக்கும் மாறுதலடைந்துவிட்டன என்பதை வருத்தத்துடன் கூறுகிறேன். சத்தியாக்கிரகிகளிடம் அன்பே ஒரு சிறிதுமில்லாதவர்கள் சிலரிருந்தனர். மற்றவர்களோ, சத்தியாக்கிரகிகளை அதிக கௌரவமாக மதித்தார்கள். பின்னால் இவர்கள்கூட அசிரத்தை கொண்டுவிட்டார்கள். இதற்கு சத்தியாக்கிரகிகளும் ஒரு அளவுக்குக் காரணஸ்தர்களாவர். ஒரு சட்டத்தை முற்றிலும் கடைப்பிடித்து நடக்கத் தெரிந்தவர்கள் மாத்திரமே அதை மீறுவதற்கும் தகுதி வாய்ந்தவர்கள் என்று மகாத்மா அடிக்கடி கூறி எச்சரிக்கை செய்திருக்கிறார். அதாவது, எப்பொழுதுமே சட்டத்தை மீறிக் கொண்டிருப்பவர், சரியான உணர்ச்சியுடன் அதை மீற முடியாதாகையால், சத்தியாக்கிரகி என்ற முறையில் சட்டத்தை மீற அவர் தகுதியுள்ளவரல்ல; அவருடைய சட்டமறுப்பு எதிராளியின் மனதில் நல்ல மாறுதலையும் உண்டாக்காது. ஆகையால் சிறையில் மான உணர்ச்சியை பாதிப்பவைகளாக இருப்பவைகளைத் தவிர மற்றெல்லா விதிகளுக்கும் உடன்பட்டு நடந்து கொள்ளும்படி எங்களுக்கு மகாத்மா அறிவித்திருந்தார். மான உணர்ச்சியை பாதிக்கும் ஒரு சிறை விதியை 1921-ம் ஆண்டு முதலே காங்கிரஸ்காரர்கள் எதிர்த்து வந்தார்கள். 1930-லும் அந்த விதி சிறை விதிகளில் அடங்கியிருந்தாலும் சத்தியாக்கிரகிகள் விஷயத்தில் பீகார் சிறைகளில் அது அமுலுக்குக் கொண்டுவரப்படுவதில்லை. ஒரு பெரிய சிறை அதிகாரி வரும் போதெல்லாம், கைதிகள் வரிசையாக நின்றுகொள்ள வேண்டும். "சர்க்கார் சலாம்" என்று வார்டர் கத்தியதும், ஒவ்வொருவரும் ஒரு உள்ளங்கையைக் காட்டி மற்றோர் கையால் கீழ் உதட்டை இழுத்துப் பல்லைக் காட்டவேண்டும் என்று இருந்தது அந்த விதி. பிரிட்டிஷ் சர்க்காருக்கு வணங்குவது முதலாவதாக இதில் அடங்கியிருந்தது. இரண்டாவது, அவமதிப்புக்குள்ளான தாழ்ந்தவனைப் பல்லைக் காட்டுவது என்பது. இந்த விதி

வந்ததற்குக் காரணம் எதுவாயிருந்தபோதிலும், இது தங்கள் மான உணர்ச்சியை இழுவுபடுத்துவதாக இருக்கிறது என்று சத்தியாக்கிரகிகள் எண்ணினர். ஆகையால் 1921-லிருந்து சத்தியாக்கிரகிகள் இதை எதிர்த்து வந்திருப்பதோடு இந்த விதிப்படி நடக்க மறுத்ததிற்காக கஷ்டங்களையும் அனுபவித்திருக்கிறார்கள். இதனால் நிலைமை பிறகு மாறுதலடைந்தது. சத்தியாக்கிரகிகளுடன் சச்சரவுக்கு ஏதாவது ஒரு சாக்குப் போக்கை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாலொழிய, சிறை வார்டர்கள் "சர்க்கார் சலாம்" கத்துவது கிடையாது. அவமதிப்பை உண்டாக்குவதாயிருக்கும் மற்றுஞ் சில விதிகளும் பல கைதிகளிடம் அனுசரிக்கப்படுவதில்லை. அவை அமுலுக்குக் கொண்டு வரப்படும்போது தகராறு ஏற்படும்.

எந்த விதிகளுக்கு உடன்பட மறுத்துவிடவேண்டியது அவசியம் என்று மகாத்மா கூறியிருந்தாரோ அந்த சிறை விதிகளை மாத்திரமே யல்லாமல் மற்றவைகளுக்கும் உடன்பட சத்தியாக்கிரகிகள் மறுத்தார்கள். இது சத்தியாக்கிரகிகளுக்குள் ஒழுக்கக் குறைவை உண்டாக்கி அவர்களை பலவீனப்படுத்தியும் விட்டது.

உதாரணமாக கடிதங்கள், புத்தகங்கள், பத்திரிகைகள் ஆகியவை கைதிகளுக்கு வருவதைப் பற்றிய சிறை விதிகளைக் கூறலாம். பல சத்தியாக்கிரகிகள் இவ்விஷயத்தில் சிறை விதிகளை மீறி தவறான வழிகளில் வெளியிலிருந்து பொருள்களையும் கடிதங்களையும் பெற்று வந்தனர்; சிறைக்குள்ளிருந்து வெளியிலிருப்பவர்களுக்குத் தகவல்கள், கடிதங்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இத்தகைய தவறான காரியங்களைச் செய்வதற்கு சிறை வார்டர்களும், சில சமயங்களில் சிறை அதிகாரிகளும்கூட சத்தியாக்கிரகிகளை உற்சாகப்படுத்தியதோடு அவர்களுக்கு உதவியும் செய்து வந்தார்கள். நல்லவர்களான வார்டர்களும் அதிகாரிகளும் அப்படிச் செய்வதால் தாங்கள் இக்கைதிகளுக்கு ஏதோ சேவை செய்து வருவதாக எண்ணினார்கள். மற்றவர்களோ, அவர்களுக்கு விரோதமாக மேலதிகாரிகளிடம் புகார்களைச் சொல்வதற்காக அவ்விதம் செய்து வந்தனர். வார்ட்டர்களும் அதிகாரிகளும் காட்டும்

இந்த அற்ப சலுகைகளுக்காக கைதிகள் அவர்களைப் புகழ்ந்து பேசக் கிளம்பிவிடுகிறார்கள் என்பதை உடனே தெரிந்துகொண்டோம். மேலும் ஒரு சத்தியாக்கிரகி சிறை அதிகாரிகளுக்கு சிநேகமாகி விடவே அதனால் மற்றக் கைதிகளுக்குள்ளேயே அபிப்பிராய பேதமும் பொறாமையும் உண்டாகிவிடுகிறது. புத்திசாலிகளான அதிகாரிகள், தாங்கள் செய்யக் கூடியதற்கு அதிகப்படியாகவும் சத்தியாக்கிரகிகளுக்கு உதவி செய்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தங்களிடமிருந்து இத்தகைய உதவிகளைப் பெறுகிறவர்களைப்பற்றி அவர்களுடைய உள்ளத்தில் மதிப்பு இருப்பது கிடையாது. இவ்விதம் சத்தியாக்கிரகக் கைதிகளிடம் சிறை அதிகாரிகளுக்கு இருந்த மதிப்பு நாளாவட்டத்தில் மறைந்து விட்டது.

மற்றோர் வகையிலும் நமது பலவீனம் காட்டப்பட்டு விட்டது. தங்களுக்குக் கொடுக்கப்படும் உணவு நன்றாயில்லை என்பதற்காக சில சமயங்களில் சிறை அதிகாரிகளுடன் தகராறு ஏற்படுவதுண்டு. இதில் மிகவும் மோசமானது என்னவென்றால், இந்தச் சின்ன விஷயங்களில் கைதிகளுக்குள்ளேயே அபிப்பிராய பேதங்களிருந்து வந்ததேயாகும். அந்த ஆண்டு சிறைகளில் ஒரு புதிய விதி அமுலுக்கு வந்தது. அதன்படி கைதிகள் மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டனர். "ஏ" வகுப்பில் வைக்கப்பட்ட கைதிகளுக்கு நல்ல சாப்பாடு; நண்பர்களையும் உறவினர்களையும் பார்த்துப் பேச, கடிதம் எழுத, கடிதங்கள் வர அதிக வசதிகள். இவர்கள் தங்கள் சொந்த உடைகளை அணியலாம். வேலையும் செய்யவேண்டியதில்லை. "பி" வகுப்புக் கைதிகளுக்கும் "ஏ" வகுப்புக் கைதிகளுக்கிருந்ததைப் போல் அதே சாப்பாடு, உறவினர்களைச் சந்தித்துப் பேசுவது, கடிதம் எழுதுவது, கடிதங்களைப் பெறுவது போன்றவைகளில் கொஞ்சம் குறைவான வசதிகள். சிறை அதிகாரிகள் கொடுக்கும் உடைகளையே இவர்கள் அணியவேண்டும். ஆனால் கடுங்காவல் தண்டனை யடைந்தவர்கள் "ஸி" வகுப்புக் கைதிகள் என்று வைக்கப்பட்டனர். இவர்கள் பகலில் கொஞ்சம் வேலை செய்யவேண்டும். மற்ற இருவகை கைதிகளுக்கு அளிக்கப்படுவதைவிட இவர்களுக்கு சாப்பாடு மட்டமானது;

மற்ற வசதிகளும் குறைவு. ஒருவர் செய்யும் குற்றத்தின் தன்மையை ஒட்டி இக் கைதிகள் பிரிவினை செய்யப்படவில்லை. ஆனால் ஒருவர் தண்டனையை அடைவதற்கு முன்னாலிருந்த அவருடைய வாழ்க்கைத் தரம், அந்தஸ்து ஆகியவைகளைக் கொண்டு கைதிகளின் தரம் பிரிக்கப்பட்டது. ராஜீயக் கைதிகளுக்கும், கிரிமினல் குற்றங்களைச் செய்து தண்டனை யடைந்தவர்களுக்கும் வித்தியாசமில்லை. திருட்டு, புரட்டு, அல்லது கொலை ஆகியவைகளுக்காக தண்டனை யடைந்தவர்கள் "பி" வகுப்புக் கைதிகளாக வைக்கப்பட்டுவிட்டால், அதே வகுப்பிலிருக்கும் ராஜீயக் கைதிகளைப் போலவே அவர்களுக்கும் ஒரே மாதிரியான உணவு வசதிகளே.

சிறை செல்ல முன்வருகிறவர்கள், தாங்களும் மற்றக் கைதிகளைப்போல கைதிகளே என்று கருதிக்கொண்டு மற்றவர்களைப் போலவே தாங்களும் கஷ்டங்களை அனுபவிக்கத் தயாராக இருக்கவேண்டும் என்று மகாத்மா நினைத்ததால் ராஜீயக் கைதிகளைத் தனி ரகமாகவோ, வேறு தரத்தினராகவோ பிரிக்கக்கூடாது என்று அவர் சொல்லி வந்தார். இவ்விதம் செய்வதால்தான் சாதாரண மக்களின் துயரங்களில் அனுதாபம் நமக்கு ஏற்படுவதோடு அவர்களுக்கும் நம் கஷ்டங்களில் அனுதாபம் ஏற்படும். சிறை அதிகாரிகள் கிரிமினல் கைதிகளைக் கடுமையாக நடத்துவது குறையும்; நமக்குக் கிடைக்கும் வசதிகள் அவர்களுக்கும் எட்டும். நாம் உயர்ந்த ஒழுக்கத்துடன் நடந்து கொண்டோமானால், அப்படி நடக்க வேண்டும் என்ற எண்ணம் மற்றக் கைதிகளுக்கும் ஏற்படாது போகாது. ஆகையால் சிறையில்கூட, நமது நல்லொழுக்கத்தினாலும், ஒழுக்கத்தோடு கூடிய வாழ்க்கையினாலும், கிரிமினல் குற்றவாளிகளான மற்ற கைதிகளுக்கும் நாம் நல்ல சேவை செய்வதாகும் என்றும், சிறைச்சாலைகளின் நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு நாம் உதவியதாகும் என்றும் மகாத்மா நம்பினார். நாமும் மக்களில் ஒரு பகுதியினரே என்ற எண்ணம் இதனால் ஏற்படுவதோடு நாம் தேச பக்தர்கள் என்ற அகம்பாவம் நம்மைக் கேவலமாக்கி விடாமலிருக்குமாகையால் இதனால் நமக்கே நன்மையுண்டு; சிறை அதிகாரிகளும் நல்லவர்களாக மாறுவார்கள்.

ஆனல் இந்தத் தத்துவம் பொதுவாக சத்தியாக்கிரகி களுக்கு விளங்குவதில்லை. ராஜீயக் கைதிகளைத் தனியாக நடத்த வேண்டும் என்றும், தங்களைக் கிரிமினல் கைதிகளி லிருந்து பிரித்துத் தனிப் பிரிவினராக பாவிக்க வேண்டும் என்றும் இடைவிடாது கிளர்ச்சி செய்து வந்தார்கள். இந்தக் கோரிக்கையை பிரிட்டிஷ் சர்க்கார் கொள்கையள வில் ஒப்புக் கொள்ளா விட்டாலும் நடைமுறையில் ராஜீயக் கைதிகளை வேருகவே நடத்தி வந்தார்கள். பிரிட் டிஷ் சர்க்கார் இவ்விதம் செய்ததற்கு ஒரு காரணம் உண்டு. மற்றக் கைதிகளுடன் சத்தியாக்கிரகக் கைதி களுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுமானல், அவர்களைத் தூண்டி விட்டுக் கலவரத்தை உண்டாக்கி விடுவார்கள், பிறகு சிறையில் கட்டு திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதும், கிரிமினல் கைதிகளிடையே பணிவு இருக்கும்படிச் செய்வதும் சங்கடமாகிவிடும் என்று பயந்ததுதான் இதற்குக் காரணம். ஆகையால் தவிர்க்க முடியாததாக இருப்பதைத் தவிர வேறு எவ்விதத்திலும் மற்ற கைதிகளுடன் சத்தியாக்கிரகக் கைதிகளுக்குத் தொடர்பிருக்க அனுமதிப்பதே இல்லை. ராஜீயக் கைதிகள் அதிகமாகிவிடும் போது புது சிறைகளைக் கட்டினர்கள். பழைய சிறைகளை இவர்களுக்கு என்று தனியாக ஒதுக்கி யும் வைத்தார்கள். ஒரு சிறையில் ராஜீயக் கைதிகளும் மற்றக் கைதிகளுமிருந்தால், சாத்தியமான வரை இவர்க ளிரு தரத்தாருக்கும் தொடர்பு ஏற்பட முடியாதபடித் தனி யாகவே வைத்திருந்தார்கள். இவ்விதம் மற்றக் கைதிக ளுடன் சேர்க்காமல் சத்தியாக்கிரகக் கைதிகளைத் தனியாக வைத்திருப்பதே சர்க்காரின் கொள்கை. சில இடங்களில் இவ்விரு தரப்பாருக்குள் சச்சரவும் ஏற்படும். அப்படி ஏற்பட்டது மிகச் சொற்பம். மற்ற கைதிகளை நம்முடைய நடத்தையினுல் எந்த அளவுக்குத் திருத்த முடியுமோ அவ் வளவுக்குச் செய்ய நம்மால் முடியவில்லை என்பது தெளிவு. இதற்குக் காரணம், நம்மிடம் சந்தேகத்திற்கிடமில்லாத படி இருந்து விட்ட பலஹீனமும், சிறை நிர்வாகத்தின் கொள்கையுமேயாகும்.

கைதிகளின் வகுப்புப் பிரிவினையால் உண்டான மற் ருேர் தீமை, சத்தியாக்கிரகிகளுக்குள்ளேயே மனவேற்

றுமை உண்டாகி விட்டதேயாகும். சில சத்தியாக் கிரகிகள் தாங்கள் "ஏ" வகுப்பிலும் "பி" வகுப்பிலும் இருக்க வேண்டும் என விரும்பினார்கள். இதற்காக அவர் களும், அவர்கள் சார்பில் மற்றவர்களும், சிறைக்குள்ளும் வெளியிலும், அதிகாரிகளைச் சரிக்கட்ட முயன்றார்கள். ஒருவர் "ஏ" வகுப்பில் மாற்றப் பட்டால் மற்றவர்களுக்கு அது பிடிக்காமல் பொறாமை ஏற்படும். "ஏ" வகுப்புக் கைதி களாகி விட்டவர்களோ, தாங்கள் "ஸி" வகுப்புக் கைதி களைவிட உயர்வானவர்கள் என்று நினைத்துக் கொண்ட தோடு 'ஏ" "பி" வகுப்புக் கைதிகளா யிருப்பதில் பெரு மைப்பட்டனர். "ஸி" வகுப்புக் கைதிகளும் "ஏ" "பி" வகுப்புக் கைதிகளுடன் அதே சிறையில் வைக்கப்பட்டி ருந்தால் இதனால் ஏற்பட்ட துவேஷம் பலப்பட்டு விடும். சிறை அதிகாரிகளோ, தங்களுடைய சௌகரியத்தை முன் னிட்டு இவர்களைத் தனித் தனியாக வைத்திருந்ததால், துவேஷமும் அதிக அளவுக்குப் போகாமலிருந்தது. என்று லும் சிறை அதிகாரிகளுக்கு சத்தியாக்கிரகிகளைக் குறித்து ஒரு குறைவான எண்ணத்தை அது உண்டாக்காம லில்லை.

சத்தியாக்கிரகிகளுக்கு சிறை வாழ்க்கை அனுபவம் அதிகமுண்டு. நாம் இப்பொழுது ஆட்சி அதிகாரத்தை அடைந்து விட்டோமாகையால், நமக்கு முன்னால் ஏற்பட் டிருக்கும் அனுபவத்தைக் கொண்டு வேண்டிய சீர்திருத் தங்களைச் செய்ய வேண்டியது நம் பொறுப்பு. கட்டுதிட்டங் களைக் குறித்து சிறையில் இருந்து வரும் விதிகளெல்லாம் அனுபவத்தைக் கொண்டு ஏற்பட்டவைகளே என்பதைப் பார்த்திருக்கிறேன். முதலில் நமக்கு சரியாகத் தெரியாம லிருந்த சிறு விஷயங்கள் கூட, முக்கியமானவை என்று புரிந்து விட்டதோடு, அவை அனுபவத்தால் வந்தவை என் பதையும் தெரிந்து கொள்ளுகிறோம். ஒரு ஜெயில் வார்டர், நாள்தோறும் மாலை 4 மணிக்கு, ஒரு சிறு இரும்புத் துண்டினால் சிறைக் கொட்டடியின் கதவு, ஜன்னல் கம்பி களை யெல்லாம் ஜலதரங்கம் வாசிப்பதுபோல தட்டிக் கொண்டு போவதை நான் பார்த்திருக்கிறேன். இவ்விதம் செய்யப்படுவதை பல நாட்கள் பார்த்தும் இது ஏன் என்பது எனக்கு விளங்கவில்லை. ஆனால் ஒவ்வோர் கம்பி

யும் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்க்கவே இவ் விதம் செய்யப்படுகிறது என்பதைப் பிறகு தெரிந்து கொண்டேன். ஏதாவது ஒரு கம்பி முறிந்தோ அல்லது உடைந்தோ இருந்தால், வேறு விதமான தொனி வரும். அதோடு, கயிறு, நீளமான துணிகள், சாதாரண வலைபோல் பின்னி பணம் போட்டு இடுப்பில் பலர் சுற்றிக்கொள்ளும் பை போன்றவை முதலியவைகளை வைத்துக்கொள்ள கைதிகள் அனுமதிக்கப்படுவதில்லை. பைஜமா போன்ற கால் சட்டை, அரைக் கைச் சட்டை, போர்த்துக் கொள்ள ஒரு துப்பட்டி ஆகியவைகளையே வழக்கமாக கைதிகளுக்குக் கொடுப்பார்கள். ஒன்றரை அடி நீளமும், அந்த அளவு அகலமுள்ள கைகுட்டையும் கொடுக்கின்றனர். நீளமான கயிறு அல்லது துணியினால் கைதி தூக்கிட்டுக் கொண்டு விடக்கூடும் என்று பயந்தே இந்தத் தடைகள். இத னாலேயே அவை கொடுக்கப்படுவதில்லை. பலமான நூலி னால் இரும்புக் கம்பி மீது இடைவிடாது இழுத்து கம்பி களைக் கைதிகள் அறுத்து விடுவதுண்டு என்பதை அனு பவத்தில் கண்டிருப்பதால் அத்தகைய நூலும் அனுமதிக் கப்படுவதில்லை. ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நகர்த்தக்கூடிய சாமான்களை நகர்த்திப் போட்டு அவற் றின் மீது ஏறி சுவரைத் தாண்டி ஓடி விடுவார்கள் என்பதற்காக இரவு நேரங்களில் அத்தகைய சாமான்கள் சிறைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. இதே காரணத்திற் காகவே கயிறு எதையும் சிறைக்குள் அனுமதிப்பதும் கிடையாது. துணி காய வைக்கக் கொடியாகக் கட்டிக் கொள்ள நீண்ட காலம் வரையில் எங்களுக்கும் கயிறு கொடுக்க மறுத்துவிட்டார்கள். பிறகு எங்களுக்குக் கொடுத்தபோது, வார்டர் காலையில் கயிற்றை எங்களிடம் கொடுத்து மாலையில் எடுத்துக்கொண்டு போய்விடுவார்.

வாழை, பப்பாளிச் செடி முதலிய எந்த மரத்தையும் சிறை மதிலுக்குள் பயிரிட அனுமதிப்பதில்லை. இவற்றின் கிளைகளைச் சுலபமாக ஒடித்தோ அல்லது வெட்டியோ சுவரைத் தாண்டி ஓடி விடுவதற்குக் கைதிகள் உபயோகித் துக்கொண்டு விடக்கூடும் என்பதற்காகவே இந்த தடை. சிறை மதில் சுவருக்கு உள்ளோ அல்லது வெளியிலோ மரம் வளர்ப்பதையும் அனுமதிப்பது கிடையாது. சிறைக்

குள் பல மரங்களிருந்தன என்பது உண்மை, ஆனால் அம் மரங்களெல்லாம் சுவருக்கு தூரத்திலேயே இருந்ததால் கைதிகளும் அம் மரத்திலிருந்து சுவர் மீது தாவி விட முடியாது.

ஒவ்வோர் சிறைக் கொட்டடிக்குள்ளும் ஒரு கைதி விழித்துக்கொண்டிருக்க வேண்டும். இந்தக் கைதிதான் சிறைக்குள்ளிருந்தபடி வெளியிலிருக்கும் வார்டருக்கு கொட்டடிக்குள்ளிருக்கும் கைதிகளின் தொகை சரியாக இருக்கிறது என்று இரவு முழுதும் அறிவித்துக்கொண்டிருப்பார். ஒவ்வொரு சிறைக் கொட்டடிக்குள்ளும் இரவெல்லாம் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருக்கும். கைதிகளுக்கு எட்டாத இடத்தில் இவ்விளக்கை வைக்கிறார்கள். இரவில் வார்டர்கள் மாறும்போது கைதிகளின் தொகையை எண்ணி ஒப்புக்கொள்ளுவார்கள். பகலிலும் பன்முறை கைதிகள் எண்ணப்படுகின்றனர். மாலையில் எல்லா கைதிகளும் கொட்டடிகளில் அடைக்கப்பட்ட பிறகு எல்லா கைதிகளையும் எண்ணிக் கணக்கெடுத்து, புதிதாக வந்த கைதிகள், விடுதலையான கைதிகள் எல்லோரையும் கணக்கிட்டு தொகை சரியாக இருக்கிறதா என்று பார்ப்பார்கள். இத் தொகையில் ஏதாவது ஏற்றத் தாழ்வு வந்துவிட்டால் சிறை அதிகாரிகள் கலக்கமடைந்து விடுகிறார்கள். எல்லா கைதிகளும் எண்ணப்பட்டு கணக்கு சரியானால்தான் அவர்களுக்கு அன்றைய வேலை முடிந்ததாக ஆகும். காலையில் இக் கொட்டடிகளைத் திறக்கும்போதும் எண்ணிக் கணக்கு சரியாகும் வரையில் அதிகாரிகளுக்குப் பெரும் கவலையே. இந்த முன்ஜாக்கிரதைகளிருந்தும் சில கைதிகள் தப்பி ஓடி விடுவது உண்டு. சில சமயங்களில் மதில் ஏறிக் குதித்து ஓடி விடுகின்றனர்; சில சமயம் கம்பிகளை அறுத்தும், பிற வழிகளிலும் தப்பி விடுகிறார்கள். ஆனால் எல்லா விதிகளும் சரியானபடி மேற்கொள்ளப்படுமானால் கைதிகள் தப்பவே முடியாது என்பதில் சந்தேகமில்லை.

தப்பி ஓடிவிடாதபடித் தடுப்பதற்காகவே இவற்றில் சில விதிகள் இருக்கின்றன. ஆனால் மற்றுஞ் சில விதிகளோ, தாங்கள் கைதிகள் என்ற எண்ணம் அவர்

களுக்கு ஏற்படும்படிச் செய்யவேண்டும் என்பதற்காகவே யாகும். கஷ்டப்படவேண்டும் என்பதற்காகவே ஒருவன் சிறைக்கு அனுப்பப்படுகிறான். ஆகையால் அவனை அவமானப்படுத்தவேண்டும், மற்ற மனித வர்க்கத்திலிருந்து அவன் தனியானவன் என்பதைக் காட்டவேண்டும் என்பதற்கும் ஏற்பட்டவை அத்தகைய விதிகள். கைதிகள் ஒவ்வொரு கட்டத்திலும் அவமதிப்புக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. அவர்களுடைய தேக நிலையைப் பாதுகாப்பதற்கு சுமாரான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குக் கொடுக்கப்படும் சாப்பாடு சரிவர கிடைத்து, மத்தியில் திருட்டுப் போய் விடாமலிருந்தால், கைதிகளின் தேக சுகத்திற்கு அங்கு கொடுக்கும் சாப்பாடு போதுமானதே யாகும். நோயுற்றால் கவனிப்பதற்கும் ஏற்பாடுகளுண்டு. ஆனால் சிறை அதிகாரிகள் எப்பொழுதுமே தங்கள் கடமையை யோக்கியமாகச் செய்வதில்லை. கைதிகளுக்கு உணவும் மருந்தும் சரிவர கிடைப்பதுமில்லை. சிறை விதிகளின்படி அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அளவு அவர்களுக்குக் கிடைப்பதும் கிடையாது. சிறை விதிகளின் நோக்கமும் கொள்கையும், கைதிகளின் உள்ளத்தில் பயத்தை உண்டாக்கி, அவன் மனதை உடைத்து, சிறையிலிருந்து அவன் வெளியே வரும்போது அவன் நம்பிக்கையை யெல்லாம் இழந்து, அவமானப்பட்டவனாகவும் மனமுடைந்தவனாகவும் இருக்கவேண்டும் என்பதே. இந்த அபிப்பிராயமே இவைகளை யெல்லாம் பார்த்த பிறகு எனக்கு உண்டாயிற்று.

கைதிகளிடம் கடுமையாக வேலை வாங்குகிறார்கள். உடலையும் மனதையும் உடைத்துவிடும் வகையிலேயே முன்பெல்லாம் இவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது. உதாரணமாக செக்கு இழுக்கும் வேலை அவைகளில் ஒன்று. இந்த வேலையை அப்பொழுது பீகார் சிறைகளில் நிறுத்தி விட்டார்கள். வெளியில் சாதாரணமாக என்ன வேலைகளைச் செய்கிறார்களோ அதே போன்ற வேலைகளையே கைதிகளுக்குச் சிறையில் கொடுக்கிறார்கள். இவற்றைச் செய்வதில் அதிகக் கஷ்டமோ அசௌகரியமோ இல்லை. அப்போதைக்கப்போது திறமை அவசியமாகும் சில வேலைகளும் கைதிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இதில்

கைதிகள் சரியானபடிப் பயிற்சி பெற்றால் வெளியில் வந்ததும் சுயேச்சையாக அவர்கள் பிழைப்பதற்கு இது உதவும். இப் பயிற்சியைப் பல கைதிகள் பயன்படுத்திக்கொள்ளுவதாக நான் நினைக்கவில்லை. என்றாலும் எனக்குத் தெரிந்து ஒரு கைதி, பன்முறையும் தான் சிறையிலிருந்த சமயங்களில் கம்பளங்களை நெய்யக் கற்றுக்கொண்டு இதில் நிபுணனானதோடு அதிக திறமைசாலியாகவு மிருந்தான். இக் கைதி விடுதலை யடைந்ததும், மற்றக் கைதிகளுக்கு இதைக் கற்றுக் கொடுப்பதற்கு அவனை சிறை அதிகாரிகள் சம்பளத்திற்கு நியமித்துக்கொண்டனர். இந்த வேலையில் பல வருஷங்களிருந்து இப்பொழுது நல்ல பண வசதியுள்ளவனாகவே இருக்கிறான்.

நான் மற்றோர் கைதியையும் கண்டேன். அவன் ஒரு காலத்தில் பெருங் கொள்ளைக்காரனாக இருந்தவன். அவனைப் பிடிக்க போலீஸாரால் முடியவில்லை. அவனை முடிவாகப் பிடித்துவிடவே அவன் ஜன்ம தண்டனை அடைந்தான். அவன் நாளாவட்டத்தில் நெசவு கற்றுக் கொண்டு அதில் நல்ல கெட்டிக்காரனானதோடு சீர்திருந்தியும் போனான். அவன் விடுதலையடைந்த பிறகு கதர் தயாரிப்பதில் தனக்கு வேலை கொடுக்கும்படி என்னிடம் கேட்டான். நானும் வாக்களித்திருந்தேன். ஆனால் விடுதலையடைந்ததும் அவன் என்னை சந்திக்க முடியவில்லை. குஷ்டரோகிகள் விடுதியொன்றில் வேலையாளாக இருக்கிறான். அங்கு நான் அகஸ்மாத்தாகச் சென்ற போது அவனைப்பார்த்து மகிழ்ந்தேன். அந்த வேலையில் அவனுக்குத் திருப்தி. அவ்விடுதி நிர்வாகிகளும் அவனிடம் திருப்தியுடன் இருக்கிறார்கள். ஆனால் இத்தகைய மாறுதலடைந்திருக்கும் கைதிகள் மிக மிகச் சிலரே.

சிறு வயதில் ஜேப்படிக்காரனான ஒருவன் ஒவ்வொரு முறை சிறை செல்லும் போதும் அந்த வேலையில் அதிகத் திறமையுடையவனாகவே திரும்புகிறான். சிறைக்கு அரிசியை மாட்டு வண்டிகளில் கொண்டு வருகிறார்கள். இந்த வண்டிக்காரர்களோ அப்பாவிகளான கிராம வாசிகள். வண்டிகளிலிருந்து அரிசி மூட்டைகளை இறக்கும் கைதிகள் அந்த வண்டிக்காரர்களின் சட்டைப்பைகளிலிருந்தும் பணத்தை ஜேப்படி செய்துவிடுவார்கள். சிறையிலிருந்து

வெளியே போகும் போதுதான் தங்களிடம் ஜேப்படி நடந்துவிட்டதென்பது வண்டிக்காரர்களுக்குத் தெரியும். குற்றவாளிகள் யாரென்பதைக் கண்டு பிடிக்க அதிகாரிகளாலும் முடிவதில்லை. பல திருடர்கள், ஜேப்படிக்காரர்கள், கொள்ளைக்காரர்கள் ஆகியோர் ஒன்றாகக் கூடும் போது ஒவ்வொருவரும் தங்கள் சாமர்த்தியங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். இவ்விதம் ஒருவன் மற்றொருவனுடைய அனுபவங்களை அறிந்து தன் தொழிலில் புதுத்திறமையைப் பெற்றுவிடுகிறான். சிறை அதிகாரிகள் கூட, இத்தகைய கைதிகளுடன் தொடர்பு கொள்ளுவதால் நாளாவட்டத்தில் அவர்களைப்போலவே தாங்களும் ஆகிவிடுகின்றனர் என்றும், இந்த நெருங்கிய தொடர்பினால் கெட்டுப்போகாமலிருப்பவர்கள் மிகச் சிலரே என்றும் ஒரு சிறைச்சாலை சூப்பரின்டெண்டு என்னிடம் சொன்னார். இது முற்றிலும் உண்மை. என்றாலும் அதிகாரிகள் நல்லவர்களாகவும் யோக்கியர்களாகவுமிருந்தால் கைதிகளைச் சீர்திருத்த முடியும். கைதிகளின் உள்ளத்தில் பயத்தை உண்டாக்கி அவர்களுடைய உணர்ச்சியை உடைப்பதே அவர்களுடைய நோக்கமாக இருக்கிறது. யாராவது ஒரு கைதி திருந்திவிட்டால், அது சிறை விதிகளால் அல்ல; அவைகளிலிருந்தும் மாறிவிட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். அவன் முன் பிறப்பில் செய்த ஏதோ நற்காரியத்தின் பலனாக அப்படிச் சீர்திருத்தமடைந்திருக்கக் கூடும்.

சிறைக்குப் போகிறவர்கள், சாதாரணமாக திடமாகவும் நல்ல தேக நிலையுடனுமிருந்தவர்கள்; சிறைப்படுவதற்கு முன்னால் தாங்களே உழைத்து வாழ்ந்தவர்கள். இவர்கள் சிறைக்குள் சரியானபடி உபயோகித்துக் கொள்ளப்பட்டால், இவர்கள் சிறையில் வாழ்வதற்குப் போதுமானதையாவது இவர்கள் சம்பாதித்துக் கொள்ளும்படிச் செய்வது முடியும். சாதாரணமாக வெளியில் ஒரு இளைஞன், தனக்கும் தன் மனைவி, சில குழந்தைகளுக்கும் போதுமானதை சம்பாதிக்கிறான். ஆனால் அவன் சிறைப்பட்டதும் அரசாங்கத்திற்கு ஒரு பாரமாகி விடுகிறான். இவனுக்குக் காவல் புரிவதற்கு மாத்திரமேயன்றி இவன் சாப்பாட்டுக்கும் ஆடைக்கும் சர்க்காரே வழி செய்ய

வேண்டி வருகிறது. அதாவது சமூகத்தின் மற்ற மக்களிட மிருந்து வரி மூலம் வசூலிக்கும் பணத்தை கைதிகளுக்காகச் செலவிடுகிறார்கள். எனவே ஒரு கைதி, சமூகத்திற்கு மும்மடங்கு சுமையாகிறான். முதலாவதாக, அவன் சமூக விரோதமான ஒரு குற்றத்தைச் செய்துவிட்டு அதற்காக தண்டனை யடைகிறான். இரண்டாவதாக, அவன் தனக்கும் தன்னுடைய குடும்பத்திற்கும் சம்பாதித்துக்கொள்ள முடியாதபடி தடுக்கப்பட்டு விடுகிறான். மூன்றாவதாக, அவன் சிறையிலிருக்கும் வரையில், அவன் சாப்பாட்டுக்கும் உடைக்கும் சமூகம் கொடுக்க வேண்டியதாகிறது. சிறை நிர்வாகத்தின் கொள்கை நன்மையானதாக மாறுபடுவதாயிருந்தால், சமூகத்திற்கு ஏற்படும் இம் மூன்று வகை நஷ்டங்களையும் தடுத்துவிடலாம். ஒரு கைதிக்கு, அவனால் முடிந்த வேலையைக் கொடுப்பதானால், இந்த நஷ்டத்தில் பெரும் பகுதியையாவது தவிர்த்துவிட முடியும்.

ஆனால் அதிகாரிகளின் நோக்கம் மாறுதலடைந்தால் மட்டுமே இந்த மாறுதலை அடைய முடியும். பீதியை உண்டாக்குமிடமாக இருப்பதற்கு பதிலாக சீர்திருத்துமிடமாக சிறை இருந்தால், அங்கிருந்து திரும்புகிறவர்கள் சமூகத்தின் நல்லவர்களாகவும் யோக்கியர்களாகவும் திரும்புவதாயிருப்பின், தேசத்திற்கே பெருஞ் சேவை செய்ததாகும். அகஸ்மாத்தாக, துரதிருஷ்டம் காரணமாகச் சிறை சென்றுவிட்ட ஒருவன், சிறையில் தனக்கு மாத்திரமேயன்றி சிறை நிர்வாகத்திற்கும் சம்பாதித்துக் கொள்பவனாக வேண்டும். அத்தகைய நிலைமை ஏற்படுமாயின், நோக்கத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதலை சிறை யதிகாரிகள் உணரும்படி நேருவதோடு, கைதிகளைக் கொடுமையாக நடத்துவதல்ல தங்கள் கடமை என்பதையும், அவர்களைத் தாங்கள் அனுதாபத்துடனேயே நடத்தவேண்டும் என்பதையும் அவர்கள் அறிவார்கள். உத்தரவுக்கும் கட்டு திட்டங்களுக்கும் கைதிகள் உடன்படும்படிச் செய்யும் பெருந்தடிகளின் சின்னங்களாக அதிகாரிகள் இல்லாமல், கைதிகளின் ஒழுக்க நிலையை உயர்த்தி, அவர்களுடைய வாழ்க்கையில் முற்போக்கை உண்டாக்கும் உணர்ச்சியை வளர்த்து, அவர்களை சுயமதிப்புள்ளவர்களாக்குபவர்களாகவும் சிறை அதிகாரிகள் இருப்பார்கள்.

இன்னும் எவ்வளவோ சொல்லக்கூடிய விஷயம் இது; இதைக் குறித்து எவ்வளவோ எழுதப்பட்டிருக்கின்றன என்றும் நினைக்கிறேன். பல நாடுகள் சிறைச்சாலை நிர்வாகத்தில் சீர்திருத்தம் செய்வதற்கான கொள்கைகளை அனுசரித்து வருகின்றன. நமது அனுபவங்களைப் பயன்படுத்திக்கொண்டு சிறை நிர்வாகத்தில் மாறுதல்களைக் கொண்டு வந்தால் எவ்வளவோ நன்மையுண்டாகும். ஆனால் நான் அறிந்தவரையில் இதுவரை செய்யப்பட்டிருக்கும் முயற்சிகளெல்லாம், ராஜீயக் கைதிகளின் வசதிகளில் அபிவிருத்தி செய்வதற்கேயாகும். ராஜீயக் கைதிகள் புத்திசாலிகள்; சில சமயங்களில் செல்வாக்குள்ளவர்களாகவுமிருக்கின்றனர். சில சமயங்களில் வற்புறுத்தியும், இல்லையானால் தந்திரத்தைக் கொண்டும், இல்லையானால் அதிகாரிகளிடம் செல்வாக்குகளைப் பயன்படுத்தியும், தங்களுடைய உயர்ந்த ஒழுக்கத்தை அதிகாரிகள் உணரும்படிச் செய்தும், தங்களுக்கு வேண்டியதைச் செய்து கொண்டுவிட ராஜீயக் கைதிகளால் முடியும். ஆகையால் உண்மையில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் சாதாரண கைதிகளேயாவர். ஆனால் ஒரு சாதாரண கைதியோ, பெரிய அனுபவம் படைத்தவனாகவும், கெட்ட அயோக்கியனாகவுமில்லாது போனால், சிந்திக்கப்படாதவனாகவும், கவனிப்பாரற்று இருந்த நிலையிலேயே கிடக்கிறான்.

சிறைச்சாலை சீர்திருத்த சம்பந்தமாக முக்கியமாக மூன்று காரியங்களை கவனத்தில் வைக்கவேண்டும். ஏதோ செய்துவிட்ட சில தவறுகளுக்காகச் சிறை சென்று விடுகிறவர்களை, அனுபவமும், அதையே தொழிலாகவும் கொண்டிருக்கும் மற்ற குற்றவாளிகளிலிருந்து தனியாகப் பிரித்து வைக்கும் வகையில் சிறைச்சாலைகளின் விதிகள் மாற்றப்படவேண்டும். பல சமயங்களில் கிராமவாசிகள் தங்களுக்குள் அடித்துக்கொண்டு இதன் காரணமாக சிறை சென்று விடுவோருமுண்டு. உண்மையில் இவர்கள் கெட்டவர்களல்ல. கோபத்தில் துரதிருஷ்டவசமான சந்தர்ப்பங்களின் விளைவாகத் தவறு செய்து விடுபவர்கள் இவர்கள். அசல் குற்றவாளிகளுடன் சேர்த்து விடாமல் இவர்களைத் தனியாக வைத்திருக்க வேண்டியது அவசியம். சிறு வய

துள்ள கைதிகளை, வயது முதிர்ந்த அனுபவசாலிகளாகி விட்ட கைதிகளுடன் சேர்க்காமல் தனியாக வைத்திருந்த போதிலும், அவர்களைத் திருத்துவதற்கு முயற்சிகள் போதுமானவைகளாக இல்லை. இதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும். ஒருவரிடமிருந்து மற்ெறாரு தரத்தினரை ஒதுக்கி வைப்பதை முன்னிட்டு, வழக்கமாகக் குற்றஞ் செய்கிறவர்கள் இன்னார், ஏதோ தவறிப் போய் குற்றஞ் செய்துவிட்டவர்கள் இன்னார் என்பதைப் பார்த்துப் பிரிக்கவேண்டும். இப்படிச் செய்ய இப்பொழுதே சிறை விதிகளிருந்த போதிலும் அது கண்டிப்பான வகையில் நிறைவேற்றப்படுவதில்லை. இந்த இளைஞர்களுக்கு, வழக்கமாக குற்றஞ் செய்கிறவர்களுடன் தொடர்பு ஏற்படவே விடக்கூடாது. இப்பொழுதிருக்கும் வகைகளில், வாலிபர்களான கைதிகள் திருந்துவதற்கு பதிலாக ஜேப்படிப்பதிலும் மற்ற குற்றங்களிலும் நிபுணர்களாகி விடுவதைப் பார்த்திருக்கிறேன். புதியவர்களும் அனுபவம் போதாதவர்களுமான இவர்களுக்கு, முதிர்ந்த பழக்கப்பட்ட குற்றவாளிகள், தங்களுக்குள்ள அதிகத் திறமையையும், அனுபவங்களையும் சொல்லிக் கொடுத்து விடுகிறார்கள். படிப்பு, நல்ல சேர்க்கை, மனது நல்வழிப்படும் வகையிலமைந்த பொழுதுப் போக்கு, குற்றம் புரிவதற்குத் தூண்டுதல் இல்லாதிருப்பது ஆகியவைகளின் மூலம் சீர்திருத்தங்களைச் செய்ய முடியும். இளங் குற்றவாளிகளை சீர்திருத்தவல்ல முறைகளைக் குறித்த வகைகளை மனோ தத்துவ நிபுணர்கள் கூற முடியும். ஆனால் இப்பொழுதோ அந்த வகையில் குறிப்பிடத்தக்க முயற்சி எதுவும் செய்யப்பட்டிருப்பதாகக் காணோம். வயது வந்த குற்றவாளிகளைக்கூட, அவர்களுடைய குற்றங்களை அனுசரித்து ரகவாரியாகப் பிரிக்கலாம். சீர்திருத்தத்தின் முக்கியத்தை முதலில் சிறை அதிகாரிகள் உணர்ந்து, அவைகளை நிறைவேற்றுவதில் நடைமுறை அனுபவமும் பெற்றால்தான் இந்த சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடியும்.

சிப்பாய்களும் ராணுவ அதிகாரிகளும் நீண்டகாலப் பயிற்சி யளிக்கப்படுகின்றனர். போலீஸ்காரர்களும் போலீஸ் அதிகாரிகளும் பயிற்சி பெறுகிறார்கள். ஒரு முன்சிப்புக்கோ அல்லது மாஜிஸ்டிரேட்டுக்கோ

அவர்கள் பள்ளிக்கூடங்களிலும் காலேஜ்களிலும் படித்திருந்தும், அவர்களுக்கான வேலைகளுக்கு அவர்கள் மேலும் பயிற்சி பெற வேண்டியிருக்கிறது. ஆனல் நான் அறிந்தவரையில், சிறை வார்டர்களுக்கும், சிறை அதிகாரிகளுக்கும் எந்தவித பயிற்சியும் அளிக்கப்படுவதாகக் காணேம். அவர்களை நியமித்ததும் ஏதாவது ஒரு சிறையில் வேலை கொடுத்து விடுகிருர்கள். சிறைகளில் வேலை செய்து அதனல் கிடைக்கும் பயிற்சியையே இவர்கள் பெறுகின்றனர். அதாவது, அங்கு செய்யப்படுவதையும் அவை என்னவிதத்தில் செய்யப்படுகின்றன என்பதையுமே இவர்கள் கற்றுக்கொள்ளுகிருர்கள். சிறை நிர்வாகத்தின் பெரிய அதிகாரிகள், போலிஸ், ராணுவ அதிகாரிகளிலிருந்தும், டாக்டர்களிலிருந்தும் நியமிக்கப்படுகின்றனர் என்பதிலிருந்தே இது தெளிவாகிறது. கட்டுதிட்டங்களை எப்படி அமுல் நடத்துவது என்பதில் இவர்களுக்கு அனுபவமிருந்தபோதிலும், சிறைச்சாலை நிர்வாகங்களைக் குறித்து இவர்களுக்கு விசேஷ ஞானமோ அல்லது அனுபவமோ கிடையாது. கீழ் சிப்பந்திகளிலிருந்து உத்தியோக உயர்வு பெற்று ஜெயிலர்கள் முதலியவர்கள் வருகின்றனர், இவ்விதம் மனேதத்துவ சாத்திரத்தைப் பற்றி எதுவுமே தெரியாதவர்களும், மற்ற நாடுகளில் சிறைச்சாலை சீர்திருத்தத்திற்கு என்ன செய்யப்படுகிறது என்பதை அறியாதவர்களும், சிறைச்சாலை சீர்திருத்தம் என்பதை சிந்திக்க சக்தியில்லாதவர்களுமே அந்த இலாகாவை நிர்வகித்து வருகிருர்கள். சிறை விதிகளை எப்படி அமுலுக்குக் கொண்டு வருவது, கைதிகள் தப்பி ஓடி விடாதபடி எப்படித் தடுப்பது என்பது மாத்திரமே அவர்களுக்குத் தெரியும். ஒரு கைதி திருந்தும்படிச் செய்து விடலாம் என்பதே அவர்கள் புத்தியில் தோன்றுவதில்லை. ஒரு கைதிக்கு, அவன் செத்து விடாதபடித் தடுப்பதற்கும், அவனுக்கு சதை போட்டு விடாமலிருப்பதற்குப் போதுமானதுமான சாப்பாட்டைக் கொடுப்பது என்பதே கைதிகளின் உணவைப் பற்றிய விதி என்று தமாஷ்காரரான என் நண்பரொருவர் கூறுவதுண்டு. சிறையிலிருந்து வெளியே போகிறவன் தீமில் அடைந்தவனுக, சீர்திருத்தமடையாதவனுக இருக்கும்படிச் செய்வதிலேயே சிறை அதிகாரிகளின் முயற்சி யெல்லாம்

இருந்து வருகிறது. இதன் பலன் என்ன? சாதாரணமாக நல்லவனுயினும் ஏதோ செய்துவிட்ட தவறுக்காக சிறைக்கு வந்துவிட்டு விடுதலையாகிறவன், அதே குற்றத்தைத் திரும்பவும் செய்து இரண்டாம் முறையும் சிறைக்கு வரப் போவதில்லை. ஆகையால் அவன் பயந்து நடுங்கக் காரணமில்லை. எனினும் பயந்து நடுங்குபவனுகவும் மனமுடைந்துமே அவன் வெளியே வருகிருன். ஆனல் அசல் குற்றவாளியோ, பொழுதுப் போக்குக்காகச் சிறையிலிருந்து வெளி வருகிருன்; சிறையில் தனக்கு அசௌகரியமிருப்பதாகவே அவன் எண்ணவில்லையாகையால் சிறையில் அவன் கற்றுக்கொண்டவைகளை உபயோகித்துத் திரும்பவும் அங்கு சென்று விடவே முயற்சி செய்கிருன்.

கைதிகள் வேலை செய்வது உற்பத்திக்கு என்றிருக்க வேண்டுமேயல்லாமல் தண்டனைக்காக என்றிருக்கக் கூடாது. இந்த நோக்கத்தோடு அவர்கள் வேலை செய்யும்படிச் செய்யப்பட்டால், வேலையில் அவர்களுக்கு சிரத்தை உண்டாகும்படிச் செய்துவிட்டால், பயமுறுத்தி கட்டாயப்படுத்தி வேலை வாங்காதிருந்தால், அவர்களுடைய பழக்கம் மாறி சிறைச்சாலைகளின் வருமானமும் அதிகரிக்கும். சிறைகள் தங்கள் செலவுக்கு வேண்டியதை தாமே சம்பாதித்துக் கொள்ளுவதும் முடியாதது அல்ல. இதுவல்லாமல் கைதிகளுக்கு மத, ஒழுக்க போதனைகளிருப்பதும் அவசியம். இதற்காக சில ஏற்பாடுகள் இருந்து வருகின்றனவெனினும் அவை யாவும் காட்சிக்கே இருப்பதால் சரியாகப் பலன் தரவில்லை. முதல் குற்றஞ் செய்தவர்கள் விடுதலையானதும் அவர்களைப் போலீஸார் விடாது விரட்டிக்கொண்டிருப்பது மீண்டும் குற்றத்தைச் செய்ய அவர்களைத் தூண்டிவிடுகிறது. போலீஸ் தொல்லை அதிகமாகி விடுவதால் திரும்ப சிறைக்குப் போய்விடுவதே நிம்மதி என்று அவர்கள் எண்ணிவிடுகிருர்கள். ஆகையால் விடுதலையானவர்களை கவனித்துக்கொள்ள ஏதாவது வேறு ஸ்தாபனம் இருந்தாக வேண்டியது அவசியமாகிறது. போலீஸ் கண்காணிப்பு, சிறையிலிருப்பதைப்போல அவ்வளவு கடுமையானதாக இல்லாவிட்டாலும், அதுவும் சிறை வாழ்வு போலவே ஆகிவிடுகிறது. பயமின்றி சாதாரணமாக வாழ்க்கை நடத்தும் வசதி கைதிக்குக் கிடைப்பதே

இல்லை. ஆகையால் கைதி சீர்திருந்துவதற்கான சந்தர்ப்பத்தை போலீஸார் அளிக்க முடியாது. இவர்கள் சமூகத்தின் பயனுள்ள உருப்பினர்களாவதற்கு உத்தியோகஸ்தர்களல்லாத சமூக சேவை ஸ்தாபனமே உதவி செய்ய முடியும். சிறைக்குள் சீர்திருத்தம் ஏற்பட்டு, வெளியிலும் சாதகமான சூழ்நிலை இருந்தால், ஒரு கைதி குற்றவாளியாகவே இருப்பினும் அவன் சமூகத்தின் பயனுள்ள உருப்பினனாக மாற முடியும். இந்த நோக்கத்துடனே தண்டனை விதிக்கப்படுமானால் சமூகத்திற்கும் அதனால் நன்மை உண்டாகும். காரணமில்லாமல் எவனும் குற்றவாளியாவதில்லையாகையால் இதைச் செய்ய ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் சமூகம் கடமைப்பட்டிருக்கிறது. கெட்ட எண்ணங்களையுண்டாக்கி ஒருவன் குற்றத்தைச் செய்து விடுவதை அவசியமாக்கிவிடும் தவறு சமூகத்தின் முறையினிடத்திலேயே இருக்கவேண்டும்.

அதிகாரிகள் செய்த சதி

பிரிட்டிஷ் சர்க்காரின் இரட்டைக் கொள்கை நடந்து வந்தது. ஒரு பக்கத்தில், சத்தியாக்கிரக இயக்கத்தை நசுக்கி விடுவதற்கு முயற்சிகள் நடந்து வந்தன. மற்றோர் பக்கத்திலோ, ஒரு வட்டமேஜை மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்தனர். அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டுவர சர்க்கார் தயார் செய்து வருகிறது என்று அதன் மூலம் உலகிற்குக் காட்டப்பட்டது. வட்டமேஜை மகாநாட்டில் காங்கிரஸும் கலந்து கொள்ளும்படிச் செய்வதற்காக, நாங்கள் சிறையிலிருந்தபோது, முயற்சிகள் நடந்தன. இதன் சம்பந்தமாக பிரிட்டிஷ் பத்திரிகையாளரான ஸ்ரீ ஸ்லோகோம்ப், பண்டித மோதிலால் நேருவைக் கண்டு பேசி ஆரம்ப முயற்சியைச் செய்தார். இதன் காரணமாக மகாத்மா காந்தியுடன் கலந்தாலோசிப்பதற்காக நைனி சிறையிலிருந்து பண்டித மோதிலால் நேரு, பண்டித ஜவஹர்லால் நேரு முதலியவர்களை எரவாடா சிறைக்குக் கொண்டு போனார்கள். இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்த சமயத்தில், ஒவ்வோர் சிறையிலிருந்த சத்தியாக்கிரகிகளும் இதைப் பற்றியே தங்களுக்குள் விவாதித்து வந்தார்கள். ஏதாவது சமரச முடிவு ஏற்படும் என்றும், சிறை செல்லும் திட்டம் ஒரு முடிவுக்கு வரும் என்றும் நினைத்து சிலர் இப் பேச்சுக்களில் அதிக நம்பிக்கை வைத்தனர். மற்றவர்களோ, உண்மையான சுயராஜ்யத்தை பிரிட்டிஷ் சர்க்கார் கொடுத்து விடும்படிச் செய்துவிடக் கூடிய அளவுக்கு இன்னும் அவ்வளவு தியாகம் செய்யப்பட்டு விடவில்லை என்று கருதினார்கள். மற்றுஞ் சிலரும், மற்றோர் வகையில், அதே முடிவுக்கு வந்தார்கள். பிரிட்டிஷ் சர்க்காரைக் கட்டாயப்படுத்திவிடும் வகையில் நாம் இன்னும் எதுவும் பிரமாதமாகச் செய்துவிடவில்லை என்பது அவர்கள் வந்த முடிவு. வெளியாரில் ஸர் தேஜ்பகதூர் சப்ருவும் டாக்டர் எம். ஆர். ஜெயகரும் இந்த சமரசப் பேச்சுக்களில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டார்கள்.

சமரச முடிவு ஏற்பட்டு தகராறு தீர்ந்துவிடும் என்று இவர்கள் உண்மையாகவே நம்பினார்கள். ஆனால் இப் பேச்சினால் எந்த முடிவும் ஏற்படவில்லை. வட்ட மேஜை மகாநாட்டை காங்கிரஸ் பகிஷ்கரித்து விடுமானால், மாப் பிள்ளை இல்லாமலேயே கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்த தைப் போலவே அது இருக்குமாகையால், காங்கிரஸும் அதில் கலந்துகொள்ளும்படிப் பார்க்கவேண்டும் என்பதில் சர்க்கார் அதிக ஆவலுடனிருந்தார்கள். ஆனால் காங்கிர ஸின் கோரிக்கையை கவனிக்க அவர்கள் தயாராயில்லை. என்றாலும், 1921-லிருந்து செய்து வந்திருப்பதைப்போல, காங்கிரஸ் இல்லாமலேயே தாங்கள் காரியங்களை நடத்திக் கொண்டு போக முடியும் என்பதை உலகிற்குக் காட்டிக் கொள்ள வேண்டியது சர்க்காருக்கு அவசியமாயிருந்தது.

வட்டமேஜை மகாநாடு நடந்தது. மற்ற கட்சிகளின் பிரதிநிதிகளும் சமஸ்தான மன்னர்களும் அதில் கலந்து கொண்டார்கள். அந்த மகாநாட்டினால் ஏற்பட்ட ஒரு நன்மை, அம் மகாநாட்டின் மூலம் ஏற்படும் இந்திய பெடரேஷனில் சேர்ந்து கொள்ளுவதாக சமஸ்தான மன் னர்கள் ஒப்புக்கொண்டதேயாகும். பிரிட்டிஷ் சர்க்காரின் கீழ் ஒரு பகுதியும், சுதேச மன்னர்களின் கீழ் மற்றோர் பகுதியுமாக பிரிக்கப்பட்டிருந்த இந்தியா ஒன்றுவதற்கான வழி இதனால் வகுக்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவுக்கு ராஜீய உரிமைகளை தாங்கள் நீண்ட காலத்திற்கு மறுத்துக் கொண்டிருக்க முடியாது என்பதை பிரிட்டிஷ் சர்க்கார் முன்கூட்டியே உணர்ந்திருக்கக்கூடும். அதுவரையில் ஜன நாயக ஸ்தாபனம் என்பது எதையுமே கண்டறியாமலிருந்து விட்ட சமஸ்தானங்களையும் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்த்துவிட்டால், இந்த சமஸ்தானங்களைக் கொண்டே மறைவான முறையில், தங்கள் ஆதிக்கம் இந்தியா மீது இருக்கும்படிச் செய்து வரலாம் என்றும் பிரிட்டிஷ் சர்க் கார் நினைத்திருக்கக்கூடும். இதை முன்னிட்டே பெட ரேஷன் யோசனையை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கலாம். அந்த மகாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ளாததால் இறுதியான முடிவு எதுவும் செய்யப்படவில்லை. திரும்ப வும் இம் மகாநாடு கூடும்போது, காங்கிரஸ் கலந்துகொள் ளும், எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு முடிவு

ஏற்படும் என்ற நம்பிக்கையில் மகாநாட்டை ஒத்தி வைத்தார்கள்.

இதற்கு மத்தியில், ஏதாவது ஒரு வகையில் காங்கிரஸ் அந்த மகாநாட்டில் கலந்துகொள்ளும்படிச் செய்வதற்காக முயற்சிகள் நடந்தன. வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்ளுவதன் அவசியத்தைக் குறித்து தங்களுக்குள் விவாதித்து முடிவுக்கு வருவதற்கு சௌகரியமாக இருப்பதை முன்னிட்டு சிறையிலிருந்த காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்தார்கள். நிலைமையைப் பற்றி யோசிக்க, முழு சுதந்திரத்துடன் நிபந்தனையின்றி விடுதலை செய்தாலொழிய, அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை சர்க்கார் உணர்ந்திருந்தது. எனவே சிறிது காலத்திற்கு என்று நியமிக்கப்பட்டிருந்த மெம்பர்களுள்பட, காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் எல்லோரையுமே விடுதலை செய்தார்கள். அலகாபாத்தில் கூட்டம் நடந்தது. வட்டமேஜை மகாநாட்டுக்குப் போய்விட்டுத் திரும்பியிருந்த ஸர் தேஜ்பகதூர் சப்ருவும் மற்றவர்களும், அங்கு நடந்தது என்ன என்பதை விளக்கினர். தங்களுடைய யோசனைகளையும் சொன்னார்கள். சந்தர்ப்பம் வந்தால் மகாத்மா காந்தி வைசிராய் லார்டு இர்வினை சந்தித்துப் பேசுவது என்று அக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது பண்டித மோதிலால் நேரு நாட்டின் துரதிருஷ்ட வசத்தால் காலமாகிவிட்டது தேசத்தைப் பெருந் துக்கத்தில் ஆழ்த்திவிட்டது. என்றாலும் வேலை தொடர்ந்து நடந்து வந்தது. சமரசப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தி வருவதென்றும் முடிவு செய்தனர்.

அந்த சமயம் காங்கிரஸ்காரர்களிடையே இரு வித எண்ணங்கள் நிலவின. சர்க்காருடன் எந்த வகையிலாவது சமரசத்திற்கு வந்துவிடவேண்டும் என சிலர் கருதினர்கள். மற்றவர்களோ, பிரிட்டிஷ் சர்க்கார் நம் கோரிக்கைகளை ஒப்புக்கொள்ளவேண்டும் அல்லது நாளாவட்டத்தில் அதை நிறைவேற்றுவதற்கான வசதியையாவது தெளிவாக்க வேண்டும், அப்பொழுதுதான் சமரசம் என்றார்கள். மகாத்மா காந்தி, டில்லியில் லார்டு இர்வினுடன் பேச்சு நடத்தி வந்தார். டாக்டர் அன்சாரியின் வீட்டில் மகாத்மா

காந்தி இருந்ததால் காரியக் கமிட்டி மெம்பர்களும் அங்கேயே தங்கினார்கள். வைசிராயுடன் தாம் பேசியதைக் குறித்து அங்கு அவர்களுக்கு மகாத்மா எடுத்துக் கூறுவார். சத்தியாக்கிரகப் போராட்டம் எந்த உப்புச் சட்டத்தை எதிர்த்து ஆரம்பமாயிற்றோ அச் சட்டத்தைச் சர்க்கார் ரத்துச் செய்துவிட வேண்டும் என்று மகாத்மா பலமாக வற்புறுத்தி வந்தார். சர்தார் வல்லபபாய் பட்டேலோ, இயக்கத்தின்போது சர்க்கார் பறிமுதல் செய்துவிட்ட விவசாயிகளின் நிலங்களை யெல்லாம் திருப்பிக் கொடுத்து விடவேண்டும் என வற்புறுத்துவதில் உறுதியுடனிருந்தார். சத்தியாக்கிரகக் கைதிகள் விடுதலை செய்யப்படுவதோடு சர்க்கார் ஜப்தி செய்து எடுத்துக்கொண்டுவிட்ட ஆசிரமங் களையும் திருப்பிக் கொடுத்தாக வேண்டும். பேச்சு பல நாட்கள் நடந்தன. என்ன செய்யவேண்டும் என்பதற்கு சர்க்காருக்கு லண்டனிலிருந்து அறிவிப்பு வருவதற்காக சில சமயங்களில் பேச்சு ஒத்திவைக்கப்படுவதுமுண்டு. முடிவாக சமரச ஒப்பந்தத்திற்கு ஒரு நகல் தயாராயிற்று.

அந்த நாட்களில் வெளியே உலாவி வரச் செல்லும் மகாத்மாவுடன் நானும் போவதுண்டு. அப்பொழுது நாங்கள் ஒருவருக்கொருவர் மனம்விட்டுப் பேசுவது வழக்கம். சமரசத்தில் நான் ஆவலுடனிருந்தபோதிலும், நம் மக்களின் உறுதி கெட்டு விடாமலிருக்கும் வகையில் இருக்கவேண்டும் அச்சமரச உடன்பாடு என்பதிலும் கவலையுடனிருந்தேன். நம் போராட்டத்தில் நாம் வெற்றி பெற்றோம் என்பதைக் காட்டுவதாக ஒப்பந்தத்தின் சில பகுதிகளாவது இருக்கவேண்டும் என்று நான் மகாத்மா விடம் சொன்னேன். இதற்கு மகாத்மா சொன்ன பதில் அவருடைய உயர்வை வெளியாக்குவதாயிருந்தது. நாம் எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறோமோ அந்த அளவுக்கு மாத்திரம் நம் வெற்றியைக் காட்டுவதாக ஒப்பந்தம் இருக்குமேயல்லாமல் அதற்கு அதிகமாகக் காட்டுவதாக அது இராது என்றார். நாம் அடைந்த வெற்றிக்கு அதிகமாக எதையாவது இந்த ஒப்பந்தத்தில் நாம் அடைந்து விட்டாலும், நாம் எந்த அளவுக்கு பலம் பெற்றிருக்கிறோமோ அந்த அளவுக்கே நாம் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமாகையால், நமக்கும் அதனால் எந்த விதமான நன்

மையுமில்லை. நமது பலத்திற்கு ஏற்ற வெற்றியையே நாம் அடைந்திருக்கிறோம். நாம் சம்பாதித்ததை விட அதிகமாக எதையும் ஒப்பந்தத்தின் மூலம் அடைந்து விட வேண்டும் என்ற சபல புத்தியை நாம் விட்டுவிட வேண்டும் என்றும் கூறினார். மகாத்மா ஒரு ஒப்பந்தத்தின் மூலம், தமது தியாகத்தினால் அடைந்ததிற்கு அதிகமாக எதையும், எடுத்துக் கொண்டு விட மறுக்கிறார். வெற்றியென்று தோன்றும் இதில்கூட பொய்யின் சாயலை அவர் காண்கிறார். சத்தியத்தில் மகாத்மாவுக்குள்ள நம்பிக்கை எவ்வளவு ஆழமானதாகவும் கட்டுப்படுத்துவதாகவுமிருக்கிறது என்பதை இதில் உணர்ந்தேன். ஆழ்ந்து சிந்தித்தால் அவர் கூறியது முற்றிலும் சரியானதே என்பது விளங்கும். நாம் ஜீரணித்துக் கொள்ள முடியாத ஒன்றுக்கு ஆசைப்பட்டு என்ன பயன்? அதனால் நன்மையை விட தீமையே அதிகமாக ஏற்படும். அடைந்ததற்கு அதிகமாக எதையும் பெற்று விடுவதில் மகாத்மா நம்பிக்கை வைக்கவில்லை; அதிகமாக எதையும் பெற அவர் முயற்சிக்கவுமில்லை.

லார்டு இர்வினின் நல்லெண்ணத்தில் மகாத்மா நம்பிக்கை வைத்தார். ஒப்புக் கொண்டபடி அவர் நடப்பார் என்றும் திடமாக எண்ணினார். லார்டு இர்வினுக்கும் மகாத்மா காந்தியிடம் நம்பிக்கை இருந்ததோடு வட்ட மேஜை மகாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ளும்படிச் செய்வதற்கு ஏதாவது ஒரு வழி செய்தாக வேண்டும் என்பதிலும் ஆர்வத்துடனிருந்தார். ஒரு சமரசம் ஏற்படுவதற்கு தாம் எவ்வளவு தூரம் போக முடியுமோ அவ்வளவும் செய்யத் தயாரா யிருந்தார்; உண்மையில் அதைச் செய்தார். ஆனால் அவருக்குக் கீழிருந்த அதிகாரிகளுக்கோ, காங்கிரஸுடன் ஒரு உடன்பாட்டுக்கு வருவது என்ற யோசனையே பிடிக்கவில்லை. ஏனெனில் இயக்கத்தையே தாங்கள் அடியோடு நசுக்கி விட்டதாக அவர்கள் எண்ணினார்கள். ஆகையால் சமரசம் பயனில்லை என்பது அவர்கள் கருத்து. ஆனால் பிரிட்டிஷ் சர்க்காரோ, மகாத்மா காந்தி வட்ட மேஜை மகாநாட்டில் இருக்க வேண்டும் என்பதில் அக்கறையுடனிருந்தது. ஒப்பந்தத்தால் என்ன ஏற்படும் என்பதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், வட்டமேஜை மகா

நாட்டுக்கு மகாத்மா வருவதை முன்னிட்டு விட்டுக்கொடுக்கலாம் என்றும் அது நினைத்தது. அப்பொழுது வார்டு இர்வினின் உத்தியோக காலம் முடிவடையும் சமயமாகவுமிருந்தது. இதனால் ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகு அவர் இந்தியாவை விட்டுப் போய் விட்டார். அவருக்குப் பின்னால் வைசிராயாக வந்த லார்டு வில்லிங்டன், தம் கீழிருந்த அதிகாரிகளின் கருத்தை முற்றிலும் ஒப்புக் கொண்டார்; அவர்கள் யோசனைப்படி நடக்கவும் தீர்மானித்து விட்டார். இதன் பலனாக ஒப்பந்தம் கையெழுத்தாகி யிருந்த போதிலும், லார்டு இர்வின் இந்தியாவிலிருந்து போய்விட்ட நேரம் முதற்கொண்டே, அந்த ஒப்பந்தத்தைப் பலனற்றதாகச் செய்து விடும் முயற்சிகள் ஆரம்பமாகி விட்டன. லார்டு இர்வின் இந்தியாவிலிருந்தபோது அந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள், கௌரவிக்கப்பட முடிந்த மட்டும், கௌரவிக்கப்பட்டன. அவர் போன பிறகு ஒப்பந்த ஷரத்துக்கள் முழுவதும் நிறைவேற்றப் படும்படிச் செய்ய முயற்சிக்கப் பட்ட போது கஷ்டங்கள் தோன்ற ஆரம்பமாயின. இதற்காக மகாத்மா பல மாதங்கள் கஷ்டப்பட்டும் பயனில்லை. நம்மைப் பொறுத்தவரையில் நாம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனை ஒன்றுதான். அதாவது, சத்தியாக்கிரக இயக்கத்தை நிறுத்தி விடுவது. ஒப்பந்தம் கையெழுத்தானதுமே அது நிறைவேற்றப்பட்டு விட்டது. சத்தியாக்கிரகத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு மகாத்மாவும் காரியக் கமிட்டியும் அறிக்கையை வெளியிட்டு விட்டார்கள். கைதிகளை விடுதலை செய்வது, எடுத்துக் கொண்டு விட்ட ஆசிரமங்கள், காங்கிரஸ் ஆபீஸ்களைத் திருப்பிக் கொடுப்பது, முற்றிலும் ரத்துச் செய்யப் பட்டு விடாத உப்புச் சட்டத்தின் சம்பந்தமாக ஒப்புக் கொள்ளப்பட்ட வசதிகளை அளிப்பது, குஜராத்தில் ஜப்தி செய்து பறிமுதல் செய்து கொண்ட நில சம்பந்தமாக விசாரணை நடத்துவது போன்ற பல காரியங்களை, சர்க்காரைப் பொறுத்த வரையில், நிறைவேற்ற வேண்டியிருந்தது. இவைகளில் ஒவ்வொன்றை நிறைவேற்றுவதிலும் சங்கடங்கள் எழுந்தன. கைதிகளை விடுதலை செய்து விடுவது மிக எளிதான காரியமாக இருந்தும் இதற்காக பல மாதங்கள் வரையில் கடிதப் போக்குவரத்து நடத்த

வேண்டியதாயிற்று. பகல்பூர் ஜில்லாவில் பீகப்பூரிலிருந்த ஆசிரமம் திருப்பிக் கொடுக்கப்படவே யில்லை. அதைத் திருப்பிக் கொடுக்காமலிருப்பதற்குக் காரணத்தைக் கண்டு பிடிக்க முடியாது போகவே, அந்த ஆசிரமம் இருந்த நிலம் தன்னுடையதென்று யாரோ ஒருவரை விட்டு ஒரு கோரிக் கையைப் போடும்படி சர்க்கார் செய்தது. ஆசிரமத்தைக் கொடுக்காமலிருப்பதற்காக, அந்த தாவாக்காரருடன் ஒரு சமரசத்திற்கு வந்து பிறகு ஆசிரமத்தைக் கேட்கும்படி காங்கிரஸுக்குக் கூறினார்கள். உண்மை என்னவென்றால், ஆசிரமத்தைத் திருப்பிக் கொடுத்துவிட மாகாண அதிகாரிகள் விரும்பாததுதான். ஆகையால் ஒப்பந்த ஷரத்துக்களை நிறைவேற்றி வைப்பதில் சாத்தியமான எல்லா முட்டுக்கட்டைகளையும் போட்டு வந்தார்கள்.

காந்தி—இர்வின் ஒப்பந்த சமயத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தால் நாடெங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நீண்ட காலமாக நடந்து வந்த பகவத் சிங் வழக்கில், அச் சமயம் முடிவான தீர்ப்புக் கூறப்பட்டது. சில எதிரிகளுக்கு தூக்கு தண்டனை விதித்தார்கள். சைமன் கமிஷன் வந்தபோது ஒரு வெள்ளைக்கார அதிகாரி லாலா லஜபதி ராயை தடியால் அடித்ததால் அவர் காயமடைந்து கொஞ்ச காலத்திற்கெல்லாம் இறந்து விட்டார். இத் தடியடி செய்த பிரிட்டிஷ் அதிகாரியைக் கொன்று விட்டார்கள் என்பதே பகவத் சிங் முதலியவர்கள் மீது தொடுத்திருந்த வழக்கு. இவர்களுக்கு விதித்திருந்த தூக்கு தண்டனையை ஜன்ம தண்டனையாக மாற்றும்படி லார்டு இர்வினை மகாத்மா காந்தி வேண்டிக் கொண்டார். ஆனால் லார்டு இர்வின் விட்டுக் கொடுக்கவில்லை. சத்தியாக்கிரகம் நடந்து வந்ததால் சரிவர நடக்காமலிருந்துவிட்ட காங்கிரஸ் மகாநாட்டை கராச்சியில் நடத்துவதென்று இதற்கு மத்தியில் முடிவு செய்தார்கள். அம் மகாநாடும் சமீபித்து வந்தது. காந்தி—இர்வின் ஒப்பந்தத்தின் ஒரு ஷரத்து, வட்ட மேஜை மகாநாட்டில் காங்கிரஸ் பிரதிநிதியும் கலந்து கொள்ளுவது என்று கூறியதால், அந்த ஒப்பந்தத்தை காங்கிரஸ் மகாநாடு அங்கீகரிக்க வேண்டும். சர்தார் பகவத் சிங்குக்கு விடுத்திருக்கும் தூக்கு தண்டனை ஜன்ம தண்டனையாக மாற்றப்படுமானால், இதனால் நாட்

டில் சாதகமான சூழ்நிலை ஏற்படுவதோடு ஒப்பந்தத்தை காங்கிரஸ் அங்கீகரிக்கும்படிச் செய்வதும் தமக்குச் சுலபமாக இருக்கும் என்று மகாத்மா கருதினர். அதோடு அது கஷ்டங்களைக் குறைத்து, ஒப்பந்தம் இரு தரப்பிலும் ஏற்படுத்த வேண்டியநம்பிக்கையையும் உண்டாக்கும் என்பதும் அவருடைய அபிப்பிராயம். ஆனால் பகவத்சிங்கை தூக்கிலிடுவதை நிறுத்தி வைக்க லார்டு இர்வினால் முடியவில்லை. மற்ற அதிகாரிகள் அவரை வற்புறுத்தி விட்டது ஒருவேளை இதற்குக் காரணமாக இருக்கலாம். முடிவாக காங்கிரஸ் மகாநாடு முடியும் வரையில் தூக்கிலிடுவதை ஒத்திவைக்க அவர் சம்மதித்தாரேயன்றி, தூக்கு தண்டனையை ஜன்ம தண்டனையாக மாற்ற அவர் மறுத்து விட்டார். காங்கிரஸ் நடந்து முடியும் வரையில் தூக்கிலிடுவதை ஒத்தி வைத்து, காங்கிரஸில் ஒப்பந்தம் அங்கீகாரம் பெற்ற பின்னர் தூக்கிலிடுவது என்பது மகாத்மாவுக்குப் பிடிக்கவில்லை. யாரும் தவறான நம்பிக்கையைக் கொண்டு விடாமலிருப்பதை முன்னிட்டும், நிலைமையை அறிந்து காங்கிரஸும் தனக்கு உசிதமெனத் தோன்றும் முடிவுக்கு வருவதை உத்தேசித்தும், மகாத்மா ஒன்று நினைத்தார். பகவத் சிங்கை தூக்கிலிடப் போவதே முடிவு என்றால், காங்கிரஸ் மகாநாடு நடப்பதற்கு முன்னடியே அதை நிறைவேற்றி விடுவதே மேல் என்று மகாத்மா எண்ணினர். முடிவாக நடந்ததும் அதுதான். காங்கிரஸ் மகாநாடு கூடுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னல், சர்தார் பகவத் சிங்கையும் மற்றவர்களையும் சந்தடி யில்லாமல் தூக்கிலிட்டு விட்டார்கள். எல்லாம் முடிந்த பிறகே இந்த சமாசாரம் வெளிக்குத் தெரிந்தது. இதனல், இயற்கையாகவே மக்களிடையே, முக்கியமாக பஞ்சாபில், கிளர்ச்சியும் கொதிப்பும் அதிகரித்தது.

காந்தி—இர்வின் ஒப்பந்தத்தில் சில பகுதிகள் சம்பந்தமாக பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு வருத்தம். ஆட்சேபிக்க வேண்டாம் என்று மகாத்மா அவரைக் கேட்டுக் கொண்டார். ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்ட பிறகும் அதை எதிர்ப்பவர்களின் ரகத்தைச் சேர்ந்தவர் நல்ல ஜவஹர்லால்ஜி. எனவே அவருக்குத் திருப்தியில்லா

விட்டாலும், அதைக் குறித்து அவர் எந்தக் கஷ்டங்களை யும் உண்டாக்கவில்லை. மற்றவர்களோ, சர்தார் பகவத் சிங்கை தூக்கிலிட்டு விட்டதனால் ஏற்பட்ட வெறுப்பி னாலோ அல்லது ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் தங்களுக்குப் பிடிக்காததினாலோ, ஒப்பந்தத்தைக் கண்டிக்க ஆரம்பித் தனர்; அதை எதிர்த்தனர். கராச்சி காங்கிரஸ் நடந்த சமயத்தில் சூழ்நிலை பூராவுமே மோசமாக இருந்தது. ரயிலில் நாங்கள் கராச்சிக்குச் சென்றபோது வழி யிலெல்லாம் பல எதிர்ப்பு ஆரவாரங்களிருந்தன. சிலர் மகாத்மாவுக்கு கருப்பு மலர்கள் கொடுத்தனர். ஒப்பந்தம் பற்றியும், அதன் பின்னால் நடந்திருப்பது குறித்தும், தங்களுடைய அதிருப்தியைக் காட்டினர். மகாத்மா அச் சமயத்தில் காட்டிய பொறுமையும், சகிப்புத் தன்மை யும், முடிவு செய்யப்பட்டு விட்டதில் கொண்ட திடமான உறுதியும் குறிப்பிடத் தக்கவையாகும். எதிர்ப்பாளர் களின் ஆத்திரத்தின் கூர்மை, தம்முடைய இன்சொல்லா லும், நடந்து விட்டதின் முழு குற்றத்தையும் தாமே ஏற்றுக் கொண்டதன் மூலமும், மழுங்கிப் போய் விடும் படிச் செய்து விட்டார். காங்கிரஸில் பெரும் எதிர்ப்புப் புயல் ஏற்படும் என்றே அப்பொழுது தோன்றியது. ஆனால் வேறு யாராலும் செய்ய முடிந்திராத வகையில் மகாத்மா காரியங்களைச் சமாளித்து விட்டார். அவருடைய மோசமான எதிர்ப்பாளர்கள் கூட, அவருடைய முன்னிலை யில் இளகி விட்டனர். உள்ளத்தில் அதிக ஆத்திரத் தோடு அங்கு வந்தவர்கள், அமைதியான போக்குடன் திரும்பினார்கள்.

ஒப்பந்தத்தின் மற்ற ஷரத்துக்களும் நிறைவேற்றப் படுமானால், வட்ட மேஜை மகாநாட்டுக்கு காங்கிரஸின் ஏகப் பிரதிநிதியாக மகாத்மா காந்தி செல்லுவது என்று கராச்சி காங்கிரஸுக்குப் பிறகு முடிவு செய்யப்பட்டது. எத்தனையோ கஷ்டங்கள் எழுந்தன; ஒப்பந்தத்தை நிறை வேற்றி வைக்கும்படி மகாத்மா அதிகாரிகளுக்கு இடை விடாது எழுதிக் கொண்டிருந்தார். இச்சமயம் அவருக்கு இருந்த பொறுமையும் உறுதியும் சொல்லி முடியாது. சர்க் காருடன் ஏற்பட்ட ஒப்பந்த சம்பந்தமாக, தம் வாதங்களை விட்டுக் கொடுக்க மகாத்மா தயாராயில்லை. ஏனெனில்

ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைக்க முடியாது என்று அதிகாரத்திலிருந்த யாரும் பகிரங்கமாகச் சொல்லிவிட முடியாது என்பதை அவர் நன்கு அறிவார். சர்க்கார் அவற்றை நிறைவேற்றியே ஆகவேண்டும். ஆனால் அவர்கள் அநேக சங்கடங்களை யெல்லாம் உண்டாக்கி, நமக்குச் சோர்வு ஏற்பட்டு, சரி தொலையட்டும் என்று வெறுப்புடன் இருந்து விடும்படியும் செய்வார்கள். இதற்கு மகாத்மா தயாராயில்லை. ஒப்பந்தத்தின் ஒவ்வொரு சிறு விவரத்தையும் சர்க்கார் நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்.

கடைசியாக வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்ளுவதற்கு அவர் புறப்பட்டாக வேண்டிய சமயமும் வந்தது. குஜராத்தில் ஜப்தி செய்யப்பட்ட நிலங்களைத் திருப்பிக் கொடுப்பது சம்பந்தமாக விசாரணையை நடத்துவது என்ற ஒப்பந்தத்தின் பகுதியை சர்க்கார் நிறைவேற்றி வைக்கவில்லை. இது செய்யப்பட்டாலன்றி தாம் வட்ட மேஜை மகாநாட்டில் கலந்து கொள்ள முடியாது என்று மகாத்மா வற்புறுத்தினர். இதை ஒப்புக்கொண்டு தீரும் கட்டாயம் லார்டு வில்லிங்டனுக்கு உண்டாயிற்று. சாதாரண ரயிலில் பம்பாய்க்குப் போனல் கப்பலுக்குப் போய்ச் சேர நேரமில்லாது போகவே, மகாத்மாவை தனி ரயிலில் பம்பாய்க்குக் கொண்டு வந்தார்கள். அவர் வரும் வரையில் கப்பலும் காத்திருந்தது.

நிர்ப்பந்தத்தின் காரணமாகவே மகாத்மாவின் கோரிக்கைக்கு லார்டு வில்லிங்டன் உடன்பட்டார். ஆனல், அவரையும் காங்கிரஸையும் அடக்கி ஒடுக்குவதற்கு ஏதாவது உபாயத்தைக் கண்டு பிடித்தே ஆகவேண்டும் என்று அப்பொழுதே லார்டு வில்லிங்டன் ஒரு தீர்மானத்திற்கும் வந்து விட்டார். மகாத்மா இங்கிலாந்திலிருந்த போது, காங்கிரஸை நசுக்கி, அது திரும்பவும் தலைதூக்க முடியாதபடிச் செய்வதற்கு ஏதாவது காரணத்தைக் கண்டு பிடிக்க இங்கு ஒரு சதியே நடந்தது. கராச்சி காங்கிரஸின் தலைவரான சர்தார் வல்லபபாய் பட்டேல், மகாத்மா காந்தி இங்கு இல்லாத சமயத்தில், அதிகத் திறமையாகவும் உறுதியுடனும் காரியங்களை நடத்திக் கொண்டு வந்தார். ஒப்பந்தத்தின்

ஷரத்துக்கள் நிறைவேற்றப் படும்படிப் பார்ப்பதிலும், தேசத்தில் ஏற்பட்ட நிலைமையைச் சமாளிப்பதிலுமே அவர் முற்றிலும் ஈடுபட்டிருந்தார். ஆனால் காங்கிரஸ் காரர்களுக்குச் சங்கடங்களை உண்டாக்கியே தீருவது என்று சர்க்கார் முனைந்திருக்கும்போது அவர் எப்படி வெற்றி பெற முடியும்? வட்டமேஜை மகாநாட்டில் கூட, மகாத்மா என்ன செய்ய விரும்பினாரோ அதை அவர் செய்ய முடியாத வகையில் நிலைமைகள் உண்டாக்கப் பட்டன. இந்தியாவுக்கு எவ்வளவோ செய்ய பிரிட்டிஷ் சர்க்கார் தயாரா யிருக்கிறது, ஆனால் இந்தியர் தங்களுக்குள் ஒன்று பட்ட முடிவுக்கு வர முடியாமல் பிளவு பட்டிருப்பதால் தாங்கள் எதுவும் செய்ய முடியவில்லை என்று உலகத்திற்குக் காட்டுவதற்காகப் பெரும் முயற்சிகள் அங்கு நடந்தன. இந்தியருக்குள் தகராறுகளும் சந்தேகங்களும் அதிகமிருப்பதால் பிரிட்டிஷ் சர்க்கார் ஆட்சி அதிகாரத்தைத் தங்கள் கைக்குள்ளேயே வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது என்று காட்டவும் முயன்றனர். ஆனால் லண்டனில் வட்டமேஜை மகாநாட்டில் என்ன நடந்தது என்பதை நான் விவரமாகக் கூறுவதற்கு இது இடமல்ல.

ஏமாற்றத்துடன் மகாத்மா இந்தியாவுக்குத் திரும்பிய சமயத்தில் இங்கு அதிகாரிகள், தேசிய இயக்கத்தை நசுக்குவதற்கு எந்த நடவடிக்கையையும் தாங்கள் எடுத்துக் கொண்டு விடக்கூடிய நிலைமையை உண்டாக்கிக் கொண்டு விட்டார்கள். வங்காளத்தில் பலர் கைது செய்யப்பட்டது. ஐக்ய மாகாணத்தில் விவசாயிகளுக்குச் செய்யப்பட்ட துன்பங்கள், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் நடந்து வந்த அடக்குமுறை ஆகியவைகளைப் பற்றிய நிலைமையை காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி சிந்திக்க வேண்டியதாயிற்று. மகாத்மாவின் வருகைக்காக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அவர் வந்திறங்கும் அன்றே பம்பாயில் காரியக் கமிட்டிக் கூட்டம் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. நாங்களெல்லோரும் எங்கள் ஊர்களிலிருந்து அந்நகருக்குப் புறப்பட்டோம். நான் பிரயாணம் செய்த ரயிலில் அலகாபாத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு வந்து ஏறினார்.

ரயில் அலகாபாத்தை விட்டு சில மைல்கள் தூரம் சென்றதும் ஒரு சிறு ஸ்டேஷனில் ரயிலை நிறுத்தி பண்டித ஜவஹர்லால் நேருவைக் கைது செய்து விட்டனர். நாங்கள் மகாத்மா காந்தியை சந்தித்து அவருடன் கலந்தாலோசிப்பதற்கோ அல்லது சமரசத்திற்கு ஏதாவது ஒரு வழியை மகாத்மா காந்தி சிந்திப்பதற்கோ அனுமதிக்க சர்க்கார் விரும்பவில்லை என்பது தெளிவாகி விட்டது. எப்படியாவது காங்கிரஸை நசுக்கிவிடவேண்டும் என்று அவர்கள் துணிந்திருந்தார்கள். மகாத்மா பம்பாயில் வந்திறங்கிய போது மக்கள் அவருக்கு மகத்தானதோர் வரவேற்பை அளித்தார்கள். கப்பலிலிருந்து இறங்கியதும் மகாத்மா, காரியக் கமிட்டி மெம்பர்களுடன் கலந்தாலோசித்தார். தாம் இல்லாதபோது ஏற்பட்டு விட்ட நிலைமையை சமாளிப்பதற்கு ஏதாவது ஒரு வழியைக் கண்டு பிடிப்பதை முன்னிட்டு தாம் வைசிராயைச் சந்தித்துப் பேச விரும்புவதாக லார்டு வில்லிங்டனுக்கு ஒரு தந்தி கொடுத்தார். ஆனால் லார்டு வில்லிங்டனோ, சந்தித்துப் பேச மறுத்து விட்டார். எனவே சமரசப் பேச்சு சாத்தியமில்லை. மீண்டும் போராட்டமே வந்து விட்டது என்பதை உணர்ந்தோம். எனவே அன்று மாலையே நாங்கள் அவரவர்களுடைய ஊர்களுக்குத் திரும்பி விட்டோம்.

நாங்கள் புறப்பட்ட பின்னருங்கூட சமரசப் பேச்சை ஆரம்பிப்பதற்காக தந்தி மூலம் மகாத்மா முயற்சிகளைச் செய்தார். ஆனால் எல்லாம் பயனற்றுப் போயின. அவரையும் இரவில் கைது செய்து எரவாடா சிறைக்குக் கொண்டு போய் விட்டனர். அன்றே எல்லா முக்கியமான தலைவர்களும் அவரவர்களின் ஊர்களில் கைது செய்யப் பட்டனர். காங்கிரஸ் நடவடிக்கைகளும் அதன் மற்ற வேலைகளும் நடந்து வந்த எல்லா ஆசிரமங்கள், காங்கிரஸ் காரியாலயங்கள் முதலியவைகளை யெல்லாம் சட்டவிரோதமானவை என்று பிரகடனஞ் செய்து, அவற்றின் முக்கியமான ஊழியர்களையும் கைது செய்தார்கள். நாங்கள் சிறைகளுக்குக் கொண்டு போகப் படுவதற்கு முன்னால், வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டுப் போகவே அவகாசம் வைக்கப்படவில்லை. ஆகையால் அடுத்தபடியாக

தாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்பது காங்கிரஸ் ஊழியர்களுக்குத் தெரியாது. தாங்கள் பின்பற்ற வேண்டிய திட்டம் ஏதாவது இருக்கிறதா என்பதையும் பொது மக்கள் அறிய மாட்டார்கள். சில தினங்களுக்குள்ளேயே இயக்கம் முழுவதையும் நசுக்கிவிட முடியும் என்ற நினைப்பில் அதிகாரிகள் இருந்ததாகக் கேள்விப் பட்டோம். ஆனால் அதுதான் நடக்கவில்லை. அடக்குமுறை கடுமையானதாயிற்று. யாராவது காங்கிரஸ்காரர் சிறைக்கு வெளியில் விடப்பட்டால், மேற்கொண்டும் அவர் எந்த வேலையும் செய்வதற்கு வசதி எதுவுமே இல்லாதபடிச் செய்து விடவும் முயற்சி செய்தனர். காங்கிரஸ் நிதிக்கு பணங் கொடுக்கிறவர்களை உடனே கைது செய்து வந்தனர் காங்கிரஸ்காரருக்கு யாராவது இருக்க இடமும் உணவும் கொடுத்தால் அவருக்கும் கடுமையான தண்டனை. வாடகை வண்டி முதலியவைகளிலும் காங்கிரஸ்காரர்களை ஏற்றக்கூடாது என்ற அளவுக்குக் கூட காரியங்கள் நடந்தன. தந்தி, தபால் ஆபீஸ்களை காங்கிரஸ்காரர்கள் உபயோகித்துக் கொள்ள முடியாது. காங்கிரஸைப் பற்றிய உண்மையான செய்திகளைப் பிரசுரிக்கவும் பத்திரிகைகள் அனுமதிக்கப் படவில்லை. தாங்கள் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய மற்ற வசதிகளும் காங்கிரஸ்காரர்களுக்கு மறுக்கப்பட்டன. ஆனால் 1930 சத்தியாக்கிரக இயக்கம், மக்களின் உள்ளங்களில் ஆழ்ந்து பதிந்திருந்தது. வழி காட்டுகிறவர்களும், தலைவர்களின் ஆக்ஞைகளுமில்லாமலேயே சத்தியாக்கிரகத்தை நடத்திக் கொண்டு போவதற்கான வழிகளைத் தாங்களே செய்து கொண்டுவிடும் பயிற்சியை அவர்களுக்கு அது அளித்து விட்டது. ஒன்றன்பின் மற்றொன்றாக வந்து கொண்டிருந்த சர்க்கார் உத்தரவுகள், சட்ட மறுப்புக்கு அதிக உதவி செய்தன. எதை சர்க்கார் தடுக்கிறதோ அதை மக்கள் செய்வார்கள்; இதனால் சட்ட மறுப்பு திரும்பவும் ஆரம்பமாகும். இயக்கத்தைச் சில தினங்களில் நசுக்கி முடித்து விடலாம் என்று சர்க்கார் நினைத்தது நிறைவேறவில்லை; போராட்டம் பல மாதங்கள் நடந்து கொண்டே போயிற்று. சர்க்காரோ, மக்களிடம் பலவீனம் எதிலிருக்கிறது என்பதைக் கண்டு அதைத் தாக்க தலைப்பட்டது.

1930 சத்தியாக்கிரக இயக்க முடிவில், மக்களிடையே ஒரு பலவீனத்தை நான் கண்டேன். அவர்கள் சிறை செல்ல அஞ்சவில்லை; தடியடியையும் புன்சிரிப்புடனேயே ஏற்றுக் கொண்டார்கள். பல இடங்களில் துப்பாக்கி குண்டுகளையும் தீரமாக மார்பில் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் தங்கள் சொத்துக்களைப் பறித்துவிட சர்க்கார் முயற்சித்தபோது மாத்திரம் பயந்து விட்டார்கள். மக்களிடமிருந்த இந்த பலவீனத்தை சர்க்கார் தெரிந்து கொண்டு விட்ட போதிலும், இதன் பலனை முன்கூட்டியே நான் உணர முடிந்தது. இதனாலேயே 1932 இயக்க காலத்தில் நீண்ட கால தண்டனைகள் விதிக்கப்பட்டன. அதே சமயத்தில் பெருந் தொகையை அபராதமாக விதித்ததோடு அத்தொகையை வசூலிக்கக் கடுமையான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டார்கள். சட்ட மறுப்பு இயக்கத்திற்காக உபயோகித்துக் கொள்ள ஒருவர் தன்னுடைய வாகனத்தைக் கொடுத்திருந்தால், அது மாட்டு வண்டியானாலும் சரி, குதிரை வண்டியானாலும் சரி, மோட்டாராக இருந்தாலும் சரி, அந்த வாகனம் பறிமுதல் செய்யப்படும். ஒருவர் சத்தியாக்கிரக சம்பந்தமான காரியத்திற்கு தனது வீட்டைக் கொடுத்திருந்தால், அந்த வீட்டைப் பறிமுதல் செய்துகொண்டு விடுவார்கள். ஒருவருக்கு பாங்கில் பணமிருந்து, அந்தப் பணம் சத்தியாக்கிரகத்திற்குப் பயன்படுத்தப்பட்டால், அப்பணம் முடக்கப்பட்டு விடுவதோடு சில சமயங்களில் பறிமுதல் செய்யப்பட்டு விடுவதுமுண்டு. இவ்விதம் சத்தியாக்கிரகிகள் பிரசாரம் செய்ய முடியாதபடி, எங்கும் தாராளமாகப் போய் வர முடியாதவாறு, யாரிடமிருந்தும் பணம் பெறமுடியாத வகையில், யார் வீட்டிலும் தங்கவும் முடியாமலும், சொத்தை வைத்து சீர்வகிக்க முடியாதபடியும், வாகனங்களில் ஏறிப் போக இயலாதபடியும் செய்யப்பட்டனர். எல்லா வசதிகளும் அவர்களுக்கு அடைக்கப்பட்டன. சத்தியாக்கிரகிகளிடம் யாராவது அனுதாபியாக இருந்தால், அவரும் சத்தியாக்கிரகியாகவே பாவிக்கப்பட்டு எல்லாவித அடக்குமுறைகளுக்கும் ஆளாக்கப் பட்டார்கள். இதன் பலனாக, அசல் சத்தியாக்கிரகிகள் பணிந்து போய் விடாவிட்டாலும், தாங்கள் சத்தியாக்கிரகிகளல்லா விடினும் சத்தியாக்கிரகி

களிடம் அனுதாபங் கொண்டு அவர்களுக்கு உதவி செய்து வந்தவர்கள், பயமடைந்து நெறி தவறிப் போய் விட்டனர். பொது மக்களிடமிருந்து சாதாரணமாக சத்தியாக்கிரகிகள் பெற்றுவந்த உதவிகளெல்லாம் இவ்விதம் பறிக்கப்பட்டு விட்டன. என்றாலும் லார்டு வில்லிங்டன் விடுத்த சவாலை நாடு ஏற்றுக் கொண்டு சரியானபடியே அவருக்குத் தன்னுடைய சக்தியைக் காட்டியது. நீண்ட காலம் வரையில் இயக்கத்தை நசுக்கிவிட சர்க்காரால் ஆகவில்லை. ஆனால் ஒன்றரை ஆண்டு கழித்து இயக்கம் அதனுடைய வேகத்தை இழந்துவிட்டது. நிலைமையை சமாளித்து விட்டதாகச் சொல்லிக்கொள்ளும் சந்தர்ப்பமும் சர்க்காருக்கு ஏற்பட்டது.

தீண்டாமை ஒழிப்புப் போர்

தீண்டாமையை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை, குழந்தையாக இருந்தபோதே தாம் உணர்ந்திருந்ததாக, மகாத்மா காந்தி தமது சுய சரிதையில் கூறியிருக்கிறார். இந்த வழக்கத்தின் அக்கிரமத்தை, இயற்கைக்கு விரோதமான இதை, முற்றிலும் அறிய ஆரம்பித்த பிறகு, இத்தீமையை ஒழித்துக் கட்ட அவர் தம்மாலான எல்லா காரியங்களையும் செய்தார். அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்து பொதுஜன சேவையில் ஈடுபட ஆரம்பித்ததும், தமது வேலைத் திட்டங்களில் தீண்டாமை ஒழிப்பை முக்கியமான தாக்கிக் கொண்டார். காங்கிரஸின் வேலைத் திட்டத்திலும் இதை ஒன்றாக்கி, முடிந்த வரையில் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வற்புறுத்தி வந்தார். இதற்கான காரியங்களையும் நடைமுறையில் மேற்கொண்டார். சேத் யமுனாலால் பஜாஜ், தமது வாழ்க்கை வேலைகளில் இதை முக்கியமான தாக்கிக் கொண்டதோடு சிறிது காலம் இந்த வேலையில் மாத்திரமே ஈடுபட்டுமிருந்தார். காங்கிரஸ் ஸ்தாபனம் அதிகமான பொதுஜன ஆதரவைப் பெற்று பலம் பெற்று வரவே, தீண்டாமை ஒழிப்பு வேலையில் கவனஞ் செலுத்துவதும் அதிகமாயிற்று. இத்தீமை பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்திருப்பதால் ஆழமாக வேர் விட்டு விட்டது. ஆகவே அதை ஒரே நாளில் அழித்து விட முடியாது. என்றாலும் அதன் அடிப்படை ஆட்டங் கண்டு விட்டது என்பதில் சந்தேகமில்லை.

ராஜீய காரணங்களை முன்னிட்டு ஹிந்து – முஸ்லிம் பிரச்னையும் வரவர அதிக சிக்கலானதாகி வந்தது. கிலாபத் கிளர்ச்சிக் காலத்தில் இருந்து வந்த ஒற்றுமையும் நல்லெண்ணமும் கனவு போல் மறைந்து விட்டன. அடிக்கடி வகுப்புக் கலவரங்களும் நடந்து வந்தன. இச் சச்சரவுகள் மத சம்பந்தமானவை என்றே வெளிக்குத் தோன்றிய போதிலும், உண்மையில் இதற்குக் காரணங்கள் பெரும்பாலும் ராஜீய சம்பந்தமானவையே. பசு வதையினால் சில இடங்களில் கலவரம் மூளும்; மற்ற இடங்களிலோ

தாஜியா மீது கற்களை விசினார்கள் என்பதால் கலவரம் கிளம்பும்; வேறு சில இடங்களில் மசூதி முன்னால் மேளம் வாசித்ததால் கலகம். ராஜீயக் கிளர்ச்சி வலுவடைந்து, ஆட்சி அதிகாரம் இந்தியர் கைக்கு மாற்றப்பட்டு விடக் கூடும் என்று தோன்றவே, இந்த ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்காக தாங்கள் ஏதாவது பாடு பட்டார்களா, தியாகஞ் செய்திருக்கிறார்களா என்பதைக்கூட கவனிக்காமல், இந்த அதிகாரத்தில் அதிக பங்கை வகிக்க வேண்டும் என்பதற்குக் கிளர்ச்சிகள் அதிகமாகக் கிளம்பி விட்டன. தீண்டாத வகுப்பினர்களின் சார்பில் ஒரு இயக்கம் தோன்றியதோடு, அவர்கள் சார்பில் அது கோரிக்கைகளையும் வெளியிட்டது. பிரிட்டிஷ் சர்க்காரோ, இந்தியாவிலிருக்கும் எல்லா கட்சிகளும் கோஷ்டிகளும் தங்களுக்குள் ஒன்றுபட்டு ஒரு கோரிக்கையை வெளியிட்டாலொழிய, தாங்கள் உருப்படியாகச் செய்ய வேண்டியது எதுவுமில்லை என்று கட்சி பேசியது. அவர்கள் ஏதாவது செய்தாலும், அதில் அநேக தங்கு தடைகளுமிருக்கும். இதனால், நாட்டின் பல கோஷ்டிகளுக்குமிடையே இதுவே தகராறை உண்டாக்குவதாக இருந்தது. சர்க்காரின் இக்கொள்கையை அனுசரித்தே, முதலில் மார்லி - மிண்டோ சீர்திருத்தங்கள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டபோது, சட்ட சபைகளில் சிலர் மாத்திரமே தேர்தல் மூலம் வரும்படிச் செய்தனர். மக்களின் பிரதிநிதிகளுக்கு அரசியல் அதிகாரம் எதுவும் அளிக்கப்படவில்லை. ஆனால் இந்த சிறு சீர்திருத்தத்தில் கூட, முஸ்லிம்களுக்குத் தனி வாக்காளர் தொகுதியை உண்டாக்கி, இந்நாட்டு மக்களை முஸ்லிம்கள், முஸ்லிம்களல்லாதவர்கள் என்று பிரித்தார்கள். இவ்விதம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்ப இந்தியருக்கு அளிக்கப்பட்ட இச் சிறு உரிமையைக்கூட, இந்தியர் என்ற முறையில் அளிக்காமல், இந்தியரில் முஸ்லிம்கள், முஸ்லிம்களல்லாதவர்கள் என்ற முறையில் பாகுபாடு செய்து கொடுத்தார்கள். இந்த சீர்திருத்தம் வெளியிடப் படுவதற்கு முன்னால், ஆட்சியாளரின் தூண்டுதலின்பேரில் முஸ்லிம்களில் ஒரு பகுதியினர், தனித் தொகுதிக் கோரிக்கையை வெளியிடவே, அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு தனி வாக்காளர் தொகுதியை உண்டாக்கி அதி

வீப்பை வெளியிட்டார்கள். ஆனால் இத்தகைய காரியமொன்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதும், இந்த விஷ வித்து நடப்பட்டதும், அது முளைத்து வளராமல் இருந்துவிடாது. இதன் பலனாக மற்ற சமூகத்தினரும் தங்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி வேண்டும் என்று கேட்கத் தலைப்பட்டனர். உதாரணமாக சீக்கியர், கிறிஸ்தவர்களின் இந்தக் கோரிக்கைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. ஆகையால் அவருக்கென்றே முன்னேற்பாட்டுடன் தயாரிக்கப்பட்டிருந்த ஒரு நிலைமையை மகாத்மா காந்தி வட்டமேஜை மகாநாட்டில் சமாளிக்க வேண்டியதாயிற்று.

1930-ல் வட்டமேஜை மகாநாட்டில் முக்கியமாக கவனிக்கப்பட்ட ஒரு விஷயம், இந்தியா முழுமைக்கும் ஒரே அரசியல் இருப்பதென்பது. அப்பொழுது பிரிட்டிஷ் இந்தியா என்ற பகுதி பிரிட்டிஷ் பார்லிமெண்டினால் ஆளப்பட்டு வந்தது. இந்திய சமஸ்தானங்கள் என்ற பகுதியிலோ, பிரிட்டிஷ் மன்னரின் மேலதிகாரத்தின் கீழ் சுதேச மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்தார்கள். இந்த சுதேச மன்னர்கள், அநேகமாக தங்களிஷ்டப்படி ஆட்சியை நடத்த உரிமை பெற்றிருந்தனர். முதல் வட்டமேஜை மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்ட விஷயம், பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் சுதேச மன்னர்கள் இந்தியாவுக்கும் சேர்த்து ஒரே அரசியல் இருப்பதா, அப்படியானால் அதில் சுதேச மன்னர்களின் நிலை என்ன என்று நிர்ணயிப்பது என்பதேயாகும். சமஸ்தான மன்னர்களின் பிரதிநிதிகள் யாவரும் வட்டமேஜை மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். பிரிட்டிஷ் இந்தியப் பகுதி முழுவதிலும் சுயராஜ்யக் கிளர்ச்சி பலப்பட்டு வருகிறது என்பதையும், அப்பகுதியில் எழுந்துவிட்ட மக்களின் சுதந்திர எழுச்சியைச் சமாளித்து விடுவது எளிதல்ல என்பதையும் பிரிட்டிஷ் சர்க்கார் உணர்ந்துவிட்டதால், இந்திய சர்க்காரின் முழு ஆட்சி மீதும் தங்கள் ஆதிக்கத்தை நீடிப்பதற்கு சமஸ்தான மன்னர்களை ஆயுதங்களாக உபயோகித்துக் கொள்ளலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். சில மன்னர்கள், பிரிட்டிஷாரின் கையாட்களாகவும், மற்றவர்கள் தாங்கள் கொண்டிருந்த உண்மையான தேசாபிமானத்தினாலும், வட்டமேஜை மகாநாட்டுக்குச்

சென்று, இந்தியா முழுமையுமே ஒரு பெடரேஷனுவதை ஆதரித்தார்கள். சுதேச சமஸ்தானங்களும் உள்ளிட்ட தான ஒரு பெடரல் அரசியல், அனுபவ சாத்தியமானதாக முதன் முதலில் விவாதிக்கப்பட்டது வட்டமேஜை மகா நாட்டிலேயேயாகும். சமஸ்தான மன்னர்கள், தங்கள் சமஸ்தானங்களின் நிர்வாகங்கள் சொந்த அதிகாரத்துட னிருந்ததால், என்ன முறையில், எந்த நிபந்தனைகளின் பேரில், தாங்கள் பெடரேஷனில் சேருவது என்று கேட் டார்கள். சமஸ்தான மன்னர்கள் ஒரு பக்கமிருக்க, சுய ராஜ்ய இயக்கத்திற்கு ஆதரவாயில்லாமல் பிரிட்டிஷ் ஆதர வாளர்களாக பிரிட்டிஷ் இந்தியாவில் சில ரகத்தினரும் இருந்தனர்.ஏதோ சில காரணங்களை முன்னிட்டு பிரிட்டிஷ் சர்க்காருடனேயே தாங்கள் இருக்கவேண்டும் என்று எண் ணியவர்களும் உண்டு. இப்படிப்பட்டவர்களின் பிரதிநிதிக ளெல்லாம், மத்திய சட்டசபையில் காங்கிரஸ் பிரதிநிதி களுக்கு முட்டுக்கட்டையாக இருந்துவிடும்படிச் செய்து விடும் ஒரு அரசியலைத் தயாரித்துவிடவே பிரிட்டிஷ் சர்க் கார் விரும்பியது. இவ்விதம் செய்து விட்டால், இந்தியப் பிரதிநிதிகளால் ஆளப்படுவதாகத் தோன்றினும், மறை முகமான, ஆனல் இன்னும் பலமான வகையில், பிரிட்டிஷ் சர்க்காராலேயே இந்தியா ஆளப்பட்டு வரும்.

1931ல் மகாத்மா இரண்டாவது வட்டமேஜை மகா நாட்டுக்குச் சென்றபோது, தேசியக் கோரிக்கைக்கு எதிராக அதிகப் பலமான கோஷ்டியொன்று திரட்டப் பட்டிருக்கிறது என்பதைக் கண்டார் பிரிட்டிஷ் சர்க்கா ரின் தூண்டுதலினுல், அதனுடைய தீவிரமான உதவியை கொண்டே, இந்தியரின் இந்த எதிர்ப்பு கோஷ்டி உருவாக் கப்பட்டிருந்தது. ஆகையால் மகாத்மா என்ன முயற்சி செய்து பார்த்தும், எல்லா இந்தியரும் ஒப்புக்கொள்ளக் கூடியதான ஒரு வழியைக் காண அவரால் முடியவில்லை. காங்கிரஸின் கோரிக்கையில் சேர மறுத்தவர்களில் முக்கிய மானவர்கள் முஸ்லிம் தலைவர்களும், தாழ்த்தப்பட்டவர் களின் தலைவர்களுமே யாகும். இவ்விதம் காங்கிரஸை எதிர்க்கும் இச் சமூகங்களின் தலைவர்களை மாத்திரமே இம் மகாநாட்டுக்குக் கொண்டுவந்திருந்தனர். மகாத்மா என்ன முயற்சி செய்து பார்த்தும், காங்கிரஸைச் சேர்ந்த

முஸ்லிம்களில் ஒருவர்கூட மகாநாட்டுக்கு அழைக்கப்பட வில்லை. ஆகையால் முடிவு என்ன ஆகும் என்பது முன்னலேயே தெரிந்த சங்கதி. இந்தியருக்குள்ளிருந்த வேற்றுமைகளைப் போக்கி சமரசம் உண்டாக்க முடியாது போனதால் இதில் மகாத்மா தமது தோல்வியை ஒப்புக்கொண்டார். இந்தத் தகராறுகளுக்கும் விவாதங்களுக்கும் மத்தியில், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் சார்பாகச் சிலர் ஒன்று கோரினர். முஸ்லிம்களைப் போல தங்கள் பிரதிநிதிகளும் தனி வாக்காளர் தொகுதியின் மூலமே சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று இவர்கள் கேட்டார்கள்.

தீண்டாமை என்பதே மிகப் பெரிய பாபமான செய்கை என்று மகாத்மா கருதினர். அதை ஒழித்துக் கட்டுவதற்கு ஹிந்து சமூகத்துடன் பலமாக போராடிக் கொண்டுமிருந்தார். தீண்டாதவர்கள் என்போருக்குத் தனி வாக்காளர் தொகுதியை அளிப்பதென்பது, அவர்களை ஹிந்துக்களிலிருந்து நிரந்தரமாகப் பிரித்து வைத்து விடுவதோடு தீண்டாமையும் இருந்துவரும்படிச் செய்துவிடும் என்று மகாத்மா எண்ணினர். முற்றிலும் ஒழுக்க, ஆத்மீக காரணங்களை முன்னிட்டு இத்தகைய பிரிவினையை சகிக்க மகாத்மா தயாராயில்லை. தங்களைக் கூட்டுத் தொகுதியின் மூலம் ஹிந்துக்கள் சேர்த்து வைத்திருந்தால், முஸ்லிம்களை சரியானபடி எதிர்ப்பதற்குத் தங்களுக்குச் சௌகரியமாக இருக்கும் என்ற ராஜீய நோக்கத்தைக் கொண்டே, தனித் தொகுதி வேண்டுமென தாங்கள் கேட்பதை ஹிந்துக்கள் எதிர்க்கிறார்களென்று தீண்டாதாரில் சிலர் கருதினர். ஆனல் மகாத்மாவின் மனதை அறிந்தவர்களுக்கும், அவர் கூறுவதை நம்பியவர்களுக்கும், அவருக்கு இது ஆத்மீக விஷயமேயல்லாமல் ராஜீய விஷயமல்ல என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது. தீண்டாதாரும் ஹிந்து சமூகத்தில் சேர்ந்தவர்களே என்று மகாத்மா எண்ணினர். ஹிந்து சமூகத்தில் மற்ற ஜாதியினருக்கு இருக்கும் அந்தஸ்தை தீண்டாதாரும் அடைந்தாகவேண்டும் என்றும் கருதினர். அவர்களுக்குத் தனி வாக்காளர் தொகுதியை அளிப்பதென்பது இந்தச் சீர்திருத்தத்திற்கு தீமையை உண்டாக்குவதோடு, சமூக விஷயங்களிலேயே யல்லாமல் ராஜீய விஷயங்களி

லும் அவர்களை நிரந்தரமாகத் தனித்து வைத்துவிடும். இதை மகாத்மா உணர்ந்ததும், பிரிட்டிஷ் சர்க்கார் ஹரிஜனங்களின் இக் கோரிக்கையை ஒப்புக்கொண்டால், தனி வாக்காளர் தொகுதி கொடுத்துவிட்டால், அவசியமாயின் உயிரைக்கொடுத்தும் இதைத் தாம் எதிர்க்கப்போவதாக வட்டமேஜை மகாநாட்டில் அறிவித்தார். அவருடைய அர்த்தபுஷ்டி நிறைந்த இந்த அறிவிப்பை அப்பொழுது யாரும் அவ்வளவு முக்கியமானதாகக் கருதவில்லை. இதை யாருடைய கவனித்திற்காவது கொண்டுவந்தால், தமது கட்சியை வலியுறுத்திச் சொல்லுவதற்கே மகாத்மா அப்படிச் சொல்லியிருக்கிருரேயன்றி அதற்குமேல் அதில் பெரிய முக்கியத்துவம் எதுவும் கிடையாதுஎன்று அவர்கள் கூறிவந்தார்கள். ஆனல் மகாத்மா காந்தி வேண்டுமென்றே அவ்விதம் கூறியதோடு அதன்படி நடக்கவும் மனதில் உறுதிகொண்டு விட்டார்.

சமூக விஷயமாக இந்தியருக்குள்ளே ஒரு சமரசமான முடிவு ஏற்படாதுபோகவே, அப்பொழுதுபிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த ஸ்ரீ. ராம்டே மாக்டனல்டு, அபிப்பிராய பேதங்களுள்ள விஷயங்களில் தமது தீர்ப்பை அளிக்கப் போவதாக அறிவித்தார். கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவர் வெளியிட்ட தம்முடைய வகுப்புத் தீர்ப்பில், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு சட்டசபைகளில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படுவதோடு அவர்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி இருக்கும் என்றும் சொன்னர். ஸ்ரீ. மாக்டனல்டின் இத் தீர்ப்பு, ஒரு மத்தியஸ்தரின் தீர்ப்பாகக் கருதப்பட்டது. உண்மையில் இது ஒரு மத்தியஸ்தரின் தீர்ப்பே அல்ல. ஏனெனில் சம்பந்தப்பட்டவர்களெல்லாம், சுயேச்சையாக ஒருவரை ஒப்புக்கொண்டால் மாத்திரமே, ஒரு தகராறில் அவர் மத்தியஸ்தராக இருக்க முடியும். ஆனல் இந்தியாவிலுள்ள பல தரப்பட்ட சமுகங்களின் தலைவர்களும் ஸ்ரீ.மாக்டனல்டுவை மத்தியஸ்தராக நியமிக்கவில்லை. மிகப் பெரியதும், பொதுஜன செல்வாக்கை மிகஅதிகமாகப் பெற்றதுமான காங்கிரஸின் பிரதிநிதியான மகாத்மா, அவரை மத்தியஸ்தராக ஒப்புக்கொள்ளவே யில்லை என்பது நிச்சயம். பிரிட்டனின் பிரதம மந்திரி என்ற முறையில் தமக்கு விரும்பிய முடிவைக் கூற அவருக்கு உரிமை

இருந்தது; அந்த முறையிலேயே அவர் தமது முடிவை வெளியிட்டார். அதிகாரத்திலிருக்கும் ஒருவர் செய்யும் முடிவுக்கும், ஒரு மத்தியஸ்தர் வெளியிடும் தீர்ப்புக்கு முள்ள வித்தியாசத்தை கவனிக்கவேண்டியது இச் சந்தர்ப் பத்தில் முக்கியம். அதிகாரத்திலிருக்கும் ஒருவர் வெளி யிடும் முடிவை, ஒருவர் ஏற்றுகொண்டே யாகவேண்டும் என்ற கடமை எதுவுமில்லை. ஏதாவது ஒரு முறையைக் கொண்டு அந்த முடிவை ஒருவர் மாற்றும்படிச் செய்து விட்டால், அவர் அப்படிச் செய்வதில் ஒழுக்கத்தவறுன காரியம் எதுவுமே கிடையாது. இதனுலேயே அதிகாரத்தி லிருப்பவர்கள் செய்யும் ஒரு முடிவின் பேரில் சம்பந்தப் பட்ட கட்சியினருக்கு அப்பீல் செய்துகொள்ள உரிமை அளிக்கப்படுகிறது. ஆனுல் ஒரு மத்தியஸ்தரோ, சம்பந்தப் பட்ட கட்சியினர் இது சம்பந்தமாக தங்களுக்குள் ஏற் படும் ஒரு ஒப்பந்தத்தின் காரணமாக நியமிக்கப்படுகிறவர், ஆகையால் ஒரு மத்தியஸ்தர் அயோக்கியத்தனமாக நடந்து விட்டார் என்றே அல்லது தமது அதிகார எல்லையை மீறித் தம்மிடம் மத்தியஸ்திற்கு விடப்படாத மற்ற விஷயங்களிலும் தீர்ப்புக் கூறியிருக்கிறுர் என்றே தெளிவாக நிரூபிக்கப்பட்டாலொழிய, ஒரு மத்தியஸ்தரின் தீர்ப்பின் பேரில், சட்டப்படிக் கூட, அப்பீலுக்கு இடமே கிடையாது. இந்த வகுப்புத் தீர்ப்பை மகாத்மா பிறகு எதிர்த்தபோது, ஒழுக்கத்திற்கு மாறுன காரியம் எதையும் அவர் செய்துவிடவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே இவைகளை யெல்லாம் கூற வேண்டியது அவசியமாகிறது. ஸ்ரீ. மாக்டனுல்டுவை மத்தியஸ்தராக மகாத்மா காந்தி ஒப்புக்கொண்டதே கிடையாது. ஆகையால் அதை மத்தியஸ்தர் தீர்ப்பு என்று சொல்லுவதே உண்மையில் தவறுனது.

நான் முன்னுலேயே சொல்லியிருப்பது போல, அந்தத் தீர்ப்பின் ஒரு ஷரத்து, அத்தீர்ப்பினுல் பாதிக்கப்பட்ட எல்லா கட்சியினரும் அதில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மாற்றவேண்டும் என்றே அல்லது திருத்தவேண்டும் என்றே விரும்பினுல், அது அவ்விதம் செய்யப்படும் என்று கூறியது. எரவாடா சிறையில் மகாத்மா இதைப் பற்றிப் படித்ததும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு தனித்

தொகுதி ?அளிப்பதென்ற பகுதியை மாற்ற வேண்டும் என்றும், சர்க்கார் இதற்கு சம்மதிக்க வில்லையானால், அவசியமானால் இதற்காக தமது உயிரையும் தத்தம் செய்து அதை எதிர்க்கத் தாம் தயாராயிருப்பதாகவும், சர்க்காருக்கு எழுதினர். சர்க்கார் இதை அலட்சியம் செய்து விடவே, சில கடிதப் போக்குவரத்துகளுக்குப் பிறகு, இந்த தனி வாக்காளர் தொகுதி யோசனை கைவிடப்படும் வரையில் தாம் எதையுமே சாப்பிடப் போவதில்லை என்று அறிவித்தார். தாம் என்று உண்ணுவிரதமிருக்கப் போகிறார் என்பதற்கு தேதியை அறிவித்து அத் தேதியில் உண்ணுவிரதத்தைத் தொடங்கியும் விட்டார். இச்செய்தி பிரசுரமானதும் நாடெங்கும் பெரும் பரபரப்பும் கவலையும் எழுந்தன. பண்டித மதனமோகன மாளவியாவும் ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியாரும், பம்பாயில் ஒரு மகாநாட்டைக் கூட்டினர். டாக்டர் அம்பேத்காரையும் தாழ்த்தப் பட்ட சமூகத்தினரின் மற்ற தலைவர்களையும் அதற்கு அழைத்திருந்தார்கள். அதோடு அந்த நாட்களில் சிறைக்கு வெளியிலிருந்த முக்கியமான காங்கிரஸ் ஊழியர்களையும் பம்பாய்க்கு வரும்படி கூப்பிட்டார்கள்.

மகாத்மா ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு சமரச முடிவு தாழ்த்தப்பட்டோர் சமூகத் தலைவர்களிடையே ஏற்பட்டு, அதன் மூலம் தமது தீர்ப்பை மாற்றும்படி ஸ்ரீ. மாக்டனால்டுவைக் கேட்டு, மகாத்மா உண்ணுவிரதத்தை நிறுத்தும்படிச் செய்வதே இந்த மகாநாட்டின் நோக்கம். இந்த ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டால் மகாத்மா உண்ணுவிரதத்தை நிறுத்திவிடுவார் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் அந்த ஒப்பந்தத்திற்கு வருவதில் அதிகக் கஷ்டங்களிருந்தன. பம்பாயில் சில நாட்கள் விவாதங்கள் நடந்து வந்தன. மகாத்மா காந்தியையும் சந்தித்து அதில் அவருடைய ஆலோசனையையும் கேட்டுக் கொள்வது சரி என்று தோன்றியதால் மகாநாட்டை புனுவுக்கு மாற்றுவது நல்லது என்று கருதப்பட்டது. சர்க்காரும், முக்கியமான தலைவர்கள் மகாத்மாவைச் சந்தித்துப் பேச அனுமதி கொடுத்தார்கள்; மற்ற வசதிகளையும் அளித்தார்கள். நீண்ட விவாதத்திற்குப் பிறகு ஒரு சமரச வழி கண்டு பிடிக்கப்பட்டது. இரண்டு நிபந்தனைகளின் பேரில் தனிப்

யட்ட வாக்காளர் தொகுதி முறையை விட்டுக் கொடுக்க டாக்டர் அம்பேத்கார் சம்மதித்தார். ஒன்று, தனி வாக்காளர் தொகுதியை விட்டுவிடுவதானால், சட்ட சபைகளில் ஹரிஜனங்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்குவதுடன், அவர்களுக்கு அளிக்கும் ஸ்தானங்களின் தொகை, ஜனத் தொகையில் அவர்களின் தொகைக்கு ஏற்ற வகையிலிருக்க வேண்டும் என்பது. இரண்டாவது நிபந்தனை, ஒரு தொகுதிக்கு முதலில் ஹரிஜனங்கள் மாத்திரமே நான்கு பேரைத் தேர்ந்தெடுப்பது, பிறகு ஹரிஜனங்களுள்பட ஹிந்துக்களில் எல்லோருமாகச் சேர்ந்து அந்த நால்வரில் ஒருவரை முடிவாகத் தேர்ந்தெடுப்பது; இந்த முறை குறைந்தது 10 வருஷங்களுக்காவது அமுலில் இருக்க வேண்டும் என்பது.

மகாத்மா காந்தி ஒரு மாமரத்தின் கீழ் ஒரு கட்டிலில் படுத்த வண்ணமே பேசுவார். சிறைக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தவர்கள் எல்லோரும், சுற்றிலும் உட்கார்ந்து கொண்டும், நின்று கொண்டுமிருந்து அவர் கூறுவதைக் கேட்டுக் கொள்வார்கள். அச்சமயங்களில் மகாத்மா காட்டிவந்த பொறுமையும் சகிப்புத் தன்மையும் முக்கியமாக கவனிக்க வேண்டியவைகளாகும். தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு தாம் நல்லது செய்ய விரும்புகிறரேயல்லாமல், இந்த உண்ணுவிரதத்தின் காரணமாக மற்ற ஹிந்துக்களுக்கு எந்தவித சகாயத்தையும் தேட அவர் விரும்பவில்லை என்பதை அவர் கூறிய ஒவ்வோர் வார்த்தையும் தெளிவு படுத்தியது. இக் காரணத்தைக்கொண்டே தீண்டாமையை வேரோடு களைந்தெறிந்துவிட அவர் விரும்பினர். தனி வாக்காளர் தொகுதி, ஒரு வகையில் தீண்டாமை என்றும் போகாமல் இருந்து வரும்படிச் செய்து விடும். டாக்டர் அம்பேத்காருடன் அவர் பேசியபோது, பல தடவைகளில் சக்தி வாய்ந்த பாஷையில் அதிக உருக்கமாக இதை எடுத்துக் கூறியதால், டாக்டர் அம்பேத்கார் முடிவாக ஒப்புக்கொண்டார்; ஒரு சமரசமும் ஏற்பட்டது. ஆனல்: இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னல் பல நாட்கள் மகாத்மா காந்தி அதிக நேரம் பேசவேண்டியிருந்தது. இந்த உண்ணுவிரதத்தின் போது முக்கியமான ஒரு விஷயத்தில், நீண்ட நேரம் பல மணிக்கணக்கில் பேச

வேண்டியிருந்ததால், அதற்கு வேண்டிய பலத்தை அளிக் கும் சக்தி ஏதோ ஒன்று அவரிடம் இருந்ததாகவே தோன்றியது ஆனால் நாளாக—அவருக்கு பலவீனமும் அதி கரித்து வந்தது. அவருடைய தொனி குறைந்துகொண்டே வந்ததிலிருந்து இது நன்றாகத் தெரிந்தது.

இந்த ஒப்பந்தத்தினால் தாழ்த்தப்பட்ட சமூகத்தின ருக்கு உண்டான நன்மைகளில் ஒன்று, ஸ்ரீ. மாக்டனால்டு வின் தீர்ப்பு அளித்ததைவிட அதிகமான ஸ்தானங்களை சட்ட சபைகளில் இந்த ஒப்பந்தம் அவர்களுக்குக் கொடுத் ததே யாகும். இவ் விஷயத்தில் எப்பொழுதுமே அதிக சிரத்தை செலுத்தி வந்தவரான ஸ்ரீ. அமிர்தலால தக்கர், பல மாகாணங்களிலும் அவர்களுக்கு எத்தனை ஸ்தா னங்கள் கிடைக்கும் என்பதை கணக்கிட்டுச் சொன்னார். ஒப்பந்தம் ஏற்பட்டதுமே அதைப் பற்றி இந்திய சர்க்கா ருக்குத் தகவல் அறிவிக்கப்பட்டது. இந்திய சர்க்கார் அதன் விவரங்களை தந்தி மூலம் ஸ்ரீ. மாக்டனால்டுவுக்குத் தெரி வித்தார்கள். மகாத்மா காந்தியின் உண்ணாவிரதத்தை அவசியமாக்கிய தமது தீர்ப்பின் பகுதியை தாம் மாற்றி விட்டதாக சில மணி நேரத்திற்கெல்லாம் ஸ்ரீ. மாக்டனால்டு பதில் அனுப்பி விட்டார். இத்தகவல் சர்க்காரிடமிருந்து மகாத்மாவுக்குக் கிடைக்கவே அவர் உண்ணாவிரதத்தை நிறுத்தினார். இந்த விவாதங்களில் கலந்து கொண்டவர் களில் அப்பொழுது புனாவிலிருந்தவர்கள் எல்லோரும், மகாத்மா உண்ணாவிரதத்தை நிறுத்திய சமயத்தில் அவருட னிருந்தார்கள். அந்த சமயத்தில் புனாவுக்கு வந்து சேர்ந்த கவி ரவீந்திரநாத தாகூரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார். கடவுளின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே மகாத்மா உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பார்; முடிப்பதையும் அதே போலவே முடிப்பார்; அப்பொழுதும் அப்படியே செய்தார். அவ் வைபவத்தைப் பற்றி அச்சமயத் தில் கவி ரவீந்திரநாத தாகூர் ஒரு அழகான வர்ணனையை எழுதினார்.

தீண்டாமையை ஒழிப்பதற்கும், தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்கும், ஹிந்துக்கள் முழு முயற்சியையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது ஒப்பந்தத்தின் விதி களில் ஒன்று. ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு நாங்கள். புனாவி

விருந்து பம்பாய்க்குச் சென்றோம். அங்கு ஹரிஜன சேவா சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அது முதல் தீண்டாமையை ஒழிப்பதற்காகவும், தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்காகவும் அச் சங்கம் பாடுபட்டு வருகிறது. சிறையிலிருந்து மகாத்மா காந்தி இதைப்பற்றி கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார்; அவை பிரசுரமாவதை சர்க்கார் தடுக்கவுமில்லை. சிறைக்கு வெளியிலிருந்தவர்களும் இந்த வேலையில் தீவிரமாக ஈடுபட்டார்கள். ஹரிஜன சேவா சங்கம் ஆரம்பிக்கப்பட்டதோடல்லாமல், நாட்டில் பல பகுதிகளிலும் தீண்டாமையை ஒழிக்கும் காரியங்களும் நடைமுறையில் நடந்தன. ஹரிஜனங்கள் அனுமதிக்கப்படாத கோயில்களிலெல்லாம், அவர்களும் மற்றவர்களைப் போல தாராளமாகச் சென்று வழிபடும் வசதியளிப்பதற்காக அக் கோயில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடும் முயற்சிகளும் நடந்தன. இதற்கு முன்னாலும் இத்தகைய முயற்சிகள் பல இடங்களில் நடந்திருந்ததோடு இதற்காக சத்தியாக்கிரகமும் செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த இயக்கம் இப்பொழுது புது வேகத்தையும் உற்சாகத்தையும் பெற்றது; வேலையும் வெகு தீவிரமாக நடந்து வந்தது. கொஞ்ச காலத்திற்குப் பிறகு மகாத்மா காந்தி தீண்டாமைப் பாபத்திற்கு ஒரு பிராயச்சித்தமாக எரவாடா சிறையில் இருபத்தோரு நாள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். நான் அப்பொழுது ஹஸாரிபாக் சிறையிலிருந்தேன். இச் செய்யைக் கேட்டதும் அச் சிறையிலிருந்த நண்பர்கள் பலர் பழ ஆகாரம் மாத்திரமே சாப்பிடுவது என்று விரதமிருந்தனர். சில இடங்களில் சிலர் உண்ணாவிரதமும் இருந்தார்கள். மகாத்மாவின் உண்ணாவிரதத்தின் பலனாக, தேசம் முழுவதுமே, முக்கியமாக ஹிந்துக்களுக்கு, இத்தீய பழக்கத்தைப்பற்றித் தீவிரமாக வலித்திக்கவும், இதை ஒழிப்பதற்குத் தாங்கள் என்ன செய்யலாம் என்பதில் ஒரு முடிவுக்கு வரவும் சந்தர்ப்பமேற்பட்டது. மகாத்மா காந்தி தமது உண்ணாவிரதத்தின் மூலம், சமூக சீர்திருத்த சம்பந்தமானதாக இருந்த இவ்விஷயத்தை ஒரு ஆத்மிக விஷயமாக உயர்த்திவிட்டார். இதனால் ஹிந்து சமூகம் முழுதுமே இதில் அதிக சிந்தனையைச் செலுத்த ஆரம்பித்தது. தீண்டாமை என்ற இக் கொடிய பழக்கத்

தின் அடிப்படை ஆட்டம் கண்டு விட்டது. அதன் மேல் இருந்த கட்டிடத்திலும் ஒவ்வொரு கல்லாகச் சரியத் தொடங்கிற்று.

சிறையிலிருந்தபடியே மகாத்மா காந்தி தீண்டாமை சம்பந்தமாக தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வந்தார். ஆனால் சிறிது காலங் கழித்து அவருடைய இந்த நடவடிக் கைக்குக் கட்டு திட்டங்களை விதிக்க சர்க்கார் முற்படவே, அவர் திரும்பவும் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தார். கட் டாயம் ஏற்பட்டுவிட்ட முறையில் சர்க்கார் அவரை சிறையி லிருந்து விடுதலை செய்துவிட்டார்கள். விடுதலையான பிறகு மகாத்மா ராஜீய வேலைகளை மேற்கொள்ளவில்லை. தாம் இன்னும் கைதியாகவே இருப்பதாக எண்ணிக்கொண்ட மகாத்மா, எரவாடா சிறையில் தாம் செய்துகொண்டிருந்த தற்குக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ எதையும் செய்ய விரும்பவில்லை. அவர் தமது பத்திரிகையில் எழுதிக் கொண்டிருந்ததோடு இதற்காக நாடு முழுதிலும் சுற்றுப் பிரயாணத்திற்கும் புறப்பட்டார். நாளாவட்டத்தில் சத்தி யாக்கிரக இயக்கம் தனது வேகத்தை இழந்துவிட்டது. அதைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு போவதில் லாப மில்லை என்றும் மகாத்மா கருதினார். ஆகையால் சிறிது காலத்திற்குப் பிறகு அந்த இயக்கம் நிறுத்தி வைக்கப் பட்டது.

முன்னெல்லாம் செய்ததைப் போலவே மகாத்மா தேசம் முழுதும் சுற்றுப்பிரயாணம் செய்தார். சில சமயங் களில் ரயில் மூலமும், சில சமயங்களில் மோட்டாரிலும் சென்று நாடெங்கும் தீண்டாமை மீது போர் தொடுத்தார். வைதிகர்கள் மகாத்மாவை பலமாக எதிர்த்தார்கள். ஆனால் மற்றவர்களும், அவர்களில் படித்தவர்களாக இருந்தவர் களும், இதில் மகாத்மாவுக்கு ஆதரவாகப் பேசி ஹிந்து சாஸ் திரங்களிலிருந்தும் அதற்கு மேற்கோள்களை எடுத்துக் காட்டினர். எதிரிடையான கருத்திலிருப்பவர்கள், அந்த சாஸ்திரங்களுக்கு தங்களுடைய வியாக்கியானங்களைச் சொல்லி பலமாக வாதிப்பார்கள். இவ்விதம் ஹிந்து சமூகம் முழுவதிலுமே பரபரப்பு ஏற்பட்டது. மகாத்மாவின் போராட்டத்தினால் ஆத்திரமடைந்தவர்கள், புனாவில்

மகாத்மா ஒரு பொதுக் கூட்டத்திற்குப் போய்க்கொண்டிருந்த வழியில், அவர் மீது ஒரு வெடிகுண்டை எறிந்தார்கள். அதிர்ஷ்டவசமாக அவர் காயமடையவில்லை. முக்கியமாக ஒரு ஆசாமி, அவருக்கு சங்கடங்களை விளைவிக்க வேண்டும் என்பதற்காகவே, சுற்றுப்பிரயாணம் முழுவதிலும் அவர் பின்னாலேயே போய்க் கொண்டிருந்தார். சத்தியாக்கிரகம் என்று தான் நினைத்த எதிர்ப்பைச் செய்து, பொதுக்கூட்டத்திற்கு மகாத்மா போகமுடியாதபடிச் செய்துவிட இவர் பார்ப்பார். இந்த ஆசாமியின் நடவடிக்கைகளைச் சமாளித்து நிறுத்திவிட, மகாத்மாவின் சுற்றுப் பிரயாண ஏற்பாடுகளை கவனித்தவர்கள், அதிகக் கஷ்டப்பட வேண்டியிருந்தது. என்றாலும் அவர்கள் இதில் முற்றிலும் வெற்றி பெறவில்லை. அந்த ஆசாமி நீண்டகாலம் மகாத்மாவைத் தொடர்ந்து போய்க் கொண்டே இருந்தார்.

மேலே சொன்ன புனா சம்பவமல்லாமல் மற்ற இடங்களிலும் மகாத்மாமீது பலாத்காரத்தை உபயோகிக்க சிலர் முற்பட்டனர். இவைகளில் சிலவற்றில் அவர் சொற்ப காயங்களையும் அடைந்தார். ஆனால் மகாத்மாவோ, தாம் மேற்கொண்ட காரியத்தில் மலைநப்பால் உறுதியுடனிருந்து சுற்றுப்பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்தினார். அவர் ஒரிஸ்ஸாவுக்குப் போனதும் கால் நடையாகவே போவது என்று முடிவு செய்தார். அவ்வாறே பல நாட்கள் அந்த மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து, பிரயாணத்தின் பெரும் பகுதியைமுடித்தார். நான் முன்னாலேயேசொன்னது போல, உறுதியுடன் தாக்கப்பட்டதால் தீண்டாமையின் அடிப்படை ஆட்டங் கொடுத்துவிட்டது. இன்னும் தீண்டாமை அடியோடு ஒழிக்கப்பட்டு விடவில்லை என்பது உண்மை. மரம் அடியோடு பறிக்கப்பட்டு விடவில்லையாயினும், அதன் ஆணி வேர்களெல்லாம் அறுந்து ஆடிக் கொண்டிருப்பதோடு இலை யெல்லாம் காய்ந்து, கிளைகளும் செத்துக்கொண்டு வருகின்றன. இவ்விதம் சீக்கிரம் செத்து விடப் போகும் ஒரு மரத்தின் நிலைமையிலேயே இன்று தீண்டாமையுமிருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. அம்மரத்தைப் போல தீண்டாமையின் வேர்களும் அறுபட்டுப் போயின; அதன் இலைகளும் கிளைகளும் வாடி

வருகின்றன; நிலத்திலிருந்து அதற்கு நீரும் காற்றும் கிடைக்காது. ஒரு செடிக்கு நிலத்திலிருந்து சத்து கிடைக்க வில்லையானால் அது சாகாமல் பிழைக்க முடியாது. அதே போல இக்கொடிய பழக்கமும் செத்தே தீரும்; ஆனால் கொஞ்ச காலம் ஆகும். ஏனெனில் இது இப்பொழுதுதான் முளைத்திருப்பதல்ல. ஆயிரம் வருஷங்களுக்கும் அதற்கு அதிகமாகவும் வளர்ந்து விட்ட மரம் இது. ஆகையால் ஆழத்தில் அது வேரூன்றி யிருக்கிறது. பெரும் புயலில் அடிபட்டு விழுந்து விடும் மரத்தின் இலைகளும் கிளைகளும் உடனே காய்ந்து போய் விடுவதில்லை. பூமியின் சாரம் கொஞ்சம் வருவதால், அம்மரம் உயிருடனில்லா விட்டா லும், இலையும் கிளையும் சிறிது காலத்திற்குப் பசுமையா கவே இருக்கும். இதே மாதிரி வீழ்ந்து விட்ட தீண்டாமை யும் அதிக காலத்திற்கு உயிரோடிராது. என்றாலும், அது அடியோடு செத்துவிட்டது என்று சொல்ல முடியாது.

தீண்டாமையை ஒழிக்கும் பிரச்னையை ஒரு மதப் பிரச்னையாக மகாத்மா நினைத்தார். அதே சமயத்தில், தாழ்த்தப்பட்டோரின் பொருளாதார முன்னேற்றமில்லா நிலைமையை அலட்சியஞ் செய்து விடாமல், அவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்தவும் விரும்பினார். ஆனால் இப்பிரச்னையில், அவருக்கும் ஹரிஜனங்களில் சில ருக்கும், அதிலும் முக்கியமாக ஆங்கிலப் படிப்பின் அனு கூலத்தை அடைந்தவர்களுக்கும், அபிப்பிராய பேதமிருந் தது. தங்களுடைய வாழ்க்கை நிலையைக் கொண்டே எல் லாவற்றையும் கவனிக்கக் கிளம்பிவிட்ட அவர்கள், ஹரி ஜனங்களின் ராஜீய, பொருளாதார நிலைமை அபிவிருத்தி யடைந்துவிட்டால், அவர்களுடைய சமூக நிலைமையும் தானே உயர்ந்துவிடும் என்றார்கள். ஆகையால் ஹிந்துக் கோயில்களில் ஹரிஜனங்களுக்கும் தரிசன உரிமை வேண் டும் என்பது மிக முக்கியம் என்று மகாத்மா கருதியது போல இவர்கள் எண்ணவில்லை. ஹரிஜனங்களுக்கு கோயில்களைத் திறந்து விடுவதைவிட, அவர்களுடைய நன்மைக்குப் பள்ளிக்கூடங்களைத் திறந்துவிட வேண்டும்; சர்க்காரில் அவர்களுக்கு உத்தியோகங்கள் கொடுத்து, நிலம் கொடுத்து, அவர்களுடைய நிலைமை பொதுவாக

உயரும்படிச் செய்வதே முக்கியம் என்று இவர்கள் சொன்னார்கள். ஹரிஜன முன்னேற்றத்திற்கான இக்காரியங்களை மகாத்மா அலட்சியம் செய்யவில்லை. மற்ற ஹிந்துக்களைப் போலவே ஹரிஜனங்களும் சம அந்தஸ்தை அடைவது அவசியமே. என்றாலும், மத விஷயங்களிலும் அவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும்படிச் செய்வது முக்கியம் என்றார் மகாத்மா. ஒரு கோயிலுக்குள் போய் தரிசிக்க ஒருவருக்குள்ள உரிமையை மறுப்பதோ அல்லது ஒருவரைத் தீண்டாதார் என்று பாவிப்பதோ, அவ்விதம் செய்கிறவர்களுக்கு எவ்வளவு பாபமோ அதே பாபம் இவற்றிற்கு உடன்படுகிறவருக்கும் உண்டு என்று மகாத்மா கருதியதுதான் இதற்குக் காரணம். ஆகையால் ஹிந்து சமூகம் இப்பாபத்தைப் போக்கிக் கொண்டாலன்றி அது முன்னேற்றத்தை அடைய முடியாது என்பது அவர் அபிப்பிராயம். ஹரிஜனங்களும் அந்த ஹிந்து சமூகத்தின் ஒரு பகுதியாக இருப்பதால், ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக என்ன செய்தாலும், அது மாத்திரம் போதாது என்றார். ஆகையால் வைதிக ஹிந்துக்களின் எதிர்ப்பை அவர் எவ்விதம் பொருட்படுத்தவில்லையோ அதே போல, ஹரிஜனங்களில் தம்மை எதிர்த்தவர்களையும் பொருட்படுத்தாமல் மகாத்மா தமது வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டு போனார். இன்றோ இந்த சீர்திருத்த சம்பந்தமாக ஏகோபித்த அபிப்பிராயம் இருந்து வருகிறது. தயாரிக்கப்பட்டுள்ள அரசியலில், தீண்டாமையை அனுசரிப்பது சட்ட விரோதமான குற்றம் என்று செய்யப்பட்டுமிருக்கிறது. தீண்டாமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அரசியலின் ஆக்ஞா விதிகள் கூறுகின்றன.

முன்னேற்றமடையாத சமூகங்களின் நலன்களை கவனித்து, அவர்களுக்கு அரசியல் விதிகளினால் அளிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புகள் கவனிக்கப்படாமல் போய்விடாதபடி பார்த்துக் கொள்ள, ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டும் என்றும் அரசியல் விதிக்கிறது. தீண்டாமையை ஒழிப்பதற்குச் செய்யப்பட்டிருக்கும் விதிகள் நடைமுறையில் நிறைவேற்றப்படும்படி கவனிப்பதோடு தாழ்த்தப்பட்டிருக்கும் சமூகங்களின் கல்வி, முன்னேற்றம் ஆகியவைகளையும்

அவர் கவனிக்க வேண்டும் என்றும் விதிக்கப் பட்டிருக்கிறது. பத்து வருஷங்களுக்குப் பிறகு, ஹரிஜனங்கள், பிற்பட்ட சமூகத்தினரின் நிலைமையைக் குறித்து விசாரித்து, ஜனாதிபதிக்கு ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக ஒரு கமிஷனும் நியமிக்கப்படும். இந்த அறிக்கை பார்லிமெண்டின் பரிசீலனைக்கு வைக்கப்படும். ஹரிஜனங்களை, இந்தியாவிலுள்ள மற்றெல்லா சமூகங்களின் அந்தஸ்திற்குக் கொண்டு வருவதற்காக, இப்பொழுது அரசியலில் சேர்க்கப்பட்டிருப்பதான ஹரிஜனங்களுக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கும் விதி, அரசியலிலிருந்து பிறகு நீக்கப்பட்டு விடும். ஆட்சி அதிகாரத்திலிருக்கும் கட்சி அரசியலின்படி நடக்க வேண்டியிருப்பதால், தீண்டாமையை ஒழிப்பதற்கும், மற்ற மக்களின் தரத்திற்கு ஹரிஜனங்களையும் பிற்பட்ட மற்ற சமூகத்தினரையும் கொண்டு வருவதற்கும், இந்த விதிகள் அதிக உதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. இந்த வேலைத் திட்டம் அரசியலில் கொண்டு வரப்படுவது இதுவே முதல் தடவையுமல்ல, காங்கிரஸும் காங்கிரஸ் சர்க்கார்களும் பல்லாண்டுகளாக எதைச் செய்து வந்திருக்கிறதோ அதை அங்கீகரிப்பதேயாகும் இது. தீண்டாமையை ஒழிக்க வேண்டியது முக்கியம் என்று மகாத்மா வற்புறுத்த ஆரம்பித்த முதலே, காங்கிரஸ்காரர்களும் அவருடன் தொடர்பு கொண்ட மற்றவர்களும், அவருடைய உபதேசத்தின்படி இந்த சமூக சீர்திருத்தத்தில் தீவிரமாக வேலை செய்து வந்திருக்கிறார்கள். இதன் பலனாக பல மாகாணங்களில், அதிலும் தீண்டாமை படு மோசமானதாக இருந்த தென்னாட்டில், சட்டங்களைச் செய்து தீண்டாதாருக்குக் கோயில்களைத் திறந்து விட்டு, கோயில்களுக்குச் செல்வதை சட்ட சம்மதமானதாக்கியிருக்கிறார்கள். எல்லா மாகாணங்களிலும் ஹரிஜனங்களுக்குப் படிக்க உபகாரச சம்பளங்கள் கொடுத்து, ஹரிஜனக் குழந்தைகளுக்கென்று மாணவர்கள் விடுதிகளை ஏற்படுத்தி, பொதுவாக படிப்பில் அவர்கள் ஊக்கமளிக்கப்பட்டு வருகிறார்கள். ஹரிஜனங்களில் படிப்புத் தகுதியுள்ளவர்கள் போதுமான அளவுக்குக் கிடைக்காததினால் உத்தியோகங்களில் மிக அதிகமானவர்கள் நியமிக்கப் படாவிட்டாலும், சர்க்கார் உத்தியோகங்களிலும் அவர்களுக்குச்

சரியான பங்கு அளிக்கப்படுகிறது. 1937-ல் முதல் தடவையாக காங்கிரஸ் பதவி ஏற்றபோது சில ஹரிஜனங்கள் மந்திரிகளாக நியமிக்கப் பட்டனர். இன்றுகூட எல்லா ராஜ்யங்களிலும் ஹரிஜன மந்திரிகளிருப்பதோடு மத்திய சர்க்காரிலும் ஹரிஜன மந்திரிகள் இருவர் இருக்கின்றனர். இவ்விதம் சூழ்நிலையில் முற்றிலும் மாறுதல் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வந்த தீய வழக்கம் அதி வேகமாக மறைந்து கொண்டு வருகிறது. இன்னும் கொஞ்ச காலத்திற்குள்ளே அது அடியோடு மறைந்தே போகும் என்பதில் சந்தேகமே யில்லை.

கதரின் தத்துவம்

1930-ல் தண்டியில் உப்புச் சட்டத்தை மீறுவதற்காக மகாத்மா காந்தி சபர்மதி ஆசிரமத்திலிருந்து புறப்பட்டபோது, சுயராஜ்யம் வந்த பிறகே தாம் ஆசிரமத்திற்குத் திரும்பப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனார். தமக்கு வழக்கமான உறுதியோடும் திடசித்தத்தோடுமே மகாத்மா அவ்விதம் சொன்னார். ஹரிஜனங்களுக்குத் தனி வாக்காளர் தொகுதியளிப்பது என்ற ஸ்ரீ. ராம்சே மாக்டனல்டுவின் தீர்ப்பை மாற்றும்படிச் செய்வதற்கு அவர் தம்முடைய உயிரையும் தத்தஞ் செய்துவிடத் தயாராயிருந்ததும் இதற்கு ஒரு சரியான உதாரணம். அவர் அவ்விதம் கூறியபோது யாரும் அதைப்பற்றி அவ்வளவு முக்கியமாகக் கருதவில்லை. தண்டி யாத்திரைக்குப் பிறகு சுயராஜ்யம் கிட்டாவிட்டால், தாம் எவ்வளவோ கஷ்டப்பட்டு உருவாக்கி, எவ்வளவோ பெரிய நம்பிக்கையெல்லாம் வைத்து, தமது லட்சியங்களுக்கு ஏற்ற வகையில் தேச சேவைக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் பயிற்சியளித்து வந்த ஒரு ஆசிரமத்தை, என்றுமே கைவிட்டுவிட்டுப் போய்விடுவார் என்று யாரும் அப்பொழுது நினைத்ததே கிடையாது. ஆனால் மகாத்மா இத்தகைய விஷயங்களைச் சொல்லும்போது, தாம் சொல்லுவதிலுள்ள முழுக் கருத்தையும் நன்கு உணர்ந்தே கூறுவார்; அதிலிருந்து அவர் என்றும் மாறுவதும் கிடையாது. இதனாலேயே 1931-ல் சிறையிலிருந்து வெளியே வந்ததும், வட்டமேஜை மகாநாட்டுக்குப் போகும் வரையில், அவர் இங்குமங்குமாகப் போய்க் கொண்டிருந்தார். அம் மகாநாட்டிலிருந்து திரும்பி வந்ததும் திரும்ப புனா சிறையிலிடப்பட்டு விட்டார். பிறகு சிறையிலிருந்து விடுதலையானதும் ஹரிஜன முன்னேற்ற வேலையிலும், பீகார் பூகம்ப நிவாரண வேலையிலும் முற்றிலும் ஈடுபடலானார். அவர் பீகாரில் கொஞ்ச காலமிருந்தார். ஆனால் அவர் சபர்மதி ஆசிரமத்திற்கு மாத்திரம் திரும்பப் போகவேயில்லை.

சபர்மதி ஆசிரமத்தின் ஒரு கிளை வார்தாவில் ஸ்ரீ. விநோபா பவேயின் மேற்பார்வையில் நடந்து வந்தது. ஹரிஜன யாத்திரை முடிந்த பிறகு வர்தாவில் தங்குவதென மகாத்மா முடிவு செய்தார். சேத் யமுனலால் பஜாஜ் இவருக்குக் கொடுத்துவிட்ட வார்தாவிலுள்ள பழத் தோட்டத்தில் சிறிது காலம் தங்கினர். அங்குதான் மகாத்மா அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கத்தை ஆரம்பித்து அகில இந்திய நூற்போர் சங்கத்தின் வேலைகளில் தீவிரமான மாறுதல்களையும் உண்டாக்கினர். 1934-லிருந்து 1942 வரை மகாத்மா வர்தாவிலும், அங்கிருந்து நான்கு மைல்கள் தூரத்திலுள்ள சிவகான் என்ற கிராமத்திலுமே தங்கினர். இங்கிருந்து கொண்டே தமது நிர்மாண வேலைத் திட்டங்களை பலப்படுத்தினர். சிவகான் சிறிய கிராமம். அந்த கிராமத்தில் சேத் யமுனலால் பஜாஜுக்கும் கூட்டு பாத்தியதை இருந்தது. இந்த கிராமம் பிறகு சேவா கிராமம் என்றாகியதோடு உலகப் பிரசித்தியையும் அடைந்துவிட்டது. அந்த எட்டு ஆண்டுகளும் மகாத்மா நிர்மாண வேலைத் திட்ட காரியங்களிலேயே பெரும்பாலும் கவனஞ் செலுத்தி வந்தார். அத்திட்டத்தை ஒவ்வொரு பகுதியாக எடுத்துக்கொண்டு, எந்த வழியில் அவற்றில் அபிவிருத்தியை அடையலாம் என்பதற்கு யோசனைகளைக் கூறி வந்தார்.

ஹரிஜன சேவா சங்கம் ஆரம்பமானதைப்பற்றி கூறியிருக்கிறேன். ஸ்ரீ தக்கர் பாபா அதன் காரியதரிசி; சேத் கன்சயாம் தாஸ் பிர்லா தலைவர். அதன் தலைமைக் காரியாலயம் டில்லியில் இருந்தது; இன்றும் அங்குதான் இருக்கிறது. ஆனால் அதற்கு உத்வேகமெல்லாம் மகாத்மா காந்தியிடமிருந்தே வந்து கொண்டிருந்தது. தாம் போகுமிடங்களிலெல்லாம் ஹரிஜன நிதிக்கு மகாத்மா பணம் திரட்டியும் வந்தார். இதற்காக அவர் கையாண்ட முறைகள் பல. மகாத்மா காந்தி போகுமிடங்களிலெல்லாம் அவரைப் பார்ப்பதற்காக ஏராளமானவர்கள் கூடுவார்கள். அவர்களிடம் கையை நீட்டி ஹரிஜன நிதிக்குப் பணம் கொடுக்கும்படி மகாத்மா கேட்பார். அவர் பிரயாணம் செய்யும் ரயில் நிற்குமிடங்களில் பிளாட்பாரத்தில் மக்கள் கூடிவிடுவார்களாகையால், ரயிலிலிருந்தபடியே அவர்

களிடம் கையைநீட்டி ஹரிஜனநிதிக்குப் பணம் கேட்டார். தினந்தோறும் மகாத்மா பிரார்த்தனை கூட்டங்களை நடத்துவார்; இவற்றிற்குப்பெருங்கூட்டம் வரும். இந்த பிரார்த்தனைக்கூட்டங்களிலும் மகாத்மா அந்நிதிக்குப் பணம் வசூலிப்பார். பெரியவர்களின் கையெழுத்துக்களை சிலர் வாங்கி வைத்துக் கொள்ளுவார்கள். ஹரிஜன நிதிக்கு ரூ. 5 கொடுப்பவர்களுக்கு மாத்திரமே மகாத்மா கையெழுத்துப்போட்டுத் தருவார். கையெழுத்து வாங்க வருகிறவர்களின் தொகை குறைந்துவிட்டபோதிலும் இவ்வகையிலும் பணம் வந்து கொண்டிருந்தது. சிலருக்குக் கையெழுத்துப் போட்டுத் தருவேன், சிலருக்குத் தர முடியாது என்று சொல்லவேண்டிய அவசியமே அவருக்கு இதனால் இல்லாது போயிற்று. பணம் கொடுக்கிறவர்களுக்கு மகாத்மாவின் கையெழுத்து கிடைக்கும்; கொடுக்காதவர்கள், அவர்கள் எவ்வளவுதான் பெரியவர்களாயிருந்தாலும், ஏமாற்றத்துடன் போகவேண்டியதே. பணக்காரர்கள் ரூ. 5-க்கும் அதிகமாகவே கொடுத்து மகாத்மாவின் கையெழுத்தைப் பெறுவார்கள். இவ்விதம் மகாத்மா காந்தி ஒரு வருஷத்தில் ஹரிஜன சேவா சங்கத்திற்கு ஏராளமான தொகையை வசூலித்து விடுவார். இதே சமயத்தில் வாரப் பத்திரிகையான "ஹரிஜ" னும் வந்து கொண்டிருந்தது. இப் பத்திரிகை ஆங்கிலத்திலும், பெயரில் சிறிது மாற்றத்துடன் ஹிந்தி, குஜராத்தி, மராத்தி, வங்காளி, உருது ஆகிய பாஷைகளிலும் வெளி வந்தது. வழக்கம்போல் "ஹரிஜன்" பத்திரிகைக்கு மகாத்மா அதிகம் எழுதி வந்தார். மற்றவர்கள் எழுதுவது, மகாத்மா நன்ருகப் படித்துப் பார்த்த பிறகே, இப் பத்திரிகையில் பிரசுரமாகும்.

மகாத்மா காந்தி வார்தாவிலிருக்கும் போதுதான் கதர் உற்பத்திக்குப் புதிய முறை யொன்றைக் கொண்டுவந்தார். சில ஆராய்ச்சிகளுக்குப் பிறகு ஒரு புது வகையான ராட்டினத்தைக் கண்டுபிடித்து சபர்மதி ஆசிரமத்தில் அது உபயோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் நாட்டில் பல இடங்களில் உபயோகிக்கப்பட்டு வந்த ராட்டினங்களில் நூற்ற நூலைக் கொண்டு பல ரக துணிகளைத் தயாரித்து வந்தனர் இதுவே அப்பொழுது நாட்டிலிருந்த நிலைமை. நூற்கும் நூல் முறடாயிருந்த இடங்களில் உற்பத்தியாகும்

துணியும் சிறந்ததாக இருக்காது. பஞ்சாபில் ராட்டினங்கள் ஏராளமாக உபயோகிக்கப்பட்டு வந்தாலும், அங்கு தயாரான நூல், ஜமக்காளம் போன்றவைகளுக்கு உபயோகிக்கும் நூல் போன்றே இருந்து வந்தது. ஆந்திரா போன்ற இடங்களில் மிக நயமான நூல் தயாராகி உயர்ந்த ரக கதர் உற்பத்தியாகி பிரபலமடைந்து வந்த போதிலும் ராஜபுதனம் போன்ற இடங்களிலும் முரட்டு ரக கதரே உற்பத்தியாயிற்று. பீகாரில் ஒரு விசேட வகையான பருத்தி பயிராகிறது. அதன் இயற்கை நிறம் கவர்ச்சிகரமானதாக இருக்கும். அந்தப் பருத்தியைக் கொண்டு சிறந்த நயமான நூல் தயாரிக்கப்பட்டு கோக்டி என்று கூறப்படும் அழகான துணி நெய்யப்பட்டது. முக்கியமாக நேபாளத்திலும் அதை அடுத்த தர்பங்கா ஜில்லாவிலும் இந்த ரக துணிக்கு கிராக்கி அதிகம். நேபாளத்திலிருந்து கிடைத்து வந்த ஆதரவினாலேயே இக் கிராமக் கைத்தொழில் சாகாமலிருந்தது. என்றாலும் கையினால் நூற்பதென்பது அநேகமாகச் செத்துவிட்டது; செத்துக் கொண்டிருந்தது என்று சொல்லுவது மிகையாகாது. கைத்தறி நெசவுத் தொழிலும் கெட்டு வந்தாலும் அவ்வளவு மோசமான நிலைமைக்கு வந்து விடவில்லை. 1921-ல் பீகாரில் ஜனத்தொகைக் கணக்கெடுத்தபோது கைத்தறிகளின் கணக்கையும் எடுக்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டது. ஐந்து கோடி ரூபாய் பொறுமானமுள்ள ஜவுளி கைத்தறிகளில் தயாரானபோதிலும் இவைகளுக்குப் பெரும்பாலும் மில் நூலே உபயோகிக்கப்படுகிறது என்பது அப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டது. இதே போல நாட்டில் தயாராகும் மொத்த ஜவுளிகளில், நான்கில் ஒரு பங்கு முதல் மூன்றிலொரு பங்கு வரையில், கைத்தறியில் தயாராகிறது என்பதும் தெரிந்தது. நூல் தயாரித்துக் கொண்டிருப்பதை விட நூற்றுத் துணியாகவும் நெய்வது மில்களுக்கு அதிக லாபம் தருமாதலால், கையினால் நூற்பதை அதிகப்படுத்தா விட்டால், ராட்டினங்களின் கதியையே கைத்தறிகளும் அடைந்துவிடும் என்பதை மகாத்மா உணர்ந்தார். இதைச் செய்யாது போனால், காலாவட்டத்தில் நூற்பதோடு நெய்வதையும் மில்களே செய்துவிடும். இதனால் கைத்தறிக்கு

நூல் கிடைக்காமல் அவை செத்துவிட நேரும். ஆகையால் கைத்தறிகள் சாகாமல் பிழைத்திருக்க வேண்டுமானால், ராட்டினங்கள் புத்துயிர் பெற்றுக வேண்டும் என்ற முடிவுக்கு மகாத்மா வந்தார். இந்தியாவில் தயாராகும் ஜவுளியை ஆதரிக்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டி வந்தவர்களெல்லோரும் அது வரையில் கையினால் நெய்த ஜவுளியையே முக்கியமாக எண்ணி வந்தார்கள்.

கையினால் நூற்பதைப் புதுப்பித்து அதைப் பரப்பும் வேலையில் ஈடுபட்டிருந்தவர்களெல்லோரும், சாத்தியமான வரையில், உயர்ந்த ரக, சிறந்த துணிகளைத் தயாரிக்க வேண்டும் என்பதிலேயே முயற்சியெடுத்து வந்தார்கள். ஒரு வகையில் அதுவே கொள்கையாகவும் அனுசரிக்கப்பட்டு வந்தது. குறைந்த விலையில், சாத்தியமான அளவுக்குச்சிறந்ததாக கையினால் நூற்று,கையினால் நெய்த ஜவுளிகளைத் தயாரிப்பது என்பதே கதர் உற்பத்தி இடங்களிலெல்லாம் முக்கியமான முயற்சியாக இருந்தது. இதிலிருந்த கஷ்டம் என்னவென்றால், பல இடங்களில் ராட்டினங்கள் வேலை செய்துவந்தாலும் அங்கு போதுமான பஞ்சு கிடைக்காமலிருந்ததுதான். இதனால் தூரமான இடங்களிலிருந்து பஞ்சைக் கொண்டு வந்து நூற்போருக்கு விநியோகிக்க வேண்டியதாயிற்று. சில இடங்களில் அவர்கள் எந்த அளவுக்கு நூல் தயாரிக்கிறார்களோ அதன் விலைக்கு ஏற்றாற் போல பஞ்சு கொண்டு வந்து கொடுத்து வந்தார்கள். மற்ற இடங்களில், நூலின் நயத்தை அனுசரித்து ஓரளவு நிறையுள்ள நூலுக்கு அந்த நிறையில் ஒன்றரை மடங்கு அல்லது ஒன்றே முக்கால் மடங்கு நிறை பஞ்சு என்று கொடுத்து மாற்றி வந்தார்கள். நூலின் நிறைக்கு அதிகப்படியாகக் கொடுக்கப்படும் பஞ்சு, நூற்பதற்குள்ள கூலிக்காகவே. இந்த கதர் உற்பத்தி இடங்களுக்கு நானே போய் நூலை நிறுத்து வாங்கிக் கொண்டு அதற்கு பதிலாக பருத்தியைக் கொடுப்பேன். தூரங்களிலிருந்தும் நூற்கும் ஏழை மக்கள் கூட்டமாக வருவார்கள். அதிகப்படியாக அவர்கள் பெற்று வந்த கொஞ்சம் பணமே அவர்களுக்கிருந்த ஜீவனோபாயம். ஏதோ சில காரணங்களை முன்னிட்டு ஒரு கதர் உற்பத்தி இடம் நூலை வாங்கிக் கொள்ள முடியாது போய் விடுமானால், அதை அவர்கள் மற்றவர்களுக்கு

விற்று விடுவார்கள். கைத்தறிகள் அதிகமாக இருந்த இடங்களில், தறிக்காரர்கள், கையினால் நூற்ற நூலையும் மில் நூலையும் கலந்து துணிகளை நெய்வார்கள். ஆகையால் நூற்பவர்கள் கொண்டு வரும் நூலுக்கு இவர்களிடம் எப்பொழுதும் கிராக்கி யிருக்கும். அகில இந்திய நூற்போர் சங்கம் கதர் உற்பத்தி ஸ்தாபனங்களை ஆரம்பித்து, கையால் நூற்ற நூல் அதிகப்படியாக உற்பத்தியாகி விற்பனையுமாகி வந்ததால், கைத்தறிக்காரர்களிடத்திலும் அது அதிக ஆதரவைப் பெற்றது.

நூற்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த அந்தக் குறைந்த கூலியும் கொடுக்கப்படாது போனால், அவர்களுக்கிருக்கும் இந்த வருமானமும் போய் விடும் என்பது தெளிவான தாக இருந்தும், நூற்போருக்குக்கொடுக்கப்படும் கூலியைப் பற்றி நாங்கள் அது வரையில் சிந்தித்ததில்லை. அவர்களின் உழைப்புக்கு அவர்களுக்குக்கொடுக்கும்கூலி போதுமான தா என்பதைக் குறித்தும் நாங்கள் எண்ணியதில்லை. ஆகையால் அவர்களிடமிருந்து நூலை வாங்கிக் கொள்ளுவதனுல் அவர்களிடம் அதிக அன்பு காட்டிவருவதாக நினைத்தோம். உற்பத்தியாகும் கதரை சரியானபடி விற்பனை செய்து விடுவது எப்படி என்பதையும் யோசிக்க வேண்டியிருந்தது. நூற்பதற்குக் குறைந்த கூலியே கொடுத்து வந்தும், மில் ஜவுளியை விட கைத்தறித் துணி விலை அதிகமாக இருந்ததால், இதற்கு நல்ல விற்பனை இருக்கும்படிச் செய்வது சங்கடமான தாக இருந்தது. எனவே வாங்குவோர் விரும்பி வாங்கும்படிச் செய்வதற்கு நயமான, கவர்ச்சியுள்ள கதர் துணிகளைத் தயாரிக்க நாங்கள் முயன்றதோடு, எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக்கு கதர் விலையைக் குறைத்து மில் ஜவுளி விலைக்குச் சமமான தாக அது இருக்கும்படிச் செய்ய வேண்டியது அவசியம் என்பதையும் உணர்ந்திருந்தோம். இது கஷ்டமானதே. ஆயினும் இதில் அதிக அளவு வெற்றியும் கண்டோம். நூற்போரின் திறமை பழக்கத்தினல் வளர்ந்து வரவே சிறந்த ரக கதரை உற்பத்தி செய்வதும், அதே சமயத்தில் விலையைக் குறைப்பதும் சாத்தியமாயிற்று. முரட்டு ரக கதரின் விலை, அதே ரக மில் ஜவுளியின் விலைக்குச் சமமான தாக இருக்கும்படிச் செய்வதில் வெற்றி பெற்றோம்.

ஆனால் உயர்ந்த ரக கதர் விலையில் இருந்த வித்தியாசம் மாத்திரம் அப்படியே இருந்தது.

கொடுக்கப்படும் கூலி மிகக் குறைவானதாகவே இருந்தாலும், இத்தொழில் புத்துயிர் பெறுவதன் மூலம் ஏழைகளுக்குப் பிழைப்புக்கு வழி ஏற்படும் என்பதை உணர்ந்தேன். ஆகையால் அத்தொழில் திரும்பவும் விருத்தியடைய உதவி செய்வது அவசியம் என்று அபிப்பிராயப் பட்டேன். கதருக்கு விற்பனை மாத்திரம் சரியானபடி இருக்குமானால், தேவைக்குப் போதுமான அளவு கதரை உற்பத்தி செய்துவிட முடியும் என்றும் எங்களுக்குத் தோன்றியது. நயமான நூலை நூற்போரின் தொகை மிகக் குறைவானதாலும், அவர்கள் நூற்கும் வேகம் அதிகமிருக்க முடியாததாகையாலும், சிறந்த ரக கதர் ஜவுளி உற்பத்தி ஒரு அளவுக்குத்தான் இருக்க முடியும். கதர் வாங்குகிறவர்கள் அதற்காகக் கொடுக்கும் விலை கொஞ்சம் அதிகமாக இருந்தாலும், முடிவாகக் கணக்கிட்டுப் பார்த்தால், மில் ஜவுளியைவிட கதர் மலிவானது என்பதை பொது மக்களுக்கு நாங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டியிருந்தது. கதர் அதிக காலத்திற்கு நீடித்து நிற்கும். இதை விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கவும் முடியும் என்று சொன்னோம். பருத்தி விளையும்இடத்திலேயே கதர் உற்பத்தியாவதால், செடியிலிருந்து பருத்தி எடுக்கப்பட்டதும் துணியாக மாறிவிடுகிறது. மில் ஜவுளி விஷயத்திலோ, பருத்தி எடுத்து குறைந்தது ஒரு ஆண்டு அல்லது 18 மாதங்களான பிறகே, அது துணியாகிறது. இவ்விதம் நீடித்து உறுதியாக நிற்பதில் இந்தக் காலமும் முக்கியமாகிறது. இதில் கவனிக்க வேண்டியது இன்னுமொன்றும் உண்டு. கதர் உற்பத்தியானதுமே அது வாங்குவோரின் கைக்குப் போய்விடுகிறது. ஏனெனில் உற்பத்தியாகுமிடங்களிலிருப்பவர்களே அக்கதரை பெரும்பாலும் வாங்குகிறார்கள். மில் துணியோ, உற்பத்தியான பிறகு மொத்த வியாபாரிகளிடமும், சில்லறை வர்த்தகர்களிடமும் நீண்ட காலம் தேங்கிக் கிடக்கிறது. கதர் நீண்ட நாட்களுக்கு உழைக்கும் என்பதற்கு மற்றோர் காரணம், கதருக்கு உபயோகமாகும் பஞ்சு, பருத்தியிலிருந்து கையினால் கொட்டை நீக்கப்பட்டு, கையினால் வில் கொண்டு கொட்டித் தயாரிக்கப்பட்டதாயிருப்பதே

யாகும். ஆனால் மில்லில் அரைத்து அங்கு கொட்டிப் பதனிடப்படும் பஞ்சின் இழைகளோ அதிகமாக நைந்து போக இடமிருக்கிறது. பிறகு அப்பஞ்சு மில்களில் அதிக பலம் கொண்டு அழுத்திப் பொதிகளாகவும் கட்டப்படு கின்றன. இவ்விதம் அழுத்துவதில் அப்பஞ்சு கல் போலாகி, திரும்பப் பட்டை போடும் போது பொதியை உடைத்துப் பரப்புவதே கஷ்டமாகி விடுகிறது. இதனால் இழை பல வீனமாகி விடுகிறது. ஆனால் கதருக்கு உபயோகமாகும் பஞ்சு இத்தகைய முறைகளுக்கெல்லாம் உட்படவேண்டி யில்லாததினால் கதர் நாள்பட்டு உழைக்க முடிகிறது. அதோடு மில்லில் பஞ்சைப் பட்டை போடுவதற்குச் செய் யும் முறையினால், இழைகள் அதிகமாக நலிந்து ஒன்றுக் கொன்று பிரியும்போது அதிக பலக் குறைவை அடைகின் றன. மில்லில் போட்ட பட்டைகள் நூற்பதற்கு நயமாக இருப்பதற்குக் காரணமே அதன் இழைகள் ஒன்றுக் கொன்று பக்கத்தில் ஓடுவதால்தான். இதை அடைவதற்கு அந்த இழைகள் அதிக நலிவைப் பெற வேண்டியவை களாகின்றன என்பதில் சந்தேகமே இல்லை. இதனாலேயே 40 முதல் 50-ம் நெம்பர் வரையில் நூற்றுவிடக்கூடிய ஒரு பஞ்சினால் மில்லில் 20-ம் நெம்பருக்கு மேல் நூற்க முடிவ தில்லை. மேலும் நூற்கும் போது பஞ்சின் இழைகள் அதிக நலிவுக்கு ஆளாகின்றன. ஆகையால் பஞ்சு அறைப்பது, பட்டைபோடுவது, நூற்பது முதலியவைகளெல்லாம் சரி யானபடி செய்யப்படுமானால், கையினால் நூற்ற நூலுக்கு இணையாக மில் நூல் இருக்கவே முடியாது. அப்படிச் சரிவர எல்லாம் செய்யப்படவில்லையானால், நூல் மட்டமான தாகவே இருக்கும். நன்றாக நூற்கப்படாமல், போதுமான முறுக்கும் ஏறாதுபோனால், நூல் பலவீனமாகவும் இருக்கும்.

கையினால் செய்வதற்கும் யந்திரங்களில் தயாரிப் பதற்கு மிருக்கும் ஒரு பெரிய வித்தியாசம், யந்திரம் சரியானபடி இருந்தால், அதில் நூல் தயாரானாலும், துவுளி தயாரானாலும், ஒரே மாதிரி ரகத்தில் இருக்க முடியும் என் பதே. யந்திரத்தில் ஏதாவது கோளாறு இருந்து விட்டால், அது உற்பத்தி செய்வதிலும் அந்தக் கோளாறு தெரியும். மில்லில் சரியாக இல்லாத ஒரு கதிரில் நூலை நூற்குல் அந்த

நூல் ஒரே மாதிரியானதாக இல்லாது போய், அந்த நூலைக் கொண்டு தயாரான துணியிலும் சமமல்லாத இழைக ளிருப்பது தெரியும். ஆகையால் யந்திரத்தில் தயாராகும் நூலின் கனமும் அதன் பலமும் ஒரே மாதிரியானதாக இருக்கும். ஆனால் கையினால் தயாரிக்கும் நூலில் இவ் விதம் ஒரே மாதிரியாக இருக்கும் என்பதை அவ்வளவாக எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், முதலாவதாக மனிதன் யந்திரம்போல் செய்ய முடியாது. இரண்டாவதாக, கையினால் தயாரிப்பது மனிதனே யாகையால், அவன் செய்யும் வேலையின் தரம், அச்சமயத்தில் அவனுக்கிருக்கும் மனோ நிலையையும், மற்றும் எத்தனையோ காரியங்களையும் பொறுத்தே இருக்கும். நூற்கிறவர் திறமைசாலியாக இல்லாதிருந்தால், அவர் நூற்கும் நூல் கரடு முரடு இல்லாததாகவோ அல்லது ஒரே ரீதியான பலமுள்ள தாகவோ இருக்காது. யந்திரத்தில் ஏற்படும் கோளாறி னால் நூலில் இருக்கும் பலக் குறைவு, குறிப்பிட்ட இடங்களில்தான் ஏற்படுவதால், சுலபமாகக் கண்டு கொண்டுவிட முடியாது. ஆனால் கையினால் நூற்கும் நூலின் சங்கதி அப்படியல்ல.

கதர் உற்பத்தியிலுள்ள எல்லா கட்டங்களிலும் சரியானபடி கவனித்துச் செய்யப்படுமானால், கொஞ்ச காலத்தில் விலையில் மில் துணியோடு போட்டி போடும் வகையில் கதரை உற்பத்தி செய்து விடலாம் என்பதில் சந்தேகமே இல்லை. ஒரு விவசாயி பயிரிடும் பருத்தியை அவரே எடுத்து, கொட்டை எடுத்து, பஞ்சு கொட்டி, பட்டை போட்டு, அவரே நூற்று, அவ்வூரிலேயே அந்த நூலைத் துணியாக நெய்து, அவருடைய குடும்பத்தினர் அதையே அணிந்து கொள்வார்களானால், அதுவே சிறந்த தாக இருக்கும். இப்படி நடந்தால் பருத்தி கொஞ்ச நாட்களுக்குள் துணியாகிவிடும். துணி நீடித்து உழைப்ப தற்குக் கெடுதலாகிவிடும் கால தாமதத்தை இதனால் அடி யோடு போக்கியும் விடலாம்.

மில்கள் விஷயத்தில் நிலைமை வேறு. கிராமத்தில் விளையும் பருத்தியை ஏதாவது ஒரு டவுனுக்கோ அல்லது மார்க்கெட் இடத்திற்கோ, இல்லாவிட்டால் பஞ்சாலைக்கும் மில்களுக்குமோ வண்டியில் ஏற்றிக்கொண்டு போகிறார்கள்.

அங்கு கொட்டையை நீக்கி அடித்துப் பஞ்சாக்கி அழுத்திப் பொதிகளாகக் கட்டுகின்றனர். பிறகு இந்தப் பொதிகளை மில்களிருக்குமிடங்களுக்குக் கொண்டுபோகிறார்கள். இந்திய மில்களுக்கு நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள இடங்களிலிருந்து பஞ்சு வருகிறது. வெளிநாடுகளிலிருந்து பஞ்சை ஏராளமாக இறக்குமதியும் செய்கிறார்கள். இங்கிலாந்து போன்ற ஒரு நாட்டில் பருத்தி சாகுபடி என்பதே இல்லாததினால் தேவையான பருத்தி முழுதும் வெளி நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. அங்கு தயாராகும் ஜவுளி முழுதும் அங்கேயே விற்பனையாகிவிடுவதில்லை. வெளிநாடுகளில் எங்கெல்லாம் கிராக்கி இருக்கிறதோ அங்கெல்லாம் ஏற்றுமதி செய்கிறார்கள்: அந்த நாடுகளின் துறைமுகங்களிலிருந்து தூரத்திலுள்ள கிராமங்களுக்கும் அந்த ஜவுளி போய் விற்பனையாகிறது. இவ்விதம் பருத்தியை பஞ்சறைக்குமிடத்திற்குக் கொண்டுபோவது, அங்கிருந்து மில்லுக்குக் கொண்டுபோவது, பிறகு ஜவுளியாக்கி அதை வாங்குவோரிடத்திற்குக் கொண்டுபோவது ஆகியவைகளுக்கெல்லாம் ஏற்படும் செலவுகள், மேலே சொன்ன முறையில் கதர் உற்பத்தியாகுமானால் மீதப்படும். அப்படி ஏற்படும் மிச்சம் சிறியதுமல்ல. துணி விலையில் பெரும் பகுதி, அதற்காகும் போக்குவரத்துச் செலவுதான். அதல்லாமல் ஆங்காங்கே பல கட்டங்களிலும் மத்தியிலிருக்கும் வர்த்தகர்களின் லாபம் வேறு இருக்கிறது. ஒருவர் துணிக்குக் கொடுக்கும் விலையில் இதுவும் சேர்ந்திருக்கிறது. தர்க்க ரீதியில் பேசினால், மில் துணியைவிட கதரை, நாள்பட்டு உழைப்பதாகச் செய்ய முடியும் என்பது ஏற்கனவே எடுத்துக் காட்டப்பட்டது. மேலே சொன்னவைகளையெல்லாம் மனதில் வைத்து, பருத்தி விளையுமிடத்திலேயே கதரை உற்பத்திசெய்து, அவர்களே அதை வாங்கி உபயோகிக்கும்படியும் கிராம வாசிகள் தூண்டப்பட்டால், மில் துணியைவிட கதர் மலிவானதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் நமக்குச் சோம்பல் மிகுந்துவிட்டதால், நாமே தயாரித்துக்கொள்ளுவதைவிட தயாராயிருப்பதை வாங்கிக்கொண்டுவிடலாம் என்று எண்ணி விடுகிறோம். இந்தச் சோம்பலினாலேயே கதர் விலை அதிகமாயிருப்பதாக நமக்குத் தோன்றுகிறது.

மகாத்மா காந்தி சிறையிலிருந்தபோது கதரின் பல அம்சங்களைக் குறித்தும் ஆழ்ந்து சிந்தித்தார். ராட்டினத்தில் உழைப்பதன் மூலம் அதில் வேலை செய்யும் நூற்போர், அதனால் வாழ முடியாத அளவுக்கு, அவர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி குறைவானதாக இருக்கிறதா என்பதையும் சிந்தித்தார். "எதுவுமே இல்லாததற்கு ஏதோ கொஞ்சம் கிடைத்ததே மேல்" என்றபடி, கூலி என்ற முறையில் அவர்களுக்குக் கொஞ்சம் கொடுத்ததும் ஒரு அன்பான காரியமாக இருந்தபோதிலும், கதரை நெய்பவர்கள், நூல் நூற்பவர்களை ஏய்த்துக்கொண்டிருப்பது நியாயமல்ல. ஆகையால் மகாத்மா வார்தாவிலிருந்தபோது ஒரு புதுக் கொள்கையை வகுத்தார். அதாவது, நூற்பவர்கள் அவர்களுடைய உழைப்புக்கு தங்களுடைய வாழ்க்கைக்குப் போதிய ஊதியத்தைப் பெற வேண்டும் என்பதே அது.

மேலே சொன்னதைப்போல, நூற்போருக்குக் கூலியை அதிகரித்தால் கதர் விலையும் உயரும். நூற்போருக்குக் குறைவாகக் கூலி கொடுத்து வரும்போதே கதரை விற்பனை செய்வதில் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருந்தோம். கூலியை உயர்த்தினால் கஷ்டங்கள் இன்னும் அதிகமாகிவிடும். கூலி உயர்வு கதர் விற்பனையின் வீழ்ச்சியிலேயே முடியும் என்றும் எங்களில் அநேகர் பயந்தோம். எனவே மகாத்மா ஒரு சமரசமான ஏற்பாட்டுக்கு உடன்பட்டார். வாழ்க்கைக்குப் போதிய கூலியல்லவென்றாலும் கூலியில் பெருமளவு உயர்வு தருவது என்பது அது. நூற்பவர் ஒருவர் நாளுக்கு 8 மணி நேரம் வேலை செய்தால், அவர் உழைப்புக்குக் குறைந்தது மூன்று அணாவாவது இருக்கும்படி கூலி அமைய வேண்டும் என்று மகாத்மா விரும்பினார். நீண்ட ஆலோசனைக்கும், ஸ்ரீ-வினோபா பாவே பரீட்சை செய்து பார்த்த பிறகும், மேற்கண்ட அடிப்படையில் கூலி விகிதமொன்றைத் தயாரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. நூலின் தரத்திற்குத் தகுந்தபடி விலையை நிர்ணயிப்பது எளிதாயிருப்பதை முன்னிட்டு, இத்தனை நம்பருள்ள நூலுக்கு சிட்டம் இன்னவிலை என்றும் அவ்விகிதத்தில் சேர்க்கப்பட்டது. எதிர்பார்த்தபடியே கதர் விலை ஏறியது. ஆனால் விற்பனை

குறையவில்லை என்பதையும் அதே சமயத்தில் ஒப்புக் கொள்ளவே வேண்டும். உற்பத்தியான இடத்திலேயே அது விற்பனையாகி விட்டதோடு, கிராமவாசிகளிலும் மேலும் பலரும் புதிதாக வாங்க ஆரம்பித்ததும் இதற்குக் காரணம். நூற்பவர்களும் நெய்கிறவர்களும், தாங்கள் உற்பத்தி செய்யும் கதரை அதுவரை வாங்குவது கிடையாது. இவர்கள் உற்பத்தி செய்த கதரை மற்றவர்களே வாங்கிவந்தார்கள். நூற்பவர்களும் நெய்கிறவர்களும் கதரைக் கட்டவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அவர்கள் அவ்விதம் கதரை அணியும்படிச் செய்வதற்காக ஒரு புதிய முறை அமுலுக்கு வந்தது. கூலியை உயர்த்திக்கொடுத்தபோது அதற்கு விதிக்கப்பட்ட ஒரு நிபந்தனை, அந்தக் கூலியில் கால் பாகம் பிடித்து வைத்துக்கொள்ளப்படும் என்பது. இப்படிப் பிடித்துவைக்கப்படும் தொகை பணமாகக் கொடுக்கப் படாது. அதற்கு பதிலாக கதர் கொடுப்பார்கள். அதை நூற்போரும் நெய்வோரும் கட்டிக்கொள்ளவேண்டும் என்பது நிபந்தனை. இவ்விதம் ஒரு வாரத்திற்கு அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை கூலி கொடுக்கும்போது நூற்போர், நெசவாளர் சம்பளத்தில் ஒரு பகுதியை பிடித்தம் செய்து அவர்களுடைய கணக்கில் வைக்கப்படும். இதற்கு அவர்கள் விரும்பும்போது கதர் வாங்கிக்கொள்ளலாம். இதனால் ஏற்பட்ட ஒரு நன்மை என்னவெனில், நூற்கிறவர் ஒவ்வொருவருக்கும் ஒரு தனிக் கணக்கு வைக்கப்பட்டிருந்ததால் அகில இந்திய நூற்போர் சங்கத்திற்கும் நூற்போருக்கும் அதிக நெருங்கிய உறவு உண்டாயிற்று. விலை நிர்ணயிக்கப்படும் முன்னால் ஒவ்வொரு சிட்டம் நூலும் நன்றாக கவனிக்கப்படும். விலை, ஒவ்வொரு சிட்டத்தின் தரத்தைப் பொருத்ததாக இருந்ததால் நூலின் தரத்திலும் அபிவிருத்தி உண்டாயிற்று. இதனால் வாங்குவோருக்கு நல்ல கதரை விற்க முடிந்ததால் அவர்கள் கொஞ்சம் விலை அதிகரித்ததைப் பொருட்படுத்த வில்லை. கதருக்கு கிராக்கி அதிகமாகிக்கொண்டே வந்தது. எனவே விலை ஏற்றத்தால் விற்பனை குறைந்து கஷ்டமுண்டாகுமென்று நாங்கள் நினைத்தது ஆதாரமற்றதாகிவிட்டது. கதருக்கு கிராக்கி ஏற்பட்டதற்கு வேறு காரணங்களுமிருக்கக்கூடும். உதாரணமாக மக்களிடையே விழிப்பு அதிகமாயிற்று.

ஆனால் புதிய கொள்கை கதரைப் பிரபலமாக்குவதற்கு அதிக உதவியாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

இந்தக் கொள்கையின் மற்றோர் விளைவு, அத்தாட்சி பெறாத கதரின் விற்பனை அதிகமாகிவிட்டதேயாகும். அகில இந்திய நூற்போர் சங்கம், தன்னுடைய உற்பத்தி இடங்களிலேயே கதரை உற்பத்தி செய்து தன்னுடைய சொந்த கடைகளிலேயே விற்று வந்தது. இதல்லாமல் கதர் உற்பத்தியிலும் விற்பனையிலும் ஈடுபட்டிருந்த பல வர்த்தகர்களுக்கு, அவர்களிடமிருக்கும் கதரும் அகில இந்திய நூற்போர் சங்கக் கதரைப் போல அசலானதே என்று அகில இந்திய நூற்போர் சங்கம் அத்தாட்சிப் பத்திரங்களைக் கொடுத்து வந்தது. சிறந்த ரக கதரை குறைந்த விலையில் தயார் செய்ய வேண்டும் என்பதில் அத்தாட்சிப் பெற்ற இந்த கதர் வர்த்தகர்களுக்கும் அகில இந்திய நூற்போர் சங்க கதர் உற்பத்தி ஸ்தானங்களுக்குமிடையே சிநேக முறையில் நல்ல போட்டியும் இருந்து வந்தது. ஆனால், அகில இந்திய நூற்போர் சங்கம், நூற்பவர்களுக்குக் கூலியை அதிகப்படுத்திக் கொடுக்க ஆரம்பித்ததும், அந்த வர்த்தகர்கள் அதேபோல் நூற்போருக்குக் கூலியை அதிகரித்துக் கொடுக்காமல் பழைய கூலியையே கொடுத்து மிச்சத்தைத் தங்களுக்கு லாபமாக்கிக் கொண்டுவிட்டார்கள். எனவே அகில இந்திய நூற்போர் சங்கம் நிர்ணயித்திருக்கும் கூலியைக் கொடுத்து உற்பத்தி செய்யும் கதரை மாத்திரமே அசல் கதர் என்று பாவிப்பது என்று முடிவாயிற்று. பல உற்பத்தியாளர்கள் இப் புதுக் கொள்கையை ஒப்புக்கொண்டு அதன்படி கூலி கொடுத்தார்கள். அவர்கள் அக் கொள்கைப்படி நடந்து வருகின்றனர் என்று திருப்தி யடைந்த பிறகு அகில இந்திய நூற்போர் சங்கம் அவர்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கியது. ஆனால் மற்றுஞ் சிலரோ, அத்தாட்சிப் பத்திரத்திற்காகக் கவலைப்படாமல் பழைய கூலியையே கொடுத்து கதர் உற்பத்தி செய்து வந்தனர். பல காங்கிரஸ்காரர்களும், இப் புதிய கொள்கையை ஏற்றுக் கொண்டு நடக்க முன்வராதவர்களும், பழைய கூலியே கொடுத்து கதர் உற்பத்தி செய்து கொண்டிருந்தவர்களை உற்சாகப்படுத்தி ஆதரித்து வந்தார்கள். இவ்விதம் மார்க்

கெட்டில் அத்தாட்சிப் பெற்ற கதர், அத்தாட்சிப் பெறாத கதர் என்று இரு வகையான கதர் விற்பனையாகி வந்தது. உற்பத்திச் செலவு குறைவாகவும், விற்கும் விலை அதனால் மலிவாகவுமிருந்ததால், அத்தாட்சி பெறாத கதரை விற்று வந்தவர்கள் அதிக லாபம் பெற்று வந்தனர். எனவே அவர்கள் அத்தாட்சி பெறாத கதர் உற்பத்தியாளரிடமே கொள் முதல் செய்து வந்தார்கள். இவ்விதம் அத்தாட்சிப் பெறாத கதர் ஏராளமான அளவுக்கு விற்பனையாகி வந்தது. உற்பத்தியாகும் நூல் முழுவதையும் அகில இந்திய நூற்போர் சங்கம் வாங்கிக்கொள்ள முடியாது. ஏனெனில் அதற்குப் போதிய வசதி அவர்களுக்கு இல்லை. எனவே அகில இந்திய நூற்போர் சங்கம் வாங்க முடியாத நூலை யெல்லாம், அவர்கள் கொடுப்பதைவிடக் குறைந்த விலைக்கு வாங்கி விடுவது மற்றவர்களுக்குச் சுலபமாயிற்று. இதைத் தடுக்க அகில இந்திய நூற்போர் சங்கம் தன்னாலியன்றதை யெல்லாம் செய்து வந்தது. காங்கிரஸ்காரர்கள் அத்தாட்சிப் பெற்ற கதரை மாத்திரமே அசல் கதராக மதித்து வாங்க வேண்டும் என்றும் மற்ற கதரை வாங்கக்கூடாது என்றும், காங்கிரஸ் காரியக் கமிட்டி ஆக்ஞை பிறப்பித்தது. ஆனால் அநேகர் இதைப் பொருட்படுத்தவில்லை. இதனால் அத்தாட்சிபெறாத கதர் அதிக அளவு விற்பனையாகிக் கொண்டுதான் வந்தது.

மேலே சொன்னபடி புதுக் கொள்கை கதரைத் தயாரிப்பதில் அதிக அபிவிருத்திகளை உண்டாக்கியது. அகில இந்திய நூற்போர் சங்கம், அது விரும்பிய அளவு நூலின் தரத்தில் அபிவிருத்தியைச் செய்தது. கிராமங்களில் கதர் விற்பனைக்கு மார்க்கெட்டை உண்டாக்கியது. கதர் எங்கு உற்பத்தியாகிறதோ அங்கேயே அது செலவாகவும் வேண்டும் என்று மகாத்மா கூறி வந்ததால் இது சாத்தியமாயிற்று. சில விசேஷமான ரகங்களைத் தவிர மற்ற கதர் துணிகளை அவை உற்பத்தியாகும் மாகாணங்களுக்கு வெளியில் விற்கக்கூடாது என்று மகாத்மா தடுத்தார். போக்குவரத்து செலவுகளே துணிகளின் விலையை அதிகமாக்கி விடுகிறது என்பதை முன்னமேயே எடுத்துக் காட்டியிருக்கிறேன். கதர் விஷயத்தில் இச் செலவு குறைந்தபட்சத்தில் இருக்கும் படிச் செய்வதற்கான முயற்சிகள் நடந்தன.

இவ்விதம் கதர் சம்பந்தமாகப் புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கியதால் கதர் இப்பொழுது எவ்வளவோ அதிகமாக விற்பனையாகி வருகிறது. இதற்கு முன்னால் அதன் உற்பத்தியிலும் விற்பனையிலுமே அதிக கவனஞ் செலுத்தப்பட்டது. பிறகோ இந் நிலைமை மாறி சுய தேவைப் பூர்த்தி முக்கியம் என்று வற்புறுத்தப்பட்டது. அதாவது தனிப்பட்டவர்களும் சமூகமும், கதரைத்தாங்களே உற்பத்தி செய்து, தங்கள் ஊரில் உற்பத்தியாகும் கதரைத் தாங்களே உபயோகித்துக்கொள்ள வேண்டும். இம்முறை பல இடங்களில் பரிட்சார்த்தமாகச் செய்யப்பட்டதோடு ஓரளவு இதில் வெற்றியும் கண்டிருப்பதால் இக்கொள்கை முற்றிலும் புதிய கொள்கை அல்ல. உள்ளூர் தேவைக்கு வேண்டிய கதரை உற்பத்தி செய்து கொள்ளுமிடங்கள் இருக்கின்றன. அப் பகுதியிலிருப்பவர்களுக்கு வெளியிலிருந்து ஜவுளி கொண்டுவர வேண்டியதுமில்லை. அங்கிருந்து வெளியே கதரை விற்பனைக்கு அனுப்பவேண்டியதுமில்லை. சிறிய அளவில் இந்த பரிட்சை செய்யப்பட்டது. ஊழியர்கள் இத்தகைய வேலையில் ஈடுபட்டிருந்து மற்றவர்களை உற்சாகப்படுத்தி இதில் அவர்களுக்கு சிரத்தை இருக்கும்படிச் செய்து வந்த வரையில் இம் முறை வெற்றிகரமானதாகவே இருந்தது. ஆனால் ஊழியர்கள் போய் விட்டதும் கதர் உற்பத்தியில் சிறிது குறைந்து வெளியிலிருந்து ஜவுளி வரவேண்டியதாகிவிட்டது. என்ன ஆனாலும் கதரை மாத்திரம் கைவிடுவதில்லை என்ற உற்சாகம் மக்களுக்கு ஏற்படும் வரையில், தாம் நினைக்கிற அளவுக்கு அதனுடைய உபயோகம் எங்கும் பரவி விடாது என்று மகாத்மா கருதினார். இதற்குக் கதர் உற்பத்தி சம்பந்தமான எல்லா நுட்ப ஞானமும் இருப்பதோடு இதற்குத் தேவையான சாமான்கள், ஆயுதங்களின் சப்ளையும் இருக்க வேண்டும். ஆகையால் அகில இந்திய நூற்போர் சங்கம் இவற்றில் அதிக கவனஞ் செலுத்த ஆரம்பித்தது. அது வேலை செய்து வந்த இடங்களில் கதர் உற்பத்தி சம்பந்தமான நுட்ப அறிவை அது பரப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டதோடு இதற்காக வேண்டிய சாமான்களைக் கண்டுபிடிப்பதிலும் கவனஞ் செலுத்தும்படிச் செய்யப்பட்டது. அதே சமயத்தில் பலமான, நாள்பட்டு உழைக்கக்கூடிய

கதரை எப்படித் தயாரிப்பது என்பதையும் மக்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

இந்த பரீட்சார்த்தமான வேலையின் விளைவாக இரு காரியங்கள் பிறந்தன. பஞ்சை அறைப்பதால் பஞ்சின் இழைகள் பலமிழந்து போவதால் இதற்கு ஒரு புது வழி கண்டுபிடிக்கப்பட்டது. இம் முறை அதிக அளவில் அனுசரிக்கப்படவில்லையே தவிர, இது புதிதானதல்ல. இதற்குப் புதிதாக விசேஷ கருவிகள் அவசியமில்லை. வேண்டியதெல்லாம் ஒரு மரப் பலகையும் அரை அங்குல சுற்றளவுள்ள ஒரு இரும்புக் கம்பியுமே. பஞ்சு கொட்டுவதனாலும் இழைகள் பலவீனமடைகின்றன. எனவே, இழைகளைப் பிரிப்பதைக் கையினாலேயே செய்யவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. இதனால் இழைகள் சேதமடைவதில்லை யாகையால் நீடித்து உழைக்கும் துணியைத் தயாரிப்பது சாத்தியமாயிற்று. கதரை நெய்வதிலும் சில கஷ்டங்களிருந்தன. எவ்வளவோ பழக்கம் வந்துவிட்ட பிறகும் மில் நூலைப் போல கையால் நூற்ற நூல் மேடு பள்ளமில்லாமல் ஒரே மாதிரியாக இல்லை என்பது தெரிந்தது. ஆகையால் ஒரு நெசவாளி மில் நூலை நெய்வதைப் போல இந்த நூலை வேகமாக நெய்ய முடியவில்லை. இதனால் கைகயினால் நூற்ற நூலினால் துணி நெய்வதற்கு அதிகக் கூலி வாங்கினர். இதனாலும் கதர் விலை அதிகமாயிற்று. ஆகையால் நெசவாளர் அதிக சுலபமாக நெய்வதற்கு சௌகரியமிருப்பதை முன்னிட்டு கையால் நூற்ற நூலில் அபிவிருத்தியை உண்டாக்கவேண்டும் என்று மகாத்மா விரும்பினார். மேலே சொன்ன இரு முறைகளினாலும் இதில் கொஞ்சம் அபிவிருத்தி ஏற்பட்டது. ஆனால் அனுபவத்திலிருந்து கவனித்ததில், இரு இழை நூல்களைச் சேர்த்து முறுக்கிவிட்டால் நெய்வது எளிது என்பது தெரிந்தது. இதன்படி இது வற்புறுத்தப்பட்டது. எனினும் இம் முறை அதிக ஆதரவைப் பெறவில்லை. ஏனெனில் முதலாவதாக இது அதிகப்படியாகச் செய்யவேண்டிய வேலையாக இருந்தது. இரண்டாவதாக, நெய்யும் ஒவ்வொரு கெஜ துணிக்கும் அதிக நூல் இதனால் தேவைப்பட்டது. எனினும் நாள் பட்டு உழைப்பதிலும், பலத்திலும் துணியின் தரத்தை இம் முறை உயர்த்தியது என்பதில் சந்தேகமில்லை. இவ்

விதம் அபிவிருத்தியில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டதே யன்றி உற்பத்தியைப் பெருக்குவதில் கவனமில்லை. இதன் பலனுக யுத்த காலத்திலும், அதற்குப் பிறகும்கூட, கதர் உற்பத்தியையும் அதன் விற்பனையையும் அதிகரிப்ப தற்கு அதிக வாய்ப்புகளிருந்தும், உற்பத்தியும் விற்பனையும் அதிகரிக்காததோடு துணிக்கு ஏற்பட்ட கிராக்கியை சமா ளிக்க கதரினுல் முடியவுமில்லை.

துணி விஷயத்தில் சுயதேவைப் பூர்த்தியை அடைவ தென்பது கஷ்டமானது; இதில் ஏற்பட்ட அபிவிருத்தி யும் அவ்வளவாக இல்லை. எனவே கதர் சம்பந்தமான கொள்கை காலத்திற்குப் பொருத்தமானதாக இல்லை என்று பலர் எண்ணினுர்கள். அடைந்திருக்கக் கூடிய அபிவிருத்தியை அது அடையவுமில்லை; மக்களும் கதரினுல் அடைந்திருக்கக்கூடிய பலனை அடைந்துவிடவு மில்லை. இதனுல் துணித் தேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய கதர் அதைச் சமாளித்து விடவில்லை. எனவே அகில இந்திய நூற்போர் சங்கம் அனுசரித்த கொள்கையி னுல் கதர் பாதகமடைந்துவிட்டதென பலர் நம்புகிறுர் கள். யுத்த சமயத்திலும், அதற்குப் பின்னரும், நாட்டி லிருக்கும் ஜவுளி மில்கள் யுத்த தேவைக்கான துணிகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தன. இதனுல் மக்களின் உபயோ கத்திற்குத் தேவையான ஜவுளி கிடைக்கவில்லை. வெளி நாட்டு ஜவுளி இறக்குமதி அடியோடு நின்றுவிட்டதால் துணிப் பஞ்சம் அதிகமாயிற்று. உற்பத்தியாகும் கதரெல் லாம் உடனே விற்றுப் போயிருக்கும் சமயம் அது. அதே சமயத்தில் கதர் உற்பத்தியில் அதிக அளவு அபிவிருத்தியும் செய்திருக்கலாம். துணி விலை அதிகமாக உயர்ந்துவிட்ட தால் மில் ஜவுளி விலை, அகில இந்திய நூற்போர் சங்கம் உற்பத்தி செய்யும் கதரின் விலையைவிட அதிகமாக இருந் தது. கதரை உபயோகித்தே அறியாதவர்கள்கூட, அது மலிவாக இருந்ததால் கதரை வாங்கத் தயாராயிருந்தார்கள். ஆனுல், கதர் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. சில இடங் களில் அகில இந்திய நூற்போர் சங்கம், வாடிக்கையாக வாங்கிக்கொண்டிருந்தவர்கள், அதாவது வழக்கமாகக் கதர் கட்டிக்கொண்டிருந்தவர்களுக்கு மாத்திரமே, கதர் விற்பனை

என்று கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு கதர் உற்பத்தியை பெருக்கத் தவறிவிட்டது வருந்தத் தக்கதாவதோடு துணிக்கு இருந்த ஏராளமான கிராக்கியை சமாளிப்பதற்காக வெளி நாட்டிலிருந்து துணியை இறக்குமதி செய்தாக வேண்டிய நிர்ப்பந்தமும் சர்க்காருக்கு ஏற்பட்டது.

நமது சுதந்திரப் போராட்டம் நெடுகவும், பிரிட்டிஷ் ஜவுளி பகிஷ்காரமே நமது ஒத்துழையாமைத் திட்டத்தின் முக்கிய வேலையாக இருந்து வந்திருக்கிறது. இதில் சில தலைவர்கள் கொள்கையளவில் மகாத்மாவுடன் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தார்கள். ஜவுளி பகிஷ்காரம் என்பது மாத்திரம் சரியல்ல என்றும், பிரிட்டிஷ் சாமான்கள் எல்லாவற்றையுமே பகிஷ்கரிக்க வேண்டும் என்றும், இந்தியா பிரிட்டனுக்கு நல்ல சந்தையாக இருப்பதால் பிரிட்டிஷார் இந்த வர்த்தகத்தையே நம்பி வாழ்கிறுர்கள் என்றும் அவர்கள் சொன்னுர்கள். ஆகையால் பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரித்தால், அதனுலுண்டாகும் அவதியை அவர்கள் உணர்வார்களாகையால், நமது சுயராஜ்ய கோரிக்கையை அவர்கள் ஒப்புக் கொள்ளும்படிச் செய்து விடலாம் என்றும் அவர்கள் கூறினர். இத்தகைய பகிஷ்காரம் ஒரு வகை பலாத்காரமே என்று மகாத்மா கருதியதால் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. தங்களுடைய நெசவுத் தொழிலுக்கு ஊக்கமளிப்பதற்காக, பிரிட்டிஷ் சர்க்கார் தன்னுடைய ராஜீய அதிகாரத்தை உபயோகித்து நூற்கும், நெய்யும் தொழிலை இந்தியாவில் அழித்து விட்டது என்று மகாத்மா எண்ணினுர். முற்காலத்தில் இத்தொழில் எங்கும் பரவியிருந்ததோடு, அதன் அழிவினுல் தேசத்தின் பொருளாதார அமைப்பே சிதைந்து போய் விட்டதால் அந்த கைத்தொழிலை நாம் புதுப்பிப்பதுதான் நியாயம் என்ருர். கையினுல் நூற்பதும் நெய்வதும் திரும்பவும் வளரும்படிச் செய்வதற்கு பிரிட்டிஷ் ஜவுளி பகிஷ்காரம் மாத்திரம் போதாது என்றும், எல்லா அன்னியநாட்டு ஜவுளிகளையும் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் கூறினுர். பிரிட்டிஷ் ஜவுளி மாத்திரமேயல்லாமல் வெளிநாட்டு ஜவுளி முழுவதையுமே பகிஷ்கரிக்க வேண்டும் என்று மகாத்மா கூறியதற்கு இதுவே காரணம்.

யுத்தத்திற்கு முன்னுல் சில வருஷங்கள் இந்தியா, ஜப்பானிலிருந்து ஏராளமான ஜவுளியை இறக்குமதி செய்து வந்தது. ஆகையால் ஜப்பான் ஜவுளியும் அநேக மாக இந்திய மார்க்கெட்டில் நிலைத்து விட்டது. பிரிட்டிஷ் துணிக்கு பதிலாக ஜப்பான் துணியை வாங்கிக் கொண்டி ருப்பதில் எந்த வித பயனும் இல்லையென்றும், எல்லா அன் னியத் துணிகளையும் பகிஷ்கரித்தாலே பலனுண்டு என்றும் மகாத்மா சொன்னுர்.

என்ருலும் இந்தியாவிலிருக்கும் ஜவுளி மில்கள் நமது தேவைக்குப் போதுமான ஜவுளியைத் தயாரிக்கின்றன. கொஞ்சம் வெளி நாட்டுத் துணியும் இறக்குமதியாகிறது. இதனுல் துணி, கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ள பொருள் களில் ஒன்ருக இருந்தும், அதன் விலை உயர்ந்திருந்தும், கதர் என்ன ஆதரவையும் உற்சாகத்தையும் பெற்றிருக்க வேண்டுமோ அதைப் பெறவில்லை. எதிர்காலத்தில் என்ன நேரும் என்பதை எதிர் காலமே காட்ட முடியும்.

மக்களில் பரம ஏழைகளாக உள்ளவர்களுக்கு உதவி அளிக்கும் தொழிலாக இது இருந்த போதிலும் கையினுல் நூற்று, கையினுல் நெய்வதை ஒரு சாதாரண தொழில் என்று மகாத்மா காந்தி கருதவில்லை. எல்லாக் கைத் தொழில்களின் கேந்திரம் இது என்று மகாத்மா அடிக்கடி கூறி வந்திருப்பதோடு, மற்ற கிரகங்களின் நடுவே சூரியன் எவ்விதம் முக்கியமானதாக விளங்குகிறதோ அதே போலவே கதர் உற்பத்தி மற்ற தொழில்களுக்கு முக்கிய மானதாக இருக்கிறது என்று பல தடவைகளில் எழுதியு மிருக்கிருர். சுயராஜ்யப் போராட்ட காலத்தில், இப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த எல்லோருக்கும் அது ஒரு வகை தனி உடையாக இருந்தது. மகாத்மா காந்தி தம்மிஷ் டப்படி நடந்திருந்தால், அவர் புத்திமதியை எல்லா காங் கிரஸ்காரர்களும் ஒப்புக் கொண்டிருந்தால், ஒவ்வொரு காங்கிரஸ் ஊழியருக்கும் தலைவருக்கும் நூற்பது கட்டாய மானதாகி யிருப்பதோடு கதர் வெளி ஆடையாக மாத்திர மில்லாமல் அவர்களுடைய உள்ளங்களிலும் அது இடம் பெற்றிருக்கும். ஆனுல் அது நடக்கவில்லை. காங்கிரஸ் கதரை அதன் விசேஷ உடையாகவே கொண்டது. உட

-வின் மேல் அது இருந்ததேயன்றி உள்ளத்தில் அது இடம் பெறவில்லை. இந்த இடத்தை அது பெற்றிருந்திருக்கு மானல், நமது வாழ்க்கை முறை முழுதுமே தீவிரமான மாறுதலை அடைந்திருக்கும். ஒவ்வொரு நாளும் பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பமாகி வருகின்றன; நமது அன்றுட உபயோகத்திற்கான சிறு சாமான்களைக்கூட அவை தயாரித்து வருகின்றன. என்றாலும் மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தே வருகிறது. மக்கள் கதர் அணிய ஆரம்பித்திருப்பார்களானல், உண்மையான ஆனந்தத்தைச் செய்வதற்கு வெறும் வெளி வேஷமும் டாம்பீகமும் அல்ல அது என்றும், எளிய வாழ்க்கை முறைக்கும் ஆத்ம திருப்திக்கும் சின்னமே அது என்றும், அவர்களுக்கு நிரூபிக்கப்பட்டிருக்கும். கதரை அணிவது, உடலுழைப்பின் கௌரவத்தை வற்புறுத்துகிறது. மகாத்மா காந்தி இருபத்தோரு நாள் உண்ணுவிரதமிருந்து அதிக பலவீனமாக இருக்கும் சமயங்களில் கூட, ஒரு நாளும் நூற்பதை மாத்திரம் நிறுத்தியது கிடையாது. வேலை அதிகமாயிருந்து நூற்பதற்கு நேரமே கிடைக்காத சமயங்களில் அவர், தாம் தூங்கும் நேரத்தைக் குறைத்துக் கொண்டு அந்த நேரத்தில் நூற்று வந்தார். அவருக்கு அது ஒரு தெய்வீக கடமை. பிரார்த்தனையை எந்தவித பக்தியோடு செய்வாரோ அதே பக்தி விஸ்வாசத்தோடு நூற்பார். பரம ஏழைகளுக்கும் திக்கற்றவர்களுக்கும் தெய்வமான தரித்திர நாராயணனுடன் நேருக்கு நேர் தாம் தொடர்பை வைத்துக் கொள்ளுவதற்கு ராட்டினம் தமக்கு ஒரு உபாயம் என்று மகாத்மா எண்ணினர். இதிலடங்கி யிருக்கும் தத்துவத்தை நாம் உணர்வதா யிருந்தால், நமது வாழ்க்கை முறையில் எளிமை பிறந்து விடும். பெரிய தொழிற்சாலைகளை யெல்லாம் பார்த்து நாம் மயங்கிப் போய் விடாமல், ஏழைகளின் ஜீவனுேபாயத்தைப் பறிப்பதற்கு நாமும் உடந்தையாக இருந்து விடாமல், உடலுழைப்பிற்கு அதற்குரிய கௌரவத்தையும் அளிக்க நாம் முன்வருவோம். உண்மையில் நமது வாழ்க்கை முறையிலேயே பெரிய மாறுதல் வந்திருக்கும். போலித் திருப்திகளை யெல்லாம் திரட்டி அதன் மூலம் அடையும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தின் உண்மையான தன்மை இன்னதென்பதை சரிவரத் தெரிந்து கொள்

ளக் கூடியவர்களாக நாம் ஆகி யிருப்பதோடு ஆத்ம திருப்தி யின் மூலம் உண்மையான ஆனந்தத்தையும் கண்டிருப் போம். இவைகளை யெல்லாம் உணர நாம் தவறி விட் டோம்; கதரை வெறும் அடையாளத்திற்கான ஆடையா கவே எண்ணி விட்டோம். ஒரு வகை உடையை மாற்றி விடலாம். அதில் ஆத்மார்த்திக முக்கியத்துவம் எதுவு மில்லை. ஆனால் கதரிலுள்ள ஆத்மீகச் சிறப்பை நாம் கண்டு கொள்ளத் தவறி விட்டதோடு, அதிலிருந்து நாம் அடைய விரும்பிய பொருளாதார அனுகூலத்தையும் அடைய நம்மால் முடியவில்லை.

உணவில் செய்த பரீட்சைகள்

அநேகமாக அழிந்து போய் விட்டதான ராட்டினத்தில் நூற்கும் தொழிலுக்குப் புத்துயிரளிக்க மகாத்மா காந்தி தீவிரமாக வேலை செய்து கொண்டு வந்த அதே சமயத்தில், பல புது தொழிற்சாலைகள் வந்ததால், அநேக ஏழைகளுக்குப் பிழைப்புக்கு வழியாக இருந்த கிராமக் கைத்தொழில்கள் பலவும் மறைந்ததைக் கண்டோம். ராட்டினத்தில் நூற்கும் தொழிலைப் புதுப்பித்து கதர் திரும்பவும் பரவும்படிச் செய்ய வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்திருந்தோம். ஆனால் மற்ற குடிசைத் தொழில்களும் ஏன் சாகும்படி விடப்படுகின்றன என்பது எங்களுக்கு விளங்கவில்லை. மகாத்மா அதைப் பற்றி சிந்திக்காமல் போகவில்லை. உபயோகத்திலேயே இல்லாது போய் விட்ட ராட்டினத்தைத் திரும்பவும் கொண்டு வந்து விட்டால், இன்னும் அடியோடு செத்து அழிந்து விடாமலிருக்கும் மற்ற கிராமக் கைத் தொழில்களைப் பாதுகாத்து விடுவது கஷ்டமல்ல என்று ஒருவேளை மகாத்மா நினைத்திருக்கலாம். இதனாலேயே அவர் தமது கவனத்தை மற்றவைகளிலெல்லாம் சிதற விடாமல் ராட்டினத்திற்குத் திரும்பவும் உயிர் கொடுக்க வேண்டுமென்பதிலேயே முழு கவனத்தையும் செலுத்தினார். அந்த வேலையில்தான் அதிகக் கஷ்டமிருக்குமென்று அவருக்குத் தோன்றியது. எதை அடைவதில் அதிகச் சிரமமுண்டோ, அந்த வேலையை எடுத்துக் கொள்வதுதான் அவர் வழக்கம்.

ஒரு நண்பர் மகாத்மாவுடன் பேசிக் கொண்டிருந்த ஒரு சம்பவத்தை இச்சந்தர்ப்பத்தில் நினைவூட்டுகிறேன். "மகாராஷ்டிர கிராமவாசிகள் நீங்கள் சொல்லுவதைக் கேட்பதில்லை. வார்தாவில் செலவிட்டதைப் போன்ற நேரத்தை நீங்கள் வேறு ஏதாவது ஒரு மாகாணத்தின் கிராமத்தில் செலவிட்டிருந்தால், அந்த மாகாணத்தின் போக்கிலேயே பெரிய மாறுதல் ஏற்பட்டிருப்பதோடு, அந்த மாகாணத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் உங்கள்

திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுமிருக்கும்" என்று அந்த நண்பர் மகாத்மாவிடம் கூறினர். இதற்கு மகாத்மா கூறிய தாவது: "மகாராஷ்டிர கிராமங்களில் என்னுடைய திட்டத்தின் வேலைகளின் அபிவிருத்தி மிகக் குறைவு என்பதும், நான் கூறுவதை இங்கு மக்கள் அவ்வளவாக கவனிப்பதில்லை என்பதும் உண்மையானல், இந்த மாகாணத்திலேயே நான் அதிக கவனஞ் செலுத்த வேண்டியது முக்கியமாகிறதல்லவா? நான் சொல்லுகிறதையே கேட்க அவர்கள் தயாரா யில்லையானல், மற்றவர்கள் சொல்லுவதை அவர்கள் கேட்கப் போவதே கிடையாது. அந்த வேலை கஷ்டமானதென்றால், நான் அதை மற்றவர்களிடம் விட்டுவிட்டு எப்படிப் போய்விட முடியும்? அதற்கு நேர் மாருக அதன் முக்கியத்தை இம்மக்களுக்கு நான் விளக்கிச் சொல்ல வேண்டியது அத்தியாவசியமாகிறது. இதனலேயே நான் இங்கு தங்கி யிருந்து வருகிறேன்." மற்ற விஷயங்களிலும் மகாத்மா இதே மாதிரி எண்ணி யிருக்கலாம். இதனுலேயே மற்ற கிராமத் தொழில்களை அவர் மறந்து விடவில்லையாயினும் அவற்றில் அவர் ஆரம்பத்தில் அவ்வளவு அதிக கவனஞ் செலுத்தவில்லை. மகாத்மா வார்தாவில் தங்க ஆரம்பித்ததும் அவைகளுக்கும் ஊக்கமளிக்க ஆரம்பித்தார். கிராமக் கைத் தொழில்கள் சங்கத்தை ஆரம்பித்த பிறகு, ஒன்றன்பின் மற்றொன்ருக கிராமக் கைத் தொழில்களுக்கு ஆக்கமளித்து வந்தார்.

மகாத்மா தொடர்ந்து உணவு சம்பந்தமாய் பரீட்சைகளைச் செய்து வந்தார். இங்கிலாந்தில் மாணவராக இருந்த போதே இப்பரீட்சையை ஆரம்பித்து விட்டார். அங்கு சைவ உணவைப் பிரபலமாக்குவதற்காக சைவ உணவு சங்கத்தையும் அமைத்தார். தென்னப்பிரிக்காவிலும் கூட இதில் அதிக நேரத்தைச் செலவிட்டார். ஆனல் அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்த பிறகே இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தொடங்கினர். உதாரணமாக, அவர் சம்பரானிலிருந்தபோது, அவருக்கு முக்கியமான ஆகாரம் பேரீச்சம் பழமும் நிலக் கடலையுமே. சில சமயங்களில் மாம்பழம் போன்ற பழங்களைச் சாப்பிடுவார். கொஞ்ச காலம் அரிசி சாதமும் சாப்பிட்டு வந்தார். ஆனல் மசாலை எதையும் அவர் உபயோகிப்பதே கிடையாது. உப்பும் அவர்

சேர்த்துக் கொள்ளுவதில்லை. கறிகாய்களையும் கீரைகளையும் தண்ணீரில் வேக வைத்து உப்புப் போடாமலேயே அவைகளைச் சாப்பிடுவார்.

அஹிம்சைக்கு பிரமசரியத்தை மேற்கொள்ளவேண்டும் என்றும், எனவே நரம்புகளுக்கு உணர்ச்சியைக் கிளறிவிடாத ஆகாராதிகளைச் சாப்பிட வேண்டும் என்றும் மகாத்மா கருதினர். இதனுலேயே எந்த உணவு உடலுக்கு சுகத்தையும் பலத்தையும் கொடுக்குமோ அந்த உணவை அவர் சாப்பிட்டு வந்ததோடு நரம்புக்கு உணர்ச்சியை மூட்டும் உணவுகளைத் தள்ளி வந்தார். மற்ற உணர்ச்சிகளை அடக்குவதற்கு முன்னுல் ருசியை வெல்ல வேண்டியது முக்கியம் என்பது அவருடைய நம்பிக்கை. இதனுல் மாமிச உணவு விரும்பத்தக்கதல்ல என்று நினைத்தார். உடலை சுகமாகவும் பலமாகவும் வைத்திருப்பதற்குதான் சாப்பிட வேண்டுமே யல்லாமல் ருசிக்காகச் சாப்பிடக்கூடாது என்பது அவருடைய அபிப்பிராயம். இதனுலேயே உணவின் ருசியைப் பற்றியே எதுவும் சொல்லாமல், ஒரு உணவினுல் தேகத்திற்கு என்ன சுகம் என்பதைப் பற்றி மாத்திரம் கூறி வந்தார்.

உணவு சம்பந்தமாக நம் மக்களிடையே ஒரு தவருன அபிப்பிராயம் இருந்து வருகிறது. ருசியா யிருக்கிறது என்பதற்காக நாம் சாப்பிடுகிறேமே யல்லாமல், ருசியாக இருக்கும் சாப்பாடு உடலுக்குத் தீமை செய்வதாகவும் இருந்துவிடக்கூடும் என்பதை மறந்தே விடுகிறேம். சாப்பாடு ருசியாக இருந்தால் நாம் சாப்பிட வேண்டியதற்கு அதிகமாகவே சாப்பிட்டு விடுகிறேமாகையால் ருசியான உணவில் தீமையே அதிகம். இதனுலேயே மகாத்மா சுக வாழ்வுக்கு, உடலின், மனதின் சுகத்திற்கு, நாம் சாப்பிட வேண்டும் என்று அடிக்கடி எழுதி வந்தார். இதை முன்னிட்டே சபர்மதி ஆசிரமத்தில் உணவுப் பரீட்சைகள் செய்யப்பட்டு வந்தன. ஆசிரமத்திலிருந்தவர்கள் அதைத் தங்கள் உடலிலேயே பரிட்சித்து வந்தார்கள். மகாத்மாவும் தமது வாழ்நாளெல்லாம் தம் உடலிலேயே இதே பரீட்சையைத்தான் நடத்தி வந்தார். பாலேயோ அல்லது பாலிலிருந்து தயாராகும் தயிர், நெய், வெண்ணெய் முதலியவை

களையோ அவர் சாப்பிடுவதில்லை. அவர் பலத்த நோயுற்றிருந்தபோது, வெள்ளாட்டுப் பாலைச் சாப்பிட்டுப் பார்க்கும்படி யாரோ சொன்னார்கள். அவர் அதன்படி சாப்பிட்டதில் அப்பாலில் குணம் தெரியவே ஆட்டுப்பால் சாப்பிட்டு வந்தார். சில சமயங்களில் மகன்வாடியிலிருந்தபோது வேப்பிலையையும் பிண்ணாக்கையும் சாப்பிட்டுப் பார்த்தார். சமைக்காத பண்டங்கள் மனித உடலிலும் மனதிலும் என்ன செய்கிறது என்பதைக் காண சில காலம் அவற்றையே ஆகாரமாகவும் கொண்டிருந்தார். அப்படிச் செய்ய வேண்டாம் என்று டாக்டர்கள் எதிர்த்தார்கள். அவர்களுடைய யோசனையைக் கேட்காமல் கொஞ்ச காலம் சமைக்காத பண்டங்களையே சாப்பிட்டு வந்தார். பலவீனமாயிருந்த அவருடைய பல் விழுந்தும் விட்டதால் அந்த ஆகாரத்தை மென்று தின்பது அவருக்குக் கஷ்டமாயிருந்தது. இதனால் அவர் சாப்பிடும் முன்பு அவற்றை இடித்துக் கொடுத்தார்கள். தண்ணீரில் ஊற வைத்த கோதுமை, வெள்ளரிக்காய் முதலிய காய் கறிகள் ஆகியவையே அப்பொழுது அவர் ஆகாரம். வேப்பிலையை ஊறுகாயாக உபயோகித்துக் கொள்ளுவார். சமைப்பது என்பதே இல்லாது ஒழிந்து போனால் உணவு சம்பந்தமாக எவ்வளவோ தொல்லை நீக்குவதோடு ருசி என்பதற்கே இடமில்லாதும் போய் விடும் என்று நினைத்தார். பிறகு, நோய் ஆகியவைகளில் அதிக மிச்சமும் ஏற்படும் எனக் கருதினார். இப் பரிட்சையில் வெற்றியே ஏற்படவில்லை. அவருடைய தேக நிலை கெட்டு அந்த ஆகாரத்தைக் கைவிட நேர்ந்தது.

மகாத்மா காந்தி, கிராமக் கைத்தொழில்களை, அதுவும் உணவுக்கான பொருள்களின் உற்பத்தியை, அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் அதே நோக்குடனேயே கவனிக்க ஆரம்பித்ததில் ஆச்சரியமில்லை. இதற்காக உணவு வகைகளான அரிசி, மாவு, எண்ணெய், வெல்லம் ஆகியவைகளையெல்லாம் பரிட்சை செய்ததோடு அவைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருப்பவர்களெல்லோரும் அபிவிருத்தியான முறைகளைக் கையாளும்படி உற்சாகப்படுத்தி வந்தார். உயிருக்கும், நோயற்ற உடலுக்கும் உணவு அத்தியாவசியமாகையால் அது அதிக முக்கியமானது. வாழ்க்கைக்கு அவசியமானவைகளில், மிகவும் அத்தியாவசியமானதாக இல்லா

விட்டாலும் அவசியமானவைகளில் இதுவும் ஒன்று. ஆகவே பற்றுக்குறையில்லாதபடி சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டியது அவசியமானதோடு குறைந்த அளவுள்ள உணவையும் நம் மக்களுக்கு நல்ல தேக திடத்தை அளிக்கும் வகையில் உபயோகித்துக் கொள்ளுவது எப்படி என்பதிலும் கவனஞ் செலுத்த வேண்டியது முக்கியமாகிறது. தானியங்கள் இந்தியாவில் முக்கியமான ஆகார வகைகள். இவற்றில் அரிசியும் கோதுமையுமே அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன. எனவே இயற்கையாகவே மகாத்மா இவைகளைப் பற்றி அதிக கவனஞ் செலுத்தினர்.

நெல்லைக்குத்தி அரிசியாக்குகிருர்கள். இது கிராமங்களில் ஓரளவுக்குச் செய்யப்படுகிறது. நெல்லைத் துரிதமாக அரிசியாக்குவதை முன்னிட்டு இதற்கான முறையில் சில அபிவிருத்திகளைச் செய்ய முயற்சிகள் நடந்தன. உரலில் போட்டு உலக்கையால் குத்தி உமியை நீக்கி அரிசியாக்குவதுதான் நாடெங்கும் பொதுவாக இருந்து வந்த வழக்கம். இதற்கு உழைப்பு அதிகம் வேண்டியிருந்ததோடு நேரமும் அதிகமாகும். இதில் இன்னுமொரு முறையும் இருந்தது. ஏணியை மிதிப்பதைப் போன்று மிதித்து அதன் மூலம் உலக்கை நெல்லைக் குத்தும்படிச் செய்வது இம்முறை. இதில் உடலுழைப்பு குறைவு, வேலையும் சீக்கிரத்தில் முடியும். ஆனால் வட இந்தியாவில் வழக்கத்திலில்லாத ஒரு புது முறை கண்டுபிடிக்கப்பட்டது. நெல்லை ஒரு வகையான எந்திரத்தில் இட்டு நெல்லின் உமியை மாத்திரம் பிரித்து விடுவது இம்முறை. சாதாரணமாக நெல் குத்துவதில் இரண்டு காரியங்களுண்டு. முதலில் உமியைப் போக்கிவிட்டு பிறகு அரிசியைக் குத்தித் தீட்டி வெளுப்பாகவும் பளபளப்போடுமிருக்கும்படிச் செய்வார்கள். எந்திரத்தில் போட்டு அரைத்து உமியை நீக்குவது மிகச் சுலபமானது. நெல்லை வெய்யிலில் காயவைத்து இந்த எந்திரத்தில் போட்டுவிட்டால் வேலை இன்னும் அதிகச் சுலபத்தில் முடிந்துவிடும். இப்படிச் செய்வதில் உமி மாத்திரம் நீங்கியிருக்குமே யன்றி அரிசி மீது ஒரு மெல்லிய தோல் இருந்து வரும். பரீட்சை செய்து

பார்த்ததில் அரிசியைத் தீட்டிப் பளபளப்பாக்குவது அனாவசியமானதோடு உடம்புக்கும் கெடுதல் என்பது தெரிந்தது. ஏனெனில் உமி நீங்கிய அரிசி மீது தென்படும் மெல்லிய தோல் போன்றதற்குள்ளேயே அரிசியின் சத்தான பகுதிகள் அடங்கியிருக்கின்றன. ஆனால் இம் மெல்லிய தோல் போன்ற பகுதியை வண்டுகள் தாக்கி விடுவதோடு தீட்டாத அரிசியைக் கெடுத்து விடுகின்றன வாகையாலும், தீட்டிய அரிசியே நாள்பட்டு இருக்குமாகையாலும் அரிசியைத் தீட்டி உபயோகிப்பது என்ற வழக்கம் நீண்ட காலமாக இருந்து வந்திருக்கிறது. எனவே நடத்தப் பட்ட பரீட்சைகளின் காரணமாக, தீட்டாத அரிசி, அது குத்தப்பட்டதுமே உபயோகிக்கப்பட்டு வந்தது. அதோடு இந்த அரிசியில் சத்து அதிகமாகையால் இதை உடையாத முழு அரிசி என்று சொல்லுவது. கொஞ்ச அளவு தீட்டாத அரிசி, அதிக அளவு தீட்டிய அரிசியை விட அதிக சத்தை அளிக்கிறது என்பதும் காணப்பட்டது. ஆகையால் தீட்டாத அரிசியால் இரண்டு நன்மைகளுண்டு. முதலாவதாக, தீட்டிய அரிசியைவிட தீட்டாத அரிசி நிறையில் 4 அல்லது 5 சத விகிதம் அதிகமாக இருக்கும். இரண்டாவதாக, தீட்டிய அரிசியைப் போல தீட்டாத அரிசியை ஒருவர் அதிகமாகத் தின்று ஜீரணிக்க முடியாதாகையால் தீட்டாத அரிசி குறைவாகவே போதும் என்பதோடு இதைத் தின்பவரின் உடலுக்கு அது அதிக சத்தையும் அளிக்கிறது. இவ்விதம் மகாத்மா செய்து பார்த்த பரீட்சைகளினால் இரண்டுவித நன்மைகள் உண்டாயின. நெல்லைக் குத்தி அரிசியாக்குவது துரிதமாயிற்று; அதோடு குறைந்த அளவு அரிசியில் அதிக சத்தைப் பெறவும் முடிந்தது.

கோதுமையை மாவாக்கியே பெரும்பாலும் உபயோகிக்கிறார்கள். நன்றாக அரைத்து அதிக மிருதுவான மாவாக்குவதுமுண்டு. நடுத்தர நயமான மாவாக்குவதும் உண்டு. அதிக மிருதுவான மாவுக்கு கனமான எந்திரம் தேவை. இந்த எந்திரத்தைச் சுற்ற அதிக உடலுழைப்பும் அவசியமாகும். தோலையும் நடுத்தரமாக அரைபட்டிருக்கும் மாவையும் வேறாக்குவதற்காக சல்லடையிலிட்டுச் சலித்து அதிக மிருதுவான மாவை எடுத்துக் கொள்ளுவார்கள்.

நெல்லைப் போலவே கோதுமையிலும் அதன் சத்து தோலை யடுத்தபடியே இருக்கிறது. எனவே தோலை நீக்கிவிட்டால் கோதுமையிலுள்ள விட்டமின் சத்துக்கள் போய்விடும். கோதுமை பற்றிச் செய்த பரீட்சையின் பலனும் இரண்டு; அதிக உழைப்பில்லாமல் கோதுமை மாவைத் தயாரிக்கும் புது எந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது; அதே சமயத்தில் அதன் சத்து போய்விடாதபடியும் செய்யப்பட்டது. அரிசியைப் போலவே இதில் கிடைத்த லாபமும் இரண்டு; மாவின் நிறை அதிகமானதோடு அதை சலிப்பதற்கு உபயோகித்து வந்த உடலுழைப்பும் குறைந்தது. சலிக்காத மாவைவிட குறைந்த அளவு சலிக்காத மாவைத் தின்று உடலில் அதிக சத்தைப் பெறுவது சாத்தியமாயிற்று.

மனிதரின் உணவில் ஏதாவது ஒரு வகை எண்ணெயும் முக்கியமாகையால் மூன்றாவதாக அது சம்பந்தமாக கவனஞ் செலுத்தப்பட்டது. எண்ணெய் அல்லது வெண்ணெய் மிக முக்கியம். எண்ணெய் வித்துக்களை மாடுகள் கட்டிய செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கப்படுகிறது. மாட்டின் உழைப்பை இதில் குறைக்கும் வகையில் இதில் சில பரீட்சைகள் செய்யப்பட்டன. முயற்சியும் வெற்றியாயிற்று. இதன் பலனாக குறைந்த உழைப்பினாலும் குறைந்த நேரத்திலும் அதிக எண்ணெய் எடுக்க முடிந்தது.

நெல் குத்துவது, மாவு அரைப்பது, எண்ணெய் ஆட்டுவது ஆகியவைகளுக்குப் பல ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. முன்பெல்லாம் இவைகளை யெல்லாம் கிராமவாசிகளே செய்து வந்தார்கள். ஒவ்வொரு வீட்டிலும் அவரவர்களின் தேவைக்கு வேண்டிய அரிசியை அவர்களே வீட்டில் குத்திக்கொண்டு, வேண்டிய மாவை அவர்கள் வீட்டில் அரைத்துக்கொண்டும் வந்ததால் கிராமவாசிகளுக்கு வேலையும் பிழைப்பும் கிடைத்து வந்தது. மில்கள் ஏற்பட்டு விட்டதால் லட்சக்கணக்கானவர்கள் வீடுகளில் செய்து வந்த வேலை அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டதோடு, கிராமங்களில் வீடுகளில் கையால் குத்திய அரிசியிலும், கையினால் அரைத்த மாவிலும் இருந்த சத்

துக்களும் மில்லில் நாசமாக்கப்பட்டு விட்டன. மில் அரிசியி லும், மில் மாவிலும் மில்லில் தயாரான எண்ணெய்யிலும், விட்டமின் சத்துக்கள் அடியோடு போய் விடுகின்றன. அப்படி யில்லாவிட்டாலும் அவற்றில் பெரும்பகுதி போய் விடுகின்றன என்பதை விஞ்ஞான ஆராய்ச்சிகள் காட்டி விட்டன. இதில் செய்யப்பட்டு வந்த பரீட் சைகளின் நோக்கமெல்லாம், அவர்கள் முன்னால் செய்து வந்த வேலைகளெல்லாம் கிராமவாசிகளுக்குத் திரும்பவும் இருக்கும்படிச் செய்வதோடு, பொதுவாக நாட்டு மக்கள் குறைந்த உணவில் சுகாதாரத்தோடு வாழும்படிச் செய் வதேயாகும். மகாத்மா இவைகளின் சம்பந்தமாக தீவிர மாகப் பிரசாரம் செய்ததோடு ஓரளவு இதில் வெற்றியும் கிடைத்தது. ஆனால் ராட்டினத்தில் ஏற்பட்ட அவ்வளவு வெற்றி இவைகளில் கிட்டவில்லை. உணவுப் பஞ்சமிருந்து லட்சக்கணக்கான டன் அரிசியை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டி யிருந்தபோது, மகாத்மா செய்த பரீட்சைகளின் பலன் எவ்வளவு தூரம் உதவியாக இருந்தது என்பதையும், காந்திஜியின் முறைகளை எல்லோ ரும் அநுசரிக்கும்படிச் செய்வதற்கு அதைப் பிரபலப் படுத்த வேண்டியதின் அவசியத்தையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுவது முக்கியம். தீட்டாத அரிசியையும், மிக மிருது வாக இல்லாத மாவையும் உபயோகித்தால் உணவுப் பற்றுக்குறை அதிக தூரம் குறையும் என்பது என் நம் பிக்கை. இதற்குச் செலவு எதுவுமில்லை; உற்பத்தி முறை யில் புரட்சிகரமான மாறுதலைக் கையாள வேண்டிய அவ சியமும் கிடையாது. இம்முறை மக்களுக்கு எடுத்துக் கூறப்பட வேண்டும். சங்கடம் ஏற்படுவதெல்லாம் நம் சோம்பேறித் தனத்திலும் வேலை செய்வதில் அசிரத்தை யுடனிருப்பதிலும்தான். நெல்லைக் குத்துவதிலும் மாவை அரைப்பதிலுமிருக்கும் உழைப்பை நாம் விரும்பவில்லை. மில் அரிசியையும், மில் மாவையும் சுலபமாக வாங்கிக் கொண்டு விடுகிறோம். உண்மை என்னவென்றால் இதைப் பற்றி இது வரையில் சரியானபடி பிரசாரம் எதுவுமில்லா ததுதான்.

உணவில் மற்றோர் முக்கியமான சாமான் சர்க்கரை. இந்தியாவின் பல பகுதிகளிலும் சாகுபடி செய்யப்பட்டு

வந்த கரும்பை ஆங்காங்கே கிராமங்களில் சிறு ஆலைகளில் பிழிந்து சாற்றை வெல்லமாகக் காய்ச்சி வந்தார்கள். சில கிராமங்களில் இந்த வெல்லத்தை வெள்ளைச் சர்க்கரை யாக்குவார்கள். சென்ற இருபத்தைந்து, முப்பது ஆண்டு களில் கிராமங்களில் வெள்ளைச் சர்க்கரையைத் தயாரித்து வந்த ஸ்தாபனங்கள் எல்லாமே மூடப்பட்டு அவைகளுக்கு பதிலாக பெரிய சர்க்கரைத் தொழிற்சாலைகள் வந்துவிட் டன. மில் அரிசியிலும் மில் மாவிலும் எவ்விதம் சத்து குறைவாக இருக்கிறதோ அதே போல மில்லில் தயாராகும் சர்க்கரையிலும் விட்டமின் சத்துக்கள், சாதாரணமாக கிராமத்தில் தயாராகும் நாட்டுச் சர்க்கரையிலிருப்பதை விடக் குறைவாக இருக்கின்றன என்பதை விஞ்ஞான ஆராய்ச்சி வெளிப்படுத்தி யிருக்கிறது.

கிராமவாசிகளின் வாழ்க்கை முறையில் சில மாறு தல்கள் ஏற்பட்டதற்கு ஒரு காரணம் பெரிய சர்க்கரை ஆலைகள் தோன்றியதேயாகும். ஒரு ஆலை விவசாயிகளிட மிருந்து கரும்பு வாங்குகிறது. அக்கரும்பு பல முறை களுக்குட்பட்டே சர்க்கரையாக ஆலையிலிருந்து வெளி வரு கிறது. இவ்விதம் ஒரு ஆலை, இதற்கு முன்னால் பல்லா யிரம் மக்களுக்கு கிராமத்தில் தேவைப்பட்ட அளவு கரும்பை ஒரே நாளில் உபயோகித்து விடுகிறது. இதனால் நமது விவசாயப் பொருளாதாரத்திலிருந்த சமநிலை தடுமாறி விட்டது. ஒரு விவசாயி, மாடுகளின் உதவியைக்கொண்டு நிலத்தில் உழுது, தனக்குத் தேவையான பல பொருள்களை யும் சாகுபடி செய்து கொள்ளுவான். அவனே கரும்பும் சாகுபடி செய்து தனக்குத் தேவையான வெல்லத்தைத் தயார் செய்து கொள்ளுவதோடு அவசியம் ஏற்பட்டால் அதை விற்று தீர்வையைக் கொடுத்து விட்டு, மீதமுள்ள தற்குத் துணிகளையும், தேவைப்படும் மற்றவைகளையும் வாங்கிக் கொள்ளுவான். இவ்விதம் வருஷத்தின் பெரும் பகுதியிலும் அவனுக்கு வேலை இருக்கும். சாகுபடி வேலை அதிகமில்லாத சமயத்தில் வெல்லம் காய்ச்சி அதில் ஈடுபட் டிருப்பான் ஒவ்வொருவரும் கரும்பை மென்று தின்று அதன் சாற்றைக் குடிப்பார்கள். கரும்புத் தோகை மாட் டுக்குத் தீவனமாக உபயோகமாகும். அதில் சர்க்கரை இருப்பதால் மாட்டுக்கும் நல்லது. இவ்விதம் கரும்பு சிறிய

அளவில் சாகுபடிச் செய்யப்பட்ட போதிலும் அது அதிகப் பயனுள்ளதாக இருந்து வந்தது.

பெரிய ஆலைகள் தோன்றி விட்டதால் இவை யாவும் மாறிவிட்டன. கரும்பு சாகுபடி செய்கிறவர்கள் அதை ரொக்கப் பணத்திற்கு விற்று விடுகிறார்கள். இதனால் அதிக நிலத்தில் கரும்பை சாகுபடி செய்கின்றனர். தனக்கு வேண்டிய வெல்லத்திற்குத் தகுந்தாற் போல் தான் எவ்வளவு கரும்பை சாகுபடி செய்ய வேண்டும் என்று கணக்குப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இப்பொழுது விவசாயிக்கு இல்லை. இதற்கு மாறாக பண ஆசையால் முடிந்த வரையில் அதிக நிலத்தில் கரும்பு சாகுபடி செய்து, ஆலைக்குக் கொண்டு போக முடிந்த வரையில் ஒவ்வொரு நாளும் கரும்பை வெட்டிக் கொண்டுமிருக்கிறான். இதன் பலனாக மாட்டுக்கு தினமும் வெட்டிப் போடப்பட்டு வந்த கரும்புத் தோகை, மாடுகளின் தேவைக்கு அதிகமாக சில தினங்களில் வெட்டப்பட்டு விடுவதால், இந்த நல்ல தீவனம் மாடுகளுக்கு அதிக நாட்களுக்குக் கிடைக்க முடியாமற் போகிறது. இவ்விதம் மாடுகளுக்கு சத்துள்ள தீவனம் இப்போது இல்லாது போகிறது. கிராமத்தில் கரும்பாலைகளில் முன்னால் பூட்டப்பட்டு வந்த மாடுகளை, இப்பொழுது ஆலைக்குக் கரும்பு ஏற்றிக் கொண்டு போகும் வண்டிகளை இழுக்கப் பூட்டுகிறார்கள். இந்த மாடுகள் மில்களுக்கோ, கிட்டத்து ரயில்வே நிலையங்களுக்கோ கரும்பை நீண்ட தூரம் இழுத்துச் செல்லவேண்டும். அங்கு இந்த மாடுகள் பாரத்துடன் பல மணி நேரம், சில சமயம் நாளெல்லாம் கூட, வண்டிகள் வரிசைகளில் நின்றாக வேண்டியிருக்கிறது.

முன்பு கிராமங்களில் வெல்லங் காய்ச்சி வந்த காலங்களில், ஆலையில் கரும்பைப் பிழிந்த பிறகு இருக்கும் சக்கையில் சிறிது சர்க்கரைச் சத்துமிருக்கும். இந்த சக்கையின் மிருதுவான பகுதியை மாடுகளுக்குத் தீவனமாகப் போட்டு விட்டு மீதமிருப்பதை வெல்லம் காய்ச்சும் அடுப்புக்கும். வீட்டு அடுப்புக்கும் உபயோகிப்பார்கள். கிராமத்தில் வெல்லம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களின் தொகையில் மிகச் சிலரே ஆலைகளில் வேலைக்கு வைத்துக் கொள்ளப் ப்டுவதால்

முன்னால் இதையே ஜீவனமாகக் கொண்டிருந்த அநேக கிராமவாசிகள் இப்பொழுது பிழைப்பில்லாமல் திண்டாடு கிறார்கள். ஆலைகள், ஜவுளி மில்கள், அரிசி மில்கள், மாவு மில்கள் அல்லது சர்க்கரை ஆலைகள் முதலிய எல்லாமே அதிக ஆட்களை வேலைக்கு வைத்துக்கொண் டிருப்பதாகத் தோன்றினாலும், ஏராளமானவர்களைப் பிழைப்பற்றுப் போகும்படிச் செய்து விடுகின்றன என்று மக்கள் அடிக்கடி சொல்லுகிறார்கள். கொஞ்சம் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் இதிலுள்ள உண்மை விளங்கும்.

இரு நூறு பேர் நாளெல்லாம் ராட்டினத்தில் நூற்று எவ்வளவு நூல் தயாரிக்க முடியுமோ அந்த அளவு நூலை, ஒரு நூல் நூற்கும் மில்லில், ஒரு தொழிலாளி, தான் பார்த்துக்கொள்ளக்கூடிய அளவு கதிர்களில் 24 மணி நேரத்தில் நூற்றுவிட முடியும். ஒரு கைத்தறியில் பத்து அல்லது பன்னிரண்டு நெசவாளர்கள் தயாரிக்கும் அளவு ஜவுளியை மில்லில் ஒரு தொழிலாளி உற்பத்தி செய்து விடுகிறான். ஏராளமான ஜவுளியை உற்பத்தி செய்யும் ஒரு பெரிய மில்லில் ஆயிரம், இரண்டாயிரம் தொழி லாளர் வேலை செய்வதைப் பார்க்கும்போது, மில்கள் ஏராளமானவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறது என்று நினைக்கிறார்கள். ஆனால் இந்த மில்களில் தயாராகும் அளவு ஜவுளி கிராமங்களில் கையினால் நூற்று கைத்தறி களில் நெய்யப்படுவதாயிருந்தால் அம் மில்களில் வேலை செய்யும் தொழிலாளர் தொகையைவிட இன்னும் பன் மடங்கு அதிகப் பேருக்கு கிராமங்களில் வேலை இருக்கும் என்ற உண்மையை அவர்கள் மறந்து விடுகிறார்கள். ஒரு வேளை இந்த உண்மை அவர்களுக்கு எடுத்துக் காட்டப் படாமலுமிருந்திருக்கலாம். ஆகையால் ஒரு தொழிற்சாலை ஏற்படுவதால் அதில் வேலை செய்கிறவர்களைவிட மிக அதிகத் தொகையினருக்கு வேலையில்லாது போகிறது.

ஜவுளி மில்கள் விஷயத்திலேயே யல்லாமல் எல்லா மில்களின் சம்பந்தமாகவும் உண்மை இதுதான். வித்தியாச மெல்லாம் சில தொழிற்சாலைகள் அமைவதால் மற்றவை களைவிட வேலையற்றுப் போவோரின் தொகை அதிகமா யிருப்பதே. ஆனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதி

கரிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. இவ்விதம் ஜவுளி மில்கள் ஏற்பட்டதால் லட்சக்கணக்கானவர்கள் வேலையை இழந்தார்கள்; இதேபோல அரிசி மில், மாவு மில், சர்க்கரை ஆலைகள் தோன்றியதாலும் ஏராளமானவர்கள் வேலையை இழந்து தவிக்கலாயினர். கையினால் நூற்பது, கையினால் நெய்வதுடன் இப் பிரச்னையையும் மகாத்மா எடுத்துக்கொண்ட போது, அவசியமான பொருள்களை, அதிகமாக உபயோகிக்கப்படும் பொருள்களைத் தயாரித்து வந்த கிராமக் கைத் தொழில்களையே எடுத்துக் கொண்டார். ஏனெனில் இந்தத் தொழில்கள் கிராமவாசிகளுக்கு வேலை கொடுத்து வந்ததோடு மக்களின் தேகநிலை அபிவிருத்தி யடைவதற்கும் பொதுவாக மக்களுக்கு உதவுவதாகவும் அது இருந்தது.

சர்க்கரை உற்பத்தியிலிருக்கும் மற்றோர் முக்கியமான விஷயத்தையும் அவர் நாட்டின் முன்னால் வைத்தார். வெல்லம் செய்யக்கூடிய ஈச்சை, பனை ஆகியவைகளும் இந்நாட்டில் பயிரிடப்படுகின்றன. இந்திய வைத்திய முறைப்படி, ஆயுர்வேதத்திலும் யுனானியிலும், கரும்புச் சர்க்கரையைவிட பனை வெல்லமே உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால் பனை மரங்கள் அதிகமிருக்கும் இடங்களில்கூட, பனஞ் சாற்றிலிருந்து சர்க்கரையும் வெல்லமும் அவ்வளவாகத் தயாரிக்கப்படுவதில்லை. இதற்காக உபயோகித்துக் கொள்ளக்கூடிய பனை மரம் எத்தனை லட்சம் இந்நாட்டிலிருக்கின்றன என்பது எனக்குத் தெரியாது. சாறு இறக்கப்படும் இம் மரங்கள், கள்ளிறக்குவதற்கு உபயோகிக்கப்படுகின்றனவே யன்றி வெல்லங் காய்ச்ச உபயோகிக்கப்படவில்லை. எனவே மகாத்மா பனஞ்சாற்றிலிருந்து வெல்லங் காய்ச்ச ஆரம்பித்தார். இந்த வெல்லங் காய்ச்சும் விவரத்தைக் கற்றுக்கொண்டு மற்ற இடங்களிலும் இத் தொழிலைப் பரப்புவதற்காக இதில் மகாத்மா அநேகரை ஈடுபடுத்தினார். இந் நாட்டிலிருக்கும் பனை மரங்களிலெல்லாம் சாறு இறக்கி, அதை வெல்லமாகக் காய்ச்சுவதாயிருந்தால், ஏராளமான வெல்லம் கிடைக்கும். பீகாரிலிருக்கும் பனை மரங்களைக் கொண்டு மாத்திரம் வெல்லம் காய்ச்சுவதாயிருந்தால், பீகார் சர்க்கரை மில்களெல்லாம் எவ்வளவு சர்க்கரையை உற்பத்தி செய்கின்றனவோ அவ்

வளவு பனை வெல்லத்தை உற்பத்தி செய்துவிடலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. பீகாரிலும், ஐக்கிய மாகாணத்திலுமே அதிக சர்க்கரை ஆலைகளிருப்பதோடு நாட்டில் தயாரிக்கப்படும் சர்க்கரையில் பெரும் பகுதி இங்குதான் தயாராகிறது. பனை வெல்லம் செய்தால் இந்த ஆலைகளில் வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்டிருப்பவர்களை விட பன்மடங்கினருக்கு வேலையும் கிடைக்கும். அதோடு இப்பொழுது கரும்பு சாகுபடியாகும் நிலத்தை வேறு பயிர்கள் சாகுபடி செய்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கவனத்திற்கு வந்த மற்றொன்று தேன். இது நல்ல சத்துள்ள ஆகாரம். அதிக சிரமமின்றியும் கிடைக்கும். தேனுக்காக மனிதன் வேலை செய்ய வேண்டியதில்லை; இவனுக்காக ஈக்கள் வேலை செய்கின்றன. சேகரித்து வைக்கப்பட்ட தேனை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான் இவனுக்குள்ள வேலை. ஈக்களுக்கு ஏற்றதான ஒரு இடத்தை ஏற்பாடு செய்து, தேன் கூண்டிற்குக் கெடுதல் ஏற்படாத வகையில் தேனை எடுப்பது எப்படி என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டால், ஏராளமாகத் தேன் எடுக்கலாம். தேன் கூடு கட்டுவதற்கு ஈக்களுக்கு அதிக காலம் வேண்டியிருப்பதோடு அவைகளுக்கு இதில் அதிக வேலையுமிருப்பதால் தேன் கூடு கெட்டு விடாதபடிப் பார்ப்பது மிக முக்கியம். ஆகையால் தேன் எடுக்கும்போது கூட்டை சேதப்படுத்திவிடாமல், நாசப்படுத்தி விடாமலிருந்தால், புதிதாகத் தேன் கூடு கட்டும் சிரமம் ஈக்களுக்கு இல்லாதுபோவதோடு அந்த நேரத்தில் அவை தேனைச் சேகரிக்கும். தேன் கூடு கட்டுவதற்கு ஈக்களுக்கு வசதி செய்து கொடுத்துவிட்டால் அவை தொடர்ந்து தேனைக் கொடுத்துக் கொண்டிருக்கும்.

தேனீக்கள், மலர்கள், இளம் தானியக் கதிர்கள், பழங்கள் ஆகியவைகளிலிருந்து தேனை சேகரிக்கின்றன. இவ்விதம் தேனை எடுப்பதால் பயிர்களுக்கு எந்தவித சேதமும் ஏற்படாது. ஒரு பூவிலிருந்தோ அல்லது கதிரிலிருந்தோ தேனை எடுக்கும் ஈக்கள், மற்ற மலர்களிலிருந்து எடுத்து வந்த சில பொருள்களை அங்கு அவை விட்டுச் செல்லுவதால் பயிர்கள் நன்றாவதற்கு அவை உதவியாயிருக்

கின்றன. அதிக சத்துள்ள ஆகாரமான தேனை அதிக வேலையின்றி செலவுமில்லாமல் எடுத்துவிடலாமாகையால் தேனீ வளர்ப்பதன் அவசியத்தை கிராமக் கைத்தொழில் சங்கம் வற்புறுத்தியதோடு, தேனீ வளர்ப்பதிலும், தேன் எடுப்பதிலும் அபிவிருத்தியான முறைகளைக் கண்டுபிடிக்கவும் முயற்சி செய்தது. தேனீ வளர்த்தல் பிரபலமாகி அதை மக்கள் அதிகமாகச் செய்ய ஆரம்பித்துவிட்டால் நமக்கு நல்ல சத்துள்ள ஆகாரம் கிடைப்பதோடு நாடும் இதனால் நன்மை அடையும்.

இந்தியாவில் ஏதாவது ஒருவகை தானியமே முக்கிய உணவாக இருந்து வருவதால் உணவு தானியங்களின் உற்பத்தி அதிகமாக வேண்டியது அவசியம். கிராம கைத்தொழில் சங்கத்தின் முன்னிருந்த வேலைகளில் முக்கியமானது அது. நிலத்திற்கு எருவிட்டால் உற்பத்தி அதிகரிக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்தது. இதற்குக் காரணம், நிலத்திலிருந்து பயிர்கள் சில சத்துக்களை எடுத்துக்கொண்டு விடுவதால், அந்தப் பயிர் அருவடையானதும் அந்த அளவுக்கு நிலத்தில் அந்த சத்துக்கள் குறைந்து விடுகின்றன. எருவிட்டால் இந்தக் குறைபாடு நீங்கி விடுமாகையால் எரு போடுவது அவசியமாகிறது. எரு பெரும்பாலும் குப்பை முதலியவைகளைக் கொண்டே தயாரிக்கப்படுகிறது. இக் குப்பை முதலிய கழிவுகள் மடித்துப் போகும்போது துர்நாற்றமுண்டாகி மக்களின் ஆரோக்கியத்திற்குக் கெடுதலாகின்றன. ஆகையால் நிலத்தின் செழிப்பை அதிகரிப்பதற்கும், மக்களின் சுகாதாரம் கெடாமலிருப்பதையும் முன்னிட்டு கழிவுகளையெல்லாம் சேகரித்து எந்த வகையில் சிறந்த எருவாக்குவது என்பது கிராம முன்னேற்றத்திலும் கிராமக் கைத்தொழில்களிலும் ஈடுபட்டிருப்பவர்களின் ஒரு பிரச்னையும் கடமையுமாகும்.

இதற்கு மனிதரின் மலங்களையும், கூட்டித்தள்ளப்படும் குப்பை போன்றவைகளையும் அதிக அளவு உபயோகித்துக்கொள்ள முடியும் என்பது அனுபவத்தில் அறிந்தது. சரியானபடி போதிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டால் வீணாகி விடுவது எதுவுமே இல்லை. இப்பொழுது

மாட்டுச் சாணத்தை வரட்டியாக்கி அடுப்பெரிக்கிறார்கள். கால் நடைகளின் மூத்திரமும் வீணாக்கப்படுகிறது. ஆனால் ஒரு விவசாயி சாணத்தைச் சரியானபடி பயன்படுத்தினால் அந்த எருவினால் அதிக விளைவை அடைவதோடு வேண்டிய வரவும் அவனுக்குக் கிடைத்துவிடும். கால் நடைகளின் சாணங்கள் மாத்திரமேயன்றி மனிதருடைய மலத்தையும், கொஞ்சம் புத்திசாலித்தனமாகக் காரியங்களைச் செய்வதாயின், சுத்தமான வகையிலேயே எருவாகப் பயன்படுத்திக்கொண்டு விடலாம். வீடுகளுக்குப் பக்கத்திலுள்ள திறந்த வெளி, சாலை ஓரம், ஆற்றங்கரை ஆகியவைகளில் மலங் கழிப்பதென்பது கிராமவாசிகளிடமிருக்கும் ஒரு கெட்ட பழக்கம். தாங்கள் கழிக்கும் மலத்தை எருவாக்கிக் கொள்ளலாம் என்ற நினைப்பு மாத்திரம் அவர்களுக்கு இருந்தால், அவர்கள் தங்கள் வீட்டுச் சுற்றுப் புறங்களை இப்படிக் கெடுத்துக் கொள்ளாமல் தங்கள் வயல்களுக்கு நல்ல உரம் தேடி விடலாம். மலத்தை மூடாது விட்டால், அதிலுள்ள நீர் பகுதி யெல்லாம் சுண்டி, அம் மலத்தினால் நிலத்திற்கு ஏற்படும் நன்மை இல்லாது போய்விடுகிறது என்பதை கிராமவாசிகள் அறிய வேண்டும். ஆனால் மலத்தை மண் போட்டு மூடிவிட்டால் அது அப்படியே நிலத்திற்கு உரமாகிவிடும். ஆகவே மண் போட்டு மூடவேண்டியது அவசியமானதோடு இதைச் செய்வதும் சுலபம். நிலத்தை உழுதுவிட்டு சிறு மண்ணைத் தோண்டிக்கொண்டு அதற்குள் மலத்தைக் கழித்துவிட்டுப் பிறகு மண் போட்டு மூடிவிட்டால் எந்தக் கஷ்டமுமில்லாமல் எருவாக்கி விடலாம். டவுன்களில் முனிசிபாலிடிகள் இந்த வேலையைச் செய்கின்றன. மலங்களை அங்கு குழிகளிலிட்டுப் புதைத்து வைத்திருந்து எருவாக்கிவிடுகிறார்கள். ஆனால் மனிதரின் கழிவுகளை அப்புறப் படுத்தி விடுவதில் செய்யவேண்டிய ஏற்பாடுகள் அநேக இடங்களில் அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை என்பதைச் சொல்லவே வேண்டும். ஆகையால் இவ்விஷயத்தில் முனிசிபாலிடிகளும் கிராமவாசிகளும் அதிக கவனஞ் செலுத்த வேண்டும். குப்பை உரத்தைத் தயாரிப்பது கஷ்டமானதே அல்ல. ஒன்று அல்லது இரண்டு அடி ஆழத்தில் ஒரு குழியைத் தோண்டிக் கொள்ளவேண்டும்.

அவைகளில் குப்பைகளைக் கொட்டி அவற்றின் மீது சாணத்தையும் போட்டு, இப்படியே போட்டுக்கொண்டு போகவேண்டும். அப்போதைக்கப்போது கொஞ்சம் தண்ணீரையும் தெளித்துக்கொண்டு வந்தால் நான்கு முதல் ஆறு மாதங்களுக்குள் எல்லாம் உயர்ந்த ரக எருவாக ஆகி விடும்; இயற்கை சத்துக்கள் எல்லாம் அதிலிருக்கும். இந்த வேலைக்கு ஒரு பெரிய ரசாயன தொழிற்சாலையோ ரசாயனப் பொருள்களோ தேவையில்லை. ஏனெனில் அந்த வேலையை இயற்கை செய்து விடுகிறது. இந்தவித எருவில், ஒருவகை கிருமிகளுமிருக்கின்றன. காற்றிலிருந்து சத்தைப் பயிர்கள் அடைவதற்கு இக் கிருமிகள் உதவி செய்வதாக இருப்பதோடு நிலத்தில் குறைவாயிருக்கும் சத்துக்களையும் அது அளித்து விடுகிறது. இத்தகைய எரு விவசாயத்திற்கு மிகச் சிறந்தது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். கிராமக் கைத்தொழில் சங்கம் இந்தக் குப்பை எருவைத் தயாரிப்பதில் ஆராய்ச்சிகளைச் செய்து வந்ததோடு அதை எல்லோரும் அனுசரிக்கும்படிச் செய்யவும் முயற்சி செய்தது. மாகாணங்களின் விவசாய இலாக்காக்களும் சில சமயங்களில் இதைச் செய்கிறார்கள். என்றாலும் இதற்காக இன்னும் செய்ய வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. இப்பொழுது அனுபவிக்கப்பட்டு வரும் உணவு தானியப் பற்றாக்குறையை, கழிவுகளை நல்ல உரமாக்கி விடுவதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் நீக்கி விடலாம்.

பசு வளர்ப்பில் ஒரு புதுமை

மனிதர் வாழ்வதற்குப் பால் அதிக அவசியமானதாவதால் அது மிக முக்கியமான உணவு. குழந்தைகள் பிறந்ததிலிருந்து பலமாதங்கள் வரையில் பாலைக்கொண்டே ஜீவித்து வளர்கின்றன. அனாதி காலந்தொட்டே இத் தேச மக்கள் பாலை மிக முக்கியமானதாகக் கருதி வந்திருக்கிறார்கள். அமிர்தத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்தானத்தை மக்கள் பாலுக்குக் கொடுத்து அதை மதிக்கிறார்கள். ஆனால் இந்தக் காலத்தில் சிசுக்களுக்கும் குழந்தைகளுக்கும்கூட பால் கிடைக்க முடியாமலிருப்பது மிகவும் துரதிருஷ்டமானதாகும். இனி பாலே கிடைக்காமல் போய்விடுமோ என்று கூடத் தோன்றுகிறது. பசுக்கள், எருமைகள், ஆடுகள் பால் கொடுக்கின்றன. பல காரணங்களை முன்னிட்டு, பால் தரும் மற்றவைகளையெல்லாம் விட பசுவே அதிக முக்கியம் என்று கருதப்படுகிறது. இதன் காரணங்களைப் பற்றி பின்னால் கவனிப்போம்.

இந்தியா விவசாய நாடு. இந்திய மக்களில் எழுபது சதவிகிதத்தினர் கிராமங்களில் வசித்து விவசாயம் செய்து வாழ்கிறார்கள். தென்னாப்பிரிக்கா, ஆஸ்டிரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில், விவசாயத்திற்கு ஏராளமாக நிலம் கிடைக்கிறது; ஒவ்வொரு விவசாயிக்கும் அதிக நிலமிருக்கிறது. இந்தியா அதிக ஜனத்தொகையைக் கொண்ட நாடாகையாலும், நீண்ட காலத்திற்கு முன்னாலிருந்தே விவசாயம் செய்து வருவதாலும், ஏராளமான நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருந்தும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் இருக்கும் நிலம் கொஞ்சம். இந்தக் கொஞ்ச நிலத்தை காளை மாடுகளின் உதவியைக் கொண்டே சாகுபடி செய்யவேண்டியிருக்கிறது. நிலத்தை உழுபவை காளைகள்; அறுவடையானதும் தானியங்கள் வேறாகவும், வைக்கோலை வேறாகவும் பிரிக்க உதவுகிறவைகளும் அதே காளைகள். பின்னர் தானியங்களை ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு வண்டியில் ஏற்றிக்கொண்டு போவதற்கும் காளை மாடுகள் வேண்டியிருக்கின்றன. எருதுகள்

இல்லையானால் விவசாயத்தில் எந்த வேலையையுமே ஒரு விவசாயி செய்யமுடியாது. ஒரு எருமையும் அந்த வேலைகளைச் செய்ய முடியுமென்றாலும், காளை மாடுகள் மாதிரி செய்ய முடியாது. சில இடங்களில் எருமைகளை உபயோகிக்கிறார்கள். ஆனாலும் காளை மாடுகள் போல அவை அவ்வளவு உபயோகரமாக இல்லை என்பதே அனுபவம். இதனாலேயே பசுக்கள் நம்நாட்டின் விவசாயப்பொருளாதாரத்தில் அவ்வளவு முக்கியமானவைகளாக இருக்கின்றன. இது ஒரு புறமிருக்க, எருமைக் கடாவானாலும், கறவை எருமையானாலும் அவற்றை வைத்துக்கொள்ளுவதில் செலவு அதிகம்; பசுக்களை விட இவைகளுக்குத் தீனி அதிகம் போடவேண்டியிருக்கிறது. இதனால் பாலுக்காகவும், தயிர், நெய் முதலியவைகளுக்காகவும் மாத்திரமேயன்றி இத்தேசத்தின் முக்கிய உணவாயிருக்கும் தானியங்களை உற்பத்தி செய்வதற்கும் அவை உதவியாக இருப்பதனால் பசுக்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது.

பசுவின் பலனையும், ஹிந்து மதமும், ஹிந்து சமூகமும், இதற்கு ஏன் அவ்வளவு பெரிய முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றன என்பதையும் மகாத்மா நன்றாக அறிவார். ஆகையால் பசுவுக்காக சேவை செய்வது முக்கியமானது என்று அவர் கருதினார். கிராமக் கைத் தொழில்களைப் பாதுகாத்து வளர்க்கும் வேலையை அவர் மேற்கொண்ட போது பசுக்களுக்குச் சேவை செய்வதையும் தமது திட்டத்தில் ஒன்றாக்கிக்கொண்டதோடு இயற்கையாகவே இதற்கு அதிக பிரதானமும் அளித்தார். சேத் யமுனாலால் பஜாஜின் தலைமையில் கோ சேவா மண்டலத்தை அவர் ஆரம்பித்தார். பசுக்களுக்கு வரும் நோய்களைத் தடுப்பது இச் சங்கத்தின் முக்கியமான வேலையாவதோடு அதற்குச் சேவை செய்வதாக இருப்பதற்கான ஆராச்சியைச் செய்வதும் அதன் வேலை.

ஹிந்துக்களுக்குத் தாய் போன்றது பசு. அதை அவர்கள் வளர்க்கிறார்கள். ஹிந்து புராணங்களில் பால் கடலே இருந்ததாகக் கூறப்படுகிறது. கிருஷ்ண பகவானைப் பற்றிய வரலாறுகளில் கூட, கோ சம்ரட்சணை, பசும் பால், வெண்ணெய் ஆகியவைகளைப் பற்றி ருசிகரமான விவரங்

கள் கூறப்படுகின்றன. அந்தக் காலத்தில் ஒருவரின் செல்வத்தை அவரிடமிருக்கும் பணத்தைக் கொண்டு மதிப்பிடுவதில்லை; அவரிடமிருக்கும் பசுக்களின் தொகையைக் கொண்டே மதித்து வந்தார்கள். பசுக்களைப் பாதுகாக்கப் பல போர்களும் நடந்திருக்கின்றன. அந்த நாட்களெல்லாம் இப்பொழுது சென்றுபோன நாட்களின் நினைவுகளாகிவிட்டன. என்றாலும் இன்றுங்கூட, பசு, அதன் பால், அதன் சாணம், விடும் நீர் முதலியவைகளெல்லாம் ஹிந்துக்களின் மத சம்பந்தமான சடங்குகளில் முக்கியமாக விளங்குகின்றன. பசுவைத் தானம் செய்வது பெரிய புண்ணிய காரியமாகக் கருதப்படுகிறது. விசேட காலங்களிலும், புண்ணிய தினங்களிலும், எல்லா முக்கியமான சடங்குகளிலும் பசுவும் கூட இருக்க வேண்டியது அவசியம் என்று கருதப்படுகிறது. கோகிலாஷ்டமி நாளில் பசு பூசிக்கப்படுகிறது. இவ்வளவெல்லா மிருந்தும், உலகத்தின் மற்ற நாடுகளெல்லாவற்றையும் விட இந்தியாவில் பசுக்கள் அதிகக் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. பசுக்களுக்கு வயிற்றுக்குப் போதுமான தீனியில்லை; அவைகளை சரியாக வைத்து நன்றாக கவனிப்பதும் கிடையாது. இதனால் இந்தியாவிலிருக்கும் கால்நடைகளின் தொகை அதிகமெனினும் அவை கொடுக்கும் பாலின் அளவு மிகக் குறைவு. காளைமாடுகளும் சந்ததிக்குச் சந்ததி பலவீனமடைந்து கொண்டே வருவதால் விவசாயமும் பாதகமடைகிறது. மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டுபோய், மேய்ச்சல் நிலங்களும் உணவு தானிய சாகுபடி நிலங்களாக்கப்பட்டு வந்ததால், மேய்ச்சலுக்கு வசதி குறைந்துவிட்டது. சில இடங்களில் புல் நிலம் என்பதே இல்லாது போய்விட்டது.

இதனால் பசுக்களுக்குச்சேவை செய்வதின் முறையில் சீர்திருத்தங்களைச் செய்யவேண்டியது அவசியமாகி விட்டது. பக்ரீத் பண்டிகையின்போது முஸ்லிம்கள் பசுக்களை வெட்டுகிறார்கள் என்பதற்காக ஹிந்து—முஸ்லிம் சச்சரவுகள் ஏற்படுகின்றன. ஆனால் பசுக்களைச் சரியானபடி எப்படி வளர்த்துப் பராமரிப்பது, மனிதருக்கு அது அதிகப் பலனுள்ளதாக்குவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி மாத்திரம் அவர்கள் சிந்திப்பதில்லை. முஸ்லிம்கள் வெட்டும் பசுக்களெல்லாம் ஹிந்துக்களின் பசுக்களே. இப்

படி வெட்டுவதற்கென்று ஹிந்துக்களிடமிருந்துதான் முஸ்லிம்கள் வாங்குகிறார்கள் என்பதையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள். நம்மிடம் அதிகக் கால்நடைகள் இருப்பதால் அவற்றைச் சரிவர வளர்க்க முடிவதில்லை; அவைகளுக்காகச் செலவிடுவதை அவைகளிடமிருந்து பெற முடியாததால் இந்தக் கால்நடைகள் ஆஸ்தியாக இருப்பதற்கு பதிலாக பாரங்களாகி விடுகின்றன. இதனாலேயே பசுக்கள் கசாப்புக்காரர்களிடம் விற்கப்படுகின்றன. பசுவை வைத்திருப்பதைவிட அதை கசாப்புக்காரரிடம் கொடுத்து விடுவது லாபகரமானதாக ஆகிறது. கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில், ஒன்று, இரண்டு முறை ஈன்று விட்ட பசுக்களை வைத்துக்கொண்டு பராமரிப்பதற்கு அதிகச் செலவாகுமாகையால், அங்கு இது கஷ்டம் என்பது உண்மை. இதனால் அங்கு ஏராளமான பசுக்கள் அழிவதோடு தரமும் கெட்டுவிடுவதால் ஒரு நல்ல சாதிப் பசு கிடைப்பதென்பதே முடியாத காரியமாயிருக்கிறது.

கிழடாகி, நோயுற்றுப் போன பசுக்களைப் பராமரிப்பதற்கென்று கோசாலைகளை ஆங்காங்கு ஏற்படுத்தி, இந்த ஸ்தாபனங்களை நிர்வகிப்பதற்காக ஏராளமான தொகையைச் செலவழிக்கின்றனர். இது மதக் கடமை என்றும் ஹிந்துக்கள் எண்ணுகிறார்கள். இந்த இடங்களில் சிலவற்றில் நல்ல பசுக்கள் சிலவற்றையும் வைத்திருக்கிறார்கள் என்பது உண்மை. என்றாலும் இவ்விடங்கள், ஒன்றுக்கும் உதவாத பசுக்களுக்கென்றே இருக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. அதிக ஆலோசனை செய்த பிறகு மகாத்மா, பசுக்களைப் பராமரித்துப் பாதுகாக்கும் முறையில் தீவிரமான மாறுதல்களைக் கொண்டு வருவதென்று முடிவு செய்தார். இதற்காக தம்முடைய மேற்பார்வையிலேயே ஒரு கோசாலையை ஆரம்பித்தார். அதை நடத்தும் பொறுப்பை சேத் யமுனாலால் பஜாஜும் அவருடைய சகோதரர் குமாரர் ஸ்ரீ ராமகிருஷ்ண பஜாஜும் மேற்கொண்டனர். நிபுணர்கள் மகாநாடு ஒன்றையும் மகாத்மா கூட்டினார். நீண்ட விவாதத்திற்குப் பிறகு கொள்கையைப் பற்றிய ஒரு முடிவுக்கும் வந்தார்கள். இதனாலும், அந்த ஸ்தாபனத்திலும் மற்ற இடங்களிலும் செய்த பரிட்சைகளினாலும், ஒரு புது வேலைத் திட்டம் உரு

வாயிற்று. அந்த வேலைத் திட்டம் நிறைவேற்றப்படுமா னால் நம் நாட்டின் கால்நடைச் செல்வத்தில் பெரிய அபி விருத்தி ஏற்படுவதோடு இன்றிருப்பதைவிட இந்தியாவில் அதிக பாலும், சிறந்த காளை மாடுகளும் இருக்க முடியும்.

பிரிட்டிஷ் சர்க்காரும் சில கோ சாலை (பால் பண்ணை) களை நடத்தி வந்தனர். ஆனால் ராணுவத்திற்கும் பிரிட் டிஷ் அதிகாரிகளுக்கும் பெரிய நகரங்களிலுள்ள பணக் காரர்களுக்கும் நல்ல பாலும் வெண்ணெய்யும் கிடைக்கும் படிச் செய்யவே இப்பால் பண்ணைகளைப் பயன்படுத்திக் கொண்டனர். ஆகையால் இந்தப் பால் பண்ணைகள் நன்றாக நடத்தப் பட்டதோடு பசுக்களின் கறவை அதிகமாக இருக் கும்படிச் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சில சாதி மாடுகள் அதிகமாகப் பால் கறக்கின்றன. ஆனால் அவை போடும் கன்றுகள் காளைகளாக வளரும்போது அந்தக் காளைகள் அவ்வளவாகப் பயன்படுவதில்லை. ஆனால் சில ரக பசுக்கள் மேற்கண்ட ரகப் பசுக்களைப் போல அவ் வளவு பால் கொடுக்கா விட்டாலும் அவை போடும் காளைக் கன்றுகள் பிறகு நன்றாக உழைக்கும்; பளு இழுக்கும் சிறந்த காளை மாடுகளாகின்றன. இன்னுமொரு ரகப் பசு நன்றாகப் பாலே கொடுக்காது. ஆனால் அவைகளின் காளைக் கன்றுகள் அழகான சிறந்த காளை மாடுகளாகின்றன. மற் றோர் ரகப் பசுக்கள், நன்றாக பாலும் கொடுப்பதில்லை, நல்ல காளைகளைத் தருவதுமில்லை. பிரிட்டிஷ் காலத்தில் காளைகளுக்கு இருந்த கிராக்கியைவிடப் பாலுக்கே அதிக கிராக்கி யிருந்ததால் தங்களுடைய பால் பண்ணைகளில் அதிகம் பால் கொடுக்கும் ரக பசுக்களை விருத்தி செய்வதி லேயே அதிக கவனஞ் செலுத்தினார்கள். இதனால் இந்த ரகத்தை விருத்தி செய்து நன்றாகவும் கவனித்து வந்தனர். இத்தகைய பசுக்களை நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கொண்டு வந்து சேகரித்து இவைகளின் பால் கறவையை அதிகரிக்க எல்லா வகையான ஊக்கத்தையும் அளித்தனர். இவ்வளவிருந்தும் பால் பண்ணைகள், அதிலும் முக்கிய மாக ராணுவப் பால் பண்ணைகள். இவைகளில் உற்பத்தி யாகும் கன்றுகளால் எந்த வித லாபமுமில்லாமல், பாலை விற்பதால் கிடைக்கும் பணத்தைக் கொண்டே நடக்க வேண்டியவைகளா யிருந்ததால், செலவு கட்டுபடியாகாது

நஷ்டத்தில் வேலை செய்பவைகளாக இருந்தன. மேலும் காளைக் கன்றுகளை கசாப்புக்குப் பயன்படுத்திவிடுவார்கள். கசாப்புக்குப் போய் விடாமல் தப்பிய காளைகளும் கஷ்டமான வேலைகளைச் செய்ய முடியாதவைகளாகையால் பயனற்றவைகளாயின.

இந்தியாவுக்குப் பாலும் காளைகளும் தேவை என்று மேலே கூறினேன். ஆகவே இந்த இரண்டு காரியங்களுக்கும் பயனளிக்கக் கூடியவைகளா யிருக்கும் ரகப் பசுக்கள் மாத்திரமே நம் நாட்டில் வளர்க்கப்படுவதற்குத் தகுதியானவை. பெரிய நகரங்களுக்கு வேண்டியது பால் மாத்திரமே யாகையால் அதிகப் பாலை மாத்திரம் கொடுக்கும் ரகப் பசுக்கள் நகரங்களுக்குப் போதும். ஆனால் இத்தகையப் பசுக்களைப் பராமரிக்கும் செலவு முழுவதையும் அதன் பாலை விற்பதைக் கொண்டு மாத்திரமே சமாளிக்க நேருவதால் இது அதிகச் செலவாகும் காரியமாக ஆயினுமாகலாம். பிரிட்டிஷ் காலத்தில் செய்யப் பட்டதைப் போலல்லாமல் காளைக் கன்றுகளும் உயிரோடிருக்கும்படிச் செய்யப்பட்டால், அவைகளால் பயனில்லாவிடினும், அவைகளுக்கும் தீனி போட வேண்டி யிருக்கும். ஆகையால் இனி ஆரம்பிக்கும் பால் பண்ணைகளில், நல்ல பாலையும் நல்ல காளைகளையும் தரக்கூடிய ரகப் பசுக்களையே வைத்து வளர்ப்பதோடு இந்த சாதி மாடுகளையே விருத்தி செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதிகப் பால் கொடுக்கிறதைக் கண்டு பசுக்களை வெகு தூரங்களிலிருந்தும் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். ரயில்கள் இல்லாதபோது கால்நடைகளை நீண்ட தூரம் கொண்டு போக முடியாது. நாட்டின் பல பகுதிகளிலும் பல ரகப் பசுக்களை வளர்த்து வந்ததோடு சில இடங்களில் சில ரகப் பசுக்கள் நன்றாக விருத்தியாகியும் வந்தன. அந்தக் காலத்திலும் இந்திய மக்களுக்கு கால்நடை வளர்ப்பதிலுள்ள நுட்பங்கள் நன்றாகத் தெரியும். தங்களுக்குத் தேவையான நல்ல ரகக் காளைகளையே அவர்கள் வளர்ப்பார்கள். அத்தகைய சாதி மாடுகள் இப்பொழுதும் கிடைக்கின்றன. வேகமாக ஓடா விட்டாலும் நன்றாக பாரத்தை இழுக்கக்கூடிய காளைகள் நம்மிடமிருக்கின்றன.

வேறு சில ரகக் காளைகளோ, பாரம் இழுக்க அவைகளால் முடியா விட்டாலும், குதிரைகளைப் போல வேகமாக ஓடக் கூடியவை. பொதுவாக காளைகள் ஏர் உழும், பளுவை இழுக்கும், சாதாரண வேகத்தில் போகும். பல ரக காளைகளை ஈன்று பாலும் கொடுக்கும் பல ரக பசுக்கள் அப்பொழுதும் இருந்தன.

வெகு தூரத்திலுள்ள இடங்களிலிருந்தும் பசுக்களைக் கொண்டு வருவதென்பது பிரிட்டிஷ் காலத்தில் வழக்கமாகி விட்டதென்றாலும் அதனால் தீமையே உண்டாயிற்று. முதலாவதாக, இப் பசுக்கள் வளர்ந்த இடத்திற்கும் புதிதாகப் போன தூரத்திலிருக்கும் இடத்திற்கும் சீதோஷ்ண நிலையில் வித்தியாசமிருப்பதால் இந்த மாறுதல் அவைகளின் உடலுக்கு ஒத்துக் கொள்வதில்லை. மேலும் பிறந்த இடத்தில் தின்றுப் பழக்கமாகி விட்ட அதே வகையான தீவனம் புது இடத்தில் இவைகளுக்கு அகப்படாது. அதோடு புது இடத்தில் இவைகளுக்கு ஏற்ற காளைகளுமிராது. இப்பசுக்கள் பிறந்த இடத்திலேயே இருந்தால் அவைகளின் ரகம் அதிகரித்திருப்பதோடு தேவையான வசதிகளும் அளிக்கப் பட்டிருந்தால் அபிவிருத்தியும் உண்டாகி யிருக்கும். வெளியில் கொண்டு போவதால் ஒரு ரகப் பசுக்கள் அவைகளுக்கிருந்த சில குணங்களை இழந்து விடுவதோடு அவற்றின் கன்றுகளும் தாய் போலிருப்பதில்லை. உதாரணமாக மழை அதிகமில்லாத பஞ்சாப், ராஜபுதனம், சிந்து ஆகிய இடங்களிலிருக்கும் பசுக்கள், வங்காளம், பீகார் போன்ற இடங்களில் நன்றாக இருந்து வளர முடிவதில்லை. எனவே ஒரு இனப் பசுக்களுக்கு, அவை இருக்கும் இடம்தான் சீதோஷ்ணத்திலும் பிறவற்றிலும் ஏற்ற இடங்களாகையால் நல்ல ரகப் பசுக்களைத் தயாரிப்பதற்கென்று அவற்றை ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு போவது வெற்றி தராது என்பது தெரிந்துவிட்டது. ஒரு ரகத்தை அது இருக்கும் பகுதியிலேயே அபிவிருத்தி செய்ய முயற்சி செய்வதால் அதிக வெற்றி காண முடியும். இந்த வகையில் செய்த பரிட்சைகளும் நல்ல பலனைக் கொடுத்திருக்கின்றன. பசுக்களின் ரகத்தை விருத்தி செய்வதில் பசுவின் தரம் மாத்திரமின்றி காளையின் தரமும் முக்கியம். பசு என்னதான் நல்ல ரகப்

பசுவாயிருந்தாலும் காளையும் நல்ல ரகமானதாக இல்லாது போனால் கன்று நல்லதாக இல்லாது போவதோடு பால் கறவையும் நன்றாயிருக்காது. சுமாராகக் கறவையுள்ள மாடுகளுடன், நன்றாகக் கறக்கும் இனத்தைச் சேர்ந்த காளையைச் சேர்த்தால் பசு அதிகமாகப் பால் கொடுக்க ஆரம்பிக்கிறது என்பது அனுபவத்தில் தெரிந்தது. எனவே தூரத்திலுள்ள இடங்களுக்குப் பசுக்களைக் கொண்டு போனால் அவைகளுடன் காளைகளையும் கொண்டு போவதே லாபகரமானது.

இதனால் பசுக்களை தூரமான இடங்களுக்குக் கொண்டு போகாமல் இருக்குமிடங்களிலேயே அவற்றை அபிவிருத்தி செய்வது என்பது கோ சேவா சங்கத்தின் ஒரு கொள்கையாயிற்று. ஒரு ரக காளைகள் அவசியமானால், அங்கிருந்து பசுக்களையும் கொண்டு போகாமல் காளைகளை மாத்திரம் கொண்டு போகலாம். இவ்விதம் உள்ளூர் ரக பசுக்களை அபிவிருத்தி செய்வதே பயனுள்ள சீர்திருத்தம். ஒரு ரகத்தை அபிவிருத்தி செய்வதென்பதற்கு அந்த சாஸ்திரீக ஞானம் தேவைப்படுவதோடு அதிக அனுபவமும் வேண்டியிருப்பதால் இது கஷ்டமான வேலையே. ஆகையால் இதை எல்லாருமே செய்துவிட முடியாது. இதைச் செய்ய முற்படுகிறவர்கள், அந்த வேலையை, விஷயம் தெரிந்து அனுபவமுள்ளவர்களிடம் ஒப்படைப்பதே நல்லது. இல்லையானால் இப் பரீட்சை தீமையாக முடிந்துவிடும்.

பசு பராமரிப்பில் மகாத்மா காந்தி மற்றோர் விஷயத்தையும் வற்புறுத்தினார். ஆனால் அது இந்தியாவில் பொதுவாகக் கோபத்தை உண்டாக்குகிறது. ஹிந்துக்கள் பசுக்கள் உயிரோடிருக்கும் வரையில் அவற்றைப் பல வகைகளிலும் உபயோகித்துக் கொள்கின்றனர். ஆனால் ஒரு பசு செத்து விட்டாலோ அதைத் தொடக்கூட அவர்கள் விரும்புவதில்லை. பிறகு அதைத் தூக்கிக் கொண்டுபோய் தோலை உரித்துவிட்டுப் புதைத்துவிட நியமிக்கப்படுகிறவர்களை தீண்டாதவர்கள் என்றும் நடத்துகிறார்கள். தோல் பொருள்களைத் தயாரிப்பதில் ஈடுபடவும் ஹிந்துக்கள் தயங்குகிறார்கள். செத்த மாட்டின்

தோல் முதலியவைகளை பயன்படுத்திக் கொள்ளவில்லையானால், பொருளாதாரத்தில் பசு லாபமற்றதாகிவிடும் என்பதை மகாத்மா உணர்ந்தார். ஆகவே செத்த மாட்டின் தோல், சதை, எலும்பு, கொம்பு, கொழுப்பு முதலிய எல்லாவற்றையும் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவும் முற்றிலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மகாத்மா கூறினர். வர்தாவுக்கு அருகில் நால்வாரி என்ற இடத்தில் அவர் ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பித்தார். அங்கு தோல் பதனிடப்படுவதோடு சதையும் எலும்பும் எருவாக்கப்படும். இவ்விதம் செத்த மாட்டின் ஒவ்வொரு பாகமும் பயனுள்ளவைகளாக்கப்பட்டன. செத்த மாட்டில் ஒவ்வோர் பகுதியும் சரியாக உபயோகிக்கப்பட்டால் இதில் நல்ல பணம் கிடைக்கும் என்பதும் தெரிந்தது.

கல்கத்தா போன்றதோர் பெரிய நகரில் கறவை நின்ற பிறகு ஒரு பசுவையும் அதன் கன்றையும் வைத்துக்கொண்டு, திரும்பக் கன்று போடும் வரையில் அவ்விரண்டுக்கும் தீனி போட்டுக் காத்திருந்து, கன்று போட்ட பின்னர் அக் கன்றுக்குப் போதுமான பாலையும் விடுவதாயிருந்தால், அப்பொழுது பசு வைத்துக்கொண்டிருப்பது அதிகச் செலவானதாகும், லாபமற்றதாகவும் இருக்கும் என்று வர்த்தகர்கள் கணக்குப் போட்டிருக்கிறார்கள். இதனாலேயே பால் வியாபாரம் செய்கிறவர்கள், நன்றாகப் பால் தரும் மாடுகளை தூர ஊர்களிலிருந்தும் வாங்கி, முதல் கன்று போட்டதுமே அப்பாலை விற்று எவ்வளவு பணம் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவும் சம்பாதித்து விடுகிறார்கள். கன்றை உடனே நல்ல விலைக்கு விற்று விடுவதால் அது தாயிடம் குடித்து விடும் பால் மிச்சமாவதோடு போட்ட பணத்தில் ஒரு பகுதியையும் கன்று விற்பனையால் எடுத்து விடுகின்றனர். கசாப்புக்காரர்கள், கறவை நின்று போன மாடுகளைக் குறைந்த விலைக்கு வாங்குவார்கள். இவ்வித விலை குறைவானாலும், பசுவின் சொந்தக்காரர்களுக்கு அதுவும் லாபமே. ஏனெனில் பசுவின் விலையையும், அதற்குப்போட்ட தீனியின் செலவையும் பால் விற்றே அவர்கள் சம்பாதித்திருப்பார்கள். அதோடு கறவை நின்ற மாட்டை விற்றுவிட்டால் அதற்கு அந்தக் காலத்தில் தீனி போடவேண்டிய செலவு

வேறு மிச்சம். கசாப்புக்காரனுக்கும் லாபம். அதன் மாமிசம், தோல், கொழுப்பு ஆகியவைகளை விற்று லாபமடைகிறான். இவ்விதம் பசுவை விற்பது விற்பவருக்கும் வாங்குகிறவருக்கும் லாபம்.

இவைகளையெல்லாம் மகாத்மா காந்தி தெரிந்துகொண்டார். எனவே ஒரு பசுவை வைத்துக்கொண்டிருப்பது சுமையாக இல்லாமல், பொருளாதார விஷயத்தில் லாபகரமானதாகவும் இருந்தால்தான், அதைப் பராமரிக்க வேண்டும் என்பது அவருடைய பலமான அபிப்பிராயம். இது சாத்தியமாவதற்கு நான்கு காரியங்களை நினைவில் கொள்ளவேண்டும். பசு போதிய அளவு பால் கொடுக்க வேண்டும்; கன்று பலமாகவும் நோயில்லாமலும் இருக்க வேண்டும்; நிலத்தின் செழுமையை அதிகரிப்பதற்கு பசுவின் சாணத்தை எருவாக உபயோகிக்க வேண்டும்; அது செத்த பிறகு அதன் தோல், சதை முதலியவைகளை அதிக லாபகரமான வழிகளில் உபயோகித்துக்கொள்ள வேண்டும். பசுக்களின் ரகத்தை அபிவிருத்தி செய்தாலே நல்ல கறவையும், பலமான சிக்கில்லாத கன்றுகளும் இருக்க முடியுமானால், அதை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று மகாத்மா வற்புறுத்தினார். புத்திசாலித்தனமும், அதைப் பற்றிய விஷய ஞானமும் போதிய அளவு இருந்தால்தான் பசுக்களின் ரகத்தில் அபிவிருத்தி செய்வது சாத்தியம் என்பதும் அப்பொழுது அனுபவத்தில் தெரிந்தது. இதில் அவர் செய்த பரீட்சைகளினால், எரு போட்டால் நிலம் செழுப்படைகிறது என்பது தெரிந்தது. செத்த மாட்டின் தோலை உரித்து அதைப் பதனிடுவது இழிவான வேலை என்ற சமூகத் தடை நீண்ட காலமாக இருந்து வந்திருந்தும் அது எவ்வளவு லாபகரமான தொழில் என்பதை மகாத்மா செய்து காட்டினார். தோல் பதனிடுவது அதிக வெறுப்புடனேயே நோக்கப்பட்டு வந்தது என்பதை முன்னாடியே கூறியிருக்கிறேன். மகாத்மா, அது அவசியமான தொழில் என்று காட்டியதோடு, தாங்கள் ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதினால் நீண்டதோர் கழியினால்கூட செத்த மாட்டின் தோலைத் தீண்டவும் சம்மதிக்காதிருந்த சாதியினரை, அந்த வேலையைச்செய்யும்படியும் வைத்தார். இந்தத் தொழிலில் வெறுப்பிருந்ததற்கு ஒரு காரணமும் உண்டு;

இது அருவருப்பான வேலை. எனவே இந்த முக்கியமான ஆட்சேபம் மறையும்படிச் செய்வதற்காக சுத்தமான முறையில் தோல் பதனிடும் வேலை முழுவதும் செய்யப்படும் படி இதில் பலஅபிவிருத்திகள் செய்யப்பட்டன. சாதாரண மாக ஒரு கிராமத்தைச் சேர்ந்த தீண்டப்படாத சமூகத் தினரே செத்த மாட்டின் தோலை உரித்து, அதைப் பத னிட்டு, அத் தோலைக் கொண்டு செருப்பு முதலியவைகளைச் செய்து விற்று வந்தார்கள். எலும்பை எறிந்து விடு வார்கள். ஆகையால் நல்ல உரமாகக் கூடிய சிறந்த பொருள் வீணாகி வந்தது. இந்த எலும்புகள் எறியப்பட்டு விடுமிடங்களில் பல நாட்களுக்கு கெட்ட நாற்றம் வந்து கொண்டிருக்கும். சில வியாபாரிகளுக்காக சேகரிக்கப்படும் வரையில் அவை அங்கேயே கிடக்கும். அந்த வியாபாரிகள் இந்த எலும்பைச் சேகரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார்கள். அங்கு அவை நல்ல உரங்களாகவும், அநேக விலையுயர்ந்த பொருள்களாகவும் செய்யப்பட்டுவிடும். இதனாலேயே மகாத்மா எலும்புகளையும் சதையையும் உர மாகச் செய்து வந்தார். கொழுப்பு தனியாக உபயோகிக்கப் பட்டது. இவை யாவும் ஒரே முறையைக்கொண்டு செய்யப் பட்டு வந்தன.

இந்தியாவிலிருக்கும் கோ சாலைகளெல்லாம், ஒன்றுக்கும் உதவாத பசுக்களைப் பரிபாலித்து வரும் வேலையை விட்டு விட்டால், அவை தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளுவதாக ஆகிவிடுவதோடு நாட்டிற்கும் அதிக நன்மையுண்டாகும். அப்படி ஆவதற்கு, ஒன்றுக்கும் உதவாத பசுக்களுடன் நல்ல பால்தரும் பசுக்களையும், நல்ல சாதிமாடுகளையும் அந்த கோ சாலைகளில் வளர்க்கவேண்டும். ஒரு கோ சாலைக்கு நல்ல மேய்ச்சல் இடமிருந்து, அங்கு கறக்கும் பாலை விற்பனை செய்வதற்குப் போதுமான ஏற் பாடுகளுமிருந்தால், சாணத்தையும் குப்பைகளையும் புத்தி சாலித்தனத்தோடு நல்ல எருவாக்கி அதைப் பயன்படுத்திக் கொள்ளுவதாகவுமிருப்பின், பசுக்களின் ரகத்தை அபி விருத்தி செய்வதோடு ஒரு கோசாலையுடன் தோல் பத னிடும் தொழிலும் சேர்க்கப்பட்டிருப்பின், மாடுகள் செத்த பிறகு அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தியும் கொண்டால், அந்த கோ சாலையில் பயனில்லாத மாடுகளு

டன் நியாயமான அளவு கறவைப் பசுக்களையும் வைத்திருப்பதன் மூலம், இக் கறவைப் பசுக்களைக் கொண்டே வீணான மாடுகளையும் லாபகரமாக பரிபாலித்துவிட முடியும். இவைகளையெல்லாம் செய்துவிட்டால், ஒவ்வொரு கோ சாலையும் தன் செலவுக்குத் தானே சம்பாதித்துக் கொண்டு விடுவதாவதோடு நாட்டுக்கும் பெரும் நன்மையுண்டு.

பால் பண்ணைகளில் நஷ்டம் வருவதற்கு முக்கியமான காரணம், கால் நடைகளுக்கு செலவழிக்கப்படும் ஒரு செலவு இனம்தான் என்பதை முன்னுடியே சொல்லியிருக்கிறேன். அதுதான் கறவை நின்றிருக்கும் சமயங்களில் அதற்குத் தீனி போடுவது. கறவையில்லாத மாடுகளை கோ சாலைகளுக்குத் தூரத்தில் மேய்ச்சல் இடங்களில் வைத்து சிக்கனமாக அவற்றை வளர்த்து, கறவைப் பசுக்களை மாத்திரம் பால் பண்ணைகளில் வைத்துக்கொள்ளுவதே சரியானது என்று கருதப்பட்டது. இதனால் அதிக மிச்சமேற்படும்.

பசுக்களை சரியான காளைகளுடனேயே சேர விட வேண்டும் என்பதில் போதிய சிரத்தை எடுக்காததே பசுக்களின் தரம் குறைந்து கொண்டு போவதற்கு முக்கியமான காரணம். கண்ட காளைகளை யெல்லாம் சேர விட்டுவிடுவதனால் பசுக்களின் தரம் கெட்டு விடுகிறது. இதில் அபிவிருத்தி வேண்டுமாயின் நல்ல ஜாதிக் காளைகள் சேரும்படிச் செய்யவேண்டும். பசுக்களைப் பற்றிய மத நம்பிக்கை எதுவுமில்லாத நாடுகளில் உபயோகமில்லாத பசுவை மாமிசம் முதலியவைகளுக்குக் கொன்று விடுகிறார்கள். இதேபோல கீழ்த்தரமான சாதி மாடுகளை யெல்லாமே அழித்து விடுகின்றனர். ஆனால் இந்தியாவில் இவ்விதம் செய்துவிட முடியாது. ஆகவே மட்ட சாதி மாடுகளைக் கொன்றுவிடாமலேயே எப்படி நல்ல சாதி மாடுகளை விருத்தி செய்வது என்பதை கவனிக்க வேண்டும். இதற்குச் சரியான வழி நல்ல ரகமல்லாத காளைகளைச் கசையடித்து விடுவதுதான். இதற்கு ஹிந்து சமூகத்தில் எந்தவித தடையுமில்லை. விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் எருதுகள் யாவுமே கசையடிக்கப்பட்டவையே. பொதுஜன

அபிப்பிராயம் இதற்கு விரோதமாக இல்லாததினால் நல்ல ரகமல்லாத எல்லாக் காளைக் கன்றுகளையும் கசையடித்து விட்டு, உயர்ந்த ரக காளைகளைக் கொண்டே உற்பத்தியில் அபிவிருத்தி செய்யவேண்டும். இந்த யோசனையில் புதுமை எதுவுமில்லை. சிரார்த்தச் சடங்கு சமயத்தில் காளையை தத்தஞ் செய்து விட்டுவிடுவதென்பது நீண்ட காலமாகவே வழக்கத்திலிருந்து வருகிறது. இந்தச் சடங்குகளுக்காக ஒரு நல்ல காளைக் கன்றை விட்டு விடுவதென்பது பெரிய தர்மமாக சாத்திரங்கள் கூறுகின்றன. அக் காளை எங்கு வேண்டுமானாலும் போய், எதை வேண்டுமானாலும் தன் னிஷ்டப்படித் தின்னலாம், நினைத்தபடி மேயலாம். நல்ல மாடுகள் விருத்தியாவதற்கு அது உதவியாக இருக்கட்டும் என்பதற்காகவே இவ்விதம் செய்யப்பட்டது.

ஆனால் நாளாவட்டத்தில், சாஸ்திரங்கள் வகுத்திருந்த இச் சடங்கிலுள்ள முக்கியத்தை அலட்சியம் செய்துவிட்டார்கள். எந்த வகையான கன்றையும் தத்தஞ் செய்து விடுவது என்பது வழக்கத்தில் வந்துவிட்டது. ஜனத் தொகை அதிகரித்து நிலப் பஞ்சம் வந்துவிட்டதால், தங்கள் நிலத்தில் காளை மேய இப்பொழுது யாரும் அனுமதிப்ப தில்லை. ஒரு விவசாயி, தன் நிலத்தில் வருவதைக்கொண்டு தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதே கஷ்டமாகி விட்டது. இதனால் சாதாரண ஒரு காளைக் கன்றை, அதுவும் நல்ல ஆகாரமின்றி வற்றலாகக் கிடப்பதை, இப்பொழுது தத்தஞ் செய்து விட்டுவிடுகிறார்கள். இந்தக் காளைகளே பசுக்களைச் சினையாக்கப் பயன்படுகின்றன. எனவே பசுக் களின் தரம் கீழ்த்தரமாகி விட்டதில் ஆச்சரியமே இல்லை. இந்த நிலைமையில் சரியான உபாயம், அநேகமாக எல்லாக் காளைக் கன்றுகளையும் கசையடித்துவிட்டு நல்ல சாதிக் காளைகளை மாத்திரமே விட்டுவைத்து, உயர்ந்த ரகக் காளை களை வெளியிலிருந்தும் கொண்டுவருவதுதான். தனிப்பட்ட விவசாயிகளால் இத்தகைய காளைகளை வைத்துப் பராமரிக்க முடியவில்லையாயின், பலர் சேர்ந்து கூட்டுறவு முறையில் ஒரு காளையை வைத்துக்கொள்ளலாம். இந்த வகையில் பசுக்களின் ரகத்தை உயர்த்துவதோடு இக் கூட்டுறவில் சேராதவர்களுக்கும் கொஞ்சம் பணத்தை வாங்கிக்கொண்டு காளையைக் கொடுக்கலாம். இவ்விதம் கொஞ்ச முயற்சி

யினுல் பசுக்களின் தரம் உயரச் செய்துவிடலாம். அப்படி விருத்தியாவதற்கு நல்ல சாதிக் காளையைத் தேர்ந்தெடுத்து அதை நன்ருக வளர்ப்பதோடு மற்ற காளைகளை யெல்லாம் கசையடித்துவிட வேண்டும் என்பதை மறந்துவிடவே கூடாது.

இதில் மற்ருென்று மிருக்கிறது. காளை நல்ல சாதிக் காளையாக இருக்கவேண்டும் என்பதைப் போல பசுவும் நல்ல சாதிப் பசுவாக இருக்கவேண்டும். நன்ருகப் பால் தராத, நல்ல கன்றுகளை ஈனுத கிழட்டுப் பசுக்களிடம் நல்ல காளைகளைச் சேரும்படிச் செய்தால், மட்ட ரகமான கன்றுகளே கிடைக்கும். இத்தகைய பசுக்கள் சினையாகாதபடிப் பார்த்துக் கொள்ளுவதும் முக்கியம். இதற்குச் சரியான வழி, இத்தகைய பசுக்கள் காளைகளிடம் போக முடியாதபடிச் செய்து விடுவதே. காளைகளிலிருந்து பிரித்து இப் பசுக்களைத் தனியாக வைத்துவிடும், மேய்ச்சல் இடங்கள் இருக்குமானுல், ஒன்றிரண்டு தலைமுறைக்குள் மட்டரகமான பசுக்களே இல்லாதபடிச் செய்துவிட முடியும். கால்நடைகளை அழிக்கவேண்டிய அவசியமோ, ஜீவஹிம்சை என்பதோ இதில் இல்லை. அவை உயிரோடிருக்கும் வரை அவற்றின் சாணத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவை செத்துவிட்டால் அவற்றின் தோல், எலும்பு முதலியவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றின் சாணம், தோல் முதலியவைகளைக்கொண்டு இவற்றைப் பராமரித்தால் ஏற்பட்ட செலவு முழுவதும் கிடைத்துவிடாது போனுலும் அச் செலவில் பெரும் பகுதி கிடைத்துவிடும்.

இவ்விதம் மகாத்மா காந்தி செய்து காட்டிய முறையை எல்லோரும் மேற்கொள்ளுவதாயிருந்தால், பசு வளர்ப்பது லாபகரமானதாவதோடு, இப்பொழுது இருந்துவரும் பால் பஞ்சமும் குறைந்து, இன்று கிடைப்பதே அரிதாகிவிட்ட நெய், வெண்ணெய் முதலியவைகளும் தாராளமாகக் கிடைக்க முடியுமென்பது தெளிவாகிறது. அதோடு விவசாயத்திற்கு ஏற்ற, நல்ல பளு இழுக்கும் எருதுகள் கிடைப்பது அரிதாகிவிட்ட கஷ்டமும் போய், எருதுகள் பலமுள்ளவைகளாவதோடு எளிதிலும் கிடைக்கும். சாணம், செத்த மாட்டுச் சதை, எலும்பு ஆகியவைகளைக் கொண்டு தயாரிக்

கப்படும் உரமும் வயல்களில் விளைச்சலைப் பெருக்கும். நல்ல சாதி மாடுகளைக் கசாப்பில் அடித்துவிடுவது என்பது இப்பொழுது இருப்பதனாலேயே நல்ல ரக மாடுகள் அழிந்து வருக்கின்றன. இவைகளும் நிறுத்தப்படலாம். அத்துடன் பசு வளர்ப்பது பளுவாக இருப்பதற்கு பதிலாக லாபகர மான தொழிலாகவும் ஆகும். எனவே மகாத்மா, அவரு டைய பரீட்சைகள் சிறிய அளவிலேயே செய்யப்பட்ட போதிலும், இப் பிரச்சினையில் தாம் புதிதாகக் கண்டவை கள், இதிலிருக்கும் சிரமங்களுக்குத் தேடப்பட்டிருக்கும் பரிகாரங்கள், வெறும் தத்துவங்கள் மாத்திரமல்ல, நடை முறையில் செய்து பயனடையக் கூடியவைகள் என்பதை நாட்டிற்குச் செய்து காட்டினார். அதே சமயத்தில் எந்தத் தொழில் அருவருப்பானதென்று கருதப்பட்டதோ, எந்தத் தொழிலிலிருந்து ஒதுங்கித் தூரத்திலிருப்பதுதான் உயர்ந்த சமூக அந்தஸ்து என்று எண்ணப்பட்டதோ, அந்தத் தொழில் இனியும் இழிவானதல்ல என்று எல்லோரும் உணரும்படிச் செய்ததோடு அது கௌரவமான தொழில் என்று மதிக்கும்படியும் மகாத்மா செய்தார்.

கிராம மக்களோடு வாழ்க்கை

மகாத்மா காந்தி வார்தாவிலிருக்கும்போது ஒரு முக்கியமான முடிவுக்கு வந்தார். கிராமங்களில் சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டு வருவதானால், கிராமவாசிகளுக்கு இருக்கும் கஷ்டங்களைப் போக்கி அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். அதற்கு, முதலில் அவர்களுடைய கஷ்டங்கள் யாவை, அவர்களுடைய தேவைகள் யாவை என்பதை நேரில் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அவர்களுடன் ஒருவராக வாழ்ந்து, அவர்களை நேசித்து, அவர்களுடைய அனுபவத்தைத் தன்னுடைய தாக்கிக்கொண்டு, அவர்கள் செலவில் தான் சௌக்யமாக இருக்கப் பார்த்து அவர்களுக்குச் சுமையாகி விடாமலும் இருந்தால்தான் நேரடியான அனுபவத்தை அடைய முடியும். அவர்களுடைய கஷ்டங்களைப் போக்கி, அவர்களுக்கு இருக்கும் சுமைகளைக் குறைக்கும் விதத்தில் உதவியாக இருக்கும் வகையில் அவர் அங்கு வாழவும் வேண்டும்.

வார்தா அப்பொழுது சின்ன டவுன்; ஜனத் தொகை இருபத்தையாயிரம். இது சிறிய ஊராக இருந்தாலும் டவுனாக இருந்ததால் வார்தாவிலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள சீயோகான் கிராமத்திற்குப் போய்விட மகாத்மா முடிவு செய்தார். அது நான்கு மைல் தூரத்திலேயே இருந்த போதிலும் அந்த நாளில் வார்தாவிலிருந்து அக்கிராமத்திற்கு மோட்டார் செல்லக்கூடிய சாலை எதுவும் கிடையாது. கோடையில் மாட்டு வண்டியில் போகலாம். ஆனால் மழைக் காலத்தில் அதுவும் முடியாது. கரிசல் மண் பூமி; மழை பெய்தால் பாதையெல்லாம் ஒரே சகதியாகிவிடும்; அதில் நடந்தால் கால் வெகுதூரம் உள்ளே பதிந்துவிடும். வார்தாவுக்கும் அக்கிராமத்திற்கும் மத்தியில் குண்டு குழிகளும் அதிகம். பல புதர்களுமுண்டு; சில முள் புதர்கள். இத்தகையதோர் கிராமத்திற்குப் போய் குடியிருக்கவே மகாத்மா முடிவு செய்தார். அங்கு போய் ஒரு சிறு

குடிசையில் வசிக்கவும் ஆரம்பித்தார். முன்னாலேயே மீரா பென் அங்கு குடிபுகுந்து விட்டார். சில சிறு குடிசைகள் போடப்பட்டன. மற்றவர்கள் யாரும் அங்கு தங்கக் கூடாது என்று மகாத்மா கொஞ்ச காலம் விதித்திருந்தார். இதனால் ஸ்ரீ. மகாதேவ தேசாய் கூட அங்கு தங்க அனுமதிக்கப்படவில்லை. எனவே அவர் தினந்தோறும் வார்தாவிலிருக்கும் மகன்வாடியிலிருந்து அக் கிராமத்திற்குப் போய் மாலையில் திரும்பிக் கொண்டிருந்தார். மற்றவர்களும் அப்படிச் செய்து வந்தனரெனினும், வழி கஷ்டமானதாக இருந்ததால் எப்பொழுதாவதுதான் போவார்கள். நாளாவட்டத்தில் மக்கள் சேவா கிராமத்திற்கு மாட்டு வண்டிகளில் போக ஆரம்பித்தனர். சிறிது காலத்திற்குப் பிறகு சேத் யமுனாலால் பஜாஜ், இருவர் உட்காரக் கூடிய மாட்டு வண்டிக்கு டயர் போட்டார், பிறகு சாலை கொஞ்சம் சீராகியதால், மழையில்லாதபோது மூன்றுபேர் ஏறக்கூடிய குதிரைவண்டி போக முடிந்தது. சில வருடங்களுக்கெல்லாம் கப்பிச்சாலை போடப்பட்டு விட்டது. இப்பொழுதோ சேவா கிராமத்திற்கு மோட்டார்கள் போவதோடு வெளி உலகத்துடன் அதற்கு டெலிபோன் போக்குவரத்து மிருக்கிறது. இந்த மாறுதல்களெல்லாம் ஏற்படுவதற்குப் பல ஆண்டுகளாயின. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வருவோருக்கேயன்றி அடிக்கடி இந்த இடத்திற்கு வந்துகொண்டிருக்கும் வெளி நாட்டினருக்கும் இத்தகைய வசதிகள் அவசியமாயின.

சேவா கிராமம் சின்ன கிராமம். அதிலிருப்பவர்களில் ஹரிஜனங்களுமுண்டு. இக் கிராமத்தில் மகாத்மா வசிக்க ஆரம்பித்ததினாலும் அக் கிராமவாசிகளிடம் கொஞ்ச காலம் எந்த மாறுதலுமே உண்டாகவில்லை. ஆசிரமத்திலிருப்போர் சாதி முறைகளையெல்லாம் அனுசரிப்பதில்லை என்பதற்காக, இந்த ஆசிரம வாசிகள் தங்களுக்கு அதிக உதவியாக இருந்து வந்தும், இவர்களை அக் கிராமவாசிகள் ஒரு வகை சமூக பகிஷ்காரமே செய்து வந்தனர். இந்த ஆசிரம வாசிகள், கிராமத்தைத் தாங்களே கூட்டி. சுத்தம் செய்வார்கள். கிராமவாசி யாருக்காவது நோய் வந்தால், கூட இருந்து வேண்டிய உதவிகளையும் செய்வார்கள். என்றாலும் கிராமவாசிகள் இவர்களுடன் சேருவதில்லை.

ஆனால் நாளாவட்டத்தில் இந்த நன்மைகளையெல்லாம் அவர்கள் உணராமலிருக்கவில்லை. மகாத்மா நடத்தும் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கும் வர ஆரம்பித்தனர். கிராமத்திலிருக்கும் குழந்தைகளின் படிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பால் பண்ணை ஆரம்பமானதும் குழந்தைகளுக்குப் பாலும் கொடுத்து வந்தார்கள். ஆசிரமத்தில் சதா ராட்டினங்கள் சுழன்றுகொண்டே இருக்கும். இதுவும் கிராம வாசிகளிடையே புது மாறுதலை உண்டாக்காது போகவில்லை. ஆசிரம வாசிகளின் வாழ்க்கை, பக்கத்திலிருக்கும் கிராமவாசிகளின் வாழ்க்கையையே அநேகமாக ஒத்திருந்தது. மகாத்மா வசிப்பதற்கென்று போட்டிருந்த குடிசைக்கும் கிராம வாசியின் குடிசைக்கும் எந்த வித்தியாசமுமில்லை. அவர் குடிசைக்குக் கொஞ்சம் மண் சுவர்; மீதம் மூங்கிலும் வைக்கோலும். மண் ஓட்டுக்கூரை; மண் தரை; சுவரிலும் மண் பூச்சு. தரையில் பாய்களை விரித்து அதன்மீது மகாத்மா உட்கார ஒரு சிறு மெத்தை. மேலே கூரையிலிருந்து ஒரு பங்கா தொங்கும். மகாத்மாவைப் பார்க்க வெளியிலிருந்து வருபவர்கள் சாதாரணமாக அந்த பங்காவை இழுத்துக் கொள்வார்கள். அவசியமானால் சில சமயங்களில் அதை மகாத்மாவே இழுத்துக் கொள்வார். என்றாலும் அந்த இடம் முழுவதும் வெகு சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. ஆசிரம வாசிகள் சட்டிப் பானைகளைக் கழுவி, கழிவுகளை வயல்களில் சேர்த்து விடுவார்கள். அங்கும் துர் நாற்றம் உண்டாகி விடாமலிருப்பதற்காக அவற்றின் மீது மண் போட்டு மூடி அதை உரமாக்கி விடுவார்கள். இவ்விதம் தயாரான எரு வயல்களைக் கொழுமதியாக்கியது.

கிராமத்தில் என்ன கறிகாய்கள் பயிராகின்றனவோ அவற்றையே ஆசிரம வாசிகள் சாப்பிடுவார்கள். கோதுமையை அறைத்துக் கொள்ளுவார்கள்; நெல்லைக் குத்தி அரிசியாக்கிக் கொள்வர். வேலை அதிகமாகி, ஆசிரம வாசிகளின் தொகையும் பெருகிவிடவே வீடுகளும் நாளடைவில் அதிகமாகி வந்தன. பல சங்கங்கள், ஸ்தாபனங்களுக்கு இக் கிராமம் தலைமை ஸ்தானமாயிற்று. சேயோகான் என்றிருந்த இக் கிராமத்தின் பெயர் சேவா கிராமம் என்று மாற்றப்பட்டு அது உலகப் பிரசித்தியும் பெற்றது. அங்கு

மற்ற கிராமவாசிகள் எப்படி வசிக்கிறார்களோ அவ்விதம் தாமும் வசிக்க மகாத்மா விரும்பினார். மற்றவர்களுக்கு என்ன வசதிகளிருக்கின்றனவோ அவைகளை மாத்திரமே தானும் பயன்படுத்திக் கொள்ளுவார். இடத்தை சாத்திய மான வரையில் சுத்தமாக வைத்திருந்து, கிராம மக்களின் பொதுவான வாழ்க்கை நிலையையும் உயர்த்த முயன்றார்.

அங்கு என்னென்ன கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது என்பதற்கு சில உதாரணங்களைக் கூறுவது அவசியம். கிராமங்களில் பாம்புகள் இருப்பதுண்டு; சேவா கிராமத்திலும் அதுதான் நிலைமை. இதிலிருந்து மக்களை எப்படிப் பாதுகாப்பது? மகாத்மா காந்தி சேவா கிராமத்தில் வசிக்கப் போன ஆரம்ப காலங்களில் அவரைப் பார்க்க வருகிறவர்கள் ஒன்றைக் காணலாம். கண்ணாடியாலான ஒரு சிறு பெட்டியையும், சிறு துவாரங்களுடன் கூடிய மர மூடியையும் அங்கு பார்க்கலாம். கிராமத்தில் பிடிக்கும் பாம்புகளை மாதிரிக்கு அதில் வைத்திருந்தார்கள். விஷப் பாம்பு எது, விஷமில்லாத பாம்பு எது என்பதைக் கண்டு கொள்வதற்காக இதில் ஆராய்ச்சிகளும் நடந்தன. அப் பகுதியிலிருக்கும் எல்லா வகையான பாம்புகளும் மாதிரிக்கு ஒன்றாகப் பிடிக்கப்பட்டன. பாம்பை உயிருடன் பிடித்து எப்படிப் பெட்டிக்குள் அடைப்பது என்பதைச் சிலர் கற்றுக்கொண்டார்கள். ஒரு மூங்கில் கழியின் ஒரு முனையில் ஒரு துவாரம் செய்து, அதில் நீண்ட கயிறு ஒன்றைவிட்டு, இந்த மூங்கிலுக்குக் கொஞ்ச தூரத்தில் மற்றோர் மூங்கில் கழியை வைத்து அதில் கட்டுவார்கள். அக் கயிற்றின் ஒரு முனையில், மூங்கில் கழியின் துவாரத்தில் புகுந்து வந்துவிட முடியாதபடி, ஒரு முடிச்சு இருக்கும். ஆனால் விரும்பும்போது விசாலமாக்கிக் கொள்ளும் வகையில் அக் கயிற்றை வைத்துவிடுவார்கள். ஒரு பாம்பு அதன் மீது ஏறும்போது அதைச் சுருக்கு மாதிரி கெட்டியாகக் கயிறு இறுக்கிக்கொண்டு விடும். இதன் நோக்கம் விஷமுள்ள பாம்புகள் எவை என்பதை கிராமவாசிகளுக்குக் காட்டி, அவைகளை அவர்கள் தவிர்க்கவும், பிடித்துவிடவும் உதவுவதற்காகவே. ஆசிரமவாசிகள் பிடிக்கும் பாம்புகளைக் கொன்று விடுவதில்லை. அவற்றைக்

கொஞ்ச காலம் வைத்திருந்து பிறகு தூரத்தில் கொண்டு போய் விட்டு விடுவார்கள்.

மகாத்மாவுக்கு மலேரியா சுரம் வந்த பிறகு, இந்தக் கொடிய வியாதியால் கிராமவாசிகள் எவ்வளவு துன்பமடைகிறார்கள் என்பதை தம் உடல் அனுபவத்தைக் கொண்டே அவர் தெரிந்து கொண்டார். மழைக் காலத்தில் தீவிரமாக ஆரம்பமாகிவிடும் மலேரியா சுரம் மழைக் காலம் தீர்ந்த பிறகும் சில மாதங்களுக்கு இருந்து வரும். மகாத்மாவுக்கு வைத்தியம் செய்ய வார்தாவிலிருந்து வைத்தியர்கள் வந்தார்கள். அவர்களிடம் அவர் எந்த வைத்தியமும் செய்து கொள்ள மறுத்துவிட்டார். ஆனால் அவர் நிலைமை மோசமாகிவிடவே அவரை டவுனிலிருக்கும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதென யோசனை கூறப்பட்டது. பொதுவாக கிராமவாசிகளுக்குக் கிடைக்காத வைத்தியம் தமக்கும் வேண்டாம் என்று எப்படி மகாத்மா கூறிவிட்டாரோ அதே போலவே, வைத்தியத்திற்குத் தாம் வார்தாவுக்குப் போவது என்பதற்கும் மறுத்து விட்டார். வார்தாவுக்குக் கொண்டுபோய் வைத்தியம் செய்வதென்பது சேவா கிராம வாசிகள் எல்லோருக்கும் கிட்டாததொன்றுகையால் தாமும் வார்தாவுக்குப் போய் வைத்தியம் செய்துகொள்ள மகாத்மா மறுத்து விட்டார்.

சேவா கிராமம் சிறிய கிராமமேயானாலும் அங்கு பால் அடியோடு கிடைப்பதில்லை. எனவே ஆசிரமவாசிகளுக்கே யல்லாமல் கிராமவாசிகளுக்கும் பால் கிடைக்கும்படிச் செய்வதை முன்னிட்டு அங்கு பால் பண்ணையை ஆரம்பிப்பது அவசியமாயிற்று. அகில இந்திய நூற்போர் சங்கம் அங்கு ஒரு பயிற்சிக் கூடத்தை ஆரம்பித்தது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அங்கு வரும் மாணவர்களுக்கு நூற்பது, நெய்வது சம்பந்தமான எல்லா வித நுட்பங்களையும் சொல்லிக் கொடுத்தார்கள். அகில இந்திய நூற்போர் சங்கத்தின் தலைமைக் காரியாலயமும் சேவா கிராமத்திற்கு மாற்றப்பட்டது. சேவா கிராமத்திற்குப் போகிறவர்கள், புதிதாகப் பல வீடுகள் கட்டப்பட்டிருந்ததைப் பார்க்கலாம். கிராமத்திலிருக்கும் நிலத்தில் பெரும் பகுதி ஆசிரமத்திற்குச் சொந்தம். இந்த நிலத்தில் சாகுபடி செய்து வந்ததோடு கொஞ்ச நிலத்தில் கரும்பும் பயிரிட்டார்கள்.

இவ்விதம் அங்கு மக்கள், அபிவிருத்தியான புதிய விவசாய முறைகளைக் கற்றுக் கொண்டார்கள். நான் மேலே சொன்னபடி வார்தாவில் கிடைக்காததையெல்லாம் சேவா கிராமத்தில் சாகுபடி செய்தனர். உயர்ந்த ரக கரும்பு, பெரிய பப்பாளி, சோளம், ஏராளமான காய்கறிகள் ஆகிய வைகளை யெல்லாம் பயிரிட்டனர். சேவா கிராமத்திலிருந்த ஸ்தாபனங்களுக்கெல்லாம் தனித் தனி நிர்வாக அமைப்புகளுண்டு. 1942-ம் ஆண்டு தேசியப் போராட்டம் ஆரம்பமாவதற்குள் சிறந்த முறையில் அமைக்கப்பட்ட ஒரு பெரிய கிராமமே அங்கு தோன்றிவிட்டது. அங்கே ஏராளமானவர்கள் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். மகாத்மாவின் வாழ்க்கை முறையை மாத்திரமே யன்றி, அவர் அமைத்த பல ஸ்தாபனங்களும் எப்படி நடக்கின்றன என்பதையும் அறிந்து கொள்ளுவதற்காக வெளிநாட்டினரும் பலர் வந்து அங்கு சில காலம் தங்கிவிட்டுப் போவார்கள். பிர்லாக்கள், எல்லா வசதிகளோடும் கூடிய ஒரு சிறு வைத்தியசாலையையும் கட்டினார்கள். இவ்வளவுமிருந்தும் சேவா கிராமத்தை ஒரு பட்டணம் என்று சொல்ல முடியாது. ஏனெனில் அதன் வாழ்க்கையும் சுற்றுச் சார்பும் கிராம மயமாகவே இருந்தன.

சாலை போடப்படுவதற்கு முன்னால் நாங்கள் நடந்தே சேவா கிராமத்திற்குப் போகவேண்டி யிருந்தது. என் நண்பர் காலஞ்சென்ற பாபு மதுரப் பிரஸாத் ஒரு சமயம் அங்கே போயிருந்தார். நானும் அவருடனிருந்தேன். மாலை வேளை, வானத்தில் சில மேகங்கள் தென்பட்டன. நான் வார்தாவுக்குத் திரும்பி விட்டேன். ஆனால் அவரோ, பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் போய்விட்டே திரும்ப விரும்பினார்; பிரார்த்தனைக் கூட்டம் முடிந்ததும் புறப்பட்டார். அப்பொழுது மழை ஆரம்பித்துவிட்டது. வார்தாவிலிருந்த நாங்களோ, அவர் அன்று மாலை திரும்பி வர மாட்டார் என்றே எண்ணியிருந்தோம் ஆனால் அவரோ, மழைக்கு அஞ்சித் தங்கிவிடக் கூடியவரல்ல. வழி சரியாகப் புலப்படவில்லை. சில இடங்களில் அவருடைய கால்கள் முழங்கால் வரையில் புதைந்துவிட்டன. இந்தச் சேற்றில் முதலில் ஒரு காலின் செருப்பையும் பிறகு மற்றோர் கால் செருப்பையும் அவர் இழந்துவிட்ட போதிலும்

சேற்றைச் சமாளித்துக்கொண்டு நடந்து விட்டார். அவர் அன்றிரவு பத்துப் பதினேரு மணிக்கு வார்தாவுக்கு வந்து சேர்ந்தபோது அவரைப் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. முற்றிலும் நனைந்து போயிருந்தார்; உடையெல்லாம் ஒரே சேற்று மயம்; காலில் பல முட்கள். சேவாக் கிராமத்திற்குச் சென்று வந்தவர்கள் அப்பொழுது இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருந்தது. இதனுலேயே சேவா கிராமத்திற்கு கப்பிச் சாலை போட்டுவிடுவதென ஜில்லா போர்டு முடிவு செய்தது. ஆனால் இச்சாலை போடப்பட்டது கொஞ்ச காலம் கழித்து.

ஸ்ரீ. பராச்சுரே சாஸ்திரி என்பவர் சேவா கிராமத்தில் வசித்து வந்தார். மகாத்மா காந்தி சிறையிலிருந்தபோது அவருடன் தொடர்பு கொண்டார் இவர். இந்த சாஸ்திரி சமஸ்கிருத படிப்பாளி ; ஆனால் குட்ட நோயால் பீடிக்கப்பட்டார். அவருக்குப் புகலிடம் வேறு எங்கும் கிடைக்காது போகவே ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார். இங்கோ, அவரை எங்கு இருக்கச் செய்வது, அவரை எப்படி வைத்துக் கொள்வது என்ற பிரச்னை எழுந்தது. ஆனால் மகாத்மா, அவரை தம்முடன் வசிக்கச் செய்தார். பிறகு அவருக்குத் தனியாக ஒரு குடிசையை அமைத்தார்கள். அவருடைய வசதிகளை மகாத்மாவே நேரில் கவனித்துக் கொள்வார். மகாத்மா உலாவச் செல்லும் போதெல்லாம் தவருமல் சாஸ்திரியைப் பார்த்துவிட்டுப் போவார். இவ்விதம் மகாத்மா, சாஸ்திரியை ஒவ்வொரு நாளும் பார்ப்பதோடு அவருடைய தேவைகளைத் தாமே நேரிலும் கவனித்துக் கொள்ளுவார். சாஸ்திரி அங்கேயே கொஞ்ச காலமிருந்தார். பிறகு காலமானுர்.

சேவா கிராமத்தில் கொஞ்ச காலம் வசிக்கும் நல்ல பாக்கியம் எனக்கும் இருந்தது. சாதாரணமாக நான் வார்தாவில் சேத் யமுனுலால் பஜாஜின் விருந்தினர் விடுதியில் தங்கியிருந்து சேவா கிராமத்திற்குப் போய் வருவது வழக்கம். அங்கு என் மத்தியான சாப்பாட்டையும் மாலை சாப்பாட்டையும் முடித்துக்கொள்வேன். பொழுதெல்லாம் அங்கேயே இருப்பேன். இரவு மாத்திரம் வார்தாவுக்கு வந்துவிடுவேன்.

ஆண்டுதோறும் மழைக் காலத்தில் கொஞ்ச நாள் மகாத்மா காந்தி பார்தோலி ஆசிரமத்திலிருப்பார். இரண்டொரு சமயங்களில் அங்கும் மகாத்மாவுடனிருக்கும் பெரிய வாய்ப்பு எனக்கு இருந்தது. அவருக்கு அருகிலிருந்து அவர் சொல்லுவதைக் கேட்டு, அவருடைய வாழ்க்கை வசதிகளை நேரில் அறிந்துகொள்ளும் பேறு எனக்குக் கிடைத்தது. என்னிடம் மகாத்மாவின் கடிதங்களும், மற்ற எழுத்துக்களும் ஏராளமாக இருக்கவேண்டும் என்று அநேகர் நினைக்கிறார்கள். தாங்கள் அன்றாடம் செய்கிறவைகளையெல்லாம் தினக் குறிப்பில் எழுதி வைத்துக்கொள்ளுகிறவர்களிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் சோம்பல் மிகுந்தவனாகையால் அப்படிப்பட்ட தினக் குறிப்பை நான் வைத்துக்கொண்டதில்லை. மேலும் நான் எப்பொழுதாவது தான் மகாத்மாவுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வேன். அவரிடமிருந்து எதையாவது நான் தெரிந்து கொள்ள விரும்பினால் ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு அவர் சொல்லும் பதிலைக் கேட்டு திருப்தியடைந்து இருந்து விடுவேன். இந்த அவசியம் கூட அடிக்கடி ஏற்படுவதில்லை. எனக்கு இருக்கும் சில சந்தேகங்களில் தெளிவு படுத்திக்கொள்ள ஒரு கேள்வியை மகாத்மாவிடம் கேட்போமா என்று நான் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, நான் நினைத்துக்கொண்டிருந்த கேள்வியையே இன்னும் யாராவது அவரிடம் கேட்டுவிடுவார்கள். அவருக்குக் கிடைக்கும் பதில் எனக்கும் திருப்தியளித்துவிடும். நான் விரிவாகக் கேள்வி கேட்டிருந்தால் எனக்கு அவர் சொல்லும் பதில் எப்படி இருக்கும் என்பதையாவது அப்பதில் காட்டிவிடும். இவ்விதம் பல சமயங்களில் நடந்திருக்கிறது. இவ்வாறு நான் மகாத்மாவுடன் நீண்ட காலம் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருந்த போதிலும், அவர் சம்பந்தப்பட்ட சாமானோ அல்லது அவர் எழுதியதோ என்னிடம் எதுவுமே இல்லை. ஒரு சமயம் பார்தோலிக்கு நான் அவரோடு பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, அவரிடம் ஒன்று சொன்னேன். நிர்மாண வேலைத்திட்டத்தைப்பற்றி எவ்வளவோ பேசப்பட்டு வந்தும், அதைப் பற்றி ஒருவர் நன்றாகத் தெரிந்துகொள்ளும்படிச் செய்ய, எல்லாம் அடங்கிய முறையில் எந்த நூலும் இல்லை. இதைப்பற்றிப் படிப்

பதற்கு "ஹரிஜன்" பிரதிகளையெல்லாம் புரட்டிப் படித்துக்கொண்டிருப்பதென்பது அநேகருக்குக் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னேன். ஆகவே நிர்மாண வேலைத்திட்டத்தின் ஒவ்வொரு பகுதியையும் விளக்கி, முழு திட்டத்தையும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் ஒரு பிரசுரத்தைக் கொண்டுவருவது உதவியாக இருக்கும் என்றும் கூறினேன். இந்த யோசனை மகாத்மாவுக்குப் பிடித்தது. பார்தோலிக்கு ரயிலில் போய்க்கொண்டிருக்கும்போதே அத்தகைய பிரசுரத்திற்கு வேண்டியதை எழுதி விட்டார். இப் பிரசுரம் இப்பொழுதும் கிடைக்கும். நிர்மாண வேலைத் திட்டத்தைப்பற்றிய என் கருத்துக்களையும் அதில் எழுதும்படி மகாத்மா என்னிடம் கூறினார். பார்தோலி போனதும் அப்படியே எழுதினேன். நிர்மாண வேலைத்திட்டம் சம்பந்தமான பிரசுரத்தை ஆமதாபாத் நவஜீவன் பிரசாரன் சபையார் வெளியிட்டார்கள்.

வாழ்க்கை நியதிகளின் தத்துவம்

மகாத்மா காந்தி, உணவு சம்பந்தமாகச் செய்த சில பரீட்சைகளைப் பற்றிக் கொஞ்சம் ஏற்கனவே கூறியிருக்கிறேன். இங்கிலாந்தில் அவர் மாணவராக இருந்தபோதே இந்தப் பரீட்சையை ஆரம்பித்து விட்டார். அவருக்கு சைவ உணவு தேவை. அது கிடைப்பதில் அங்கு அவர் கஷ்டத்தைக் காணவே, தம் உணவைத் தாமே சமைத்துக் கொண்டார். சுகாதாரத்திற்கும், உடல் வலுவுக்கும் போதுமானதாக இருக்கக்கூடிய எளிய சாப்பாடு எது என்பதைப் பற்றியும் அவர் சிந்திக்கலானார். சைவ உணவினரின் சங்கமொன்றை அவர் ஆரம்பித்தார்; இதன் காரியதரிசியாக அவர் நீண்ட நாள் இருந்தார். உணவுக்கும் உடல் நலத்திற்கும் பொருத்தத்தை உண்டாக்கவேண்டும் என்ற ஆரம்ப ஆவலே அவருடைய உணவுப் பரீட்சைகளுக்குக் காரணம். தென்னுப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் இதில் தாம் எவ்வளவோ சிரமங்களைச் சமாளிக்க வேண்டியிருந்த போதிலும், தமது வாழ்நாள் முழுவதும் விடாமல் இந்த உணவுப் பரீட்சையை அவர் செய்து வந்தார். இதைப் பற்றியும், இயற்கை வைத்தியத்தைக் குறித்தும் மகாத்மா பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார். அவைகளெல்லாம் புத்தகமாகப் பிரசுரமாகியிருக்கின்றன. பிரமச்சரியத்தைக் குறித்து அவர் எழுதியவைகளும் தனி நூலாக வெளி வந்திருக்கிறது. இவைகளில் அடங்கியிருக்கும் அடிப்படை தர்மமும், அகிம்சையும், சத்தியக் கொள்கையுமே. உடல் நலம், மனிதனுக்கு விலை மதிக்க முடியாத சொத்து. ஆனால் இயற்கைக்கு ஒவ்வாத உணவினாலும், வாழ்க்கையாலும் மனிதன் உடல் சுகத்தைக் கெடுத்துக் கொண்டு விடுகிறான். வாழ்வுக்கும் உடல் சுகத்திற்கும் தேவையான அளவு சரியான உணவைச் சாப்பிட்டு வந்தால், ருசியாக இருக்கிறது என்பதற்காகத் தின்னாமல் அவசியமாகிறது என்பதற்காக மாத்திரமே சாப்பிட்டு வந்தால், அப்பொழுது உடல் நிலை விருத்தியடைவதோடு ஒழுக்கத்திற்கும் அதனால்

நல்ல பலனுண்டாகும். நோய், இயற்கை யல்லாதது. ஒருவன் நோயுற்று விடும்போது, அவன் திரும்பவும் நோயற்றிருக்க இயற்கையே முயற்சி செய்கிறது. இதனாலேயே இதில் இயற்கைக்கு உதவியாக இருக்கும் இயற்கை சிகிச்சையே சிறந்ததாகிறது. இதனாலேயே மருந்துகள் நன்மைகளைச் செய்வதற்கு பதிலாக தீமையையே உண்டாக்கி விடுகின்றன. எனவே மகாத்மா இயற்கை வைத்திய சிகிச்சையை வற்புறுத்தினார். இதில் அவருக்கிருந்த நம்பிக்கையைச் சோதிக்க எத்தனையோ சிரமங்கள் அவருக்கு வந்தன. எனினும் இதில் அவர் வைத்திருந்த நம்பிக்கை அசைக்க முடியாதது. அவர் மகனுக்குக் கடுமையான நோயுண்டானபோது, இயற்கை வைத்தியத்திலும் கடவுளிடமுமே அவர் நம்பிக்கை வைத்தார். வேறு வைத்தியம் எதையும் அவர் மகனுக்குச் செய்யவில்லை. கடவுளருளால் அவர் குணமாகிவிட்டார். இந்தக் காலத்தில் வைத்தியம், அதிலும் மேனாட்டு வைத்திய முறை, அதிகச் செலவுள்ளதாகிவிட்டது. லட்சக்கணக்கான இந்திய கிராமங்களிலிருக்கும் ஏழை மக்களுக்கு அத்தகைய வைத்தியத்தைச் செய்துகொள்ளும் சக்தியே கிடையாது. ஆகையால் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்து, அதன் மூலம் பிணியைத் தடுத்துக்கொள்ளும் இயற்கை வைத்திய முறை எல்லோருக்கும் தெரிந்திருக்குமானால், அது அதிக நன்மையுடையதாக இருப்பதோடு, ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் அது சாத்தியமானதாகவும் இருக்கும்.

நித்தியமான ஆனந்தத்தை அளிக்கக்கூடிய வகையிலான சத்திய நெறியை நாம் பெறும்படிச் செய்வதாக நம் கலாச்சாரம் அமைக்கப்பட்டிருப்பதோடு நமது சாத்திரங்களும் அதையே போதிக்கின்றன. மதத்திற்கும் ராஜீயத்திற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்று சிலர் அடிக்கடி சொல்லுகிறார்கள். மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கும், பொது வாழ்வுக்கும் சம்பந்தமில்லை என்கிறார்கள். அதாவது, ஒன்றை மற்றொன்று பாதித்தே தீரும் என்பதை அடியோடு மறந்துவிட்டு நமது வாழ்க்கையை நாம் பல கூறுகளாகப் பிரித்து விடுகிறோம். என்றாலும் நமது கலாச்சாரமோ, வேறு விதமாக போதிக்கிறது. மனிதனுடைய

உடல், அவனுடைய மனதினால் பாதிக்கப்படாமல் இருந்து விடாது. அதாவது சுகமான உடலில்தான் சுகமான மனமிருக்க முடியும்; சுகமான மனமிருந்தாலேயே சுகமான உடலும் இருக்க இயலும். சுத்தமான நல்ல ஆகாரமில்லாது போனால், இந்த இரண்டின் சுகத்தையும் ஒருவர் பெற்றுவிட முடியாது. தனிப்பட்டவர் சுகமாக இல்லையாயின், தனிப்பட்டவர்களைக்கொண்ட ஒரு கோஷ்டி சுகமாக இருந்துவிட முடியாது. சுகமான உடலிருப்பதோடு சுத்தமான மனதும், சுத்தமான செய்கையும் இருப்பதும் அவசியம். இதனாலேயே, மனிதனுடைய முழு வாழ்க்கையிலும், அதாவது அவன் செய்கை, மனம், அவன் குணம் ஆகிய மூன்று அம்சங்களான சத்வ, ரஜ, தாமஸ லட்சணங்களிருக்கின்றன. ஒருவனோ, அல்லது ஒரு சமூகமோ, சாத்வீகம், ரஜஸ், தாமஸம் ஆகிய முக்குணங்களில் எது மேவி நிற்கிறதோ அதற்கு ஏற்ற குணத்தோடு விளங்குகிறார்கள். மனிதனின் ஆகாரத்திற்கும், அவன் உடல், தேக சுகம், மனதின் பலம், பரிசுத்தமான எண்ணம் ஆகியவைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதோடு இவை ஒன்றையொன்று பாதிக்கின்றன. தாமஸ உணவை சாப்பிட்டுவிட்டு சாத்வீக குணத்தைப் பெறுவதென்பது அடியோடு முடியாத காரியமல்ல என்றாலும், கஷ்டமான காரியம். ஆகையால் நமது சாத்திரங்களின்படி, நாம் உயர்ந்த லட்சியத்தை அடைய வேண்டுமானால், மனிதனின் உணவுக்கும் அவனுடைய வாழ்க்கை முறைக்கும் சரியான கட்டு திட்டங்களிருக்க வேண்டியது அவசியம்.

மகாத்மா காந்தி நிர்ணயித்திருக்கும் பதினொரு விரதங்களும் இந்தக் கொள்கையையே அடிப்படையாகக் கொண்டவை இவைகளில் பல முன்னாலேயே நமது சாத்திரங்களில் கூறப்பட்டிருப்பதால் அவை யாவும் புதியவையல்ல. இவைகளை அனுசரித்து நடக்கும் மார்க்கமும் ஆதிகாலம் தொட்டு போதிக்கப்பட்டு வந்திருக்கிறது. கருத்தரிப்பதற்கு முன்னாலிருந்தே சில கட்டுப்பாடு விதிகளை கணவனும் மனைவியும் அனுசரித்து வருவதால், குழந்தை பிறப்பதற்கு முன்னாலேயே இந்த விரதங்களின் முக்கியங்கள் போதிக்கப்படுகின்றன என்று கூறுவது மிகை யாகாது. ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள உறவு சரீர

உணர்ச்சி இன்பத்திற்காக அல்ல. வாழ்க்கைக் காரியங்களை நடத்திச் சென்று, சந்ததியை விருத்தி செய்துகொண்டு போவதற்கான விதி முறைகளின்படி கட்டுதிட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த உறவுடன், அந்தக் கட்டுப்பாடுகளின் பேரில் பிறக்கும் சந்ததிக்கு இயற்கையாகவே அந்தக் குணமே வளரும். இவ்விதம் ஒரு மனிதன் எந்த கட்டு திட்டங்களின்படி பிறக்கிருனே அது, பெற்ரேர்களின் கட்டு திட்டங்களோடு கூடிய உறவிலிருந்தே ஆரம்பமாகிறது. ஒவ்வொருவருக்கும்.பிறந்ததிலிருந்து சாகும் வரையில்,பல சடங்குகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவை யாவும் அவனைப் புனிதனக்குவதற்கு ஏற்பட்டவைகளேயாகும். இவ்விதம் மனிதனுடைய வாழ்க்கை, அவன் இளம் பிராயத்தில் கல்வி பெற்று வரும்போதும், பிறகு பிரமச்சாரியாக இருக்கும் போதும், பின்னர் குடும்பஸ்தனுக இருக்கும் சமயத்திலும், அதன் பிறகு சமூக சேவை செய்து வரும் காலத்திலும், கடைசியாக தியானத்திலும் பிரார்த்தனையிலுமே காலத்தைக் கழித்து வரும்போதும், ஆயுள் முழுதும், தானும் சமூகமும் புனித மடைவதையே லட்சியமாகக் கொண்டதாக. இதற்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்துகொண்டதாகவே ஆகிறது. இந்த கட்டு திட்டங்களின் உண்மைத் தத்துவத்தை நாம் அறிவதில்லை; அவைகளைப் பொதுவாக நாம் புரிந்து கொள்ளுவதும் கிடையாது. இதன் பலனுக சந்தோஷகரமான வாழ்க்கைக்கு அவைகளெல்லாம் பல தடைகள் என்று நாம் எண்ணுகிறோம். அவற்றின் அவசியத்தை நாம் உணராததோடு அந்தப் பழங்கால, பயனில்லாத முறைகளில் நம் வாழ்க்கையை வகுத்துக் கொள்ளாமலிருப்பதே அபிவிருத்தியின் அறிகுறி என்றும் நினைக்கிறோம். ஆனல் மகாத்மா காந்தி அப்பழைய முறைகளிலடங்கிய தத்துவங்களை ஒப்புக்கொண்டாலும் அவைகளை யெல்லாம் அவர் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொண்டு விடுவதில்லை என்பது உண்மை. இது அவர் வெளியிட்ட பதினேரு விரதங்களிலும் நன்கு விளங்கும். இக்காலத்திற்கு ஏற்ற வகையில், இன்றைய நிலைமைக்குப்பொருந்தும் முறையில், அவர் அவைகளை வகுத்து வெளியிட்டார். ஆகையால் உணவு, உடல் சுகம், வைத்தியம், பிரமச்சரியம்

ஆகியவைகளில் அவர் செய்த பரீட்சைகளுக்கு சத்தியம், அஹிம்சை ஆகியவைகளுடன் நெருங்கிய சம்பந்தமுண்டு. மற்றவைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருந்தாலன்றி இவற்றில் தனித்து எதிலும், எதைப் பற்றியும் ஒருவர் சரியாக அறிந்து கொள்ளுவதோ, அடைந்து விடுவதோ முடியாது. இந்தக் கொள்கைகளின் படி நடக்கும் ஒரு வகையான சமூக அமைப்பை உண்டாக்க அவர் விரும்பினார். ஏனெனில், மதத்திற்கும் ராஜீயத்திற்கும் மத்தியில் பிரிக்கும் கோடு ஒன்றை யாரும் போட்டுவிட முடியாது என்றும், ஒரு தனிப்பட்டவரின் சொந்த வாழ்க்கைக்கும், அவருடைய பொது வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லாமல் இருக்க முடியாது என்றும் அவர் எண்ணினார்.

இவ்விஷயத்தை இன்னும் தெளிவாக விளக்குவது நல்லது. ஒரு தனிப்பட்டவர் தம்முடைய சொந்த வாழ்க்கையில் ஒழுக்கங் கெட்டவராக இருந்த போதிலும், அவருடைய பொது வாழ்க்கையில் யோக்கியமாக இருந்து விட்டால், அவர் ஒரு நல்ல பொதுஜன ஊழியரே என்று சொல்லப்படுகிறது. இந்த தத்துவத்தை மகாத்மா காந்தி ஒப்புக் கொள்ளுவதில்லை. ஏனெனில் பண சம்பந்தமாக யோக்கியமாக இல்லாத ஒருவர், தமது சொந்த வாழ்க்கையில் நல்லவராக இல்லாத ஒருவர், பொது வாழ்க்கையிலும் நேர்மையானவராகவோ அல்லது நல்லவராகவோ இருக்க முடியாது என்பது அவருடைய அபிப்பிராயம். தனக்குப் பணந் தேடிக் கொள்ளுவதில் எந்த அயோக்யமான காரியத்தையும் செய்யக்கூடியவரை, அவருடைய சொந்த காரியங்களில் பிறர் நம்பக் கூடியவராக இல்லாதவரை, பொதுஜன காரியங்களில் மாத்திரம் எப்படி முற்றிலும் நம்பிவிட முடியும்? சின்ன விஷயங்களில்கூட சத்தியத்தை மதிக்காமலிருப்பதுதான் சுலபத்தில் பணக்காரனாவதற்கு வழி என்று நினைப்பவரை, எந்த பொது ஜன காரியத்திற்கும் நம்பிவிட முடியாது. தீய வழியில் வந்த பணம் அனுவசியமானதாவதோடு தீமையையே விளைவிக்க வல்லதாகையால், அயோக்யத்தனமாகச் சம்பாதித்த பணத்தை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்தினாலும், அதனால் விளையும் பலனும் நல்லதாகவே இராது. இதை முன்னிட்டே, ஒருவர் தனக்கு

முற்றிலும் அவசியமானதற்கு அதிகமாகப் பணத்தைச் சம்பாதிக்கக்கூடாது என்று மகாத்மா விதித்த விரதங்களில் ஒன்று கூறுகிறது. இதைப் பற்றி அவர் எழுதியவைகள் "மங்கள பிரபாத்" என்ற பெயரில் சிறு புத்தகமாகப் பிரசுரமாகியிருக்கிறது. அதில் தாம் விதிக்கும் விரதங்களின் தத்துவத்தை அவர் விளக்கியிருக்கிறார். அந்நூலைக் கட்டாயம் படிக்க வேண்டும் என்று செய்யவும் வேண்டும். இதை முன்னிட்டே, இயற்கை வைத்தியம், உணவு, உடல் சுகம், பிரமச்சரியம் ஆகியவைகளைப் பற்றி மகாத்மா செய்த பரீட்சைகளின் அடிப்படைத் தத்துவங்களை இப்புத்தகத்தில் ஆங்காங்கு எடுத்துக்காட்ட நான் முயற்சி செய்திருக்கிறேன்.

கொள்கையில் வந்த குழப்பம்

இப் பெரிய நாட்டில் வாழும் பல்வேறு மதத்தினரிடையே
யும் சகோதர உணர்ச்சியை உண்டாக்கி, அவர்க
ளுடைய நம்பிக்கையைப் பெறுவதையே தமது பொது
வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலிருந்து முக்கியமான நோக்க
மாகவும் கொள்கையாகவும் மகாத்மா கொண்டிருந்தார்
என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறேன். ஒரு முஸ்லிம்
வர்த்தகரின் காரியங்களை கவனிப்பதற்காக, ஒரு வக்கீல்
என்ற முறையில், அவர் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார்.
அங்கே ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அக்கிரமமாக நடத்தப்
பட்டு வந்ததினாலேயே அந்நாட்டில் அவர் தங்கினார். இந்
தியருக்குச் செய்யப்பட்டு வந்த கொடுமைகளை எதிர்த்துப்
போராடி பரிகாரம் காணுவதை முன்னிட்டு சத்தியாக்
கிரகப் போர் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.
"சத்தியாக்கிரகம்" என்ற பெயர் அங்குதான் முதலில்
பிறந்தது. சத்தியாக்கிரகத் திட்டம் முழுவதும் உருவான
தும் அங்குதான். அந்தப் போராட்டத்தில் ஹிந்துக்களும்
முஸ்லிம்களும் ஒருமித்துக் கலந்துகொண்டார்கள். அவர்
களுக்குள் ஒரு சமயத்தில்கூட வேற்றுமை ஏற்பட்டதில்லை.
ஒரு வெளிநாட்டில் அத்தகைய ஒன்றுபட்ட நடவடிக்கை
இருந்ததில் ஆச்சரியமில்லை. அது இயற்கையுமாகும்.
வெளிநாட்டில் இந்தியர் எல்லோரும், அவர்கள் சிறு
தொகையினரேயாயினும், அவர்கள் எல்லோரும் ஒரே
மாதிரியில் கேவலமாக நடத்தப்படுகின்றனர். அந்த சர்க்
காரும் சுதேசிகளும் நம் மக்கள்மீது ஒரே விதமாக அடக்கு
முறையை உபயோகிக்கின்றனர். மகாத்மா காந்தி தென்
னாப்பிரிக்காவில் ஒரு உண்மையைத் தெரிந்து கொண்டார்.
தென்னாப்பிரிக்கா இந்தியரிடையே ஏற்பட்டதைப்
போன்ற ஒரு ஒற்றுமை இந்தியாவில் மக்களிடையே உண்
டாகாவிட்டால், பல மதங்களைப் பின்பற்றி, பல பாஷை
களைப் பேசி, பல பழக்க வழக்கங்களையும் அனுசரித்து
வரும் இவர்கள் காரியத்தில் ஒன்றுபட்டு நின்றாலன்றி,

அன்னிய சர்க்காருக்கு எதிராக சரியான போராட்டத்தை நடத்துவதோ, கொஞ்ச காலமாவது ஒருவருக்கொருவர் அமைதியாக வாழ்வதென்பதோ முடியாது என்பதை மகாத்மா உணர்ந்தார். ஆகவே ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை, அதாவது எம்மதத்தினராயினும் இந்திய மக்கள் யாவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதை, தமது முக்கியமான, அவசியமான லட்சியமாக மகாத்மா கொண்டிருந்தார்.

முன்னாலேயே கூறப்பட்டிருப்பதைப்போல, இந்நாட்டில் தமது வாழ்க்கை முழுவதிலும் மகாத்மா காந்தி இந்தக் கொள்கையின் பேரிலேயே நடந்தும் வந்தார். முஸ்லிம்களுக்கு உதவி செய்வதற்காக கிலாபத் கிளர்ச்சியில் முழுமூச்சுடன் இறங்கினார். ஆரம்பத்திலும் முஸ்லிம்கள் ராஜீய இயக்கத்தில் சரியானபடி ஈடுபட்டிருந்தனர், ஆனால் துரதிருஷ்டவசமாக பிறகு வித்தியாசங்கள் தோன்றி பல இடங்களிலும் கலகங்கள் நடந்ததோடு நன்றாக இருந்துவந்த ஒற்றுமையும் நாளாவட்டத்தில் பலவீனமடைந்தது. இந்த ஒற்றுமையை பலப்படுத்த மகாத்மா காந்தி 1924-ல் இருபத்தோரு நாட்கள் உண்ணாவிரத மிருந்தார். நிலைமையில் சிறிது அபிவிருத்தி யிருந்தது. ஆனால் அந்த அபிவிருத்தி வெறும் தோற்றமே என்றாகி விட்டது. இரு சமூகங்களுக்குமிடையே உறவு நிலை மோசமாகி விட்டது. தேசத்தில் பொதுவாக ஏற்பட்ட அரசியல் விழிப்பு முஸ்லிம்களிடமும் இருந்தது. ராஜீய உணர்வு வளரவே அவர்களுடைய கோரிக்கைகளும் அதற்கேற்ற படி அதிகமாயின. இதில் பிரிட்டிஷ் சர்க்காரும் அவர்களை ஊக்கப்படுத்தினர். இதன் விளைவாக வட்டமேஜை மகாநாடு வெற்றிகரமாக முடியாது போயிற்று. மகாத்மா காந்தி லண்டனிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியதுமே கைதும் செய்யப்பட்டார். மகாத்மா போராட்டத்தை விரும்பவில்லை. என்றாலும் சர்க்காரின் செய்கைகள் போராட்டத்தைக் கட்டாயப்படுத்திவிட்டன. மகாத்மாவுக்கு வேறு வழியில்லாது போயிற்று. முஸ்லிம்களிலும் பலர் இப்போராட்டத்தில் கலந்துகொண்டனர். இவர்கள் தொகை சிறியதே. எனினும் இவர்கள் பகிரங்கமாகவே கலந்து கொண்டனர். வடமேற்கு மாகாணம் முழுவதும்

இப்போராட்டத்தில் முன்னணியில் நின்றது. எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்ற முஸ்லிம் ஸ்தாபனமான உலேமத்-உல்-உலேமா, மத காரியங்களில் தன்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தபோதிலும், இப் போராட்டம் முழுதும் காங்கிரஸை ஆதரித்து வந்தது.

புதிய அரசியலின்படி முதல் தடவையாக 1937-ல் தேர்தல்கள் நடந்தவரையில், முஸ்லிம் லீகுக்கு நாட்டில் அதிக ஆதரவு கிடையாது. 1929க்குப் பிறகே இந்த ஸ்தாபனம் ஆரம்பமாயிற்று. அச் சமயமிருந்த ஸ்தாபனங்கள் பல அதில் கலந்து கொண்டன. அதில் கலவாமலிருந்தவை மறைந்தன. பிறகு இவைகளில் முஸ்லிம் லீகும், கிலாபத் கமிட்டியும், அவையவைகளினால் பலனிருந்தாலும், முஸ்லிம்களுக்கு தலைமை தாங்கினாலும், இரண்டாந் தர நிலையிலேயே இருந்தன. இதனாலேயே 1937-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் முஸ்லிம் லீக் மிகச் சொற்ப ஸ்தானங்களிலேயே வெற்றி பெற்றது. பல தொகுதிகளுக்கு அது அபேட்சகர்களைக்கூட நிறுத்தவில்லை. அந்த அரசியலின்படி மந்திரி சபைகள் அமைந்தபோது, முஸ்லிம் லீக் அவைகளில் எந்த விசேஷ ஸ்தானத்தையும் வகிக்கவில்லை. முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டு, சட்டசபைகளிலும் பெரும்பான்மை முஸ்லிம்களைக் கொண்ட வங்காளத்திலும் பஞ்சாபிலும், முஸ்லிம் லீகின் பேரால் சட்டசபைக்கு வெற்றிபெற்றிருந்த உறுப்பினர்கள் மிகச் சிலராகையால், முஸ்லிம் லீக் தன்னளவில் அங்கே மந்திரி சபைகளை அமைக்க முடியவில்லை. அந்த முஸ்லிம் சட்டசபை உறுப்பினர்களில் பெரும்பாலோர், சுயேச்சையாகவும் பிற ஸ்தாபனங்களின் பேராலும் நின்று வெற்றி பெற்றவர்கள். பஞ்சாபில், ஹிந்து, முஸ்லிம் ஜமீன்தார்களைக் கொண்ட யூனியனிஸ்டு கட்சி அமைக்கப்பட்டது. அது தேர்தலில் காங்கிரஸையும் மற்றக் கட்சிகளையும் எதிர்த்தது. வங்காளத்தில் தேர்தலில் வெற்றிபெற்ற பெரும்பாலான முஸ்லிம் உறுப்பினர்கள், கிருஷிக பிரஜா கட்சியைச் சேர்ந்தவர்கள். இவ்விதம் முஸ்லிம் லீகுக்கு எந்த மாகாணத்திலும் அப்பொழுது மெஜாரிடி பலம் கிடையாது. வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலோ, முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த

ஒரே கட்சியோ காங்கிரஸ் கட்சி. ஆகவே மந்திரி சபைகளை ஏற்றுக்கொள்ளுவது என்று காங்கிரஸ் முடிவு செய்ததும், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டது. அங்கு டாக்டர் கான் சாஹிப் முதன் மந்திரி யானுர்.

இவ்விதம் அந்தத் தேர்தல் வரையில் முஸ்லிம் லீகுக்கு நாட்டில் செல்வாக்கு எதுவும் தென்படவில்லை. ஆனல் காங்கிரஸ் பதவியை ஏற்றுக்கொண்டதும், முஸ்லிம் லீக் ஹிந்துக்களுக்கு எதிரான பிரசாரத்தில் தீவிரமாக இறங்கியது. அதையே தன்னுடைய முக்கியமான வேலைத் திட்டமாகவும் அது கொண்டது. ஹிந்துக்கள் மீது முஸ்லிம்களுக்கு துவேஷத்தை வளர்க்கும் வழியில் பல விதப் பொய்களையும் பரப்புவது என்பதும் அதன் வேலை முறையாயிற்று. 1935ம் ஆண்டு அரசியலில், இந்தியா முழுதும் ஒரே பெடரேஷனுவது என்பதுமிருந்ததால், இந்த அரசியலை ஸ்ரீ. ஜின்னு எதிர்த்தார். இந்நாட்டில் முஸ்லிம்கள் சிறுபான்மையோரானதால், மத்திய சட்டசபையில் முஸ்லிம்கள் என்ற முறையில் அவர்கள் பெரும்பான்மை பலத்தைப் பெற முடியாது. ஆகையால் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கும் இடங்களிலாவது முஸ்லிம்கள் தங்கள் மந்திரி சபைகளை அமைத்துக்கொண்டு, இஸ்லாமின் போதனைகளை அனுசரித்து ஆட்சியை நடத்தி வருவதற்கு வசதி இருப்பதற்காக, மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்கவேண்டும் என்று அவர் கூறினர். 1935ம் ஆண்டு அரசியலை காங்கிரஸும் எதிர்த்தது. ஆனல் இதற்குக் காரணம் வேறுனது. ஆட்சி அதிகாரத்தை இந்தியருக்கு மாற்றிவிடவேண்டும் என்று காங்கிரஸ் வற்புறுத்திவரும் போது, பிரிட்டிஷ் சர்க்காரோ அந்த அதிகாரத்தை மறைமுகமான வழியில் தன் கையில் வைத்திருக்கிறது என்பது, அரசியலை காங்கிரஸ் எதிர்த்ததற்குக் காரணம். அதிகாரம் யார் கையிலிருப்பது என்பதைப்பற்றி முஸ்லிம் லீக் கவலைப்படவில்லை என்பது இதிலிருந்து தெளிவாயிற்று. ஆனல் அதிகாரம் வரும்போது அந்த அதிகாரத்தை, முஸ்லிம்களைவிட ஹிந்துக்கள் மும்மடங்கு அதிகமாக இருந்தபோதிலும், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சமமான பங்கு அதில் இருக்கவேண்டும்

என்பதிலேயே முஸ்லிம் லீக் சிரத்தை கொண்டது. எனவே அதன் சண்டையெல்லாம் காங்கிரஸோடேயே யல்லாமல் பிரிட்டிஷ் சர்க்காரோடல்ல. பிரிட்டிஷ் கொள்கையும், முஸ்லிம் லிகை அதன் கோரிக்கை சம்பந்தமாக உற்சாகப்படுத்துவதாக இருந்தது. ஹிந்து—முஸ்லிம்களுக்குள் வேற்றுமை இருக்கிறது; ஆகையால் இவர்களுக்குள் ஒன்றுபட்டு ஒரு கோரிக்கையை வெளியிட இவர்களால் முடியவில்லை என்று சொல்லி அதிகாரத்தைத் தனது கையில் வைத்துக் கொண்டு விடுவதே பிரிட்டிஷ் கொள்கை. காங்கிரஸ் மந்திரிசபைகள் சாத்தியமான வரையில் நீதியின் அடிப்படையின் பேரிலேயே நடந்துகொண்டன. முஸ்லிம்களை அவை அடக்கின என்றோ, அநீதியாக நடந்துகொண்டன என்றோ மந்திரி சபைகள் மீது குற்றஞ் சொல்ல முடியாது. என்றாலும் காங்கிரஸ் மந்திரி சபைகள் மீது முஸ்லிம்களுக்கு துவேஷத்தை மூட்ட முயற்சிகள் நடந்தன. காங்கிரஸ் மந்திரி சபைகள்மீது பல வகையான குற்றச்சாட்டுகள் முஸ்லிம் லீக் சார்பில் கூறப்பட்டன. முஸ்லிம் லீக் இரண்டு செய்திகளைப் பிரசுரித்தது. இதில் ஒன்று, பிர்பூர் ராஜா எழுதியது. எல்லா காங்கிரஸ் மந்திரி சபைகள் மீதும் அதில் பொதுப்படையாக அவர் குற்றஞ்சாட்டினார். மற்றொன்று, பாட்னா பாரிஸ்டரான ஸ்ரீ. ஷரீப் எழுதியது. அதில் அவர் முக்கியமாக பீகார் மந்திரி சபை மீது குற்றஞ் சாட்டினார். இக் குற்றச்சாட்டுகளெல்லாம் பொய்யானவை என்று மந்திரிசபைகள் எடுத்துக்காட்டின. என்றாலும் குற்றச் சாட்டுகள் விடாமல் கூறப்பட்டு வந்தன. முஸ்லிம் லீகின் சார்பில் ஒருதலைப்பட்சமான செய்திகளும் பிரசுரிக்கப்பட்டு வந்தன.

காங்கிரஸின் சார்பில் ஸ்ரீ. ஜின்னாவுக்கு ஒரு சவால் விடப்பட்டது. முஸ்லிம் லீகின் சார்பாகக் கூறப்படும் குற்றச் சாட்டுகளையெல்லாம் பற்றி, இந்தியாவின் பிரதம நீதிபதி ஸர் மாரிஸ் கயர் போன்ற ஒரு பாரபட்சமற்றவரைக்கொண்டு விசாரிக்கச் செய்வது என்றும், அவருடைய முடிவை ஏற்றுக்கொள்ள காங்கிரஸ் தயார் என்றும், லீக் இதற்கு சம்மதிக்கிறதா என்றும் காங்கிரஸ் சவால் விட்டது. ஆனால் ஸ்ரீ. ஜின்னா இதற்கு சம்மதிக்கவில்லை. என்றாலும் ஹிந்துக்கள் மீது புகார்கள் மாத்திரம்

விடாமல் கூறப்பட்டுவந்ததால் துவேஷம் வளர்ந்தது. 1940ல் லாகூரில் நடந்த அதன் வருட மகாநாட்டில் முஸ்லிம் லீக், இந்தியாவில் ஹிந்துக்கள் பெரும்பான்மையினராக இருக்கும் மாகாணங்களையும், முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கும் மாகாணங்களையும் தனித்தனியாகப் பிரித்துவிட வேண்டும் என்றும், அவை ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் தனி ராஜ்யங்களாக இருக்க வேண்டும் என்றும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. 1949ல் பாகிஸ்தானை ஏற்படுத்துவதே தன்னுடைய லட்சியம் என்று முஸ்லிம் லீக் பிரகடனம் செய்தது. முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கும் மாகாணங்களில் அதுவரையில் முஸ்லிம் லீகுக்கு எந்த ஆதரவுமில்லாதிருந்தபோது, முஸ்லிம்கள் சிறுபான்மையினராக இருந்த மாகாணங்களில் மாத்திரம் அதற்கு ஆதரவு இருந்து வந்தது ஆச்சரியமாகவே இருந்தது. கொஞ்சம் பகுத்தறிவு இருப்பவர்களுக்குக்கூட ஒரு சங்கதி நன்குக விளங்கும். இந்தியா பிரிக்கப்பட்டால், பாகிஸ்தானிலிருக்கும் முஸ்லிம்களுக்கு என்ன உரிமைகள் அல்லது வசதிகள் ஏற்படுவதாயிருந்தாலும், அதே மாதிரியான வசதிகளும் உரிமைகளும் பாகிஸ்தானல்லாத மற்ற பகுதிகளிலிருக்கும் முஸ்லிம்களுக்கு அதிகமாகக் குறைந்துவிடும். அவர்கள் அதில் மைனாரிடிகளாக இருப்பதோடு மிகச் சிறிய மைனாரிடிகளாகவுமிருப்பார்கள். பாகிஸ்தானில் மொத்தம் எவ்வளவு முஸ்லிம்களிருப்பார்களோ அதே தொகை முஸ்லிம்கள் பாகிஸ்தானல்லாத பகுதியிலுமிருப்பர். இதிலிருந்து ஒன்று தெளிவாயிற்று. பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு மீதமிருக்கும் இந்தியப் பகுதிகளில், உடனேயோ அல்லது கொஞ்சம் நாள் கழித்தோ, தங்கள் ஆட்சி ஏற்பட்டுவிடும் என்று இந்தச் சிறுபான்மை மாகாண முஸ்லிம்கள் நினைத்திருக்க வேண்டும். இல்லையானல், இந்தியா பிரிவினையாகிவிடும் என்பதில் அவ்வளவு நம்பிக்கை இல்லாமல், முஸ்லிம்களுக்கு சில அதிக சலுகைகளைப் பெறலாம் என்பதற்காக மாத்திரமே பாகிஸ்தான் கோரிக்கையை இவர்கள் ஆதரித்திருக்கவேண்டும். அநேக முஸ்லிம்கள், தங்களுடைய பேச்சின் மூலமும், எழுத்தின் வாயிலாகவும், இந்தியா முழுவதிலும் முஸ்லிம்களின் ஆதிக்கத்தை ஏற்படுத்திவிடுவது

என்பதே தங்களுடைய ஆசை என்பதை பகிரங்கமாகக் காட்டி விட்டனர். எனவே முஸ்லிம்கள் தங்கள் மீது முஸ்லிம் ஆட்சியைக் கொண்டுவந்துவிடப் பார்க்கிறார்கள் என்ற சந்தேகம் ஹிந்துக்களுக்கு உண்டாயிற்று.

இரண்டாவது உலக யுத்தம் பிரகடனமான பிறகு, 1939 செப்டம்பரிலோ அல்லது அக்டோபரிலோ, இந்தியர் கைக்கு ஆட்சி அதிகாரத்தை மாற்றிவிடத் தயாரா யில்லாத பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒரு சமரச முடிவுக்கு வந்துவிட காங்கிரஸ் சார்பில் முயற்சிகள் நடந்தன. ஆட்சி அதிகாரத்தை மாற்றும்படிக் கோரும் இதில் காங் கிரஸுடன் கலந்துகொள்ள ஸ்ரீ. ஜின்னா மறுத்துவிட்டார். முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதி தாமே என்று அவர் சொல்லிக் கொண்டார். காங்கிரஸ் தன்னை ஹிந்துக்களின் பிரதிநிதியாக மதித்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார். அந்த முறையில் வேண்டுமானால் காங்கிரஸ் தம்முடன் பேச வரட்டும் என்றார். காங்கிரஸ் ஆரம்பத்திலிருந்தே இத்தகைய வகுப்பு வாதத்திலிருந்து முற்றிலும் ஒதுங்கியிருந்திருக்கிறது. காங்கிரஸின் சரித் திரம் முழுவதும், அது எதற்காகப் பாடுபட்டு இதுவரை அது எவற்றை அடைந்திருக்கிறதோ அவைகளும், இந்த உண்மையை நன்கு காட்டும். முஸ்லிம்கள் காங்கிரஸுடன் வைத்திருந்த தொடர்பு சில சமயங்களில் அதிகமாகவும் சில சமயங்களில் குறைவாகவும் இருந்துவந்த போதிலும், முஸ்லிம்களும் மற்ற மதத்தினரும் காங்கிரஸில் இருந்து வந்திருக்கிறார்கள். காங்கிரஸ், அதனுடைய சரித்திரத்தில் எக்காலத்திலுமே முஸ்லிம்களையும் அதன் உறுப்பின ராகக் கொண்டே வந்திருக்கிறது. உண்மையில் கிலாபத் கிளர்ச்சிக் காலத்தில் முஸ்லிம்கள் அனைவரையுமே நடத்திச் சென்றது காங்கிரஸேயாகும். என்றாலும் காங்கிரஸை வகுப்பு ஸ்தாபனம் என்று கூறுவதில் ஸ்ரீ. ஜின்னா பிடி வாதம் கொண்டார். எனினும் ஏதாவது ஒரு சமரசத்திற்கு வரவேண்டும் என்ற ஆர்வத்தில் ஸ்ரீ. ஜின்னாவுடன் பேச்சு நடத்த மகாத்மா காந்தி பன்முறை முயற்சி செய்தார். ஆனால் அவருடைய கோரிக்கைகளை யெல்லாம் ஏற்றுக் கொள்ள ஸ்ரீ. ஜின்னா மறுத்து விட்டார்.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தனித்தனி தேசீய இனங்கள், எனவே இவர்களிருவரும் சேர்ந்திருப்பதென் பதே முடியாத காரியம் என்பது ஸ்ரீ. ஜின்னாவின் தத்துவம். ஆகவே ஹிந்துக்களை ஹிந்துக்கள் ஆளவேண்டும். பாகிஸ் தானை முஸ்லிம்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்றார். இருவருக்குமே பொதுவானதான ஒரு கலாச்சாரத்தை இந் நாட்டில் உருவாக்கி, ஒருவர் வாழ்க்கை முறையில், அவர்கள் பாஷையில், உடையில் சிறந்ததாக இருப்பதை ஒருவருக்கொருவர் ஏற்றுக்கொண்டு, முற்றிலும் ஹிந்து, முற்றிலும் முஸ்லிம் என்றில்லாத ஒரு தேசீய இனத்தை அமைத்து, இரு மதத்தினரும் தங்கள் தங்களுடைய மதக் கோட்பாடுகளை சுயேச்சையாக அனுசரித்து, இருதரப் பாரும் நல்லெண்ணத்தோடும் நட்புடனும் வாழவேண்டும் என்பதற்காகவே ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். இதை இந்தியாவின் ஆயிரம் ஆண்டு சரித்திரம் காட்டுகிறது. ஆகையால் மகாத்மா காந்தியோ அல்லது காங்கிரஸோ, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தனித் தனி தேசீய இனங்கள் என்ற தத்துவத்தை என்றுமே ஒப்புக் கொண்டது கிடையாது. எனவே ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தனித்தனி தேசீய இனங்கள் என்ற அடிப் படையில் தேசத்தைப் பிரிப்பது சரியல்லவென்றும், இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கருதப்பட்டது. சுயாட்சியுள்ள மாகாணங்களை ஏற்படுத்துவதற்கும், இதை உறுதியாக்குவதற்கும் வேண்டிய வாக்குறுதிகளை அளிக்க வும் மகாத்மா காந்தி தயாராயிருந்தாலும், நாட்டைப் பிரித்து இரண்டு தேசங்களாக்குவது என்பதற்கு அவர் தயாராயில்லை. சுயாட்சியுள்ள மாகாணங்களை ஏற்படுத்தி யிருந்தால் மத்திய சர்க்காரின் கீழ் நாடு ஒன்றாக இருக்கும். ஆனால் ஸ்ரீ. ஜின்னா இதை ஒப்புக்கொள்ள மறுத்து விட்டார். பிரிட்டிஷ் சர்க்கார் ஸ்ரீ. ஜின்னாவை உற்சாகப் படுத்திய போதிலும், நாட்டை இரண்டாகப் பிரிப்பது என்பது பிரிட்டிஷ் சர்க்காருக்கும் பிடிக்காமலிருந்திருக்கக் கூடும். இதனால் ஸ்ரீ. ஜின்னா தமது கோரிக்கையில் விடாப் பிடியான பிடிவாதம் கொண்டார். மகாத்மா காந்தியோ இதை முற்றிலும் எதிர்த்தார். இதனாலேயே அவரை முஸ்லிம் லீக் தன்னுடைய முக்கியமான எதிரியாகக்

கருதியது. தன்னுடைய லட்சியத்தை அடைவதற்கு மகாத்மா காந்தியே பெரிய முட்டுக் கட்டையாக இருக்கிறார் என்றும் விக்பகிரங்கமாகக் கூறிற்று.

1935-ம் ஆண்டு அரசியலின் பெடரல் பகுதியையும் அமுலுக்குக் கொண்டு வருவது சம்பந்தமாக, பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களையும் சுதேச மன்னர்களின் ஆட்சியிலிருந்த சமஸ்தானங்களையும் ஒரு பெடரல் சர்க்காரின் கீழ் கொண்டு வருவதற்காக, சமஸ்தான மன்னர்கள் என்ன நிபந்தனைகளின் பேரில் இதில் சேரத் தயாராயிருக்கிறார்கள் என்பதைக் குறித்து அவர்களுடன் பேச்சு நடத்திக் கொண்டிருந்த பிரிட்டிஷ் சர்க்கார், யுத்தம் ஆரம்பமானதுமே திடீரென்று தன்னுடைய போக்கை மாற்றிக் கொண்டுவிட்டது. ஸ்ரீ. ஜின்னாவின் முஸ்லிம் லீகின் கோரிக்கையை அது ஏற்றுக்கொண்டது. பெடரேஷனை அமைப்பது சம்பந்தமான அரசியல் பகுதி அமுலுக்குக் கொண்டுவரப்பட மாட்டாது என்று அறிவித்துவிட்டது; அது நிறுத்தி வைக்கப்பட்டது. ஸ்ரீ. ஜின்னாவின் எதிர்ப்பு, அரசியலின் இப்பகுதியின் பேரிலேயே முதலில் ஆரம்பமாயிற்று. எனவே ஸ்ரீ. ஜின்னாவின் விருப்பம் நிறைவேறிவிட்டது. உண்மையான ஆட்சி அதிகார மாற்றம் இருந்தாலன்றி, யுத்த முயற்சிக்கு உதவும் பொறுப்பை மேற்கொள்ளுவதற்கு காங்கிரஸ் தயாராயில்லை. இதனால் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒரு சமரச முடிவுக்கு வர அதனால் முடியவில்லை. 1942-ல் பிரிட்டிஷ் தூதுகோஷ்டியின் மூலம் சமரசத்தை உண்டாக்க கடைசி நேர முயற்சி செய்யப்பட்ட போதிலும் இதுவும் வெற்றியடையவில்லை. கிரிப்ஸ் தூது தோல்வியடைந்ததற்கு ஒரு முக்கியமான காரணம் ஸ்ரீ. ஜின்னாவின் பிடிவாதமே. ஆகையால் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும் என்று கேட்பதைத் தவிர காங்கிரஸுக்கு வேறு வழியில்லாத நிலைமை உண்டாயிற்று.

இந்த முடிவுக்கு காங்கிரஸ் சுலபமாகவோ அன்றி அவசரப்பட்டோ வந்துவிடவில்லை. இது சம்பந்தமாக காங்கிரஸுக்குள்ளேயே தகராறு இருந்ததோடு அபிப்பிராய பேதங்களுமிருந்தன. பிரிட்டிஷ் சர்க்காரோடு

இச்சமயம் ஒத்துழைத்து, தன்னுடைய கோரிக்கைகளையும் ஒத்திவைத்துக்கொள்ள வேண்டும் என்று சிலர் கருதினார்கள். சிலர் அவ்வளவு தூரம் போகத் தயாராயில்லாவிட்டாலும், சர்க்காருடன் எந்தத் தகராறையும் வைத்துக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. சர்க்காரோடு ஏதாவது ஒரு வகையில் சமரசத்திற்கு வரவேண்டும் என்றும் அவர்கள் சொன்னார்கள். ஆனால் சர்க்காரின் செய்கைகள் மகாத்மா காந்தியை ஒரு முடிவுக்கு வரும்படிச் செய்தன. பிரிட்டிஷ் சர்க்கார் தன்னிடமிருக்கும் ஆட்சி அதிகாரத்தை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. அதோடு முஸ்லிம் லீகின் பிடிவாதத்திற்கு இடைவிடாது ஆதரவளித்தும் வருகிறது; தன்னுடைய நன்மைக்கு அதை ஒரு ஆயுதமாகவும் உபயோகித்துக் கொண்டு வருகிறது என்ற முடிவிற்கே மகாத்மா வந்துவிட்டார்.

அது ஒருபுறமிருக்க, காங்கிரஸின் கொள்கையும் லட்சியமும் வேறு இதிலடங்கியிருக்கின்றன. யுத்தம் ஆரம்பமானபோது, இந்தியாவின் அனுதாபமெல்லாம் பிரிட்டன் பக்கத்திலேயே இருக்கிறது என்றும், பிரிட்டனுக்கு இந்தியா நிபந்தனையின்றி உதவி செய்யும் என்றும் லார்டு லின்லித்கோவிடம் மகாத்மா காந்தி சொன்னார். மகாத்மாவின் இந்த வாக்குறுதியினால் பொதுஜனங்களிடத்திலேயேயன்றி காங்கிரஸ்காரர்களிடத்திலும் வெறுப்பு உண்டாயிற்று. பிரிட்டனிடம் இந்தியா அனுதாபத்துடனிருக்கிறது என்பதொன்றே பிரிட்டனுக்கு இந்தியா செய்யக்கூடிய பெரிய உதவி என்று மகாத்மா கருதினார். இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருந்தாலும், இப்பொழுதும் பிரிட்டனுக்குத் தன்னுடைய மனமார்ந்த அனுதாபத்தை அளிக்கிறதென்றால், உலகத்தில் அதுவே அதிகமான ஆத்மீக பலனை உண்டாக்கும். யுத்தத்தில் ஆத்மீக ஆதரவே அதிகப் பலனை அளிக்கக்கூடியது என்று மகாத்மா கருதினார். ஆனால் அவருடைய கருத்தை இந்தியரில் அநேகர் சரியாக அறிந்து கொள்ளவில்லை. நிபந்தனையின்றி பிரிட்டனுக்கு உதவி செய்ய இந்தியா ஒப்புக்கொண்டுவிடக்கூடாது என்றும், இந்தியாவின் கோரிக்கைகளுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் உடன்பட்டால் மாத்திரமே, இந்தியா உதவிசெய்ய முடியும் என்றும் அவர்கள் சொன்

ணர்கள். ஆனால் தாம் கூறியது பிரிட்டிஷ் சர்க்காரின் கட்சியில் இந்தியாவுக்கு அனுதாபமிருக்கிறது என்பதற்கு மேல் வேறு எதுவுமில்லை என்று மகாத்மா விளக்கிச் சொன்னதும், அவர் சொன்ன சொல்லை மாற்றிக்கொண்டு விட்டார் என்று பிரிட்டிஷார் அவர்மீது குறை சொன்னார்கள். மகாத்மா காந்தி தம்முடைய பொது வாழ்க்கையில், அனாவசியமாக தவறான அபிப்பிராய பேதங்களுக்கு ஆளானது இது முதல் தடவையல்ல. காங்கிரஸ் அகிம்சையை தனது லட்சியமாகக் கொண்டிருக்கிறது. சத்தியமும் அகிம்சையுமே மகாத்மாவின் ஜீவனான கொள்கைகள். இந்தக் கொள்கையை யெல்லாம் மறந்து விட்டு, நாசத்தை யுண்டாக்கும் நவீன ஆயுதங்களெல்லாம் உபயோகிக்கப் படும் ஒரு யுத்தத்தில் பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஆயுதங்களை உதவிசெய்யவேண்டும் என்று மகாத்மா கூறியிருப்பார் என்று யார் எண்ண முடியும்? இதே சமயத்தில் இன்னு மொன்றையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். முதல் உலக யுத்தத்தில் படைக்கு ஆள் திரட்ட அவர் உதவிசெய்தபோது, அவருடைய செய்கையைக் குறித்துத் தவறான அபிப்பிராயங்கள் ஏற்பட்டதோடு மேனாடுகளி லிருக்கும் யுத்த எதிர்ப்பாளர்கள் அவரை அதிகக் கடுமையாகவும் கண்டித்தார்கள்.

ஆயினும் இவ் விஷயம் காங்கிரஸ் காரியக் கமிட்டி முன்பு வந்தபோது பலத்த விவாதத்திற்குப் பிறகு அது ஒரு தீர்மானத்தைச் செய்தது. இந்தியாவின் உண்மையான அனுதாபத்தையும் அதனுடைய ஆத்மீக ஆதரவையும் பிரிட்டிஷ் சர்க்கார் விரும்பினால் அது இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். முதலாவது, பூரண சுயேச்சைக் கோரிக்கையை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக் கொண்டு, அந்த சுதந்திரத்தை அளிப்பதாக சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் சொல்லிவிட வேண்டும். இரண்டாவதாக, இந்தியர் உண்மையிலேயே யுத்த முயற்சியில் உதவியாக இருக்கவேண்டியதை முன்னிட்டும், எதிர்காலம் சம்பந்தமாக சந்தேகம் ஏற்படாமலிருப்பதற்காகவும், இந்த இடைக்காலத்தில் சர்க்காரில் பொறுப்பான பதவிகளை யெல்லாம் இந்தியருக்குக் கொடுத்துவிடவேண்டும். ஜன நாயகத்தைப் பாதுகாப்பதற்காகவே யுத்தத்தில்

இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு உண்டாயிற்று என்றும், எனவே ஜனநாயக மக்கள் ஆதரவும் அனுதாபமும் தனக்கு இருக்கவேண்டும் என்றும் பிரிட்டிஷ் சர்க்கார் கூறிவந்தது. காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானம் இதைச் சுட்டிக் காட்டி, பிரிட்டிஷ் சர்க்கார் உண்மையிலேயே ஜனநாயகத்திற்கு ஆதரவானதாக இருக்குமாயின், எந்தவிதத் தயக்கமுமின்றி காங்கிரஸின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தன்னுடைய யோக்கியப் பொறுப்பை நிரூபிக்கவேண்டும் என்று கேட்டது. இந்திய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள பிரிட்டிஷ் சர்க்கார் மறுத்துவிடவே, சட்டசபைகளில் காங்கிரஸைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணங்களிலிருந்த காங்கிரஸ் மந்திரிசபைகள் ராஜிநாமாச் செய்ததால் அங்கு பிரிட்டிஷ் சர்க்கார் கவர்னர் ஆட்சிகளை அமுலுக்குக்கொண்டுவரவேண்டியதாயிற்று. அச்சமயத்தில் நடந்த விவாதத்தின் விவரங்களை இங்கு சொல்லிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. மகாத்மா காந்தியின் கருத்தை ஏற்றுக்கொள்ளுவது என்ற முடிவுக்கு நான் எப்படி வந்தேன் என்பதை மாத்திரம் சொன்னால் போதும்.

நான் மேலே சொன்ன இரு கோரிக்கைகளுடன் நிறைவேறிய காங்கிரஸ் கமிட்டித் தீர்மானம், யுத்தம் ஆரம்பமான காலத்தில் செய்யப்பட்டது. இதை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக்கொள்ளுமானால் காங்கிரஸ் ஆயுத உதவியைச் செய்யுமா என்பது இதில் தெளிவாக இல்லை. ஆனால் ஒன்று மாத்திரம் தெளிவானது. பிரிட்டிஷ் சர்க்கார் காங்கிரஸின் கோரிக்கையை ஒப்புக்கொண்டு விடுமானால், படைக்கு ஆள் திரட்டுவது, நிதி சேர்ப்பது உள்பட சர்க்காருக்குத் தேவையான உதவியைச் செய்ய காங்கிரஸ் கடமைப்பட்டிருக்கிறது. லார்டு லின்லித்கோ காங்கிரஸின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாததினால் இந்த நிலைமையைத் தெளிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பமே எழவில்லை. ஆனால் யுத்தம் பலமாகி, ஜெர்மனி ஒவ்வொரு நாடாகப் பிடித்துக்கொண்டே போனதோடு தனக்கு ஆதரவானதாக இல்லாத நாடுகள் ஜெர்மனியால் அக்கிரமாகப் படையெடுக்கப்படும் என்பதும் தெளிவாகிவிடவே, பிரிட்டன் மீது இந்தியாவின் அனுதாபம் வளர்ந்தது.

அச்சமயம் எங்களில் சிலர், காங்கிரஸின் கொள்கை அஹிம்சை என்பதைக்கூட மறந்துவிட்டோம். ஆனால் மகாத்மா காந்தியும் அப்படி எவ்விதம் செய்ய முடியும்? இது விஷயத்தை காங்கிரஸ் காரியக் கமிட்டி திரும்பவும் ஆலோசித்தபோது, மீண்டும் அபிப்பிராய பேதங்கள் காணப்பட்டன. நமது கொள்கைகளைக் கைவிட்டு விட்டு, நாசப்படுத்தும் ஆயுதங்களை பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கொடுத்து நாம் உதவக் கூடாது என்று மகாத்மா கருதினார். மற்றவர்களோ, வேறு விதமாகக் கருதினார்கள். இரண்டு அடிப்படையான விஷயங்களுக்காகவே அஹிம்சை காங்கிரஸின் கொள்கையாக இருக்கிறது என்றார்கள். ஒன்று, பிரிட்டிஷ் சர்க்காருடன் சுயராஜ்யத்திற்காக நாம் போராடும் போது பலாத்காரத்தில் இறங்கிவிடாமல் அஹிம்சையையே கடைப்பிடிக்க வேண்டும் என்பது. இரண்டாவது, இந்தியருக்குள் சச்சரவு ஏற்படும்போது, எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் பலாத்காரத்தில் இறங்கக் கூடாது என்பது. ஆனால் அஹிம்சைக்கு எத்தகைய எல்லைகளுமிருப்பதாக மகாத்மா காந்தி ஒப்புக்கொள்ளவில்லை. உண்மை என்ன என்றால், அஹிம்சைக்கு எல்லை விதிக்கப்பட்டுவிடுமானால், அஹிம்சையை மேற்கொள்ள முடியாது போவதோடு, மற்ற நாடுகள் மேற்கொள்ளும் பலாத்காரத்திற்கும் அஹிம்சைக்கும் அடிப்படையான மாறுதல் எதுவுமே இல்லாமலும் போய்விடும்.

உலகத்தில் எந்த நாடும் பலாத்காரத்தையே தனது லட்சியமாகக் கொண்டு நடப்பதில்லை; அதுதான் வேண்டும் என்றும் விரும்புவதில்லை. போரில் இறங்குகிறவர்கள் கூட, பலாத்காரமே நல்லது, அதுதான் சரி என்று சொல்லுவதும் கிடையாது. அஹிம்சை நல்லது என்றுதான் அவர்களும் கூறுகின்றனர். ஆனால் அதற்கு எல்லையை அவர்கள் அறிவார்கள். அஹிம்சை என்றைக்குமே சாத்தியமானதாகிவிடாது என்கிறார்கள். இதனாலேயே சில சமயங்களில் அதைக் கைவிட்டுவிட வேண்டியதாகிறது என்றும் கூறுகிறார்கள். ஆகையால் காங்கிரஸும் அஹிம்சையை இந்த எல்லை விதிப்புடன் ஒப்புக்கொண்டு விடுவதாயிருந்தால், சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல அதை அனுசரிப்பதாகிவிட்டால், கொள்கையில் இந்தியாவுக்கும் மற்ற நாடு

களுக்கும் பேதமே கிடையாது. ஏதாவது பேதமிருந்தால் அதை அனுசரிப்பதிலிருக்கும் விசேஷ நிலைமை ஒன்று மாத்திரமே அப்பேதமாக இருக்கக்கூடும். அகிம்சை ஒரு கொள்கை என்பதை விட்டுவிட்டு, அதை சௌகரியத்திற்குத் தகுந்தாற்போல் உபயோகித்துக் கொள்ளுவதாயின் இந்த அகிம்சையை எந்த சமயத்தில் உபயோகித்துக்கொள்ளுவது என்பதுபற்றி என்றுமே அபிப்பிராய பேதம் இருந்து கொண்டுதான் வரும். சில குறிப்பிட்ட சமயங்களில் மாத்திரமே அகிம்சையை உபயோகிக்கலாம் என்று சிலர் சொல்லுவார்கள். வேறு சிலரோ, அச் சந்தர்ப்பங்களில், இந்தச் சந்தர்ப்பத்திலேயே சில காங்கிரஸ்காரர்கள் வாதிக்க ஆரம்பித்துவிட்டதைப் போல, பலாத்காரமே தேவையாகையால் அதைத்தான் உபயோகிக்க வேண்டும் என்பார்கள்.

இதன் சம்பந்தமாக, சுயராஜ்யத்தை அடையும் விஷயத்தை, உதாரணமாக எடுத்துக் கொள்ளுவோம். நான் மேலே சொன்னதுபோல, இக் காரியத்திற்காக பலாத்காரத்தையே மேற்கொள்ளக் கூடாது என்பதை அநேகமாக எல்லா காங்கிரஸ்காரர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மற்றும் சிலர் வேறு விதமாகக் கருதுகிறார்கள். ஒரு நாட்டின் சுதந்திரத்தை இன்னுமொரு நாடு பறித்துக் கொண்டிருக்கும்போது, அந்த சுதந்திரத்தை மீட்பதற்காக, அடிமைப்பட்ட நாடு தனது போராட்டம் அகிம்சையில் தான் இருக்கவேண்டும் என்று கட்டுப்படுத்திக்கொள்ள என்ன ஒழுக்க அவசியமிருக்கிறது, இதற்கு இந்நாடு ஏன் பலாத்காரத்தையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்று இவர்கள் கேட்கிறார்கள். மற்ற ஜனநாயக நாடுகளை ஜெர்மனி வென்று தன்னுடைய ஆட்சியைக் கொண்டு வந்துவிடாமல் தடுப்பதற்காக, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக ஜெர்மனியுடன் தான் போராடி வருவதாக பிரிட்டன் சொல்லுவதால், அதற்கு ஆயுதங்களைக் கொடுத்து காங்கிரஸ் உதவலாம் என்றால், இந்நாட்டில் ஜனநாயக ஆட்சி ஏற்படுப்படிச் செய்வதற்கு பிரிட்டன் மீது இந்தியா ஏன் பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாது? காரியக் கமிட்டி மெம்பர்களிடையே இந்த அடிப்படையான அபிப்பிராயபேதமிருந்து வந்தது.

ஆனால் தன்னுடைய கோரிக்கைகளை பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுவதாயிருந்தால் பிரிட்டனுக்கு பகிரங்கமாகக் காங்கிரஸ் உதவி செய்யும் என்று காரியக் கமிட்டி முடிவு செய்ததும், மகாத்மா காந்திக்கு ஒரு சங்கடமான நிலைமை உண்டாயிற்று. சத்தியத்திற்குப் புறம்பான வழியில் சுயராஜ்யம் வந்தால், அத்தகைய சுயராஜ்யம் தமக்கு வேண்டாம் என்று மகாத்மா ஒரு சமயம் சொல்லியிருக்கிறார். அப்படியானால் பிரிட்டனுக்கு ஆயுத உதவியைச் செய்து அதன் மூலம் சுயராஜ்யத்தை அடைவது சரியா? விவாதங்கள் பல நாட்கள் நடந்துகொண்டு போயின. இதில் ஒன்றுக்கொன்று மாறுபட்டதான இரு வித அபிப்பிராயங்களிருந்தன என்பது தெளிவாயிற்று. ஒரு பக்கத்தில் மகாத்மாவின் கொள்கையான அஹிம்சை. மற்றோர் பக்கத்திலோ, சுயராஜ்யத்தை அடைந்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தில், பிரிட்டனை ஆதரித்து பலாத்கார உதவி செய்யவும் தயாராயிருப்பது என்பது. பல நாட்கள், முதலில் டில்லியிலும் பிறகு வார்தாவிலும், விவாதங்கள் நடந்தன. மகாத்மாவுக்கு இருந்ததைப்போல் சத்தியத்தில் அவ்வளவு திடம் எனக்குக் கிடையாது. தமது அபிப்பிராயத்திலிருந்து ஒரு சிறிதும் மாறுமல் குன்றுபோல நிற்பதில் மகாத்மாவுக்கு இருந்த உறுதியும் என்னிடமில்லை. என்றாலும் மகாத்மா காந்தியின் கொள்கைகளை நான் ஒப்புக்கொண்டேன்; இன்றும் அதில் நம்பிக்கையுடனிருக்கிறேன். காரியக் கமிட்டி இம் முடிவுக்கு வந்து விட்டபோது, அதிலிருந்து நான் ராஜிநாமாச் செய்துவிட வேண்டும் என்று நினைத்தேன். அப்படி நான் செய்யாவிட்டால், நான் குழப்பத்திலிருந்து கொண்டிருக்க நேரும். காங்கிரஸின் கோரிக்கைகளை பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக்கொண்டு விடுகிறது என்று வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது பலாத்காரத்தைக் கொண்டோ அல்லது அது இல்லாமலோ பிரிட்டிஷ் சர்க்காருக்கு சாத்தியமான சகல வழிகளிலும் நானும் மற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டி உருப்பினர்களும் உதவி செய்யவேண்டும். என் கோரிக்கைகளுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக்கொண்டுவிட்ட பிறகு, நான் அஹிம்சையில் நம்பிக்கையுள்ளவன் என்றும், பலாத்காரம் மிகுந்த

ஒரு யுத்தத்தில் பலாத்கார வழிகளில் நான் உதவி செய்ய முடியாது என்றும் நான் சொல்லி விடுவது சரியுமல்ல, சாத்தியமுமாகாது. இதனாலேயே, அந்த பலாத்கார யுத்தத்திற்கு நான் உதவி செய்ய முடியாதென்றால் காரியக் கமிட்டியிலிருந்து நான் போய்விட வேண்டும் என்று நினைத்தேன். அதன்படி என் ராஜீநாமாவையும் அனுப்பினேன். பிரிட்டிஷ் சர்க்காருக்கு உதவுவது என்பது பிரிட்டிஷ் சர்க்கார் நம் கோரிக்கைக்கு உடன்பட்ட பிறகே வருவதால், இப்பொழுது அந்த உதவிப் பிரச்னையே எழவில்லை என்று எனக்குக் கூறினார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக்கொள்ளும் என்பதற்கான அறிகுறியும் அப்பொழுது இல்லை. எனவே இந்த நேரத்தில் இதற்காக என் ராஜிநாமாவை நான் வற்புறுத்தி, காங்கிரஸை பலவீனப்படுத்துவதோடு நமக்குள் அபிப்பிராயபேதமிருக்கிறதென்பதை விளம்பரப்படுத்துவதும் சரியல்ல என்றார்கள். இதை முன்னிட்டு என் ராஜிநாமாவை வாபஸ் வாங்கிக் கொண்டேன். என்னுடைய அபிப்பிராயத்தையே கொண்டிருந்த கான் அப்துல் கபார்கானோ, விட்டுக்கொடுக்காமல் ராஜிநாமாவை வாபஸ் வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார்.

காரியக் கமிட்டியின் தீர்மானம் அங்கீகாரத்திற்காக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முன்னால் வந்தபோது, அக் கூட்டத்திற்கு நான் போயிருந்த போதிலும் மகாத்மா காந்தி வரவில்லை. மகாத்மா காந்தியின் கருத்தை ஆதரிப்பவர்கள் பலர் அந்தக் கூட்டத்திலிருந்ததைப் பார்த்தேன். அவர்கள் சார்பாகவும், என் சார்பிலும் எங்கள் நிலைமையைக் கூட்டத்தில் விளக்கிக் கூறிவிட்டு தீர்மானம் வோட்டுக்கு வரும்போது நடுநிலைமை வகித்து விடுவது என்று முடிவு செய்தேன். ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் காங்கிரஸின் கோரிக்கைகளை நிராகரித்து, காங்கிரஸுக்கு இருந்த பிரச்னையை அந்த சர்க்காரே தீர்த்துவிட்டதால், எனக்கு இருந்ததைப் போன்ற குழப்பமான நிலைமையை தானும் சமாளித்துத் தீர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் காங்கிரஸுக்கும் உண்டாகவில்லை. பிறகு இதில் காங்கிரஸுக்குள் இருவித அபிப்பிராயங்கள் இருந்துவர சந்தர்ப்பமே எழவில்லை. முன்னாலிருந்த அபிப்பிராய பேதங்களும் மறைந்து போயின. ஒரு வகையில் காங்கிரஸி

விருந்து விலகியிருந்த மகாத்மா காந்தி, மீண்டும் அதற்குத் தலைமை தாங்கி தமது அபிப்பிராயத்திற்கு ஏற்ற வழிகளில் அதை நடத்தியும் சென்றார். காங்கிரஸிலிருந்து எங்கள் தொடர்பைத் துண்டித்துக்கொள்ளுவது என்று நினைக்கவும் இப்பொழுது இடமில்லை. ஆகையால் நாங்கள் அதிக திருப்தியடைந்தோம். அது வரையில் செய்துவந்ததைப் போல அதற்குள்ளிருந்தே தொடர்ந்து வேலை செய்து வந்தோம். அதிக சங்கடமான ஒரு நிலைமையிலிருந்து நாங்கள் வெளிவந்த சமயம் அது என்பதில் சந்தேகமே இல்லை.

அந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், சுயராஜ்யத்தைப் பெறுவதற்கும், இந்தியருக்குள்ளிருக்கும் தகராறுகளில் ஒரு சமரச முடிவுக்கு வருவதற்கும் அஹிம்சா முறையிலேயே நடந்துகொள்ளுவது என்பதில் காங்கிரஸ் மேலும் உறுதியுடனிருக்கிறது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

வெள்ளத்தைத் தடுப்பதற்குச் சிரமப்பட்டு ஒரு அணையைப் போட்டுவிட்டு, அந்த அணையில் ஒரு சிறிய ஓட்டையையும் உண்டாக்கிவிடுகிறோம். ஒரு சிறு ஓட்டையையே போட்டபோதிலும் அணை அப்படியே பத்திரமாக இருக்கவேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம் என்று சொல்லிக்கொள்ளுவதனால் மாத்திரம் அணையைப் பாதுகாத்துவிட முடியாது. அதேபோல் பலாத்கார வெள்ளத்திலிருந்து நாட்டைக் காப்பதற்காகப் போட்ட அஹிம்சை அணையில் ஒரு ஓட்டையைச் செய்துவிட்டதனால், பின்னால் நான் காட்டப்போகிற காரியங்களை, அந்த ஓட்டை உண்டாக்கிவிடத் தவறவில்லை. இதன் விளைவாக பலாத்காரம், அஹிம்சைக் கொள்கையில் இந்தியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் எந்தவித பேதமுமே இல்லாது போயிற்று.

இதனால் மற்ற தீய விளைவுகளும் மூண்டன. அதைப் பற்றியும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். மோசமான பாதையில் சிக்கிக்கொண்டுவிட்டோம்; அதிலிருந்து தப்பி வெளிப்படுவது கஷ்டமானதாகிவிட்டது. மகாத்மா காந்தி அந்த வெள்ளத்தை எதிர்க்க விரும்பினார். அதற்காக அவர் தமது உயிரையும் கொடுத்தார். அவருடைய

அகிம்சை அற்புதமான பலன்களை அளித்தன. ஆனால் இந்தியா அதை முற்றிலும் உணர்ந்து கொள்ளவில்லை.

காங்கிரஸ் கோரிக்கைகளை சர்க்கார் நிராகரித்து விட்டதும், காங்கிரஸ் தனிப்பட்டவர்கள் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தது. இதன் தலைமையை மகாத்மா காந்தி ஏற்றுக்கொண்டார். காங்கிரஸ் பிரிட்டிஷ் சர்க்காருக்கு அதன் யுத்த முயற்சியில் உதவி செய்ய முடியாது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டதால், அப்பொழுது காங்கிரஸ்காரர்களிடையே எந்தவித அபிப்பிராய பேதங்களும் கிடையாது. மகாத்மா காந்தியைப் போன்றவர்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்கு உதவிசெய்யத் தயாராயில்லை. ஏனெனில் அகிம்சையே இவர்களுடைய கொள்கையாகையால், இவர்கள் பலாத்காரத்துடன் எந்தவிதமான சம்பந்தமும் வைத்துக்கொள்ளுவதற்கில்லை. இதற்கு மாறான அபிப்பிராயங் கொண்டிருந்தவர்களோ, காங்கிரஸ் கோரிக்கைகள் விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் பிடிவாதமாக இருந்து விட்டதால் யுத்தத்தில் தாங்கள் பிரிட்டனுக்கு உதவி செய்ய முடியாது என்றார்கள். ஆகவே தனிப்பட்டவர்கள் சத்தியாக்கிரகம், பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒரு வகையான ஒத்துழையாமை. இயற்கையாகவே, யுத்த முயற்சிக்கு எதிரான பிரசாரம் எதையும் பிரிட்டிஷ் சர்க்கார் அனுமதிக்காது. இவ்விதம் சத்தியாக்கிரகம் ஆரம்பமாயிற்று. ஒருவர் தாம் கொள்ளும் அபிப்பிராயம், ஆட்சியாளரின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக தற்காலிகமாக அது இருந்தால், அந்த அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்ய தனிப்பட்டவர்களுக்கு இருக்கும் உரிமையை வற்புறுத்துவதே இந்த சத்தியாக்கிரகம்.

சத்தியாக்கிரகம் ஆரம்பமான போதிலும், எத்தகைய கலவரமும் நடந்துவிடமுடியாதபடிப் பார்த்துக்கொள்ளுவதோடு மக்கள் அகிம்சையை அனுசரித்து நடந்துகொள்ளும்படிச் செய்யவும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பட்டன. இது தனிப்பட்டோர் சத்தியாக்கிரகமாக இல்லாமல் மக்கள் சேர்ந்து செய்யும் சத்தியாக்கிரகமாகவும் இதைச் செய்ய முடியும். ஆனால் அது பலாத்காரத்தையும் உண்டாக்கிவிடக் கூடுமாகையால் அதை மகாத்மா விரும்ப

வில்லை. அதே சமயத்தில் இந்த சத்தியாக்கிரகத்தை நாடு முழுதும் ஆதரித்து நிற்கிறது என்பதையும் காட்ட வேண்டும். ஆனால் சில தனிப்பட்டவர்கள் சத்தியாக்கிரகம் செய்வதனால் இதைக் காட்டிவிட முடியாது. ஆகையால் தலைவர்கள், மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் ஆகிய சிலர் மாத்திரமே இந்த இயக்கத்தில் தீவிர பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மகாத்மா முடிவு செய்தார். இயக்கத்தில் சிலரே சம்பந்தப்பட்டிருந்தாலும், மக்களின் பிரதிநிதிகள் செய்யும் சத்தியாக்கிரகம் இது என்பதை இதன் மூலம் உலகம் அறிய முடியும். இவ்விதம் தனிப்பட்டவர்கள் சத்தியாக்கிரகத்தினால் இரு விதமான நன்மைகளுண்டாயின. அஹிம்சைக் கொள்கையில் மகாத்மாவைப் பின்பற்றும் சிலரே இந்த இயக்கத்தில் கலந்திருந்தாலும், இது மக்களின் ஒன்றுபட்ட நடவடிக்கை என்பதை இது காட்டியது. அதோடு இது பலாத்காரம் மூள்வதைத் தடுப்பதாகவும் இருந்தது.

உண்மைக் காரணம்

என் உடல் நிலை சரியாக இல்லாததினுலும், நான் சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்று மகாத்மா விரும்பாததினுலும், தனிப்பட்டவர்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் நான் சேரவில்லை. நான் சிறை சென்ருல் எனக்கு வைத்தியம் செய்யும் பொறுப்பை சர்க்காருக்கு உண்டாக்கியதாகும் என்று அவர் கருதினுர். நான் சத்தியாக்கிரகஞ் செய்தால் சர்க்காரை சங்கடமானதோர் நிலையில் வைத்து விட்டவனுவேன். ஒன்று, அவர்கள் என்னைக் கைது செய்து, என் தேக நிலையை கவனித்துக்கொள்ளும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்; இல்லையானுல், நான் சட்டத்தை மீறிய போதிலும், என்னைத் தொடாமல் சும்மா இருக்க வேண்டும். அது சரியல்ல. எனவே இயக்கத்தில் நான் சேரக்கூடாது என்பது மகாத்மாவின் கட்டளை. இதே போலவே, தேக சுக மின்மையாலும் மற்ற காரணங்களினுலும் சத்தியாக்கிரகத்தில் சேர முடியாமலிருந்த மற்றும் பலருக்கும் மகாத்மா இவ் விதம் அறிவித்து விட்டார். சத்தியாக்கிரகிகளைத் தேர்ந்தெடுப்பதில் அவர் அதிக கவனத்துடன் நடந்து கொண்டார். அவருடைய அனுமதியில்லாமல் யாரும் சத்தியாக்கிரகம் செய்யக்கூடாது. அமைதியாகவும் பலாத்காரமில்லாமலும் நடந்துகொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்துவதில் எவ்வளவு கவனத்துடனிருந்தாரோ அவ்வளவு கவனஞ் செலுத்தினுர் சத்தியாக்கிரகிகளைத் தேர்ந்தெடுப்பதிலும். ஏனெனில், தமது கோரிக்கையை நாடு முழுதும் ஆதரிக்கிறது என்பதை உலகத்திற்குக் காட்டுவதோடு, கஷ்டங்களுக்கு உடன்பட அவர்கள் தயாராக இருந்தபோதிலும், அதே சமயத்தில் எந்த விதத்திலும் சர்க்காருக்குச் சங்கடத்தை உண்டாக்கவும் அவர்கள் தயாராயில்லை என்பதையும் காட்ட விரும்பினுர்.

காங்கிரஸில் முக்கியமானவர்கள் எல்லோரும் சிறை சென்ருர்கள். காங்கிரஸ் காரியதரிசி ஆச்சாரியா

கிருபளானி சிறைக்கு வெளியிலிருந்தபோதிலும் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் காரியங்களை கவனிக்க வேண்டிய முழுப் பொறுப்பும் மகாத்மாவுக்கு உண்டாயிற்று. எங்கள் நேரத்தில் முழு பகுதியையும் சேவா கிராமத்தில், அல்லது வார்தாவில் செலவிடும்படி என்னையும் ஆச்சாரியா கிருபளானியையும் மகாத்மா கேட்டுக்கொண்டார். அந்த வருடத்தில் பெரும்பாலும் நான் அங்குதான் இருந்தேன்.

யுத்தம் நெருக்கடியான கட்டத்திற்கு வந்தது. எங்கும் ஜெர்மானியர் வெற்றி பெற்று வந்தார்கள். ஜப்பானும் யுத்தத்தில் இறங்கி விட்டது. சிங்கப்பூர், மலாயா, ஜாவா, பர்மாவின் ஒரு பகுதி ஆகியவைகளை யெல்லாம் ஜப்பானியர் பிடித்துக்கொண்டு விட்டனர். சீனாவின் பெரும் பகுதியையும் ஜப்பான் முன்னமே பிடித்துக்கொண்டு விட்டது. யுத்த அபாயம், இந்தியாவுக்கு வெகு சமீபத்தில், இந்தியாவுக்கே இருப்பதாகவே தோன்றியது. ஐரோப்பிய நாடுகள் எல்லாம், ஒன்று ஜெர்மனிக்கு அடிமைப் பட்டுக் கிடந்தன; அல்லது ஜெர்மன் செல்வாக்கிற்கு உடன்பட்டிருந்தன. பிரான்சு தோற்ற பிறகு இங்கிலாந்து தன்னந் தனிமையாகவே போராடி வந்தது. ஆனால் இரண்டு பெரிய வல்லரசுகள், ஐரோப்பாவில் ரஷ்யாவும், அமெரிக்காவும், பிரிட்டன் பக்கத்தில் யுத்தத்தில் இறங்கின. ஜெர்மனி தன்னுடைய முழு சக்தியையும் உபயோகித்து விடும்படி ரஷ்யா செய்தது. அமெரிக்காவிடம் யுத்த தளவாடங்கள் ஏராளமாக இருந்தன. அதன் தொழிற்சாலைகள் அதிக வேகமாக வேலை செய்து வந்ததால், நேச தேசங்களின் கடற்படை, விமானப்படை, ராணுவம் ஆகியவைகளுக்கு வேண்டியதை யெல்லாம் கொடுக்கும் சக்தி அமெரிக்காவுக்கே இருந்தது. ஐரோப்பாவில் ஜெர்மனியோடும், தூரக் கிழக்கிலும் போராடுவதற்கு, அமெரிக்கா தன்னுடைய படைகளையும் அனுப்பியது. இவைகளெல்லா மிருந்த போதிலும் 1941 முடிவு, 1942 ஆரம்ப காலம் வரையில், வெற்றி ஜெர்மானியருக்கும், ஜப்பானியருக்குமே என்று தான் தோன்றியது.

பிரான்ஸ் படையெடுக்கப் பட்டதும், நிலைமையின் அவசியத்தை முன்னிட்டு, இங்கிலாந்தும் பிரான்ஸும் ஒரே ராஜ்யமாகிவிடலாம் என்று பிரதம மந்திரி சர்ச்சில்

யோசனை கூறினர். பிரான்ஸ் அநேகமாக ஜெர்மனியரிடம் தோல்வியடைந்து, இந்த முக்கியமான பெரிய யோசனையைச் சிந்திப்பதற்குக் கூட அங்கு உருப்படியான சர்க்கார் ஒன்று இல்லாதுபோன சமயத்திலேயே, சர்ச்சிலின் இந்த யோசனை வெளி வந்தது. ஆசியாவிலும் நிலைமை மோசமாகிவிடவே, இந்தியாவைக் கலந்தாலோசிக்க வேண்டியதன் அவசியத்தை சர்ச்சில் சர்க்கார் உணர்ந்தது. அநேகமாக அமெரிக்கா இதை வற்புறுத்தியிருக்கலாம். அதன் பேரில் இந்தியத் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, தன்னுடைய முழு வசதிகளுடன் இந்தியா யுத்த முயற்சியில் பிரிட்டனுக்கு உதவி செய்யும்படித் தூண்டுவதற்கு ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடிக்க சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸை இந்தியாவுக்கு அனுப்பினர்கள். எதிரியுடன் போராட, முக்கியமாக அமெரிக்க உதவியைக் கொண்டு, இந்தியாவில் அவசர அவசரமாக ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டன. என்னதான் முன்னேற்பாடுகளைச் செய்தாலும், உள்நாட்டு மக்கள் ஒத்துழைக்காமல் அசிரத்தையாக இருந்துவிட்டால், வெளிநாட்டுப் படைகள் மாத்திரம் எதிரியுடன் பலமாகப் போராடி நிற்கமுடியாது. இதனாலேயே நிலைமையைக் கண்காணிப்பதற்காக சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். இவர் வெற்றிகரமான, சிறந்த புத்திசாலியான வக்கீல். தொழிற்கட்சியில் அவர் முக்கியமான ஸ்தானத்தை வகித்தார். ஆனல் தமது முற்போக்கின் காரணமாக அக்கட்சியுடன் ஒத்துக்கொள்ளாமல் விலகிவிட்டார். யுத்த ஆரம்பத்தில் தனிப்பட்ட முறையில் இந்தியாவுக்கு வந்துவிட்டுப் போனர். யுத்த சம்பந்தமாக தாம் மேற்கொள்ள வேண்டிய போக்கைக் குறித்து யோசிப்பதற்காக காங்கிரஸ் காரியக் கமிட்டி வார்தாவில் நடந்தபோது கிரிப்ஸ் அங்கு போய் தலைவர்களைச் சந்தித்தார். அப்பொழுது ஜெர்மனி, ரஷ்யாமீது படையெடுக்கவில்லை. உண்மையில் ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் ஒரு ஒப்பந்தமும் கையெழுத்தாகியிருந்தது. ஜெர்மனியின் சகாவாக ரஷ்யா இப்போரில் இறங்கிவிடாமலிருப்பது இங்கிலாந்தின் நன்மைக்கு அவசியமானதாகையால், அங்கு சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸை பிரிட்டிஷ் ஸ்தானிகராக

அனுப்பினார்கள். ரஷ்யாவில் அவர் மகத்தான காரியங் களைச் சாதித்தார். ஆனால் ரஷ்யாமீது ஜெர்மனி போர் தொடுத்ததும் அவர் வேலைமுடிந்துவிட்டது. இப்பொழுதோ அவரை இந்தியாவுக்கு அனுப்பினார்கள். இந்தியாவுக்குத் திருப்தியை அளிக்கும் வகையில் தாம் ஒரு சமரச முடிவு செய்ய முயற்சிப்பதாக இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முன்னால் அவர் சொன்னார்.

நான் முன்னடியே கூறியிருப்பதுபோல, யுத்தத்தில் ஆயுத உதவி செய்து தீவிரமாகப் பங்கெடுத்துக்கொள் ளுவதா என்பதில் காங்கிரஸுக்குள்ளேயே பலத்த அபிப் பிராய பேதங்களிருந்தன. எனினும் லார்டு லின்லித்கோ வுடன் நடந்த பேச்சுவார்த்தைகள் இந்த காரணத்தினால் முறிந்து விடவில்லை. உடனே அதிகாரத்தை இந்தியர் கைக்கு மாற்றவும், எதிர்கால அரசியல் ஆகியவைகளில் காங்கிரஸின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவும் பிரிட் டிஷ் சர்க்கார் மறுத்ததினாலேயே அப் பேச்சுகள் முறிந்தன. முதல் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமானால், இரண்டாவது கோரிக்கையை நிறைவேற்றி வைக்க யுத்தம் முடியும் வரையில் காங்கிரஸ் பொறுத்திருக்கும். ஆனால் இதை ஏற்றுக் கொள்ள லார்டு லின்லித்கோ தயாராயில் லாததினால் சமரச முடிவு ஏற்படவில்லை. மகாத்மா காந்தி அகிம்சைக் கொள்கையை வற்புறுத்தியதால் யுத்த முயற்சி யில் உதவுவதற்கு இந்தியா தயாராயில்லை என்றும், இதனாலேயே சமரசப் பேச்சுகள் முறிந்தன என்றும் பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டது. இந்தியாவில் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸின் முயற்சிகள் தோற்றபோதும் இதே கதையே திரும்பவும் கூறப்பட்டது.

சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வந்தபோது அதைத் தொடர்ந்து பலவகையான டமாரங்களும் முழங்கப் பட்டன. அந்த பிரிட்டிஷ் தூதுவர், காங்கிரஸ் தலைவர் கள், முஸ்லிம் லீக், மற்ற கட்சிகளின் தலைவர்கள் ஆகிய வர்களை யெல்லாம் சந்தித்துப் பேசினார். முன்னால் எடுத்துக் கூறப்பட்டிருப்பதுபோல, காங்கிரஸின் கோரிக்கையெல்லாம் இரண்டே. யுத்த முயற்சியில் உதவு வதற்காக பொது மக்களின் பிரதிநிதிகளை ஆட்சி அதிகா

ரத்தில் வைக்கவேண்டும். இரண்டாவது, அடுத்த அரசியலும் அதில் இந்தியரின் அந்தஸ்தும் தெளிவாகிவிடவேண்டும் என்பது. காங்கிரஸ், எந்த கட்சியின், அல்லது எந்த சமூகத்தின் சார்பிலும் இந்தக் கோரிக்கையை வெளியிடவில்லை. என்றுமே எந்த குறிப்பிட்ட ஒரு கோஷ்டி அல்லது சமூகத்தின் ஸ்தாபனமாக அது இருந்ததும் கிடையாது என்பதற்கு அதன் சரித்திரமே சரியான சாட்சியம். இத்தடவையும் எல்லோருடைய சார்பிலேயுமே அக் கோரிக்கைகளை அது வெளியிட்டது. ஆனால் முஸ்லிம் லீகோ, இந்நாட்டில் ஹிந்துக்கள் பெரும்பான்மையினராக இருந்தும், மத்திய சட்டசபையில் ஹிந்துக்களுக்குப் பெரும்பான்மை ஸ்தானங்களிருப்பதை அது விரும்பவில்லை. எனவே தலைமை சர்க்காரில் இந்தியருக்கு அதிகார மாற்றம் செய்வதை அது ஒப்புக்கொள்ளவில்லை. விவாதங்கள் பல நாட்கள் நடந்தன. முடிவாக சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ஒரு சமரச முடிவைச் சொன்னார். ராணுவம், யுத்தத்தை நடத்துவது ஆகிய இந்த இரண்டையும் தவிர மற்றெல்லாவற்றிலும் அதிகார மாற்றம் செய்வது என்றார் அவர். ஆனால் இதிலும் அவர் கூறியது தெளிவாக இல்லை. இவைகளிலும் கொஞ்சம் அதிகாரம் கொடுக்கப்பட்டாலும் அது ஒரு குறிப்பிட்ட அளவுக்கே இருக்கும் என்று தோன்றியது. இவைகளை நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்தபோது, கொடுப்பதாகக் கூறப்பட்ட அதிகாரங்களும் ஒன்றுமில்லை என்று தெரிந்தது. யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது, சர்க்காரின் பல இலாக்காக்களும் யுத்த முயற்சியை ஆதரித்து வந்தன. ஆகையால் யுத்த இலாகாவும் தங்களுக்கு தோன்றும் வகையிலெல்லாம் மற்ற இலாக்காக்களை உபயோகித்துக்கொண்டுவிட முடியுமாகையால், இந்த அரைகுறை அதிகார மாற்றமும் வெறும் மாயையே என்பது தெரிந்தது. ஆகையால் கிரிப்ஸ் யோசனையை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. காங்கிரஸின் இந்த முடிவு தெரிந்ததும் ஸ்ரீ ஜின்னா, அதை நிராகரிக்காமல் அதுவரையிலிருந்தபோதிலும், சரியானபடி எதையும் செய்துவிடக்கூடிய நிலைமை அவருச்கு இல்லாமலிருந்தும், முஸ்லிம் லீகின் சார்பாக அவரும் கிரிப்ஸ் யோசனைகளை நிராகரித்தார். ஸ்ரீ சர்ச்சிலோ, இந்த அரை

குறை அதிகார மாற்ற யோசனையையும் ஒப்புக்கொள்ள வில்லை. எனவே அவர் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸை திருப்பி அழைத்துக் கொண்டுவிட்டார்.

மகாத்மா காந்தி, இவைகளெல்லாம் எப்படி நடக்கப் போகின்றன என்பதை முன்கூட்டியே கண்டுகொண்டு விட்டதால், இந்த சமரசப் பேச்சுகளில் அவர் சிரத்தை யெடுத்துக் கொள்ளவேயில்லை. எனவே பல நாட்கள் டில்லியில் இருந்தபோதிலும் விவாதங்களிலும் கலந்துகொண் டார். சில தினங்களுக்குப் பிறகு கஸ்தூரிபாயின் உடல்நிலை காரணமாக அவர் சேவா கிராமத்திற்குப் போகவேண்டி யிருந்தது. நமது எதிரிகளோ, ஒரு சமரச முடிவு ஏற்பட் டிருந்தால் இங்கிலாந்துக்கு இந்தியா உதவிசெய்ய வேண்டி வந்திருக்கும் என்றும், யுத்த முயற்சிக்கு உதவுவது காங் கிரஸ் கொள்கைக்கும், அகிம்சைக்கும் விரோதமான நிலையிலேயே சமரசப் பேச்சு முறிந்துவிட்டது என்றும் சொன்னார்கள். நான் முன்னாடியே எடுத்துக் காட்டியது போல, இதற்காகப் பேச்சு முறிந்துபோகவே யில்லை நமது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமானால் யுத்த முயற்சியை காங்கிரஸ் மனதார ஆதரித்திருக்கும். இப் பேச்சு முறிந்ததற்கு உண்மையான காரணம், இந்தியரின் கைக்கு உண்மையான அதிகாரத்தை மாற்ற இங்கிலாந்து விரும்பாததுதான்.

வாழ்நாளில் கடைசிப் போர்

சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் திரும்பிப் போய்விட்ட பிறகு, தேசத்திற்கு நெருக்கடியான நிலைமை உண்டாயிற்று. ஜப்பான், பர்மாவில் வேகமாக வெற்றி பெற்று வந்தது. படைகளும் ஆயுதங்களும் வேகமாக வந்து கொண்டிருந்த போதிலும், அமெரிக்க உதவி போதிய அளவுக்கு இந்தியாவுக்குள் வந்து சேர்ந்து விடவில்லை. பர்மாவைப் பாதுகாப்பதற்கு வேண்டிய பலத்துடன் பிரிட்டன் இல்லை; இந்தியாவை அது பாதுகாப்பது என்பதோ இன்னும் அதிகக் கஷ்டமானது. தேசத்திற்கு இருந்த ஒரே சரியான பாதுகாப்பு, படையெடுப்போரை எதிர்த்து தேச மக்கள் ஒன்றுபட்டு நிற்பதுதான். நாம் நம் நாட்டைப் பாதுகாக்கப் போராடுகிறோம் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டு, இதற்காக எந்த தியாகத்தையும் செய்யவேண்டும் என்ற ஆவேசமும் அவர்களுக்கு உண்டானாலேயே அந்த உறுதி மக்களுக்கு ஏற்படும். படையெடுப்பை சமாளிக்கத் தன்னால் முடியவில்லை என்பதை பிரிட்டிஷ் சர்க்கார் காட்டிக்கொண்டு விட்டது. என்றாலும் அவசியமான தியாகங்களைச் செய்வதற்கு மக்கள் முன்வரும்படிச் செய்ய எந்த உணர்ச்சி மக்களிடம் ஏற்பட வேண்டுமோ அதைச் செய்ய பிரிட்டிஷ் சர்க்கார் விரும்பவில்லை. இந்த நிலைமையில் மகாத்மா காந்தி, தேசத்தைப் படையெடுப்பிலிருந்து நாமே பாதுகாத்துக்கொள்ளுவது எப்படி என்பதை, நாமே சுயேச்சையாக யோசித்து முடிவுக்கு வரவேண்டியது முக்கியம் என்ற முடிவுக்கு வந்தார். இதற்கும் இருக்கும் ஒரே வழியோ, அகிம்சை வழிதான். அகிம்சையில் நம்பிக்கையில்லாமல், பலாத்கார யுத்தத்தில் ஆயுதப் பாதுகாப்புச் செய்வதற்கு வேண்டிய உதவியை அளிப்பதற்குத் தயாராக இருந்தவர்கள்கூட, அந்த உதவியை ஏற்றுக் கொள்ள சர்க்கார் மறுத்துவிட்டதைக் கண்ட பிறகு, மகாத்மா காந்தியின் தலைமையிலேயே தாங்கள் ஏதாவது செய்ய முடியும் என்று ஒப்புக்கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

காலமோ அதிக சிக்கலானதாக இருந்தது. யுத்த முயற்சியில் குறுக்கிடுவதாகவோ அல்லது தடை செய்வதாகவோ காங்கிரஸ்காரரின் அல்லது மற்றொருவரின் செய்கை இருந்தால், அவர் ஒரு துரோகியாகக் கருதப்பட்டு விடுவார். யாராவது ஒருவர் சுயேச்சையான பாதுகாப்பு முறையைப் பற்றிச் சிந்தித்துவிடில், அவரும் ஒரு துரோகியாகவே கருதப்படுவார். ஏனெனில் இந்தியாவைப் பாதுகாப்பதற்கு வேண்டிய வசதியும் பலமும் தன்னிடம் இருந்தாலும் இல்லாது போனாலும், இந்தியாவின் பாதுகாப்புக்குத் தானே பொறுப்பாளி என்ற இடமான முடிவுக்கு பிரிட்டன் வந்துவிட்டது; இந்தப் பொறுப்பை வேறு யாருடனும் பகிர்ந்து கொள்ளவும் அது விரும்பவில்லை.

நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளுவதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும் என்று இடைவிடாது மகாத்மா காந்தி நாட்டை எச்சரிக்கை செய்து வந்தார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் அலகாபாத்தில் கூட்டப்பட்டது. அதிலும் காரியக் கமிட்டியிலும் இதைக் குறித்து நீண்ட நேர விவாதங்கள் நடந்தன. அக்கூட்டத்திற்கு மகாத்மா காந்தி போகவில்லை. அதில் நிறைவேற்ற வேண்டும் என்று அவர் விரும்பிய ஒரு தீர்மானத்தின் நகலை மாத்திரம் அனுப்பியிருந்தார். காரியக் கமிட்டி மெம்பர்களில் சிலருக்கு அந்தத் தீர்மானம் பிடிக்காததினுல், அத் தீர்மானம் ஏகமனதாக அக் கமிட்டியில் அங்கீகரிக்கப்படும்படியாகச் செய்வதற்காக, அவசியமானுல் அத் தீர்மானத்தின் சில பகுதிகளில் சில திருத்தங்களைச் செய்வது என்றும் நான் முயற்சி செய்து பார்த்தேன். எனினும் ஏகோபித்த அங்கீகாரம் கிடைக்கவில்லை. அதன்பேரில் காரியக் கமிட்டி முன்பு இரு தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. இதில் ஒன்று மகாத்மா காந்தியின் நகல் தீர்மானத்தில் சில திருத்தங்களைச் செய்து, முக்கிய விஷயங்களில் மாத்திரம் கருத்து மாறி விடாத வகையில் நான் ஒரு தீர்மானம் கொண்டுவந்தேன். காரியக் கமிட்டி மெம்பர்களில் பெரும்பாலானவர்கள், என்னுடைய நகல் தீர்மானத்தை ஆதரித்தார்கள். அதாவது, காங்கிரஸ் இரண்டாகப் பிளவுண்டது என்பது அதன் பொருள். மகாத்மா அக்

கூட்டத்திற்கு வராததினுல் அவரைக் கலந்தாலோசித்துக் கொள்ள முடியவில்லை. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டமோ அப்பொழுதே ஒரு நாளைக்குத் தள்ளிப் போடப் பட்டு விட்டது. காரியக் கமிட்டியிலிருந்து வரும் தீர்மானத்தை அங்கீகரிப்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ அவர்கள் தயாராகக் காத்துக்கொண்டிருந்தார்கள். நான் தயங்கினேன்; ஆனுல் நிலைமையைப்பற்றி தீர ஆலோசித்துவிட்டுப் பிறகு என் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டேன். காரியக் கமிட்டி முன்பு வந்திருக்கும் மற்ருேர் தீர்மானத்தையும் நான் எதிர்க்கமாட்டேன் என்றும், சும்மா இருந்துவிடப் போகிறேன் என்றும் காரியக் கமிட்டியிடம் சொன்னேன். மகாத்மா காந்தியின் நகல் தீர்மானத்தில் நான் செய்த திருத்தங்கள், அத்தீர் மானத்தின் அடிப்படை நோக்கத்தை எந்த விதத்திலும் மாற்றிவிடவில்லை யென்ருலும், என் திருத்தங்களை மகாத்மா ஒப்புக்கொள்ளுவாரா என்பதே எனக்குச் சந்தேக மாக இருந்தது. இப்பொழுது தீர்மானத்தையே நான் வாபஸ் வாங்கிக்கொண்டு விட்டதால் அதைப்பற்றி மகாத்மா என்ன சொல்லுவாரோ என்று எனக்கு பயமாயிருந்தது. காரியக் கமிட்டியில் நிறைவேறிய வகையில் அத் தீர் மானத்தை மகாத்மா விரும்பாவிட்டாலும் காரியங்களைச் செய்துகொண்டு போவதற்கு தமக்கு உதவி செய்வதாக அது இருக்கிறது என்று பிறகு மகாத்மா கூறிய பின்னரே எனக்கு மன ஆறுதல் உண்டாயிற்று. அந்தச் சங்கட மான சமயத்தில் காங்கிரஸுக்குள் பிளவு வேண்டாம் என்பதற்காக நான் செய்தது தவறு என்றும் அவர் சொல்லி விடவில்லை.

சர்க்காருடன் தகராறு தவிர்க்க முடியாதது என்பது அப்பொழுது நிச்சயமாகிவிட்டது. யுத்த காலத்தில், எந்தத் தீவிரமான எதிர்ப்பையும், அதிலும் யுத்த முயற்சிக்கு எதிராகச் செய்யப்படும் எதிர்ப்பை, ஒரு சர்க்கார் சகிப் பதே இல்லை. ஆனுல் மகாத்மா காந்தியின் யோசனை காங் கிரஸில் யாரும் ஒப்புக்கொள்ளக் கூடியதாக இருக்குமா என்பதும் அதுவரையில் தெளிவாகவில்லை. சர்க்காரை எதிர்க்கும் அதே சமயத்தில் படையெடுத்து வருகிறவர் களையும் எதிர்ப்பது என்பது மகாத்மாவின் வேலைத் திட்

டம். இந்தத் திட்டம், எந்த உருவத்தை அடைவதாயிருந்தாலும், மற்றவர்கள் நினைத்ததும் செய்ததும் எதுவாக இருப்பினும், என் மனதில் மாத்திரம் ஒன்றைத் திடப்படுத்திக் கொண்டுவிட்டேன். இந்தியாவுக்கு சுதந்திரத்தை அடைவது என்ற நோக்கத்தில் எந்த வித தங்குதடையுமின்றி மகாத்மாவின் கட்டளைக்கு நம்மை உட்படுத்திக் கொண்டு, பிரிட்டிஷாரையும் படையெடுப்பாளரையும் ஏககாலத்தில் எதிர்ப்பதென்ற அவருடைய திட்டத்தை நிறைவேற்றி வைக்கவேண்டியது என்பதுதான் நான் செய்துகொண்ட முடிவு.

வேலைத்திட்டம் இன்னும் தயாராகாவிட்டாலும், மக்களிடையே விழிப்பை உண்டாக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் என் சொந்த மாகாணமான பீகாரில் சுற்றுப் பிரயாணம் செய்தேன். வெகு வேகமாக மாகாணத்தின் பெரும் பகுதியைச் சுற்றிவிட்டதோடு மகாத்மாவின் கருத்தையும் மக்களுக்கு விளக்கினேன். வரப்போகும் தீவிரமான போராட்டத்திற்குத் தங்களை தயாரித்துக் கொள்ளும்படியும் மக்களுக்கு எச்சரிக்கை செய்தேன். இந்த சுற்றுப்பிரயாணத்தின்போது நான் பேசியதைப் போன்ற தீவிரமான, நீண்ட பிரசங்கங்களை, என் வாழ்க்கையில் அதற்கு முன்னால் நான் எப்பொழுதுமே செய்ததாக எனக்கு நினைவில்லை. அலகாபாத் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்குப் பிறகு நான் மகாத்மா காந்தியைச் சந்தித்தபோது அவர் எனக்கு அளித்த உணர்ச்சியின் பேரிலேயே நான் அந்தச் சுற்றுப் பிரயாணம் செய்தேன். சுற்றுப் பிரயாணத்திற்குப் பிறகு நான் மகாத்மாவை சந்தித்தபோது, தமது வாழ்நாளில் அதுவே கடைசிப் போராட்டமாக இருக்கப் போகிறது என்று பல வார்த்தைகளில் அவர் என்னிடம் கூறினார். அதற்கு முன்னால், நான் என்னுடைய பேச்சுக்கள் எதிலும், நாட்டுக்காக உயிரைவிடத் தயாராகும்படிப் பொதுமக்களுக்குச் சொன்னதே கிடையாது. அதற்கு வேண்டிய சமயம் இன்னும் வந்துவிடவில்லை என்றும், இப்பொழுது மக்கள் செய்ய வேண்டியதெல்லாம் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வோர் நிமிடத்தையும் தாய் நாட்டின் சேவைக்காகப் பயன்படுத்த வேண்டியதே என்றுமே சொல்லி வந்தேன். சத்தியாக்கிரக

இயக்க காலத்தில் தாய் நாட்டின் சேவைக்காக உயிரைத் தத்தம் செய்யவும் தயாராயிருக்கவேண்டும் என்றும் மற்றவர்கள் கூறுவதுண்டு. என்றாலும், நான் மாத்திரம் மேலே சொன்னபடிக் கூறுவதே போதும் என்று நினைத்து வந்தேன். ஆனால் அத்தடவை நான் பீகாரில் சுற்றுப் பிரயாணம் செய்தபோதோ, தேசத்திற்காக நாம் நம் உயிரையே தியாகஞ் செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்று பகிரங்கமாகச் சொன்னேன். ஏனெனில் இத்தடவை நாம் தவறிவிட்டால் இன்னும் எத்தனை காலத்திற்கு நாம் அடிமையாகக் கிடக்க நேரும் என்பது நமக்கே தெரியாது என்று நான் நம்பினேன்.

மக்களின் மகத்தான புரட்சி

கொஞ்ச காலத்திற்குப் பிறகு, 1942 ஆகஸ்டு 8-ந் தேதி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடியது. "இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற தீர்மானம் அதில் நிறைவேறியது. மக்களுக்கேயல்லாமல் சர்க்காருக்கும் காங்கிரஸ் விடுத்த சவால் அது. அக் கூட்டத்தில் மகாத்மா காந்தி, "செய்யுங்கள் அல்லது சாகுங்கள்" என்ற கோஷத்தோடு தமது மகத்தான பிரசங்கத்தை முடித்தார். ஆனால் மறுநாள் பொழுதுவிடிவதற்குள்ளேயே அவரும் மற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினரும் கைது செய்யப்பட்டு எங்கோ, யாருக்கும் தெரியாத இடத்திற்குக் கொண்டுபோகப்பட்டு விட்டனர். மகாத்மா காந்தி புனாவுக்கு அருகிலுள்ள ஆகாகான அரண்மனையில் வைக்கப்பட்டிருக்கிறார் என்பது பிறகு தெரிந்தது. அங்கு சுமார் இரண்டரை ஆண்டுகள் இருந்தார். மகாத்மா அங்கு சென்ற சில தினங்களுக்கெல்லாம் ஸ்ரீ மகாதேவ தேசாய் காலமானார். மகாத்மா விடுதலையாவதற்கு முன்னர் கஸ்தூரிபாயும் காலமாகி விட்டார். காரியக்கமிட்டி மெம்பர்கள் ஆமத் நகர் கோட்டையில் வைக்கப்பட்டிருந்தனர். எனக்கு உடல் சுகமில்லாததால், நாட்டின் தலை விதியை நிர்ணயிப்பதாயிருந்த அந்த முக்கியமான அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற்கு நான் போகவில்லை. எனவே மறுநாள் காலையில் என்னைக் கைதுசெய்து, அப்பொழுதும் நான் நோயுடனிருந்த போதிலும், என்னை பாட்னா சிறைக்குக் கொண்டுபோய் சிறை வைத்தார்கள். 1945 ஜுன் 15-ந்தேதி வரையில் நான் அங்கேயே இருந்தேன்.

"இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற தீர்மானம் நிறைவேறிய சமயத்தில், மகாத்மா எழுதிவந்த கட்டுரைகளினால் நாட்டில் விழிப்பு அதிகரித்திருந்ததோடு பீகாரில் நான் செய்த சுற்றுப்பிரயாணமும் அதற்கு அதிக உதவி செய்வதாக இருந்தது. என்றாலும் பின்னால் கூறப்பட்டதைப் போல, நாசவேலைக்கு வேண்டிய திட்டம் இது

சம்பந்தமாக மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது என்பதும், அந்த கட்டளைகளின்படியே மக்கள் ரயில்பாதைக்கு அடியிலிருக்கும் பிஷ் பிளேட்டுகளை அகற்றி, ரயில்வே ஸ்டேஷன்களில் வேலை நடக்கமுடியாதபடிச் செய்து, தந்தி, டெலிபோன் கம்பிகளை அறுத்து, ரேவுகளில் கட்டியிருந்த கப்பல்களை அவிழ்த்துவிட்டு, மரங்களை வெட்டிச் சாலைகளின் குறுக்கே போட்டு அவைகளில் போகமுடியாதபடி தடுத்தார்கள் என்பதெல்லாம் உண்மையல்ல.

1930-ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தின்போது, பல இடங்களுக்கும் சர்க்கார் சுலபமாகத் தொடர்பு வைத்துக் கொண்டு விடுவதைத் தடுப்பதற்காக தந்திக் கம்பிகளை அறுத்துவிடுவதா என்பது விவாதிக்கப்பட்டது. ஆனால் தந்திக் கம்பிகளை சேதப்படுத்த சத்தியாக்கிரகிகள் அனுமதிக்கப்படவில்லை. தந்திக் கம்பத்திற்கும் தந்திக் கம்பிக்கும் உயிரில்லையாகையால் தந்திக்கம்பியை அறுப்பதில் ஹிம்சை எதுவுமில்லை என்று சில காங்கிரஸ்காரர்கள் கருதினார்கள். இதைப்பற்றித் தீர சிந்தித்த பிறகு இந்த யோசனை நிராகரிக்கப்பட்டது. மகாத்மாவைக் கலந்து கொள்ளாமலேயே இம்முடிவு ஏற்பட்டது. 1942-ல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடுவதற்கு முன்னால் காரியக் கமிட்டிக் கூட்டம் வார்தாவில் நடந்தது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை பம்பாயில் கூட்டுவது என்று அங்குதான் முடிவாயிற்று. இக் காரியக் கமிட்டிக் கூட்டத்திற்குப் பிறகு சில நாட்கள் வார்தாவில் நான் தங்கினேன். அப்பொழுதுதான் யாரோ ஒருவர் மகாத்மாவிடம், தந்திக் கம்பிகளை அறுப்பது பலாத்காரமாகுமா என்று கேட்டார். கம்பியைப் போன்ற உயிரில்லாதவைகளை அறுப்பதில் ஹிம்சை, அஹிம்சை எதுவுமில்லை என்றும், ஒரு செய்கை ஹிம்சையா அல்லது அஹிம்சையா என்பது அதைச் செய்கிறவரின் நோக்கம், அக்காரியத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஆகியவைகளைப் பற்றிய மனோநிலையைப் பொறுத்திருக்கிறது என்றும் மகாத்மா பதில் சொன்னார். தந்திக் கம்பியை அறுப்பதில் ஹிம்சை அடங்கியிருக்கிறதா என்பதை இந்த விஷயங்களைக் கொண்டே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும் என்றார்.

நான் பாட்னுவுக்குத் திரும்பிய பிறகு, பம்பாய் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு முன்னால், பீகார் மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடந்தது. அதில் மேற்கண்ட விஷயத்தைப் பற்றி நான் சொன்னேன். இத்தகைய காரியங்கள் எத்தனையோ சங்கடங்களை உண்டாக்குவதோடு பொதுவாக அதன் விளைவு கெடுதலாகவும் இருந்துவிடக் கூடுமாகையால், இதுபோன்ற காரியங்களில் மகாத்மா காந்தியின் அனுமதியின்றி யாரும் எதுவும் செய்துவிடக் கூடாது என்றும் மாகாண காங்கிரஸ் கமிட்டியை எச்சரிக்கை செய்தேன். நான் பம்பாய்க்குப் புறப்படுவதற்கு நேரயிருந்தபோது, அங்கு நாங்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டுவிடக்கூடும் என்றும். இதனால் மக்களுக்கு எந்த வேலைத் திட்டத்தையும் வகுத்துக் கூறிவிட்டுப் போவதற்கு வேண்டிய அவகாசமில்லாது போய்விடக் கூடும் என்று எண்ணினேன். ஆகவே, நாங்கள் கைது செய்யப்பட்டு, போராட்டம் ஆரம்பமாகி, நடத்திச் செல்வதற்கு நாங்கள் யாரும் இல்லாது போய்விட்டால், அப்பொழுது பின்பற்றுவதற்காக ஒரு வேலைத் திட்டத்தைத் தயாரிக்கும்படி மாகாண காங்கிரஸ் காரியதரிசியிடம் சொன்னேன். நான் அப்பொழுது நோயுற்றிருந்ததால் நான் எழுத முடியவில்லை. சில யோசனைகளை நான் கூறியதன்பேரில் ஒரு திட்டத்தைத் தயாரித்து என் முன்பு வைத்தார்கள். அதில் அவசியமான திருத்தங்களைச் செய்தேன். அந்த வேலைத் திட்டத்தில் ஒன்று, தந்திக் கம்பிகளை அறுத்து, ரயில் பாதைகளைச் சேதப்படுத்துவது. அதை நான் எடுத்துவிட்டு, வேலைத் திட்டத்தை அச்சிட்டுத் தயாராக வைத்துக்கொள்ளும்படிச் சொன்னேன். நானும் பம்பாய்க்குப் போக முடியும் என்றே நான் அப்பொழுதும் எண்ணிக்கொண்டிருந்தேன். நான் போக இயலாது என்பதை உணர்ந்ததும், அந்த துண்டுப் பிரசுரத்தை அச்சிட வேண்டாமென்றும், பம்பாய் கூட்டத்தின் முடிவு தெரியும் வரையில் காத்திருக்கும்படியும் சொல்லிவிட்டேன். துண்டுப் பிரசுரம் அச்சாகவில்லை என்ற எண்ணத்திலேயே நான் அவ்வாறு கூறினேன். ஆனால் நான் நினைத்தது சரியல்ல. ஆகஸ்டு 9-ந் தேதி மாஜிஸ்டிரேட்டும் போலீஸாரும் என்னைக் கைது

செய்ய வந்தபோது, அத் துண்டுப் பிரசுரம் அச்சாகி விட்டது என்பதை அறிந்தேன். ஆகவே நான் சிறைக்குக் கொண்டு போகப்படுவதற்கு முன்னுல், அத் துண்டுப் பிரசுரங்களை மாகாணம் முழுவதிலும் விநியோகிக்கும் படிச் சொல்லிவிட்டுப் போனேன். பிறகு நான் சிறையி லிருந்தபோது, அவை விநியோகிக்கப்பட்டு விட்டன என்றும், அதன்படி வேலைத் திட்டத்தை மக்கள் நிறை வேற்றக் கிளம்பிவிட்டனர் என்றும் அறிந்தேன். ஆனுல் நான் மேலே சொன்னதைப் போல, தந்திக் கம்பிகளை அறுப்பது, ரயில் பாதைகளைச் சேதப்படுத்துவது பற்றி அதில் எதுவுமில்லை. ஆனுல் பீகாரில் அதிக அளவில் அவைகளே செய்யப்பட்டன. இந்த நாசவேலையில் ஏன் இறங்கிவிட்டார்கள் என்று சிறையில் நான் ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்தேன். நான் எப்படி அதிக காலம் ஆச்சரியப்பட அவசியமில்லாது போயிற்று. முக்கியமாக போக்குவரத்து சாதனங்கள் சம்பந்தமாக அதிகமாக நாசம் செய்யப்பட்ட பீகார் விஷயத்தில் காங்கிரஸ் ஒரு திட் டத்தைத் தயாரித்திருந்தது என்ற சர்க்காரின் குற்றச் சாட்டுக்கு ஆதாரமே கிடையாது. இதைப்பற்றி சேவா கிராமத்தில் பேச்சு நடந்தது என்று நான் கூறியிருந்த போதிலும், தந்திக் கம்பிகள், ரயில்வே பாதைகள் ஆகிய வைகளைத் துண்டிக்கக் கூடாது என்று நான் கண்டிப் பாகத் தெரிவித்திருந்தேன் என்பதைக் கொண்டே இதைச் சொல்லுகிறேன். நான் கைதியான அன்று மாகாணம் பூராவிலும் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் அத்தகைய அறிவிப்பு எதுவுமே இல்லை. ஆனுல் நடந்தவை களுக்கெல்லாம் பொறுப்பாளி சர்க்காரேயாகும். ஆகஸ்டு 8-ந் தேதி இரவு மகாத்மா காந்தியும் மற்ற காரியக் கமிட்டித் தலைவர்களும் கைது செய்யப்படுவதற்கு முன் னுல், காங்கிரஸ் என்ன வேலைத் திட்டத்தை மேற் கொள்ள விருந்தது என்பதைப்பற்றி சர்க்கார் ஒரு அறிக் கையை வெளியிட்டதோடு அந்த வேலைத் திட்டத்தின் காரணமாகவே தலைவர்களைக் கைது செய்ய நேர்ந்தது என்றும் கூறியிருந்தார்கள். அந்த அறிக்கையின்படி, தந்திக் கம்பிகளை அறுப்பதும், ரயில் பாதைகளைச் சேதப் படுத்துவதும் காங்கிரஸின் வேலைத் திட்டங்களில் ஒன்று.

சர்க்காரின் அறிக்கை, ஆகஸ்டு 9-ந் தேதி காலை நாடெங்கும் பத்திரிகைகளில் பிரசுரமாயிற்று. அதைப் படித்ததின்பேரிலேயே ஜில்லா மாஜிஸ்டிரேட் என்னைக் கைது செய்ய வந்தார். அன்றோ அல்லது மறுநாளோ, இந்தியா மந்திரி ஸ்ரீ. அமெரி இங்கிலாந்தில் வெளியிட்ட ஒரு அறிக்கையில், காங்கிரஸின் வேலைத் திட்டத்தில் அந்த காரியங்களும் ஒரு இனமாகச் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கூறினர். அந்த அறிக்கையும் இந்தியா முழுதும் விளம்பரமாயிற்று. தந்திக் கம்பிகளை அறுப்பதும் ரயில் பாதைகளை நாசப்படுத்துவதும் காங்கிரஸ் யோசித்திருந்த காரியங்களில் ஒன்று என்று சர்க்காரின் அறிக்கையைக் கொண்டே மக்கள் அறிந்தார்கள் என நான் நம்புகிறேன். அத்தகைய காரியங்களில் ஈடுபட வேண்டாம் என்று மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு எந்த காங்கிரஸ் தலைவரும் வெளியில் அச்சமயம் இல்லாது போய்விடவே, அந்தத் திட்டத்தை நன்ருக நிறைவேற்றிவிட வேண்டியது தங்கள் கடமை என்று இயற்கையாகவே மக்கள் எண்ணிவிட்டார்கள். பீகாரில் மக்கள் அந்த அடிப்படையின்பேரிலேயே காரியங்களைச் செய்துவிட்டார்கள். நான் சிறையிலிருந்தபோது நான் அறிய நேர்ந்த இரு விஷயங்கள், இதில் நான் எண்ணியதை ஊர்ஜிதம் செய்தன.

நான் கைதியானவுடனேயே, கைது செய்யப்பட்டு சிறைக்குக் கொண்டுவரப்பட்ட என் நண்பர் ஒருவர், சொன்ன சில விஷயங்களை இங்கு குறிப்பிடுவது முக்கியமாகும். சில வாலிபர்கள் அவரிடம் போய், நான் கைதியாவதற்கு முன்பு நான் அவரிடம் ஏதாவது சொல்லிவிட்டுப் போனேனு என்று கேட்டிருக்கிருர்கள். அதற்கு அவர், என்னைப் பல தினங்களாக தாம் பார்க்காததால் அப்படி ஏதாவது சொல்லிவிட்டுப் போயிருக்கிறேனு என்று தமக்குத் தெரியாது என்று சொல்லவே, உடனே ஒரு வாலிபர் தம்மிடமிருந்த சர்க்காரின் அறிக்கையை எடுத்துக் காட்டினுராம். காங்கிரஸ் மேற்கொள்ளவிருந்த வேலைத் திட்டம் என்ன என்பது அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. ஆனுல் என் நண்பர், அந்த வேலைத் திட்டத்தைப் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று அவர்களிடம் சொன்னதோடு, காங்கிரஸின் வேலைத் திட்-

டம் இதுதான் என்று சர்க்கார் கருதுவதால் அதை நிறைவேற்றிவிட வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை என்று அவர்களிடம் சொன்னாராம். இதை நான் கேட்டதும், அந்த வேலைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிடும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். மறுநாள் நடந்த சம்பவமொன்று நான் நினைத்ததை ஊர்ஜிதம் செய்தது. பல இடங்களில் தந்தி, டெலிபோன் கம்பிகள் துண்டாக்கப்பட்டன. மற்ற சர்க்கார் காரியாலயங்களுக்கும் சிறைக்கும் டெலிபோன் தொடர்பு இல்லாது போயிற்று. நகரெங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சர்க்கார் காரியாலயத்தை நோக்கி ஒரு பெரிய ஊர்வலம் சென்றது. சில வாலிபர்கள் எப்படியோ சர்க்கார் காரியாலயத்தின் உச்சிமீது ஏறி அங்கு தேசியக் கொடியைப் பறக்கவிட்டார்கள். கோர்ட்டுகளெல்லாம் மூடப்பட்டன. தெருக்களில் வண்டிகள் போவதென்பதே முடியவில்லை. சர்க்கார் காரியாலயத்திற்கு அருகே போலீஸார் சுட்டதில் சில இளைஞர்கள் மாண்டார்கள். பாட்னா சிறை அப்பொழுதே நிறைந்து போய், புதிதாக வரும் யாருக்கும் இடமில்லை என்ற நிலைமையிலிருந்தபோதிலும், பலரைக் கைது செய்து அங்கு அனுப்பினார்கள். ஆகையால் இவர்கள் சிறைக்குள் திரிந்து கொண்டிருந்தார்கள். சிலர், சாலைக்கு அருகிலிருந்த சிறை வார்டின் மேல் தளத்தின்பேரில் ஏறி, சாலை வழியாகப் போய்க்கொண்டிருந்த மக்களிடம் கூச்சல் போட்டுக் கூற ஆரம்பித்தனர். இந்த வாலிபர்களை நாங்கள் கட்டுப்படுத்தினாலன்றி பெரிய அதிகாரிகள் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவார்கள் என்றும், சில இளைஞர்கள் சுடப்படுவார்கள் என்றும், சிறை அதிகாரிகள் எங்களிடம் சொன்னார்கள். இளைஞர்களெல்லோரும் அனேகமாக மாணவர்கள்.

அந்தச் சமயம் மாகாணத்தின் முக்கியமான காங்கிரஸ்காரர்களெல்லோரும் கைது செய்யப்பட்டு பாட்னா சிறைக்குக் கொண்டு வரப்பட்டிருந்ததால், மாணவர்களைக் கட்டுப்படுத்த இவர்களும் முயற்சி செய்தார்கள். இவர்கள் தங்களுக்குப் பக்கத்திலிருக்கும்போது இளைஞர்கள் அநேகமாக சும்மா இருப்பார்கள். தங்களிடமிருந்து தலைவர்கள் தூரத்தில் சென்றுவிட்டதுமே தங்களுடைய நடவடிக்கை

களை ஆரம்பித்துவிடுவார்கள். முக்கியமாக சாலை வழியாகப் போகிறவர்களைக் கூவியழைத்து, தந்தி, டெலிபோன் கம்பிகளை அறுத்து, ரயில் பாதைகளைச் சேதப்படுத்தும் படிக் கேட்டுக் கொள்ளுவார்கள். இதனால் அந்த இளைஞர்களில் சுமார் ஐம்பது பேரை பாட்னு சிறைக்கு மூன்று மைல் தூரத்திலிருந்த முகாம் சிறைக்கு அனுப்பிவிட சிறை அதிகாரிகள் முடிவு செய்தனர். மூன்று லாரிகள் வந்தன. இவற்றில் இரண்டில் பல மாணவர்களைத் தூக்கிப் போட்டார்கள். மூன்றாவது லாரிக்கு இன்னும் போகாததினால் மற்றுஞ் சிலர் சிறைக்குள்ளே இருந்தனர். இதற்குள் சிறைக்கு வெளியில் கூடியிருந்த கூட்டம் கட்டுக் கடங்காததாகப் போய், லாரிகளிலிருந்த இளைஞர்களை வெளியே இழுத்துவிட்டு, லாரிகளுக்குச் சிறை வாசலில் தீயிட்டுக் கொளுத்திவிட்டார்கள். இதனால் ஏற்பட்ட குழப்பத்தில் சில இளைஞர்கள் கூட்டத்துடன் கலந்து தப்பிவிட்டனர். மற்றவர்கள் சிறைக்குத் திரும்பிவிட்டார்கள். லாரிகளில் ஆயுதம் தாங்கிய போலீஸார் ஏராளமாகக் கொண்டுவரப் பட்டதோடு இளைஞர்களை முகாம் சிறைக்குக் கொண்டு போக ஏற்பாடுகள் நடந்தன. அப்பொழுது என் உடல் நிலை மோசமாக இருந்ததால் அவர்களுடன் நீண்டநேரம் பேசும் நிலையில் நான் இல்லை. என்றாலும் லாரிகளுக்குத் தீ வைப்பதோ, போலீஸாரைத் தாக்குவதோ, அல்லது கைதிகள் தப்பிப் போய்விடும்படிச் செய்வதோ சரியல்ல என்பதை அவர்கள் உணரும்படிச் செய்ய முயன்றேன். நான் சொன்னதை அமைதியாய்க் கேட்டுக்கொண்டார்கள். என்னிடம் அவர்கள் அதிக மரியாதை வைத்திருந்ததால் அமைதியாகவும் பேசினார்கள். என்றாலும், நாச வேலைகளில் ஈடுபடுவது சரியல்ல, அப்படிச் செய்ய வேண்டியது அவசியம் என்று தோன்றினாலும் அதைச் செய்வதற்கும் ஒரு வழி இருக்கிறது என்று அவர்கள் உணரும்படிச் செய்வதில் நான் வெற்றி பெறவில்லை. சத்தியாக்கிரக நடவடிக்கைகளில் ரகசியம் எதுவுமே இருக்கக்கூடாது என்பது என்னுடைய திடமான நம்பிக்கை. ஏனெனில் சத்தியாக்கிரகம் ஒன்றைச் செய்ய முற்படும்போது அச்சமின்றி அதை அவன் பகிரங்கமாகச் செய்வதோடு, தான் செய்வதனால் ஏற்படக்கூடிய கஷ்டங்களைச் சகித்துக்கொள்ளவும்

தயாராக இருக்கிறன். ஆகையால் அவன் எதையும் ரக சியமாகச் செய்யவேண்டிய அவசியமே கிடையாது. ஏனெ னில் ரகசியமாகச் செய்வதென்ருல், அப்படிச் செய்வதின் விளைவிலிருந்து அந்த சத்தியாக்கிரகி தப்பித்துக்கொள்ள விரும்புவதோடு, அதன் பொறுப்பை இன்னுமொருவர் தலையில் போட்டுவிடப் பார்ப்பது போலுமாகிறது.

இந்த இயக்கத்தின்போது, ரயில் பாதைகளுக்கு அரு கில் வசித்தவர்கள் அதிகக் கஷ்டப்படுத்தப் பட்டார்கள். தந்திக் கம்பிகளை அறுத்ததிற்கும், ரயில் பாதையை சேதப் படுத்தியதற்கும் உண்மையான பொறுப்பாளிகள் யார் என் பதைக் குறித்து யாரும் கவலைப்படவில்லை. எனவே இதில் எந்தவித சம்பந்தமுமே இல்லாதவர்கள் சர்க்காரின் கடுமையான அடக்குமுறைக்கு ஆளாஞர்கள். இவைகளை யெல்லாம் மாணவர்களுக்கு நான் விளக்கிக் கூறியதோடு, இவர்கள் செய்துவிடும் காரியங்களுக்காக நிரபராதிகள் துன்பப்படக் கூடாது என்பதை முன்னிட்டு, செய்கிறவை களை பகிரங்கமாக, முன்னறிவிப்புச் செய்துவிட்டே செய்ய வேண்டும் என்றும் அவர்களுக்குச் சொன்னேன். ஆனல் சர்க்கார் எதுவுமே செய்ய முடியாதபடி ஸ்தம்பித்துவிடும் படிச் செய்துவிட வேண்டுமென்பதிலேயே மக்கள் கருத் தாயிருந்தார்கள். அதில் அவர்கள் வெற்றியும் பெற்ருர் கள். பீகாரில் நடந்த நாச வேலைகளைப் பொறுத்தவரை யில் இதில் மதிப்பை காங்கிரஸுக்குக் கொடுத்துவிட முடி யாது. ஏனெனில் மக்கள் தாங்களாகவே அவைகளைச் செய் திருக்கிருர்கள் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. தாங்கள் செய்வதில் பலாத்காரமிருக்கிறதா என் பதை அவர்கள் கவனிக்கவில்லை. உற்சாகத்தின் பேரில் அவைகளையெல்லாம் அவர்கள் செய்துவிட்டனர். நடந்து விட்ட காரியங்களுக்குப் பொறுப்பை காங்கிரஸ் கட்சி யின் பேரிலும் சொல்ல முடியாது. ஏனெனில் பொதுமக் கள் இக்காரியங்களைச் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னு லேயே காங்கிரஸின் எல்லாத் தலைவர்களும் கைது செய்யப் பட்டு சிறைக்குள் அடைக்கப்பட்டுவிட்டனர். இயக் கத்தை ஒழுங்கு படுத்தி நடத்துவது என்பதற்கு நேரமே இல்லை. ஏதாவது ஒரு ஸ்தாபனம் இருந்திருக்கு மானல், அது மக்களாக ஏற்படுத்திக் கொண்டதேயாகும்.

எது சரி என்று தங்களுக்குத் தோன்றியதோ, அது காங்கிரஸின் வேலைத் திட்டம் என்று நம்பிக்கொண்டு தங்களால் முடிந்த வரையில் அதை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமென்பதில் மக்கள் முற்பட்டார்கள். ஆனால் சிறிது காலம் கழித்து, இயக்கம் அதன் வேகத்தை இழந்துவிட்ட பிறகு, சிறைக்கு வெளியிலிருந்த சிலர் அதற்கு உற்சாகமளிக்க முயற்சி செய்தார்கள். எனினும் அவர்கள் தோல்வியடைந்தார்கள். பொது ஜன உற்சாகமொன்றே நாச வேலைகளுக்குக் காரணம் என்பதை இதுவும் காட்டுகிறது.

பிஹாரில் இயக்கம் அதிக சக்தி வாய்ந்ததாக இருந்தது. பிராட் காஜிலும் (ஈ. ஐ. ஆர்), மீடர் காஜிலும் (ஓ. டி. ஆர்), ரயில் போக்கு வரத்து அதிககாலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தந்திகள் வேலை செய்யவில்லை. அநேக போலீஸ் ஸ்டேஷன்களை மக்கள் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டார்கள். பல ஜில்லாக்களில், ஜில்லா டவுன்களிலும், போலீஸும் சிப்பாய்களும் சுலபமாகப் போகக்கூடியதான பொதுச் சாலைகளை யடுத்த இடங்களிலும் மாத்திரம் சர்க்காரின் அதிகாரம் நடந்து வந்தது. ஆயுதந் தாங்கிய ரோந்துப் படையினர், தாங்கள் விரும்பியபடியெல்லாம் மக்களைச் சுட்டுத் தள்ளினர். கொள்ளையிட்டு கிராமங்களைக் கொளுத்தியும் விட்டார்கள். மக்களோ, ரயில் பாதைகள் சேதமடைந்ததால் ஆங்காங்கு நிறுத்தி வைக்கப்பட்டுவிட்ட ரயில் சாமான்கள் வண்டிகளையும், ரயில்வே ஸ்டேஷன்களையும் கொள்ளையடித்தார்கள். போலீஸார் சொன்னதுதான் சட்டம். கொள்ளைகளுக்கு மக்கள் கூட்டம்தான் காரணமேயன்றி தாங்களல்ல என்று சொல்லி விடுவார்கள். ராணுவம் அங்குமிங்கும் தேடிக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டது. சில வாரங்களுக்குப் பிறகு, நாளா வட்டத்தில் ரயில் பாதைகளெல்லாம் பழுது பார்க்கப்பட்டு ரயில் போக்குவரத்து ஆரம்பமாயிற்று. பீகாரில் கங்கைக்கு வடக்கிலுள்ள எல்லா ஜில்லாக்களிலும், ஓ. டி. ஆர். ரயில்பாதை செல்லும் ஐக்ய மாகாணத்தின் கிழக்கு ஜில்லாக்களிலும், ரயில்பாதையெல்லாம் அநேகமாக நாசமாகி விட்டன. கங்கைக்குத் தெற்கில், மொகல்ஸராயிலிருந்து அஸான்ஸால் வரையில், ஈ. ஐ. ஆர். ரயில் பாதையும், பாட்னா வழியாகச் செல்லும்

குறுக்கு ரயில்பாதையும் பல இடங்களில் நாசம் செய்யப்பட்டு விட்டன. ஆனால் மொகல்ஸராயிலிருந்து அஸான்ஸாலுக்கு சசராம்- கயா வழியாகச் செல்லும் பெரிய குறுக்குப் பாதை மாத்திரம் எவ்வித சேதமுமின்றி இருந்தது. இதனால் ஓ. டி. ஆர். -ல் ரயில் போக்கு வரத்துக்குத் தடை ஏற்பட்ட அளவு ஈ. ஐ. ஆர். ரயில் பாதையில் உண்டாகவில்லை.

தந்திக் கம்பிகளை அறுத்து ரயில் பாதைகளைச் சேதப்படுத்தியதோடு நிற்காமல் கப்பல் போக்குவரத்தையும் நிறுத்திவிட மக்கள் முயன்றார்கள். கங்கையிலிருந்த கப்பல் துறைகளை மூழ்கடித்து விட்டனர்; சிலவற்றை துண்டித்துவிட்டு பிரவாகம் அடித்துக்கொண்டு போய் விடும்படிச் செய்தார்கள். மக்கள் கூட்டத்தினர் இக் கப்பல்கள் பலவற்றில் ஏறிக்கொண்டு, கொஞ்ச காலத்திற்கு இக் கப்பல்களின் போக்குவரத்து இல்லாதபடிச் செய்து விடுவதற்காக அவற்றின் யந்திரங்களைச் சேதப்படுத்தினர். சாலைகளில் வண்டிப் போக்குவரத்து எதுவும் முடியாதபடிச் செய்வதற்காக மரங்களை வெட்டி சாலைகளின் குறுக்கே போட்டு விட்டனர். சாலை, ரயில் பாலங்கள் ஆகியவைகளைத் தகர்த்துவிட முயற்சிகள் நடந்த போதிலும் இதற்கு வேண்டிய வெடிகள் கிடைக்காததினால், இது முடியாது போயிற்று என்றும் கேள்விப்பட்டேன். இந்தக் காரியங்களையெல்லாம் அவர்கள் செய்ததின் நோக்கம், தூரத்திலுள்ள இடங்களுக்குப் போலீஸும் ராணுவமும் போக முடியாதபடித் தடுத்து, சர்க்காரின் நிர்வாகம் நடக்க முடியாதபடிச் செய்து விடுவதேயாகும். ஆனால் இத்தகைய அராஜக வேலைகள் பெரும் அளவில் இருந்து வந்த போதிலும், தனிப்பட்டவர்களின் வீடுகளில் ஒரு கொள்ளையோ அல்லது திருட்டோ நடவாமலிருந்தது பெரிய ஆச்சரியமேயாகும். பொதுஜனக் கூட்டம் சர்க்கார் கஜானாக்களையும் ரயில்வே ஸ்டேஷன்களையும் கொள்ளையடித்தன என்றால், மக்களின் வீடுகளை போலீஸாரும் ராணுவத்தினரும் கொள்ளை யிட்டார்கள். சில இடங்களில் சில போலீஸாரும் சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்; ஆனால் இவர்கள்

தொகை மிகக் குறைவு. மக்களில் கொல்லப்பட்டோரின் தொகையே அதிகம்.

இத்தகைய புரட்சியின் காரணமாக, பீகாரில் சில இடங்களில் அச்சமயம் பிரிட்டிஷ் ஆட்சியே இல்லை என்று தான் ஆகிவிட்டது. இந்த நிலைமை எங்குமே ஏற்பட்டு விடவில்லை; ஏற்பட்ட இடங்களில் அதிக காலமும் அந் நிலைமை நீடித்திருக்கவில்லை. ஏனெனில் நிலைமையை சமாளித்துவிட போலீஸாலும் ராணுவத்தினராலும் முடிந் தது. முதலாவதாக, பொது மக்கள் நாடு முழுவதும் ஏக காலத்தில் புரட்சி செய்து சர்க்காரின் உத்திரவுக்குக் கீழ்ப் படிய மறுத்துவிட்டால், நிர்வாக யந்திரம் அடியோடு முறிந்துவிடும். இரண்டாவது, எங்குமே புரட்சி கிளம்பி விட்டால், அதை அடக்கி விடுவதென்பது ஆயுதந் தாங்கிய படையினாலும் முடியாது; யுத்தத்தின் காரணமாக பீகாரில் அப்பொழுது ஏராளமாக ராணுவம் வைக்கப் படாமலிருந்தால், அப்பொழுது இருந்ததைப்போல ராணு வத்தினிடம் சரியான தளவாடங்களும் இல்லாது போயி ருக்குமானால், பீகாரைத் திருப்பிப் பிடித்துவிடுவதென்பது அச்சமயம் எளிதாகவே இருந்திருக்காது. திரும்பிப் பிடித்து விடுவதென்பது முடிந்திருந்தாலும், அதற்காக நீண்டகாலம் நடவடிக்கை எடுக்க நேர்ந்திருக்கும். அந்தச் சமயத்தில் பீகாரில் பெரிய பிரிட்டிஷ், அமெரிக்கப் படைகள் வைக் கப்பட்டிருந்தன. நினைத்த இடங்களுக்கு உடனே போகக் கூடிய வகையில் ஏராளமான படைகள் கைவசமிருந்ததால் புரட்சியை அடக்க இப் படைகள் பெரிய அளவில் உப யோகிக்கப்பட்டன. ரயில் பாதைக்கும், தந்திக் கம்பிகளுக் கும் மக்கள் கூட்டத்தினர் ஏராளமான சேதத்தை உண் டாக்கிய போதிலும், மற்ற சர்க்கார் சொத்துக்களை நாசப் படுத்தினார்கள் என்றாலும், வேண்டும் என்றே சர்க்கார் சிப்பந்திகளைக் கொல்ல வேண்டும் என்ற முயற்சி எதையும் மக்கள் கூட்டத்தினர் செய்யவே இல்லை. இங்குமங்கும் இவர்களில் ஒரு சிலர் கொல்லப்பட்டிருப்பார்களானால், போலீஸும் ராணுவமும் அனுவசியமாகச் செய்த அடக்கு முறை அட்டூழியங்களினால் மக்கள் ஆத்திரமடைந்து விட்டதே அதற்குக் காரணம். அப்பொழுது மழைக் காலம். வயல்களிலெல்லாம் பயிர்களிருந்தன. சாதாரண

காலங்களில் அந்த சமயத்தில் எந்த இயக்கமும் நடப்பது சிரமம். மேலும் போக்குவரத்து சாதனங்கள் பெரும்பாலும் நாசப்படுத்தப்படுவதால் எந்த இயக்கத்தையும் நடத்துவது என்பது அப்பொழுது சாத்தியமானதே அல்ல. மக்கள் சுய உணர்வைப் பெற்றுவிட்டதோடு தன்னம்பிக்கையையும் அடைந்து விட்டார்கள். பயந்துகொண்டு சோளக்காட்டிலும், கரும்புப் பயிர்களுக்கு நடுவிலும் ஒளிந்துகொண்டிருந்தவர்கள், அவ் வழியாகச் சென்ற போலீஸையும், ராணுவத்தையும் சில இடங்களில் மறித்துக் கொண்டு தாக்கிவிட்டனர். இதனால் சோளக்காடு, கரும்புத் தோட்டங்கள் வழியாகப் போகவே போலீஸாரும், ராணுவத்தினரும் பயந்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆகையால் அந்தச் சமயம் புரட்சியை அடக்கிவிட பிரிட்டிஷ் சர்க்கார் தன்னாலியன்றதையெல்லாம் செய்து விட்டபோதிலும், இந்தியாவைத் தன்னுடைய காலடியின் கீழ் அது அதிக காலம் வைத்துக்கொண்டிருந்துவிட முடியாது. இந்தியாவுடன் அது ஏதாவது ஒரு வகையில் சமரசத்திற்கு வந்தேயாகவேண்டும் என்பது மிகத் தெளிவாகத் தெரிந்தது. பிரிட்டிஷ் சர்க்காரோ யுத்தத்தில், ஆள்பலத்திலும், பொருளிலும் ஏராளமான நஷ்டத்தை அப்பொழுதே அடைந்து விட்டது. பிரிட்டன் இன்னும் பெரிய வல்லரசுகளில் ஒன்றாக இருந்தபோதிலும், முன்னிருந்ததைப்போல அது அவ்வளவு பலமானதாக இல்லை. இதனால் இந்தியாவை அது அடிமையாக வைத்திருப்பதென்பது அதற்கு மேலும் அதிகக் கஷ்டமானதாகி விட்டது. பிரிட்டன் இதை உணர்ந்து கொண்டது. இதனாலேயே யுத்தம் முடிவதற்கு முன்னாலேயே, அந்த யுத்தத்தில் வெற்றிபெறுவதில் அற்புதமான தீரத்தைக் காட்டிய ஸ்ரீ. சர்ச்சில், இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுப்பதென்பதை இடைவிடாது பலமாக எதிர்த்து வந்தவராகத் தாம் இருந்த போதிலும், காங்கிரஸுடன் ஏதாவது ஒரு வகையில் சமரசத்திற்கு வரவேண்டும் என்ற அறிவிப்புடன் லார்டு வேவலை இந்தியாவுக்கு வைஸிராயாக அனுப்பினார்.

சிறிது காலமிருந்து நிலைமையை அறிந்துகொண்ட பின்னர் லார்டு வேவல், 1945 ஜூனில், காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்களை யெல்லாம் விடுதலை செய்யும் படி உத்தரவிட்டார். கொஞ்சகாலம் முன்னுலேயே மகாத்மா காந்தி விடுதலையடைந்துவிட்டார். அந்த வருஷம் ஜூலை 14-ந் தேதியன்று சிம்லாவில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. அப்பொழுது பதவியிலிருந்த மாகாண பிரதம மந்திரிகள், முன்னுல் பதவியிலிருந்து யுத்தம் ஆரம்பமானதும் காங்கிரஸின் ஆணைப்படி ராஜிநாமாச் செய்துவிட்ட பிரதம மந்திரிகள் ஆகியவர்கள் இம் மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டனர். மத்திய அசெம்பிளியிலிருந்த பல கட்சிகளின் தலைவர்களும் அழைக்கப்பட்டிருந்ததோடு மகாத்மா காந்தியையும், ஸ்ரீ. ஜின்னுவையும் அழைத்திருந்தார்கள். பிரிட்டிஷ் சர்க்காரின் விருப்பப்படியே தாம் இந்த மகாநாட்டைக் கூட்டுவதாகவும் அந்த சர்க்காரின் விருப்பத்தின் பேரிலேயே காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்களையும், மாகாண காங்கிரஸ் தலைவர்களையும் தாம் விடுதலை செய்திருப்பதாகவும் வார்டு வேவல் ஒரு அறிக்கையையும் வெளியிட்டார். முக்கியமான இலாக்காக்களான நிதி, உள்நாட்டு விவகாரம், ராணுவம் ஆகியவை அது வரையில் பிரிட்டிஷாரின் கையிலேயே இருக்கும் வகையில் வைசிராயின் நிர்வாக சபை இருந்து வந்திருந்ததால், அந்த நிர்வாக சபையைத் திருத்தியமைக்க பிரிட்டிஷ் சர்க்கார் விரும்பியது. வைசிராயையும், தளபதியையும் தவிர இனி அந்தச் சபையில் இந்தியர்களே இருப்பார்கள். அந்த மெம்பர்களின் அதிகாரங்களில் எந்தவித மான வித்தியாசமும் இருக்காது. 1935-ம் ஆண்டு இந்திய சர்க்காரின் சட்டப்படியுள்ள எல்லா அதிகாரங்களும் அவர்களுக்குச் சமமாக இருக்கும். பிரிட்டிஷ் சர்க்காரின் யோசனையின்படி, ராணுவ இலாகா, உள்நாட்டு இலாகா, வெளிநாட்டு உறவு இலாகா ஆகியவைகள் முதல் தடவையாக இப்பொழுது இந்தியருக்கு மாற்றப்படும் என்று லார்டு வேவல் தமது அறிக்கையில் கூறினுர். அதோடு வைசிராயின் இப்புதிய நிர்வாக சபையில், ஹரிஜன மெம்பரைத் தவிர, ஹிந்து மெம்பர்களும், முஸ்லிம் மெம்பர்களும் சம

மான தொகையினர் இருப்பார்கள் என்றும் அவர் தெளிவாக எடுத்துக் கூறினார். இந்த மகாநாடு வெற்றிகரமாக முடிந்து, வைசிராய் நிர்வாக சபையும் மாற்றியமைக்கப்பட்டால், அடுத்த அரசியலைப் பற்றிய பிரச்னையைப் பிறகு கவனிக்கலாம் என்றும் லார்டு வேவல் கூறினார். ஆனால் முஸ்லிம் லீகின் பிடிவாதப் போக்கினால் அம் மகாநாடு ஏகோபித்த முடிவுக்கு வரமுடியாது போயிற்று. பிறகு லார்டு வேவல், கவுன்சிலில் இருப்பதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் என்று தாங்கள் கருதுபவர்களின் பெயர்களடங்கிய ஜாபிதாவைத் தம்மிடம் கொடுக்கும்படி எல்லா கட்சிகளையும் கேட்டார். அந்த ஜாபிதாவிலிருந்து மெம்பர்களை தாம் தேர்ந்தெடுத்துக்கொள்ளுவதாகவும் சொன்னார். அப்படிச் செய்ய முஸ்லிம் லீக் மறுத்துவிட்டது. எனவே எந்த பலனுள்ள முடிவிற்கும் வராமல் சிம்லா மகாநாடு முறிந்துவிட்டது. ஆனாலும் லார்டு வேவல் நம்பிக்கையை விட்டுவிடவில்லை. சமரச முடிவை உண்டாக்க மற்றோர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு மற்றோர் முயற்சி செய்வதாகச் சொன்னார். இதற்கு மத்தியில் சர்க்கார் எப்பொழுதும் போலவே நடந்துவரும் என்றார்.

காங்கிரஸின்மீது சர்க்காரின் அடக்குமுறைக் கொள்கை 1942 முதலே அமுலில் இருந்து வந்தது. லார்டு வேவல் சிம்லா மகாநாட்டைக் கூட்டி, அதற்கு வரும்படிச் செய்வதற்காக காங்கிரஸ் தலைவர்களையெல்லாம் விடுதலை செய்ததும், இந்தியாவுடன் ஒரு சமரச முடிவுக்கு வந்துவிட வேண்டும் என்பதில் பிரிட்டிஷ் சர்க்கார் சிரத்தையுடனிருக்கிறது என்று மகாத்மா காந்தி நம்பினார். இதே நம்பிக்கை மற்றும் பல காங்கிரஸ்காரர்களுக்கும் இருந்தது. ஆனால் மற்றவர்களுக்கோ, காங்கிரஸ் அம்மகாநாட்டில் கலந்து கொள்ளுவது என்பது பிடிக்கவில்லை. இதில் காங்கிரஸின் காரியங்களை இவர்கள் அதற்குப் பிறகு பலமாக எதிர்த்து வந்தார்கள். எனினும் மகாத்மா காந்தியும் காரியக் கமிட்டி உருப்பினர்களும் இதில் உறுதியுடனிருந்ததோடு சமரசத்திற்கான முயற்சியைத் தொடர்ந்து செய்து வந்தார்கள். சர்க்காரின் நல்லெண்ணத்தில் இவர்களுக்கு நம்பிக்கை உண்டானதற்குக் காரணங்களில் ஒன்று, யுத்தம் முடிந்துவிட்டதுதான். ஜெர்மனியும், இத்தாலியும்

தோற்கடிக்கப்பட்டு விட்டன. ஜப்பான் போராடிக்கொண்டிருந்தபோதிலும் அது நீண்டகாலம் அப்படிச் செய்ய முடியாதென்றும் தெளிவாகி விட்டது. ஜப்பான் பிடித்துக்கொண்டுவிட்ட நாடுகளை நேச தேசத்தினர் ஒவ்வொன்றாகத் திரும்பப் பிடித்து வந்தார்கள். ஜெர்மனியும், ஜப்பானும் எல்லா இடங்களிலும் வெற்றி பெற்றுவந்து, பிரிட்டனும் அதிக சங்கடத்திலிருந்த காலத்தில் 1942-ல் இயக்கம் ஆரம்பமாயிற்று. ஆனால் இப்பொழுதோ வெற்றி அநேகமாக இவர்களுடையதாகிவிட்டது. என்றாலும் சமரசத்திற்கு இப்பொழுது ஒரு யோசனையுடன் முன்வந்திருக்கிறார்கள். எனவே சமரசத்தில் உண்மையாகவே அவர்களுக்கு ஆர்வமிருக்கவேண்டும். இந்தியா சுதந்திரத்தையே பிறகு அடைந்துவிட்டதால், அந்த நம்பிக்கை சரி என்பது பிறகு நிச்சயமாகிவிட்டது.

சிம்லா மகாநாடு முடிந்த கொஞ்ச நாட்களுக்கெல்லாம் இங்கிலாந்தில் பொதுத் தேர்தல்கள் நடந்தன. இதில் ஸ்ரீ. சர்ச்சிலின் கட்சி தோல்வியடைந்து, தான் வெற்றி பெற்றால் இந்தியாவுக்கு ஆட்சி அதிகாரத்தை மாற்றுவதாகக் கூறிய தொழிற் கட்சியின் சர்க்கார் அதிகாரத்திற்கு வந்தது. தன்னுடைய வாக்குறுதியை அது மறந்துவிடவில்லை. தொழிற் கட்சி அதிகாரத்திற்கு வந்ததும், ஒரு சமரச முடிவுக்கு வருவதற்கான பேச்சை நடத்த மூன்று மந்திரிகளை இந்தியாவிற்கு அனுப்பினார்கள். அப்பொழுது ஏற்பட்டிருந்த நிலைமையைக் குறித்து விவரமாகக் கூற வேண்டிய அவசியமில்லை. இவர்கள் காங்கிரஸுடனும், முஸ்லிம் லீகோடும் பேச்சு நடத்தி முடிவாக இந்தியாவுக்கு வேண்டிய அரசியலை அமைக்க அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்துவது என்று முடிவு செய்தார்கள் என்று சொன்னால் மாத்திரமே போதும். இதற்கு மத்தியில் நாட்டின் நிர்வாகத்தை நடத்திக்கொண்டு போவதற்கு காங்கிரஸும் முஸ்லிம் லீகும் அடங்கிய ஒரு மந்திரி சபையையும் அமைப்பதென்று தீர்மானித்தனர். நீண்ட விவாதத்திற்குப் பிறகு அத்தகைய மந்திரி சபை ஒன்றும் அமைக்கப்பட்டது. பாகிஸ்தானை, தனியான ஒரு ராஜ்யத்தை, அமைத்தே தீருவது என்ற பிடிவாதத்தில் முஸ்லிம் லீக் இருந்ததால், முஸ்லிம் லீக் முதலில் அந்த மந்திரி சபையில் சேராவிட்டாலும்

பிறகு சேர்ந்துகொண்டது. முஸ்லிம்களிடையே பலாத்காரமான துவேஷப் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டதனால், அதன் விளைவாக, காங்கிரஸ் பதவி ஏற்றதற்குச் சில நாட்களுக்கு முன்னால், முஸ்லிம்கள் கட்டுக்கடங்காமல் கிளம்பி விட்டனர். கல்கத்தாவில் நடந்த கலகத்தில் பலர் கொலையுண்டதோடு வீடுகள் கொளுத்தப்பட்டு சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன. அக்காலத்தில் வங்காளத்தில் லீக் மந்திரி சபை நிர்வாகமிருந்ததால் அங்கு அந்த சர்க்கார் ஹிந்துக்களுக்குப் பாதுகாப்பளிக்கவில்லை. எனவே ஹிந்துக்கள் தங்களுக்குள் ஒற்றுமையடைந்து தற்பாதுகாப்புக்குச் சண்டையில் இறங்கத் தயாரானார்கள். முஸ்லிம்கள் அநேகர் கொலையுண்டனர். கலவரம் பல நாட்கள் நடந்தன. சில நாட்களுக்கெல்லாம், முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட கிழக்கு வங்காளத்தில், முக்கியமாக நவகாளி ஜில்லாவிலும் பக்கத்து இடங்களிலும், பெருமளவில் கலவரங்கள் மூண்டன. பல ஹிந்துக்களின் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டுக் கொளுத்தப்பட்டன. அநேகர் பலவந்தமாக முஸ்லிம்களாக மதம் மாற்றப்பட்டனர். இத்தகைய மோசமான நிலைமையைப்பற்றி மகாத்மா காந்திக்கு தகவல்கள் கிடைத்ததும், ஹிந்துக்களுக்கு ஆறுதல் கூறி முஸ்லிம்களைக் கோரிக்கொள்வதற்காக தாம் வங்காளத்திற்குப் போவது என்று முடிவு செய்தார். அவர் நவகாளிக்குச் சென்றார். அவர் விஜயத்திற்கு ஆபத்தில்லாமலில்லை. அவர் தம்முடைய உயிரைப் பற்றிக் கவலைப்படவில்லையாகையால் தைரியமாக அங்கு சென்றார். இதனால் ஹிந்துக்கள் தைரியம் பெற்றதோடு மன உறுதியையும் அடைந்தார்கள். ஆரம்பத்தில் மகாத்மாவின் நல்லெண்ணத்தை முஸ்லிம்கள் சந்தேகித்தபோதிலும், அவர் அங்கிருந்ததாலும் அவருடைய பிரசங்கங்களைக் கேட்டுச் சாந்தமடைந்து தங்களுடைய தவறை முஸ்லிம்கள் உணர ஆரம்பித்தனர்; அஹிம்சை நடைமுறையில் மகாத்மா செய்து காட்டிய அற்புதத்திற்கு இது ஒரு உதாரணம். பின்னால் மற்றும் பல உதாரணங்களுமிருந்தன.

ஏராளமானவர்கள் பீகாரிலிருந்து வங்காளத்திற்குப் போய் பல வேலைகளையும் செய்து பிழைப்பதுண்டு. இப்படிச் செய்கிறவர்களில் படித்தவர்கள்

மிகச் சிலரே. இவர்களில் பெரும்பாலானவர்கள் கல்கத்தாவிலேயே இருந்து வந்தாலும், வங்காளத்தின் எல்லா பகுதிகளிலும், இப்பொழுது பாகிஸ்தானுக இருக்கும் கிழக்குப் பகுதிகள் கூட, ஆங்காங்கு சில பீகாரிகள் இருப்பதைக் காணலாம். கல்கத்தாவில் பெரும் படுகொலைகள் நடந்தபோது சில பீகாரிகளும் கொலையுண்டனர். தப்பித்து பீகாரிலுள்ள தங்களுடைய கிராமங்களுக்கு வந்துவிட்டவர்கள், கல்கத்தாவில் தாங்களும் மற்ற ஹிந்துக்களும் முஸ்லிம்களிடம் அனுபவித்த கொடுமைகளைப் பற்றிச் சொல்லி வந்தனர். இதனுல் முஸ்லிம்களின்பேரில் வெறுப்பு அதிகரித்து விட்டதோடு பீகாரிலும் அதிக அளவில் கலகங்கள் மூண்டுவிட்டன. பீகாரிலிருந்த நிலைமைக்கும், வங்காளத்திலிருந்த நிலைமைக்கும் அதிக வித்தியாசமுண்டு. பீகாரில் ஹிந்துக்கள் அதிகப் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். இந்த மாகாணத்தில் முஸ்லிம்கள் பண வசதியுள்ளவர்கள், தங்களுக்குள் ஒன்றுபட்டு மிருந்தார்களென்றுலும், ஹிந்துக்களை எதிர்த்து நின்று விடுவதென்பது அடியோடு அசாத்தியமென்று சொல்லிவிட முடியாவிட்டாலும் அதிகக் கஷ்டமானதே. பல கிராமங்களில் அவர்களுக்கு என்று தனி இடங்களிருக்கின்றன என்பது உண்மை. எனினும் இம் மாகாணம் முழுவதிலும் நீண்ட காலமாகவே அக்கம் பக்கத்தவர்களாக நட்புடனேயே வாழ்ந்து வந்திருக்கிருர்கள்.

கல்கத்தாவிலிருந்தும் நவகாளியிலிருந்தும் வந்த செய்திகள், வெடிமருந்தில் தீப் பொறிபட்டது போலாகிவிட்டது. முஸ்லிம் லீக் செய்து வந்த அக்கிரமப் பிரசாரத்தையும், அகம்பாவப் போக்கையும் கண்டு அதற்கு முன்னுடியே ஹிந்துக்கள் ஆத்திரமடைந்திருந்தார்கள். மாங்கயர், கயா ஜில்லாக்களில் சில பகுதிகளில் திருப்பியடிப்பதென ஹிந்துக்கள் முடிவு கட்டினர். இதன் விளைவாக அநேக முஸ்லிம்கள் கொலையுண்டதோடு அவர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டு சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டன. இந்த இரு மாகாணங்களிலும் நடந்த கலவரங்களில் ஒரு முக்கியமான வித்தியாசமிருந்தது. வங்காளத்தில் சர்க்கார் அதிகாரிகளும், போலீஸும் அசிரத்தையுட

னிருந்தனர். ஹிந்துக்கள் அடிக்கப்பட்டு கொள்ளை யடிக்கப்படுவதை அனுமதித்துக் கொண்டிருந்தார்கள். பீகாரிலோ, சர்க்காரும் போலீஸூம், கலகக்காரர்கள் விஷயத்தில் தீவிரமாக நடந்துகொண்டு கலகத்தை அடக்குவதற்கு ராணுவத்தையும் கொண்டுவந்தார்கள். தலைமை சர்க்காரில் காங்கிரஸ் அதிகாரம் வகித்தது. பண்டித ஜவாஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், அப்பொழுது காங்கிரஸ் தலைவராக இருந்த ஆச்சாரிய கிருபளானி, மத்ய சர்க்கார் முஸ்லிம் லீக் மந்திரிகள், நான் ஆகிய எல்லோரும் அவசரமாக பீகாருக்குப் போய் கலவரங்களை அடக்க எங்களால் ஆனதை யெல்வாம் செய்தோம். பீகாரில் கலவரம் என்பதை அறிந்ததும் மகாத்மா காந்தி, கலகத்தை நிறுத்தும்படி பீகாரிகளைக் கேட்டுக் கொண்டார். நிறுத்தாவிட்டால், தாம் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளப் போவதாகவும் பயமுறுத்தினர். இதற்கு முதற்படியாக அன்றுடம் தான் சாப்பிடும் உணவின் அளவையும் குறைத்துவிட்டார். மகாத்மா காந்தி உண்ணாவிரதமிருக்கப் போகிறுர் என்ற செய்தி வந்ததும் உடனே கலவரம் நின்றுவிட்டது. அவர் உபதேசத்தை அவர்கள் கேட்டுக்கொண்டு சாந்தமடைந்தார்கள். பீகார் கலவரத்தினுல் வங்காளத்திலும் கலகப் பகுதிகள் அதிகரித்து விடக்கூடும் என்ற பயத்திற்கு ஆதாரமில்லை என்றும் பிறகு தெரிந்தது.

தொல்லை அதோடு தீர்ந்து விடவில்லை. பாகிஸ்தானை அடைந்தே தீருவது என்பதில் முஸ்லிம் லீக் பிடிவாதமாக இருந்ததோடு, ஒரு இடத்திலில்லாவிட்டாலும் மற்ருெரிடத்தில் கலவரம் ஏற்பட்டுவிடும் என்றபயம் இருந்தே வந்தது. சிறிது காலத்திற்கெல்லாம் மேற்குப் பாஞ்சாலத்திலும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் பெருமளவில் கலவரங்களை உண்டாக்கினுர்கள். ஹிந்துக்களையும் சீக்கியரையும் அடித்துக்கொள்ளையிட்டுக் கொன்ருர்கள். 1947 மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் இவர்களில் ஏராளமானவர்கள் தப்பித்து இந்தியாவுக்குள் வந்துவிட்டனர். இதைப் போன்ற தொல்லைகள் தேசத்தின் ஏதாவது ஒரு பகுதியில் தொடர்ந்து இருந்தே வந்தன.

பிரிவினையும் படுகொலைகளும்

மத்திய சர்க்கார் மந்திரி சபையில் காங்கிரஸும் முஸ்லிம் லீகும் ஒற்றுமையாக இருந்து வேலை செய்ய முடியவில்லை. எப்பொழுதும் தகராறு இருந்துகொண்டே வந்தது. இந் நிலைமையைக் குறித்து பிரிட்டிஷ் சர்க்காருக்கும் வருத்தமே. லார்டு வேவலை திருப்பி அழைத்துக்கொண்டு அவருக்குப் பதிலாக லார்டு மவுண்ட் பேட்டனை வைசிராயாக அனுப்பினார்கள். புதிய வைசிராய் வந்ததும், நிலைமையை நேரில் நன்கு பார்த்துக்கொண்டு பிரிட்டிஷ் சர்க்காருடன் கலந்தாலோசிப்பதற்காக இங்கிலாந்துக்குச் சென்றார். இவரை வைசிராயாக நியமித்தபோது பிரிட்டிஷ் சர்க்கார் 1948 ஜூனில் அதிகார மாற்றம் செய்யப்பட்டு விடும் என்று அறிவித்தனர். பிரிட்டிஷ் சர்க்காருடன் கலந்தாலோசித்து விட்டு லார்டு மவுண்ட்பேட்டன் இந்தியாவுக்குத் திரும்பியதும், அதிகார மாற்றம் ஒரு வருஷம் முன் கூட்டியே செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதே சமயத்தில் நாட்டைப் பிரிவினை செய்வதற்கான திட்டமும் வெளியிடப்பட்டது. சிந்து, பலுஜிஸ்தான், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பஞ்சாபிலும், வங்காளத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருந்த பகுதிகள், சியால்கட் ஜில்லாவில் முஸ்லிம்கள் பெரும் பகுதியினராக இருந்த பகுதி ஆகியவை பாகிஸ்தானகப் பிரிந்து விடுவது; மற்றப் பகுதிகள் இந்தியா என்றிருப்பது; இவ்விரு பகுதிகளும் டொமினியன்களாக இருப்பது அந்தந்த பகுதியைச் சேர்ந்த மெம்பர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை அரசியலை அமைத்துக் கொள்ளுவது என்பதே இப்பிரிவினை ஏற்பாடு. இந்த இரு டொமினியன்களுக்கும் அரசியலை நிர்ணயித்துக்கொள்ள அவையவைகளின் அரசியல் நிர்ணய சபைக்கு அதிகாரம் உண்டு. இந்த விவரங்களைக்கொண்ட இந்திய சுதந்திரச் சட்டத்தை பிரிட்டிஷ் பார்லிமெண்டு நிறைவேற்றியது. அதோடு, பார்லிமெண்டு செய்த எந்தச் சட்டத்தையும் திருத்தவோ, ரத்துச் செய்து விடவோ அல்லது தொடர்ந்து

வைத்துக்கொள்ளவோ அரசியல் நிர்ணய சபைக்கு அதிகாரமுண்டு. பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இருப்பதா அல்லது பூரண சுயேச்சையுடன் இருப்பதா என்பதையும் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் அதனதன் அரசியல் நிர்ணய சபை நிர்ணயித்துக் கொள்ளும். லார்டு மவுண்ட் பேட்டன் லண்டனுக்குச் சென்றபோது, இந்தப் பிரிவினைத் திட்டத்திற்கு காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகிய இரண்டின் சம்மதத்தையும் பெற்றுச் சென்றிருந்தார். இந்த ஒப்பந்தத்தை பிரிட்டிஷ் சர்க்கார் அப்படியே அமுலுக்குக் கொண்டுவந்தது.

இந்தப் பிரிவினைத் திட்டத்தை காங்கிரஸ் காரியக் கமிட்டி முக்கியமாக மத்திய மந்திரி சபையிலிருந்த காரியக் கமிட்டியின் உறுப்பினர்களே ஒப்புக் கொண்டார்கள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியம். பிரிவினையே சரியான பரிகாரம் என்று மகாத்மா எண்ணவே இல்லை. பிரிவினை எந்தக் கொள்கையின் பேரில் செய்யப் பட்டதோ அதை மகாத்மா ஒப்புக் கொள்ளவுமில்லை. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தனித்தனி தேசிய இனங்கள். எனவே ஒருவரின் கீழ் மற்றொருவர் இருக்கவே முடியாது என்ற அடிப்படையிலேயே முஸ்லிம் லீக் பிரிவினையை வற்புறுத்தியது. பிரிவினை செய்து விட்டால், முஸ்லிம் களைப் பெரும்பகுதியினராகக் கொண்ட இடங்களில் முஸ்லிம்கள் ஆட்சியும், ஹிந்துக்களைப் பெரும்பகுதியின ராகக் கொண்ட பகுதியில் ஹிந்துக்கள் ஆட்சியுமிருக்கும் என்பதும் அவர்கள் வாதம். இந்த இரண்டு தேசிய இனக் கொள்கை ஆபத்தானது என்று கூறி மகாத்மா இதை ஒப்புக் கொள்ளவே இல்லை. ஆனால் இந்தப் பிரிவினைக்கு சம்மதித்துவிட்டவர்களோ, தேசத்தில் அப்பொழுது இருந்து வந்த நிலைமையைப் பார்த்து அலுத்துப்போய் இதை ஒப்புக்கொண்டு விட்டார்கள். கலவரம் என்பது தினசரி சம்பவமாகிவிட்டது. அது தொடர்ந்து நடந்து கொண்டுதான் வரும் என்று இவர்கள் கண்டார்கள். சர்க்காரில் காங்கிரஸும் பிரதிநிதித்துவம் வகித்திருந் தாலும், கலவரங்களை அடக்குவதற்கு அதனால் சரியான படி எதுவுமே செய்ய முடியவில்லை. ஏனெனில் முஸ்லிம் லீக் மந்திரிகள், ஒவ்வொன்றுக்கும் முட்டுக் கட்டை

போட்டு வந்தார்கள். முஸ்லிம் லீக் மந்திரி சபைகளிலிருந்த மாகாணங்களிலோ, தங்களுடைய செய்கை நாடு முழுவதிலும் என்ன நிலைமையை உண்டாக்கும் என்பதைப் பற்றியே கொஞ்சங்கூட கவலைப்படாமல், தாங்கள் வைத்ததே சட்டம் என்ற முறையில் நடந்துகொண்டு போனார்கள். தங்களுடைய கட்சி ஸ்தாபனத்தை பலப்படுத்துவதில் திடமாக இருந்ததோடு தங்களால் முடிந்த இடங்களிலெல்லாம் ஹிந்துக்களை எதிர்த்தும் வந்தார்கள். இதனால் நிர்வாகத்தை நடத்திக் கொண்டு போவது என்பதே முடியாத காரியமாகி விட்டது. பிரிவினையை ஒப்புக் கொண்டால், நம்மிடமிருக்கும் பகுதிகளிலாவது நம் கருத்துக்கு ஏற்றாற்போல நிர்வாகத்தை நடத்திக்கொண்டு போகலாம்; தேசத்தின் பெரும் பகுதியில் சட்டத்தையும் அமைதியையும் நிலை நிறுத்தி, நாம் அதற்குச் சிறந்த சேவையைச் செய்தோம் என்ற வகையில் அங்கு ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று நாங்கள் நினைத்தோம். இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் சிறுபான்மையோர் அதிகமாக இருந்து கொண்டுதான் வருவார்களாகையால், இவர்களைப் பாதுகாப்பதற்கு இவ்விரு பகுதிகளிலும் என்ன செய்ய வேண்டுமோ அதை இந்தியா முழுவதிலும் செய்யலாமாகையாலும் ஹிந்து முஸ்லிம் பிரச்னையை இப்பிரிவினை தீர்த்துவிடப் போவதேயில்லை என்பது தெளிவானது. ஆனால் இதை ஒத்துக்கொள்ள முஸ்லிம்கள் தயாராயில்லை. ஆகவே பிரிவினையை ஏற்றுக்கொண்டு விடுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லாது போயிற்று.

அப்படிப் பிரிவினைக்கு ஒப்புக்கொண்டது நாசகரமானதாக முடியும் என்று மகாத்மா பயந்தார். பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் விடப்பட்டுவிடும் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர் எப்படி நடத்தப்படுவார்கள் என்பது தமக்குத் தெரியாததினால், கடைசி வரையில், பிரிவினையை அவர் ஒப்புக்கொள்ளவேயில்லை. ஆனால் நிர்வாகப் பொறுப்பு வகிப்பவர்கள், நிர்வாகத்தை நடத்திக்கொண்டு போவது சாத்தியமில்லை என்பதைக் கண்டுகொண்டனர். ஒன்று பிரிவினை ஏற்பட வேண்டும், இல்லையானால் முஸ்லிம் லீகுடன் பகிரங்கமான யுத்தம் தொடுக்க வேண்டும்; இதைத் தவிர வேறு வழியே இல்லை.

என்பதே அவர்கள் அனுபவம். இதையும் மகாத்மா உணர்ந்ததும், தாம் பிரிவினையை எந்த விதத்திலும் எதிர்க்காமல் சும்மா இருந்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தார். தலை நகரில் பிரிவினைத் திட்டம் நிறைவேற்றப் பட்டு வந்த சமயத்தில், அதாவது சர்க்காரிலிருந்த காங் கிரஸ், முஸ்லிம் லீக் மந்திரிகள், பிரிவினையாகாத இந்தியா வின் ஆஸ்திகள், கடன்களைப் பங்கு போட்டுக் கொள்ளும் வேலை நடந்த போது, மகாத்மா காந்தி டில்லியில்தான் இருந்தார். சர்க்கார் ஒரு பிரிவினைக் கமிட்டியை நிய மித்து, அதில் சர்தார் வல்லபாய் பட்டேலும், நானும் காங்கிரஸின் சார்பில் மெம்பர்களாக இருந்தோம். இந்தக் கமிட்டியே இந்திய சர்க்காரின் ஆஸ்திகள், கடன்கள், ராணுவம், ராணுவ ஸ்டோர்கள், தளவாடங்கள், கட்டி டங்கள், ரயில்வேக்கள் முதலியவைகளை யெல்லாம் பிரித்துப் பங்கு போட்டது. அதாவது மேஜை நாற்காலி கள், டைப் அடிக்கும் யந்திரங்கள், சர்க்கார் உத்தியோ கஸ்தர்களுள்பட எல்லாமே இந்தியாவுக்கும், பாகிஸ்தா னுக்கு மிடையே பங்கு போடப்பட்டன.

நான் இக் கமிட்டியில் வேலை செய்து கொண்டிருந்த போது, நாள்தோறும் காலையில் மகாத்மா காந்தி உலாவச் செல்லும்போது அவரைச் சந்திப்பேன். தினமும் காலை யில் தம்மை சந்திக்கும்படி மகாத்மா எனக்கு அறிவித் திருந்தார். எனவே பிரிவினைக் கமிட்டியில் என்ன நடந் தது என்பதை அன்றுடம் அவருக்கு தெரிவிக்கும் வாய்ப்பு எனக்கு இருந்தது. நடந்து கொண்டிருந்த காரியங்களைக் குறித்து அவர் மனக்கஷ்டமடைந்திருந்ததை நான் அப் பொழுது அறிய முடிந்தது. ஆனால் அவர் எந்தத் தடை யையும் சொல்லுவதேயில்லை. "சாத்தியமான வரையில் அனியாயம் எதுவும் நடந்து விடாதபடிப் பாருங்கள்" என்று என்னிடம் அடிக்கடி கூறுவார். சர்க்கார் சிப் பந்திகள், தங்கள் இஷ்டப்படி பாகிஸ்தானுக்கும் போக லாம் அல்லது இந்தியாவிலுமிருக்கலாம் என்று அறிவிக்கப் பட்டனர். ராணுவப் படையினருக்கும் இதே உரிமை அளிக்கப்பட்டது. இதனால் எல்லா முஸ்லிம்களுமே பாகிஸ்தானுக்குப் போய்விட்டார்கள். இவ்விதம் சிப் பந்திகளைப் பிரிவினைச் செய்துகொண்டது இந்திய சர்க்

கார் சிப்பந்திகளை மாத்திரமே, பிரிவினைக்கு ஆளான பஞ்சாப், வங்காளம், அஸ்ஸாம் ஆகிய மாகாணங்களிலும், இதேபோல சர்க்கார்கள் சாமான்களையும், சிப்பந்திகளையும் பிரித்துக் கொண்டன. பிரிவினைக்கு ஆளாகாத மாகாணங்கள் எல்லாம் அப்படியே இருந்தன. ஆகஸ்டு 15-ந் தேதிக்குள், ராணுவத்தைப் பிரிப்பது முடிவாகாது போனாலும், மற்றவைகளைப் பிரிப்பதெல்லாம் வெகு சீக்கிரத்தில் முடிந்துவிட்டன. இப் பிரிவினையின் காரணமாக, ராணுவத்திலிருந்தவர்களைத் தவிர இந்தியாவிலிருந்த மற்ற பிரிட்டிஷ் அதிகாரிகளெல்லோரும் அநேகமாக இந்தியாவை விட்டுப் போய் விட்டார்கள். பாகிஸ்தானிலிருந்தவர்கள் மாத்திரம் தொடர்ந்து அங்கேயே இருந்து வந்தனர். பிரிவினையின் மற்றொரு கொடூரமான விளைவு என்னவெனில், பாகிஸ்தானில் பெரிய உத்தியோகங்களில் ஒரு ஹிந்து அதிகாரிகூட கிடையாது. அதோடு அவர்களுக்கும், சீக்கியர்களுக்கும் அநீதிகளும், அக்கிரமங்களும் ஆரம்பமாயின. அவர்களுடைய நன்மையையும் சுகத்தையும் கவனிக்க அங்கு யாருமே இல்லை.

டில்லி, லாகூர், கல்கத்தா ஆகிய இடங்களில் பிரிவினை வேலைகள் அமைதியாகவே நடந்தன. ஆகஸ்டு 15-ந் தேதிக்கு முன்னாலேயே கிழக்கு பஞ்சாப், மேற்கு வங்காள சர்க்கார்கள் காங்கிரஸ் கைக்கு வந்துவிட்டன. பாகிஸ்தானுக்குப் போய்விட்ட மாகாணங்களிலிருந்த லீக் மந்திரி சபைகளும், இந்தியாவில் சேர்ந்த மாகாணங்களிலிருந்த காங்கிரஸ் மந்திரி சபைகளும், பிரிவினைக்கு முன்னால் இருந்ததைப் போலவே நடந்துவந்தன. ஒரு பக்கத்தில் கிழக்கு, மேற்குப் பஞ்சாப்புக்கு மத்தியில் பொதுவான எல்லைக்கோடும், மற்றோர் பக்கம் கிழக்கு வங்காளத்திற்கும் அஸ்ஸாமுக்கு மிடையே ஒரு பொதுவான எல்லையுமிருந்தன. இந்த எல்லை அநேகமாகத் திட்டமாக வகுக்கப்பட்டிருந்தும் சில பகுதிகளைப் பற்றிய நிலைமை தெளிவாக இல்லை. எனவே இதற்காக இரு காங்கிரஸ் பிரதிநிதிகள், இரு லீக் பிரதிநிதிகள் ஆகியவர்களைக் கொண்ட மத்தியஸ்த சபை ஆங்கிலேயரான ஸர். ஸிரில் ராட் கிளிப்பின் தலைமையில் நியமிக்கப்பட்டது. ஆகஸ்டு 15-ந் தேதிக்குள் இந்த மத்தியஸ்த சபை தன்னுடைய முடிவைக் கூறிவிட

முடியவில்லை. ஆனால் சில தினங்களுக்குப் பிறகு அதன் தீர்ப்பு வெளிவந்ததும், ஒரு பகுதி ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்துக்கு மாற்றவேண்டியதாக இருந்தது தெரிந்தது. எனவே இவ்விதம் மாற்றப்படும் பகுதிகளிலிருந்த மக்கள் இதனால் ஆத்திரமடைந்தார்கள்: ராட்கிளிப் தீர்ப்பினால் பாகிஸ்தானுக்கு மாற்றப்பட்ட பகுதியிலிருந்த ஹிந்துக்களே இவ்விதம் வெறுப்படைந்தார்கள்.

அகஸ்டு 15-ந் தேதிக்கு முன்னாலேயே, இந்தியா, பாகிஸ்தான் எல்லையில் ராணுவம் நிறுத்தப்பட்டதோடு, தொல்லை ஏற்பட்டால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று நம்பப்பட்டது. ஆனால் ராணுவம் தன்னுடைய கடமையில் தவறிவிட்டது. ஹிந்துக்களுக்கும், சீக்கியருக்கும் அது பாதுகாப்பு அளிக்கவில்லை. மேற்கு பாஞ்சாலத்தில் இவர்கள்மீது பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்டதோடு இவர்களில் பலர் கொல்லப்பட்டனர். இவர்களுடைய சொத்துக்களும் கொள்ளையிடப்பட்டன. நமது முதல் சுதந்திர தினத்தை நாம் டில்லியில் கொண்டாடிக் கொண்டிருந்தபோது, ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் அடியோடு ஒழித்துக் கட்டிவிட மேற்குப் பாகிஸ்தானில் ஏற்பாடுகள் நடந்து வந்தன. இந்த சம்பவங்களைப் பற்றிய செய்தி சில தினங்கள் கழித்தே டில்லிக்குத் தெரிந்தபோதிலும், கிழக்கு பஞ்சாப் மக்களுக்கு இது உடனே எட்டிவிட்டது. தாங்கள் சும்மா இருந்துவிட முடியாமல், முஸ்லிம்களைத் தாக்கக் கிளம்பினர். இது டில்லியிலும் எதிரொலித்தது. அதிக அளவில் கலவரங்கள் மூண்டன. மேற்கு பஞ்சாபில் உதவியற்றுத் திக்கற்ற நிலைமையிலிருந்த ஹிந்துக்களும் சீக்கியரும், தங்களுடைய உடைமைகளையெல்லாம் அங்கேயே போட்டுவிட்டு, கூட்டங் கூட்டமாக கிழக்குப் பஞ்சாப்புக்கும், இந்தியாவில் அதற்குக் கிழக்கிலுள்ள பகுதிகளுக்கும் வந்தனர். இந்தியாவிலிருந்த முஸ்லிம்களும் பாகிஸ்தானுக்குச் சென்றனர்.

ஆகஸ்டு 15-ந் தேதிக்கு சில தினங்களுக்கு முன்னால் மகாத்மா காந்தி டில்லியை விட்டுப் புறப்பட்டு நவகாளிக்குப் போய்க் கொண்டிருந்தார். கல்கத்தாவில் முஸ்லிம்களுக்கு எதிராக ஹிந்துக்கள் கலவரம் செய்யவே அங்

நகரிலேயே தங்குவது என முடிவு செய்துவிட்டார். தமது உயிருக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாமல், முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் பகுதியில் குடியிருந்துகொண்டு, ஹிந்து-முஸ்லிம் கலவரத்தை அசாத்தியமானதாக்கும் சூழ்நிலைமையை அங்கு உண்டாக்கினார். அவருடைய பிரசன்னமும், அவருடைய அஹிம்சையும் விளைவித்த அற்புதம் என்று இந்த மாறுதலை எல்லோரும் போற்றினர். மகாத்மாவின் அஹிம்சா தர்மமும், வெற்றி பெற்றே தீருவது என்பதில் அவர் கொண்டுவிட்ட உறுதியும் முஸ்லிம்களுக்கு முழு பாதுகாப்பையும் அளித்தன. ஆனால் மேற்கு வங்காளத்திலும் கொஞ்சமும் மனிதத் தன்மையே இல்லாத அட்டூழியங்கள் செய்யப்பட்டனவாகையால் எந்த சமூகம்தான் யோக்கியமாக நடந்தது என்று சொல்லிக் கொள்வதற்கில்லை.

டில்லியில் ஏற்பட்ட நிலைமையைப் பற்றிய செய்தியை அறிந்ததும் மகாத்மா காந்தி உடனே டில்லிக்குத் திரும்பி வந்து, கலவரங்களை அடக்குவதற்கான காரியங்களில் தமது முழு பலத்துடன் ஈடுபட்டார். டில்லியிலிருந்த காங்கிரஸ் மந்திரிகளை யெல்லாம் கொன்றுவிட்டு, சர்க்கார் காரியாலயத்தை ஆக்ரமித்துக்கொண்டு, இந்தியா மீது தன்னுடைய ஆட்சியைக் கொண்டு வந்துவிட பாகிஸ்தான் சதி செய்தது என்றும், அது முடியாவிட்டால் இந்தியாவெங்கும் குழப்பத்தை உண்டாக்கியாவது தீருவது என்று பாகிஸ்தான் திட்டம் போட்டிருக்கிறது என்றும் டில்லியில் வதந்திகள் எழுந்தன. அதன் பேரிலேயே டில்லியில் கலவரம் மூண்டது. எனவே முஸ்லிம்களை யெல்லாம் அடியோடு அழித்து விடுவதென்று ஹிந்துக்கள் கிளம்பிவிட்டனர். நிலைமையை வெகு சீக்கிரத்தில் உணர்ந்துகொண்ட மகாத்மா, கலவரங்களை அடக்க முற்பட்டார். முஸ்லிம்கள் பலர் இதற்குள் இந்தியாவைவிட்டுப் போய்விட்டனர். என்றாலும் முஸ்லிம்களை இந்தியாவிலிருந்து அடியோடு ஒழித்துவிடுவது என்ற எண்ணத்தை மகாத்மாவின் சேவையின் காரணமாக, ஹிந்துக்கள் விட்டுவிட்டனர். இதற்கு மத்தியில் மேற்கு பாகிஸ்தானிலிருந்து ஹிந்துக்களும் சீகியரும் அடியோடு விரட்டி யடிக்கப்பட்டுவிட்டார்கள்.

இதேபோல கிழக்குப் பஞ்சாபிலும், பக்கத்து ராஜ்யங்களிலுமிருந்த முஸ்லிம்களும் விரட்டப்பட்டு விட்டனர்.

மகாத்மா காந்தியின் மகத்தான செல்வாக்கும், அவருடைய ஒழுக்கத்தின் பலமுமே, இந்தியாவிலிருந்து முஸ்லிம்கள் அடியோடு ஒழிக்கப்படாமலும், நிர்ப்பந்தமாக வெளியேறிப் போய்விட நேராமலும் தப்பினர். காரணம் எதுவுமேயின்றி கலவரங்கள் மூண்டுவிடக்கூடிய அந்த அளவுக்கு இந் நாட்டில் வகுப்புத் துவேஷம் வளர்ந்து விட்டது.

டில்லி முழுவதிலும் இத் தொல்லை பரவ வந்தது. அமைதியை நிலைநாட்ட போலீஸும் ராணுவமும் உபயோகிக்கப்பட்டன. ஆயினும் கலவரத்தை அடியோடு அடக்கிவிட அவர்களாலும் முடியவில்லை; கலவரச் செய்தியை அறிந்ததும் பண்டித ஜவாஹர்லால் நேரு தமக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல், ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஓடோடிச் சென்று அமைதியை உண்டாக்கப் பாடுபட்டார். கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கலவரத்தை அடக்கும்படி போலீஸுக்கும் ராணுவத்திற்கும் உத்தரவிட்டார். மகாத்மா காந்தி டில்லி வந்து சேர்ந்ததும், கலகங்களை அடக்க தமது முழு செல்வாக்கையும் உபயோகித்தார். கலவரங்களும் சில தினங்களில் அடங்கிவிட்டன.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் வெவ்வேறு மதத்தினராயாயினும், இருவரும் ஒரே தேசிய இனத்தார் என்று மகாத்மா நம்பினார். சாதி மத பேதமின்றி எல்லோருக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டியது சர்க்காரின் கடமை என்று அவர் கூறியதோடு, அதை வற்புறுத்தியும் வந்தார். மேற்கு பாகிஸ்தான் சர்க்கார், சந்தர்ப்பத்தையும் அனுமதியையும் அளித்திருந்தால், மகாத்மா மேற்கு பாகிஸ்தானுக்கே போயிருப்பார். ஆனால் அவருக்கு அந்த வாய்ப்பும், அனுமதியும் கிடைக்கவில்லை. பாகிஸ்தானில் ஹிந்துக்களும் சீக்கியர்களும் தொடர்ந்து இருந்துவர முடியாது என்பதை இந்திய சர்க்கார் உணர்ந்ததும், இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குப் போகிறவர்களையும், பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்துவிட விரும்புகிறவர்களை

யும் பாதுகாப்புடன் கொண்டு போகவும், கொண்டுவரவும் பாகிஸ்தான் சர்க்காருடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டது. அவர்கள் எல்லோருக்கும் சாத்தியமான எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. அவர்களுடைய பாதுகாப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளும் இருந்தன. இதன் மூலம் சுமார் 60 லட்சம் ஹிந்துக்களும், சீக்கியரும் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு, தங்கள் சொத்துக்களை யெல்லாம் அங்கேயே விட்டுவிட்டு, வந்து சேர்ந்தனர். அதே தொகையினரான முஸ்லிம்களும் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்றார்கள். சர்க்கார் பாதுகாப்புடன் ரயில்களில் பலர் கொண்டுவரப்பட்டார்கள். ஆனால் ஏராளமானவர்களோ, மாட்டு வண்டிகளிலும், ஒட்டகங்கள் மீதும், அவைகளில் தாங்கள் எடுத்துவர முடிந்த அளவு தங்களுடைய உடமைகளுடன் வந்து சேர்ந்தார்கள்.

லாகூரில் ஹிந்துக்கள் பல கோடி ரூபாய்கள் செலவில் பல ஸ்தாபனங்களை அமைத்திருந்தார்கள். ஆனால் தங்கள் உடமைகள், கட்டிடங்களை யெல்லாம் அப்படியே விட்டுவிட்டு வந்து விட்டார்கள். தொகையைப் பொறுத்தவரையில், மேற்கு பஞ்சாபிலிருந்து ஹிந்துக்களும், சீக்கியர்களும் எவ்வளவுபேர் கிழக்குப் பஞ்சாபுக்கு வந்துவிட்டார்களோ, அதற்குச் சமமான தொகையினரான முஸ்லிம்கள் கிழக்குப் பஞ்சாபிலிருந்து மேற்குப் பஞ்சாப்புக்குப் போய்விட்டார்கள். ஆனால் ஹிந்துக்களும், சீக்கியரும் பண வசதியுடன் அங்கு வாழ்ந்து வந்ததால் அவர்களுக்கு கட்டிடங்கள், நிலங்கள், பழத் தோட்டங்கள் முதலியவைகளெல்லாமிருந்தன. ஆனால் முஸ்லிம்கள் அவ்வளவு பண வசதியுள்ளவர்களல்ல. ஆகையால், ஹிந்துக்களும், சீக்கியரும் அங்கே விட்டுவிட்ட அளவு கட்டிடங்கள், நிலங்கள் முதலியவைகளை முஸ்லிம்கள் இங்கு விட்டுவிட்டுப் போகவில்லை. அதோடு மேற்குப் பஞ்சாப்பில் பல கால்வாய்களின் பாசன வசதிகள் இருந்ததால் அப் பகுதியிலிருந்த நிலம் அதிகச் செழிப்பானது. ஆனால் கிழக்குப் பஞ்சாப்பில் அப்படியல்ல. இவ்விதம் ஹிந்துக்கள் ஏராளமான சொத்துக்களை இழந்தார்கள். மிகப் பணக்காரர்களாக இருந்தவர்கள் கூட பரம ஏழை

களாகிவிட்டார்கள். எப்படியோ கஷ்டப்பட்டு உயிரோடு வந்து சேர்ந்தனர்.

இவ்விதமெல்லாம் ஏற்பட்டுவிட்டதைக் கண்டு மகாத்மா அதிக மனவேதனை யடைந்தார். நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் தாம் உயிரோடிருப்பதற்கு முயற்சி செய்து வருவதாக முன்னெல்லாம் சொல்லி வந்தார்; மேலே சொன்ன வேதனை தரும் சம்பவங்களுக்குப் பிறகோ, மனம் நொந்து போய், தாம் உயிரோடு இருக்க விரும்பவில்லை என்று மகாத்மா சொல்ல ஆரம்பித்தார். ஹிந்துக்கள், சீக்கியர், முஸ்லிம் ஆகிய எல்லோரும் மிருகத்தனமாக அட்டூழியங்களில் இறங்கிவிட்டனர். எந்த ஒரு சமூகமாவது அட்டூழியங்களைச் செய்யாமல் யோக்கியமாக இருந்தது என்று யாரும் கூறிக்கொள்ள முடியாத நிலைமை உண்டானதைப் பார்த்து அவருடைய உள்ளம் வெதும்பிவிட்டது. இவ்வளவெல்லாம் நடந்துவிட்டபோதிலும், மகாத்மா தமது நம்பிக்கையை மாத்திரம் இழந்துவிடவில்லை. இவைகளெல்லாம் ஏதோ தற்காலிகமாக ஏற்பட்டுவிட்ட பைத்தியக்காரத்தனத்தின் கோர விளைவுகளே என்றும், நாளாவட்டத்தில் இந் நிலைமை போய், எல்லா சமூகத்தினரும் முன் போல சகோதரர்களாக வாழ்வார்கள் என்றும் அவர் நம்பினர். நல்லெண்ணத்தோடு கூடிய தான சூழ் நிலையை உண்டாக்குவது தம்முடைய முதல் கடமை என்றும் எண்ணினர். ஆகவே இதற்காக தாம் செய்யும் முயற்சிக்கு இடையூருகவோ அல்லது தடையாகவோ இருக்கும் எந்த நடவடிக்கையையும் அவர் விரும்பவில்லை. அஹிம்சை அதனுடைய வேலையைச் செய்துவர அனுமதித்து, பதிலுக்கு பதில் செய்வதென்பதிலிருக்கும் நம்பிக்கையைக் கைவிட்டால், அல்லது அது வெறுக்கப்பட்டால், ஹிந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியரும் தாங்கள் முன்னால் வசித்து வந்த இடங்களுக்குத் திரும்பிப்போக முடியும் என்று நினைத்தார். இன்னும் அங்கு கிடைக்கக் கூடிய நிலம் முதலிய தங்களுடைய சொத்துக்களை அடையும் காலம் அவர்களுக்கு வரும் என்றும் மகாத்மா நம்பினர். அந்த உணர்ச்சியுடன் வேலை செய்வதோடு அந்த நல்லெண்ணச் சூழ்நிலையை உண்டாக்குவதற்குத் தன்னாலியன்றதையெல்லாம்

செய்யும்படி இந்திய சர்க்காருக்கு அடிக்கடி ஆலோசனையும் சொல்லிக்கொண்டிருந்தார்.

சில தினங்களுக்குப் பிறகு டில்லியில் கலவரம் அடங்கியது. ஆனால் ஆத்திரமும் பரபரப்பும் மாத்திரம் இருந்து வந்தது. எந்த நல்லெண்ண உணர்ச்சி சீக்கிரத்தில் ஏற்பட வேண்டும் என்று மகாத்மா விரும்பினாரோ அது இல்லை. முஸ்லீம்கள் விட்டுப்போன வீடுகள் காலியாகவே இருந்தன. அந்த வீட்டுக்காரர்கள் தலைநகருக்குத் திரும்பி வந்தால் அவர்களுக்குத் திரும்பக் கிடைக்கும்படிச் செய்வதற்காக அந்த வீடுகள் காலியாகவே இருக்கும்படி இந்திய சர்க்கார் செய்தனர். ஆனால் அது சுலபமானதாக இல்லை. பல லட்சக்கணக்கான ஹிந்துக்களும், சீக்கியரும், தங்களுடைய வீடுவாசல்களையும், சொத்துக்களையும் பாகிஸ்தானில் விட்டு விட்டு இங்கு வந்து, குடியிருக்க வீடில்லாமல், பிழைப்புக்கு வழியில்லாமல் தெருக்களில் திண்டாடிக்கொண்டிருந்தார்கள். வீடுகள் காலியாகக் கிடப்பதைப் பார்த்ததும் அவர்களுக்குப் பொறுக்கவில்லை. ஹிந்துக்கள் பல மசூதிகளையும் ஆக்ரமித்துக்கொண்டனர். வெறுப்பும், ஆத்திரமும் உச்ச நிலையிலிருந்ததால் எந்த நேரத்திலும் மீண்டும் கலவரம் மூண்டுவிடக்கூடும் என்ற பயம் இருந்துவந்தது. நிலைமையில் அபிவிருத்தியை உண்டாக்குவதற்காக மகாத்மா உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். முஸ்லிம்கள் தங்கள் வீடுகளுக்கு பத்திரமாகத் திரும்பலாம் என்று முஸ்லிம்களுக்கு ஹிந்துக்களும், சீக்கியரும் வாக்குறுதி யளிக்கும் வரையில், அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளுவதாக அவர்கள் உறுதி கூறும் வரை, மகாத்மா உண்ணாவிரதமிருந்தார். ஹிந்துக்கள் ஆக்ரமித்துக்கொண்டிருந்த மசூதிகளை காலி செய்து விட்டனர். நாளாவட்டத்தில் பல மசூதிகள் முஸ்லீம்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இருந்துவந்த ஆத்திரத்தையும், பரபரப்பையும் மகாத்மாவின் உண்ணாவிரதம் தணித்துவிட்டது. துவேஷமும் அதிக அளவு குறைந்தது. தாங்கள் பத்திரமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையை முஸ்லீம்கள் பெற்றார்கள். அந்த நாட்களில் நான் உடம்பு குணமில்லாமல் டில்லியில் இருந்துவந்தேன். என்றாலும் மகாத்மாவின் உண்ணாவிரத

சமயத்தில் அமைதியை உண்டாக்குவதற்காக அமைக்கப்பட்ட ஒரு கமிட்டிக்கு என்னைத் தலைவராகப் போட்டார்கள். அந்த கமிட்டியின் சார்பில் மகாத்மாவுக்கு வாக்குறுதியளித்த பிறகே அவர் உண்ணாவிரதத்தை நிறுத்தினார். தங்களுக்கு மகாத்மா காந்தியைவிடச் சிறந்த நண்பரும், பாதுகாப்பாளரும் வேறு யாருமில்லை என்பதை அப்பொழுது முஸ்லிம்கள் உணர்ந்தனர். அவருடைய அகிம்சை வெளிக்குத் தெரியாவிட்டாலும், வேலை செய்தது. அவர் உயிருடன் இருந்திருப்பாரானால், வெளியேறி வந்துவிட்ட ஹிந்துக்களும் சீக்கியரும் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிப்போய், பாகிஸ்தானுக்குப் போய்விட்ட முஸ்லிம்களெல்லோரும் இந்தியாவுக்குத் திரும்பிவிடும் நாளை அவரும், நாடும் நிச்சயம் கண்டேயிருக்கும். ஆனால் கடவுள் சித்தம் வேறாக இருந்துவிட்டது. 1948 ஜனவரி 30ந் தேதி ஒரு பாதகனின் துப்பாக்கித் தோட்டாவுக்கு பலியாகி அவர் மாண்டார்.

மகாத்மா மாண்டார்

லார்டு வேவலின் மந்திரி சபையில் 1946 செப்டம்பர் 2-ந் தேதி சேர்ந்தோம் என்பதை முன்னாலேயே கூறியிருக்கிறேன். உணவு, விவசாய இலாகாக்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன. அப்பொழுது நாட்டில் உணவுப் பற்றாக் குறை இருந்தது. எங்காவது பஞ்சம் ஏற்பட்டு, வங்காளப் பஞ்சம் போல லட்சக் கணக்கானவர்கள் பட்டினி கிடந்து செத்து மடிய நேர்ந்து விடுமோ என்ற பயமும் இருந்தது. மக்களிடமிருக்கும் உபரி உணவு தானியங்களையெல்லாம் சர்க்கார் வாங்கி சேகரித்து வந்தது. அநேகமாக எல்லா டவுன்களிலும் நகரங்களிலும், முக்கியமாக தென்னாட்டில் பல கிராமங்களிலும்கூட, ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்குப் பத்து அல்லது பன்னிரண்டு அவுன்ஸ் உணவு தானியம் என்று பங்கீடு செய்யப்பட்டது. இவ்விதம் பங்கீடு கொடுக்கும் முறை முறிந்துபோய் விடாதபடி ஒவ்வொரு ரேஷன் கடையிலும் அதற்குப் போதுமான தானியம் இருக்கும்படிப் பார்க்க வேண்டியது என்னுடைய முக்கியமான வேலை. ஆகையால் சாத்தியமான வரையில் உள் நாட்டில் உணவு தானியங்களை வாங்கி சேகரித்து, வெளி நாடுகளிலிருந்தும் உணவு தானியங்களை இறக்குமதி செய்வதே உணவு இலாகாவின் இடைவிடாத முயற்சியாக இருந்தது. ஆனால், நாங்கள் என்னதான் முயற்சி செய்தும், தினத்திற்குப் பத்து அல்லது பன்னிரண்டு அவுன்ஸுக்குமேல் உணவுதானியம் கொடுப்பதோ அல்லது ஒவ்வொரு பகுதியிலுமிருக்கும் மக்களுக்கு அவர்களுக்குப் பழக்கமான தானியங்களையே கொடுப்பது என்பதோ முடியவில்லை. முதலில் அரிசிப் பஞ்சம் அதிகமாக இருந்ததால், அரிசியையே முக்கியமான ஆகாரமாகக் கொண்ட தென்னிந்தியப் பகுதிகளுக்குக்கூட சோளத்தையும், கோதுமையையும் நாங்கள் சப்ளை செய்ய வேண்டியதாயிற்று. இந்த தானியங்களை மாவாக்குவதற்கு எந்திரங்களோ அல்லது ரொட்டி சுடுவதற்கு இருப்புச் சட்டிகளோ அம் மக்களிடம் கிடையாது. இந்த தானியங்களை எப்படிச்

செய்து சாப்பிடுவது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. கொஞ்ச காலத்திற்குப் பிறகு, பெரும்பாலும் கோதுமை சாப்பிடுகிறவர்களையே கொண்ட டில்லிக்கும், ஐக்ய மாகாண மேற்குப் பகுதிக்கும், அரிசி கொடுக்க வேண்டிய தாயிற்று. ஏனெனில் அந்தச் சமயம் கோதுமை கைவச மில்லை. இந்த நிலைமை 1946-லிருந்து 1947 கடைசி வரை யில், நான் அந்த இலாகா மந்திரியாக இருந்த காலம் முழு வதும், இருந்து வந்தது. அந்த நாட்களில் சில இடங்களில் உணவுப் பொருள்கள் ஸ்டாக் அதிகமாகக் குறைந்துபோய் ஒன்றிரண்டு நாட்களுக்கு மாத்திரமே போதும் என்ற நிலைமை உண்டாகிவிடும். ஸ்டாக்கு நிலைமை, பொது வான உணவு நிலைமை ஆகியவைகளைப் பற்றிய தகவல்கள் நாட்டின் பல இடங்களிலிருந்தும் இலாகாவுக்கு வந்து கொண்டிருக்கும். சாத்தியமான வரையில் எல்லா இடங் களிலும் சரியானபடி ஸ்டாக் இருக்கும்படிச் செய்ய முயற்சி செய்யப்படும்.

1946 நவம்பரில் மீரத்தில் காங்கிரஸ் மகாநாடு நடந்தது. அதற்கு ஆச்சாரிய கிருபளானி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது மத்திய சர்க்கா ரிலும், மாகாணங்களில் எங்கெல்லாம் சட்ட சபைகளில் காங்கிரஸ் பெரும்பான்மை பலத்துடனிருந்ததோ அங்கெல் லாம் அமைந்த காங்கிரஸ் மந்திரி சபைகளும், காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் கண்ட கொள்கையின்படி ஆட்சியை நடத்திவந்தன. ஆனால் நான் முன்னலேயே சொல்லியிருப்பதைப்போல, முஸ்லிம் லிகுக்கும் எங்க ளுக்குமிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களின் காரணமாக தலைமை சர்க்காரில் நாங்கள் அதிகமாக எதுவும் செய்ய முடியவில்லை. அதிகாரம் முற்றிலும் மாற் றப்பட்ட பிறகு எங்கும் அதிகக் கலவரங்கள் மூண்டு விட்டதால், நாங்கள் அப்பொழுதும் எதுவும் செய்ய முடிய வில்லை. அதன் பிறகு இடம் பெயர்ந்து பல லட்சம் பேர் அகதிகளாக வந்து சேர்ந்ததால், அவர்களுடைய குடி யமைப்பு வேலைகளை கவனிப்பதற்கே நேரம் சரியாக இருந் தது. அதன் சம்பந்தமாகச் செய்ய வேண்டியிருந்த முதல் வேலை, கிழக்கிலிருந்து மேற்குக்கும், மேற்கிலிருந்து கிழக் குக்கும் சென்றவர்களை, பத்திரமாக அனுப்புவதற்கும்,

பத்திரமாகக் கொண்டு வருவதற்கும் ஏற்பாடு செய்தது தான். ராணுவத்தைக் கொண்டு இந்த வேலை வெற்றிகரமாகச் செய்யப்பட்டது. என்றாலும் எல்லா அகதிகளுமே எந்தவித ஆபத்துமின்றி இந்தியாவுக்குப் பத்திரமாக வந்து சேர்ந்து விட்டார்கள் என்று எண்ணிவிடக் கூடாது. இவ்விதம் வந்து கொண்டிருந்த கூட்டத்தினர் சில சமயங்களில் தாக்கப்பட்டு பலர் கொல்லப்பட்டு விடுவார்கள். அவர்கள் வைத்திருந்த சிலவற்றையும் கொள்ளையடித்து விட்டார்கள். ரயில்வே பிரயாணிகளுங்கூட இதே துன்பங்களை அனுபவித்தார்கள். முதலில் இந்த அகதிகளை முகாம்களில் இருக்கச் செய்து, பிறகு கொஞ்சங் கொஞ்சமாகப் பல இடங்களுக்கும் கொண்டுபோய் குடியேற்றும் ஏற்பாடுகளை கவனிக்க வேண்டியதாயிற்று. இதற்காக சர்க்கார் கோடிக் கணக்கான பணம் செலவழித்து வந்தும் அந்த வேலை இன்னும் முடியவில்லை. புது கிராமங்களும், டவுன்களும் உண்டாக்கப் படுகின்றன. பல இடங்களிலும் இந்த அகதிகளுக்கென்று பல்லாயிரக் கணக்கான வீடுகள் கட்டப்பட்டன. தரிசாகக் கிடந்த நிலங்கள் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஆனால், அகதிகளின் தொகை ஏராளமாக இருந்து நிலம் குறைவாக இருந்ததால், எல்லோருக்கும் நிலம் கொடுக்க முடியவில்லை. பாகிஸ்தானுக்குப் போய்விட்ட முஸ்லிம்கள் விட்டுப்போன நிலங்களையும் இந்த அகதிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதென்றாலும், ஹிந்துக்களும், சீக்கியரும் பாகிஸ்தானில் விட்டுவந்த நிலத்தோடு ஒப்பிட்டால், முஸ்லிம்கள் இங்கு விட்டுப் போன நிலமோ மிகக் கொஞ்சம். ஆகையால் பாகிஸ்தானில் இந்த அகதிகள் முன்னால் வைத்திருந்த நிலத்தின் அளவில் மிகக் கொஞ்சத்தையே, அதுவும் பாகிஸ்தானில் விட்டு வந்ததைப் போன்று அவ்வளவு செழிப்பில்லாத நிலத்தையே, இவர்களுக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று.

இந்தியாவுக்கு வந்துவிட்டவர்களில் விவசாயிகள் மாத்திரமேயன்றி வர்த்தகம், சர்க்கார் உத்தியோகம், கைத்தொழில் ஆகியவைகளில் இருந்தோரும் அநேகர். இப்பொழுது பாகிஸ்தானாக இருக்கும் பகுதிகளிலும் வர்த்தகம் பெரும்பாலும் ஹிந்துக்களிடமும், சீக்கியர்களிடமுமே

இருந்தது. தங்கள் மதத்தினரிடமேயன்றி முஸ்லிம்களிடமும் இவர்கள் வியாபாரம் செய்து வந்தார்கள். அந்தக் கடைக்காரர்களும், வர்த்தகர்களும் இந்தியாவுக்கு வந்துவிட்டார்கள். இங்கோ போதுமான கடைக்காரர்களும் வர்த்தகர்களுமிருக்கின்றனர். இங்கும் வர்த்தகம் பெரும்பாலும் ஹிந்துக்கள் கையிலேயே இருக்கிறது. பாகிஸ்தானுக்குப் போய்விட்ட முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் வர்த்தகர்களல்ல. அவர்களுக்கு வாங்கத் தெரியுமேயல்லாமல் விற்கத் தெரியாது. ஆகையால் அங்கு கடைக்காரர்களாகவும், வியாபாரிகளாகவுமிருந்து வசதியுடன் வாழ்ந்தவர்கள் இந்தியாவுக்கு வந்துவிட்டார்கள். ஆனால் இவர்களுக்கு இங்கு தொழிலுக்கு வசதி கிடையாது. பாகிஸ்தானுக்குப் போய்விட்ட முஸ்லிம்களில் அநேகரோ. கிராம வாசிகள், விவசாயிகள். இதன் பலனாக, வேலையில்லாத, பிழைப்புக்கு வழியில்லாதவர்கள் ஏராளமானவர்களை இந்தியா ஏற்றுக்கொண்டது. அதே சமயத்தில் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த அநேகரை இழந்தும்விட்டது. ஆனால் பாகிஸ்தானோ அந்தக் கலவரங்களினால் அதிக நன்மையை நெடுகவும் அடைந்தது. நல்ல செழிப்பான வளமுள்ள நிலம் அதனிடம் ஏராளமாக இருப்பதால் அதை அகதிகளுக்கு மாத்திரமேயன்றி அங்கேயே இருந்தவர்களுக்கும் கொடுத்தது. ஆகையால் மேற்குப் பஞ்சாப்பில் அகதிகளும், மற்றவர்களும் இதற்கு முன்னால் வைத்திருந்ததைவிட அதிக நிலத்தை இப்பொழுது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஹிந்துக்கள் வசித்து வந்த அரண்மனை போன்ற கட்டிடங்களெல்லாம் அவர்களிடமிருக்கின்றன. ஹிந்துக்கள் செய்து வந்த வியாபாரமும் அவர்களிடமிருக்கிறது. ஆகையால் இடம் பெயர்ந்தவர்களைக் குடியேற்றி அவர்களுக்கு வேண்டியவைகளைச் செய்வது பாகிஸ்தான் சர்க்காருக்குச் சுலபமானதாகிவிட்டதால் அது அநேகமாக இப்பிரச்னையைத் தீர்த்துமிருக்கும்.

பிரிவினையான சிறிது காலத்திற்கெல்லாம் சங்கடமான காஷ்மீரப் பிரச்னையை சமாளிக்கவேண்டிய தொந்தரவும் இந்தியாவுக்கு ஏற்பட்டது. பிரிட்டிஷ் சர்க்கார், இந்திய சமஸ்தானங்களுடனும், சமஸ்தானாதிபதிகளுடனும் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தின் பிடிப்பிலிருந்து அவைகளை

விடுதலை செய்துவிட்டது. ஆகவே அவர்கள் தங்களிஷ்டப்படி இந்தியாவிலோ அல்லது பாகிஸ்தானிலோ சேர்ந்து கொள்ளலாம். 1947 ஆகஸ்டு 15ந் தேதிக்குள் இந்தியாவிலிருந்த அநேக சமஸ்தானங்கள் இந்தியாவுடன் சேர்ந்து விட்டன. புதிய அரசியல் உருவாகி இந்த சமஸ்தானங்களின் புதிய நிலை நிர்ணயிக்கப்படுகிற வரையில், பிரிட்டிஷ் சர்க்காருக்கும் இந்த சமஸ்தானங்களுக்கும் இருந்த உறவே இந்தியாவுக்கும் இவைகளுக்கும் தொடர்ந்து இருந்து வருவது என்ற ஒப்பந்தமும் செய்துகொண்டன. காஷ்மீரும், ஹைதராபாத்தும் மாத்திரம் இவ்விதம் இந்தியாவுடன் சேராமலிருந்தன; அவை இரண்டும் இந்தியாவுடன் தற்காலிக ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை. காஷ்மீரில் பெரும்பான்மை மக்கள் முஸ்லிம்கள்; மன்னரோ ஹிந்து. ஹைதராபாத்தில் பெரும்பாலான மக்கள் ஹிந்துக்கள்; ஆனால், சமஸ்தானாதிபதி முஸ்லிம். நாட்டில் இவை இரண்டுமே பெரிய சமஸ்தானங்கள். இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரண்டுக்கும் எல்லையாயிருக்கிறது காஷ்மீர். ஆனால் ஹைதராபாத் எல்லாப் பக்கங்களிலும் இந்தியாவினால் சூழப்பட்டது. காஷ்மீர் முஸ்லிம்களில் பலருக்கு ஹிந்து மன்னரைப் பிடிக்காவிட்டாலும் இந்தியாவுடனேயே இருக்க விரும்பினார்கள். ஹைதராபாத்திலோ, அங்கிருந்த முஸ்லிம்களில் பலர், அந்த சமஸ்தானம் சுயேச்சையானதாக இருப்பதோடு பாகிஸ்தானுடன் நட்புடனும் இருக்கவேண்டும் என்று நினைத்தார்கள். இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியை ஏற்படுத்திவிட வேண்டும் என்று எண்ணியிருந்த பாகிஸ்தானோ, இதற்கு ஹைதராபாத் தனக்கு உதவியாக இருக்கும் எனக் கருதி அதன்மீது கண்ணோட்டம் போட்டு வந்தது. ஆனால், அந்த சமஸ்தானத்தின் மக்களில் 88 சதவிகிதத்தினரான ஹிந்துக்களோ, ஹைதராபாத் இந்தியாவுடனேயே இருக்கவேண்டும் என விரும்பினார்கள். ஹைதராபாத் மாத்திரமேயன்றி, இந்தியாவிலிருந்த மற்றுஞ் சில சிறு முஸ்லிம் சமஸ்தானங்களுக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால், அவைகளும் பாகிஸ்தானுடன் இருப்பதென்றே முடிவு செய்திருக்கும். ஆனால் இத்தகைய சமஸ்தானங்களில் சில சந்தோஷமாக இந்தியாவுடன் சேர்ந்து கொண்டன.

காஷ்மீர் மகாராஜாவும், அங்கிருக்கும் முஸ்லிம் மக்களில் பெரும் பகுதியினரும் எந்த திட்டமான முடிவுக்கும் வராமல் காலங்கடத்தி வந்தார்கள். இந்தியாவுடன் சேர்ந்துவிட்டு அதனால் பாகிஸ்தான் அதிருப்தியடையும்படிச் செய்வது சரியா? அல்லது பாகிஸ்தானுடன் சேர்ந்துவிட்டு இதனால் இந்தியா அதிருப்தியடையப் பார்ப்பதா? இதில் எந்த முடிவுக்கும் வர முடியாதவராக காஷ்மீர மகாராஜா இருந்தார். இவ்விதம் எம்முடிவுமில்லாதிருப்பது பாகிஸ்தானுக்குப் பொறுக்கவில்லை. காஷ்மீர்மீது படையெடுக்கும்படி எல்லைப்புற சாதியினரைத் தூண்டிவிட்டு உதவி செய்தார்கள். தங்கள் பகுதிகளின் வழியாக அந்த மலைச் சாதியினர் காஷ்மீருக்குள் புக இடங்கொடுத்ததோடு இவர்கள் காஷ்மீரைத் தாக்கி ஆக்ரமித்துக்கொள்ளும்படிச் செய்வதற்காக அவர்களுக்கு ஆயுதங்களையும், மற்ற ராணுவ உதவிகளையும் கொடுத்தார்கள். நிலைமையோ அதிகச் சிக்கலானதாகிவிட்டது. படையெடுத்தவர்கள் மக்களிடம் அளவு கடந்த அட்டூழியங்களைச் செய்து வந்ததால் அவர்கள் ஆத்திரமடைந்திருந்தனர். கடைசியாக இப்படையெடுப்பாளர்கள் காஷ்மீரின் தலைநகரமான ஸ்ரீநகருக்குப் பக்கத்தில் வந்துவிடவே மகாராஜாவும், காஷ்மீர மக்களின் தலைவரான ஷேக் அப்துல்லாவும், அந்த சமஸ்தானம் இந்தியாவுடன் சேர்ந்துகொள்ள விரும்புவதாக அறிவித்தனர். படையெடுப்பாளரை விரட்டியடிக்க இந்தியாவின் உதவியையும் கேட்டனர். இவ்விதம் தன்னுடன் சேருவது என்ற காஷ்மீரத்தின் கோரிக்கையை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டு ராணுவ உதவியையும் அனுப்பியது. இவ்விதம் ஏற்பட்ட தகராறு இன்னும் முடியாமலிருக்கிறது. காஷ்மீரத்தின் பெரும் பகுதியிலிருந்து மலை சாதிப் படையினரையும், பாகிஸ்தான் படையினரையும் விரட்டியடிப்பதில் இந்திய ராணுவம் வெற்றி பெற்றது. மேற்குப் பாஞ்சாலத்தை அடுத்த சில பகுதிகளும், வடமேற்கில் மலைப்பிரதேசமாயுள்ள இடங்களும் இன்னும் பாகிஸ்தானிடமே இருந்தபோதிலும் காஷ்மீரின் மற்ற பெரும் பகுதியில் இப்பொழுது ஜனநாயக சர்க்கார் நடந்து வருகிறது. 'இவ்விஷயம் ஐக்ய நாடுகள் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டும் இன்னும் எந்த முடிவும் ஏற்படவில்லை. இரு நாடு

களின் படைகளும் எல்லையில் ஆயத்தமாக இருந்து வருகின்றன.

ரஜாக்கர்கள் என்று கூறப்பட்ட ஹைதராபாத் முஸ்லிம் கட்சியினர், நிஜாமின் அஸாப்ஜாகி கொடியை டில்லி செங்கோட்டைமீது ஏற்ற வேண்டும் என்று மனப்பால் குடித்து வந்தனர். ஹிந்துக்களிடத்திலும், ஹைதராபாத் இந்தியாவுடன் சேருவதே நல்லது என்று கருதிய முஸ்லிம்களிடத்திலும், இந்த ரஜாக்கர்கள் கொடுமையாக நடந்து கொண்டார்கள். ரஜாக்கர்களின் அட்டூழியங்கள் அதிகமாகி சகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு, இந்த அக்கிரமங்களின் எதிரொலி இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் ஏற்பட ஆரம்பித்துவிட்டபோது, இந்திய சர்க்காரின் படைகள் உள்ளே புகுந்து ஹைதராபாத்தைப் பிடித்துக் கொண்டன. ரஜாக்கர்கள் ஓடிவிட்டார்கள். நிஜாம் இந்திய சர்க்காரை வரவேற்றார். மற்ற சமஸ்தானங்களைப் போலவே ஹைதராபாத்தும் இந்திய யூனியனின் ஒரு பகுதியாயிற்று.

அதுவரையில் இந்திய சர்க்காரின் கவனமெல்லாம் இப்பிரச்னைகளிலும், உணவுப் பஞ்சம், அகதிகளைக் குடியமைக்கும் வேலைகள் ஆகியவைகளிலுமே ஈடுபட்டிருந்தது. இவையல்லாமல் மற்றும் பல பிரசினைகளையும் இந்தியா சமாளிக்கவேண்டியதாயிற்று. கடவுளருளால் இந்தியா தனக்கிருந்த கஷ்டங்களையெல்லாம் போக்கி தன்னுடைய நிலைமையைக் காத்துக் கொண்டது.

அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டது என்பதை முன்னமேயே கூறியிருக்கிறேன். அதன் முதல் கூட்டம் 1946 டிசம்பர் 6-ந் தேதி நடந்தது. இச் சபைக்கு நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். விவசாய மந்திரியாக இருந்துகொண்டே இந்தப் பொறுப்பையும் வகித்து வந்தேன். மந்திரி சபை பிரிவினைக் கமிட்டியை நியமித்ததும் அதில் ஒரு மெம்பராக இருக்கும்படி அழைக்கப்பட்டேன். மகாத்மாவின் ஆசிர்வாதத்தினால் நான் எப்படியோ இந்தப் பொறுப்புக்களையெல்லாம் நிறைவேற்றி வந்தேன். என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த வேலைகள்

சம்பந்தமாக நான் எந்தவித அதிருப்தியை அடைவதற்கும் ஒரு வித காரணமும் இல்லை.

உணவு கட்டுப்பாடுகள் அவசியமில்லை என்றும், அவைகளையெல்லாம் ரத்துச் செய்துவிட வேண்டும் என்றும் மகாத்மா காந்தி கருதினார். இதை பல தடவைகளில் பகிரங்கமாகவும் கூறினார். இக் கொள்கையில் மாறுதல் ஆபத்தாக முடியுமாகையால் ஒரு ஆண்டு வரையில் நான் எதுவும் செய்ய முடியவில்லை. நிலைமையைச் சரியாகத் தெரிந்துகொண்டு என் மனதிலும் ஒரு முடிவுக்கு வரக் காத்திருந்தேன். கட்டுப்பாடுகளை நீக்கியே விடவேண்டும் என்று மகாத்மா கூறிய சமயத்தில் அவற்றை நீக்கிவிடுவது என்ற முடிவுக்கே நானும் வந்துவிட்டேன். ஆனால் இதில் பல சங்கடங்களிருந்தன. அவற்றில் ஒன்று, மந்திரி சபையிலிருந்த என் சகாக்கள் இதற்குச் சம்மதிக்காதது. உணவு இலாகாவிலிருந்த அதிகாரிகள், தலையிலிருந்து கால்வரை, உணவுக் கட்டுப்பாடுகளை நீக்கக்கூடாது என்று எதிர்த்தார்கள். மாகாண சர்க்கார்களிலும் பெரும்பாலானவை உணவுக் கட்டு திட்டங்கள் ரத்தாவதை எதிர்த்தன. எதிர்க்காத சில ராஜ்யங்களும் நடுநிலைமை வகித்தனவேயன்றி கட்டுப்பாடுகளை ரத்துச் செய்வதை அவைகளும் ஆதரிக்கவில்லை. உணவுக்கு உபயோகிக்கும் எண்ணெய்கள் பல இடங்களில் அடியோடு கிடைக்காமற் போயின. கிடைக்குமிடங்களில் மிக அதிகமான விலைக்கு விற்கப்பட்டு வந்ததால் இதற்கும் கண்ட்ரோல் இருந்தது. முதலில் இந்தக் கண்ட்ரோலை நீக்கினேன். இதனால் எண்ணெய் எங்கும் கிடைக்கலாயிற்று. ஆனால் விலை, சர்க்கார் நிர்ணயித்திருந்த விலையைவிட அதிகமாக இருந்தபோதிலும், கட்டுப்பாடு இருந்தபோது கள்ளச் சந்தையில் விற்ற விலையைவிட இது குறைவு. இதைக் கண்டு உற்சாக மடைந்த நான், நாட்டிலிருக்கும் உணவு நிலையை ஆராய்ந்து, என்ன செய்யவேண்டும் என்பதில் சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்காக ஒரு கமிட்டியை நியமித்தேன். இக்கமிட்டி ஆலோசிக்க வேண்டியவைகளில் உணவு உற்பத்தியும் வினியோகமும் சேர்க்கப்பட்டிருந்தன. வினியோகம் என்பது இயற்கையாகவே கட்டுப்பாடுகளுடன் சம்பந்த முடையது. உணவு கட்டுப்பாடுகளை

நாளாவட்டத்தில் மெள்ள நீக்கலாம் என்றும், ஆனால் எங்காவது உணவு தானியப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டால், அங்கு சர்க்கார் சப்ளை செய்வதற்கு உதவியாக இருக்கும் வகையில் இந்திய சர்க்காரிடம் உணவு தானிய ஸ்டாக் அதிகமாக வேண்டும் என்றும் அந்தக் கமிட்டி சிபார்சு செய்தது. இந்த சிபாரிசுகளின் உதவியைக் கொண்டு நாளாவட்டத்தில் கட்டுப்பாடுகளை நீக்கும் கொள்கைக்கு மந்திரிசபை ஒப்புக்கொள்ளும்படிச் செய்தேன்.

இதன் சம்பந்தமாக நான் மகாத்மாவின் உதவியை நாடவேண்டியிருந்தது. என்னுடைய யோசனையின் பேரில் அவர் மற்ற மந்திரிகளையும் அழைத்து, தம்முடைய கருத்தை அவர்களுக்கு விளக்கிக் கூறினார். ஒரு மகாநாட்டிற்காக தலைநகருக்கு வந்திருந்த மாகாண மந்திரிகளுக்கும் மகாத்மா காந்தி இதை விளக்கிக் கூறினார். உணவு தானியங்கள் கட்டுப்பாடுகளை நீக்கும்படியும் அவர்களுக்குப் புத்திமதி கூறினார். உணவு, விவசாய மந்திரி என்ற முறையில் கட்டுப்பாடுகளை ரத்துச் செய்யும் கொள்கையை நான் ஆதரித்தேன். அதை நிறைவேற்றியாக வேண்டியது பிறகு என் கடமையாயிற்று. ஆனால் அச்சமயத்தில் எதிர்பாராத விதமாக திடீரென்று நான் மந்திரி பதவியை ராஜினாமாச் செய்ய நேர்ந்தது.

காங்கிரஸ் தலைவராயிருந்த ஆச்சாரிய கிருபளானி, சர்க்காரிடம் அதிருப்தி கொண்டார். தமக்கு சர்க்காரிடம் என்ன செல்வாக்கு இருக்கவேண்டும் என்று அவர் நினைத்தாரோ, அத்தகைய செல்வாக்கு மந்திரி சபையிடம் தமக்கு இல்லை என்று கருதினார். எனவே தாம் ராஜீநாமாச் செய்துவிட விரும்புவதாக பல சமயங்களில் கூறி வந்தார். மகாத்மா காந்தியும், மற்ற நண்பர்களும் சொல்லி, அவர் ராஜீநாமாச் செய்யாதபடிச் செய்தனர். தாம் மேற்கொண்டும் காங்கிரஸ் தலைவராக இருக்க அவர் விரும்பாத ஒரு நிலைமை வந்தது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் டில்லியில் கூட்டப்பட்டது. வழக்கம்போல் காரியக் கமிட்டிக் கூட்டமும் நடந்தது. ஆச்சாரிய கிருபளானியின் ராஜீநாமா காரியக் கமிட்டி முன்னால் வந்த போது, வேறு வழியில்லாமல், அதைக் காரியக் கமிட்டி

ஏற்றுக்கொண்டு விட்டது. அடுத்த தலைவரைக் கண்டு பிடிக்கும் பிரச்னை உடனே எழுந்தது. சோஷியலிஸ்டு கட்சித் தலைவர்களான ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்கோ அல்லது ஆச்சாரிய நரேந்திர தேவுக்கோ அப்பதவியை அளிக்கவேண்டும் என்று மகாத்மா யோசனை கூறினார். இந்த யோசனையை காரியக் கமிட்டி மெம்பர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. சிலர் பலமாக எதிர்க்கிறார்கள் என்பதை அறிந்ததும் மகாத்மா சும்மா இருந்துவிட்டார். இது சம்பந்தமாக எந்த முடிவும் ஏற்படவில்லை. அரசியல் நிர்ணய சபையின் கூட்டம் நடக்கவேண்டிய நேரம் வந்து விட்டதால், அடுத்த காங்கிரஸ் தலைவர் யார் என்பதில் எந்த வித முடிவுக்கும் வராமல் காரியக் கமிட்டிக் கூட்டம் கலைந்து நாங்களும் அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்திற்குப் போய்விட்டோம். அரசியல் நிர்ணய சபையின் விதிகளின்படி, அதன் தலைவர் சபையிலிருந்தால் அவரே கூட்டத்திற்குத் தலைமை வகிக்கவேண்டும். பிரிவினைக்குப் பிறகு அரசியல் நிர்ணய சபைக்கு இருந்த வேலைகள் இரண்டு; இரண்டும் மிகவும் முக்கியமானவை. ஒன்று, அரசியலைத் தயாரிப்பது. இந்த வேலை பிரிவினைக்கு முன்னாலேயே ஆரம்பமாகிவிட்டது. அரசியல் நிர்ணய சபைக்கு, பிரிவினைக்குப் பின்னால் ஏற்பட்ட இரண்டாவது வேலை, மத்திய சட்டசபையாக இருந்து காரியங்களைச் செய்வது. ஆகவே எந்த மந்திரியும் இச் சபைக்குத் தலைமை வகிக்கக் கூடாது. ஏதாவது தகராறு ஏற்படும்போது ஒரு பக்கம் மந்திரிகளுக்கும், மற்றோர் பக்கம் சட்டசபை மெம்பருக்கும் நடுநிலைமையானவராக இருந்து முடிவு கூறவேண்டியவராக சபாநாயகர் இருப்பதே இதற்குக் காரணம். ஆகையால் நான் ஒன்று மந்திரி சபையிலிருந்து ராஜீநாமாச் செய்யவேண்டும்; இல்லையானால் அரசியல் நிர்ணய சபைத் தலைவர் பதவியை ராஜீநாமாச் செய்யவேண்டும் என்ற நிலைமை வந்தது. நான் தலைவராகவும் மந்திரியாகவும் இருக்கவேண்டும் என்று பலர் கருதினார்கள். இது சாத்தியமாவதற்கு விதிகளில் மாறுதலைச் செய்யவேண்டும். அவ்விதம் செய்ய எனக்கு அதிகாரமும் இருந்தது. அப்படிச் செய்தால் நான் அரசியல் நிர்ணய சபையின் தலைவராக இருக்கலாம். ஆனால்

அச்சபை மத்திய சட்டசபையாகக் காரியங்களை கவனிக்கும்போது நான் அதற்குத் தலைமை வகிக்கக்கூடாது. இதற்கு ஒரு சபாநாயகரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இதற்காக அரசியல் நிர்ணய சபை கூடி ஸ்ரீ மாவ்லங்கரைச் சபாநாயகராகத் தேர்ந்தெடுத்தது. சபாநாயகர் ஆசனத்திற்கு அவரை அழைத்துச் சென்று உட்கார வைத்தேன். ஆச்சாரிய கிருபளானியின் ராஜீநாமாவை ஏற்றுக்கொண்டு காங்கிரஸுக்கு மற்றோர் தலைவரைத் தேர்ந்தெடுக்க அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் இரண்டொரு மணி நேரத்திற்கெல்லாம் நடந்தது. அதைக் குறித்து காரியக் கமிட்டி எந்த முடிவையும் செய்யவில்லை. ஆனால் யாரோ ஒருவர் இதைப்பற்றி என் பெயரைச் சொன்னபோதிலும் நானும் மற்றவர்களும் அதைக் குறித்து சிந்திக்கவுமில்லை. சபாநாயகர் தேர்தல் முடிந்த பிறகு நான் சபையில் உட்கார்ந்திருந்தபோது பண்டித ஜவாஹர்லால் நேருவும், சர்தார் வல்லபபாயும் என்னைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னார்கள். இதற்காக நான் வெளியே போனேன். காங்கிரஸ் தலைவர் பதவியை நான் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். என் பாடு அதிகச் சங்கடமாகிவிட்டது. நான் உணவு, விவசாய மந்திரியாக இருந்தேன். அந்த முறையில் நாளாவட்டத்தில் உணவுக் கட்டுப்பாடுகளை ரத்துச் செய்வதென்று செய்த முடிவுகளை நான் நிறைவேற்ற வேண்டும். போதிய பால் இல்லை; நல்ல வகை காளைகளும் இல்லாததினால், உணவு தானிய உற்பத்தியை அதிகரிப்பதுடன் கால்நடை அபிவிருத்தியிலும் அதிக அக்கரை கொண்டிருந்தேன். அரசியலை அமைக்கும் வேலையும் முக்கியமல்லாததோ, கஷ்டமில்லாததோ அல்ல. அரசியல் நிர்ணய சபை சட்ட சபையாக நடக்கும்போது அதற்குத் தலைமை வகிக்கும் பாரத்திலிருந்து நான் விடுபட்டிருந்தாலும், பிரிவினைக் கமிட்டியின் வேலை முடிந்து போய்விட்டாலும், எனக்கிருந்த மற்றப் பொறுப்புகளுக்கு நான் அதிக நேரம் சிரமப்பட்டு வேலை செய்யவேண்டியே இருந்தது. மேலும் என் உடல் நிலையும் சரியாக இல்லை. முன்னைப்போல அதிகச் சிரமப்பட்டு வேலை செய்யவும் இயலாது. ஆகையால் இவைகளுடன் காங்கிரஸுக்குத் தலைவராக இருக்கும் பொறுப்

பையும் வகிப்பதென்பது என்னால் முடியாத வேலை என்று நினைத்தேன். அதன்படியே பண்டித நேருவிடமும், சர்தார் பட்டேலிடமும் சொன்னேன். அவர்கள் யோசனைப்படி காங்கிரஸ் தலைவர் பதவியை நான் ஏற்றுக் கொள்ளுவதானால், உணவு விவசாய மந்திரி பதவியிலிருந்து விலக என்னை அனுமதித்துவிட வேண்டும். இப்பொழுது காங்கிரஸுக்குள் தகராறு அதிகரித்து விட்டதால் நான் காங்கிரஸை நடத்திச் செல்லுவதாயின் சிரமம் அதிகம் ; எனவே அரசியல் நிர்ணய சபைக்குத் தலைவராக இருக்கும் பொறுப்பையும் நான் விட்டுவிட நேரலாம் என்றும் அவர்களிடம் சொன்னேன். கிருபளானியின் இடத்தில் நான் இருந்தாக வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். இதை நான் ஒப்புக்கொள்ளாது போனால், மந்திரி சபைப் பதவியைவிட காங்கிரஸ் தலைவர் பதவியை நான் விரும்பவில்லை என்று இயற்கையாகவே கருதப்பட்டு விடுமாகையால், ஒப்புக் கொண்டுவிட்டேன். இதைப் பற்றித் தீர யோசித்து முடிவு கூற எனக்கு அவகாசமும் இல்லை.

மகாத்மா காந்தியிடம் போய் நடந்ததைச் சொன்னேன். அன்று அவருக்கு மௌன விரத நாள். ஆகையால் தாம் கூற விரும்பியதை ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதிக் காட்டினார். இந்த யோசனை அவருக்குப் பிடிக்கவில்லை. காங்கிரஸ் தலைவர் பதவியை நான் ஏற்க மறுத்துவிட்டு மந்திரியாக இருக்க நான் விரும்ப முடியாது என்பதை நான் எடுத்துக் கூறியதும், என் நிலைமையை அவர் ஒப்புக் கொண்டார். ஆனால், அவர் தமது கருத்தை மாத்திரம் மாற்றிக்கொள்ளவில்லை. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடும் நேரமும் வந்துவிட்டதால், தம் கருத்தை அவர் மற்றவர்களுக்குத் தெரிவிக்கவும் முடியவில்லை. காங்கிரஸ் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப் பெற்றேன். இந்த கௌரவத்தை நான் ஏற்றுக்கொண்டு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு ஒன்று கூறினேன். நான் மந்திரி பதவியை விட்டுவிட்டு, அப்பொறுப்பிலிருந்து நான் விடுவிக்கப்பட்டதும், காங்கிரஸ் வேலைகளை மேற்கொள்ளுவதாகக் கூறினேன். இதற்கான ஏற்பாடுகள் எதையும் சர்க்கார் ஒன்றரை மாதம் வரையில் செய்யாததினால், நான்

மந்திரியாகவே இருந்து வந்தேன். 1948 ஜனவரி 14ந் தேதி அப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டதும், காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பிறகு மகாத்மா தமது உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். அதுவே அவருக்குக் கடைசியானதாகவும் ஆகிவிட்டது. இரு வாரங்களுக்குப் பிறகு அவர் கொல்லப்பட்டுவிட்டார்.

கடைசி இரண்டு வாரங்களிலும் எனது தேக அசௌகரியத்தினால் நான் விரும்பிய அளவுக்கு, நான் மகாத்மாவுடன் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாது போயிற்று. என்றாலும் அப்பொழுது நான் முக்கியமான மூன்று வேலைகளில் ஈடுபட்டிருந்ததால் தினம் ஒரு முறை மகாத்மாவைச் சந்திப்பேன். முதலாவது, ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நட்பும், நல்லெண்ணமும் ஏற்படும்படிச் செய்வது. இதைக் குறித்து முன்னாடியே கூறியிருக்கிறேன். இதற்காகவே மகாத்மா தமது கடைசி உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டார். இரண்டாவது, காங்கிரஸின் விதிகளைத் திருத்துவது. இதைப்பற்றிக் கொஞ்சகாலமாகவே விவாதம் நடந்துவந்தது. இதற்காக ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டிருந்தது. இக் கமிட்டியின் உறுப்பினர்கள் மகாத்மாவைச் சந்தித்து விவாதிப்பார்கள். இதில் நானும் கலந்து கொள்வேன். இதனால், அவர் கொலையுண்டதற்குச் சில மணி நேரத்திற்கு முன்னால், காங்கிரஸ் விதிகளில் செய்ய வேண்டிய திருத்தங்களைக் குறித்துத் தமது கருத்தை தம் கையினாலேயே எழுதினார். காங்கிரஸ், ராஜ்ய ஸ்தாபனமாக இருப்பதிலிருந்து விலகிவிட வேண்டும் என்பது அவருடைய கருத்து. ராஜ்ய ஸ்தாபனமாக இருந்து மந்திரி சபைகளை நிர்வகிப்பதற்கு பதிலாக, சமூக சேவை ஊழியர்களின் ஸ்தாபனமாக அது இருந்து, தன்னுடைய சமூக சேவையின் மூலம் சர்க்காரிடம் செல்வாக்கைப் பெறுவதாயிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். முக்கியமான காங்கிரஸ்காரர்கள் இக் கருத்தை ஆதரிக்கவில்லை. ஆகையால் திருத்தப்பட்ட காங்கிரஸ் விதிகள், காங்கிரஸ் லோக சேவா சங்கமாக இருக்கும்படிச் செய்வதாக இல்லை. மகாத்மா காலமான பிறகு அவருடைய கருத்தை வற்புறுத்துவாருமில்லை.

அச்சமயம் எனக்கிருந்த மூன்றாவது வேலே, மகாத்மா காந்தியின் நிர்மாண வேலைத்திட்டம். இதில் மகாத்மா அதிக சிரத்தை கொண்டிருந்தார். ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை விஷயத்தைப் போலவே இதற்கும் அதிக முக்கியத்துவம் அளித்து வந்தார். இது அவருடைய யோசனையில் சில காலமாகவே இருந்துவந்ததோடு நிர்மாண வேலை ஊழியர்கள் மகாநாட்டை சேவா கிராமத்தில் கூட்டுவது என்றும் முடிவாயிற்று. பிப்ரவரி முதல் வாரத்தில் இதற்கு ஒரு தேதியும் குறிப்பிடப்பட்டது. இக் கூட்டத்திற்குப் போவதென மகாத்மா முடிவு செய்திருந்ததோடு இதற்காக வார்தாவுக்குப் போகவேண்டும் என்றும் ஆவலுடனிருந்தார். அம் மகாநாட்டுக்குப் போக நானும் விரும்பினேன். டில்லியில் குளிர் அதிகக் கடுமையாக இருந்ததால், என் தேக நிலையை முன்னிட்டு அதிலிருந்து தப்புவதோடு மகாநாட்டிலும் கலந்துகொள்ளலாம் என எண்ணியிருந்தேன்.

ஹிந்து—முஸ்லிம் பிரச்னை மோசமான நிலைக்கு வந்து விடவே, மகாத்மா காந்தி உண்ணுவிரதத்தை மேற்கொண்டார் என்பதை முன்னுடியே கூறியிருக்கிறேன். உண்ணுவிரதத்தை நிறுத்தியதும், அந்த நிபந்தனைகளை நிறைவேற்றிவைக்க வேண்டும் என்பதில் அவர் அதிக ஆர்வத்துடனிருந்தார். சேவாகிராம மகாநாட்டிற்கு அவரும் வந்திருக்கவேண்டும் என்று நிர்மாண வேலை ஊழியர்கள் வற்புறுத்தி வந்தார்கள். இதற்கு மகாத்மா ஒப்புக்கொண்டார். என்னை முன்னுல் அங்கு போகும்படிக் கூறியதோடு, தாம் போக முஸ்லிம் தலைவர்கள் அனுமதித்ததும் தாம் அங்கு வருவதாகக் கூறினர். அத் தலைவர்களுடன் நான் பேசினேன். அவர் போவதற்கு அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். 1948 ஜனவரி 30ந் தேதி காலையில் நான் விமானத்தில் வார்தாவுக்குப் புறப்பட்டேன். நான் விமான நிலையத்திற்குப் போவதற்கு முன்னுல் காந்திஜியைப் பார்த்து, அவர் வார்தாவுக்குப் போவதற்கு முஸ்லிம் தலைவர்கள் ஒப்புக்கொண்டார்கள் என்பதை அவரிடம் சொன்னேன். தாம் இரண்டு தினங்கள் கழித்து வார்தாவுக்குப் புறப்படுவதாகவும், அது வரையில் நான் என் உடல் நிலையை கவனித்துக் கொள்ளுவதோடு, மகாநாட்டின் ஏற்பாடுகளை கவனித்துக்கொள்ளும்படியும்

என்னிடம் கூறினார். பாபுஜியை சில தினங்களில் வார்தாவில் பார்க்கலாம், காங்கிரஸின் பலத்திற்கு முக்கிய அடிப்படையான நிர்மாண வேலைத்திட்டம் புதிய உற்சாகத்தைப் பெறும் என்ற நம்பிக்கையுடன் நான் டில்லியிலிருந்து புறப்பட்டேன்

அன்று பகல் இரண்டரை மணிக்கு நான் வார்தா சேர்ந்தேன். குளிரினாலும், பிரயாண சிரமத்தினாலும் அப்பொழுது எனக்கு சுரம் வந்துவிட்டது. மாலை 5 மணிக்கு என்னைப் பார்க்க ஒரு டாக்டர் வந்தார். அவருடன் நான் பேசிக்கொண்டிருந்த போது ஒரு சிறுவன் ஓடிவந்து மகாத்மா இறந்து விட்டார் என்றான். ஒன்பது, பத்து மணிக்கு முன்னால்தான் நல்ல தேக நிலைமையில் நான் அவரைப் பார்த்துவிட்டு வந்திருப்பதால், சிறுவன் கூறியதை என்னால் நம்ப முடியவில்லை. முன்னால் அவருக்கு அதிக ரத்தக் கொதிப்பு இருந்தது. கட்டுதிட்டங்களோடு கூடிய வாழ்க்கையை அவர் நடத்தி வந்ததால் அக் கஷ்டத்தைச் சமாளித்துக்கொண்டுவிட்டபோதிலும், சமீப வாரங்களில் அவருக்குக் கவலை அதிகமாக ஏற்பட்டு விட்டதால், ரத்தக் கொதிப்பே திரும்ப கடுமையாகி ஆபத்தில் முடிந்திருக்குமோ என்று எண்ணினேன். செய்தி எப்படி அவனுக்குக்கிடைத்தது என்று சிறுவனைக் கேட்டேன். ரேடியோவில் கூறப்பட்டதாக அவன் சொன்னான். அந்த நேரத்தில் செய்தி வழக்கமாக ஒலிபரப்பப்படுவதில்லை. ஆகையால் சிறுவன் கூறுவதில் உண்மையிருக்குமா என்பதில் எங்களுக்கு சந்தேகம் மேலும் அதிகமாயிற்று. மாலை 6 மணிக்கு ஒலி பரப்பப்படும் செய்தியை நானே கேட்பதற்காக ஒரு ரேடியோவை அங்கு கொண்டு வரும்படி அவனிடம் கூறினேன். உடனே ஒரு ரேடியோவும் கொண்டுவரப்பட்டது. ஆனால் 6 மணி வரையில் காத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவர் இயற்கை மரணத்தை அடையவில்லை என்றும், சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் உடனே தெரிந்தது. அன்றிரவு பண்டித ஜவர்ஹர்லால் நேருவும் சர்தார் வல்லபபாயும் நடந்ததையெல்லாம் தங்கள் ரேடியோப் பேச்சில் கூறினர். நான் என்ன செய்வது என்பது எனக்கே தோன்றவில்லை. அங்கு தங்குவதா அல்லது உடனே டில்லிக்குப் போவதா?

டில்லியுடன் டெலிபோன் தொடர்பு கஷ்டமாகயிருந்தது. ஆனால், நாகபுரியுடன் தொடர்பு கொள்வதில் சிரமமில்லை. ஸ்ரீ ராமதாஸ் காந்தியை டில்லிக்கு அழைத்துச் செல்ல ஒரு விமானம் பம்பாயிலிருந்து நாகபுரிக்கு இரவு வருகிறது என்றும், நான் விரும்பினால் அதே விமானத்தில் டில்லிக்குப் போகலாம் என்றும் நாகபுரியிலிருந்து அறிந்தேன். நான் டில்லிக்கு வருவதே நல்லது என்றும் அறிவிக்கப்பட்டேன். அன்றிரவு என்னால் தூங்கவே முடியவில்லை. அதிகாலை 4 மணிக்கு வார்தாவிலிருந்து புறப்பட்டு, ராமதாஸுடனும், மற்ற நண்பர்களுடனும் விமானத்தில் டில்லிக்குப் புறப்பட சரியான நேரத்தில் நாகபுரி சேர்ந்து விட்டேன். 10 மணிக்கு டில்லி சேர்ந்தோம். பாபுஜியின் உடல் ஊர்வலமாகப் புறப்படுவதற்கு முன்னால் நான் ஒரு முறை பார்க்க முடிந்தது. ராஜ கட்டத்தில் நடந்த இறுதிச் சடங்குகளில் நானும் கலந்து கொள்ள முடிந்தது.

நிர்மாண வேலை ஊழியர்கள் மகாநாட்டை ஒத்தி வைத்துவிட நேர்ந்தது. பிறகு மார்ச்சு மாதத்தில் அது சேவாகிராமத்தில் கூடி, சர்வோதய சமாஜத்தை அமைப்பதென்று முடிவாயிற்று. நிர்மாண வேலைத் திட்டத்தில் மகாத்மா நம்பிக்கை கொண்டிருந்தார். அதன் மூலம் புதியதோர் சமூக ஒழுங்கை அமைக்க அவர் விரும்பினார். இதற்காகவே தமது வாழ்நாளைக் கழிப்பது என்றுமிருந்தார். நானும் அப்படிச் செய்ய வேண்டும் என்று ஊக்கப்படுத்தினார். ஆனால் கொலையுண்டு விட்டார். இச்செய்கை, இந்தியாவின் சரித்திரத்திலேயே மிக மோசமான சம்பவமாக இருப்பதோடு, ஹிந்து சமூகத்திற்கு என்றும் மாறாத கலங்கமாகவும் இருந்துவரும்.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுவது முக்கியம். ஒரு தவறான வழியிலிருந்து அது என்னைக் காத்தது. நான் அத் தவறைச் செய்திருந்தால் ஒழுக்கத்திலிருந்து எனக்கு ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கும். நான் அரசியல் நிர்ணய சபையின் தலைவராக இருந்தபோது, என் சுய மதிப்பைப் பாதிக்கும் ஒரு நிலைமை ஏற்பட்டு, ராஜிநாமாச் செய்துவிடுவது என்று நினைத்தேன். என்

ராஜிநாமாக் கடிதத்தையும் எழுதிவிட்டேன். இத்தகைய ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன்னால் மகாத்மாவையும் கலந்தாலோசித்துக் கொள்ளுவது அவசியம் என நினைத்தேன். நிலைமையை அவருக்கு விளக்கிச் சொல்லி என் ராஜிநாமாக் கடிதத்தையும் அவரிடம் காட்டினேன். அவர் நான் எழுதியிருந்ததை ஏற்றுக்கொண்டாரேயன்றி நான் செய்யவிருந்த காரியத்திற்குச் சம்மதிக்கவில்லை. அவர் என்னிடம் சொன்னதாவது: "வேறு யாராவது இதைச் செய்ய விரும்பியிருந்தால் நான் குறுக்கிட்டிருக்க மாட்டேன். உங்களுடைய சுயமதிப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதற்காக நீங்கள் ராஜிநாமாச் செய்வது என்பது சரியல்ல. பொது வாழ்க்கையில் அவமதிப்புகளையும் சகித்துக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டுமேயன்றி அதற்காக அதை விட்டு வெளியேறிவிடக்கூடாது."

மகாத்மா கூறியதின் பொருளை நான் உடனே உணர்ந்துகொண்டேன். சொந்த அகந்தையால் நான் தவறிவிட இருந்தேன்; அவர் என்னைக் காப்பாற்றி விட்டார். அக் கடிதத்தை நான் அனுப்பவில்லை. எனக்கு வருத்தம் ஏற்படும்படிச் செய்தவர்களுக்கு அதைப்பற்றி இன்றளவும் தெரியாது. அவர்களுக்கு இது தெரிய வேண்டியதுமில்லை. மக்களுக்குச் சேவைசெய்ய முன்வருகிறவர்கள் சுயமரியாதையைப்பற்றிக் கவலைப்படக் கூடாது என்பதற்காகவே இதை இங்கு குறிப்பிட்டேன். மக்களுக்குச் சேவை என்ற ஒரே ஒரு லட்சியமே அவனுக்கு இருக்கவேண்டும். இதன் சம்பந்தமாக எனக்கு ஏற்பட்டது என்ன என்பதைக் குறித்து என் நண்பரொருவர் அறியலானார். அதைப்பற்றி அவர் மகாத்மாவிடம் கூறியபோது மகாத்மா, "நான் விஷக் கோப்பையைக் கொடுத்தால் அதை வாங்கிக் கொள்ளத் தயங்காதவர் ஒருவராவது இருக்கவேண்டும்" என்றார். அந்த நண்பரும் உணர்ந்துகொண்டு பிறகு எதுவுமே சொல்லவில்லை.

இச்சம்பவமும் மகாத்மாவின் கடைசி நாட்களிலேயே நடந்தது. ஆகையால் நான் உயிரோடிருக்கும் வரையில் அது எனக்கு ஊக்கத்தையும் பலத்தையும் அளிக்கும் உறுதுணையாக இருந்துவரும்.

ஆத்மாவின் தெய்வீகப் பணி

வாழ்வுக்கும், சாவுக்கும் பாகுபாடு உண்டு என்பதை மகாத்மா காந்தி ஒப்புக்கொள்வதே இல்லை. ஆத்மா அழிவில்லாதது. உடல்தான் அதன் அமைப்பிலும், உருவத்திலும் மாற்றத்தை அடையும். இறப்பினுல் இந்த மாறுதல்களை அடைவது உடல் மாத்திரமே. ஆகவே இறப்பதற்கு என்றும் தயாராக இருக்கவேண்டும் என்று அவர் அடிக்கடி சொல்லுவதுண்டு. அவர் படுகொலை செய்யப்படுவதற்குச் சில தினங்களுக்கு முன்னுல், அவரைக் கொலை செய்தவர்களில் யாரோ சிலர், அவருடைய பிரார்த்தனைக் கூட்டத்தில் வெடிகுண்டைப் போட்டார்கள். அன்றே மகாத்மாவைக் கொன்றுவிட அவர்கள் விரும்பினுர்கள். ஆனுல் மகாத்மாவோ அப்பொழுது பிரார்த்தனையிலிருந்தார். தங்களுடைய செய்கையினுல் ஏற்படும் என்று அவர்கள் எண்ணியிருந்த குழப்பமும் அங்கு உண்டாகவில்லை. எனவே அவர்கள் முயற்சி ஈடேருது போயிற்று. தம்மைக் கொன்றுவிட வேண்டும் என்பதில் யாரோ தீவிரமாக இருக்கிருர்கள் என்பதை மகாத்மா அன்றே உணர்ந்திருக்கக்கூடும். ஆனுல் அதற்காக அவர் கவலைப்படவில்லை. தம்முடைய பாதுகாப்புக்காக முன் ஜாக்கிரதையான காரியங்கள் செய்யப்படுவதையும் அவர் அனுமதிக்கவில்லை. தமது பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வருகிறவர்கள் யாராவது ஆயுதங்களை வைத்திருக்கிருர்களா என்பதைக் கண்டுபிடிக்க அவர்களைச் சோதிப்பது என்பதற்கும் மகாத்மா சம்மதிக்கவில்லை. இந்த உலகத்தின் சேவைக்கு தம் உடல் இன்னும் இருந்துவரட்டும் என்பதே கடவுளின் சித்தமானுல், தம்மைக் கடவுளே காப்பார் என்று காந்திஜி கூறுவார். இதனுலேயே, தம்முடைய பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்வதென்பதை யெல்லாம் எதிர்த்து நிராகரித்து வந்தார். தீரத்தோடு எங்கும் போய் தமது காரியங்களை கவனித்துக்கொண்டிருந்தார்.

மகாத்மா பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் போய்க் கொண்டிருந்தார். அவருக்கு வணக்கம் கூறும் பாசாங்கு

டன் கொலைகாரன் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு அவர் கிட்டத்தில் வந்தான். எதிரில் சிறிது தூரத்திலிருந்த படியே அவரைச் சுட்டுவிட்டான். மகாத்மா சாய்ந்தார். அவர் வாயோ, "ஹே! ராம்!" என்று முணு முணுத்தது. இப்படி அவர் இறந்ததைவிட இன்னும் அற்புதமாக அவர் இறந்திருக்கவே முடியாது. பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் போகும்போதே அவர் உள்ளம் கடவுளிடம் ஐக்கியப்பட்டிருந்தது மாத்திரமல்ல, இறந்து விழும்போதும் கடவுளின் நாமத்தையே உச்சரித்தார்.

"மகான்கள் பிறவிதோறும் கடவுளைத் தேடியவாறே இருக்கின்றனர்; ஆனால் கடைசி நேரத்தில் கடவுளின் நாமாவை உச்சரிக்கத் தவறிவிடுகிறார்கள்."

ஆனால், "ராம்" என்ற நாமாவோ, மகாத்மாவின் உதடுகளில் வலிய வந்தது. வாழ்நாளையெல்லாம் தியாகத்திலும் பிரார்த்தனையிலுமே கழித்த அவருக்கு இதைவிடச் சிறந்த சன்மானம் என்ன வேண்டும்? தமது வாழ்நாள் முழுவதும் எந்த ஒரு லட்சியத்தைக் கொண்டிருந்தாரோ, அதை அடைவதற்காகப் பாடுபட்டார் என்பதற்காகவே, அவர் சுடப்பட்டார். தமது வாழ்க்கை முழுவதிலும் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். சமயம் வந்துவிட்டபோது, அஹிம்சையின் சக்தியைக் காட்ட தமது முழுப் பலத்தையும் ஈடுபடுத்தினார். இதனால் தம் உயிருக்கு நேரவிருந்த அபாயத்தைப் பொருட்படுத்தாமல் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கான சேவையில் இறங்கினார். இப் பணியிலிருக்கையில், அளவு கடந்த ஆனந்தத்தோடு, கொலைகாரனின் தோட்டாவுக்கும் பலியாகிச் சாய்ந்தார்.

நாடே திடுக்கிட்டுப் போயிற்று. அவர் கொலையுண்டார் என்ற செய்தியைக் கேட்டு தாங்கமுடியாத துக்கத்தில் தேசம் ஆழ்ந்தது. இவரைத் தங்களுடைய விரோதி என்று எண்ணிக்கொண்டிருந்த முஸ்லிம்களும் உண்டு. ஆனால் இவரைவிடச் சிறந்த நண்பர் தங்களுக்கு என்றும் இருந்ததில்லை என்பதை அவர்களும் உணரத் தலைப்பட்டார்கள். மகாத்மா இறந்துவிட்டார். ஆனால், அவர் தம்முடைய வாழ்நாளில் எப்பணியில் ஈடுபட்டிருந்தாரோ அதை அவருடைய சாவற்ற ஆத்மா

தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. அவர் சொல்லை உலகமே கேட்டு, அவருடைய சத்திய, அகிம்சைக் கொள்கைகளைப் புரிந்துக்கொண்டு ஏற்றுக்கொண்டுவிடும் காலம் வந்திருக்கும். ஆனால் அவருடைய குரல், ஆத்மாவி லிருந்து ஆத்மாவை அடைய வேண்டும் என்பது ஒருவேளை கடவுளின் சித்தமாயிருக்கலாம். வாஸ்தவத்தில் அதுதான் நடந்திருக்கிறது. இந்தியாவுள்பட, அதிலும் தமது சீடர் களின் கீழிருக்கும் ஒரு சர்க்காரில் கூட, எல்லா நாடு களுமே, ராணுவங்களை வைத்திருக்கின்றன அதாவது பலாத்காரத்தை நம்பியிருக்கின்றன. ஆனால், உலக மக்களோ, யுத்தம் பயனில்லை என்பதை உணர ஆரம்பித்து விட்டனர். அகிம்சையின் மேன்மையைப் போற்றுகின் றனர். ஆத்மா, ஆத்மாவுக்கு போதிக்கிறது. மகாத்மா இறந்துவிட்ட போதிலும், உலகிற்குப் புத்துயிரளிக்கும் தெய்வீகப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

அகிம்சையின் ஆட்சியை அமைப்பதில் மகாத்மா ஓரளவுக்குதான் வெற்றி பெற்றிருக்கிறார். ஆகவே அப்பணி முற்றுப்பெறும்படிச் செய்வதில் பங்குகொள்ள வேண்டியது இந்தியரின் தெய்வீகக் கடமை. பலாத்காரப் போக்குகள் விருத்தியடைவதற்குக் கொஞ்சங்கூட இடந் தராத வகையில் சமூகம் மாற்றி யமைக்கப்பட வேண்டும். மனிதர் உள்ளத்தில் அகிம்சை உணர்ச்சி வளர்வதற்கு வேண்டிய முழு ஆக்கத்தையும் அளிக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களை இதற்கென்று அர்ப்பணித்துக் கொண்டு, அந்த வகையில் தம் வாழ்க்கையையும் அமைத் துக் கொண்டால்தான் அப்படிப்பட்ட சமூக ஒழுங்கு நிலை பெற முடியும். இந்த லட்சியத்தை அடைவதை முன் னிட்டே, மகாத்மா ஒவ்வொரு நாளும் பிரார்த்தனையின் போது, தம்முடைய பதினோரு பிரதிக்ஞைகளையும் கூறி வந்தார். அகிம்சை, சத்தியம், உடைமையின்மை, பிரமச் சரியம், ஆசையின்மை, உடலுழைப்பு, ருசியை வெல்வது, தன்னம்பிக்கை, எல்லா மதங்களுக்கும் சமமான மதிப்பு அளிப்பது, சுதேசி, தீண்டாமை ஒழிப்பு ஆகியவைகளே அவருடைய பதினோரு பிரதிக்ஞைகளும். அநாதி காலந் தொட்டு நம் மதம் என்ன விதித்து வந்திருக்கிறதோ அதைப் பெரும்பாலும் கொண்டவைகளே இப் பிர

திக்ஞைகள். புதியவைகளாக இருப்பவைகளோ, காலத்தின் அவசியத்தை முன்னிட்டுச் சேர்க்கப் பட்டிருப்பவை. இவற்றின் முக்கியத்தைத் தமது "மங்கள பிரபாத்" என்ற நூலில் மகாத்மாவே விளக்கியிருக்கிறார். ஆனால், அந்த விளக்கம் வெறும் வார்த்தை அலங்காரமோ அல்லது அவருடைய சொந்த வியாக்யானமோ அல்ல. அவை அனுபவத்திலிருந்து பிறந்தவை. நெறியான வாழ்க்கைக்காக வாழ்நாளெல்லாம் அவர் போராடி வந்ததினால் ஏற்பட்ட பலன் அவை; மனித வர்க்கத்திற்கே வழிகாட்டும் சுடரொளி. ஒவ்வொருவரும் இப்பிரதிக்ஞையை ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பார்களானால், இவர்களைக் கொண்ட சமூகமும் பின்பற்றும். அதனிடம் அவை நிலைபெற்றும் விடும்.

இந்தக் கொள்கைகளை மேற்கொள்ளாமல் மனிதன் உண்மையான இன்பத்தை அடைந்துவிட முடியாது. தனிப்பட்டவர்கள் என்ற முறையிலோ அல்லது ஒரு சமூகம் என்ற வகையிலோ, நாம் எந்த அளவுக்கு இக்கொள்கை யின்படி நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுகிறோமோ, அந்த அளவுக்குத்தான் தனிப்பட்டவர்களோ அல்லது சமூகமோ இன்பத்தை அடைய முடியும். ஆனால் விஞ்ஞான அறிவு நமக்கு அளித்திருக்கும் வசதிகளைக் கண்டு நாம் மயங்கிப் போயிருக்கிறோம். சர்வ வல்லமையுள்ளவன் மனிதனே என்று எண்ணவும் தலைப்பட்டு விட்டோம். இயற்கையை எதிர்த்து நிற்பதோடு, அதை வெல்லவும் வேண்டும், வென்று விடவும் முடியும் என்றும் நினைக்கிறோம். ஒன்றை மாத்திரம் மறந்துவிடுகிறோம். இயற்கையை வென்று விடுகிறோம் என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பது வேறு எதுவுமல்ல. இயற்கை நியதியைப் பற்றிய அறிவைப் பெறுகிறோம். அதன்படி நடப்பதன் அவசியத்தையும் அறிகிறோம். அந்த நியதிகளுக்கு ஒத்த வகைக்கு நமது வாழ்க்கையைக் கொண்டு வந்துவிடுவது இயற்கையை வென்று விட்டதாக ஆகாது.

மகாத்மா தமது வாழ்க்கை முழுவதையும் எந்தக் கொள்கைகளைக் கொண்டு அமைத்திருந்தாரோ, இந்தியா முழுவதையும் எந்தக்கொள்கையின் மயமான தாக்கிவிடவேண்டும் என்று அவர் பாடுபட்டாரோ, உலகம் முழுவதையும் எப்

படி மாற்றிவிட வேண்டும் என ஆவல் கொண்டிருந்தாரோ, அவற்றை நாம் புரிந்துகொள்ளவில்லை. நமக்குப் புரிந்திருந்தால், அவைகளை அனுசரிக்கும் பலம் நம்மிடமில்லை. இல்லையென்றால், நாம் வேண்டுமென்றே அவற்றைக் கை விட்டாவது இருக்கவேண்டும். இந்த நிலைமை மிகவும் துக்கப்பட வேண்டியதாகும். அனாதி காலந்தொட்டு இக் கொள்கைகள் நமக்கு இருந்திருக்கின்றன. எல்லோருக்கும் ஏற்றவைகளாகவுமிருக்கின்றன. ஆனால், இந்தியர்களாகிய நாம் இக் கொள்கைகளை அனுசரித்து நடந்து வரவில்லை. மற்றவர்களைப்போல நடக்க நாம் ஆரம்பித்துவிட்டோம். மகாத்மாவின் தத்துவங்களில் முக்கியமானதான தன்னடக்கத்தையும், கட்டு திட்டத்திற்குட்பட்டு நடப்பதையும் கைவிட்டு விட்டோம். என்றாலும் எனக்கு ஒரு திடமான நம்பிக்கை மாத்திரம் உண்டு. வாழ்க்கையின் கஷ்டமான உண்மைகளை நாம் உணர நேரும்போது நாம் காந்திஜியின் வழிக்குத் திரும்பியே தீருவோம் என்பது நிச்சயம்.

இந்தியா இன்று சுதந்திர நாடாக இருக்கிறது. தன் னிஷ்டம் போல் தன்னை அமைத்துக்கொள்ளும் பூரண உரிமையுடனிருக்கிறது. மற்ற நாடுகளின், முக்கியமாக ஐரோப்பா, அமெரிக்காவின் உதாரணம், நமக்கு முன்னால் இருக்கிறது. நம்மைவிட அவர்களுடைய சராசரி வருமானம் அதிகமாக இருக்கிறது. சௌகர்யமாக வாழ்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் அவர்களுக்கு இருக்கின்றன. தங்களுடைய வசதிகளையும், சௌகரியங்களை அனுபவிப்பதற்குத் தகுதியையும் தினந்தோறும் அவர்கள் அதிகரித்துக்கொண்டே போகிறார்கள். இவைகளினாலெல்லாம் அம் மக்கள் நம்மைவிட அதிக ஆனந்தமாக இருக்கிறார்கள் என்று நாம் எண்ணுகிறோம். இவைகளை யெல்லாம் நாம் பார்க்கும்போது, நம் நாட்டையும் அவர்கள் மாதிரி கொண்டுபோய், இதற்காகவே நம் முயற்சியை யெல்லாம் ஈடுபடுத்தவேண்டும் என்றும் கருதுகிறோம். பட்டினி கிடக்கும் வயிறு கடவுளிடம் பக்தியை உண்டாக்கிவிடாது என்பது உண்மை. பட்டினியாகக் கிடக்கிறவனிடம் போய் உயர்ந்த தத்துவங்களைப் பேசிப் பயனில்லை; பட்டினி கிடக்கிறவனுக்குச் சோற்றின் ரூபத்திலேயே கடவுள் தோன்ற முடியும் என்று மகாத்மா காந்தியும் சொல்லுவ

துண்டு. வாழ்க்கைக்குச் சில தேவைகள் அவசியமானவை களே. ஆனால் இதற்கும் ஒரு எல்லையுண்டு. நாம் அந்த எல்லையைத் தாண்டிப் போய் நமது தேவைகளை அதிகரித் துக்கொண்டு விடுவோமேயானால், முடிவை மறந்து, அத் தேவைகளை அடைவதற்கான உபாயங்களுக்கு அடிமை களாகவே ஆகிவிடுவோம். எல்லோருடைய வாழ்க்கைக்கும் அவசியமானவைகள் நிச்சயம் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்தும் ஒரு சமூக ஒழுங்கு இருக்கவேண்டியது அத்தியாவசியம். ஆனால் லௌகீக சுகங்களை அனுபவிக் கும்போதும் அதற்காகும் பொருள்களுக்கு நாம் அடிமை யாகிவிடக் கூடாது. பற்றற்றிருந்து நாம் அனுபவிக்க வேண்டும். இஷோபனிஷத்தின் முதல் சுலோகத்திலேயே கூறப்பட்டிருப்பதுபோல, துறவில் இன்பத்தை நாம் அனு பவிக்கப் பார்க்கவேண்டும். லோகாதய சுகங்களைத் துறக்க நாம் எண்ணுவதிலேயே அவற்றை அனுபவிப்பதில் நமக்கு இன்பம் பிறக்கவேண்டும்.

ஆனால் இன்று உலகத்திலிருக்கும் சமூக ஒழுங்கோ இந்த லட்சியத்திற்கு முற்றிலும் மாறானதாக இருக்கிறது. ஏனெனில் அதன் அடிப்படையே லோகாதய சுகம். நாமும் அந்த லட்சியத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம். மகாத்மாவோ, தாம் உபதேசித்த லட்சியங்களின் மூலம் பழைய லட்சியங்களைத் திரும்பப் பரப்ப முயன்றார். ஆனால் நாமோ, மேனாட்டு மக்களுக்கு எந்த வகையில் ஆனந்த மானதாக இருக்கிறதோ அந்த வசதிகளையும் உபாயங்களை யும் அடைய ஆவல் கொண்டிருக்கிறோம். சாதாரண தொழிலாளர்கள் என்ற முறையில் அதிகக் கூலிக்காகப் போராடுவதாக இருந்தாலும் சரி, பொதுவாக தேசத்தில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சிப்பதாக இருந்தாலும் சரி, இந்த இரு முயற்சிகளின் அடிப்படையான உண்மை ஒன்றேதான். நாம் இவற்றிற்கு வெளியாரின் உபாயங்களை நம்பியிருக்கிறோம். அவற்றினாலேயே நாம் உண்மையான சந்தோஷத்தை அடைய முடியும். அவைகளில்லாது போனால் துன்பமயமே என்றெல்லாம் நினைக்கிறோம். ஒவ் வொருவரும் தம்தம் சுகத்தை கவனித்துக் கொள்ளுவதி லேயே கருத்தாயிருந்து வருவதற்கு இதுதான் காரணம். இதை அடைவதற்காக தாம் செய்யும் முயற்சி மற்றவர்

களுக்கு என்ன கெடுதலை உண்டாக்கும் என்பதைக் குறித்து அவன் கவலைப்படுவதில்லை. ஒவ்வொருவரும், ஒவ்வொரு சமூகமும், ஒவ்வொரு நாடும், மற்றவர்களுடைய சுக துக்கங்களைப் பற்றிக் கொஞ்சமும் சிந்திக்காமல், எந்த வழியிலும் தாங்கள் சுகப்பட்டால் போதும் என்று அவற்றையே தேடுகின்றன. லஞ்சத்தினுலோ, அல்லது கள்ளச் சந்தையாலோ, பிறருக்குத் துன்பம் விளைவித்தோ, மற்றவர்களை ஏய்த்தோ, நேரடியான திருட்டினுலோ, பகிரங்கக் கொள்ளையினுலோ தாங்கள் அநுபவித்தால் போதும் என்று எண்ணுகின்றன. .வலுத்தவன், எளியானை நசுக்குகிருன். பலத்த நாடு, பலமில்லாத நாட்டின்மீது ஆதிக்கத்தைச் செலுத்தப் பார்க்கிறது. நமது புத்திப் போக்கை நாம் மாற்றிக்கொள்ளவேண்டும். உண்மையான ஆனந்தத்தை நமக்குள்ளேதான் காண முடியுமாகையால், நம் இன்பத்திற்கு வெளியாரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை என்பதை நாம் உணர வேண்டும். லோகாதய காரியங்களில் அசிரத்தையாக இருக்கவேண்டும் என்பதல்ல இதன் பொருள். அவற்றை வெல்ல வேண்டும். இந்த வெற்றி தன்னைத்தானே கட்டுப் படுத்திக் கொள்ளுவதன் மூலமே கிட்டுமேயன்றி, ஒன்றை யடைய இன்னுமொன்றை உபாயமாகக் கொள்வதாலுல் அல்ல.

ரிஷிகள், முனிவர்கள், தீர்க்க தரிசிகள், தெய்வங்கள். அவதாரங்கள் ஆகியவைகளைப்பற்றி மத சம்பந்தமான புராதன நூல்களில் படிக்கிருேம். நமது வாழ்க்கையை எப்படி நடத்திக்கொண்டு போகவேண்டும் என்பதையும் அறிகிருேம். இந் நூல்கள் போதிக்கும் நெறியில் எவ்வளவு தூரம் ஒருவர் நடக்கிருரோ அவ்வளவுக்கு அவருடைய வாழ்க்கை சுகமானதாகவும், பிரகாசமானதாகவும் ஆகிறது. அப்படிப்பட்ட மகான்களை இந்த உலகத்தில் நேரில் காண்பது அரிது. ஆகையால் அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று புராதன நூல்கள் கூறுகின்றனவோ, அதன்படி நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட மகான்களை நேரில் பார்க்கும் வாய்ப்பு யாருக்காவது ஏற்பட்டால் அவர்களே பாக்கிய சாலிகள். அத்தகைய மகான்களில் ஒருவர் மகாத்மா காந்தி.

அவரைக் கண்ணுல் நேரில் பார்த்து, அவருடன் தொடர்பும் கொள்ளும் பாக்கியம் கோடானுகோடி ஆண்களுக்கும், பெண்களுக்கும் கிட்டியிருக்கிறது. சென்ற முப்பது, முப்பத்திரண்டு ஆண்டுகளாக, இமயத்திலிருந்து கன்யாகுமரி வரையிலும், கோஹட்டிலிருந்து கமாக்யா வரையிலும் அவர் எத்தனையோ தடவைகளில் நாடெங்கும் யாத்திரை செய்திருக்கிருர். எண்ணற்ற மக்கள் அவரைச் சந்தித்துப் பார்த்திருக்கிருர்கள். உல்லாசத்திற்காக என்ருே, நாட்டைச் சுற்றிப் பார்க்க என்ருே, அவர் ஒரு தடவைகூட சுற்றுப் பிரயாணம் செய்ததில்லை. அவருடைய ஒவ்வோர் பிரயாணமும் லட்சியத்தை அடையச் செய்த யாத்திரையே. அன்னிய ஆட்சியின் கீழ்க் கிடந்த நாட்டிற்கு விடுதலையைத் தேடவும், சீவனற்றுக் கிடந்த மக்கள் உடலில் புத்துயிரை உண்டாக்கவும், பலமிழந்துவிட்ட அந்த நெஞ்சங்களில் உணர்ச்சியையும், உத்வேகத்தையும் மூட்டவும், நமது ஒழுக்கத்தை வளர்க்கவுமே மகாத்மா இந்த யாத்திரைகளையெல்லாம் மேற்கொண்டார். மக்கள் விழிப்படைந்து, அஞ்சா நெஞ்சினராகி, தங்கள் சொந்த பலத்தையும் உணர ஆரம்பித்தால்தான் அந்த லட்சியங்களை எல்லாம் அடைய முடியும் என்பது மகாத்மாவுக்குத் தெரியும். மக்களை அவர் தட்டி எழுப்பிவிட்டார்; அஞ்சாத தீரர்களாக்கினுர். அவர்கள், தங்களைத் தாங்களே அறிந்து கொள்ளும்படியும் செய்தார்.

தோல்வி என்பதையே கண்டறியாததான தம்முடைய ஆயுதமான சத்தியாக்கிரகத்தை, அவர் முதன் முதலில் தென்னுப்பிரிக்காவிலேயே கண்டுபிடித்தார். அவர் இந்தியாவிற்குத் திரும்பியதும், தாங்கள் உழன்று வந்த துயரங்களிலிருந்தும் அவமதிப்புக்களிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்ளவும், சோம்பலிலிருந்தும், பிறரை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதிலிருந்தும் தங்களை மீட்டுக் கொள்ளுவதற்கும் தேச மக்களுக்கு இந்த ஆயுதத்தை அளித்தார். ஆனுல் இந்த சத்தியாக்கிரகம் என்பதன் உண்மையான பொருள் தான் என்ன? சத்தியத்தை வலியுறுத்துவது என்பதே அதன் கருத்து. எண்ணத்திலும், சொல்லிலும், செய்யும் காரியத்திலும் சத்தியத்தையே கடைப்பிடிக்க வேண்டும். சத்தியத்தை அனுசரிக்கும் முயற்சியில் ஒருவர், பயமுறுத்

தலின், வற்புறுத்தலின் காரணமாக, தான் பார்க்கிற வகை யில் மற்ருெருவர் சத்தியத்தைக் கடைப்பிடிக்க முடியாத படிச் செய்துவிட்டால், அவர் சத்திய வழியில் நடக்கிருர் என்று எப்படி ஆகும்? இது சத்தியத்தைக் கடைப்பிடித்து நடப்பதே ஆகாது. தான் அதன்படி நடப்ப தோடு மாத்திரமன்றி, மற்றவர்களும் சத்திய வழியில் நடக்க உதவி செய்வதன் மூலமும் சத்தியத்தை அனுசரிப்ப தாகலாம். அதாவது, மற்றவர்கள் சத்தியப் பாதையில் நடப்பதற்கு இடையூருக இருந்துவிடாதிருப்பதும் சத்தி யத்தைக் கடைப்பிடித்து நடப்பதேயாகும். தான் சத்திய வழியில் நடந்து, மற்றவர்களும் அப்படியே நடக்கவேண் டும் என்று எதிர்பார்த்து, மற்றவர்களுக்கு எந்த விதமான பயமுறுத்தலோ, பலவந்தமோ செய்யாமலிருந்தால்தான் ஒருவர் சத்தியத்தைக் கடைப்பிடிப்பதாகும். நமக்குச் செய்யப்பட்டு விடும் ஏதாவது ஒரு காரியத்திஞல் நாம் மனம் வருந்துகிருேம். மற்றவர்களுக்கு இதே போல் நடந் தால் அவர்கள் மனமும் வருந்துமே என்பதை நாம் உணரவேண்டும். நம் மனதைச் சங்கடப்படுத்தும் என்று நாம் நினைக்கும் எக்காரியமும், பிறருக்குச் செய்யப்பட் டால் அவர்களுக்கும் மனக்கஷ்டத்தையே உண்டாக்கும். ஆகையால் அத்தகையது எதையும் நாம் செய்யக்கூடாது. அஹிம்சையிலிருக்கும் அடிப்படையான உண்மைத் தத் துவமே இதுதான். எனவே அஹிம்சையைக் கடைப்பிடிக் காமல் சத்தியத்தை அனுசரிப்பது என்பது முடியாத காரியம். இதனுலேயே மகாத்மா காந்தி, சத்தியத்தையும் அஹிம்சையையும் தமது வாழ்க்கையின் உறுதியான அடிப் படையாகக் கொண்டார். இது அவருடைய ஒவ்வோர் சொல்லிலும் மாத்திரமேயன்றி அவர் செய்த ஒவ்வோர் காரி யத்திலும் தெளிவாகத் தெரிந்தது. இந்த இரு கொள்கை களையும் குறித்தே, இந்தியருக்கும், பொதுவாக மனித வர்க் கத்திற்கும், உபதேசங்களைச் செய்து வந்தார். அஹிம்சை இல்லாமல் சத்தியத்தை அனுசரிப்பதென்பது அசாத்தியம் என்ருல், இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று இணை பிரிய முடியாதவை என்பது நிச்சயமாகிறது. இந்த இரண்டும் ஒன்றேதான் என்று மகாத்மா காந்தி கருதினுர். அஹிம்சை யில் சத்தியமும் அடங்கி யிருக்கிறது என்ருர். சத்தியமே

கடவுள். எல்லா காலங்களிலும் மக்கள் இதையே சொல்லியும் நம்பியும் வந்திருக்கிறார்கள். ஆனால் மகாத்மாவோ, கடவுளை அறிவதற்கும் அடைவதற்கும், ஒரே ஒரு வழி தான் உண்டு என்றார். அதுதான் சத்தியத்தைக் கடைப்பிடித்து நடப்பது. லட்சியத்திற்கும் அதை அடையும் மார்க்கத்திற்கும் வித்தியாசமே கிடையாது என்றும் அவர் வற்புறுத்தினார். கடவுளே சத்தியம் என்று அவர் நம்பியதோடு சத்தியமே கடவுள் என்றும் நம்பினார்.

மகத்தான கொள்கைகளை மகான்கள் சாதாரணமான தாக்கி, அவற்றை சாதாரணமானவர்களும் விளங்கிக் கொள்ளும்படிச் செய்து விடுகிறார்கள். மகாத்மா காந்தியோ, இந்த சாதாரண விஷயத்தை வற்புறுத்து வதன் மூலம் நமது வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிட விரும்பினார். அகிம்சையையும் சத்தியத்தையும் அனுசரித்து நடப்பதற்கு மனிதனுக்குப் பூரணமான உரிமை இருக்கவேண்டும். எந்த வித கட்டாயத்திற்கும் உட்பட்டால் அந்த சுதந்திரம் அவனுக்கு இருக்காது. கட்டாயப்படுத்துவது பல ரூபங்களையும் அடைகிறது. இவைகளில் சில மனிதனாலேயே உண்டாக்கிக் கொள்ளப் படுபவை. ஆனால் அவன் விரும்பினால், முயற்சி செய்தால், அவைகளிலிருந்து தன்னை அவன் விடுவித்துக்கொண்டு விடலாம். எனினும் பலவந்தத்திற்குத் தாங்களே உட்பட்டுவிடுவதோடு, மற்றவர்களையும் உட்படுத்தி விடுகிறவர்களும் இருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களினால் சில நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டு விடுவதுமுண்டு. இத்தகைய சந்தர்ப்பங்கள் தன்னாலேயோ அல்லது பிறராலோ உண்டாக்கப்பட்டவைகளாகவுமிருக்கலாம். இவை ஒருவர் சுயேச்சையாக நடக்க முடியாதபடிச் செய்து விடுகின்றன. எல்லாவித நிர்ப்பந்தங்களையும் வென்று ஒருவர் சுதந்திரத்தை அடைய வேண்டும். இந்த சுதந்திரத்தைப் பெறுவதில் ஒருவர் எவ்வளவு தூரம் வெற்றி பெறுகிறாரோ அந்த அளவுக்குதான் சத்திய வழியில் நடக்கும் திறமையும் அவருக்கு இருக்க முடியும். ஆனால் ஒரு எல்லையை வகுக்காமல், தனது சரீரத்திற்கான தேவைகளை விருத்தி செய்து கொண்டே போய் விடுவதனால், அவர் தனக்குள்ள நிர்ப்பந்தங்களின் பிடிப்பை பலப்படுத்திக்கொண்டே போகிறவராகிறார்.

ஆகையால் உண்மையான சுதந்திரத்தை அடைவதற்கு நமது தேவைகளைக் குறைத்துக் கொண்டே போகவேண்டியது அவசியமாகிறது.

ஒருவருக்குத் தேவையாவது இன்னுமொருவருக்கும் தேவையாகி, இதனால் தகராறு உண்டாவதே, தனிப்பட்டவர்களுக்குள்ளேயோ அல்லது கோஷ்டிகளுக்குள்ளேயோ சச்சரவுகள் மூளுவதற்கும், மூண்டதற்கும் காரணமாகிறது. ஒவ்வொருவரும் தாங்கள் விரும்புவதையெல்லாம் அடைந்துவிட முடியாது. இதனாலேயே தாங்கள் விரும்பியதை அடைந்துவிட பலாத்காரத்தையும் உபயோகிக்கின்றனர். இப்படிச் செய்வதில், இன்னொருவர் தனக்கு வேண்டும் என்று விரும்புவதை அவர் அடையாதபடித் தடுத்து விடுகிறோம் என்பதை கவனிப்பது மில்லை. ஆகையால் சத்தியத்தைக் கடைப்பிடிப்பதற்கு, ஆசையைத் துறப்பதும் அவசியமாகிறது. தனக்குத் தேவையானவை, தனக்கு எவ்வளவு அத்தியாவசியமானவைகளோ அதே போலவே, அவை மற்றவர்களுக்கும் அத்தியாவசியமானவைகளே என்பதை ஒருவர் உணர்ந்துவிட்டால், அவர் தன்னைத்தானே விடுவித்துக்கொள்வதோடு மற்றவர்களையும் விடுவித்தவராகிறார். ஆகவே இதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்தால் நாம் திட்டமாக ஒரு முடிவுக்கு வர முடியும். அதாவது, எல்லா மதங்களின் முக்கிமான போதனைகளும் சத்தியத்தைக் கடைப்பிடிப்பதையே முக்கியமான லட்சியமாகக் கொண்டவை என்பதே அது. மற்றவர்களின் சுதந்திரத்தைப் பறிப்பதன் மூலம் மனிதன் சுதந்திரமாக இருந்துவிட முடியுமா? ஒழுக்கமென்று ஒருவன் எதை நினைக்கிறானோ அதை மற்றவர்களும் அனுசரிக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்துவதனால் உண்மையில் ஒழுக்க முள்ளவனாகிவிட முடியுமா? தன்னுடைய வாழ்க்கையில் அசத்தியமே நிறம்பி யிருக்கும் போது, மற்றவர்களுடைய வாழ்க்கையில் மாத்திரம் எல்லாம் சத்தியமாக இருக்கும்படி அவனால் எப்படிச் செய்து விட முடியும்? பயத்தை ஒழித்தாலன்றி சத்திய வாழ்க்கை வாழத்தான் அவனால் முடியுமா? மகாத்மா காந்தி தமது வாழ்க்கையில் இவற்றை யெல்லாம் அறிந்தார். ஒவ்வோர் மதமும் உபதேசிக்கும் உண்மையும் இதுவே.

தனிப்பட்டவர்களுக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் சுதந்திரத்தைத் தேட மகாத்மா காந்தி முயற்சி செய்தார். தனிப்பட்டவர் வாழ்க்கைக்கும், சமூக, தேசிய வாழ்க்கைக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை என்பதையும் நமக்குக் காட்டினார். ஆகையால் இயற்கையாகவே, தனிப்பட்டவர்களுக்கு தீமையானவை எவையோ அவை சமூகத்திற்கும், நாட்டிற்கும் தீயவையே. சத்தியத்திற்கு மாறுபட்ட வாழ்க்கை தீமையையே உண்டாக்கும் என்பதை நமது சொந்த வாழ்க்கையிலும், நமது முன்னேற்றத்திலும் நாம் ஒப்புக்கொள்வதாயிருந்தால், சத்தியமற்ற காரியம் ஒரு சமூகத்திற்கும் ஒரு நாட்டிற்கும் நல்லதே அல்ல என்பதையும் நாம் அறியமுடியும். நமது சொந்த வாழ்க்கையில் சொல்வது ஒன்றாகவும், செய்வது வேறாகவும் இருப்பது தவறு என்று கருதுகிறோம். அதேபோல தேச காரியங்களிலும் சொல்வது ஒன்றாகவும், செய்வது வேறாகவுமிருப்பது தவறு என்று நாம் கருதவேண்டும். சொந்த வாழ்க்கைக்குத் தந்திரங்கள் எப்படி தீமை விளைவிக்குமோ அதேபோலவே தேச காரியங்களிலும் தீமையையே உண்டாக்கும். இதனாலேயே, சத்தியத்தையும் அகிம்சையையும் கைவிட்டு விட்டு நாம் சுயராஜ்யத்தை அடைந்தாலும் அந்த சுயராஜ்யம் பயனற்றதாகவே இருக்கும் என்று மகாத்மா காந்தி கூறினார்.

இக்காரணத்தை முன்னிட்டே நமது எல்லா நடவடிக்கைகளிலும் சத்தியமும் அகிம்சையும் அடிப்படையான அம்சமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அடைவதற்கு நாம் உபயோகிக்கும் முறை பரிசுத்தமானதாக இல்லாதிருக்குமானால், இதனால் நாம் அடைவதும் நல்லதாகவே இராது. முடிவு மாத்திரம் நல்லதாக இருந்து விடுமானால், இதற்காக நாம் விரும்பும் எந்த முறையையும் அனுசரிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஒரு லட்சியத்தை அடைந்து விடுவதற்கு நியாயமற்ற முறையை நாம் அனுசரிக்க வேண்டியிருந்தால், அப்படிச் செய்வது விரும்பத் தக்கதல்லவெனினும், அது மன்னிக்கத் தக்கதே என்றும் கூறுகிறார்கள். ஆனால் மகாத்மாவோ, தவறான வழிகள் எப்பொழுதும் தவறானவையே என்றார். அவை லட்சியத்தை அடைவதில் கொண்டுபோய் விடவே விடாது ; அப்படியே

அவை கொண்டுபோவதாயிருந்தாலும், வெற்றி கிடைத்து விடும் என்று தோன்றினாலும், அதனால் லட்சியத்தை அடைந்ததாகவும் ஆகாது. ஏனெனில் அத்தகைய முறையை அனுசரித்த மாத்திரத்திலேயே அடைய வேண்டிய லட்சியத்தின் தன்மையும் மாறி விடுகிறது' என்றார் மகாத்மா. இதனாலேயே எல்லா காரியங்களிலும், எல்லா நேரங்களிலுமே சத்தியத்தையும் அகிம்சையையும் கடைப் பிடிக்க வேண்டும் என்று மகாத்மா காந்தி வற்புறுத்தினார்.

மற்றவர்களுக்கு நாம் சுயேச்சையை அளித்தாலன்றி நாம் சுயேச்சையாக இருக்க முடியாது. இதனாலேயே, பல மதங்களைப் பின்பற்றி, பல பாஷைகளைப் பேசிவரும் பல சாதிகள், வகுப்புகளையும் சேர்ந்த மக்களைக்கொண்ட ஒரு நாட்டில், தன்னுடையதையே மற்றவர்களும் பின்பற்ற வேண்டும் என்று வற்புறுத்தாமல், அவரவர்கள் மதங்களை அவரவர்கள் பின்பற்றி, அவரவர்களின் கருத்துப்படி அவரவர்கள் நடந்து, அவரவர்கள் பாஷையை அவரவர்கள் பேசி வர சுதந்திரமிருக்கும்படிச் செய்வது ஒவ்வொருவருடைய கடமை. அதாவது ஒவ்வொருவரும் அவரவர்கள் மதத்தைப் பின்பற்றி, அவரவர்களுடைய பாஷையைப் பேசிவர சுதந்திரமளிக்கும் வகையில், ஒவ்வொருவரும் மற்றவர்களிடம் நடந்துகொள்ள வேண்டும். ஒருவர் மீது மற்றொருவர் பலவந்தத்தை உபயோகிப்பதனால் சொந்தச் சச்சரவுகள் எப்படி ஏற்படுகின்றனவோ அதே போலவேதான் வகுப்புக் கலவரங்களும் உண்டாகின்றன. இதை முன்னிட்டே எல்லா மதங்களையும் ஒவ்வொருவரும் சமமாக மதிக்க வேண்டும், எல்லா மதங்களையும் சேர்ந்தவர்களையும் சமமாக ஒரே மாதிரியாக நடத்த வேண்டும் என்று மகாத்மா வற்புறுத்தினார். முடிவாக இக்காரியத்திற்காகவே அவர் தமது உயிரையும் தத்தஞ் செய்தார்.

"மற்றவர்களிடம் உண்மையிலேயே அன்பு செலுத்துகிறோமா? நமது நடவடிக்கைகள் சுயநலத்தை முன்னிட்டவைகளாக இருக்கின்றனவா? அல்லது மற்றவர்களுக்குத் தீமையைச் செய்துவிடக் கூடாது என்பதற்காக முயற்சியையாவது செய்கிறோமா? நாம் செய்வது எதுவானாலும் அதை பகிரங்கமாகச் செய்ய நாம் தயாராயிருக்கிறோமா?

அதாவது, பட்டப்பகலில் பகிரங்கமாகச் செய்ய நாம் வெட்கப்படக்கூடிய காரியங்கள் எவையாவது நாம் செய்கிறவைகளில் இருக்கின்றனவா? ஏதாவது கெடுதல் ஏற்படக்கூடும் என்பதற்காக எதையாவது ஒளிக்க நாம் முயற்சி செய்கிறோமா? தேசத்தின் நன்மை என்பது நம் உள்ளத்திலிருக்கிறதா அல்லது சுயநலமே நம் மனதில் இருக்கிறதா? நமது வாழ்க்கையைப் பெருமைப்படுத்து கிறோமா அல்லது தாழ்மைப்படுத்திக் கொள்கிறோமா? மற்றவர்கள் அவரவர்கள் மதப்படி நடக்கட்டும் என்று அனுமதிக்கிறோமா அல்லது நமது இஷ்டப்படியே மற்றவர்களும் நடக்கவேண்டும் என்று, ரகசியமாகவோ அல்லது பகிரங்கமாகவோ, கட்டாயப்படுத்த முயற்சி செய்கிறோமா?". மகாத்மா காலமான இந்த வருஷ தினத்தில் நம்மை நாமே இக் கேள்விகளை யெல்லாம் கேட்டுக் கொண்டு நம் உள்ளங்களைப் பரிசோதிப்போமாக.

நமது உள்ளத்தின் ஒவ்வோர் இண்டு இடுக்கிலும் ஆழ்ந்து ஊடுருவிப் பார்த்து, மகாத்மாவின் உபதேசத்திற்கு விரோதமாக ரகசியமாக வேலை செய்துகொண்டிருப்பது ஏதாவது அங்கு இருக்கிறதா என்பதைத் தேடிப் பார்ப்போமானல், அப்பொழுது மாத்திரமே நமது வாழ்க்கையை நாம் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ள முடியும்.